T-19521

எ. ஸ்தெபானவா

பிரெடெரிக் எங்கெல்ஸ்

F. Engels

எவ்கேனியா ஸ்தெபானவா

பிரெடெரிக் எங்கெல்ஸ்

வாழ்க்கைச் சுருக்கம்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்: வ. சண்முக சுந்தரம்

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயவு செய்து ''Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR'' என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

Е. Степанова

Ф. ЭНГЕЛЬС

На тамильском языке

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1978

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

С $\frac{10103\text{-}805}{014(01)\text{-}78}$ 685-78

பொருளடக்கம்

1. குழந்தைப் பருவமும் இளமைக் காலமும். . . . 5

2. அரசியல் வாழ்க்கையின் ஆரம்பம் 12

3. பொருள்முதல்வாதத்திற்கும் கம்யூனிசத்திற்கும் எங்கெல்ஸ் மாறியது 24

4. மார்க்சுடன் ஒன்றுபட்டது. விஞ்ஞானக் கம்யூனிசத்தின் அடித்தளத்தை அமைத்தது. பாட்டாளி வர்க்கக் கட்சியைப் படைப்பதற்கான போராட்டம் *(1844-1848)* 35

5. *1848-1849* புரட்சியில் எங்கெல்ஸ் 67

6. பிற்போக்குக் காலத்திலும் முதலாளித்துவ-ஜனநாயக இயக்கங்கள் புதிய எழுச்சி பெற்ற காலத்திலும் எங்கெல்ஸ் 122

7. முதல் அகிலமும் பாரிஸ் கம்யூனும் நடந்த நாட்களில் எங்கெல்ஸ் 152

8. பாரிஸ் கம்யூனுக்கும் முதல் அகிலத்துக்கும் பின்னர் எங்கெல்ஸ். மார்க்சின் மறைவு *(1883)* 204

9. மார்க்சின் மறைவுக்குப் பின் எங்கெல்ஸ் *(1883-1895)* 243

10. காலத்தால் அழியாத புரட்சிப் போதனை . . . 304



பிரெடெரிக் எங்கெல்ஸ். 1839



பிரெடெரிக் எங்கெல்ஸ். 40ஆம் ஆண்டுகள்

1

குழந்தைப் பருவமும் இளமைக் காலமும்

1820ஆம் ஆண்டு நவம்பர் 28ல் பார்மென் என்ற ஊரில் ஒரு நெசவாலை முதலாளியின் குடும்பத்தில் பிரெடெரிக் எங்கெல்ஸ் பிறந்தார்.

எங்கெல்சின் தாயகமான பிரஷ்யாவிலுள்ள ரைன் மாநிலம் அன்றைய ஜெர்மனியில் மிகவும் தொழில் வளர்ச்சி பெற்ற பகுதியாகத் திகழ்ந்தது. ஜெர்மனியின் மற்ற பகுதிகளில் பட்டறைத் தொழில்களும், சிறு தொழில்களும், கைத்தொழில்களும் இன்னும் பரவலாக இருந்த வேளையில், இந்த மாநிலத்தில் முதல் இயந்திரங்களும் ஆலைகளும் ஏற்கெனவே தோன்றிக் கொண்டிருந்தன. இங்கிலாந்தில் உருவாகிய பெரும் முதலாளித்துவ இயந்திரத் தொழில், ஜெர்மனியில் முதலில் இந்த ரைன் மாநிலத்தில்தான் தனது வெற்றி ஊர்வலத்தைத் துவக்கியது. இயற்கை வளங்களான இரும்பு, நிலக்கரிக் கனிப் படிவங்கள் ரைன் மாநிலத்தில் கிடைத்ததானது இத்தகைய தொழில் வளர்ச்சிக்கு அனுகூலமாய் இருந்தது. இதுவன்றி, ஜெர்மனியின் மற்ற பகுதிகளை விட, 18ஆம் நூற்றாண்டின் முடிவில் நிகழ்ந்த பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சி இங்கு அதிகமான செல்வாக்குச் செலுத்தியது. ரைன் மாநிலத்தில் பெரும் முதலாளித்துவ இயந்திரத் தொழில் வளர்ச்சியை ஒட்டி இயந்திரத் தொழில் சார்ந்த பாட்டாளி வர்க்கம் தோன்றியது. அதைத் தொடர்ந்து முதலாளித்துவச் சமுதாயத்திற்கே உரித்தான, தொழிலாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் மேலும் மேலும் தெளிவாக வெளிப்பட்டன.

தொழிற்சாலைகளில் இயந்திரங்களைப் புகுத்தியதானது, முன்னெப்போதும் கண்டிராத அளவிற்கு, பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ளு

வதற்கு முதலாளிகளுக்கு வழி செய்து கொடுத்தது. பிச்சைக் கார ஊதியமே பெற்று வந்த பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் உழைப்பு மூலம் வந்த போட்டியின் காரணமாக தொழிலாளர்களின் ஊதியம் குறையலாயிற்று. முதலாளித்துவ ஆலை அமைப்பு தன்னுடனேயே புதிய சுமைகளையும், பெரிய ஏழ்மையையும், கடிய சுரண்டலையும் உழைப்பாளி மக்களுக்குக் கொண்டு வந்து கொடுத்தது.

தாம் பிறந்த உப்பெர்தல்* பகுதியில் எங்கெல்ஸ் குழந்தைப் பருவத்தில் கண்ட ஏழ்மையின் காட்சிகள் அவரது நினைவில் என்றென்றைக்குமாகப் புகுந்து நிறைந்தன. **உப்பெர்தல் கடிதங்கள்** *(1839)* என்று தலைப்பிட்டு அவர் எழுதிய முதல் பத்திரிகைக் கட்டுரையில் பார்மென், எல்பெர்பெல்து நகரங்களிலுள்ள ஆலைத் தொழிலாளர்கள், குடிசைத் தொழிலாளர்கள், கைத்தொழில் வல்லுனர்கள் ஆகியோரின் வேதனை மிக்க நிலைமைகளைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பத்தொன்பது வயதே நிறைந்திருந்த எங்கெல்ஸ் உப்பெர்தல் பகுதியில், குறிப்பாக ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில், நிலவிய பயங்கர ஏழ்மை நிலைமைகளை ஆழமிக்க உணர்ச்சிகளுடன் வரைந்து காட்டினார். பரவலான அளவில் ஆலைகளில் குழந்தைகளின் உழைப்பு பயன்படுத்தப் படுவதையும், அவ்வுழைப்புக்குக் கேவலமான ஊதியமே தரப்படுவதையும் கண்டு அருவருப்படைந்தார் அவர். தொழிலாளர்களின் ஏழ்மைக்கும் துன்பங்களுக்கும் முக்கியக் காரணம் ''ஆலை முதலாளிகளின் ஒழுங்கீனமான நிர்வாகமே'' என்று எழுதினார் எங்கெல்ஸ்**.

பெரிய இயந்திரத் தொழில்களின் செல்வாக்கு குடிசைத் தொழிலாளர்கள், கைத்தொழிலாளர்கள் ஆகியோரின் நிலைமைகளையும் சீர்கேடாக்கியது. ஆலைப் போட்டியைச் சமாளிப்

---

* **உப்பெர்தல்:** உப்பெர் நதிதீரப் பள்ளத்தாக்கு. ஒன்றுக்கொன்று மூன்று மணி நேரப் பயண தூரத்தில் பார்மென், எல்பெர்பெல்து என்னும் இரு நகரங்கள் இங்கு இருக்கின்றன (இங்கும் இதற்குப் பின்னும் வருகிற குறிப்புக்கள் பதிப்பாசிரியருடையவை).

** F. Engels, *Letters from Wuppertal;* K. Marx, F. Engels, *Collected Works*, Vol. 2, Moscow 1975, pp. 7-25.

பதற்காகத் தனித் தனியாக இருந்த நெசவுத் தொழிலாளர்கள், இரவும் பகலும் தறிகளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கவும் தமது அத்தியாவசியமான தேவைகளைக் கூடப் புறக்கணிக்கவும் வேண்டி நேர்ந்தது.

''ஜெர்மனியின் மாஞ்செஸ்டர்'' என்று அழைக்கப் பட்டு வந்த உப்பெர்தல், நெசவாலைத் தொழிலின் பெரும் மையமாகவும், புராடெஸ்டண்டு மதத்தின் ஒரு போக்கான ''பையட்டிசம்'' எனப்பட்ட சகிப்புத் தன்மையற்ற கடவுட் பற்றின் பாசாங்குப் பாசறையாகவும் இருந்தது. எங்கெல்சின் வாலிபக் காலக் கடிதம் ஒன்றில் உப்பெர்தலை ''முக்கெர்தல்'' (''பாசாங்குப் பள்ளத்தாக்கு'') என்று பெயரிட்டு அழைத்தார்.

உப்பெர்தலின் ''சமூகக் கருத்தை'' வேடதாரிப் போதகர்கள்தான் நிர்ணயித்தார்கள். பக்தர்களின் கூட்டங்களில் ''மதவிரோதிகளின்'' மீது கொடிய வழக்கு நடத்தப்பட்டது. சமய சம்பந்தமான கூட்டங்களுக்குப் போகாதவர்கள், கதைகள் படித்தவர்கள், நாடக, நடன அரங்குகளில் தென்பட்டவர்கள் போன்ற அனைவருக்கும் மதவிரோதிகள் என்று இவர்கள் பட்டம் சூட்டினார்கள். இதே ரீதியில்தான் பள்ளிக்கூட போதனைகளும் நடைபெற்றன.

இத்தகைய சமுதாயச் சூழ்நிலையில்தான் ஆழ்ந்த கருத்துக்களும், எதையும் கவனமாய் நோக்கும் கண்களும் படைத்த சிறுவன் எங்கெல்ஸ் வளர்ந்தான், வளர்க்கப் பட்டான்.

எங்கெல்ஸ் வளர்ந்து வந்த குடும்பத்தில் நிலவிய சூழ்நிலையும் இதைவிட ஒன்றும் மேம்பட்டதாக இருக்கவில்லை. எங்கெல்சின் தந்தை ஒரு மதவாதியாயும் கொடுங்கோலராயும் இருந்தார். அழகான, அன்பு நிறைந்த, ஆனால் பலவீனமான குணம் படைத்த எங்கெல்சின் அம்மா உட்பட, அவரது குடும்பம் முழுதும் அந்த மனிதரின் முன்னால் நடுங்கிற்று. அறிவுத் தாகமும், விடாமுயற்சியும், சிறு வயதிலேயே ஊடுருவிக் கூர்ந்து பார்க்கும் அறிவும் சுதந்திரச் சிந்தனையும் படைத்திருந்த பிரெடெரிக், உருப்படியாக மாட்டார் என்று அவரது குடும்பத்தினருக்குத் தோன்றி இருக்க வேண்டும். எங்கெல்சின் தந்தை தமது மனைவிக்கு எழுதிய கடிதம் ஒன்றிலிருந்து அவருடைய 15 வயதுப் பையன் எந்த அளவு அவரைக் கவலைக்கு உள்ளாக்கினான் என்பது விளங்குகிறது.

''வெளிப் பார்வைக்கு, உனக்குத் தெரிந்தபடி, அவன் நற்குணம் மிக்கவனுகி விட்டான். முன்பு அவன் நிறைய தண்டனே பெற்றிருந்த போதிலும், இப்போது தண்டனே கிடைக்கப் போகிறது என்ற பயத்தில்கூட அவன் தகராறு செய்யாமல் கீழ்ப்படிய மறுக்கிருன். இன்று அவனுடைய பெட்டியில், நூலகத்திலிருந்து அவன் கொண்டு வந்திருந்த ஆபாசப் புத்தகம் ஒன்றை மீண்டும் கண்டு திடுக்கிட்டேன். பதின்மூன்ரும் நூற்ருண்டில் வாழ்ந்த பிரபுவம்ச வீரர்களேப் பற்றிய நவீனம் அது... கடவுள் அவனேக் காப்பாற்றட்டும்! பொதுவில் பார்க்கும் பொழுது சிறப்பானவனுய் இருக்கும் இந்தச் சிறுவனேப் பற்றி நான் அடிக்கடி அஞ்சுகிறேன்''.*

அரிய திறமை சான்ற இந்தச் சிறுவன் இலக்கியம், கலே, சங்கீதம், மொழிகளேக் கற்றல் முதலிய விஷயங்களில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தான். அவன் பாட்டுக்கள் இயற்றினுன், அழகாக கேலிச் சித்திரங்கள் வரைந்தான். இயல்பாகவே உற்சாகமாகவும் மகிழ்ச்சி ததும்புகிறவனுகவும் காணப்பட்ட எங்கெல்ஸ் உடல் ஆற்றலும், மிகுந்த சுறுசுறுப்பும் கொண்டு தனிச் சிறப்புற்றுத் திகழ்ந்தார். குதிரைச் சவாரி, கத்திச் சண்டைப் பயிற்சி ஆகியவற்றில் விசேஷ உற்சாகம் காட்டினுர். திறமை மிக்க நீச்சல் வீரராய் விளங்கினுர். விளேயாட்டுக்களிலும் உடல் பயிற்சியிலும் அவர் அப்பொழுது காட்டிய அக்கறை அவரது வாழ்நாள் முழுதும் நீடித்தது.

1837ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், தந்தையின் வற்புறுத்தலினுல், இறுதி வகுப்பை முடிக்காமலே பள்ளியிலிருந்து எங்கெல்ஸ் வெளியேற வேண்டியதாயிற்று. தமது மூத்த பிள்ளேயை வியாபாரத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்த எங்கெல்சின் தந்தை வர்த்தகத் துறையில் அவருக்கு வேலே கற்றுக் கொடுக்க விரும்பினுர். ஆரம்பத்தில் ஒரு வருட காலம் தமது தந்தையின் அலுவலகத்தில் வேலே செய்தார் எங்கெல்ஸ். பின்னர், பிரேமெனிலுள்ள ஒரு பெரிய வர்த்தக நிறுவனத்திற்குத் தந்தையால் அனுப்பப்பட்டார்.

---

* *The Letter of Engels' Father to His Wife on August 27, 1835*; Gustav Mayer, *Friedrich Engels*, Eine Biographie, Band I, S. 9-10, Nijhoff, Haag 1934.

ஆனுல், இளைஞர் எங்கெல்ஸ் தமது அலுவலக வேலையை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. ஒரு வியாபாரியாகி விட வேண்டும் என்ற நோக்கம் அவருக்குச் சிறிதும் பிடிக்க வில்லை. அலுவல் வேலை போக மற்ற நேரங்களில் ஆர்வ முடன் படிப்பதில் அவர் ஈடுபட்டார். அளவின்றிப் பணியாற் றும் திறனும், தமது நேரத்தைத் தகுந்த முறையில் பயன் படுத்தும் பாங்கும், வாழ்க்கையை முழுமையாக அவர் வாழும் முறையும் எல்லோரையும் அதிசயத்தில் ஆழ்த்தின.

பெரிய வர்த்தகத் துறைமுகமான பிரேமெனில் ஆங்கில, ஹாலந்திய, பிரெஞ்சுப் பத்திரிகைகள் எங்கெல்சுக்கு ஏராள மாகக் கிடைத்தன. ஜெர்மனியில் தடை செய்யப்பட்டிருந்த புத்தகங்கள் அவர் கைக்குக் கிடைத்து வந்தன. அவற்றை அவர் பார்மெனிலுள்ள தமது நண்பர்களுக்கு அனுப்பி வந் தார். புத்தகங்களும் பத்திரிகைகளும் நிறைவற்றிருந்த அவரது கல்வியை நிறைவு செய்து அவர் மனக் கண்ணேட் டத்தை விரிவு படுத்தின.

பிரேமெனில் இருக்கையில் கவிதை இயற்றுவதில் எங் கெல்ஸ் ஆர்வம் காட்டினுர். பிரேமென் நகரத்து வர்த்தகத் துறைப் பணியாளராக இருந்த பெயர் பெற்ற கவிஞர் பெர் டினுன்டு பிரெய்லிகிராத்தைப் போலவே தாமும் கவிஞராகி விட வேண்டும் என்று அவர் வெகுவாய் விரும்பினுர்.

உப்பெர்தலில் நடத்திய சலிப்பான வாழ்க்கைக்குப் பின்னே, இங்கு அவர் நடன நாடக அரங்குகளுக்கு பெரு மகிழ்ச்சியுடன் சென்று வந்தார். பாடல்களிலும் இன்னிசை யிலும், குறிப்பாக பெத்ஹோவன் இன்னிசையில், ஈடுபாடு கொண்டார். முன்பு போலவே, நீச்சல், கத்திச் சண்டைப் பயிற்சி, குதிரைச் சவாரி போன்ற விளையாட்டுக்களில் கலந்து கொண்டார்.

உப்பெர்தலில் கவனித்து வந்தது போலவே பிரேமெனி லும் உழைப்பாளர்களின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து வந்தார் இளைஞர் எங்கெல்ஸ். ''சாமானியனிடம் ஒன்றும் இல்லை. ஆனுல், ஒரு மன்னன் தனது நாட்டில் சிறந்ததாக எதை வைத்திருக்க முடியுமோ, அதன் உருவகமே இந்தச் சாமானியன்தான்''* என்று எங்கெல்ஸ் எழுதினுர்.

---

* *Marx-Engels Gesamtausgabe*, Erste Abteilung, Bd. 2, S. 161.

மக்களின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து வந்தது, ஏராளமான புத்தகங்களைப் படித்தறிந்தது ஆகிய யாவும் அவர் பிறந்த அந்தக் குட்டி உலகத்தையும், அவர் வளர்ந்த தப்பெண்ணங்கள் நிறைந்த வர்த்தக-பாதிரிச் சூழ்நிலையை யும் இளம் வயதிலேயே அவரிடம் விழித்தெழுந்திருந்த விமர்சனக் கண்களினுல் மேலும் ஊடுருவிப் பார்க்கச் செய்தன.

தமது மகனின் ஆன்ம வளர்ச்சி பற்றி கவலே கொண்டிருந்த எங்கெல்சின் தந்தை, பிரேமென் நகரப் பாதிரி ஒருவரின் வீட்டில் முன்யோசனையுடன் எங்கெல்சைக் குடியேற்றினுர். ஆனுல், அந்தப் பாதிரியின் வீட்டில் இருக்கும் பொழுது தான், தமது மூதாதையரின் மதநம்பிக்கைகளின் மீது எங்கெல்சுக்குக் கடுமையான சந்தேகங்கள் ஏற்பட்டு அவற்றை முற்றிலும் துறந்தார்.

தமது நண்பர்களான கிரேபர் சகோதர்களுக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதங்களில் அப்போதைய தமது மனப் போராட்டங்களைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகிருர். பைபிளில் தீர்க்க முடியாத முரண்பாடுகள் மண்டிக் கிடக்கின்றன என்றும், மதத்துடன் விஞ்ஞானத்தை ஒத்துப் போகச் செய்ய இயலாது என்றும் முடிவு செய்த எங்கெல்ஸ், தமது குடும்பம், தமது நண்பர்கள் ஆகியோரின் பரம்பரையில் வந்த வாழ்க்கை முறையிலிருந்தும் உலகக் கண்ணேட்டத்திலிருந்தும் தம்மைத் துண்டித்துக் கொண்டார். அவர் தமது நண்பர் ஒருவருக்கு எழுதினுர்: ''இதன் மூலம் மிகப் பெரும் சங்கடங்களேயே நான் விலக்கு வாங்கிக் கொள்கிறேன் என்று எனக்குத் தெரியும்... ஆயினும், திடநம்பிக்கைகளின் வலிமையிலிருந்து எவ்வளவுதான் முயன்ருலும் என்னுல் விடுபட முடியவில்லே''.*

இளைஞர் எங்கெல்ஸ் தமது நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களில் அளவற்ற மனவுறுதி, ஆண்மை ததும்பும் கொள்கைப் பிடிப்பு, ஆழமிக்க கோட்பாட்டுறுதி ஆகியவற்றைக் காணலாம்.

தவீட் ஷ்டிராவுஸ் எழுதிய **ஏசுவின் வாழ்க்கை** என்னும் புத்தகந்தான் மதத்துடன் எங்கெல்ஸ் இறுதியாக முறித்துக்

---

* *Engels' Letter to F. Graeber on June 15, 1839;* Marx-Engels, *Gesamtausgabe*, Erste Abteilung, Band 2, S. 526.

கொள்வதற்குக் காரணமாய் இருந்தது. விவிலிய நூலில் சொல்லப்பட்டிருப்பதெல்லாம் முதல் கிறித்தவச் சமுதாயக் குழுக்கள் இருந்த காலத்தில் புனையப்பட்ட கட்டுக்கதைகளே என்னும் கருத்தை இந்த நூல் விரித்துரைத்தது. 1839ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் நாள் வி. கிரேபருக்கு எழுதிய கடிதத்தில், ஷ்டிராவுசைப் படித்த பின்பு மதநம்பிக்கை ''ஓட்டைகள் நிறைந்த கடற்பஞ்சு போல் ஆகி விடுகிறது'' என்று கூறினர் எங்கெல்ஸ்.

கிறித்தவ மதத்தின் ''சமரசச் சட்டையை'' விட்டெறிந்த பின்பு விடுதலை பெற்ற உணர்வு கொண்டார் பிரெடெரிக். ''உப்பெர்தல் நம்பிக்கைக்குப்'' பதிலாக புதிய உலகக் கண்ணோட்டம் ஒன்றை உருவாக்க முயற்சிகள் செய்தார். அதே போல், அரசியல் பிரச்னைகளில் அதிகமான சிந்தனை செலுத்தத் தொடங்கினர். குழந்தைப் பருவத்துக் கருத்துகளுக்கு மாருக, புத்திசாலியான, பெரும் திறமை வாய்ந்த, துணிவு மிக்க, ஊடுருவும் தன்மை கொண்ட ஒரு இளைஞனின் கூரிய பார்வையும் சிந்தனையும் தோன்றின. புரட்சிக்கு முந்திய ஜெர்மனியிலும் பக்கத்து நாடுகளிலும் அப்போது நிலவிய சமுதாய, அரசியல் சூழ்நிலைகள் இவருடைய கூரிய பார்வைக்கும் சிந்தனைக்கும் ஊட்டம் செறிந்த உணவு வழங்கி இளம் எங்கெல்சின் உலகக் கண்ணோட்டம் வளர்ந்து வடிவம் பெறுவதற்குப் பெரிதும் உதவின.

2

அரசியல் வாழ்க்கையின் ஆரம்பம்

எங்கெல்சின் இளமைக் காலமும், அவரது உலகக் கண்ணோட்டம், அரசியல் பார்வை ஆகியவை உருப் பெற்றதும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வர்க்கப் போராட்டம் தீவிரம் அடைந்து வந்ததும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன. பிரான்சில் நிகழ்ந்த 1830ஆம் ஆண்டு ஜூலை மாதப் புரட்சி இவ்வர்க்கப் போராட்டத்தில் ஒரு திரும்புமுனையாக இருந்து, ஐரோப்பாவில் கோலோச்சிக் கொண்டிருந்த ஆழமான பிற்போக்கைக் குலைத்தது. பிரெஞ்சுப் புரட்சியைத் தொடர்ந்து பெல்ஜியம், போலந்து, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புரட்சி எழுச்சிகள் வெடித்தன. பிரான்சில் தொழிலாளி வர்க்கத்தின் சுதந்திரமான முதல் வர்க்கப் போர்கள் நடந்தன (1831, 1834ஆம் ஆண்டுகளில் லியோன் நெசவாலைத் தொழிலாளர்களின் கிளர்ச்சிகள்). இங்கிலாந்திலும் வர்க்கப் போராட்டம் தீவிரமடைந்தது. இங்கே 1832ஆம் வருடத்திய நாடாளுமன்றச் சீர்திருத்தங்களால் தொழில் துறை முதலாளிகள் ஆட்சியைக் கைப்பற்ற அதிக சலுகைகள் பெற்றனர். சீர்திருத்தங்களுக்காகத் தீவிரமாகப் போராடிய தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் துரோகத்தனத்தைப் புரிந்து கொண்டு சுதந்திரமான தொழிலாளர் இயக்கம் (சார்ட்டிசம்) எனும் வழியில் அடி எடுத்து வைத்தனர்.

பிரான்சில் நடந்த ஜூலை மாதப் புரட்சி பற்றிய செய்தி ஜெர்மனியின் சில பகுதிகளில் மக்கள் எழுச்சிகளைத் தோற்றுவித்தது. ஜெர்மனியில் முப்பதாம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும், நாற்பதாம் ஆண்டுகளின் தொடக்கத்திலும் சமுதாய வாழ்க்கை உயிரூட்டப் பட்டது. முதலாளித்துவ வர்க்கத்தினர், அறிவாளிகள் மத்தியில் பல விதமான எதிர்த்தரப்புக் குழுக்கள், போக்குகள் தோன்றி வந்தன. எதிர்ப்புச்

சக்திகள் எல்லாம் அரசியல் கட்சிகளாகி வெளிப்படையாக நடவடிக்கைகளில் இறங்காமல், இலக்கிய, தத்துவார்த்தக் குழுக்களாக உருக்கொண்டு கலைப் படைப்பாகவும் தத்து வார்த்தக் கட்டுரைகளாகவும், பயந்து பயந்து தமது விமர் சனத்தை வெளியிட்டு வந்தன.

ஹெகலின் இடதுசாரி ஆதரவாளர்கள் இளம் ஹெகலி யர்கள் என்றழைக்கப்பட்டு இத்தகைய எதிர்ப்புக் குழுக் களில் ஒன்றாக இயங்கினார்கள்.

உலகத்தில் நிலவும் தோற்றங்கள் அனைத்தையும் அவற் றின் எழுச்சி, வளர்ச்சி, அழிவு என்று இயக்கவியல் கண் கொண்டு பார்த்ததுதான் ஹெகலுடைய மாபெரும் சேவை யாகும். தமது இயக்கவியல் ஆய்வு முறையைக் கொண்டு, இயற்கையிலும் மனித சமூகத்திலும் இயங்குகின்ற வளர்ச்சி பற்றிய விதிகளை வெளிப்படுத்தவும், இந்த வளர்ச்சிக்கு அடிப்படையாய் உள்ள எதிரெதிர் அம்சங்களுக்கு இடை யில் நடக்கும் போராட்டம் பற்றிய விதியைக் கண்டுபிடிக் கவும் ஹெகல் முயன்றார்.

எனினும், அறிந்துணரும் சக்தி வாய்ந்த எல்லாம் தழு விய கலைக் களஞ்சிய அறிவும், முற்போக்கு ஆய்வு முறையும் அவரிடம் இருந்த போதிலும் தாம் முன்வைத்துக் கொண்ட கடமைகளை அவரால் செய்து முடிக்க முடியவில்லை. அவரு டைய தத்துவஞான அமைப்பு அடிப்படையிலேயே கோளாறு உள்ளதாக இருந்தது. அவர் ஒரு கருத்துமுதல்வாதியாக இருந்தார். எனவே, கருத்துமுதல்வாதத் தன்மை கொண் டதாக அவருடைய இயக்கவியல் இருந்தது. இயற்கை, சமு தாயம் இவ்விரண்டின் வளர்ச்சிக்கும் அடிப்படையாய் இருப் பது ஆன்மாவின் வளர்ச்சி, ''பரமக் கருத்து'' என்று அவர் கருதினார். இயற்கையையும் மனித சமுதாயத்தையும் படைத் தது என்று ஹெகல் கூறும் ''பரமக் கருத்து'' என்பது கடவுள் நம்பிக்கைக்கு ஒரு தத்துவஞானப் போர்வை போர்த்தியது தானே தவிர வேறொன்றும் அல்ல. இவ்வாறாக, ஹெகலின் மாபெரும் தத்துவஞான மாளிகை, ஒரு கற்பனைக் கடவுள் எனும் கோளாறுள்ள அஸ்திவாரத்தினது மிச்ச சொச்சங் களின் மீது நின்று கொண்டிருந்தது.

தமது கருத்துமுதல் வாதக் கண்ணோட்டத்தை அடிப் படையாகக் கொண்டு, இயற்கை, சமுதாயம் ஆகியவற்றின்

உண்மையான வளர்ச்சியை, ''சிந்தனையின் சொந்த வளர்ச்சியே'' என்று ஹெகல் மாற்றிச் சொன்னார். நிகழ்ச்சிகளுக்கிடையே உள்ள எதார்த்தத் தொடர்பினை அவர் இவ்வாறு திரித்துக் கூறினார். தமது இயக்க மறுப்பியல் அமைப்புக்கும் பழைமைப் பிடிப்புள்ள தமது அரசியல் கருத்துக்களுக்கும் ஏற்ப இயக்கவியலைத் திருத்தி, கடந்த காலத்திற்கு மட்டும் அதனைப் பொருத்தி நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் தொடாது விட்டு விட்டார் ஹெகல்.

*1830*ஆம் ஆண்டு பிரான்சில் நடந்த புரட்சியும், ஜெர்மனியில் சமுதாய, அரசியல் முரண்பாடுகள் கூர்மை பெற்று வந்ததும் செலுத்திய செல்வாக்குக்கு உட்பட்டிருந்த ஹெகலுடைய ஆதரவாளர்கள் வேறு முடிவுகளுக்கு வந்தார்கள். எல்லாம் மாறிக் கொண்டிருக்கின்றன என்றால், இருந்து கொண்டிருப்பவை எல்லாம் விரைவிலோ, காலம் தாழ்ந்தோ வேறொன்றுக்கு இடம் விட்டு மடிந்து போகுமாறுதான் விதிக்கப்பட்டிருக்கின்றன என்றால், பிரஷ்ய முடியரசுக்கும் நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்திற்கும், போலீசின் தான்தோன்றித்தனத்திற்கும் கூட முடிவு காலம் வந்து கொண்டிருக்கிறது என்கின்ற முடிவும் தானாகவே பெறப் படவில்லையா? ஹெகலின் இந்த இடதுசாரி ஆதரவாளர்கள் ஹெகலினுடைய தத்துவஞானத்திலிருந்தே தீவிரமான அரசியல் முடிவுகளை மேற்கொள்ள முயன்றார்கள். அன்றைய ஜெர்மனியில் அரசியல் ஒரு ''தடை செய்யப்பட்ட துறையாக'' இருந்ததால், பிரஷ்ய முடியரசின் தூண்களில் ஒன்றாக விளங்கிய மதத்தின் மீது இளம் ஹெகல்வாதிகள் தமது கண்டனங்களைப் பிரதானமாகத் தொடுத்தனர்.

இந்தக் கண்டனத்தைத் துவக்கி வைத்தது ஷ்டிராவுஸ் எழுதிய **ஏசுவின் வாழ்க்கை** என்னும் புத்தகம் ஆகும். இப்புத்தகம்தான், ஹெகலுடைய தத்துவஞானத்தைக் கற்குமாறு எங்கெல்சைத் தூண்டியது.

ஆயினும், கிரேபருக்கு எங்கெல்ஸ் எழுதியபடி, ''வடிகட்டிய ஹெகல்வாதியாய்'' அவரால் மாற முடியவில்லை. ஹெகலுடைய போதனையோ அவரைப் பின்பற்றிய இடதுசாரியினருடைய கருத்துக்களோ எங்கெல்சை முழுமையாகத் திருப்திப்படுத்தவில்லை. தத்துவஞானம், மதம் பற்றிய பிரச்னைகளை மட்டும் பார்க்கும் பொழுது அவர்கள் வாழ்க்கையி

லிருந்தும், நடைமுறையிலிருந்தும், அரசியலிலிருந்தும் வெகு தூரம் விலகிப் போனார்கள். இந்தக் குறையை, ''விடுதலைக்கும் உரிமைக்கும் ராட்சச பலத்துடன் போராடிய வீரர்'' என்று எங்கெல்ஸ் பெரு மகிழ்ச்சியுடன் அழைத்த லூத்விக் பியோர்னேயின் கருத்துக்கள் நிறைவு செய்தன என்று எங்கெல்ஸ் கருதினார். வெளிநாட்டில் வாழ்ந்த இந்த எழுத்தாளர் ஜெர்மானிய மக்களை நோக்கி, விடுதலைக்காகப் போராட வரும்படி விடுத்த கொழுந்து விட்டெரியும் அறைகூவல் இளம் எங்கெல்சின் மனத்திற்குள் எழுச்சி மிக்க எதிரொலியைக் கிளப்பியது.

ஹெகலும் பியோர்னேயும் ஒருவரை ஒருவர் நிறைவு செய்கிறார்கள் என்று எழுதினார் எங்கெல்ஸ். ஹெகல் ஒரு சூட்சுமமான தத்துவ விஞ்ஞானி, சிந்தனையாளர் என்றால், பியோர்னேயோ செயலின் மகத்துவத்தை எவரையும்விட அழகாய்த் தீட்ட வல்ல ஒரு அரசியல் நடைமுறையாளர். விஞ்ஞானத்திற்கும் வாழ்க்கைக்கும், தத்துவஞானத்திற்கும் அரசியலுக்கும், சிந்தனைக்கும் செயல்பாட்டுக்கும் இடையில் ஒன்றுமை இருக்க வேண்டியதும் அவை ஒன்றின்மீது ஒன்று செல்வாக்குச் செலுத்த வேண்டியதும் அவசியம் என்று எங்கெல்ஸ் கோடிட்டுக் காட்டினார்.

நண்பர்களுக்கு இளம் எங்கெல்ஸ் எழுதிய கடிதங்களும், அவருடைய முதல் இலக்கிய அனுபவங்களும், அவருடைய தீவிர அரசியல் ஈடுபாட்டுக்கும் அவருடைய புரட்சிகர மனநிலைக்கும் சான்று பகர்கின்றன. அவர் ''பழைய உலகம் இடிபாடுகளாகத் தகர்ந்து சிதறுவதைக்'' கனவில் கண்டார், ''வாழ்க்கையின் மகுடமான வீரச் செயல்'' புரியத் துடித்தார்.

ஜூலை மாதப் புரட்சியின் ஒன்பதாவது ஆண்டு தினத்தை ஒட்டி எங்கெல்ஸ் எழுதிய கவிதை ஒன்றில் ஆட்சியாளர்களைப் பின்வருமாறு எச்சரிக்கிறார்:

> பிரான்சினின்று வந்த தென்றல் வீசி அடிக்குது இங்கே,
> கொதித்து எழுந்து விட்டதப்பா மக்கள் பெரும் கூட்டம்.
> ஆடுகின்றது அரசுக் கட்டில் புயலில் படகு போல,
> ஆட்சி உங்கள் கைகளிலே அசைந்து நடுங்கக் காணீர்!*

---

* கா. மார்க்சும் பி. எங்கெல்சும், நூல் திரட்டு, தொகுதி 41, பக்கம் 414.

ஹைனே, பியோர்னே ஆகியோரின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த, ''இளம் ஜெர்மனி'' என்ற தீவிர இலக்கியவாதிகளின் குழு ஒன்று நடத்தி வந்த ஜெர்மன் தந்தி என்னும் பத்திரிகையில் எங்கெல்சின் சில கவிதைகளும், பின்னர் கட்டுரைகளும் வெளியாயின. இந்தக் குழு கொள்கை முதிர்ச்சி பெருமலும், அரசியல் கருத்துக்களில் தெளிவற்றும் இருந்த போதிலும், இலக்கியத்தை சமுதாய வாழ்க்கைக்கு அருகே நெருக்கிக் கொண்டு வரவும் அவ்விலக்கியத்தை அரசியல் போராட்டத்தில் ஈடுபடுத்தவும் முயன்றதால் இதன்பால் எங்கெல்ஸ் ஈர்க்கப் பட்டார். எனினும், ''இளம் ஜெர்மனி''யைச் சேர்ந்த எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் விமர்சன ரீதியில் அணுகுவதற்கு அவரை இது தடை செய்யவில்லை. உதாரணமாக, இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் ''உலகு தழுவிய துக்கத்திற்காக'' விழுந்து விழுந்து புலம்புகிறார்கள் என்றும், இவர்களுடைய எழுத்துக்களில் தோல்வி மனப்பான்மையே விரவிக் கிடக்கிறது என்றும் அவர் கேலி செய்தார். இத்தகைய மனப்பான்மை எங்கெல்சின் இயல்புக்கே விரோதமானது. ஜெர்மனியின் ''நிகழ்காலம்'' எவ்வளவு சோகமயமாய் இருந்த போதும், தமது உற்சாகத்தை இழந்துவிடாமல் வரப் போகின்ற போராட்டங்களை எண்ணி மகிழ்வுற்று, அதில் அடையப் போகும் வெற்றியில் உறுதி கொண்டிருந்தார் எங்கெல்ஸ். ''மாலைப் பொழுது'' என்னும் கவிதையை, அவருக்கு மிகவும் பிடித்தமான ஆங்கிலேய கவிஞன் ஷெல்லியினுடைய கவிதை ஒன்றின் ''வருகிறது நாளைப் பொழுது'' என்னும் வரியைத் தொடக்கக் குறிப்பாகக் கொண்டு ஆரம்பிக்கிறார் எங்கெல்ஸ்.

இந்தக் கவிதையில், ஜெர்மனியில் கோலோச்சி வந்த கருக்கிருட்டைக் சித்திரந் தீட்டிக் காட்டி, ''விடுதலை உதயம்'' ஆகும் வேளையைப் பற்றிக் கனவு காண்கிறார்:

பூமியெங்கும் பூமலர்ந்த சோலையாக மாறிடும்,
நாடனைத்தும் செடியெலாமாய் நல்லதாக வேறுறும்,
வடபுலத்தைத் தெங்கு பனை உடை யுடுத்திக் காட்டிடும்,
பனியுறைந்த பாலைவெளி மணக்கும் மலரால் அழகுறும்.*

---

* F. Engels, *An Evening;* K. Marx and F. Engels, *Collected Works*, Vol 2, Moscow 1975, pp. 107-111.

தமது சிந்தனைகளை, அப்பழுக்கற்ற கவிதை வடிவில் தம்மால் வெளியிட முடியவில்லையே என்று எங்கெல்ஸ் வருத்த முற்ருர். கவிதை நடையை விட்டுவிட்டுச் சிறுகச் சிறுகப் பத்திரிகைக் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார்.

ஜெர்மன் தந்தி என்ற பத்திரிகையில், ஆசிரியர் பெயரின்றி வெளிவந்த எங்கெல்சின் முதல் கட்டுரையான **உப்பெர்தல் கடிதங்கள்,** பாசாங்குக்காரர்கள், சுரண்டல் பேர்வழிகள் ஆகியோரின் முகமூடியைக் கிழித்தெறிந்ததால், அவர்கள் மத்தியில் அது கடும் சீற்றத்தைத் தோற்றுவித்தது. இந்தக் **கடிதங்களின்** ஆசிரியர் யார் என்ற புதிர் விளங்காமல், உப்பெர்தல் வாசிகள் இந்தக் **கடிதங்களின்** ஆசிரியர் பிரெய்லிகிராத் என்றனர், மற்றவர்களோ **ஜெர்மன் தந்தி**யின் ஆசிரியர் குத்ஸ்கோவ்தான் இவற்றை எழுதியிருக்கக் கூடும் என்று கூறினர். உப்பெர்தல் எறும்புப் புற்றை இப்படிக் கலைத்து விட்டவர், மரியாதைக்குரிய பார்மென் நெசவாலை முதலாளியின் குடும்பத்தினரில் ஒருவர் என்ற விஷயத்தை யாராலும் ஊகிக்க முடியவில்லை.

ஜெர்மன் தந்தியில் ''பி. ஆஸ்வல்டு'' என்ற புனைபெயரில் அவர் எழுதிய கட்டுரைகளிலும் தமது நண்பர்களுக்கு அவர் எழுதிய கடிதங்களிலும் கொழுந்து விட்டெரியும் ஒரு புரட்சிகர ஜனநாயகவாதியின் எழுத்துக்கள் காணக் கிடக்கின்றன. முடியரசின் மீது அளவு கடந்த வெறுப்பு, ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களின் மீது ஆழ்ந்த அனுதாபம், மகத்தான புரட்சிகர மனப்பாங்கு ஆகியவற்றை இளம் எங்கெல்சின் இந்தக் கடிதங்கள், கட்டுரைகளிலிருந்து நம்மால் உணர முடிகிறது. முடியரசு, நிலப்பிரபுக்களின் நிலவுடைமை, அரசதிகாரிகளின், நிலப்பிரபுக்களின் அட்டகாசங்கள் ஆகியவற்றுக்கு எதிராக அவர் போராடுகிருர்.

சமுதாய வகுப்பு முறைக்கு எதிராகவும், பிரபுக்களின் சலுகைகளுக்கு எதிராகவும், ''எந்த விதமான வகுப்புமில்லாத, முழுமையான, எல்லோருக்கும் சமவுரிமையுள்ள, குடிமக்களின் மாபெரும் தேசம்''* என்னும் முழக்கத்தைப் பிரகடனப்படுத்துகிருர் எங்கெல்ஸ்.

---

* F. Engels, *Ernst Moritz Arndt;* Marx, Engels, *Collected Works,* Vol. 2, Moscow 1975, pp. 137-150.

மூன்று டஜன் அரசுகளாகப் பிளவு பட்டுக் கிடந்த ஜெர்மனியைப் பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் முழுமையாக ஒன்று படுத்துவது ஜெர்மன் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் முக்கிய கடமையாக இருக்க வேண்டும் என்று எங்கெல்ஸ் தமது கட்டுரைகளில் குறிப்பிடுகிறுர்.

முழுமையான ஜனநாயக ஜெர்மன் அரசுக்காகப் போராடும் போதே, நாட்டை ஒன்று படுத்துவதில் பிற்போக்கு பிரஷ்யா தன்னை தலைமையில் நிறுத்திக் கொள்வதற்குச் செய்கின்ற முயற்சிகளை எங்கெல்ஸ் எதிர்த்தார்.

பிரேமெனில் வர்த்தக வேலையில் ஈடுபட்டிருந்த காலத்தில் எழுதிய கட்டுரைகளிலும் கடிதங்களிலும் எங்கெல்ஸ் வளர்த்து வந்த கருத்துக்கள் இவைதாம். எங்கெல்சின் அரசியல் கண்ணோட்டங்களால் பீதியடைந்த அவரது நண்பர்கள் அவருக்கு ''புத்தி புகட்டுவதற்கு'' முயன்று அவருடைய கிண்டல் மிகுந்த கண்டனங்களை வாங்கிக் கட்டிக் கொண்டனர்.

''இரவில் அணியத்தக்க தொப்பியான நீ, என்னுடைய அரசியல் கருத்துக்களைக் கண்டனம் செய்ய அருகதையற்றவன்'' என்று அவர் 1840ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் வில்கெல்ம் கிரேபருக்கு எழுதினுர். ''உனது கிராமத்தின் மதகுருவாக உன்னை ஆக்கி அமைதியாக இருக்க விட்டு விட்டால்—இதற்கு மேலான குறிக்கோள் உனக்குக் கட்டாயமாக இருக்கப் போவதில்லை—மனைவியாரும், குழந்தைகள் சிலரும் உடன் வர, எந்தவித துரதிருஷ்டமும் உன்னைத் தீண்டாவண்ணம் ஒவ்வொரு மாலைப் பொழுதும் உல்லாசமாக உலாவருவதற்கு உனக்கு வாய்ப்பளித்தால், நீ மகிழ்ச்சிக் கடலில் முழுகிக் கொண்டிருப்பாய், அப்பொழுது, இருந்து வரும் அரசியல் அமைப்பைக் கண்டனம் செய்யும் பாதகன் எங்கெல்சைப் பற்றி நீ நினைக்க மாட்டாய். அடடா-வீரர்களே!''*

பள்ளி நண்பர்களுக்கு எங்கெல்ஸ் எழுதி வந்த கடைசிக் கடிதங்களில் ஒன்று இது. பிரேமெனில் அவர் தங்கி இருந்த இரண்டு ஆண்டுகளில் தமது நண்பர்களுக்கும் தமக்கும் இடைவெளியாய் ஒரு பெரும் பாதாளம் உருவாகி இருப்

* *Engels' Letter to W. Graeber on November 20, 1840;* Marx-Engels, *Gesamtausgabe*, Erste Abteilung, Band 2, S. 559.

பதை அவரால் உணராமல் இருக்க முடியவில்லை. இந்த ஆண்டுகளில், அவர் முழுமையான மாபெரும் உள்மனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்து, ''உப்பெர்தல் நம்பிக்கைகளிலிருந்து'' ஹெகலின் போதனைக்கும், பிறகு இப்போதனையை புரட்சிகரமாக விளக்கவும், சுற்றுச் சூழலைப் பற்றிய தெளிவற்ற திருப்தியின்மையிலிருந்து புரட்சிகர ஜனநாயகக் கண்ணோட்டத்திற்கும் வழியமைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்.

பரந்த உலகப் பார்வை, புரட்சிகர மனப் பாங்கு, உழைக்கும் மக்களின் துன்பங்களின்பால் ஆழ்ந்த அனுதாபம் இவையெல்லாம் இளம் எங்கெல்சைச் சுற்றுச் சூழலிலிருந்து தூக்கி உயர்த்தின.

* * *

*1841*ஆம் ஆண்டு வசந்த காலத்தில், உப்பெர்தலுக்கு வந்து சேர்ந்தார் எங்கெல்ஸ். விரைவில் இராணுவச் சேவைக்குப் போனார்.

*1841*ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எங்கெல்ஸ் பெர்லினுக்கு வந்து பீரங்கிப் படைப்பகுதியில் சேர்ந்தார். அவருக்கு இங்கு பிரஷ்ய ராணுவ கவாத்து ''லட்சணங்களை'' எல்லாம் அனுபவித்து அறிய வேண்டி நேர்ந்தது. எனினும் ராணுவச் சேவையினால் அவருக்கு விளைந்த பயனும் உண்டு. கலையைக் கவனமாகக் கற்று வந்த அவர் விரைவில் பீரங்கிப் படைச் சிற்றதிகாரி ஆனார். பிற்காலத்தில் ராணுவ விஞ்ஞானம் அவர் கற்ற பிரதானமான விஷயங்களில் ஒன்றானது.

இராணுவச் சேவையின் போது கிடைத்த ஓய்வு நேரங்களில் எங்கெல்ஸ் சுதந்திர மாணவர் என்ற முறையில் பெர்லின் பல்கலைக்கழகத்துக்குச் சென்று வரலானார். அங்கு தத்துவ ஞானம் பற்றிய விரிவுரைகளில் விசேஷ கவனம் செலுத்தி வந்தார். பெர்லினில்தான் எங்கெல்ஸ் இளம் ஹெகல்வாதிகளின் குழுவுடன் நெருங்கிய நட்புக் கொண்டார். இந்தக் குழுவில் புரூனோ, எட்கார் பௌவர் சகோதரர்களும், மேக்ஸ் ஷ்டிர்னரும் மற்றவர்களும் இருந்தனர்.

இந்த நேரத்தில் கார்ல் மார்க்சைச் சந்திக்க எங்கெல்சுக்கு வாய்ப்புக் கிட்டவில்லை, ஆனால் தம் புதிய நண்பர்களிடமிருந்து அவரைப் பற்றி நிறையக் கேள்விப் பட்டிருந்தார்.

1842ஆம் ஆண்டு வசந்த காலம் முதல் மார்க்ஸ் ரைன் பத்திரிகை என்ற செய்தி ஏட்டில் பணி புரிந்தார். பின்னர், அதே ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்ருர். இந்தப் பத்திரிகையில் எங்கெல்சின் பல கட்டுரைகள் வெளிவந்தன.

பெர்லினுக்கு வந்த சிறிது காலத்திலேயே இடதுசாரி ஹெகல்வாதிகள் அப்போது நடத்தி வந்த தத்துவார்த்தப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுத்தார் எங்கெல்ஸ். 1842ஆம் ஆண்டு வசந்த காலத்தில் **ஷெல்லிங்கும் திருவெளிப்பாடும்** என்று பெயர் குறிப்பிடாத அவரது பிரசுரம் வெளியானது. இதையடுத்து **கிறித்தவத் தத்துவஞானி ஷெல்லிங், அல்லது இவ்வுலக மெய்யறிவை தெய்வீக மெய்யறிவால் மாற்றுவது** என்னும் அவரது இரண்டாவது பிரசுரம், அதே போல் பெயரின்றி வெளிவந்தது. சமயத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் இடையில், நம்பிக்கைக்கும் அறிவிற்கும் இடையில் சமரசம் செய்து வைப்பதற்கு ஷெல்லிங் செய்துவந்த முயற்சிகளை இவற்றில் கடுமையாகக் கண்டனம் செய்கிருர் எங்கெல்ஸ்.

ஷெல்லிங்கும் திருவெளிப்பாடும் என்ற இந்தப் பிரசுரத்திற்குக் கொடுக்கப் பட்ட உள்தலைப்பான ''சுதந்திரமான தத்துவஞானத்தின் மீது பிற்போக்கு தொடுக்கும் புத்தம் புதுத் தாக்குதலுக்குக் கண்டனம்'' புகழ் பெற்ற ஜெர்மன் தத்துவஞானிக்கு எதிராக இளம் எங்கெல்ஸ் ஏன் போர் தொடுக்கிருர் என்பதை விளக்குகிறது. இளம் ஹெகல்வாதிகள் தமது போதகரான ஹெகலின் தத்துவஞானத்திலிருந்து எடுக்கும் தீவிர முடிவுகளைக் கண்டு பிரஷ்ய அரசாங்கம் கவலை கொண்டது. எங்கெல்ஸ் சொன்னபடி, ஷெல்லிங் அவரது தத்துவஞான அமைப்பினைப் ''பிரஷ்ய மன்னரின் தேவைகளை நிறைவு செய்வதற்காகப்'' பயன்படுத்தும் பொருட்டு பெர்லின் பல்கலைக்கழகத்துக்கு அழைக்கப்பட்டார்.

இளைய படைவீரரும் மாணவரும் தத்துவஞானியுமான எங்கெல்ஸ், தமக்கே உரித்தான வாலிப உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும், புகழ்பெற்ற விஞ்ஞானிக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்தார். ''...வீரனுக்கு ஒருவகை உத்வேகம் உரியதாகும். கல்நெஞ்சுடன் வாளை உருவுகிறவன், தான்

போரிடுகின்ற நோக்கத்தால் மிக அரிதாகத்தான் மனவெழுச்சி கொள்வான்''* என்று அவர் எழுதினர்.

ஹெகலின் தத்துவஞானத்தை வேரோடும் வேரடி மண்ணேடும் சாய்க்க விரும்பிய ஷெல்லிங்குக்கு எதிராக, இத் தத்துவஞானத்தில் உள்ள முற்போக்கு அம்சங்களை ஆதரிக்கிருர் எங்கெல்ஸ். அதே நேரத்தில், ஹெகலின் தத்துவஞானத்தில் காணப் படுகின்ற பொருத்தமின்மையையும், அவருடைய ''தொல்லை மிகு இயக்கவியலுக்கும்'' பழைமைப் பிடிப்புக் கொண்ட அவரது அரசியல் முடிவுகளுக்கும் இடையில் நிலவும் ஆழ்ந்த முரண்பாட்டையும் அவர் சுட்டிக் காட்டினர். ஷெல்லிங்கின் மாயாவாதப் பிற்போக்குத் தத்துவ ஞானத்தை விமர்சனம் செய்து, நாத்திகக் கொடியை வெளிப்படையாக மேலுயர்த்திய இளம் ஹெகல்வாதிகளில் முதல்வரானுர் எங்கெல்ஸ். இவர் மீது பெரும் செல்வாக்குச் செலுத்தியதும், பொருள்முதல்வாதக் கண்ணேட்டத்தில் சமயம் விமர்சனம் செய்யப் பட்டிருந்ததுமான, **கிறித்தவச் சமயத்தின் சாரம்** *(1841)* என்ற லூ. ஃபாயர்பாகின் புத்தகத்தை அவர் அடிக்கடி குறிப்பிடுகிருர்.

ஷெல்லிங்குக்கு எதிராக எங்கெல்ஸ் எழுதிய நூல்கள் கருத்துமுதல்வாதக் கண்ணேட்டத்தில் எழுதப் பட்டிருந்த போதிலும், எங்கெல்ஸ் கருத்துமுதல்வாதத்திலிருந்து பொருள்முதல்வாதத்திற்கு மாறிக் கொண்டிருந்தார் என்பது அந்நூல்களில் நன்கு தெரிகிறது. எங்கெல்சின் இந்தத் தத்துவஞான நூல்கள், போராட்டக் குணம் மிகுந்து, புரட்சிகர மனவெழுச்சிகள் கொண்டு, அரசியல் செயல்வழித் தன்மையதாயும் இருந்து மற்ற இளம் ஹெகல்வாதிகளின் நூல்களிலிருந்து மாறுபட்டிருந்தன. தத்துவஞானப் பிரச்னைகள் பற்றிய அவரது கட்டுரைகளில் நெருங்கி வரும் புரட்சியின் இடிமுழக்கம் கேட்கிறது. **ஷெல்லிங்கும் திருவெளிப்பாடும்** என்ற தமது பிரசுரத்தைப் பின்கண்ட வார்த்தைகளைக் கொண்டு முடித்த பொழுது, அப்புரட்சியை அவர் கரம் நீட்டி வரவேற்கிருர்: ''மாபெரும் முடிவின் மகத்தான நாள், மக்கள் இனங்களது போராட்டத்தின் மகத்தான நாள்,

* Engels, *Shelling on Hegel;* Marx-Engels, *Gesamtausgabe,* Erste Abteilung, Band 2, S. 178.

இதோ நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் போரில் வெற்றிவாவை சூடுவோம் நாம்!''*

ஜெர்மன் ஆண்டு மலரின் ஆசிரியரான அர்னுல்டு ரூகே **ஷெல்லிங்கும் திருவெளிப்பாடும்** என்ற இப்பிரசுரத்தைப் பற்றித் தமது மலரில் ஆர்வத்துடன் புகழ்ந்துரைத்து இப் பிரசுரத்தைத் தமது மலரில் வெளியிடுவதற்காக எழுதியவர் ஏன் அனுப்பி வைக்கவில்லை என்று கேட்டார். இத்தகைய பிரசுரத்தை ஒரு விஞ்ஞானியும் தத்துவஞானியுமே எழுத முடியும் என்பதில் ஒரு நிமிடமும் சந்தேகப்படாமல் பிரசுரத்தின் ஆசிரியரை ரூகே ''டாக்டர்'' என்றழைக்கிருர். எங்கெல்ஸ் எழுதிய பதில் கடிதத்தில் இந்தத் தவறைத் திருத்தினுர்: ''நிற்க, நான் ஒரு டாக்டர் அல்ல. அப்படி ஒருக்காலும் ஆகவும் முடியாது. நான் வெறும் வியாபாரி, பிரஷ்ய மன்னரின் பீரங்கிப் படையாளன். எனவே, இந்தப் பட்டத்திலிருந்து என்னைத் தயவு செய்து விடுவித்து விடுக.''**

''பி. ஆஸ்வல்டு'' என்ற புனை பெயரில் ஒளிந்து கொண்டிருப்பது யார் என்பது பற்றி பலப்பல கருத்துக்கள் வெளிவந்தன. ''இளம் ஜெர்மனியின்'' தலைவரான குத்ஸ்கோவ் தான் என்று சிலர் கருதினர். ஆனுல், ''இளம் ஜெர்மனி''யையும், குத்ஸ்கோவையும், குறிப்பாக இலக்கிய வரலாற்றுசிரியருமான யூங்கையும், ''பி. ஆஸ்வல்டு'' கடுமையாகக் கண்டனம் செய்து எழுதிய பொழுது இக்கருத்தின் ஆதரவாளர்கள் எல்லையற்ற வியப்படைந்தனர். யூங்கினுடைய சமகாலத்திய ஜெர்மன் இலக்கியம் பற்றிய பேருரைகள் குறித்து எங்கெல்ஸ் வரைந்த ஆய்வுக் கட்டுரையில், பொதுமான அரசியல் செயல்பாடின்மை, தத்துவஞான விவாதங்களில் திட்டவட்டமான நோக்கு நிலை ஏதுமில்லாமை ஆகியவற்றுக்காகவும், அவர்களது நூல்களில் காணப்படும் கொள்கைப் பிடிப்பின் பற்றுக்குறைக்காகவும் ''இளம் ஜெர்மனி'' பிரதிநிதிகளை எங்கெல்ஸ் கண்டனம் செய்தார்.

''இளம் ஜெர்மனியுடன்'' இறுதியாக முறித்துக் கொண்

---

* Engels, *Shelling and Revelation;* Marx-Engels, *Gesamtausgabe*, Erste Abteilung, Band 2, S. 227.

** *Engels' Letter to Arnold Ruge on June 15, 1842;* Marx-Engels, *Gesamtausgabe*, Erste Abteilung, Bang 2, S. 631.

டது இளம் எங்கெல்சின் வளர்ச்சியில் இன்னும் ஒரு கட்டம் தாண்டப்பட்டு விட்டதைக் குறித்தது.

*1842*ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ஆம் நாள் இராணுவச் சேவைக் காலம் எங்கெல்சுக்கு முடிவுற்றது. பார்மெனுக்கு எங்கெல்ஸ் வந்து சேர்ந்த பொழுது, பிரிட்டனுக்குப் போய், மாஞ்செஸ்டரில் உள்ள ''எர்மென் மற்றும் எங்கெல்ஸ்'' நெசவாலையில் வர்த்தக அனுபவம் பெறும்படி அவருக்குத் தந்தை ஆலோசனை கூறினர். தந்தையின் திட்டத்திற்கு எங்கெல்ஸ் மறுப்புத் தெரிவித்தாரா என்பது தெரியவில்லை. இந்தத் திட்டம் அவருடைய சொந்த விருப்பங்களுக்கு மிகவும் ஏற்றதாக இருந்திருக்கலாம். எது எப்படியாயினும், வாழ்க்கை நிரூபித்தபடி, இளம் எங்கெல்ஸ் பிரிட்டனில் இருக்க நேர்ந்ததால் அவருக்கு நிறையப் பயன் கிட்டி அவருடைய வளர்ச்சியில் அது திரும்பு முனையாக அமைந்தது என்பது மட்டும் உண்மை.

3

பொருள்முதல்வாதத்திற்கும் கம்யூனிசத்திற்கும் எங்கெல்ஸ் மாறியது

1842ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூட்டம் நிறைந்த நாள் ஒன்றில் எங்கெல்ஸ் லண்டனுக்கு வந்து சேர்ந்தார். சரியான முதலாளித்துவ நாடும், பெரும் இயந்திரத் தொழிலின் தாயகமுமான பிரிட்டன் பிரதானமாக விவசாய நாடாக இருந்த பின்தங்கிய ஜெர்மனியிலிருந்து எந்த அளவுக்கு வேறுபட்டிருந்ததோ, அதே அளவுக்கு இங்கிலாந்தின் தலை நகர் பிரஷ்யத் தலைநகரிலிருந்து அந்தக் காலத்தில் வேறுபட்டிருந்தது.

இயந்திரங்களின் கண்டுபிடிப்புக்களால் 18ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் தொடங்கிய தொழிற் புரட்சி, இங்கிலாந்தை ஒரு முதலாளித்துவ நாடாக மாற்றியது. தொழிற்துறை முதலாளித்துவ வர்க்கம், ''இந்தத் தொழிற் புரட்சியின் மிக முக்கியக் குழந்தையான'' (எங்கெல்ஸ்) ஆங்கிலேயப் பாட்டாளி வர்க்கம் ஆகிய இரண்டு புதிய வர்க்கங்கள் தோன்றின.

ஒரு புறத்தில் தொழிலாளர்களின் ஏழ்மையும் துன்பங்களும், மறு புறத்தில் உடைமையாளர் வர்க்கங்களின் செல்வமும் ஆடம்பரமும் தொழிலாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையில் இருந்த முரண்பாடுகளாக பிரிட்டனில் இருந்தது போல, வேறெங்கும், உலகத்தின் வேறெந்த நாட்டிலும், அவ்வளவு எடுப்பாக அப்போது காணப்படவில்லை. இந்த நாட்டில் நிலவிய வர்க்க முரண்பாடுகளின் கூரிய தன்மை எங்கெல்சைப் பெருமளவிற்கு வியப்பிற்குள்ளாக்கியது. இதனல் பிரிட்டனுக்கு வந்தவுடன் அவர் எழுதிய கட்டுரை ஒன்றையே ''பிரிட்டனில் புரட்சி வருவதற்கு சாத்தியமுண்டா, வாய்ப்பு உண்டா?'' என்ற கேள்வியுடன் துவக்கினர். இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கையில், உடைமை அற்றவர்கள் என்ற ஒரு வர்க்கத்தை இங்கிலாந்தின் இயந்

திரத் தொழில் தோற்றுவித்திருக்கிறது என்றும், இந்த வர்க்கம் ஒவ்வொரு நாளும் மேலும் பெரிதாக வளர்ந்து, மேலும் மேலும் உணர்வு பெற்று வருகிறது என்றும், நிலவி வரும் உறவுமுறைகளைப் பலவந்தமாகத் தூக்கியெறிவதன் மூலமாகவும், பிரபுக்கள், இயந்திரத் தொழிலதிபர்கள் ஆகியோரடங்கிய உயர் வகுப்பை வீழ்த்துவதன் மூலமாகவும்தான் பாட்டாளிகளின் பொருள்வகை நிலையை மேம்படுத்த முடியும் என்றும் எங்கெல்ஸ் எழுதினார். இப்படியாக, பாட்டாளி வர்க்கத்திற்குள், சகல விதமான சுரண்டலையும் ஒழித்துக் கட்டுவதற்காகவே படைக்கப்பட்டுள்ள ஒரு சமுதாயச் சக்தி அடங்கிக் கிடப்பதை எங்கெல்ஸ் தெளிவாகக் கண்டார்.

தொழிலாளர்களின் நிலைமையையும் அவர்களது வாழ்க்கை முறை, கண்ணோட்டங்கள், அவர்கள் நடத்தும் போராட்ட வடிவங்கள், வழிமுறைகள் ஆகியவற்றையும் மிகக் கவனத்துடனும் அனுதாபத்துடனும் ஆய்வு செய்தார் எங்கெல்ஸ். வெறும் புத்தகங்களையோ அதிகாரபூர்வமான ஆவணங்களையோ படிப்பதுடன் அவர் நின்று விடவில்லை. **பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை** என்ற அவர் புத்தகத்தின் தொடக்கத்தில் **பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்துக்கு** என்று தலைப்பிட்டு எழுதிய அறைகூவலில் ''...உங்களை உங்களுடைய இல்லங்களில் காண, உங்களது அன்றாட வாழ்க்கையைப் பார்க்க, உங்களது நிலைமையையும் தேவைகளையும் பற்றி உங்களுடன் பேச, உங்களை அடக்கி ஆள்வோரின் சமுதாய, அரசியல் ஆட்சிக்கு எதிராக நீங்கள் தொடுக்கும் போராட்டத்தைக் காண நான் விரும்புகிறேன்'' என்றார் எங்கெல்ஸ்.*

லண்டன், லீட்ஸ், மாஞ்செஸ்டர் ஆகிய நகரங்களின் தொழிலாளர்கள் அடைந்து கிடந்த கூச்சல் நிறைந்த தெருக்களிலும் குடியிருப்புப் பகுதிகளிலும் அலைந்து திரிந்தார் எங்கெல்ஸ். இங்கிலாந்தில் இருந்த காலத்தின் பெரும் பகுதியை அவர் கழித்த நகரமான மாஞ்செஸ்டரை எங்கெல்ஸ் குறிப்பாக நன்கு ஆராய்ந்தார்.

எங்கெல்ஸ் இங்கிலாந்தில் வசித்தபோதுதான் மக்களுக்கு உரிமை கோரும் சார்ட்டிச இயக்கம் எழுச்சி பெற்று வந்தது.

---

* Engels, *Condition of the Working Class in England;* K. Marx and F. Engels, *On Britain*, Moscow 1953, p. 334.

இந்த இயக்கத்தை எங்கெல்ஸ் ஆராய்ந்தார். சார்ட்டிஸ்டு களின் கூட்டங்களுக்குச் சென்ருர். சார்ட்டிச இயக்கத்தின் இடதுசாரித் தலைவர்களுடனும், இவ்வியக்கத்தின் **வடக்கு விண்மீன்** (*The Northern Star*) என்ற பத்திரிகையின் ஆசிரியரான ஜார்ஜ் ஜூலியன் கார்னியுடனும் தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டார்.

ராபெர்ட் ஓவன் என்ற கற்பனு சோஷலிஸ்டினுடைய உலகக் கண்ணேட்டத்தைப் பின்பற்றி வந்த பிரிட்டிஷ் சோஷலிஸ்டுகளுடன் எங்கெல்ஸ் தம்மை அறிமுகம் செய்து கொண்டார். **ஒழுக்கம் நிறைந்த புத்துலகம்** (*The New Moral World*) என்ற அவர்களின் பத்திரிகையில் அவர் பணியாற்றினுர். ஐரோப்பாக் கண்டத்தின் சோஷலிச இயக்கத்தைப் பற்றி இப்பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினுர். பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து முதலிய நாடுகளில் நிகழ்ந்து வந்த சோஷலிச இயக்கத்தையும் மாபெரும் பிரெஞ்சுக் கற்பனு சோஷலிஸ்டுகளான சென்-சீமன், ஃபுர்யே, ஆகியோரின் கண்ணேட்டங்களையும் காபே, லேரு, புரூதோன், வெயித்லிங் ஆகியோரின் கருத்துக்களையும் ஆங்கிலேயத் தொழிலாளிகளுக்கு இக்கட்டுரைகளில் எங்கெல்ஸ் அறிமுகப்படுத்தினுர். இக்கண்ணேட்டங்களில் இருந்த பலவீனங்களை விமர்சனம் செய்யும் பொழுதே, உலகக் கலாசாரக் களஞ்சியத்துக்கு இவர்கள் ஒவ்வொருவரும் கொண்டு வந்து சேர்த்த பயன்மிக்க விஷயங்களையும் குறிப்பிட்டார்.

ஜெர்மனியில் சோஷலிசம் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகளைப் பற்றி ஆய்வு செய்கையில், ஜெர்மானியர்களைத் தத்துவஞானத் தேசத்தவர் என்று வர்ணித்து, இவர்கள் தமது தனித் ''தத்துவஞானப்'' பாதையின் மூலமாக கம்யூனிசத்தை வந்து அடைவார்கள் என்றும், எனவே படித்தவர்கள், வசதிபடைத்தோர் ஆகிய வர்க்கங்களின் இடையில் கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்றை அமைப்பது சாத்தியமே என்றும் எங்கெல்ஸ் அப்பொழுது அபிப்பிராயப் பட்டார்.

வெறும் அரசியல் சீர்திருத்தங்கள் மட்டும் போதாது, கூட்டுச்சொத்துரிமையின் அடிப்படையில் நிகழும் சமுதாயப் புரட்சியின் விளைவாகத்தான் தமது சூட்சுமமான கோட்பாடுகளுக்கு ஏற்புள்ள சமுதாய அமைப்பு வந்து சேரும் என்னும் முடிவுக்கு ஹெகல் ஆதரவாளர்களில் இடதுசாரிப் பிரிவினர்

சிலர் 1842ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்திலேயே வந்தனர் என்று ஐரோப்பாவில் சமுதாய மாற்றம் ஏற்படுத்துவதற்கான இயக்கத்தின் வெற்றிகள் என்ற கட்டுரையில் எங்கெல்ஸ் சொல்லுகிறார். இத்தகைய இடதுசாரி ஹெகல்வாதிகளில் கார்ல் மார்க்சின் பெயரையும் தமது பெயரையும் குறிப்பிடுகிறார் எங்கெல்ஸ். எனவே, இங்கிலாந்துக்குக் கிளம்புவதற்கு முன்பாகவே கம்யூனிசத்தை நோக்கி முதல் அடியை எடுத்து வைத்தார் எங்கெல்ஸ். ஆனால், அந்தக் கம்யூனிசம் திட்டவட்டமாயில்லாத, தெளிவற்ற தன்மையதாய் இருந்தது.

பிரிட்டனில் இருந்த காலத்தில்தான் எங்கெல்ஸ் முற்றாகக் கம்யூனிஸ்டாக மாறினார்.

எங்கெல்சின் கருத்துக்கள் உருப்பெற்றதின் இந்த முக்கியக் கட்டம், 1844ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பாரிசில், கார்ல் மார்க்சினாலும் ரூகேயினாலும் பதிப்பிக்கப் பட்டு வெளிவந்த ஜெர்மன் — பிரெஞ்சு ஆண்டுமலர் (*Deutsch-Französische Jahrbücher*) என்ற பத்திரிகைக்கு அவர் எழுதிய அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விமர்சனக் குறிப்புகள் என்னும் படைப்பில் தெளிவாகத் தெரிந்தது. எங்கெல்சினுடைய இந்த நூல் முதிர்ச்சி பெற்ற மார்க்சிய நூலாக இருக்கவில்லையாயினும் மேதைக் கருத்துக்களின் முளைகள் இதில் அடங்கியுள்ளன. மேதைமை நிறைந்த முதற் குறிப்புகள் என்று மார்க்ஸ் பின்னர் இந்த நூலை வர்ணித்தார். சமூக விஞ்ஞானத் துறை சம்பந்தமான இந்த முதல் நூலில் பலவீனங்கள் பலவிருப்பினும், இதற்காகத் தான் சற்றே பெருமைப்படுவதாக எங்கெல்ஸ் 1884ஆம் ஆண்டு எழுதினார்.

இந்த நூலில் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனத்தையும் அதன் மூலமாக பாட்டாளி வர்க்க நிலையிலிருந்து முதலாளித்துவத்தை விமர்சனம் செய்வதையும் தொடங்கி வைத்தார் எங்கெல்ஸ். முதலாளித்துவ வர்க்கப் பொருளாதாதார வல்லுனர்கள், அவர்களில் சிறந்தவர்களான ஆ. ஸ்மித், டே. ரிகார்டோ உட்பட, முதலாளித்துவத்தின் பொருளாதார விதிகள் நிலையானவை, மாற்ற முடியாதவை என்று கருதினர். இதற்கு மாறாக, லெனினது வார்த்தைகளில், ''தனிச்சொத்தின் ஆதிக்கத்தால் ஏற்பட்டுத் தீரும் விளைவுகள் என்ற முறையில், நவீனகாலப் பொருளாதார அமைப்பு முறையின் முதன்மையான தோற்றங்களை

சோஷலிச நோக்குநிலையிலிருந்து எங்கெல்ஸ் பரிசீலித்தார்.''*

எங்கெல்ஸ் கம்யூனிசக் கண்ணோட்டத்தை வந்தடைந்ததும், கருத்துமுதல்வாதத்திலிருந்து பொருள்முதல்வாதத்திற்கு வந்து சேர்ந்ததும் ஒன்றுக்கொன்று தொடர்புடன் ஒரே நேரத்தில் நடந்தன.

சிந்தனைக்கும் வாழ் நிலைக்கும், ஆன்மாவுக்கும் இயற்கைக்கும் இடையே நிலவுகின்ற உறவு பற்றிய கேள்விக்குத் தரும் பதிலைப் பொறுத்து பொருள்முதல்வாதிகள், கருத்துமுதல்வாதிகள் என்று தத்துவஞானிகள் இரண்டு பெரும் முகாம்களாகப் பிரிக்கப்படுகின்றனர். ஆன்மாவின் வளர்ச்சியே இயற்கையின் வளர்ச்சியை நிர்ணயிக்கிறது என்றும், எனவே இறுதியில் உலகமானது படைக்கப்பட்ட ஒன்று என்றும் ஏதாவது ஒரு வழியில் ஒத்துக் கொள்கிறவர்கள் கருத்துமுதல்வாத முகாமைச் சேர்ந்தவர்கள். மாறாக, இயற்கைதான் ஆதிமுதல் அடிப்படை என்று கருதுகிறவர்கள் பொருள்முதல்வாதத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

பிரிட்டனில் இருந்த பொழுது எங்கெல்ஸ் எழுதிய நூல்களில் அவர் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திற்கு மாறிக் கொண்டிருந்தது மேலும் மேலும் குறிப்பாகவும் தெளிவாகவும் தெரிகிறது. கார்லைல் என்பவர் எழுதிய கடந்த காலமும் நிகழ்காலமும் என்ற புத்தகத்தைப் பற்றி எங்கெல்ஸ் எழுதிய கட்டுரையில், பொருள்முதல்வாத, நாத்திகக் கண்ணோட்டங்களிலிருந்து, புதுச் சமயம் ஒன்று தோற்றுவிப்பதற்காகக் கார்லைல் செய்யும் முயற்சிகளைக் கண்டிக்கிறார். ''வீர வழிபாடு'' பற்றி விளம்பரம் செய்யும் கார்லைலினுடைய கருத்துமுதல்வாதத் தத்துவஞானக் கண்ணோட்டத்தை எதிர்த்து, முற்போக்குக் கருத்துக்களை நடைமுறைப் படுத்துவதில் பொதுமக்கள் வகிக்கும் தீர்மானமான பாத்திரத்தைக் கோடிட்டுக் காட்டினார் எங்கெல்ஸ்.

பிரிட்டனின் சமுதாய, அரசியல் அமைப்பு பற்றிய ஆய்வுகள் அடங்கிய இந்தக் காலத்து எங்கெல்சினுடைய கட்டுரைகளில் அவர் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திற்கு

---

* வி. இ. லெனின், பிரெடெரிக் எங்கெல்ஸ் (வி. இ. லெனின், மார்க்ஸ்-எங்கெல்ஸ்-மார்க்சியம், மாஸ்கோ, *1976*, பக்கம் *70*).

மாறிக் கொண்டிருந்தது திட்டவட்டமாய்த் தெரிகிறது. பிரிட்டனில் நடந்துகொண்டிருந்த அரசியல் போராட்டத் துக்குப் பல்வேறு வர்க்கங்களின் பொருள்வகை நலன்களே அடித்தளமாய் இருந்தன என்ற முடிவுக்கு வந்தார் எங் கெல்ஸ். அரசியல் அரங்கில் போராடிக் கொண்டிருந்த பல்வேறு கட்சிகளின் வர்க்கத் தன்மையையும், பிரிட்டிஷ் அரசின் வர்க்க இயல்பையும் அவர் அம்பலப்படுத்தினர்.

''பிரிட்டனை உண்மையில் ஆள்வது யார்?'' என்ற கேள் விக்கு ''பிரிட்டனில் ஆட்சி புரிவது சொத்துதான் '' என்று எங்கெல்ஸ் விடையளித்தார். பிரிட்டிஷ் அரசியல் சட்டத் தின் வர்க்கத் தன்மையையும், குறுகிய எல்லைக்குட்பட்ட அதன் முதலாளித்துவ ''சுதந்திரத்தையும்'' அம்பலப்படுத்தி, முதலாளித்துவ வர்க்கத்திற்கும் தனியார் சொத்துரிமைக் கும் எதிராகப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட் டத்தில் கிடைக்கின்ற வெற்றியில் பிறக்க வேண்டிய உண் மையான ஜனநாயகத்தை முன்வைத்தார் எங்கெல்ஸ்.

பிரிட்டனில் நிலவுகின்ற சமுதாய உறவுகளையும் முதன் மையாக, பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கையையும் போராட்டத்தையும் ஆய்வு செய்து, அந்த ஆய்வின் முடிவு களை, மார்க்சைச் சந்தித்த பின்பே எழுதி முடித்து, 1845ஆம் ஆண்டு ஜெர்மனியில் வெளியிடப்பட்ட **பிரிட்டிஷ் தொழி லாளி வர்க்கத்தின் நிலைமை** என்ற தமது சிறந்த நூலில் எங்கெல்ஸ் தொகுத்துக் கொடுக்கிருர். எங்கெல்ஸ் பின்னர் குறிப்பிட்டபடி, ஆரம்பகால நூலான இதில், விஞ்ஞான பூர்வமான கம்யூனிசம் உருவாகிக் கொண்டிருப்பதின் முதல் கட்டம் பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தின் எல்லா இடங்களிலும் விஞ்ஞானக் கம்யூனிசம் தனது மூதாதைகளில் ஒன்றான பழம்பெரும் ஜெர்மன் தத்து வஞானத்திலிருந்து தோன்றுவதன் சுவடுகளைக் காணலாம். ஆயினும், உலகத்து சோஷலிச இலக்கியத்தின் தலைசிறந்த நூல்களில் ஒன்ருக இது விளங்குகிறது.

பிரிட்டனில் இயந்திரத் தொழில் சார்ந்த பாட்டாளி வர்க்கத்தை உருவாக்கித் தந்த இயந்திரத் தொழில் புரட்சி யின் ஆழ்ந்த விளைவுகளையும், அவற்றின் முக்கியத்துவத்தை யும், சோஷலிஸ்டுகளில் முதல்வராக இந்த நூலில் எங்கெல்ஸ் ஆய்வு செய்கிருர். திரும்பத் திரும்ப வெடிக்கிற பொருளா

தார நெருக்கடிகள், வேலையில்லா இயந்திரத் தொழிலாளர்களின் இருப்புப் பட்டாளம் உருவாவது, முதலாளித்துவ இயந்திரத் தொழில் உற்பத்தி விரிவடைய விரிவடைய தொழிலாளி வர்க்கமும் உழைப்பாளிகளும், மேலும் கடுமையான சுரண்டலுக்கு ஆளாவது போன்ற முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் விதிமுறைகள் பலவற்றை வெளிப்படுத்துகிறார் எங்கெல்ஸ். தொழிலாளர்களின் சம்பளம், வேலை நாள், அவர்களின் வீட்டு நிலைமைகள், பெண்களும் குழந்தைகளும் செய்யும் கடுமையான உழைப்பு ஆகிய தொழிலாளர்களின் வேலைச் சூழல்களைத் தெளிவாகவும் உண்மையாகவும் சித்திரந் தீட்டி, வேலையற்று இருப்போரின் கையறு நிலையைப் படம் பிடித்தும் காட்டிய எங்கெல்ஸ் முதலாளித்துவ வர்க்கமும் தொழிலாளி வர்க்கமும் சமரசத்திற்கு இடமில்லாத இருவேறு நலன்களால் எதிரும் புதிருமாய் நிற்கின்றன என்ற முடிவுக்கு வருகிறார்.

ஒடுக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற மற்ற வர்க்கங்களிலிருந்து மாறுபட்டதாக, தனது வாழ்க்கை வசதிகளைத் தேடிக் கொள்ளுவதற்கு முடியாத மிக மோசமான நிலையிலிருப்பதும், நாளைய தினத்தைப் பற்றி எப்போதும் உறுதியற்றிருப்பதும் மட்டுமல்ல தொழிலாளி வர்க்கம் என்று எங்கெல்ஸ் காண்கிறார். பாட்டாளி வர்க்கம் வாழுகின்ற சூழ்நிலைகளே, அது ஒன்றுபட்டு உறுதியுறுவதற்கும், அமைப்பு ரீதியில் சேர்வதற்கும், முதலாளித்துவத்தை அழித்தொழிப்பதற்காக வரலாறு அதற்கு வழங்கியுள்ள மாபெரும் பணியினைச் செய்து முடிப்பதற்கும் தேவையான அடிப்படைகளை படைத்துக் கொடுத்திருக்கின்றன என்று காண்கிறார் எங்கெல்ஸ்.

தொழிலாளி வர்க்கம் எத்தகைய போராட்ட முறைகளையும், போராட்ட வடிவங்களையும் மேற்கொள்ளுகிறது, மனிதத் தன்மையற்ற சுரண்டலை எதிர்த்து அவ்வர்க்கம் ஆரம்ப காலத்தில் இயற்கையாகத் தோன்றிய கண்டனங்களிலிருந்து அமைப்பு ரீதியிலும் உணர்வு பூர்வமாகவும் மேலும் சிறந்த போராட்ட முறைகளை எப்படிக் கைக்கொள்ளுகிறது என்று எங்கெல்ஸ் இந்தப் புத்தகத்தில் ஆய்வு செய்கிறார்.

முதலாளித்துவ வர்க்கத்தினரை எதிர்த்து தொழிலாளிகள் அடைந்த ஆத்திரம் ஆரம்பத்தில் இயந்திரங்களைப்

புகுத்துவதையே எதிர்க்கும் ஒரு போராட்டமாக வெடித்தது. இயந்திரங்களைக் கண்டுபிடித்தவர்களைத் தொழிலாளர்கள் பின்தொடர்ந்து சென்று துன்புறுத்துவது, அவ்வியந்திரங்களை உடைத்து அழிப்பது, எழுச்சிகள் நடத்தி அவற்றின் மூலம் தொழிற்சாலைகளையே நிர்மூலமாக்குவது போன்ற தொழிலாளர்களின் செய்கைகளை உதாரணத்திற்குக் குறிப்பிடுகிறார் எங்கெல்ஸ். கொடுமையான துன்பங்களைத் தம்மிடையே கொண்டுவந்து கொட்டுவது இயந்திரங்கள் அல்ல என்றும், மாறாக, இவ்வியந்திரங்களையும், ஆலைக் கட்டிடங்களையும், மூலப்பொருள்களையும் தனிச் சொத்தாகக் கொண்டிருக்கிற முதலாளித்துவ உற்பத்திமுறைதான் இத்துன்பங்களுக்குக் காரணம் என்றும் தொழிலாளர்களால் இந்தக் காலத்தில் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆயினும், இயந்திர முறையையும், ஆலை முறையையும் அழித்தொழிக்கும் தமது முயற்சிகள் எந்தப் பலனையும் தரவில்லை என்று தொழிலாளர்கள் விரைவில் அறிந்து கொண்டார்கள். தமது கண்டனங்களைத் தெரிவிக்கப் புது வடிவங்களை அவர்கள் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. தொழிற்சங்க அமைப்பும், வேலைநிறுத்தப் போராட்டமும் இத்தகைய ஒரு புது வடிவக் கண்டனமாக அமைந்தன. கற்பனை சோஷலிஸ்டுகளுக்கு மாறாக, தொழிலாளர்களை ஒன்றிணைப்பதற்கும், அமைப்புறுதியும், ஒற்றுமையும் தொழிலாளர்களிடம் மேம்பட்டு வருவதற்கும் எத்தகைய பெரும் சக்தியாய் வேலைநிறுத்தங்கள் விளங்கின என்று எங்கெல்சினால் மதிப்பிட முடிந்தது.

போராட்டத்தின் மாதிரிகளையும் இன்னும் சிறந்த வடிவங்களையும் பிரிட்டிஷ் தொழிலாளர்கள் ஏற்கெனவே உருவாக்கி இருந்தனர். தனித்தனி முதலாளிகளை எதிர்த்து முழுமையற்ற பொருளாதாரப் போராட்டங்களை நடத்திவந்த தொழிலாளர்கள், ஆதிக்கம் செலுத்திவந்த வர்க்கங்களின் கூட்டாட்சியை — முதலாளித்துவ அரசை — எதிர்த்துப் போராட்டம் நடத்தத் தொடங்கினார்கள். முப்பதாம் ஆண்டுகளின் முடிவில், ஆங்கிலேய தொழிலாளர்களின் அரசியல் இயக்கம் தொடங்கியது. சார்ட்டிசம் என்ற பெயர் கொண்ட இந்த இயக்கத்தின் வரலாறு பற்றியும் எங்கெல்ஸ் தமது நூலில் வர்ணிக்கிறார்.

ஆரம்பத்தில் சார்ட்டிஸ்டு இயக்கத்தின் மிதவாத, வலதுசாரிப் பிரிவின் செல்வாக்குக்கு உட்பட்டு சார்ட்டிசப் பத்திரம் வரையப் பட்டிருந்ததால், அதில் எந்த விதமான சமூகப்-பொருளாதாரக் கோரிக்கைகளும் அடங்கி இருக்க வில்லை. ஆயினும், தமது தீவிரமான பொருளாதார மேம்பாட்டிற்குகந்த வகையில் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப் பற்றுவதற்கு இவ்வியக்கம் திட்டம் தருகிறது என்று தொழிலாளர்கள் கண்டார்கள்.

சார்ட்டிஸ்டு இயக்கம் தொடங்கிய காலத்தில், முதலாளி வர்க்கத்தின் இடது சாரிப் பிரிவினருக்கு ஆதரவாக இவ்வியக் கத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயன்று வந்த அரசியல் பிரமுகர்கள் பலர் இதில் கலந்து கொண்டிருந்த போதிலும், இவ்வியக்கம் மேலும் மேலும் வளர்ந்து வந்த பொழுது இந்த வழிப் போக்கர்கள் இதிலிருந்து விலகிச் சென்று விடவே, சார்ட்டிஸ்டு இயக்கம் பாட்டாளி வர்க்கத்தின் தெளிவான ஒரு புரட்சி இயக்கமாக மாறியது.

''சார்ட்டிசம் என்பது முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிரான எதிர்ப்பின் ஒரு சாரத் திரட்டு உருவம்'' என்று எழுதினர் எங்கெல்ஸ். ''இயக்கக் குழுக்களின் நடவடிக்கை களிலும், வேலை நிறுத்தங்களிலும், இந்த எதிர்ப்பு துண்டு துண்டாகப் பிரிந்து நின்றது; தனித்தனித் தொழிலாளர் களோ, தொழிலாளர் குழுக்களோ, தனித்தனி முதலாளிகளை எதிர்த்துப் போராடி வந்தனர்.... சார்ட்டிச இயக்கத்திலோ முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராகத் தொழிலாளி வர்க் கம் முழுமையுமே கிளர்ந்து எழுகிறது, முதலாளி வர்க்கத் தின் அரசியல் அதிகாரத்தையே பிரதானமாக எதிர்த்துத் தாக்குகிறது, முதலாளி வர்க்கம் தனது பாதுகாப்புக்காகப் போட்டுக் கொண்டிருந்த சட்டங்கள் என்ற வேலியின் மீது பாய்கிறது சார்ட்டிச இயக்கம்.''*

லெனின் சொன்னபடி, சார்ட்டிச இயக்கத்துடன் எங் கெல்ஸ் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பு, மார்க்சியத் தின் பலப்பல விஷயங்களை பெரும் புலமையுடன் முன்னறி வித்தது. இத்தொடர்பு எங்கெல்சின் மீது மிகப்பெரும் செல் வாக்குச் செலுத்தியது. சார்ட்டிச இயக்கத்தின் முக்கியத்து

---

* Engels, *Condition of the Working Class in England;* K. Marx and F. Engels, *On Britain*, Moscow 1953, p. 263.



2 Uhr Nachts. 16 Aug. 1867

Dear Fred,

Eben den letzten Bogen (49.) des Buchs fertig corrigirt. Der Anhang – Werthform – kleingedruckt, umfaßt 1¼ Bogen. Vorrede ditto gestern corrigirt zurückgeschickt. Also dieser Band ist fertig. Blos Dir verdanke ich es, daß dieß möglich war! Ohne Deine Aufopferung für mich konnte ich unmöglich die ungeheuren Arbeiten zu den 3 Bänden machen. I embrace you, full of thanks!

Inliegend 2 Bogen Reinabzug.

Die 15 £ mit bestem Dank erhalten.

Salut, mein lieber, theurer Freund!

Dein K. Marx

மூலதனத்தின் முதல் தொகுதி முடிந்து விட்டது பற்றி எங்கெல்சுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதம்



கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் எழுதிய ஜெர்மன் சித்தாந்தம் என்ற நூலினது கையெழுத்துப் பிரதியின் ஒரு பக்கம் (இடது புறம் எங்கெல்ஸ் கையெழுத்து, வலது புறம் மார்க்ஸ் கையெழுத்து)

பிரெடெரிக் எங்கெல்ஸ். 1862



எங்கெல்ஸ். 1888



Neue Rheinische Zeitung.

Probeblatt. Organ der Demokratie.

№ 1. Köln, Donnerstag, 1. Juni 1848.

Das Erscheinen der Neuen Rheinischen Zeitung war ursprünglich auf den ersten Juli festgesetzt. Die Arrangements mit den Correspondenten ꝛc. waren auf diesen Termin getroffen.

Da jedoch bei dem erneuten frechen Auftreten der Reaktion deutsche Septembergesetze in naher Aussicht stehen, so haben wir jeden freien Tag benutzen wollen, und erscheinen schon mit dem ersten Juni. Unsre Leser werden es uns also nachsehen müssen, wenn wir in den ersten Tagen an Nachrichten und mannigfaltigen Correspondenzen noch nicht das reichhaltige Material liefern, wozu unsere ausgedehnten Verbindungen uns befähigen. In wenig Tagen werden wir auch hierin allen Anforderungen genügen können.

Redaktions-Comité.

Karl Marx, Redakteur en Chef.
Heinrich Bürgers,
Ernst Dronke,
Friedrich Engels,
Georg Weerth,
Ferdinand Wolff,
Wilhelm Wolff,
Redakteure.

Amtliche Nachrichten.

Deutschland.

Die Expedition der „Neuen Rheinischen Zeitung."

புதிய ரைன் பத்திரிகையின் முதல் இதழ்



PRICE TWOPENCE.

MANIFESTO OF THE COMMUNIST PARTY,

By KARL MARX, and FREDERICK ENGELS.

Authorized English Translation.

EDITED AND ANNOTATED BY FREDERICK ENGELS. 1888.

PRZEDMOWY

Przedmowa do 2go wydania polskiego

TEN fakt, że nowe wydanie „Manifestu Komunistycznego" stało się potrzebnem, pobudza do różnych uwag. Najpierw godnem jest zaznaczenia, że Manifest w ostatnich czasach stał się do pewnego stopnia probierzem rozwoju wielkiego przemysłu na lądzie europejskim. W miarę, jak w pewnym kraju wzrasta wielki przemysł

Sozialdemokratische Bibliothek.

XXXIII.

Das Kommunistische Manifest.

Vierte autorisirte deutsche Ausgabe.

Mit einem neuen Vorwort von Friedrich Engels.

London. German Cooperative Publishing Co. 114 Kentish Town Road NW. 1890.

CARLO MARX e FEDERICO ENGELS

IL MANIFESTO DEL PARTITO COMUNISTA

CON UN NUOVO PROEMIO AL LETTORE ITALIANO DI FEDERICO ENGELS

Centesimi 25

MILANO Uffici della CRITICA SOCIALE Portici Galleria, N. 23 1893

எங்கெல்சால் முன்னுரைகள் எழுதப்பட்ட கம்யூனிஸ்டு அறிக்கையின் சில பதிப்புக்கள்



பிரெடெரிக் எங்கெல்ஸ். 1864ஆம் ஆண்டுகள்



கார்ல் மார்க்ஸ். 1865



Die Lage
der
arbeitenden Klasse
in
England.

Nach eigner Anschauung und authentischen Quellen
von
Friedrich Engels.

Leipzig.
Druck und Verlag von Otto Wigand.
1845.

பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்ற எங்கெல்சின் புத்தகத்தினுடைய முதல் பதிப்பின் முன் அட்டை

Manifest
der
Kommunistischen Partei.

Veröffentlicht im Februar 1848.

Proletarier aller Länder vereinigt euch.

London.
Gedruckt in der Office der „Bildungs-Gesellschaft für Arbeiter"
von J. E. Burghard.
46, Liverpool Street, Bishopsgate.

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் முதல் பதிப்பினது தலைப்புப் பக்கம்



Herrn Eugen Dühring's
Umwälzung der Wissenschaft.

Philosophie. Politische Oekonomie. Sozialismus.

Von
Friedrich Engels.

Leipzig 1878.
Druck und Verlag der Genossenschafts-Buchdruckerei.

எங்கெல்சினது டூரிங்குக்கு மறுப்பின் தலைப்புப் பக்கம்

கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்,
கார்ல் மார்க்சின் மகள்மார்

பிரெடெரிக் எங்கெல்ஸ். 1891ஆம்
ஆண்டு



ஈஸ்ட்போர்னில் பி. எங்கெல்சினது
அஸ்திப் பெட்டி இறக்கப்பட்ட இடம்

வத்தை உயர்வாக மதிப்பிட்டார் எங்கெல்ஸ். ஆயினும், அதில் செயல் வேகத்துடன் ஈடுபட்டவாறு இந்த இயக்கத் திற்கே உரியதாய் இருந்த பெரும் பலவீனங்களைச் சுட்டிக் காட்டவும் அவரால் முடிந்தது. ''சட்ட பூர்வமாக'' புரட்சியைக் கொண்டுவர வேண்டும் என்னும் சார்ட்டிசக் கருத்தைச் சாடினார் எங்கெல்ஸ். இது இயக்கத்தின் உள்ளிருக்கும் ஒரு முரண்பாடு எனவும், நடை முறையில் சாத்தியமற்றது என்றும் அவர் நிரூபித்தார். ''அவர்களின் சோஷலிசம் இன்னும் கருநிலையிலேயே இருக்கிறது'' என்பது தான் சார்ட்டிஸ்டுகளின் முக்கியமான பலவீனம் என்றும், இவ்வியக்கத்தின் தனித்தனித் தலைவர்கள் முன்வைக்கிற ஏழ்மையை ஒழிப்பதற்கான சமூகப் பொருளாதார சீர்திருத் தங்கள், அதாவது நிலத்தைத் துண்டு துண்டாகப் பிரித்துத் தொழிலாளர்களுக்கு வழங்கி விட வேண்டும் என்று அவர்கள் சொல்வதானது, வளர்ந்து வரும் பெரும் இயந்திர தொழில்களைப் பார்க்கும் பொழுது அர்த்தமற்றதாக இருக் கிறது என்றும் எங்கெல்ஸ் கண்டார்.

உற்பத்திச் சாதனங்கள் தனியார் கைகளில் இருப்பதை ஒழிப்பது அவசியம் என்று சார்ட்டிசம் புரிந்து கொள்ளும் அளவுக்குச் செல்லவில்லை என்றால், தனது பதாகையில் சோஷலிச முழக்கங்களை இவ்வியக்கம் இன்னும் பொறித்துக் கொள்ளவில்லை என்றால், அதற்கு பிரிட்டிஷ் சோஷலிஸ்டுகள் தான் கணிசமான அளவுக்குக் காரணம். பிரிட்டிஷ் சோஷ லிசத்தின் தலைவரும் சித்தாந்தவாதியுமான ராபெர்ட் ஓவன், மாபெரும் பிரெஞ்சுக் கற்பனா சோஷலிஸ்டுகளான சென்- சீமனையும், ஃபுர்யேயையும் போலவே பெரிய தொழிலாளி இயக்கம் வேண்டாமென்று ஒதுங்கி நின்று, அரசியல் போராட்டம் என்பதையே ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

ராபெர்ட் ஓவன் ஆற்றிய ஐயத்திற்கு இடமில்லாத பணி என்னவென்றால், முதலாளித்துவ சமூகத்தின் தீங்குகளையும் தீப்புண்களையும் ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தி, உழைக்கும் மக்களின் துயரங்களைக் கண்டு, மிகப் பெரும் அனுதாபத் துடன் அவர்களை அணுகினார் என்பதேயாகும். ஆனால், சென்- சீமன், ஃபுர்யே ஆகியோரின் சோஷலிசத்தைப் போலவே ஓவனுடைய கற்பனைச் சோஷலிசமும் ''விடுதலைக்கான மெய் யான வழியைக் காட்ட முடியவில்லை. முதலாளித்துவத்தில்

நிலவும் கூலி அடிமை முறையின் சாராம்சத்தை அதனுல் விளக்க முடியவில்லை. முதலாளித்துவ முறையின் வளர்ச்சி பற்றிய விதிகளை அதனுல் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு புதிய சமுதாயத்தின் படைப்பாளியாக அமைய வல்ல சமுதாயச் சக்தியை அதனுல் சுட்டிக்காட்டவும் முடியவில்லை''* என்று லெனின் எழுதினுர்.

பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்ற புத்தகத்தில் இங்கிலாந்துப் பாட்டாளி வர்க்கத்தின் பிரதானமான, தீர்மானகரமான கடமை சார்ட்டிசத்துடன் சோஷலிசத்தை இணைப்பதுதான் என்ற முக்கியமான முடிவுக்கு வந்தார் எங்கெல்ஸ். அரசியல் போராட்டமும், தொழிலாளர்கள் நடத்தும் பெரிய புரட்சி இயக்கமும் அத்தொழிலாளர்களைச் சோஷலிசத்திற்கு இட்டு வரவேண்டும் என்று எடுத்துக்காட்டினுர் எங்கெல்ஸ். மறு புறத்தில், சோஷலிசமானது தன்னந் தனிக் கற்பனுவாதிகளின் கனவுகளிலிருந்து விடுபட்டு ஒரு எதார்த்த சக்தியாக மாற வேண்டும் என்ருல், தொழிலாளி வர்க்கத்தின் மக்கள் தழுவிய அரசியல் போராட்டத்தின் குறிக்கோளாக அந்தச் சோஷலிசம் விளங்க வேண்டும் என்று அவர் காட்டினுர்.

சோஷலிசத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் ஒன்றிணைப்பது, கற்பனு சோஷலிசமாக இருந்த ஒன்றை விஞ்ஞான சோஷலிசமாக மாற்றுவது, பலவீனமான தன்னந் தனி மனிதர்களின் கனவாக இருந்ததை அளவில் பெரிய, வல்லமை மிக்க வர்க்கத்தின் கோட்பாடாக மாற்றுவது என்ற உலகு தழுவிய வரலாற்றுப் பணி கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்சின் தோள்களில் வீழ்ந்தது.

---

* வி. இ. லெனின், மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும் (வி. இ. லெனின், நூல் திரட்டு, பாகம் 1, மாஸ்கோ, 1977, பக்கம் 33).

4

மார்க்சுடன் ஒன்றுபட்டது. விஞ்ஞானக் கம்யூனிசத்தின் அடித்தளத்தை அமைத்தது. பாட்டாளி வர்க்கக் கட்சியைப் படைப்பதற்கான போராட்டம் (1844-1848)

1844ஆம் ஆண்டு ஆகஸ்டு இறுதியில் மாஞ்செஸ்டர் நகரத்தை விட்டுப் போனுர் எங்கெல்ஸ். தாயகத்திற்குத் திரும்பும் வழியில் பாரிசில் இறங்கி, அப்பொழுது அங்கு வசித்து வந்த கார்ல் மார்க்சைச் சந்தித்தார். புரட்சிகரக் கோட்பாட்டையும் போர்த் தந்திரங்கள், நடைமுறை உத்திகள் ஆகியவற்றின் அடிப்படைகளையும், தொழிலாளி வர்க்கத்திற்கு ஆயுதமாக வழங்கிய இந்த மாபெரும் அறிவுக்கடல்கள் இரண்டும், மார்க்சும் எங்கெல்சும், போராட்டத்தில் வரலாறு காணுதபடி ஐக்கியப்படவும் வாழ்க்கை முழுவதற்கும் ஒன்றுபடவும் ஒரு தொடக்கமாய் விளங்கியவை இருவரும் பாரிசில் ஒன்ருக கழித்த அந்தப் பத்து நாட்கள்தாம். ''மனத்தையுருக்கும் நட்பைக் குறித்துப் பல உதாரணங்கள் காட்டும் பழங்கதைகள் உண்டு. ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் தனது விஞ்ஞானத்தைப் படைத்தவர்கள் இரண்டு அறிஞர்கள், இரண்டு போராட்ட வீரர்கள் என்றும், அவர்களிடையே நிலவிய உறவு முன்னேர்கள் மனித நட்பு பற்றி எழுதியுள்ள நெஞ்சையள்ளும் கதைகளையெல்லாம் மிஞ்சக் கூடியதாயிருந்தது என்றும் சொல்லிக் கொள்ளலாம்''* என்று எழுதினுர் லெனின்.

எங்கெல்சை விட மார்கஸ் இரண்டரை ஆண்டுகள் மூத்தவர். எங்கெல்ஸ் பிறந்து வளர்ந்த பிரஷ்யாவின் ரைன் மாநிலத்தில் தான் மார்க்சும் பிறந்தார். இங்குள்ள திரிர் எனும் நகரில் 1818ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் நாள் மார்க்ஸ் பிறந்தார். மார்க்சின் தந்தை ஹென்ரிக் மார்க்ஸ் ஒரு வக்கீல்; புரோடெஸ்டன்டு யூதர். திரிர் நகரில் உயர்

---

* வி. இ. லெனின், பிரெடெரிக் எங்கெல்ஸ் (வி. இ. லெனின், மார்க்ஸ்-எங்கெல்ஸ்-மார்க்சியம், மாஸ்கோ, 1976, பக்கம்73).

பள்ளியை முடித்த கார்ல் மார்க்ஸ் போன் பல்கலைக்கழகத்திலும், பின்னர் பெர்லின் பல்கலைக்கழகத்திலும் சட்டப்பிரிவுத் துறையில் சேர்ந்தார். பல்கலைக்கழகத்தில் வெறும் சட்டத்தை மட்டும் பயின்று வராமல் வரலாற்றையும், குறிப்பாக தத்துவஞானத்தையும் கற்றார் அவர். பெர்லினில் இளம் ஹெகல்வாதிகளின் (புரூனோ பௌவர் முதலானோர்) குழுவில் இருந்த பிரதிநிதிகளுடன் மார்க்ஸ் நெருங்கிப் பழகினார். மார்க்ஸ் பெர்லினிலிருந்து சென்ற பின் அவர்களுடன் எங்கெல்சும் நெருங்கிப் பழகினார்.

1841ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தை முடித்தவுடன் போன் நகரில் பேராசிரியராகப் பணி புரிய எண்ணமிட்டிருந்தார் மார்க்ஸ். புரூனோ பௌவரும், லூத்விக் ஃபாயர்பாகும் உரையாற்றுவதற்குத் தடை விதித்திருந்த பிரஷ்ய அரசாங்கத்தின் பிற்போக்குக் கொள்கை உயர் பள்ளியில் தமக்கு இடம் தராது என்று மார்க்சுக்கு உணர்த்தியது. இந்த நேரத்தில்தான், ரைன் மாநிலத்தின் எதிர்த்தரப்பு முதலாளிகள் கொலோன் நகரில் **ரைன் பத்திரிகை** என்ற செய்தித்தாளைத் தொடங்கினார்கள். அரசாங்கத்துக்கு எதிர்ப்புக் காட்டும் முதலாளிகளின் மனநிலை மிகவும் பலப்பட்டு வந்தது. பத்திரிகைகளில் தமது கருத்தை வெளியிடுவதற்கு போதுமான அளவு திறமையாளர்கள் அவர்களிடம் இல்லாததால், தத்துவஞானத்தின் அதிதீவிரப் போக்காளர்களான இளம் ஹெகல்வாதிகளுடன் இவர்கள் ஒன்றுபட்டார்கள் என்று எங்கெல்ஸ் பின்னர் குறிப்பிட்டார். ஆரம்பத்தில் **ரைன் பத்திரிகையில்** பணிபுரிந்த மார்க்ஸ் பின்னர் 1842 அக்டோபர் 15ஆம் நாள் முதல் அதன் ஆசிரியரானார். இந்தப் பத்திரிகைக்கு பெர்லினிலிருந்தும், பின்னர் மாஞ்செஸ்டரிலிருந்தும் எங்கெல்சும் கட்டுரைகள் எழுதி அனுப்பினார். மாஞ்செஸ்டருக்குப் போகும் வழியில், கொலோன் பத்திரிகாலயத்துக்கு 1842 நவம்பரில் விஜயம் செய்தார் எங்கெல்ஸ். மார்க்சுடன் அவருடைய முதல் சிறு சந்திப்பு இங்குதான் நடந்தது. மார்க்சினது தலைமையின் கீழ் இப்பத்திரிகை மேலும் மேலும் திட்ட வட்டமாக புரட்சிகர ஜனநாயகத் தன்மை பெற்று வந்தது. 1843 ஏப்ரல் முதல் நாளிலிருந்து **ரைன் பத்திரிகையை** மூடிவிடுவது என்று 1843 ஜனவரியில் பிரஷ்ய அரசாங்கம் முடிவு செய்தது.

புரட்சிகர, சோஷலிசப் பிரசாரம் செய்யும் பொருட்டு பத்திரிகை ஒன்று வெளியிடுவதற்காக ஜெர்மனியின் எல்லையைத் தாண்டி வெளியேறுவது என்று முடிவு செய்தார் மார்க்ஸ். ஜென்னி போன் வெஸ்ட்பாலனை ஏற்கெனவே மணம் செய்து கொண்டிருந்த மார்க்ஸ் 1843 அக்டோபர் இறுதியில் பாரிசுக்குப் குடி போனார். அங்கே, ஜெர்மன்—பிரெஞ்சு ஆண்டு மலர் (*Deutsch-Französische Jahrbücher*) என்னும் பத்திரிகையை அ. ரூகேயுடன் சேர்ந்து வெளியிடத் தொடங்கினார்.

1844 பிப்ரவரியில் வெளிவந்த இந்தப் பத்திரிகையில் மார்க்சின் முதல் சோஷலிசக் கட்டுரைகள் வெளிவந்தன. சட்டம் பற்றிய ஹெகல் தத்துவஞான விமர்சனம் குறித்து. முன்னுரை என்ற தலைப்பில் தாம் எழுதிய கட்டுரையில் மார்க்ஸ் பின்வருமாறு சொன்னார்: ''விமர்சன ஆயுதம் என்பது ஆயுதத்தினால் செய்யப்படும் விமர்சனத்தை மாற்றிவிட முடியாது என்பது நிச்சயம். பொருள்வகை சக்தி என்பது பொருள்வகை சக்தியினாலேயே வீழ்த்தப்பட வேண்டும். ஆனால் ஒரு போதனை கூட, பொதுமக்களைப் பற்றிக் கொண்டவுடன், ஒரு பொருள்வகை சக்தியாக மாறி விடுகிறது.''*

இத்தகைய புரட்சிகரமான பொருள்வகை சக்தியை, அப்பொழுதுதான் உருவாகி வந்த தொழிலாளி வர்க்கத்தில் கண்டார் மார்க்ஸ். ''தத்துவஞானமானது தனது பொருள் வகை ஆயுதத்தை எப்படிப் பாட்டாளி வர்க்கத்தில் கண்டு கொள்கிறதோ, அதே போலப் பாட்டாளி வர்க்கமும், தனது ஆன்மாவிற்கு வேண்டிய ஆயுதத்தைத் தத்துவஞானத்தில் கண்டு கொள்கிறது'' என்றார் மார்க்ஸ்.

இந்தப் பத்திரிகையில் வந்த கட்டுரைகளில் அரசியல் பொருளாதாரத்தை பற்றிய விமர்சனக் குறிப்புகள் என்ற எங்கெல்சின் கட்டுரையும் இருந்தது. ரைன் பத்திரிகையில் விவசாயிகளின் நிலைமை பற்றி மார்க்ஸ் எழுதிவந்த கட்டுரைகளைத் தொடர்ந்து அவர் மேற்கொண்டிருந்த அரசியல் பொருளாதாரக் கல்விக்கு எங்கெல்சின் இந்தக் கட்டுரை ஒரு உந்து சக்தியாக இருந்தது. எங்கெல்ஸ் மாஞ்செஸ்டரில்

---

* K. Marx, *Critique of the Hegelian Philosophy of Law. Introduction;* Marx-Engels, *Gesamtausgabe*, Erste Abteilung, Band 1, Erste Halbband, S. 62.

இருந்த காலத்திலேயே மார்க்சுக்கும் அவருக்கும் கடிதப் போக்குவரத்து துவங்கியது. துரதிருஷ்டவசமாக, இக்கடிதங்கள் நமக்குக் கிட்டவில்லை.

மார்க்சும் எங்கெல்சும் பாரிசில் ஒருவரை ஒருவர் சந்தித்த காலத்திலேயே அவர்கள் இருவரும் கம்யூனிஸ்டுகளாக மாறி இருந்தனர். கருத்துமுதல்வாதத்திலிருந்து பொருள்முதல்வாதத்திற்கு வழி அமைத்துக் கொண்டு வந்து சேர்ந்திருந்த அவர்கள், தமது தத்துவஞானக் கண்ணோட்டத்தைத் தீவிரமாக மறுபரிசீலனை செய்ய முடிந்தது.

மார்க்சும் எங்கெல்சும் பொருள்முதல்வாதிகளாவதில், ஜெர்மன் தத்துவஞானியான லூத்விக் ஃபாயர்பாக் பெரிய பங்கு வகித்தார். மனிதனைக் கடவுள் படைக்கவில்லை என்றும், கடவுளைத்தான் தன்னைப் போன்ற ஒரு உருவத்தில் மனிதன் படைத்தான் என்றும், இயற்கைக்கும் மனிதனுக்கும் வெளியில் ஏதும் இல்லை என்றும் **கிறித்தவச் சமயத்தின் சாரம்** என்னும் நூலில் ஃபாயர்பாக் நிருபித்தார். இயற்கையும் மனித சமுதாயமும் வளர்வதற்கு அடிப்படையாய் இருப்பது ''பரமக் கருத்து'' என்று சொல்லும் ஹெகல் வாதத்தை ஃபாயர்பாக் நிராகரித்தார். ஆன்மாவோ, கருத்தோ, சிந்தனையோ வாழ்நிலையைப் படைப்பதில்லை; இதற்கு நேர் மாறாக, வாழ்நிலைதான் சிந்தனையைப் படைக்கிறது என்று எடுத்துக்காட்டினார் ஃபாயர்பாக்.

ஃபாயர்பாகின் தத்துவஞானத்தை மிக உயர்வாக மார்க்சும் எங்கெல்சும் மதித்த போதே, அவருடைய கண்ணோட்டத்தை விமர்சனப் பார்வையால் அளந்து ஃபாயர்பாகினது பொருள்முதல்வாதத்தின் குறுகிய எல்லைக்குட்பட்ட தன்மையை அவர்களால் காண முடிந்தது. பொருள்முதல்வாதத்தைச் சமுதாய நிகழ்ச்சிகளின் மீது ஃபாயர்பாக் செலுத்திப் பார்க்கவில்லை. வரலாற்றுப் போக்கினைப் புரிந்து கொள்வதில் அவர் கருத்துமுதல்வாதியாகவே இருந்து விட்டார். மனித சமுதாயத்தையும் அதன் வரலாற்றையும் ஆய்வு செய்வதற்குக் கூட பொருள்முதல்வாதத்தை உபயோகிக்கத் தொடங்கினர்கள் மார்க்சும் எங்கெல்சும். ஹெகலின் கருத்துமுதல்வாத இயக்கவியலை வெறுமே ஒதுக்கித் தள்ளி விட்டார் ஃபாயர்பாக். இதற்கு மாறாக, அதனை விமர்சன பூர்வமாக மாற்றி அமைக்க முனைந்தார்கள் மார்க்சும்

எங்கெல்சும். ஒரு புதிய பொருள்முதல்வாத இயக்கவியலின் அடித்தளத்தை அமைத்து, பொருள்முதல்வாதத்தையும் இயக்கவியலேயும் ஒன்ருக இணைத்து முழுமையான ஒரு உலகக் கண்ணேட்டத்தை உருவாக்குவதுதான் அவர்கள் முன் இருந்த பணியாகும்.

எங்கெல்ஸ் பாரிசில் இருந்த பத்து நாட்களில், அவரும் மார்க்சும் வேறு வேறு வழிகளில் ஒரே மாதிரியான முடிவுகளுக்கு வந்திருந்தார்கள் என்று புலப்பட்டது. இது குறித்து எங்கெல்ஸ் பின்வருமாறு சொல்லுகிருர்:

''இது வரையிலுமுள்ள வரலாற்று நூல்களில், பாத்திரம் ஏதும் வகிக்காமலோ, அல்லது மிகச் சிறு பாத்திரம் மட்டுமோ வகிக்கின்ற பொருளாதார உண்மைகள், குறைந்த பட்சம், நவீன உலகில் தீர்மானமான வரலாற்று சக்தியாக விளங்குகின்றன என்றும், நவீன காலத்தில் தோன்றி வருகின்ற வர்க்க எதிர் நிலேகளுக்கு இவைதான் அடித்தளமாக அமைந்திருக்கின்றன என்றும், பெரும் இயந்திரத் தொழில் முன்னேற்றம் அடைந்திருக்கிற நாடுகள் யாவற்றிலும் இம் முன்னேற்றத்தின் காரணமாக இந்த வர்க்க எதிர் நிலேகள் முழு வளர்ச்சி அடைந்திருக்கின்றன என்றும், எனவே, தமது பங்கிற்கு இவ்வர்க்க எதிர் நிலேகள், எல்லா நாடுகளிலும், குறிப்பாக இங்கிலாந்தில் அரசியல் கட்சிகளின் அடிப்படை உருவாவதற்கும், கட்சிப் போராட்டத்திற்கும், இதன் காரணமாக, அரசியல் வரலாறு முழுமைக்கும் அடித்தளமாக இருக்கின்றன என்றும் மாஞ்செஸ்டரில் நான் வாழ்ந்த காலத்தில் எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கியது. மார்க்சும் இதே முடிவுகளுக்கு வந்தது மட்டுமல்லாமல், ஜெர்மன்-பிரெஞ்சு ஆண்டுமலரில் (*Deutsch-Französische Jahrbücher*) ஏற்கெனவே இவற்றைப் பொதுமைப்படுத்தி குடிமக்கள் சமுதாயமானது அரசாங்கத்திஞல் அமைக்கப் படுவதோ, நிர்ணயம் செய்யப் படுவதோ அல்ல என்றும் மாருக, குடிமக்கள் சமுதாயம்தான் அரசாங்கத்தை அமைக்கவும் நிர்ணயிக்கவும் செய்கிறது என்றும், எனவே, அரசியலேயும் அதன் வரலாற்றையும் பொருளாதார உறவுகளின் மூலமும் இவற்றினது வளர்ச்சியின் மூலமும்தான் விளக்க வேண்டுமே தவிர, தலேகீழாக அல்ல என்றும் எழுதினர். 1844 கோடையில் நான் பாரிசில் மார்க்சைச் சந்தித்த பொழுது,

எல்லாச் சித்தாந்தத் துறைகளிலும் எங்களுக்கிடையே முழுமையான ஒற்றுமை இருப்பது தெளிவாகப் புலப்பட்டது, அன்றிலிருந்து எங்களின் கூட்டுப்பணி தொடங்கியது''* என்று எழுதினுர் எங்கெல்ஸ்.

பாரிசில், மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இடையில் ஏற்பட்ட குறுகிய காலச் சந்திப்பின் போது அவர்களிடையே தொடங்கிய கூட்டுப் பணியின் மூலம் புரட்சிகரப் பொருள் முதல்வாத உலகக் கண்ணேட்டத்திற்கு அடித்தளங்கள் அமைக்கப்பட்டன. இதில் சில பாகங்கள் எழுதுவதற்கு மட்டும்தான் எங்கெல்சுக்கு அவகாசம் கிடைத்தது. இந்தப் பெரிய பணியினைப் பிரதானமாக மார்க்ஸ்தான் முடித்துக் கொடுத்தார். **புனிதக் குடும்பம் அல்லது விமர்சன ரீதியான விமர்சனம் பற்றிய விமர்சனம். புருேனே பௌவருக்கும் அவரது கம்பெனிக்கும் எதிராக** என்று கேலியான ஒரு பெயர் சூட்டப்பட்டு இந்நூல் வெளிவந்து. இந்தப் புத்தகம் இளம் ஹெகல்வாதிகளுக்கும், ''வதங்கிப் போன, விதவைத்தனமான ஹெகலின் தத்துவஞானம்'' அனைத்துக்கும் எதிராகத் தாக்குதல் தொடுத்தது.

இந்த நூலில் ஃபாயர்பாகின் செல்வாக்கு முற்றிலுமாக மீறிக் கடக்கப் படவில்லையாயினும், **புனிதக் குடும்பத்தில்** தமது புதிய புரட்சிகரமான பொருள்முதல்வாத உலகக் கண்ணேட்டத்திற்கான அடித்தளங்களை மார்க்சும் எங்கெல்சும் அமைத்தார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில தனி நபர்களே வரலாற்றைப் படைக்கிறுர்கள் என்ற கருத்துமுதல்வாதக் கண்ணேட்டத்தைக் கொண்ட புருேனே பௌவர், அவரை ஒத்த சிந்தனையாளர்கள் ஆகியோரின் கருத்தை விமர்சனம் செய்து, தனிப்பட்ட ''வீரர்கள்'' அல்ல, பொதுமக்கள்தான் வரலாற்றை உண்மையில் சமைக்கின்றனர் என்ற வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றை, **புனிதக் குடும்பம்** என்ற நூலில் மார்க்சும் எங்கெல்சும் முன் வைக்கிறுர்கள். வரலாற்றின் நிகழ்ச்சிப் போக்கில் மேலும் மேலும் விரிவான பொதுமக்கள் உணர்வு பூர்வமான செயல்

---

* Engels, *On the History of Communist League;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II, Moscow 1955, p. 343.

வீரர்களாக மாறி, வரலாற்றின் வளர்ச்சியை நிர்ணயிப்பார்கள் என்று அவர்கள் நிரூபித்தார்கள். இந்தச் சிந்தனையின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டிய லெனின், வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் ''மிகமிக ஆழமான மிக மிக முக்கியம் வாய்ந்த'' கோட்பாடுகளில் ஒன்று இது என்று கூறினார். அனேகமாக முழுமையாய் ஏற்கெனவே உருவாகி இருந்த, பாட்டாளி வர்க்கத்தின் உலகு தழுவிய வரலாற்று விடுதலைப் பணி பற்றிய கண்ணோட்டம் **புனிதக் குடும்பம்** என்ற நூலில் நிறைவு பெற்றது. தொழிலாளி வர்க்கம் கையறு நிலையில் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் ஒரு கூட்டம் என்று மட்டுமே எண்ணிய கற்பனாவாதச் சோஷலிஸ்டுகளுக்கு எதிராக, பாட்டாளி வர்க்கம் மிகக் கொடுமையாக ஒடுக்கப்பட்டுள்ள வர்க்கம் என்றும், முதலாளித்துவ உற்பத்திப் போக்கின் மூலமாகவே அமைப்பு ரீதியாக ஒன்று சேர்கின்ற ஒரு வர்க்கம் இது என்றும், உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றி அமைப்பதற்கான பணி இந்த வர்க்கத்தினிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்றும் மார்க்சும் எங்கெல்சும் எடுத்துக் காட்டினார்கள்.

பாட்டாளி வர்க்கத்தின் உலகு தழுவிய வரலாற்றுப் பாத்திரம் என்ற கருத்துதான் விஞ்ஞானக் கம்யூனிசம் என்ற எழில்மிகு மாளிகையின் கருங்கல் அடித்தளம் ஆகும். ''சோஷலிசச் சமுதாயத்தின் சிற்பியாய்ப் பாட்டாளி வர்க்கம் வகிக்கும் வரலாற்றுப் பாத்திரத்தை மார்க்சின் தத்துவம் தெளிவுபடுத்துகிறது''* என்று லெனின் எழுதினார். இந்த மகத்தான மேதைமை மிக்க கண்டுபிடிப்புடன் வெறும் கற்பனையாக இருந்த சோஷலிசம் ஒரு விஞ்ஞானமாக மாறத் தொடங்கியது. முதல் முதலாக, வளர்ந்து வரும் இளமை மிக்க புரட்சிகர வர்க்கத்தின் தலைவிதியுடன் இணைந்து கொண்டு, உண்மையான அடிமண்ணின் மீது உறுதியாக ஏறி நிற்கத் தொடங்கியது சோஷலிசம்.

உப்பெர்தலில் எங்கெல்ஸ் இல்லாதிருந்த காலத்தில்,

---

* வி. இ. லெனின், **வரலாற்றில் கார்ல் மார்க்ஸ் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட வருங்காலம்** (வி. இ. லெனின், **நூல் திரட்டு**, பாகம் 1, மாஸ்கோ 1977, பக்கம் 20).

அந்நகரம் பெருமளவில் மாறிவிட்டது என்றும், இயந்திரத் தொழில் பிரமாண்டமான முன்னேற்றம் கண்டிருக்கிறது என்றும், புதிய புதிய மக்கள் தொகுதியினரை எதிர்ப்புணர்ச்சி ஆட்கொண்டு வருகின்றது என்றும், பார்மெனுக்குத் திரும்பிய பின் மார்க்சுக்குத் தெரிவித்தார் எங்கெல்ஸ்.

உப்பெர்தலில் ஏற்பட்டிருந்ததாக எங்கெல்ஸ் கூறும் மாற்றங்கள் நாட்டின் மற்ற பகுதிகளிலுங்கூட ஏற்பட்டிருந்தன. பிரிட்டனையடுத்து ஜெர்மனியில் வர்க்க முரண்பாடுகள் தீவிரமடைந்து வந்தன. 1844 ஜூன் மாதம் சிலேஸ் நெசவுத் தொழிலாளர்களின் எழுச்சி நடந்தது. பாட்டாளி வர்க்கம் பெற்ற இந்த விழிப்பு, முதலாளி வர்க்கத்துடன் அது நடத்திய இந்த முதல் வர்க்கச் சமர்கள், ஜெர்மனியில் ஒரு பிரமாண்டமான கருத்துப் பதிவினை ஏற்படுத்தி கம்யூனிசப் பிரசாரத்தை உந்தி விட்டன.

பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்ற புத்தகத்தை எழுதி முடிக்கின்ற வேளையிலேயே, பார்மெனுக்கு வந்தபின் புரட்சிகர நடைமுறைச் செயல்களை மேற்கொண்டார் எங்கெல்ஸ். ஆங்காங்கு உள்ள சோஷலிஸ்டுகளுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்காக பல்வேறு நகரங்களுக்கு விஜயம் செய்தார். முதலாளித்துவச் சூழ்நிலைமைகளில், சிறுபான்மையினரின் தொகை பெருகி வருகின்ற, பெரும்பான்மையினர் தேய்ந்து சிறுத்து வருகின்ற நிகழ்ச்சிப் போக்கு நடந்து வருகிறது என்றும், இதன் காரணமாகத் தவிர்க்க முடியாதபடி சமூகப் புரட்சி தோன்றும் என்றும், இந்தப் புரட்சியின் விளைவாகத் தோன்றுகின்ற சமுதாயத்தில் பொது நலன்களே பிரதான கோட்பாடாகக் கடைப்பிடிக்கப்படும் என்றும் கூட்டங்களில் பேசும் பொழுது எங்கெல்ஸ் எடுத்துக் காட்டி வந்தார். நாடுபிடிக்கும், கொள்ளையடிக்கும் போர் எதையும் இத்தகைய சமுதாயம் விரும்பாது என்று தொலைநோக்குடன் கூறினர் எங்கெல்ஸ். இந்தச் சமுதாயம் தற்காப்புப் போர் ஒன்றில் ஈடுபட நேர்ந்தால், சமுதாயத்தின் உறுப்பினன் ''தனது உண்மையான தாயகத்தை, தனது உண்மையான பிறந்த வீட்டைக் காத்து நிற்க வேண்டும்.'' அப்போது ''அவன் உணர்ச்சி ஆவேசத்துடன், அசைக்க முடியாத உறுதியுடன், வீரத்துடன் தொடுக்கின்ற தாக்குதலின் முன்னல், இயந்திர ரீதியில் பயிற்சி பெற்ற நவீன இராணுவம்

வைக்கோல் பிசிறுகள் போல் சிதறிப் பறக்க வேண்டும்.''*

கம்யூனிசப் பிரசாரம் ஈட்டிவருகின்ற வெற்றிகள் பற்றியும், பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுவதற்குக் கிடைக்கின்ற வாய்ப்பு பற்றியும் மகிழ்ச்சி மிகக் கொண்டு, இக்கூட்டங்களைப் பற்றி எங்கெல்ஸ் மார்க்சுக்குத் தெரிவித்தார். ஆனுல், அவருடைய கம்யூனிசப் பேச்சுக்களாலும், ''கேடு கெட்ட வர்த்தகத் துறையை'' அவர் விட்டொழித்ததாலும், எங்கெல்ஸ் வீட்டார் அவர் மீது கொண்ட கடுமையான கோபம் இந்த மகிழ்ச்சியை எல்லாம் மூடி மறைத்து விட்டது.

தந்தையின் வீட்டில் நிலவிய கட்டுப்பாடுகளைத் தாங்க மாட்டாமல் 1845 வசந்த காலத்தில் பார்மெனே விட்டு எங்கெல்ஸ் வெளியேறி புரூசெல்சுக்குப் போய்ச் சேர்ந்தார். இந்த நேரத்தில், பிரஷ்ய அரசாங்கத்தின் கோரிக்கையால் பாரிசிலிருந்து வெளியேற்றப்பட்ட மார்க்சும் இங்கே வந்து சேர்ந்தார்.

புரூசெல்சில் தாம் மார்க்சைச் சந்தித்தது பற்றிப் பின்னர் எங்கெல்ஸ் எழுதுகையில்: ''1845 வசந்த காலத்தில் மீண்டும் நாங்கள் புரூசெல்சில் சந்தித்த போது.... தமது வரலாற்றின் பொருள்முதல்வாத சித்தாந்தத்தை அதன் முக்கிய அம்சங்களில் முடித்து வைத்திருந்தார் மார்க்ஸ். இந்தப் புதிய கண்ணேட்டங்களின் மிகப்பல பிரிவுகளையும் விவரமாகத் தயாரிக்கும் பணியை நாங்கள் இருவரும் மேற்கொண்டோம்''** என்று நினைவு கூர்ந்தார்.

இந்தப் பணியைத் தொடங்குவதற்கு முன், புரூசெல்சில் கிட்டாமல் இருந்த பொருளாதார இலக்கியங்களைப் படித்தறியும் பொருட்டு, பிரிட்டனில் ஆறு வாரச் சுற்றுப் பயணம் ஒன்றை மார்க்சும் எங்கெல்சும் மேற்கொண்டனர். இப்பயண நாட்களில் பெரும்பகுதியை மாஞ்செஸ்டர் நகரின் பழைமை வாய்ந்த சாதாம் நூலகத்தில் அவர்கள் கழித்தனர். பின்னர் லண்டனுக்குப் பயணமானுர்கள். அங்கு இடதுசாரி சார்ட்டிஸ்டுகளான கார்னியையும் அவரது நண்பர்களையும், ''நேர்மையாளர்களின் சங்கம்'' என்னும் ஜெர்மன் கம்யூ

* Engels, *Speeches in Elberfeld;* Marx-Engels, *Gesamtausgabe*, Erste Abteilung, Band 4, S. 376.

** Engels, *On the History of Communist League;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 343.

னிஸ்டு தொழிலாளர்களது ரகசிய அமைப்பின் தலைவர்களை யும் சந்தித்தார்கள். இவர்களில் அச்சுக் கோப்போரான கார்ல் ஷாப்பெர், செருப்புத் தைப்போரான ஹென்ரிஷ் பௌவர், கடிகாரக்காரரான யோசிப் மோல் ஆகியோர் *1843*லிருந்தே எங்கெல்சுக்கு அறிமுகமானவர்களாவர். இப் போது, ''நேர்மையாளர்களின் சங்கத்தை'' சேர்ந்தவர்களுக் கும் இடதுசாரிச் சார்ட்டிஸ்டுகளுக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்துவதற்கு எங்கெல்ஸ் உதவி புரிந்தார். இந்த இரண்டு அமைப்புக்களின் உறுப்பினர்களும், மார்க்சும் எங்கெல்சும் தீவிரப் பங்கு கொண்டு வந்த, லண்டனிலிருந்த பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த ஜனநாயகவாதிகளும் பங்கு கொண்டு நடந்த கூட்டம் ஒன்றில், சர்வதேச ஜன நாயகவாதிகளின் சங்கம் ஒன்று உருவாக்குவது என்று முடிவு செய்யப்பட்டது. மார்க்சும் எங்கெல்சும் லண்டனை விட்டுப் போனபின்பு இந்தச் சங்கத்தாரின் முதல் அமைப்புக் கூட்டம் நடந்தது. ''சகோதர ஜனநாயகவாதிகள்'' சங்கம் என்று இது அழைக்கப்பட்டது. **லண்டனில் பல தேச விழா** என்ற தலைப்பில் எங்கெல்ஸ் இக்கூட்டம் பற்றி எழுதுகையில்தான் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்ற கருத்தை முதன் முதல் கையாண்டார்.

ஜெர்மன் சித்தாந்தம் என்னும் ஒரு பெரிய நூலில் மார்க்சும் எங்கெல்சும் தமது புதிய கண்ணோட்டங்களை முன் வைத்தார்கள். இந்த நூல் உலகத்தின் முன் வர வேண்டும் என்று அப்போது விதிக்கப்பட்டிருக்கவில்லை. இந்நூலை வெளி யிடுவதற்கு இணங்கக் கூடிய பதிப்பாளர் யாரையும் காண முடியவில்லை.* இது பற்றி மார்க்ஸ் எழுதுகையில் ''விஷ யத்தில் சுயவிளக்கம் பெறுவதுதான் எங்கள் குறிக்கோளாய் இருந்தது என்பதாலும், அது நிறைவேறி விட்டது என்பதா லும், கையெழுத்துப் பிரதியை எலிகடித்து விமர்சிக்கட்டும் என்று நாங்கள் விரும்பியே விட்டு விட்டோம்'' என்றார்.**

---

* **ஜெர்மன் சித்தாந்தம்**, *1932*ஆம் ஆண்டில் சோவியத் யூனியனில் முதல் முதலாக ஜெர்மன் மொழியில் முழுமை யாக வெளியிடப்பட்டது. *1933*ஆம் ஆண்டு ருஷ்யனில் வெளியாயிற்று.

** Marx, *Critique of the Political Economy;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. 1, Moscow 1955, p. 364.

இந்த நூலில் பௌவர், ஷ்டிர்னர் என்ற இளம் ஹெகல் வாதிகளின் கருத்துக்களை விமர்சனம் செய்த மார்க்சும் எங்கெல்சும், ஹெகலின் தத்துவஞானத்தையும், கருத்துமுதல் வாதத்தையும் விமர்சனம் செய்தனர். கருத்துமுதல்வாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஃபாயர்பாக் ஆற்றிய பணிகளுக்கு உரிய மதிப்பினைக் கொடுத்து விட்டு, இயக்க மறுப்பியலின் பாற்பட்டதாய், குறுகிய எல்லைக்குட்பட்டுக் கிடப்பதாய், செயலற்று எதிர்நோக்கும் தன்மையதான அவருடைய பொருள்முதல்வாதத்தின் குறைபாடுகளை மார்க்சும் எங்கெல்சும் புட்டுப் புட்டு வைத்தனர். வர்க்கப் போராட்டத்தை எதிர்த்து வந்தவர்களைத் தமது பிரதிநிதிகளாகக் கொண்ட குட்டி முதலாளிகளின் ''உண்மையான சோஷலிசம்'' என்று அழைக்கப்பட்டு வந்த ஒன்றை அம்பலப்படுத்துகிறது **ஜெர்மன் சித்தாந்தத்தின்** பெரும் பகுதி. காதல், சகோதரத்துவம், நியாயம் போன்றவை பற்றி உணர்ச்சி மிகுந்து, போலிப் பண்பாளனின் மனப்பான்மையுடன் ''உண்மையான சோஷலிஸ்டுகள்'' உபதேசித்து வந்தனர். ஜனநாயகத்துக்காக நடந்த போராட்டத்தில் பங்கு கொள்வதற்கு எதிராகவும் இவர்கள் தாக்குதல் தொடுத்தது முடியரசுக்கும் நிலப்பிரபுத்துவ உறவுகளுக்கும் எதிராக வலுவுற்று வந்த போராட்டக் களமான ஜெர்மனியில், புரட்சிக்கு முந்திய காலத்திய சூழ்நிலைகளில் குறிப்பாக ஆபத்தானதாக இருந்தது.

மகத்தான கண்டுபிடிப்பாய்த் திகழ்ந்து தத்துவஞானத்திலும் உலக வரலாற்றைப் புரிந்து கொள்வதிலும் உண்மையான புரட்சியாய் விளங்கும் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மார்க்ஸ் வகுத்தளித்ததுதான் **ஜெர்மன் சித்தாந்தத்தின்** தத்துவார்த்த முக்கியத்துவமுள்ள பணியாகும். வரலாற்றை ஒரு உண்மை விஞ்ஞானமாக மாற்றி அமைத்தது இந்தக் கண்டுபிடிப்பு.

வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் அடிப்படையாய் விளங்குவது சமுதாயத்தின் பொருள்வகை வாழ்க்கைச் சூழ்நிலைமைகளும் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்கின்ற முறையுமே என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். எனவே, வரலாற்று மாற்றங்களுக்கான, சமுதாயப் புரட்சிகளுக்கான அடிப்படைக் காரணங்களை

மானசீகமான கருத்துக்களிலோ, சித்தாந்தங்களிலோ, அரசியல் கண்ணோட்டங்களிலோ தேடக் கூடாது என்றும், இந்தக் கருத்துக்களையும் சித்தாந்தங்களையும், அரசியல் கண்ணோட்டங்களையும் பிரதிபலிக்கின்ற சமுதாயத்தின் பொருள்வகை வாழ்க்கைச் சூழ்நிலைகளிலும், சமுதாய வாழ்நிலையிலுமே இவற்றைத் தேட வேண்டும் என்றும் மார்க்ஸ் எடுத்துக் காட்டினார்.

ஜெர்மன் சித்தாந்தத்தில்தான், எதார்த்த நியமமாய், வரலாற்றினால் நிர்ணயிக்கப்படுகின்ற சமுதாய-பொருளாதார அமைப்புகளின் மாற்றம் பற்றிய கருத்து முதன்முதலில் முன்வைக்கப் பட்டது. உற்பத்தி சக்திகள் வளர்ச்சியுறும் போது, அப்பொழுது நிலவுகின்ற உற்பத்தி உறவுகளுடன் (ஜெர்மன் சித்தாந்தத்தில் இவை ''தொடர்பின் வடிவங்கள்'' என்று அழைக்கப் படுகின்றன) இச்சக்திகள் முரண்பாடு கொள்கின்றன. இந்த முரண்பாடுகள் வர்க்கப் போராட்டத்தில் பிரதிபலிக்கின்றன. பகைமைச் சமுதாயங்கள் உள்ள சூழ்நிலைகளில் வளர்ச்சியின் உந்து விசையாக இருப்பது இந்த வர்க்கப் போராட்டம்தான். புரட்சிக்கும், இருக்கிற சமுதாயப்-பொருளாதார அமைப்பை மாற்றி இன்னொரு சமுதாயப்பொருளாதார அமைப்பாக மாற்றுவதற்கும் இட்டுச் செல்கிறது இந்த வர்க்கப் போராட்டம் (உதாரணமாக, நிலப்பிரபுத்துவம் முதலாளித்துவத்தால் மாற்றப்படுகிறது). புரட்சியின் நிகழ்ச்சிப் போக்கில் சமுதாய உறவுகளை மக்கள் மாற்றி அமைப்பதோடு தங்களைத் தாங்களேயும் கூட இவர்கள் மாற்றிக் கொள்கிறார்கள்.

மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தின் தொடக்கக் கோட்பாடுகள் பலவற்றை ஜெர்மன் சித்தாந்தம் வகுத்தளித்துள்ளது. முதலாளித்துவ வளர்ச்சியை நிர்ணயிக்கும் நியமங்களை ஆய்வு செய்த மார்க்சும் எங்கெல்சும் முதலாளித்துவம் மாண்டு ஒழிவது தவிர்க்க முடியாதது என்று மெய்ப்பித்து, சோஷலிசப் புரட்சி ஒரு வரலாற்று அவசியம் என்று சித்தாந்த ரீதியில் நிரூபித்துக் காட்டுகிறார்கள். முதலாளித்துவ சமூகத்தை அழித்தொழிப்பதற்கு, ஆதிக்கம் செலுத்தத் துடிக்கும் ஒவ்வொரு வர்க்கத்தையும் போலவே, பாட்டாளி வர்க்கமும், முதற்கண் அரசியல் ஆட்சி அதிகாரத்தை வென்று பெற வேண்டும் என்று அவர்கள் எழுது

கிருர்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிய போதனையின் மூலக்கரு இந்தக் கோட்பாட்டில்தான் அடங்கி இருக்கிறது. ஜெர்மன் சித்தாந்தத்தில் எதிர்காலக் கம்யூனிச சமுதாயத்தின் எல்லைக் கோடுகள் சிலவும் எட்டப் பட்டிருக்கின்றன.

கற்பனுவாதச் சோஷலிஸ்டுகள் கருதியதற்கு மாருக, கம்யூனிசம் என்பது மார்க்சும் எங்கெல்சும் கண்ட எழில் மிகு எதிர்காலத்தைப் பற்றிய கற்பனைக் கனவு அல்ல. புரட்சிகரச் சாதனங்களின் உதவியால் நடைமுறைக்கு வரப்போகும், எதார்த்த அவசியமான, வரலாறே நிர்ணயித்த, ஒரு குறிக்கோள் அது. செயலற்ற தன்மையதான ஃபாயர்பாகின் பொருள்முதல்வாதத்தைக் கண்டனம் செய்து, புரட்சிகரமான சித்தாந்தத்திற்கும் புரட்சிகரமான நடைமுறைக்கும் இடையில் நிலவ வேண்டிய பிரிக்கவொண்ணு ஒற்றுமையையும், பயனுள்ள, முற்போக்குச் சித்தாந்தத்தின் மாற்றம் கொண்டேகும் பாத்திரத்தையும் மிக வன்மையாகக் கோடிட்டுக்காட்டுகிருர்கள் மார்க்சும் எங்கெல்சும். 1845இல் மார்க்ஸ் எழுதிய ஃபாயர்பாக் பற்றிய ஆய்வுரைகளில், எல்லை காண் தெளிவுடன், சின்னதோர் சுருக்கமாய் இந்தச் சிந்தனை வெளியிடப்பட்டுள்ளது: ''தத்துவஞானிகள் உலகத்தை வெறுமே வியாக்கியானம் செய்து கொண்டிருந்தனர். ஆனுல் விஷயம் என்னவோ அதை மாற்றியமைக்க வேண்டும் என்பது தான்.''*

இயக்கவியல் பொருள்முதல்வாதம், வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்னும் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் சித்தாந்த தத்துவார்த்தத் தூண்களை எழுப்புவதில் ஜெர்மன் சித்தாந்தம் மகத்தான முக்கியத்துவமுள்ள ஒரு கட்டம் ஆகும்.

* * *

ஃபாயர்பாகின் தத்துவஞானத்திற்கு மாருக, நடைமுறை வலுவுள்ள, புரட்சிகரத்தன்மை வாய்ந்த தமது போதனையை முன் நிறுத்துகையில், விஞ்ஞான பூர்வமாய் தமது கண்ணேட்டங்களை உருவாக்கி ''விஞ்ஞானி'' உலகத்துக்கு அதைப் படைப்பதுடன் மார்க்சாலும் எங்கெல்சாலும் நின்றுவிட

* K. Marx, *Theses on Feuerbach;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. 2, Moscow 1955, p. 404.

முடியவில்லை. தமது புரட்சிகரப் போதனையை உருவாக்கு கின்ற அதே நேரத்தில், சோஷலிசத்தைத் தொழிலாளர் இயக்கத்துடன் ஒன்றுக இணைப்பதற்கும், தொழிலாளர் களின் கட்சி ஒன்றைக் கட்டுவதற்கும் அவர்கள் பரவலாகப் போராடவும் செய்கிருர்கள். பல்வேறு ஐரோப்பிய நாடுக ளில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிகள் விரிந்து பரவி வந்ததானது இப்போராட்டத்தை மேலும் குறிப்பாக முக் கியத்துவம் வாய்ந்ததாக்கியது.

இந்த நேரத்தில் சோஷலிச இயக்கத்தில் பல்வேறு கற் பனுவாதச் சோஷலிசப் போக்குகள் ஆதிக்கம் செலுத்தின. உதாரணமாக, பிரெஞ்சுக் கற்பனுவாதக் கம்யூனிசத்தின் ஒரு கிளையாகத் தோன்றிய சோஷலிச இயக்கம்தான் ஜெர்மன் உழைப்பாளர்களிடமும் கைவினைஞர்களிடமும் இருந்தது. வெளிநாட்டில் வாழ்ந்து வந்த ஜெர்மானியர்கள் 1834ல் பாரிசில் தொடங்கிய ''நிராகரிக்கப்பட்டவர்கள் சங்கத் திலிருந்து, 1836ல் இடதுசாரியினர் பிரிந்து போய், ''நேர்மை யாளர்களின் சங்கம்'' என்ற, பிரதானமாகக் கைத்தொழி லாளர்களைக் கொண்ட ஒரு அமைப்பை ஏற்படுத்தினுர்கள். இந்தச் சங்கம் பிரெஞ்சுப் புரட்சியாளரான பிளாங்கியைத் தலைவராகக் கொண்ட ''வருட காலங்கள்'' என்ற அமைப் புடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. பிளாங்கிஸ்டு கள் நடத்திய 1839ஆம் வருடக் கிளர்ச்சி தோல்வியடைந் ததைத் தொடர்ந்து, ''நேர்மையாளர்களின் சங்க'' உறுப் பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டு பிரான்சிலிருந்து வெளி யேற்றப்பட்டனர். இவர்களில் மூவரான கார்ல் ஷாப்பெர், ஹென்ரிஹ் பௌவர், யோசிப் மோல் ஆகியோருடன் லண் டனில் 1843ல் எங்கெல்ஸ் அறிமுகம் செய்து கொண்டார். 1845ல் மார்க்சுடன் இங்கிலாந்துக்கு மேற்கொண்ட ஆறு வாரப் பயணத்தின் போது, இவர்களுடன் மீண்டும் தமது தொடர்புகளைப் புதுப்பித்துக் கொண்டார். இந்த ''நேர்மை யாளர்களின் சங்கத்து'' உறுப்பினர்களின் கைகளில், 1840ல் லண்டனில் துவக்கப்பட்ட ஜெர்மன் தொழிலாளர்களது அறி வொளிச் சங்கத்தின் தலைமை போய்ச் சேர்ந்தது. இது தவிர ''நேர்மையாளர்களின் சங்கத்தினது'' சில பிரிவுகள் வேறு லண்டனில் தொடங்கப் பட்டிருந்தன. இது போன்ற அமைப்புகள் பாரிஸ் நகரிலும், ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி

ஆகிய நாடுகளிலும் இருந்தன. லண்டன் இவ்வியக்கத்தின் மையமாக மாறிய நாட்களிலிருந்து இந்தச் சங்கம் ஒரு சர்வ தேசத் தன்மை பெற்றது. ஜெர்மானியர்களுடன் கூடவே ஸ்காண்டிநேவியர்கள், டச்சுக்காரர்கள், ஹங்கேரியர்கள், செக்காரர்கள் போன்ருேரும் இதில் இருந்தனர்.

ஜெர்மானியத் தையல்காரரான வில்கெல்ம் வெயித்லிங்கின் கம்யூனிசக் கருத்துக்கள் இச்சங்கத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தின. சென்-சீமன், ஃபுர்யே, ஓவன் ஆகியோரின் சமாதானக் கற்பனுவாதச் சோஷலிசத்திற்கு மாருக, போராட்டத்தில் பலாத்கார வழியையும், அதாவது சமுதாயப் புரட்சியையும் வெயித்லிங் ஏற்றுக் கொண்டார். எனினும், வெயித்லிங்கின் கம்யூனிசமும் கற்பனுவாத வகைப்பட்டதாகவே இருந்தது. ஏனெனில், எதிர்காலத்திய சமூகம் பற்றியோ, அதற்கு மாறிப் போக வேண்டிய வழிமுறைகளைப் பற்றியோ, இந்த மாற்றத்தைக் கொண்டு வரும் வல்லமை வாய்ந்த சமுதாயச் சக்தியைப் பற்றியோ அவருக்குச் சரியான கருத்து எதுவும் இருக்கவில்லை. வெயித்லிங்கின் கம்யூனிசம் கற்பனுவாத வகைப்பட்டதாயினும், கிறித்தவ சமய உருவத்தில் அது இருந்தது என்ருலும், ''ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் முதல் சுயேச்சையான தத்துவ இயக்கம் என்ற வகையில்'' (எங்கெல்ஸ்) ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாற்றில் ஒரு பெரும் பங்காற்றியது வெயித்லிங்கின் கம்யூனிசம்.

பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றை உருவமைப்பது என்பதைத் தமது கடமையாக மேற்கொண்ட மார்க்சும் எங்கெல்சும், ஜெர்மன் தொழிலாளர்களிடையே கம்யூனிச இயக்கம் ஒன்று இருந்து வருவதை, அது என்னதான் முதிர்ச்சியற்று, பலவீனங்கள், தவறுகள் மிகுந்ததாக இருந்த போதிலும், அசட்டை செய்யவில்லை. எனவேதான் ''நேர்மையாளர்களின் சங்கப்'' பிரிவுகளுடன் அவர்கள் தொடர்பு கொள்ளவும், அவற்றின் உறுப்பினர்கள் கற்பனுவாதக் கண்ணேட்டங்களை விட்டு பாட்டாளி வர்க்கத்தின் விஞ்ஞானப் போதனையை உறுதியாக மேற்கொள்ள உதவுவதற்காகவும் முயன்ருர்கள்.

ஒரே எண்ணம் கொண்ட நண்பர்களுடன், (வில்கெல்ம் வோல்ஃப் இவர்களில் மிக நெருங்கியவராக விரைவில்

மாறினர்) மார்க்சும் எங்கெல்சும் புரூசெல்ஸ் கம்யூனிஸ்டு களின் நிருபர் கமிட்டி ஒன்றை உருவாக்கினர். பல்வேறு நாடுகளிலிருந்த சோஷலிச, தொழிலாளர் இயக்கத்தின் பிரதிநிதிகளுடன் கமிட்டி கடிதப் போக்குவரத்து நடத்தத் தொடங்கியது. லண்டனிலிருந்த ''நேர்மையாளர்களின் சங்கம்'', ஜெர்மன் தொழிலாளர்களின் அறிவொளிச் சங்கம், ஆங்கிலேய சார்ட்டிஸ்டுகள், பாரிசில் இருந்த ''நேர்மையா ளர் சங்கத்''தின் ஜெர்மன் கிளைகள், ஜெர்மனியில் இருந்த தனித்தனி கம்யூனிஸ்டு குழுக்கள் (உப்பெர்தல், கொலோன், பெர்லின், சிலேசியா, ஹாம்பர்க், லைப்சிக் முதலிய இடங் களிலிருந்தவை ஆகியவற்றுடன் இந்தக் கமிட்டிக்கு 1846ஆம் ஆண்டு மத்தியில் தொடர்புகள் ஏற்படுத்த முடிந்தது.

ஜெர்மன் தொழிலாளர் குழுக்களுடனும், மற்ற நாடு களின் பாட்டாளி வர்க்க அமைப்புக்களுடனும் வெறும் தொடர்பு கொள்வது மட்டும் புரூசெல்ஸ் நிருபர் கமிட்டி யின் குறிக்கோளாக இருக்கவில்லை, கம்யூனிச இயக்கத்தில் ஒரு கோட்பாட்டுறுதியைக் கொண்டுவர முயல்வதும் இதன் நோக்கமாக இருந்தது.

மார்க்ஸ், எங்கெல்சின் புதிய புரட்சிகரப் போதனை முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ சித்தாந்தத்தை எதிர்த்துப் போரிட்டு உருவம் பெற்று, தொழிலாளி மக்களை நோக்கிப் பாதை அமைத்துக் கொண்டு சென்றது.

அரசியல் போராட்டத்தை மறுத்து, கொச்சைத்தன மாய்ச் சமப்படுத்த முயன்ற வெயித்லிங்கின் செக்டேரியன் கம்யூனிசம் புதிய புரட்சிகர உலகக் கண்ணோட்டத்தைத் தொழிலாளி மக்கள் மத்தியில் பரவ விடாமல் தடுத்த மதில் களில் ஒன்றாக இருந்தது. லண்டனிலிருந்த ''நேர்மையாளர் களின் சங்க'' உறுப்பினர்களுடன் சச்சரவிட்டுக் கொண்டு புரூசெல்சுக்கு வெயித்லிங் வந்து சேர்ந்த பொழுது, சொந் தத்தில் கல்வி பெற்ற திறமைசாலியான இவரைத் தம் பக் கம் கவர்வதற்காக மார்க்சும் எங்கெல்சும் வெகுவாக முயன் றார்கள். ஆனால், வெயித்லிங் தமது கண்ணோட்டத்தைப் பிடி வாதமாய்ப் பற்றிக் கொண்டிருந்ததுடன், இரகசிய எதிரி களும் பொறாமைக்காரர்களும் பின்தொடர்ந்து துன்புறுத் தும் ஒரு பெரிய மனிதர் என்று தம்மைக் கற்பனை செய்து கொண்டுமிருந்தார். 1846 மார்ச்சு 30ல் நடந்த புரூசெல்ஸ்

கமிட்டிக் கூட்டத்தில், வெயித்லிங்கின் கம்யூனிசத்திற்கு எதிராகவும் ''உண்மையான சோஷலிசத்திற்கு'' எதிராக வும் மார்க்சும் எங்கெல்சும் கடுமையாகப் பேசி, கட்சியைச் சுத்தப்படுத்தும் படி கோர வேண்டிய கட்டாயம் ஏற்பட் டது. வெயித்லிங்குடன் முடிவாக முறித்துக் கொண்டது பற்றி, தன்னுடன் தொடர்புள்ள கம்யூனிச அமைப்புகளுக்கு புரூசெல்ஸ் கமிட்டி விரைவில் தகவல் கொடுக்க வேண்டிய தாயிற்று.

''உண்மையான சோஷலிசத்தை'' மார்க்சும் எங்கெல் சும் ஈவிரக்கமின்றிக் கண்டனம் செய்தார்கள். 1846 மே 11ம் நாள் நடந்த புரூசெல்ஸ் கமிட்டிக் கூட்டத்தில், நியூ யார்க் நகரில் வெளியிடப்பட்ட ஜெர்மன் பத்திரிகையின் *(Volks-Tribün)* ஆசிரியர் கெர்மன் கிரிகே என்ற, ''உண்மை யான சோஷலிசத்தின்'' சரியான பிரதிநிதியின் கருத்துக் களுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தன்னு டன் தொடர்புள்ள கம்யூனிச அமைப்புக்களுக்கு இந்தத் தீர்மானத்தையும்,அதனுடன் மார்க்சும் எங்கெல்சும் வரைந்த சுற்றறிக்கையையும் புரூசெல்ஸ் கமிட்டி அனுப்பியது. கம் யூனிச இயக்கத்தைச் சீர்குலைக்கும் கெர்மன் கிரிகே போன்ற குட்டி முதலாளித்துவ சக்திகளைத் திட்ட வட்டமாக ஒதுக்கித் தள்ளிவிட வேண்டியது எவ்வளவு அவசியம் என்று இந்தச் சுற்றறிக்கையில் எடுத்துக்காட்டப் படுகிறது. ''கம் யூனிசம்'' என்ற பெயரில் கிரிகே பரப்பி வந்த உணர்ச்சி மிக்க, வெறி மிகுந்த பிதற்றலையும், நிலச் சீர்திருத்தத்திற் காக நடைபெற்ற முற்போக்கான முதலாளித்துவ-ஜன நாயக இயக்கத்தை கம்யூனிச இயக்கம் என்று அவர் மதிப்பீடு செய்ததையும், மார்க்சும் எங்கெல்சும் கண்டன வாதங் களால் நொறுக்கித் தள்ளினர்கள்.

''நேர்மையாளர்களின் சங்கத்தினது'' பல்வேறு அமைப் புக்களிலும், குறிப்பாக பாரிசில் இருந்த அமைப்பிலும் குட்டி முதலாளித்துவத்தின் செல்வாக்கு இன்னும் ஓங்கி இருந்தது. இது சம்பந்தமாக 1846 ஆகஸ்டில் பாரிசுக்கு எங்கெல்சை அனுப்பி வைத்தது புரூசெல்ஸ் கமிட்டி. பாரிசுக்கு வந்தவு டன் ''நேர்மையாளர்களின் சங்கத்துப்'' பிரிவுகளுடனும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார் எங்கெல்ஸ். இந்த பிரிவு களில் ''அளவற்ற சிக்கல்கள் ஆட்சி புரிகின்றன'' என்று

எங்கெல்ஸ் எழுதினர். வெயித்லிங்கின் ஆதரவாளர்களும் அன்பு, மனிதநேயம் ஆகியவை பற்றிய தெளிவற்ற வார்த்தைகளாலும், **மெய்யறிவின் வறுமை** *(1847)* என்னும் தமது நூலில் விமர்சனங்களால் மார்க்ஸ் அடித்துத் தூளாக்கிய பிரெஞ்சுக் குட்டி முதலாளித்துவ சீர்திருத்தவாதியான புரூதோனின் கருத்துக்களாலும் கேட்பவர்களின் தலையைத் திணித்து நிரப்பிக்கொண்டிருந்த ''உண்மையான சோஷலிசத்தின்'' ஆதரவாளர்களான கார்ல் கிரியூன் போன்றவர்களும் அங்கு நிறைந்திருந்தனர். புரூதோன் வழியில் தொழிலாளர்கள் சங்கங்கள் அமைத்திட வேண்டும் என்று கிரியூன் பிரசாரம் செய்து வந்தார். தொழிலாளர்கள் பணத்தைக் கொண்டு தொழில் பட்டறைகளைக் கட்ட வேண்டும் என்றும், இதன் மூலமாக ஆலை முதலாளிகட்கு உழைப்புச் சக்தியான தொழிலாளர்கள் கிட்டாமல் செய்ய வேண்டும் என்றும் இத்திட்டம் பறைசாற்றியது. தொழிலாளர் சேமிப்பில் ''பிரான்ஸ் முழுதையும் விலைக்கு வாங்குவது'' எனும் இத்திட்டம் பற்றி மார்க்சுக்கு எங்கெல்ஸ் தெரிவிக்கையில், ''வெத்து வேட்டான முட்டாள்தனத்தோடு நாம் காரியப் பற்றுடன் போராட வேண்டி இருப்பது வெறும் வெட்கக் கேடான விஷயம்'' என்று எழுதினர்.

கிரியூன்-புரூதோன் திட்டத்தைக் கடுமையாகச் சாடி, அதன் குட்டி முதலாளித்துவ, கம்யூனிச எதிர்ப்புத் தன்மையைப் பலப்பல கூட்டங்களில் அம்பலப்படுத்தினர் எங்கெல்ஸ். இத்தகைய கூட்டம் ஒன்றில் ''இந்தக் கூட்டம் கம்யூனிசக் கூட்டமா, இல்லையா'' என்பதை ஓட்டுக்கு விட்டு முடிவு செய்யும்படி எங்கெல்ஸ் கோரி, கம்யூனிஸ்டுகளின் நோக்கங்களைப் பின்கண்டவாறு நிர்ணயித்தார்: *''1) முதலாளிகளின் நலன்களுக்கு எதிராக பாட்டாளிகளின் நலன்களை முன் நிறுத்துவது; 2) தனியார் சொத்துரிமையை அழித்துவிட்டு அதற்குப் பதிலாகச் சொத்துக்களைப் பொது உடைமை ஆக்குவதன் மூலமாக இதனை அடைவது; 3) பலாத்காரமான ஜனநாயகப் புரட்சியைத் தவிர வேறு எந்த வழியையும் இதற்காக ஒத்துக் கொள்ள மறுப்பது.''**

---

* *Engels' Letter to the Brussels' Committee on October 23, 1846;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 37.

சூடு பறக்கும் விவாதங்களின் விளைவாக, கம்யூனிசம் பற்றிய எங்கெல்சின் விளக்கம் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தன்னைக் கம்யூனிசக் கூட்டம் என்று பிரகடனப்படுத்தி, புரூதோனிசத்துடனும் ''உண்மையான சோஷலிசத்துடனும்'' தனக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை என்று கூட்டம் அறிவித்தது.

''நேர்மையாளர்களின் சங்கத்தின்'' மற்ற பிரிவுகளிலும் இது போன்ற மாற்றங்கள் ஏற்பட்டன. மார்க்சும் எங்கெல்சும் நடத்திய சமரசத்திற்கு இடமற்ற போராட்டத்தின் விளைவாக, தனக்கு ஒத்துவராத குட்டி முதலாளித்துவ ''சித்தாந்தவாதிகளை'' சங்கம் ''சுத்தப்படுத்தி'' அகற்றியது. இதன் உறுப்பினர்கள், மார்க்சும் எங்கெல்சும் பிரசாரம் செய்து வந்த கண்ணோட்டங்களை நோக்கி மேலும் மேலும் நெருங்கி வந்தார்கள்.

பாட்டாளி வர்க்கக் கட்சியின் பொருட்டு மார்க்சியத் தந்தையர் நடத்திய இந்தப் போராட்டம் அனைத்தின் இயல்பான விளைவாக, ''நேர்மையாளர்களின் சங்க'' லண்டன் கமிட்டியால் பணிக்கப் பட்டிருந்த யோசிப் மோல், 1847 தொடக்கத்தில் புரூசெல்சில் மார்க்சிடமும், பின்னர் பாரிசில் எங்கெல்சிடமும் போய், அவர்களைச் சங்கத்தின் அதிகார பூர்வ உறுப்பினராகும் படியும், சங்கத்தை மாற்றி அமைப்பதிலும் அதன் வேலைத்திட்டத்தை உருவாக்குவதிலும் இருவரும் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார். இந்த ஆலோசனையை மார்க்சும் எங்கெல்சும் ஏற்றுக் கொண்டனர்.

1847 ஜூன் 2 முதல் 9 வரை சங்கத்தின் காங்கிரஸ் லண்டனில் நடைபெற்றது. பண நெருக்கடியின் காரணமாக காங்கிரசுக்கு மார்க்ஸ் செல்லவில்லை. பாரிஸ் கிளைகளின் சார்பாக எங்கெல்சும் புரூசெல்ஸ்காரர்களின் சார்பில் வில்கெல்ம் வோல்ஃபும் காங்கிரசில் கலந்து கொண்டனர்.

''நேர்மையாளர்களின் சங்கம்'' இந்தக் காங்கிரசினுல் ''கம்யூனிஸ்டுகள் சங்கம்'' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பழைய முழக்கமான ''எல்லா மனிதர்களும் சகோதரர்கள்'' என்பதற்குப் பதிலாக, மார்க்சும் எங்கெல்சும் பிரகடனம் செய்த ''உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'' என்னும் முழக்கம் காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்

பட்டது. பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாட்டை வெளியிடும் இந்த முழக்கம், முதலாளித்துவ அடிமைத்தனத்துக்கு எதிரான பாட்டாளிகளின் போராட்ட அறைகூவலாக அன்றிலிருந்து இன்று வரை இருந்து வருகிறது.

காங்கிரசில் மேற்கொள்ளப்பட்ட சங்க விதிகளின் நகல் பல்வேறு கிளைகளுக்கும் விவாதத்துக்காக அனுப்பப்பட்டது. கம்யூனிச சங்கத்தின் இரண்டாவது காங்கிரசில் இவ்விதிகள் இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட இருந்தன.

சங்கத்தின் வேலைத்திட்டம் பற்றியும் காங்கிரசில் விவாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, தொழிலாளர்கள் மத்தியில் அப்போது பரவியிருந்த கேள்வி—பதில் உருவில் படைக்கப்பட்ட ''கம்யூனிச நம்பிக்கைச் சின்னத்தின் நகல்''* என்ற வேலைத்திட்டம் ஒன்று தோன்றியது. எங்கெல்சின் கையால் எழுதப்பட்ட இந்த ஆவணத்தின் அடியில், காங்கிரசின் தலைவரான ஷில்லின் (சங்கத்தில் ஷாப்பெரின் புனைபெயர்) கையெழுத்தும், காங்கிரசின் செயலாளர் ஹாய்தே (சங்கத்தில் வி. வோல்ஃபின் புனைபெயர்) கையெழுத்தும் காணப்படுகின்றன. இந்த நகல் திட்டத்தின் பெரும் பகுதி, எங்கெல்ஸ் பின்னர் எழுதிய **கம்யூனிசக் கோட்பாடுகளுடன்** அனேகமாக வரிக்கு வரி ஒத்திருக்கிறது. இதன் மற்ற பகுதி, அதாவது முதல் ஆறு கேள்வி பதில்களில், கற்பனாவாதக் கண்ணோட்டத்தின் முத்திரை இன்னும் பதிந்து கிடக்கிறது, எனவே, இதனை எங்கெல்ஸ் எழுதியிருக்க முடியாது என்பது தெளிவு. வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளுவது போன்ற முக்கிய பிரச்னையில் அவசரம் காட்டக் கூடாது என்பதால், இந்த ஆவணத்தை இறுதியான நகல் திட்டமாக காங்கிரஸ் பார்க்கவில்லை என்றும், ஒரு மாதிரிக் குறிப்பாகக் கருதியே இது சங்கத்தின் எல்லாக் கிளைகளுக்கும் அனுப்பப்படுகிறது எனவும், இத்திட்டத்தை எல்லாக் கிளைகளும் காரியப் பற்

---

* Engels, *Draft of a Communist Confession of Faith;* K. Marx and F. Engels, *Sellected Works*, Vol. VI, Moscow 1975, pp. 96-104. இந்த ஆவணமும் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மற்ற சில ஆவணங்களும், 1968ஆம் ஆண்டு முதன் முதலாக ஹாம்புர்கில் சங்க உறுப்பினர் மார்தென்சின் சொந்த ஆவணங்களுக்கிடையே கண்டுபிடிக்கப் பட்டன.

றுடன், முதிர்ச்சி காட்டி விவாதித்துத் தமது ஆலோசனை களையும், இதில் மாற்றப்பட வேண்டிய அல்லது சேர்க்கப்பட வேண்டிய கருத்துக்களையும் தெரிவிக்க வேண்டும் என்றும், இதன் பிறகே இந்நகல் திட்டம் இரண்டாவது காங்கிரசின் முன் அதன் கவனத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும் என்றும், சங்கத்தின் உறுப்பினர்களுக்கு விசேஷமாய் எழுதிய கடிதத்தில் காங்கிரஸ் குறிப்பிட்டது.

இந்தக் காங்கிரசுக்குப் பின்பு புரூசெல்சிலும் இச்சங்கத்தின் கிளை ஒன்று துவக்கப்பட்டது. இந்தக் கிளைக்கும், இதன் மாவட்டக் கமிட்டிக்கும் மார்க்ஸ் தலைவராக இருந்தார். இது தவிர, ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கம் ஒன்றை புரூசெல்சில் மார்க்சும் எங்கெல்சும் அமைத்தார்கள். இதன் நிர்வாகம் கம்யூனிச சங்கத்தின் புரூசெல்ஸ் கிளையினது கைகளில்தான் இருந்தது. ''ஜெர்மன்-புரூசெல்ஸ் பத்திரிகை'' (*Deutsche-Brüsseler-Zeitung*) என்ற பத்திரிகைக்குத் தலைமை தாங்கி அதன் மூலமாகத் தமது கருத்துக்களை மார்க்சும் எங்கெல்சும் பரப்ப முடிந்தது அவர்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். மார்க்சும் எங்கெல்சும் இப்பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் புரட்சி நெருங்கி வருவதைச் சுட்டிக் காட்டி, இப்புரட்சியில் பாட்டாளி வர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய போர்த் தந்திரங்களும் நடைமுறை உத்திகளும் என்னென்ன என்று எடுத்துக்காட்டினார்கள். நிலப்பிரபுத்துவப் பிற்போக்குக் கட்சிகள் பாட்டாளி வர்க்கத்துடன் கொஞ்சிக் கொண்டிருந்ததை எதிர்த்துத் தாக்கிய மார்க்சும் எங்கெல்சும், எதேச்சாதிகார முடியரசிற்கு எதிராக முதலாளித்துவ வர்க்கம் தான் நடத்திய போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தைப் பணிந்துநடக்கும் பகடைக்காய்களாகப் பயன்படுத்தச் செய்யும் முயற்சிகளை எதிர்த்துப் போராடினார்கள். வரப் போகின்ற புரட்சிப் போர்களில் மிகத் தீவிரப் பங்கெடுத்துக் கொள்ளும்படி தொழிலாளிகளுக்கு அறைகூவல் விடுத்த மார்க்சும் எங்கெல்சும், முதலாளித்துவப் புரட்சியே பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் இறுதிக் குறிக்கோள் அல்ல என்றும், இந்தப் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் சோஷலிசப் புரட்சிக்கான போராட்டத்தைத் தொழிலாளி வர்க்கம் துவக்க வேண்டும் என்றும் கோடிட்டுக் காட்டினார்கள்.

ஜெர்மன்-புருசெல்ஸ் பத்திரிகையைத் தவிர, சார்ட்டிஸ்டு களின் வடக்கு விண்மீன் (*The Northern Star*) என்ற பத்திரிகை யிலும், பிரெஞ்சு ஜனநாயகப் பத்திரிகையான ''சீர்திருத்தத் திலும்'' (*La Réforme*) எங்கெல்ஸ் பணியாற்றினர்.

கம்யூனிச சங்கத்தின் புருசெல்ஸ் கிளையையும், ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தையும் தவிர, இத்துடனேயே, இன்னும் பரவலான நிறுவனமாகிய ஜனநாயக சங்கத்தை அமைப்பதி லும் மார்க்சும் எங்கெல்சும் பங்கெடுத்துக் கொண்டார்கள். இதன் மூலமாக புருசெல்ஸ் ஜனநாயகவாதிகளுடனும், குடி பெயர்ந்த வேற்று நாட்டு ஜனநாயகவாதிகளுடனும் தொடர்பு கொண்டார்கள். முற்போக்கு, ஜனநாயக இயக்கங் களாக விளங்கும் எல்லா இயக்கங்களையும் பாட்டாளி வர்க் கம் கண்டிப்பாக ஆதரிக்க வேண்டும் என்று மார்க்சிய மூல வர்கள் கருதினர்.

1847 அக்டோபர் மத்தியில் எங்கெல்ஸ் பாரிசுக்கு மீண் டும் போனர். அங்கு போய்ச் சேர்ந்தவுடன் அவர் சங்கத்தின் மாவட்டக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வேலைத் திட்டத்தைப் பற்றி விவாதம் நடத்த இருந்த, கம்யூனிச சங் கத்தின் இரண்டாவது காங்கிரசுக்கான பெரும் தயாரிப்பு வேலைகளை அவர் தொடங்க வேண்டி இருந்தது.

பாரிஸ் கிளைகளில் நம்பிக்கைச் சின்னம் என்ற நகல் திட்டம் எம். கெஸ் என்பவரால் திருத்தி மாற்றப்பட்டு விவாதத்திற்காக முன்வைக்கப்பட்டிருந்தது. ஆனல், அந்த நகலை எங்கெல்ஸ் கண்டனங்களால் தாக்கி நொறுக்கி விடவே, புதிய நகல் திட்டம் ஒன்று தயாரித்தளிக்கும் பணி கூட்டத்தின் இறுதியில் எங்கெல்சுக்குக் கொடுக்கப்பட்டது.

நவம்பர் *20-31*ல் இவ்வேலைத்திட்டம் பற்றி மார்க்சுக்கு எங்கெல்ஸ் தெரிவிக்கையில், இந்த வேலைத்திட்டத்தின் நகலைத் தோராயமாக வரைந்துவைத்திருப்பதாகவும் கேள்வி பதில் என்று இதனை அழைப்பதற்குப் பதிலாக கம்யூனிச அறிக்கை என்று அழைக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறினர். மார்க்சுக்கு எங்கெல்ஸ் எழுதினர், ''...நம்பிக்கைச் சின்னம் என்பது பற்றி நினைத்துப் பார். கேள்வி பதில் வடி வத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு இதனைக் கம்யூனிச அறிக்கை என்று அழைக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இந்தப் பிரச்னையின் வரலாற்றை இதில் ஏதாவது ஒரு வழியில் தெளிவு

படுத்த வேண்டி வருகிறது. இதற்கு இப்போதிருக்கும் வடிவம் சிறிதும் லாயக்கற்றது. இங்கு தயாரிக்கப்பட்டுள்ள, என்னுல் எழுதப்பட்ட நகலை நான் உடன் கொண்டு வருகிறேன். நேரில் பேசுவது போல எழுதப்பட்டுள்ள இது, மிகவும் மோசமாகவும், அவசரத்தில் சரி பார்க்கப்பட்டதாகவும் இருக்கிறது. கம்யூனிசம் என்பது என்ன என்ற கேள்வியிலிருந்து தொடங்கி, உடனே பாட்டாளி வர்க்கப் பிரச்னேக்கு வந்து விடுகிறேன் நான். இவ்வர்க்கம் தோன்றிய வரலாறு, ஏற்கெனவே இருந்த உழைப்பாளர்களுக்கும் இவ்வர்க்கத்தினருக்கும் இடையில் உள்ள வேறுபாடு, முதலாளித்துவ வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு வளர்ந்து வருவது, நெருக்கடிகள், முடிவுகள் என்று தொடர்கிறேன் நான். இடையில் பல்வேறு விதமான இரண்டாம் பட்ச விஷயங்கள் வருகின்றன. கம்யூனிஸ்டுகளின் கட்சிக் கொள்கை பற்றி வெளிப்படையாகப் பேசக் கூடிய அளவுக்கு அதனையும் இறுதியில் சேர்த்திருக்கிறேன்.''*

இப்படியாக, **கம்யூனிசக் கோட்பாடுகள்** என்று பிரபலமடைந்த **கம்யூனிச அறிக்கையின்** முதல் நகலை எங்கெல்ஸ் உருவாக்கினுர்.

இந்த நூலில் எங்கெல்ஸ் விளக்குகின்ற பிரச்சினேகளில் ஒன்று, சோஷலிசப் புரட்சி ஒரு நாட்டில் தனியாக வெற்றி பெற முடியுமா என்பது பற்றியாகும். ஏகபோக முதலாளித்துவம் தோன்றுவதற்கு முன்னர் நிலவிய சூழ்நிலேகளேக் கருத்தில் கொண்டு இப்பிரச்னேயை ஆய்வு செய்த எங்கெல்ஸ், தனியாக ஒரு நாட்டில் சோஷலிசப் புரட்சி வெற்றியடைவது சாத்தியமில்லே என்றும், அது முன்னேற்றமடைந்த எல்லா நாடுகளிலும் ஒரே நேரத்தில் தோன்றும் என்றும் முடிவுக்கு வந்தார். புதிய வரலாற்றுச் சூழல்களில், ஏகாதிபத்தியச் சகாப்தத்தில், முதலாளித்துவம் ஒரே சீராய் இல்லாமல் நாலுகால் பாய்ச்சலில் பொருளாதார, அரசியல் வளர்ச்சி பெறுகின்றது என்னும் விதியைக் கண்டுபிடித்த லெனின், முதலில் புரட்சி ஒரு சில நாடுகளிலோ, அல்லது ஒரே ஒரு நாட்டில் கூடவோ வெற்றி பெறுவது சாத்தியமே

---

* *Engels' Letter to Marx on November 23-24, 1847;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, pp. 52-53.

என்றும், எல்லா நாடுகளிலுமோ, அல்லது பெரும்பான்மை யான நாடுகளிலுமோ ஒரே நேரத்தில் சோஷலிசப் புரட்சி வாகை சூடுவது சாத்தியமில்லை என்றும் முடிவுக்கு வந்தார்.

கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் இரண்டாவது காங்கிரஸ் 1847 நவம்பர் 29ஆம் நாள் லண்டனில் துவங்கியது. இக் காங்கிரசில் பாரிஸ் கிளைகளின் பிரதிநிதியாக எங்கெல்சும், புருசெல்ஸ் கிளையின் பிரதிநிதியாக மார்க்சும் கலந்து கொண் டனர்.

சில மாற்றங்களுடன் விதிகளின் நகல் திட்டத்தைக் காங் கிரஸ் அங்கீகரித்தது. இவற்றில் பிரதானமாக இருந்த மாற் றம் அறிக்கையின் வேலைத்திட்டத்தைப் பற்றிக் கூறும் தொன்மைச் சிறப்புள்ள முதல் பாரா, மார்க்சினாலும் எங் கெல்சினாலும் வகுத்தளிக்கப்பட்டது. இது பின்கண்டவாறு முழங்கியது: ''முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவது, பாட்டாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவது, வர்க்கப் பகைமை என்னும் அடித்தளத்தில் நிற்கும் பழைய முதலாளித்துவ சமூகத்தை அழித்தொழிப்பது, வர்க்கங்கள் அற்ற, தனியார் சொத்துரிமை அற்ற புதிய சமுதாயம் ஒன்றை நிர்மாணிப்பது ஆகியவையே சங்கத்தின் நோக்கம்.''*

இக்காங்கிரசின் பிரதான கவனம் வேலைத்திட்டத்தைப் பற்றியதாகும். புதிய தத்துவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மார்க்சும் எங்கெல்சும் விடாமுயற்சியுடன் போராடினார்கள். கடுமையான நீண்ட விவாதத்திற்குப் பின்னே, மார்க்சும் எங்கெல்சும் ஆதரித்த கோட்பாடுகளை ஒரே மனதாக ஏற்றுக் கொண்டு, கொள்கை அறிக்கை ஒன்று தயாரிக்கும் பணியை அவ்விருவருக்கும் வழங்கியது காங்கிரஸ்.

லண்டனில் மார்க்சும் எங்கெல்சும் இருந்த காலத்தில், பல்வேறு நாட்டுத் தொழிலாளர்-கம்யூனிஸ்டுகளுடனும் ஜன நாயகவாதிகளுடனும் தமது தொடர்புகளை விரிவுபடுத்திக் கொண்டார்கள். 1830ஆம் வருடம் நடைபெற்ற போலந்து எழுச்சியின் ஆண்டு விழாவினையொட்டி நடந்த சர்வதேச ஜனநாயகக் கூட்டத்தில் அவர்கள் கலந்து கொண்டார்கள். இந்தக் கூட்டத்தில் பேசிய மார்க்சும் எங்கெல்சும், தேசியப்

---

* Marx and Engels, *Rules of the Communist League;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II, Moscow 1955, p. 347.

பிரச்னையில் பாட்டாளி வர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படைக் கொள்கை வழிகள் என்ன என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். அப்பொழுது எங்கெல்ஸ் முன்மொழிந்த ஆலோசனை பின்னர் தேசியப் பிரச்னையில் பாட்டாளி வர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய தலையாய கோட்பாடாக மாறியது: ''மற்ற தேசங்களைத் தொடர்ந்து அடக்கி ஒடுக்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் எந்த ஒரு தேசமும் சுதந்திரமானதாக மாறிவிட முடியாது.''*

மகத்தான பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாட்டையும் இந்த உரையில்தான் எங்கெல்ஸ் முன்வைத்தார். இந்தக் கோஷம் தான் கம்யூனிச சங்கத்தின் உயர் முழக்கமாக மாறியது. ''அனைத்து நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களின் நிலைமை ஒரே மாதிரியாய் இருப்பதால், இவர்களின் நலன்கள் ஒரே மாதிரியானவையாய் இருப்பதால், இவர்களது எதிரிகளின் கூட்டம் ஒன்றேயானதால், இவர்கள் ஒருவரோடொருவர் ஒன்றுபட்டுப் போராட வேண்டும். அனைத்து தேச முதலாளிகளின் சகோதரக் கூட்டுக்கு எதிராக அனைத்து நாடுகளிலுமுள்ள தொழிலாளர்களின் சகோதரக் கூட்டை இவர்கள் முன்வைக்க வேண்டும்.''**

மார்க்சைப் பின்தொடர்ந்து 1847 டிசம்பர் மாத நடுவில் எங்கெல்சும் புரூசெல்ஸ் வந்து சேர்ந்தார். 1847 டிசம்பர் இறுதி வரை இருவரும் கூட்டாக அறிக்கையைச் செப்பமிட்டனர். எங்கெல்ஸ் மீண்டும் பாரிசுக்குச் சென்ற பொழுது, கம்யூனிசச் சங்கத்தின் வேலைத்திட்டத்தை முழுமைப்படுத்தும் பணியில் மார்க்ஸ் ஈடுபட்டார்.

1848 பிப்ரவரியில் **கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கை** லண்டனில் வெளியாயிற்று. விஞ்ஞானக் கம்யூனிசத்தின் முதல் வேலைத்திட்ட ஆவணமான இது, ''சைபீரியாவிலிருந்து கலிபோர்னியா வரையுள்ள கோடிக் கணக்கான தொழிலாளர்களின் பொது வேலைத்திட்டமாய், மிகப் பெரும் அளவில் விரிந்து பரவிய, அனைத்து நாடுகளிலுமுள்ள சோஷலிச

---

* Marx and Engels, *About Poland;* Marx-Engels, *Gesamtausgabe,* Erste Abteilung, Band 6, S. 361.

** அதே நூல், அதே பக்கம்.

இலக்கியத்தின் மிகச்சிறந்த சர்வதேசிய நூலாய் விளங்குகிறது''* என்று எங்கெல்ஸ் பின்னர் எழுதினர்.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தத்துவமான விஞ்ஞானக் கம்யூனிசம், முதல் முதலாக கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கையில் மிகமிகச் சுருக்கமாயும் வெகு தெளிவாகவும் தீட்டித் தரப்பட்டது. ''இந்த நூல் மாமேதைக்குரிய தெளிவுடனும் ஒளிச் சிறப்புடனும் ஒரு புதிய உலகக் கண்ணேட்டத்தை விவரிக்கிறது; சமுதாய வாழ்வுத் துறையையும் கூட அணைத்து நிற்கும் முரணற்ற பொருள்முதல்வாதம், வளர்ச்சியைப் பற்றிய மிகவும் முழுமையான ஆழ்ந்த போதனையான இயக்கவியல், வர்க்கப் போராட்டத்தைப் பற்றியும், புதிய, கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் படைப்பாளி என்கிற வகையில் பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, புரட்சிகரமான பாத்திரத்தைப் பற்றியும் அமைந்த ஒரு தத்துவம் ஆகியவை இந்த உலகக் கண்ணேட்டத்தில் அடங்கியவை''** என்று லெனின் எழுதினர்.

அறிக்கையின் வாசகம் முழுவதும், முதலாளித்துவம் வரலாற்றுப் போக்கில் தவிர்க்க முடியாது அழிக்கப்படும் என்றும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் விளைவாகவும் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கம் நிலைநாட்டப்படுவதன் மூலமாகவும் இதன் இடத்தில் புதிய, வர்க்கங்களற்ற சமுதாயம் அமைக்கப்படும் என்றும் விஞ்ஞான பூர்வமான ஆதாரத்துடன் கூறுகிறது.

ஆதிகாலச் சமுதாய அமைப்பு அழிந்து போன பின் நிகழ்ந்த மனித வரலாறு அனைத்தும், சுரண்டுவோருக்கும் சுரண்டப்படுவோருக்கும் இடையே, ஆதிக்கம் புரியும் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்துக்கும் இடையே நிகழ்ந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாறே ஆகும் என்று மார்க்சிய மூலவர்கள் அறிக்கையில் மெய்ப்பித்துக் காட்டினர்கள். நிலப்பிரபுத்துவத்திற்கு பதிலாக வந்த முதலாளித்துவச்

---

* Engels, *Preface to the German Edition of the Communist Manifesto;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II, Moscow 1955, pp. 101-107.

** வி. இ. லெனின், கார்ல் மார்க்ஸ் (வி. இ. லெனின், மார்க்ஸ்-எங்கெல்ஸ்-மார்க்சியம், மாஸ்கோ, 1976, பக்கங்கள் 9, 10).

சமூகம் பழைய வர்க்கங்களின் இடத்தில் வெறுமே புதிய வர்க்கங்களை அமர்த்தி வர்க்கங்களிடையே முரண்பாடுகளைத் தீவிரப்படுத்தியது, கூர்மையாக்கியது. ''வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட'' பண்புடையது அரசு என்ற ஒரு தத்துவத்தைப் பரப்பிக் கொண்டிருக்கிற முதலாளித்துவச் சித்தாந்தவாதிகளுக்கு எதிராக, முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள அரசாட்சி என்பது ''முதலாளித்துவ வர்க்கம் முழுதினுடைய காரியங்களையும் நிர்வகித்து வரும் ஒரு கமிட்டிதானே'' தவிர வேறொன்றும் அல்ல என்று அறிக்கையில் எடுத்தியம்பினார்கள் மார்க்சிய மூலவர்கள்.

உற்பத்திச் சாதனங்கள் தனியார் உடைமையாய் இருப்பதானது வளர்ந்து வரும் உற்பத்திச் சக்திகளுக்குக் கைவிலங்கு பூட்டுகிறது என்று மார்க்சிய மூலவர்கள் அறிக்கையில் எடுத்துக்காட்டினர்.

முதலாளித்துவம், உழைப்பாளி மக்களின் தலையில் கொண்டு வந்து கொட்டுகின்ற கணக்கற்ற தொல்லைகளையும் துன்பங்களையும் அடியோடு களைந்தெறிவதற்கு ஒரே வழி சோஷலிசப் புரட்சியும், அரசியல் அதிகாரத்தை பாட்டாளி வர்க்கம் கைப்பற்றுவதுமே.

முதலாளித்துவமானது தான் வளருகின்ற பொழுதே எதிர்காலக் கம்யூனிச சமுதாயத்திற்கு வேண்டிய பொருள் வகை அடிப்படைகளை நிறுவுகிறது. பாட்டாளி வர்க்கத்தைத் தோற்றுவிப்பதன் மூலம், தனக்குப் புதைகுழி வெட்டுகிற ஒரு வர்க்கத்தை, புதிய சமுதாயத்தைப் படைக்கின்ற ஒரு வர்க்கத்தை உருவாக்குகிறது முதலாளித்துவம். பாட்டாளி வர்க்கம் தனக்குள் முரண்பாடில்லாத ஒரு புரட்சிகர வர்க்கம். எல்லாச் சுரண்டல்களிலிருந்தும், எல்லா ஒடுக்குமுறையிலிருந்தும் மனித குலம் அனைத்தையும் விடுவிக்காமல் தன்னைத்தானே இவ்வர்க்கம் விடுவித்துக் கொள்ள முடியாது.

பாட்டாளி வர்க்கம் வெற்றிகரமாகப் போராட்டம் நடத்தவும் வாகை சூடவும் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பாத்திரம் ஒரு முன்நிபந்தனை ஆகும் என்னும் கருத்து அறிக்கையில் வகுத்தளிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் உறுதி மிக்க முற்போக்குப் பகுதியாகக் கம்யூனிஸ்டுகள் விளங்குகிறார்கள் என்றும், பாட்டாளி வர்க்க இயக்கத்தின் நிலைமைகளையும், போக்கையும், பொதுவான விளைவுகளையும்

புரிந்து கொள்வதற்கு வழி செய்யும் புரட்சிகரச் சித்தாந் தத்தை ஆயுதமாகக் கொண்டுள்ளவர்களாகக் கம்யூனிஸ்டு கள் இருப்பதால் மற்ற தொழிலாளர்களை விட இவர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகம் இருக்கிறதென்றும் மார்க்சும் எங்கெல் சும் விளக்குகிறார்கள். தொழிலாளர்கள் எந்தத் தேசத்தவர் என்று கருதாமல் அவர்களது நலன்களுக்காகப் போராடுப வர்கள் கம்யூனிஸ்டுகள். பாட்டாளி வர்க்க சர்வதேசியத் தின் முரணற்ற ஆதரவாளர்கள் இவர்கள். பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் எல்லாக் கட்டங்களிலும் பாட் டாளி வர்க்கத்தின் பொதுவான, அடிப்படை நலன்களையும், அனைத்து ஒடுக்கு முறைகளையும், எல்லாச் சுரண்டல்களையும் ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்ற நோக்கத்துடனேயே கம்யூனிஸ்டுகள் பணியாற்றுகிறார்கள்.

கம்யூனிஸ்டுகளின் கருத்துக்களையும் நோக்கங்களையும் பற்றி முதலாளித்துவ வர்க்கம் பரப்பிவந்த பொய்களையும் அவதூறுகளையும் கிழித்தெறிந்து அம்பலப்படுத்தி, பாட் டாளி வர்க்கக் கட்சியின் உண்மையான குறிக்கோள்கள் என்ன என்பதை அறிக்கையில் தெளிவுபடுத்துகிறார்கள் மார்க் சிய மூலவர்கள்: முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தைத் தூக் கியெறிவது, அரசியல் ஆட்சி அதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் வென்று கைப்பற்றுவது.

''பாட்டாளி வர்க்கம் தனது அரசியல் மேலாண்மையைப் பயன்படுத்தி முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து படிப்படி யாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றும்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒருசேர மையப்படுத்தும்; மற்றும் உற்பத்தி சக்திகளது ஒட்டுமொத்தத் தொகையைச் சாத்தியமான முழு வேகத் தில் அதிகமாக்கும்.''*

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் இக்கோட்பாட்டில், அரசு பற்றிய மார்க்சியத்தின் அற்புதச் சிறப்புள்ள கருத்துக் களில் ஒன்று அடங்கியுள்ளது: ''அரசு, அதாவது ஆதிக் கம் செலுத்தும் வர்க்கமாக ஒழுங்கமைந்த

---

* மார்க்ஸ், எங்கெல்ஸ், கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை, மாஸ்கோ 1975, பக்கம் 77.

பாட்டாளி வர்க்கம்தான் பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் எனப்படுவது''* என்று லெனின் எழுதினர்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய போதனை மார்க்சியத்தின் பிரதான அம்சமாகும்.

மார்க்சாலும் எங்கெல்சாலும் பிரகடனப்படுத்தப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்ற கோட்பாட்டுக்கு ஆழமான சித்தாந்த அடிப்படை இந்த அறிக்கையில் அடங்கி இருக்கிறது. பாட்டாளி வர்க்க ஆதிக்கம் தேசிய ஒடுக்கு முறைக்கு முற்றுப் புள்ளி வைத்து, நாடு பிடிப்பதும் கொள்ளை யடிப்பதுமான போர்களை ஒரேயடியாக ஒழித்துக் கட்டும் என்று மார்க்சும் எங்கெல்சும் எடுத்துக் காட்டுகிறார்கள்.

''ஒரு மனிதனை இன்னொருவன் சுரண்டுவது எந்த அள வுக்கு ஒழித்துக் கட்டப்படுகிறதோ, அந்த அளவுக்கு ஒரு நாடு இன்னொரு நாட்டைச் சுரண்டுவதும் ஒழித்துக் கட்டப் படும்.

''ஒரு தேசத்துக்கு உள்ளேயிருக்கும் வர்க்கங்களின் பகைமை அழிந்தொழியும் பொழுது தேசங்களுக்கு இடையே நிலவும் விரோதமும் மறைந்தொழியும்.''

பாட்டாளி வர்க்கம் படைக்கப் போகும் கம்யூனிச சமு தாயத்தின் பொது வரைகோடுகளைத் தொட்டுக் காட்டிய தும், இச்சமூகத்தின் அளப்பரிய சிறப்புக்களை அறிக்கையில் எடுத்துக் காட்டியதும் மார்க்சிய மூலவர்களின் விஞ்ஞானத் தொலை நோக்கின் மகிமைக்குச் சான்றாகும். கம்யூனிச சமு தாயத்தில் எந்த விதமான தடைமதில்களும் இருக்கப் போவ தில்லையாதலால் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் எந்த விதமான வரம்பும் இருக்கப்போவதில்லை என்று மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினார்கள். முதலாளித்துவ சமூகத் தில் கோலோச்சுகின்ற ''எவன் உழைக்கிறானே அவனுக்கு ஒன்றும் கிடைக்காது, எவனுக்கு எல்லாம் கிடைக்கிறதோ அவன் உழைப்பதில்லை'' என்ற கோட்பாட்டிற்குப் பதிலாக, கம்யூனிச சமுதாயத்தில், வாழ்வின் வளத்திற்கு உழைப்பே அடிப்படையாகி, உழைப்பவர்களின் வாழ்க்கையை அவ் வுழைப்பு எளிதாக்கும்.

---

* வி. இ. லெனின், அரசு பற்றி மார்க்சியம், (நூல் திரட்டு, தொகுதி *33*, ருஷ்ய மொழிப் பதிப்பு, பக்கம் *199*).

கம்யூனிஸ்டுகளின் வேலைத்திட்டத்திற்கு இந்த அறிக்கையில் உருக் கொடுத்த மார்க்சும் எங்கெல்சும், அப்போது நிலவி வந்த பல்வேறு சோஷலிச, கம்யூனிச போதனைகளை விமர்சனம் செய்கிறார்கள். அப்போதனைகளில் காணப்படும் தவறுகளையும் அவை விளைக்கும் தீங்குகளையும் விளக்கமாக எடுத்தியம்பி இப்போதனைகளின் வர்க்க வேர்களையும் புட்டுப்புட்டுக் காட்டினர். சோஷலிச, கம்யூனிச இலக்கியங்களை அறிக்கையில் அவர்கள் ஆய்வு செய்து, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போதனையான விஞ்ஞானக் கம்யூனிசம் தான் எதிர்காலத்தைத் தழுவி நிற்கும் சோஷலிச போதனையாகும் என்று சுட்டிக் காட்டினர்.

பாட்டாளி வர்க்கக் கட்சி கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை உத்திக்கான தத்துவ அடிப்படைகள் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் காணக் கிடக்கின்றன. இவ்வுத்தியின் பிரதானக் கோட்பாட்டுக்குப் பின்கண்டவாறு உருக்கொடுக்கப்பட்டிருக்கிறது: ''கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்தின் உடனடி நோக்கங்கள் சித்தி பெறுவதற்காக, உடனடி நலன்கள் நிறைவேற்றம் பெறுவதற்காகப் போராடுகிறார்கள்; ஆனால் தற்காலத்திய இயக்கத்தில் இந்த இயக்கத்தின் எதிர்காலத்தையும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்து பேணிப் பாதுகாக்கின்றனர்.'' பிற்போக்குத் தன்மையுள்ள சமுதாய, அரசியல் அமைப்புக்கு எதிராக நடக்கும் ஒவ்வொரு முற்போக்கு, புரட்சி இயக்கங்களையும் ஆதரிக்க வேண்டும் என்று மார்க்சிய மூலவர்கள் கம்யூனிஸ்டுகளுக்குப் போதிக்கிறார்கள்.

பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான பெருமை மிக்க, பகிரங்க அறைகூவலுடன் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை முடிவுறுகிறது: ''அஞ்சி நடுங்கட்டும் ஆளும் வர்க்கங்கள், கம்யூனிசப் புரட்சி வருகிறதென்று. பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு ஏதும் இல்லாதவர்கள். இவர்கள் வென்று பெறுவதற்கு அனைத்து உலகும் இருக்கிறது.

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!''*

---

* மார்க்ஸ், எங்கெல்ஸ், கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை, மாஸ்கோ, 1975, பக்கம் 101.

மிக உயர்ந்த படைப்பின் ஊக்கமும் பிரமாண்டமான புரட்சிப் பேரார்வமும் ஊடுருவி நிற்கும், இறவாப் புகழ் படைத்த உழைப்பாகும் மார்க்ஸ், எங்கெல்சின் இந்தக் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை.** அவர்களுடைய இதற்கு முந்திய படைப்புக்களை எல்லாம் பொதுமைப்படுத்துவதாக மட்டும் இந்த **அறிக்கை** அமையவில்லை, இது விஞ்ஞானக் கம்யூனிசத்தையும் மார்க்சியத்தையும் நிறைவு செய்வதற்கு முன்னேக்கி வைத்த ஒரு ராட்சச எட்டும் ஆகும்.

19ஆம் நூற்றுண்டின் மகத்துவம் மிக்க கண்டுபிடிப்பான பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான இந்தப் புரட்சிகரச் சித்தாந்தம் பிரதானமாக மார்க்சினது உழைப்பே என்பதால் இது மார்க்சின் பெயரைத் தாங்கி நிற்பது பொருத்தமே என்று எங்கெல்ஸ் அடிக்கடி அழுத்தந் திருத்தமாகக் கூறி வந்தார். தமது வாழ்வின் கடைசியில் எங்கெல்ஸ் எழுதிய **லூத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவ ஞானத்தின் முடிவும்** என்ற நூலில், விஞ்ஞானக் கம்யூனிசத்தை வகுத்தளிப்பதில் மார்க்ஸ் வகித்த பாத்திரத்தையும் தமது பங்கு பற்றியும் பின்வருமாறு எழுதினர்:

''மார்க்சுடன் நாற்பது ஆண்டுகளாகக் கூட்டாக பணி புரிந்த காலத்திலும் சரி, அதற்கு முன்பும் சரி, அத்தத்துவத்தின் அடித்தளங்களை அமைப்பதில், அதைவிடக் குறிப்பாக அத்தத்துவத்தை விவரித்து விளக்குவதில் எனக்கு ஓர் அளவுக்குத் தனிப் பங்கிருந்ததை நான் மறுக்க முடியாது. ஆனல், அதன் தலையாய அடிப்படைக் கோட்பாடுகளில் மிகப் பெரும் பகுதியும் (குறிப்பாக, பொருளாதாரத் துறையையும் வரலாற்றுத் துறையையும் சேர்ந்தவை அவை), எல்லாவற்றிற்கும் மேலாக அவற்றைப் பற்றிய இறுதியான, கூரிய வரையறுப்பும் மார்க்சையே சேரும். நான் ஆற்றிய பணியை ஒரு வேளை இரண்டு மூன்று தனித்துறைகளில் நான் புரிந்த பணி நீங்கலாக—நான் இல்லாமலே மார்க்ஸ் எளிதாகச் செய்திருப்பார். மார்க்ஸ் சாதித்ததை நான் சாதித்திருக்க மாட்டேன். எங்கள் எல்லோரையும் விட மார்க்ஸ் உயரே நின்றூர், வெகு தொலைவிற்குப் பார்த்தார், மேலும் விரிவான, விரைவான பார்வை பெற்றிருந்தார். மார்க்ஸ் ஒரு மேதை; நாங்கள் எல்லோரும், அதிக பட்சமாகச் சொன்

ஞல் திறமைசாலிகளே. அவரில்லாமல் இந்தத் தத்துவம் இன்றிருப்பது போல் இவ்வளவு தூரம் வந்திருக்காது. எனவே, அது அவருடைய பெயரைத் தாங்கி இருப்பது சரியே.''*

*1848-1849*ஆம் ஆண்டுகளில் நடந்த புரட்சிகர நிகழ்ச்சிகள்தான் மார்க்சியத்திற்குச் சரித்திரம் வழங்கிய முதல் பரிசோதனை ஆகும்.

---

* பிரெடெரிக் எங்கெல்ஸ், லூத்விக் ஃபாயர்பாகும் மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும், மாஸ்கோ, *1977*, பக்கம் *62*.

5

1848-1849 புரட்சியில் எங்கெல்ஸ்

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை வெளிவந்த நேரத்தில் தான் ஐரோப்பாவில் பெரும் புரட்சிகர நிகழ்ச்சிகள் நடந்தேறின.

1848 ஜனவரியில் சிசிலியில் எழுச்சி வெடித்தது. பிப்ரவரி 23-24ல், ''வங்கிக்காரர்களின் அரசர்'' என்று சொல்லப்பட்ட லுயீ பிலிப்பினுடைய ராணுவத்தை வீரஞ்செறிந்த தடையரண் போராட்டத்தின் மூலம் குட்டிமுதலாளிகள் ஆதரவுடன் பிரெஞ்சுத் தொழிலாளர்கள் முறியடித்து, அதன் விளைவாக அப்போது அமைக்கப் பெற்ற தற்காலிக அரசாங்கத்தை பிரெஞ்சுக் குடியரசு எனப் பிரகடனப்படுத்தும்படி நிர்ப்பந்தித்தார்கள். பிப்ரவரி கடைசியிலும் மார்ச்சு தொடக்கத்திலும், பிரான்சுக்கு அருகே இருந்த மேற்கு, தெற்கு ஜெர்மனி (பாதென், வியூர்தென்பர்க், பவாரியா, சக்சோனியா) அரசுகளைப் புரட்சித் தீ நாக்குகள் எட்டிப் பிடித்தன. அப்பொழுதுதான் ''மக்களின் சிறைக்கூடம்'' என்று அழைக்கப்பட்ட, பலதேச அரசான ஆஸ்திரியாவுக்குள்ளிருந்த ஹங்கேரியிலும் புரட்சிகர தேசிய விடுதலை இயக்கம் விரிந்து பரவிற்று. மார்ச்சு மாதம் 13ஆம் நாள் ஆஸ்திரியத் தலைநகரான வியன்னாவிலேயே புரட்சி வேட்டொலி கேட்டது. மார்ச்சு 18ல் இது பிரஷ்யத் தலைநகரான பெர்லினில் நிகழ்ந்தது. இறுதியில் பிரிட்டனில் மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில், சார்ட்டிச இயக்கத்தின் புதிய அலை வீசியது.

முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் சில குறிக்கோள்களே மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் கிளர்ந்து பரந்த புரட்சிப் போராட்டங்களின் உடனடிக் குறிக்கோள்களாக இருந்தன.

எதேச்சாதிகார முடியரசைத் தூக்கியெறிவது, நிலப்பிரபுத்துவ நிலச்சொத்துரிமையை ஒழிப்பது, அன்னிய நுகத்

தளையிலிருந்து மீள்வது, முழுமையான தேசிய ஜன நாயக அரசுகளை நிறுவுவது ஆகியவையே அக்காலத்திய வரலாற்றுப் பணிகளாக இருந்தன. வர்க்கப் போராட்டம் சாதகமான சூழ்நிலையில் நிகழ்ந்தேறுமேயானுல், பலப்பல ஐரோப்பிய நாடுகளில் நிகழும் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியானது பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குக் கட்டியம் கூறுவதாக அமையக் கூடும் என்று மார்க்சிய மூலவர்கள் கருதினர்.

வரலாற்றின் மாபெரும் உந்து சக்தியே புரட்சி என்று கருதிய மார்க்சும் எங்கெல்சும் புரட்சிப் போராட்டங்கள் பற்றிய செய்தியை மிகுந்த மகிழ்ச்சியுடன் கரம் நீட்டி வர வேற்றனர். பொதுமக்களின் உதவிக்கு விரைந்தோடி வரு வது, அவர்கட்கு வர்க்க உணர்வூட்டுவது, அவர்களின் அள வற்ற சூருவளிச் சக்தியை அமைப்பு ரீதியில் ஒருங்கு சேர்ப் பது ஆகியவையே தம் முன்னுள்ள பணி என்று மார்க்சிய மூலவர்கள் கருதினர்.

''1848-49ல் பொதுமக்கள் புரட்சிப் போராட்டத்தில் மார்க்சும் எங்கெல்சும் பங்கெடுத்துக் கொண்ட காலம்தான் அவர்தம் பணிகளிலேயே மையப் புள்ளி ஆகும்''* என்று லெனின் எழுதினுர்.

பிரான்சில் புரட்சி நெருங்கிக் கொண்டிருந்த வேளையில், தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிப் பணி புரிந்தமைக்காக பிரெஞ்சு அரசாங்கத்தால் பாரிசிலிருந்து வெளியேற்றப் பட்ட எங்கெல்ஸ் புரூசெல்சுக்குப் போய்ச் சேர்ந்தார். ஆனுல், எங்கெல்ஸ் அங்கு தங்கியது வெகு சில நாட்களே. பிப்ரவரி புரட்சி பிரான்சில் தொடங்கிய பின் புரட்சிப் போரின் மையத்துக்கு, அதாவது பாரிசுக்கு வந்து சேர்வ தென்று மார்க்சும் எங்கெல்சும் முடிவு செய்தனர். இந்த நோக்கம் நிறைவேறுவதை விரைவு செய்தது பெல்ஜிய அர சாங்கத்தின் செயல். நாட்டின் எல்லையை விட்டு ''24 மணி நேரத்துக்குள்'' வெளியேறுமாறு சொல்லும் அரசாங்க ஆணை மார்ச்சு 3ஆம் நாள் மார்க்சுக்குக் கிடைத்தது. 3ஆம் தேதி இரவே மார்க்சும், பின்னர் அவரது துணைவியாரும் கைது செய்யப்பட்டனர், ஆயினும் சில மணி நேரத்தில் விடுதலை

---

* V. I. Lenin, *Against Boycott;* V. I. Lenin, *Marx-Engels-Marxism*, Moscow 1953, p. 263.

செய்யப்பட்டனர். அன்று மாலை வெளியேறிவிடுமாறு 4ஆம் தேதி கிடைத்த உத்தரவின்படி, குடும்பத்துடன் பாரிசுக்குப் பயணமானார் மார்க்ஸ். மார்க்சை வெளியேற்றியதற்கு எதிராக இயக்கம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு இன்னும் இரண்டு வாரங்கள் புரூசெல்சில் தங்கினார் எங்கெல்ஸ்.

எங்கெல்ஸ் பாரிஸ் வந்து சேருகின்ற வேளையில், பெரும் புரட்சிப் பணி ஒன்றை மார்க்ஸ் துவக்கி வைத்திருந்தார். லண்டன் மத்திய கமிட்டி தனக்கு வழங்கிய அதிகாரங்களைக் கொண்டு கம்யூனிஸ்டுகள் சங்கத்திற்கு ஒரு புதிய மத்திய கமிட்டியை அமைத்தார் மார்க்ஸ். இதன் தலைவராக மார்க்சும், செயலாளராக ஷாப்பெரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். எங்கெல்ஸ் மத்திய கமிட்டியில் ஒருவரானார்.

குடிபெயர்ந்து வந்து பாரிசில் தங்கி இருந்த பல்லாயிரக் கணக்கான ஜெர்மன் தொழிலாளர்களும் அரசியல்வாதிகளும், புரட்சி வேலை மேற்கொள்வதற்கென்று தமது தாய் நாடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தது பற்றிய பிரச்னை தான் புதிய மத்திய கமிட்டிக்கு முன் நின்ற பிரதான பிரச்னையாக இருந்தது. பாரிசில் நிறுவப்பட்டிருந்த ஜெர்மன் ஜனநாயக அமைப்பு என்பது பர்ன்ஸ்தேத் என்ற பத்திரிகையாளர், கெர்வேக் என்ற ஜெர்மன் கவிஞர் ஆகியோரின் தலைமையில், ''ஜெர்மன் பெருஞ்சேனை'' ஒன்றை அமைத்து, ஆயுதங்களுடன் ஜெர்மனிக்குள் ஊடுருவிச் சென்று, அங்கு புரட்சியைத் தூண்டி விடுவதற்கு ஏற்பாடு செய்து வந்தது. இந்தப் ''புரட்சி விளையாட்டை'' மார்க்சும் எங்கெல்சும் கடுமையாகக் கண்டனம் செய்தனர்.

புரட்சியை ''ஏற்றுமதி'' செய்கின்ற இந்த அசட்டுத் துணிச்சலான கருத்துக்குப் பதிலாக, ஜெர்மன் தொழிலாளர்களும் குடிபெயர்ந்தவர்களும் ''ஒவ்வொருவராக'' ஜெர்மனிக்குத் திரும்ப வேண்டும் என்னும் திட்டத்தை மார்க்சும் எங்கெல்சும் முன் வைத்தனர். இந்த வழியில் ஏப்ரல் மாதத் துவக்கம் வரையில் சுமார் 400 ஜெர்மன் தொழிலாளர்களை ஜெர்மனிக்குத் திருப்பி அனுப்ப முடிந்தது. இதில் மிகப் பெரும் பகுதியினர் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர்கள்.

ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் கோரிக்கைகள் என்னும்

மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஆவணத்தை மார்க்சும் எங்கெல்சும் மார்ச்சு இறுதியில் தயாரித்தனர். இதில் ஜெர்மன் புரட்சியில் பாட்டாளி வர்க்க அரசியல் செயல் திட்டம் ஒன்றை வகுத்தளித்தனர். இந்தக் கோரிக்கைகளில் முதன்மையாக இருந்தது, ஜெர்மன் முதலாளித்துவப் புரட்சியில் பிளவுபடாத முழுமையான ஒரு ஜெர்மன் குடியரசு வேண்டுமென்ற கம்யூனிஸ்டுகளின் பிரதான முழக்கமே. முழுமையான ஜனநாயகக் குடியரசு ஒன்று உருவாவதானது சோஷலிசத்திற்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம் எளிதாவதற்கு மிகவும் அவசியமான ஒரு தேவை என்று மார்க்சிய மூலவர்கள் கருதினர். அடுத்து, பின்கண்ட மிக முக்கியமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன: பொது மக்கள் அனைவரையும் ஆயுதபாணிகளாக்குவது; விவசாயிகளை நசுக்கிக் கசக்கி வந்த எல்லாக் கடன்களையும், நிலப்பிரபுத்துவத்தின் கீழ் விவசாயிகள் புரியவேண்டிய சேவைகளையும் நஷ்ட ஈடின்றி அழித்து ஒழிப்பது; நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்வது; தனியார் வங்கிகள் அனைத்தையும் ஒரு அரசு வங்கியாக மாற்றுவது; சுரங்கங்கள், போக்குவரத்து, தகவல் சாதனங்கள் அனைத்தையும் அரசின் கைக்கு மாற்றுவது; அரசிலிருந்து மதஸ்தாபனத்தை அடியோடு பிரிப்பது; வருமானத்திற்கேற்ப தீவிர வரி விதிப்பது; தேசியத் தொழில் பட்டறைகளை நிறுவுவது.

ஜெர்மன் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை, பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு ஒரு முன்னோடியாக மார்க்சும் எங்கெல்சும் கருதியதால் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளில் மாற்றத்திற்கான நடவடிக்கைகள் பலவற்றை அவர்கள் குறித்தார்கள். ''இயக்கத்தின் போக்கில் இவை தாமாகவே அதிகரிக்கும்'' என்றும், உற்பத்தி முறை முழுவதிலும் தீவிரப் புரட்சியை இந்த நடவடிக்கைகள் கொண்டு வரும் என்றும் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் சொல்லப்படுகிறது.

''ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் கோரிக்கைகள்'', கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்திய கமிட்டி உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டு, தனித்தனிக் காகிதங்களில் அச்சிடப்பட்டு, கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையுடன் சேர்த்து ஒரு அரசியல் வழி காட்டியாக இருக்கட்டும் என்று ஜெர்மனிக்குச் செல்லுகின்ற ஜெர்மன் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்

பட்டது. இதே நேரத்தில், தொழிலாளர் அமைப்புக் களையும், சங்கத்தின் கிளைகளையும் ஜெர்மனியில் நிறுவுமாறு, கம்யூனிஸ்டுகள் சங்க உறுப்பினர்களை மார்க்சும் எங்கெல் சும் பணிக்கிறார்கள்.

இத்தகைய பூர்வாங்கப் பணியை எல்லாம் முடித்து விட்டு புரட்சி சூழ்ந்திருக்கும் தமது தாயகத்திற்கு விரைந்து செல்கிறார்கள் மார்க்சும் எங்கெல்சும்.

அவர்கள் ஜெர்மனிக்கு வந்து சேர்ந்த பொழுது, நகரங் களில் தொழிலாளர்களும் குட்டி முதலாளிகளும் கிராமங் களில் விவசாயிகளும் நடத்திய எழுச்சிகள் நிலப்பிரபுத்துவ ஏதேச்சாதிகார முடியரசுக்கு முதல் அடிகளைக் கொடுத்து, சலுகைகள் கொடுக்குமாறு ஜெர்மன் அரசுகளின் அரசாங் கங்களைக் கட்டாயப்படுத்தின. ஆனால், பொது மக்கள் பெற்ற வெற்றிகளின் பலன்களை பெரு முதலாளித்துவ வர்க்கமே அடைந்தது.

ஆட்சியதிகாரத்தை எட்டிப் பிடித்த மிதவாத முதலா ளித்துவ வர்க்கம், தன்னை விரைவில் புரட்சி விரோதிகள் என்று காட்டிக் கொண்டு, மேலும் மேலும் எதிர்ப்புரட்சி யாளர்கள் முகாமுக்குள் போய்ச் சேர்ந்தது. தனது பழைய பகைவர்களான எதேச்சாதிகார முடியரசை, நிலப் பிரபுத் துவ உயர்குடியினரை, அதிகார வர்க்கத்தை தொலைத்துக் கட்ட முடியாமல் இருந்த இவ்வர்க்கம் தனது புதிய பகைவன் என்று பாட்டாளி வர்க்கத்தைப் பார்க்கத் தொடங்கி விட்டது. ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் உண்மை யில் அப்போது எப்படி இருந்ததோ அதைப் பார்த்து அல்லா மல், அது எப்படியாக மாறக் கூடியதாய் இருந்ததோ அதைப் பார்த்தும், ஏற்கெனவே பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கம் எவ்வாறு மாறி இருந்ததோ அதைப் பார்த்தும் பீதியுற்ற ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கம், முடியரசுடனும் நிலம் படைத்த உயர் குலத்தோருடனும் சமரசம் செய்து கொள் வதுதான் தான் உயிர் பிழைப்பதற்கான ஒரே வழி என்று முடிவு கட்டியது.

முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் முதுகில் குத்திக் கொண்டிருந்ததால் எந்த ஒரு இடத்திலும் புரட்சி தீர்மான கரமான வெற்றி அடையவில்லை. உண்மையான ஆட்சியாக இருந்த இராணுவம், போலீஸ், அரசாங்க இயந்திரம் ஆகிய

அனைத்தும் நிலப்பிரபுக்களின் கைகளிலும் அவர்களது முடியரசுகளின் கைகளிலுமே இன்னும் இருந்து வந்தன. இறுதிப் போர் இனிமேல்தான் வர இருந்தது.

மார்க்சும் எங்கெல்சும் ஜெர்மனிக்கு வந்து சேர்ந்த பொழுது அங்கு நிலைமைகள் இப்படித்தான் இருந்தன.

கொலோனுக்குச் செல்லுகின்ற வழியில் மாயின்த்ஸ் நகரில் மார்க்சும் எங்கெல்சும் சில நாட்கள் தங்கினார்கள். இங்கு கம்யூனிஸ்டுகள் சங்க மத்திய கமிட்டி உறுப்பினரான வல்லாவு, மார்க்சின் ஆணைப்படி ஜெர்மனியில் தோன்றியுள்ள தொழிலாளர்களின் குழுக்களையெல்லாம் ஒருங்கு சேர்க்கின்ற மத்திய அமைப்பு நிறுவ முயன்று வந்தார். கொலோன் முன்னேற்றம் அடைந்த ரைன் மாநிலத்தின் பிரதானமான தொழில் நகரமாகவும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பலம் வாய்ந்த கோட்டைகளில் ஒன்றாகவும் விளங்கியது. நெப்போலியனின் சட்டங்கள் அமுலில் இருந்த கொலோன் நகரம், ஒரு பெரிய புரட்சிகரத் தினசரிப் பத்திரிகை வெளியிடும் மார்க்ஸ், எங்கெல்சின் திட்டங்களுக்கு மிக ஏற்ற சூழ்நிலைமைகள் கொண்டதாக இருந்தது.

மார்க்சும் எங்கெல்சும் தீட்டி வைத்திருந்த போர்த்தந்திரங்களும் நடைமுறை உத்திகளும் நிறைந்திருந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மிக முக்கிய அடிப்படைத் தேவையாக விளங்கியது பெரு வீச்சுள்ள புரட்சிகரப் பத்திரிகை ஒன்று நிறுவுவதுதான். முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை முடித்து அதன் இறுதிக்கு இட்டுச் சென்று அதே நேரத்தில், சோஷலிசப் புரட்சிக்குப் பொதுமக்களைத் தயார் செய்வதுதான் அவர்கள் முன் நின்ற பணியாகும்.

இத்தகைய பணியைச் செய்து முடிப்பதற்கு மிக அவசியத் தேவை பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்று இருப்பதே என்று அடிக்கடி அழுத்தந் திருத்தமாகக் கூறிவந்த மார்க்சும் எங்கெல்சும், புரட்சிக்கு முன்னரே இது மாதிரியான கட்சி ஒன்று தொடங்குவதற்கான தயாரிப்பையும், அமைப்பு வேலையையும் மேற்கொண்டிருந்தனர். ஜெர்மனிக்கு வந்தவுடன் கம்யூனிஸ்டுகள் சங்கக் குழுக்களையும் தொழிலாளர் அமைப்புக்களையும் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தப் பணியை அவர்கள் தொடர்ந்தார்கள். ஆனல், அப்போதைய ஜெர்மன் பாட்டாளி வர்க்கம்

தன்னுள்ளே இயந்திரத் தொழில் சார்ந்த உழைப்பாளர் களைக் கொண்டிராமல், கைத்தொழிலாளர்களைக் கொண் டிருந்ததுடன் இன்னும் பலவீனமான நிலையில், ஒருங்கிணைக் கப்படாமல் குட்டி முதலாளித்துவக் கற்பனைகளும் தப்பெண்ணங்களும் நிறைந்ததாய் இருந்தது. பொருளா தார ரீதியில் பின்தங்கிய நிலையிலும், அரசியல் ரீதியில் பிள வுண்டும் கிடந்த ஜெர்மனியில் பெரும் பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்று அமைப்பதற்கான சூழ்நிலைமைகள் அதுவரை இருக்க வில்லை. திடீரென்று வெடித்துக் கிளம்பிய பிரம்மாண்ட மான பொது மக்கள் இயக்கத்திற்குள், நாடு பூராவுமாகச் சிதறுண்டு கிடந்த இருநூறு-முன்னூறு கம்யூனிஸ்டுகள் சங்க உறுப்பினர்கள் கண்ணுக்குத் தட்டுப் படாதவர்களாக இருந்தனர்.

செக்டேரியன் வாதங்கள் அனைத்தையும் அடியோடு நிரா கரித்தவர்களான மார்க்சும் எங்கெல்சும் ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தினரின் அன்றைய தரத்தினைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டி இருந்தது. எனவே, பொதுமக்களிட மிருந்து வெகு தூரத்துக்கு முன்னும், அவர்களிடமிருந்து தனித்துப் போய்விடாமலும் இருக்கும் பொருட்டு, ஜெர்மனி யில் அப்போது பரவிக் கொண்டிருந்த ஜனநாயக இயக்கத் துடன் சேர்ந்து கொள்வது என்றும், அவ்வியக்கத்திலிருந்த இடதுசாரியான, முற்போக்குத் தன்மையுள்ள, உண்மையில் பாட்டாளி வர்க்கப் பகுதியாய் இருந்த பிரிவில் சேர்ந்து செயல்படுவது என்றும் அவர்கள் முடிவு செய்தனர். இத் தகைய சூழ்நிலைகளில், அவர்கள் உருவாக்கி வந்த பத்திரிகை யின் பதாகை ‘‘ஜனநாயகப் பதாகையாக, ஆனால் ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு தனி நிகழ்ச்சிக்கும் முன் வைக்கப் பட்ட விசேஷமான பாட்டாளி வர்க்கத் தன்மையுள்ள ஜன நாயகப் பதாகையாகத்தான் இருக்க முடியும்’’.*

இந்த வழியினைச் செயல்படுத்தும் நோக்கத்துடன், கொலோன் ஜனநாயக் கழகத்திற்குள் மார்க்சும் எங்கெல் சும் சேர்ந்தனர். இதே உத்தியைக் கடைப்பிடிக்குமாறு தமது ஆதரவாளர்கள் அனைவருக்கும் ஆலோசனை கூறினர். ஜன நாயக அமைப்புக்களில் கம்யூனிஸ்டுகள் பங்கெடுத்துக்

---

* Engels, *Marx and "Neue Rheinische Zeitung", (1848-1849)*; K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II, Moscow, 1955, p. 329.

கொள்ளும் பொழுது, தமது சொந்த அரசியல் நிலையை அவர்கள் காத்துக் கொள்வதும், குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் ஊசலாட்டங்களையும் முரண்பாடுகளை யும் விமர்சனம் செய்வதும் மிகவும் அவசியமாகும். ஜனநா யக அமைப்புகளில் பணியாற்றும் போதே தொழிலாளர் அமைப்புகளிலும் கம்யூனிஸ்டுகள் பணியாற்றுவது பாட்டாளி வர்க்கக் கட்சியை உருவாக்குவதற்கான தயாரிப்புப் பணி களுக்கு மிக முக்கியம் என்று மார்க்சும் எங்கெல்சும் கருதி னர். கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அரசி யல் வழிகாட்டியாக, மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கி வந்த பத்திரிகை விளங்க வேண்டியதாயிற்று. பத்திரிகையை வெளியிடுவதற்கான தயாரிப்பு வேலைகளில் வெகு தீவிரமாக இறங்கி இருந்தனர் மார்க்சும் எங்கெல்சும். இதில் மிகப் பெரும் சிக்கலாக இருந்தது பணமின்மைதான். எனவே, பத் திரிகை வெளியிடுவதற்குப் பங்குதாரர்கள் சேர்க்க வேண் டிய கட்டாயம் ஏற்பட்டது.

இறுதியில், *1848* ஜூன் *1*ஆம் நாள் **புதிய ரைன் பத்திரி கையின்** (*Neue Rheinische Zeitung*) முதல் இதழ் **ஜனநாயகப் பத்திரிகை** என்ற முத்திரையுடன் வெளி வந்தது. மார்க்சைத் தலைவராகக் கொண்ட இப்பத்திரிகையின் ஆசிரியர் குழு வில் ஹெ. பியூர்கெர்ஸ், ஏ. துரோன்கே, பி. எங்கெல்ஸ், கி. வேயெர்த்து, பெ. வோல்ஃப், வி. வோல்ஃப் ஆகியோர் இருந்தனர்.

''ஜனநாயகப் பத்திரிகையாக'' பிரசுரமாகி வந்த **புதிய ரைன் பத்திரிகை**, உண்மையில் ''புரட்சிகரப் பாட்டாளி வர்க் கத்தின் சிறந்த ஒப்புயர்வற்ற பத்திரிகையாக'' இருந்தது **(லெனின்)**.

புரட்சிகரப் பாட்டாளி வர்க்க நிலையினைச் செயல்படுத் திய ஒரே ஒரு பத்திரிகையாக இருந்து, *1848-49* வர்க்கப் போராட்டக் காலத்தில் திடீர் திடீரென்று தோன்றும் சிக்கல் மிகுந்த சூழ்நிலைமைகளில் மிகச் சரியான பாதை யினைத் தொழிலாளி வர்க்கத்திற்குக் காட்டி வந்தது என்ப தால் மட்டும் இப்பத்திரிகை புகழ் வாய்ந்தது என்று சொல் லப்படுவதில்லை. சிறப்பு மிக்க ஆற்றலுடனும், ஒப்புயர்வற்ற இலக்கிய வல்லமையுடனும், பளபளப்புடனும் நகைச்சுவை யுடனும் மிளிரும் தமது கட்டுரைகளில் வியப்பு மிக்க

திறமைசால் தொலை நோக்கினையும், புரட்சிகர உத்வேகத்தையும் தாங்கி வந்தது என்பதாலும் இப்பத்திரிகை சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஏனெனில், பத்திரிகை மகத்தான மேதை மார்க்சின் தலைமையில் நடந்தது. கம்யூனிஸ்டுகள் சங்கப் போராட்டத் தலைமையகத்தை, அளவற்ற திறமைசாலிகளின் முழுமையான குழு ஒன்றை, தம்மைச் சுற்றி அவர் சேர்த்திருந்தார். அவர்கள் மத்தியில் விவாதத்துக்கு இடமின்றி முதன்மை பெற்றிருந்தார் எங்கெல்ஸ்.

''இப்பத்திரிகையினது ஆசிரியர் குழுவின் விதிகள் உண்மையில் மார்க்சுக்குச் சர்வாதிகாரத்தையே வழங்கின. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வெளிவர வேண்டிய தினசரிப் பத்திரிகை வேறு எந்த அமைப்பிலும் தனது சொந்த வழியை முரணின்றிச் செயல்படுத்த முடியாது. மேலும் இங்கு மார்க்சினுடைய சர்வாதிகாரம் எங்களுக்குச் சொல்லாமலே விளங்கக் கூடியதாய் தடையற்ற ஒன்ருய் இருந்தது. நாங்கள் ஆர்வத்துடன் இதனை ஏற்றுக் கொண்டோம். அவருடைய ஊடுருவிப் பார்க்கும் தன்மையும், திட்டவட்டமான வழியும் தான், அந்தப் புரட்சிக் காலத்தில் ஜெர்மன் பத்திரிகைகளிலேயே மிகப் புகழ் வாழ்ந்ததாய் இப்பத்திரிகை விளங்குவதற்கு முதன்மையான காரணமாகும்''* என்று பின்னர் எங்கெல்ஸ் நினைவு கூர்ந்தார்.

பத்திரிகையின் ஆசிரியராயிருந்த மார்க்ஸ் ஆரம்ப காலத்தில் அதில் எழுதியது ஒப்பீட்டளவில் குறைவே. பொதுவான அரசியலில் வழிகாட்டும் வேலையில் அவர் ஈடுபட்டிருந்தார். நிறுவன ரீதியான வேலைப் பளுவின் பிரதான பகுதி அவர் தோள்களில்தான் விழுந்திருந்தது. புதிய ரைன் பத்திரிகைக்கான அரசியல் கட்டுரைகளில் கணிசமான பகுதியை எங்கெல்ஸ்தான் எழுதி வந்தார். பேனு முனையின் வேகம், லாவகம், பத்திரிகைத் துறைத் திறமை ஆகியவற்ருல் வேறு யாராலும் மாற்றப்பட முடியாதவராய் அவர் விளங்கினர். மற்ற துறைகளைப் போலவே மார்க்சும் எங்கெல்சும் இங்கும் ஒருவரை ஒருவர் நிறைவு செய்தனர்.

---

* Engels, *Marx and "Neue Rheinische Zeitung" (1848-1849)*; K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II. Moscow 1955, pp. 330-331.

ஒரு புரட்சி வீரருக்கு உரிய ஆற்றல் அனைத்தையும் எங்கெல்ஸ் பத்திரிகை வேலையிலேயே ஈடுபடுத்தினார். ''அது ஒரு புரட்சிகர காலமாக இருந்தது. இத்தகைய நேரத்தில் தினசரிப் பத்திரிகையில் பணியாற்றுவது அளவற்ற மகிழ்ச்சியைத் தந்தது. நம் கண்ணுக்கு முன்னால் நமது ஒவ்வொரு வார்த்தையும் செயல்படுவதைப் பார்க்கிறோம். இக்கட்டுரைகள் எறிகுண்டுகளைப் போல எவ்வாறு தாக்குகின்றன, ஏவி விடப்பட்ட வெடி குண்டுகளைப் போல எவ்வாறு வெடித்துச் சிதறுகின்றன என்பதைக் கண்கூடாக நாம் பார்க்கிறோம்''* என்று பின்னர் நினைவு கூர்ந்தார் எங்கெல்ஸ். இக்குண்டுகள் யாவும் கூரிய கண்களால், திறமை வாய்ந்த கைகளால் எறியப்பட்டு குறித்த இலக்கிலே தப்பாமல் பாய்ந்தன.

மார்ச்சு மாதப் போராட்டங்களுடன் புரட்சி முடிந்து விட்டது என்றும் அதன் விளைவுகளை அறுவடை செய்ய வேண்டியதுதான் பாக்கி என்றும் சொல்கிற, விரிவாகப் பரவி இருந்த மாயைகளுக்கு எதிராக ஈவிரக்கமின்றிப் போர் தொடுப்பதே தனது பிரதானமான, முக்கியமான கடமை என்று **புதிய ரைன் பத்திரிகை** கருதியது.

மார்க்சும் எங்கெல்சும் இத்தகைய மாயைகளை எதிர்த்துப் போராடும் பொழுது, முதலாளித்துவப் புரட்சியின் நோக்கங்கள் ஒன்றைக் கூட நிறைவேற்றாமல், புரட்சிகர மக்களைக் கண்டு அஞ்சி நடுங்கியபடி, பிற்போக்குடன் சேர்ந்து கொண்டு, ஒரு பாதுகாப்பு, தாக்குதல் கூட்டணி அமைத்திருந்த பெரு முதலாளித்துவத்தின் காட்டிக் கொடுக்கும் கயமைத்தனத்தை அம்பலப்படுத்தினர்.

மார்க்ஸ், எங்கெல்ஸ், வில்கெல்ம் வோல்ஃப் ஆகியோரின் பேனா முனைகளிலிருந்து வந்த **புதிய ரைன் பத்திரிகைக்** கட்டுரைகள் விவசாயிகளுக்குத் துரோகம் புரிந்த பெரு முதலாளிகளுக்குச் சாட்டையடி கொடுக்கின்றன. கிராமங்களிலிருந்த நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துக் கட்டுவதற்கு முதலாளித்துவம் தனது சுட்டு விரலைக் கூட அசைக்கவில்லை, மாறாக, மார்ச்சு மாதப் போராட்டத்தில் திடீர் தாக்குதல் மூலமாக விவசாயிகள் பெற்றிருந்த சலுகைகளை எல்லாம்

---

* Engels, *Farewell Letter to the Readers of the "Sozialdemokrat" Newspaper;* K. Marx and F. Engels, *Works*, Russ. ed., Vol. VI, p. 127.

வெட்டிப் பறிப்பதற்கு தன்னாலான அனைத்தையும் செய்தது அது.

தமது சொத்துரிமைக்கு ஆபத்து வருகிறதோ என்ற பயத்தில் நிலப்பிரபுத்துவத்தின் சொத்துரிமையை தமது நெஞ்சினுல் தாங்கிப் பிடித்தது முதலாளித்துவ வர்க்கம். விவசாயிகளின் நலன்களுக்காகப் போராடுகின்ற பணியினை மேற்கொண்ட புதிய ரைன் பத்திரிகை நிலப்பிரபுக்கள் இலவசமாகப் பெற்று வந்த சேவைகளை நஷ்ட ஈடின்றி ரத்து செய்வதற்கும் நிலப்பிரபுக்களின் நிலவுடைமையை ஒழித்துக் கட்டுவதற்கும் போராடியது. இவ்வாறாக, புரட்சியின் போக்கில் தொழிலாளி வர்க்கத் தலைமையின் கீழ் பாட்டாளி வர்க்கத்தையும், விவசாயி வர்க்கத்தையும் கொண்ட கூட்டணிக்கான அடிப்படைகள் உருவாயின.

கிண்டல், கேலி ஆயுதத்தைத் திறமையுடன் கையாண்ட எங்கெல்ஸ், அப்போது கூட்டப்பட்ட ஜெர்மன் பிரதிநிதித்துவ சபைகளை எள்ளி நகையாடி, இவை உண்மையான புரட்சிகர நடவடிக்கைகளுக்குப் பதிலாக வாய்ச் சவடால்களையும், கோழைத்தனமான உதவாக்கரைத் தீர்மானங்களையும் முன் வைக்கின்றன என்று கேலி செய்தார். குறிப்பாக, பொது ஜெர்மன் தேசிய சபையைப் பற்றிக் குறிப்பிடும் போது, பிற்போக்கு அரசாங்கங்கள், ''நிகழ்ச்சி நிரலுக்கிடையே குத்தீட்டியைப் பாய்ச்சி இருக்கும்'' போது, மிகச் சிறந்த நிகழ்ச்சி நிரலையும் மிகச் சிறந்த அரசியல் சட்டத்தையும் பற்றி முடிவற்று விவாதித்துக் கொண்டிருக்கிறது புகழ்பெற்ற ''ஃபிரான்க்ஃபர்ட் அரட்டைக் கச்சேரி'' என்று சுட்டிக் காட்டினர் எங்கெல்ஸ்.

பெர்லின், ஃபிரான்க்ஃபர்ட் தேசிய சபைகளில் அங்கம் வகித்து, குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளால் வருவாக்கப்பட்ட ''இடதுசாரிப் பிரிவினரின்'' நடத்தையை அவர்களது ஒவ்வொரு எட்டிலும் கவனித்து வந்த எங்கெல்ஸ், முடிவற்ற ஊசலாட்டங்களாலும், புரட்சிகர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறமையின்மையாலும் பிற்போக்கின் தாக்குதலை எளிதாக்கி விட்ட மனிதர்களின் கோழைத்தனமான நிலையைக் கண்டனம் செய்தார்.

குட்டி முதலாளித்துவ ஜனநாயகத் தலைவர்களுக்கு மாறாக, நிலப்பிரபுத்துவப் பிற்போக்குக்கும் முதலாளித்துவ

எதிர்ப்புரட்சிக்கும் எதிராக ஈவிரக்கமின்றிப் போராடுமாறு மார்க்சும் எங்கெல்சும் மக்களுக்கு அறைகூவல் விடுத்தனர்.

மக்களின் புரட்சிகர சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவது தான் புரட்சியை வெற்றிகரமாகப் பரப்புவதற்குத் தேவை யான மிக முக்கிய அடிப்படை ஆகும் என்று மார்க்சிய மூல வர்கள் கருதினர். ''புரட்சிக்குப் பிந்தைய எந்த ஒரு தற் காலிக அரசின் அமைப்பும் ஒரு சர்வாதிகாரமாக, ஆற்றல் மிகு சர்வாதிகாரமாக இருந்தாக வேண்டும்''* என்று **புதிய ரைன் பத்திரிகை** கோடிட்டுக் காட்டியது.

பிற்போக்குச் சக்திகளின் பாதுகாப்பு அரணாக விளங்கு கின்ற, பழைய உயர்குடி—அதிகார வர்க்கத்தினரின் அரசு இயந்திரத்தை ஒதுக்கித் தள்ளிப் புரட்சிகர அரசினை நிர்மா ணிப்பது மக்களின் புரட்சிகர சர்வாதிகாரத்தின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும் என்று **புதிய ரைன் பத்திரிகை** கண் டது.

புரட்சிகரச் சக்திகள் எந்த அளவுக்கு விரிந்து பரவுகின் றன என்ற கோணத்திலிருந்து அயல் நாட்டுக் கொள்கை, சர்வதேச உறவுகள் ஆகிய பிரச்னைகளையும் அணுகியது **புதிய ரைன் பத்திரிகை.**

ஜெர்மன் ஜனநாயகத்துக்கு மட்டுமின்றி ஐரோப்பிய ஜனநாயகத்துக்கும் உகந்த வேலைத்திட்டத்தை வரைந்து தந்த **புதிய ரைன் பத்திரிகை,** ஒடுக்கப்பட்டுள்ள மக்கள் அனைவருக்கும் ஆதரவாகவும், ஐரோப்பாவில் உள்ள மூன்று ஆபத்தான புரட்சியின் எதிரிகளுக்கு—ஜாரின் ருஷ்யா, எதிர்ப்புரட்சி முதலாளித்துவ இங்கிலாந்து, நிலப்பிரபுக் களான ஜங்கெர்கள் நிறைந்த பிற்போக்குப் பிரஷ்யா ஆகிய வற்றுக்கு—எதிராகவும் புரட்சிகரப் போராட்டம் நடத்து வதற்கு ஒன்று சேருமாறும் எல்லா ஐரோப்பிய ஜனநாயக வாதிகளையும் அறைகூவி அழைத்தது. அப்போதைய ஐரோப் பியப் பிற்போக்கின் முக்கிய கோட்டையாக விளங்கிய ஜாரிசத்திற்கு எதிராகப் புரட்சிப் போர் தொடுக்க வரு மாறு ஐரோப்பிய மக்களை அது அழைத்தது.

பிற்போக்குப் பிரஷ்யாவிற்கும், ஆஸ்திரியாவிற்கும் எதிராக மட்டுமின்றி ருஷ்யாவின் ஜாரிசத்துக்கும் எதிராக

---

* Marx, *Crisis and Counter-Revolution;* K. Marx and F. Engels, *Works,* Russ. ed., Vol. VI, p. 444.

நடந்த தாக்குதலாக இருந்ததால் ஐரோப்பிய ஜனநாயகம் அனைத்துக்குமே முதல் தர முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்த போலந்து தேசிய விடுதலை இயக்கத்திற்கு மார்க்சும் எங்கெல்சும் நல்கி வந்த தீவிர ஆதரவையும் விசேஷ அனுதாபத்தையும் இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

1848-49 புரட்சிக் காலத்து சூழ்நிலைமைகளில் பாட்டாளி வர்க்கத்தினது தேசியக் கொள்கையின் கோட்பாடுபூர்வமான அடிப்படைகளையும் அதன் திட்டவட்டமான வடிவங்களையும், தமது பல கட்டுரைகளில் ஒளியூட்டிக் காட்டினுர் எங்கெல்ஸ். ஜெர்மானிய நுகத்தடியின் கீழ் சிக்கி அவதிப்பட்டுக் கொண்டிருந்த பெருந் தொகையினரான ஹங்கேரியர்கள், இத்தாலியர்கள், பல்வேறு ஸ்லாவ் இன மக்கள் ஆகியோரது தேசியப் போராட்டத்தின் வர்க்கச் சாரத்தையும், அதன் உந்து சக்திகளையும், குண நலன்களையும் பற்றிப் பகுப்பாய்வு தந்தார் எங்கெல்ஸ்.

மற்ற மக்களை ஒடுக்கிச் சுரண்டும் ஜெர்மனியின் பழைய ஒடுக்குமுறைக் கொள்கை தொடர்ந்து வருவதை, ஜெர்மானிய முதலாளித்துவத்தின் துரோகத்தை ஒரு புரட்சிகர சர்வதேசியவாதியின் ஆர்வத்துடனும், வல்லமையுடனும் எங்கெல்ஸ் அம்பலப்படுத்துகிருர்.

ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் தேசிய இனங்களை விடுதலை செய்ய வேண்டியது புரட்சியின் நலன்களுக்கு மிகமிக அவசியமாகும் என்றும், நிலப்பிரபுத்துவ எதேச்சாதிகார ஒழுங்குமுறைக்கு ஒரு பலத்த அடி கொடுப்பதாக இது அமையும் என்றும், பொதுவான புரட்சிப் போராட்டத்துக்கு ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களை கவர்ந்திழுப்பதற்கு இது ஒரு வல்லமை மிக்க சாதனமாக விளங்கும் என்றும் எங்கெல்ஸ் கோடிட்டுக் காட்டினுர். தேசிய ஒடுக்குமுறையினை தீவிரமாய் ஒழித்துக்கட்டுவதன் மூலம் ஜெர்மனியின் முந்தைய ஒடுக்குமுறை கொள்கைக்குப் பிராயச்சித்தம் தேடுவதோடு மட்டுமல்லாமல், ஒரு சுதந்திரமான ஜனநாயக தேசமாக ஜெர்மானிய மக்கள் எதிர்காலத்தில் வளர்ச்சியுறுவதற்கு ஒரு அத்தியாவசியத் தேவையாகவும் இது விளங்கும் என்று எங்கெல்ஸ் கருதினுர். ''எந்த அளவுக்கு அண்டை நாட்டு மக்களுக்கு ஜெர்மனி சுதந்திரம் வழங்குகிறதோ, அந்த அளவுக்குத்தான் ஜெர்மனியும் சுதந்திர நாடாக மலரும்.''

மார்க்சையும் எங்கெல்சையும் பொறுத்த வரை தேசியப் பிரச்னே என்பது தனித்து நிற்கிற, தன்னுள்ளேயே அடங்கிப் போகும் ஒரு பிரச்னே அல்ல. புரட்சியின் நலன்கள் என்ற கண்ணேக்கிலேயே இதனே அவர்கள் பார்த்தனர். எனவே தான், பல்வேறு மக்களின் தேசிய இயக்கங்களைப் பற்றி அவர்கள் வேறுவேறு மதிப்பீடுகள் செய்தனர். 1848-49ல் நிலவிய திட்டவட்டமான சூழ்நிலைமைகளில் போலந்துக் காரர்களும், ஹங்கேரியர்களும் நடத்திய தேசிய விடுதலை இயக்கங்களைத் தீர்மானகரமாக ஆதரித்தனர் மார்க்சும் எங் கெல்சும். அதே போலத்தான் ஆஸ்திரிய அடிமைத்தனத்தை எதிர்த்துப் பிராக் நகரில் கிளர்ந்து வெடித்துத் தோன்றிய செக்காரர்களின் எழுச்சியையும் அவர்கள் வரவேற்றனர். ஆனல், ஆஸ்திரியப் பேரரசுக்குள்ளிருந்த செக் மற்றும் ஸ்லாவ் இன மக்களை ஜெர்மனி, ஹங்கேரிய ஜனநாயக இயக் கங்களுக்கு எதிராக ஏவி விட்டு அம்மக்களின் தேசியப் போராட்டங்களைத் தமது பிற்போக்கு நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள ருஷ்ய ஜாரிசமும் காப்ஸ்பர்க் முடி யரசும் முனேந்த பொழுது, இத்தேசிய இயக்கங்கள் பற்றிய தமது கருத்துக்களை மார்க்சும் எங்கெல்சும் மாற்றிக் கொண் டனர். புரட்சியைப் பலவீனப்படுத்தி, பிற்போக்கை வலுப் படுத்துகின்ற ஒரு அம்சம் என்று இக்காலகட்டத்தில் ஆஸ் திரிய ஸ்லாவ் இன மக்கள் நடத்திக் கொண்டிருந்த தேசிய இயக்கத்தைச் சரியாகவும் கச்சிதமாகவும் மதிப்பீடு செய்த எங்கெல்ஸ், ஹங்கேரியில் புரட்சிகரப் போராட்டம், ஜன நாயக ஸ்லாவ் வாதம் என்னும் தமது கட்டுரைகளிலும், ஜெர்மனியில் புரட்சியும், எதிர்ப்புரட்சியும் என்னும் தமது பிந்தைய நூலிலும், ஆஸ்திரிய ஸ்லாவ் இன மக்கள் சுதந் திரமான தேசிய வளர்ச்சி அடைய முடியுமா என்பது குறித்து ஐயம் தெரிவித்தார். ஆனல், மத்தியத்துவப்படுத்துதல், பெரிய அரசுகள் அமைத்தல் ஆகிய போக்குகளுடன், தேசிய இயக்கங்களை விழிப்படையச் செய்து, தேசிய ஒடுக்கு முறை யிலிருந்து அவை விடுதலை அடைவதற்கான உத்வேகம் தந்து சுதந்திரமான தேசிய அரசுகள் அமைப்பதற்கு சிறிய தொகையினரான தேசிய இனங்களுக்கு ஊக்கம் தந்தது வளர்ந்து வரும் முதலாளித்துவம் என்று வரலாறு காட்டி யது. எங்கெல்ஸ் தமது கணிப்பினே வெளியிடுகையில், மிக

முக்கியமான ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்: ''ஸ்லாவ் இன மக்கள் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் ஏதாவது ஒரு கட்டத்தில் புதிய புரட்சி வரலாறு ஒன்று துவக்குவார்களேயானால் அதன் மூலம் தமது உயிராற்றலைக் காட்டுவார்கள்.'' ஆஸ்திரிய ஸ்லாவ் இன மக்களின் எதிர்காலத் தலைவிதியைப் பற்றிய இந்தக் கணிப்பினையே சரித்திரம் சரியென்று காட்டியது.

எல்லாப் பிற்போக்குச் சக்திகளுக்கும் எதிராக களைப் பற்ற, கடுமையான, ஆர்வம் மிக்க போராட்டம் நடத்திவந்த மார்க்சும் எங்கெல்சும், பாட்டாளி வர்க்கம், விவசாயிகள், ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்கள் அனைவரின் புரட்சிகர ஆற்றலை வெளிக் கொணரவும், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை நடத்தி முடிப்பதற்கு மக்கள் திரளை ஒன்று சேர்ப்பதற்கும், இதன் மூலம் அடுத்த போராட்டமான சோஷலிசப் புரட்சிக்கு அனுகூலமான சூழ்நிலைமைகளைத் தோன்றுவிக்கவும் முயன்றார்கள்.

ஜெர்மனியின் புரட்சிப் போக்கினை, மற்ற ஐரோப்பிய நாடுகளில் நடந்து வந்த புரட்சிப் போராட்டத்துடன், முதன்மையாக பிரெஞ்சுப் புரட்சிப் போராட்டத்துடன் நெருங்கிய உறவுள்ளதாகவே **புதிய ரைன் பத்திரிகை** கண்டது. பத்திரிகைக் கட்டுரைகள் பலவற்றின் மூலமாக, குறிப்பாக எங்கெல்ஸ் எழுதிய கட்டுரைகளின் மூலம், பிரிட்டிஷ், பெல்ஜிய, இத்தாலிய, ஸ்விட்சர்லாந்திய, வேறு நாட்டு ஜனநாயகவாதிகளின் போராட்டத்தைப் பத்திரிகை ஆதரித்தது. ஜெர்மானிய ஜனநாயகவாதிகளின் பத்திரிகை என்று மட்டுமல்லாமல் ஐரோப்பிய ஜனநாயகவாதிகள் அனைவரின் பத்திரிகையுமாகத் தன்னைப் **புதிய ரைன் பத்திரிகை** சரியாகவே அழைத்துக் கொண்டது.

சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒற்றுமை எனும் கருத்தைப் பிரசாரம் செய்து கொண்டு, ஜெர்மன் தொழிலாளர்களை அயல் நாட்டுச் சோதரத் தொழிலாளி வர்க்க அனுபவத்தின் மூலம் வளர்த்தபடி பிரிட்டனிலும் மற்ற நாடுகளிலும் உள்ள தொழிலாளி வர்க்கப் போராட்டத்தைப் பற்றி மிகுந்த கவனம் செலுத்தியது இப்பத்திரிகை.

மார்க்ஸ், எங்கெல்சின் புரட்சிப் பணியில் **புதிய ரைன் பத்திரிகை** மிகப் பெரும் இடம் வகிக்கிறது. ஜனநாயக இயக்

கத்தினது பாட்டாளி வர்க்கப் பிரிவின் கிளர்ச்சி, பிரசாரம், அமைப்பு வேலை ஆகியவற்றிற்கு ஒரு பிரம்மாண்டமான ஆயுதமாக இப்பத்திரிகையை அவர்கள் பயன்படுத்தினர். ''எந்தவொரு ஜெர்மன் பத்திரிகையும், முன்னராகட்டும் பின்னராகட்டும் **புதிய ரைன் பத்திரிகை** (*Neue Rheinische Zeitung*) போல் அவ்வளவு சக்தி வாய்ந்ததாயும், செல்வாக்கு மிக்கதாயும் பாட்டாளி வர்க்க மக்கள் திரளின் மீது மின்னொளி பாய்ச்சி அவர்களை உந்தித் தள்ளியதாக இருக்கவில்லை''* என்று முழு உரிமையுடன் எங்கெல்ஸ் பின்பு எழுதினார்.

முந்தைய கம்யூனிஸ்டுகள் சங்க மத்திய கமிட்டியின் வேலையை மேற்கொண்ட **புதிய ரைன் பத்திரிகையின்** ஆசிரியர் குழு, சங்கத்தின் உறுப்பினர்களைப் பத்திரிகையின் மூலமாகச் செயலுக்குள் ஈடுபடுத்தியது. சங்க உறுப்பினர்கள் நாடு முழுவதும் பரவிச் சென்று ஜனநாயக இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டு, ஜெர்மனியில் உருவாகி இருந்த தொழிலாளர் அமைப்புகள் பலவற்றுக்குத் தலைமை தாங்கினர்.

புதிய ரைன் பத்திரிகையைச் சுற்றிப் பாட்டாளி வர்க்கத்தினரை ஒன்று கூட்டுவதற்கும், பரவலான ஜனநாயக ஐக்கிய முன்னணி ஒன்று அமைப்பதற்கும், தொழிலாளி வர்க்க இயக்கத்தில் காணப்பட்ட வலதுசாரி, ''இடதுசாரி'' வடிவத்தில் இருந்த குட்டி முதலாளித்துவ, சந்தர்ப்பவாதச் சக்திகள் தடங்கல்கள் ஏற்படுத்தின.

கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினராய் இருந்தவரும், பெர்லினில் தொழிலாளிகளின் மத்திய கமிட்டியை நிறுவியவரும், பின்னர் ''தொழிலாளர்கள் சகோதரத்துவம்'' என்ற பெயரில் அனைத்து ஜெர்மன் தொழிலாளர்கள் நிறுவனம் ஒன்று ஏற்படுத்தியவருமான ஸ்தேஃபன் போர்ன் என்பவர் வலதுசாரிச் சந்தர்ப்பவாதத்தின் ஒரு பிரதிநிதியாக இருந்தார். பின்தங்கிய பாட்டாளிகளையும், கைத்தொழிலாளர்களையும் தம்மோடு சேர்த்துக் கொண்டு அவர்களது கவனத்தைப் பிரதானமாக பொருளாதாரப் போராட்டத்திலும், நடை முறைச் சில்லரைக் கோரிக்கைகள் சிலவற்றின்

---

* Engels, *Marx and "Neue Rheinische Zeitung" (1848-1849)*; K. Marx and F. Engels, *Selected Works*, Moscow 1955. Vol. II, pp. 335-336.

மீதும் ஏவி விட்டு, ஜெர்மன் மக்களின் முன் நின்ற பொது வான அரசியல் பிரச்னைகளிலிருந்து அவர்களது கவனத்தைத் திசை திருப்பி, ஜெர்மானியப் பாட்டாளி வர்க்கம் அரசியல் வளர்ச்சி பெறுவதற்குத் தடையாய் இருந்தார் இந்த போர்ன். மார்க்சிய மூலவர்களுக்கும் ஸ்தேஃபன் போர்னுக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் குறித்து மதிப்பீடு செய்யும் பொழுது, 1848ஆம் வருட ஜெர்மனியில் தொழி லாளி வர்க்க இயக்கத்தில் இருந்த இரு போக்குகளில் ஒன்று போர்ன் போக்கு (இது நமது ''பொருளாதாரவாதிகள்'' போக்கு போன்றது), மற்றது மார்க்சியப் போக்கு''* என்று லெனின் எழுதினார்.

கொலோன் தொழிலாளர் சங்கத்தின் தலைவராய் இருந்த அந்திரேயஸ் கோத்ஷால்க் என்பவரும் சந்தர்ப்பவாதப் போக்கின் பிரதிநிதியாக இருந்தார். இவர் போர்னைப் போலல்லாமல் தமது சந்தர்ப்பவாதத்தை ''இடதுசாரிச்'' சொற்றொடர்களால் மூடி மறைக்க விரும்பினர். வெயித்லிங் செல்வாக்கின் கீழும் ''உண்மையான சோஷலிசச்'' செல்வாக் கின் கீழும் இருந்த கோத்ஷால்க் அப்போதைய புரட்சி முத லாளித்துவ ஜனநாயகத் தன்மையுள்ளது என்பதை ஒத்துக் கொள்ளாமல், ''தொழிலாளர் குடியரசுக்கான'' உடனடிப் போராட்டம் தேவை என்னும் ''இடதுசாரிக்'' கோஷத்தை அபத்தமாக முன்வைத்து, பொது ஜனநாயக இயக்கத்தில் தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொள்வதை ''சந்தர்ப்பவா தம்'' என்று கூறி, விவசாய மக்களுடன் கூட்டுச்சேர வேண் டும் என்பதையும் நிராகரித்தார். செக்டேரியன் போக்கும் ''இடது சாரிச்'' சொற்றுடரில் இருந்த ஈடுபாடும், மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட'' ''சட்டபூர்வ'' போராட்ட முறை களைப் பற்றிய பிரசாரத்துடன் விசித்திரமாக கோத்ஷால்கி டம் இணைந்திருந்தன.

கொலோன் தொழிலாளர் சங்கத்திலிருந்த மார்க்ஸ், எங் கெல்ஸ் ஆதரவாளர்கள் கோத்ஷால்கின் சந்தர்ப்பவாத வழியை எதிர்த்துத் தீவிரமாகப் போராடினர். பொதுவான ஜனநாயக முகாமைப் பிளவுபடுத்தி, தாக்குதல் தொடுத்

---

* V. I. Lenin, *Two Tactics of Social-Democrats in Democratic Revolution;* V. I. Lenin, *Selected Works*, Vol. I, Part 2, Moscow 1952, p. 150.

திருந்த எதிர்ப்புரட்சிக்கு முன்னுல் இந்த முகாமை பலவீனப் படுத்தியதால் இச்சந்தர்ப்பவாத வழி ஆபத்தானதாய் இருந் தது. 1848ஆம் ஆண்டு ஜூலையில் சங்கத்தின் தலைவராக யோசிப் மோலும் பின்னர் அக்டோபரில் தற்காலிகமாக மார்க்சும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு சங்கத்தின் அரசியல் வழிமுறை மாற்றம் அடைந்தது. தலைமை மாறியதானது சங்கத்தின் நடவடிக்கைகளிலும் விரைவில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. தொழிலாளர்கள் மத்தியில் மட்டுமின்றி அண்மையில் உள்ள விவசாயிகள் மத்தியிலும் ராணுவப் பிரிவினரிடையிலும் பிரசார வேலையையும் நிறுவனரீதியான பணிகளையும் முடுக்கி விட்டது சங்கம்.

தொழிலாளர் சங்கத்தைத் தவிர கொலோன் ஜனநாயகக் கழகமும் மார்க்ஸ், எங்கெல்சின் அரசியல் பணிகளின், அமைப்பு ரீதியான பணிகளின் களமாக இருந்தன. குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளை முன் நடத்திச் செல்லவும், அவர்களது தவறுகளையும், வெறும் கனவுகளையும் கண்டிக்கவும் பொதுமக்களைத் தம்பால் கவரவும் மார்க்சும் எங்கெல்சும் இக்கழகத்தில் உறுப்பினர் ஆயினர். எதிர்ப் புரட்சி தாக்குதல் தொடங்கிய பொழுதும், தீர்மானமான சமர்கள் நெருங்கிக் கொண்டிருந்த பொழுதும் மார்க்ஸ், எங்கெல்சின் இந்த விமர்சனம் மேலும் மேலும் கூர்மையானது.

1848 ஜூன் நாட்களில் பாரிஸ் பாட்டாளி வர்க்கம் அடைந்த படுதோல்விதான் ஐரோப்பா முழுவதும் எதிர்ப் புரட்சி தனது தாக்குதலைத் துவக்குவதற்குப் பச்சை விளக்குக் காட்டியது. ஆயுதந் தாங்கிய எழுச்சிக்கு தொழிலாளிகளை உந்தித் தள்ளிய முதலாளித்துவ வர்க்கம், தொழிலாளர்கள் நடத்திய வீரஞ்செறிந்த நான்கு நாள் தடையரண் போராட்டத்திற்குப் பின் எழுச்சியைக் குருதியில் மூழ்கடித்தது. கிளர்ச்சியைத் தேய்த்து நசுக்கிய ஜெனரல் கவென்யாக்கின் துருப்புக்களுக்கு புகழ்மாலைகள் சூட்டிய உலகனைத்தும் இருந்த முதலாளித்துவப் பத்திரிகைகள், தோற்கடிக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் மீது சேறும் சகதியுமாக அவதூறுகளை அள்ளிச் சொரிந்தன. இந்த நாட்களில்தான், சிறப்பு மிக்க வல்லமையுடனும் ஒளி நிறைந்த தெளிவுடனும் தனது உண்மையான புரட்சிகரப் பாட்டாளி வர்க்கப் பண்பினை உலகறியப் பறைசாற்றியது **புதிய ரைன் பத்திரிகை.**

பாரிஸ் தெருக்களின் தடையரண்களுக்குப் பின்னுல் ஒலித்த முதல் வேட்டுக் கேட்டவுடனேயே கிளர்ந்தெழுந்தவர்களின் அருகில் நின்று தீர்மானமாகக் குரல் கொடுத்தது **புதிய ரைன் பத்திரிகை.** வெற்றி கொள்ளப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் வீரஞ் செறிந்த பதாகையை உயரே தூக்கிப் பிடித்த பத்திரிகை ஜெர்மனியில், அனேகமாக ஐரோப்பா முழுவதிலுமே, இந்தப் **புதிய ரைன் பத்திரிகை** ஒன்றே ஒன்றுதான்.

ஜூன் எழுச்சி குறித்து எங்கெல்ஸ் சில கட்டுரைகள் எழுதினுர். ராணுவ சம்பந்தப்பட்ட பிரச்னைகளில் அவர் எழுதிய முதல் கட்டுரைகள் இவையே. பின்னர், ராணுவ விவகாரங்களைப் பயில்வதில் வியக்கத்தக்க வெற்றிகளைக் கண்டார் எங்கெல்ஸ். ராணுவ சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பயிலும் பொழுது ஆயுதந் தாங்கிய எழுச்சி பற்றிய பிரச்னைகளைத்தான் முதலில் எங்கெல்ஸ் கற்கத் தொடங்கினுர் என்பது விசேஷமானதாகும்.

ஜூன் எழுச்சி பற்றிய தமது கட்டுரைகளில், எழுச்சியாளர்களின் துணிச்சல் மிக்க வீரத்தையும், தயாரிப்பு ஏதுமின்றி திடீரென்று அவர்கள் ஒருங்கு சேர்ந்ததையும், ஆயுதபாணிகள் ஒரேமனத்தினராய்ப் போர் புரிந்ததையும் பற்றி மனக்கிளர்ச்சி கொள்கிருர் எங்கெல்ஸ். தொழிலாளர்களின் ராணுவ நடவடிக்கைச் செயல்திட்டத்தை விமர்சனக் கண் கொண்டு ஆய்வு செய்கையில், ஆயுதப் போராட்டத்தை அதன் ஒவ்வொரு அடியிலும் ராணுவ நோக்கில் கூர்ந்து பார்த்து பின்கண்ட முடிவுகளுக்கு எங்கெல்ஸ் வந்தார்: ‘‘தம்மை விட நான்கு மடங்கு எண்ணிக்கையில் கூடியிருந்த ராணுவத்திற்கு எதிராக 40,000 பாரிஸ் தொழிலாளர்கள் இத்தகைய வல்லமையுடன் போராட முடியுமானுல், பாரிஸ் தொழிலாளி மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே மனத்தினராய் இணைந்து செயல்பட்டால் என்னவெல்லாம் அவர்கள் சாதிக்க முடியும்!’’*

பாரிஸ் பாட்டாளி வர்க்கம் தோல்வி கண்ட பின்பு, ஐரோப்பா முழுவதும் எதிர்ப்புரட்சி தலை தூக்கியது. ஜெர்மனியில் எதிர்ப் புரட்சி மூலம் ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஏற்பாடு

---

* Marx-Engels, *Gesamtausgabe*, Erste Abteilung, Band 7, S. 118.

நடந்து வருகிறது என்று புதிய ரைன் பத்திரிகை பொதுமக்களை எச்சரித்தது. ஜனநாயக, தொழிலாளி வர்க்க இயக்கங்களுடன் உள்ள தொடர்பினை வலுப்படுத்திக் கொள்வதற்காகவும், புதிய ரைன் பத்திரிகை பாரிஸ் தொழிலாளர்களின் எழுச்சியை ஆதரித்ததின் காரணமாக அதன் பங்குதாரர்கள் வெளியேறி விட்டதால் நிதியற்றிருந்த பத்திரிகைக்கு நிதி சேர்ப்பதற்காகவும், ஆகஸ்டு இறுதியில் பெர்லின், வியன்னு ஆகிய தலை நகரங்களுக்கு மார்க்ஸ் விஜயம் செய்யப் புறப்பட்ட பொழுது, பத்திரிகையின் பிரதான ஆசிரியர் பணி எங்கெல்சின் தோள்களில் வீழ்ந்தது.

எதிர்ப்புரட்சி தனது தாக்குதலைத் தொடுத்ததால், எதிர்ப்புரட்சிக்கு எதிரான போராட்டத்திற்கு பொதுமக்களை ஒன்று சேர்க்கும் பணிக்கும் அவர் தலைமை தாங்க வேண்டி இருந்தது. புதிய ரைன் பத்திரிகையினுல் கொலோனில் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டம் ஒன்றில் செப்டம்பர் 13ஆம் நாள் எங்கெல்ஸ் பேசினுர். பெர்லின் தேசியச் சபையைப் பலாத்காரமாக கலைத்துவிட அரசாங்கம் முயன்று வருவதற்குக் கீழ்ப் படியாமல் இருக்குமாறும், இந்த முயற்சியை ஆயுதப் போராட்டம் மூலம் எதிர்த்து நிற்குமாறும் அச்சபையைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் எங்கெல்சின் ஆலோசனையினுல் இந்தக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்கூட்டத்திலேயே கொலோன் நகரில் பாதுகாப்புக் கமிட்டி ஒன்று நிறுவ வேண்டும் என்ற வி. வோல்ஃபின் யோசனையை எங்கெல்ஸ் ஆதரித்தார். பொதுமக்களின் புரட்சி நிறுவனமாக இருக்க வேண்டிய இந்தக் கமிட்டிக்கு மார்க்சும் எங்கெல்சும் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நான்கு தினங்கள் கழித்து ரைன் நதிக்கரை கிராமமான வோரின்கேனுக்கு அருகில், புதிய ரைன் பத்திரிகை ஆசிரியர் குழுவாலும், கொலோன் தொழிலாளர் சங்கத்தாலும் ஏற்பாடு செய்யப்பட்ட, பல்லாயிரக் கணக்கான தொழிலாளிகளும் விவசாயிகளும் கலந்து கொண்ட பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்தின் செயலாளராக எங்கெல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். செப்டம்பர் 13ல் கொலோன் நகரக் கூட்டம் பெர்லின் தேசிய சபைக்கு விடுத்த அறைகூவலை ஏற்றுக் கொண்டு கொலோன் பாதுகாப்புப் கமிட்டியை அங்கீகாரம் செய்

வதென்று இந்தக் கூட்டம் முடிவு செய்தது. பிரஷ்யாவுடன் தகராறு வருமேயானல், ஜெர்மன் மக்களின் தேசிய நலன்களைக் காப்பதற்காகத் தம்மிடமுள்ள சக்தியனைத்தையும் பிரயோகிக்குமாறு ஃபிரான்க்ஃபர்ட் அனைத்து ஜெர்மன் சபையை, எங்கெல்ஸ் ஆலோசனையின் பேரில், இக்கூட்டம் கேட்டுக்கொண்டது. ''ஜனநாயக-சமூக, சிவப்புக் குடியரசு'' என்னும் போராட்ட முழக்கத்தோடு எங்கெல்ஸ் இக்கூட்டத்தில் பேசினர். கூட்டத் தீர்மானத்தில் இந்த முழக்கமும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இதற்கிடையில், ஃபிரான்க்ஃபர்ட் தேசிய சபை டென்மார்க்குடன் மல்மியோ நகரில் செய்து கொண்ட சமரசத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் ஷ்லேஸ்விக் தேசிய இயக்கத்திற்கு துரோகம் புரிந்தது. ஃபிரான்க்ஃபர்ட் தேசிய சபையின் துரோகத்தைப் பற்றிய செய்தியும், ஃபிரான்க்ஃபர்ட் நகரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமுள்ள தொழிலாளர்களும் விவசாயிகளும் இத்துரோகத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்ததைப் பற்றிய செய்தியும் ஒரே நேரத்தில் கொலோன் நகருக்கு வந்து சேர்ந்தன. இந்த எழுச்சி வெற்றி அடைவதற்கான வாய்ப்புக்கள் வெகு குறைவே என்று சூழ்நிலைகளை மிக விழிப்புடன் ஆய்வு செய்து முடிவுக்கு வந்த போதிலும், இந்த எழுச்சியை உடனடியாக ஆதரித்தது **புதிய ரைன் பத்திரிகை.** கொலோன் பாதுகாப்புக் கமிட்டி, தொழிலாளர் சங்கம், ஜனநாயகக் கழகம் ஆகியவை மார்க்ஸ், எங்கெல்சின் செல்வாக்குக்கு உட்பட்டு செப்டம்பர் 20ஆம் நாள் கொலோன் நகரில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தன. தடையரண் போர் வீரர்களுடன் முழுமையாக ஒன்றுபடுவோம் என்று இந்தக் கூட்டம் முழங்கியது.

புதிய ரைன் பத்திரிகை தொலை நோக்குடன் கணித்தபடி ஃபிரான்க்ஃபர்ட் எழுச்சி நசுக்கப்பட்டு விட்டது. இந்த எழுச்சியின் விளைவுகளைப் பற்றி பத்திரிகை எழுதுகையில்:

''...ஒழுங்கமைக்கப்படாத, ஆயுதங்களற்ற மக்களுக்கு எதிராக, நன்ருக ஒழுங்கமைக்கப்பட்ட, பெருமளவு ஆயுதந் தாங்கிய சமுதாயத்தின் மற்ற வர்க்கங்கள் அனைத்தும் நிற்கின்றன. இதன் காரணமாகத்தான் மக்கள் இது வரை தோல்

விகளே கண்டு வருகின்றனர்...''* ஆனால், பொதுமக்கள் இறுதி நடவடிக்கையில் இன்னும் இறங்கவில்லை. எதிர்ப்புரட்சியின் மீது தீர்மானமான தாக்குதல் தொடுக்குமாறு பொது மக்களை அறைகூவி அழைத்தது **புதிய ரைன் பத்திரிகை.**

புதிய ரைன் பத்திரிகை வெளியிடப்பட்டு வந்ததும், மார்க்ஸ், எங்கெல்ஸ் தலைமையில் பணியாற்றிய கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் தலைமையகம் இருந்ததுமான பிரதான நகரத்தைக் கொண்டிருந்த ரைன் மாநிலத்தில் பொதுமக்கள் இயக்கம் வலுப்பெற்றுப் பெருகி வந்ததைக் கண்டு பிரஷ்ய அரசாங்கம் மிகவும் கவலை கொண்டது. ரைன் மாநிலத்திற்கு பிரம்மாண்டமான அளவில் இராணுவத்தை அனுப்பி வைத்து, பொதுமக்களுக்கு ஆத்திரமூட்டிக் குருதிப் பேயாட்டம் ஆடுவதற்குத் தனக்கு வசதியான ஒரு சந்தர்ப்பத்தை அரசாங்கம் எதிர்நோக்கி நின்றது. காலங் கனியாத, தயாரிப்புச் செய்யாத எழுச்சியைக் கிளப்பி விடுவதற்கு எதிராக பொது மக்களை விடாமல் எச்சரித்து வந்தது **புதிய ரைன் பத்திரிகை.** செப்டம்பர் 25ஆம் நாள், கொலோன் தொழிலாளர் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களான ஷாப்பெரும் பேக்கரும், எரிச்சலூட்டும் எண்ணத்துடன் கைது செய்யப்பட்டனர். தொழிலாளர் சங்கத்தின் பிரபலமான தலைவர்களில் ஒருவரான யோசிப் மோல் கைதாவதற்கான ஆபத்தும் தென்பட்டது. மோலைக் கைது செய்வதற்கு இடம் கொடுப்பதில்லை என்று முடிவு கட்டிய தொழிலாளர்கள், நெருங்கி வரும் பிரஷ்ய ராணுவத்திற்கு எதிராகத் தடையரண்களை எழுப்பத் தொடங்கினர்கள். தனிமைப்படுத்தப்பட்ட அகால எழுச்சியில் அடியெடுத்து வைக்காமல் இருக்குமாறு பொது மக்களை இழுத்துப் பிடிப்பதற்குள் மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் அவர்களின் ஆதரவாளர்கட்கும் பெரும் பாடாய்ப் போய்விட்டது.

ஆத்திரமூட்டல் முயற்சியில் தோல்வியுற்ற அரசாங்கம், செப்டம்பர் 26ல் கொலோன் நகரத்தில் நெருக்கடி நிலையை அறிவித்து, குடிமக்கள் படைப்பிரிவினரிடமிருந்து ஆயுதங்களைப் பறித்துவிட்டு, தொழிலாளர் நிறுவனங்களையும் ஜனநாயக அமைப்புகளையும் பத்திரிகைகளையும் இழுத்து மூடியது.

---

* Engels, *An Uprising in Frankfurt;* Marx-Engels, *Gesamtausgabe,* Erste Abteilung, Band 7, S. 374.

புதிய ரைன் பத்திரிகையும் தடை செய்யப்பட்டது என்பது சொல்லாமலே விளங்கும். இதே நேரத்தில் இப்பத்திரிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர்கள் சிலரையும், குறிப்பாக, ரைன் மாநிலத்தில் செப்டம்பர் மாதம் நடந்த பொதுமக்கள் இயக்கத்திற்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவராகவும், அதன் தலைவர்களில் ஒருவராகவும் இருந்து தீவிரமாகச் செயல்பட்ட எங்கெல்சையும் கைது செய்யுமாறு அரசாங்கம் உத்திரவிட்டது.

புரட்சி கொந்தளித்துக் கொண்டிருக்கிற வேளையில் ராணுவ வெறி கொண்டதான பிரஷ்யச் சிறையில் சிக்கி நிற்காதிருக்குப் பொருட்டு, எங்கெல்சும் பத்திரிகை ஆசிரியர்களான துரோன்கேயும் இரு வோல்ஃப்களும் பார்மென் நகரில் தலைமறைவாய் வாழுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். இங்கு தமது தாயையும் தந்தையையும் சந்தித்தார் எங்கெல்ஸ். பெற்றோர்கள் எங்கெல்சிடம் பெருங் கோபம் கொண்டார்கள். புரட்சிப் பணிகளில் தமது மகன் ஈடுபட்டதால் பெரும் கோப வெறி கொண்டிருந்த எங்கெல்சின் தந்தை இவ்வாறு நடந்து கொண்டதில் வியப்பேதுமில்லை. துரோன்கேயுடன் கிளம்பி புருசெல்ஸ் வந்து சேர்ந்தார் எங்கெல்ஸ். உள்ளூர் போலீஸ் இதையறிந்தவுடன் அவர்களைக் கைது செய்து பின்னர் நாட்டை விட்டே வெளியேற்றியது.

எதிர்ப்புரட்சி மகிழ்ச்சிக் கூத்தாடிக் கொண்டிருந்த பாரிஸ் நகரத்தைக் கண்ட எங்கெல்ஸ் ஆழ்ந்த மனவேதனை அடைந்தார். 1848 பிப்ரவரி மாதப் புரட்சிக்குப் பிந்தைய பாரிசையும், 1848 அக்டோபர் மாதப் பாரிசையும் ஒப்பிட்டு, பாரிசிலிருந்து பேர்னுக்கு என்ற தமது பிரயாணக் குறிப்புக்களில் எங்கெல்ஸ் எழுதினார்: அன்றைய பாரிசுக்கும் இன்றைய பாரிசுக்கும் இடையே மே 15ஆம் நாளும், ஜூன் 25ஆம் நாளும் இருந்து மறைந்தன. இது வரை உலகம் கண்டிராத கொடுமை நிறைந்த போராட்டம் நிகழ்ந்தேறியது. அதைத் தொடர்ந்து குருதிக்கடலையும், பதினைந்தாயிரம் சவங்களையும் இவ்வுலகம் கண்டது....

''இறந்து கிடக்கும் இந்தப் பாரிசில் இனியும் நான் இருக்க முடியவில்லை. இங்கிருந்து வெளியேறியே தீர வேண்டி இருந்தது. எங்கே போவது என்பது பற்றிக் கவலை இல்லை. முதற்கண் நான் ஸ்விட்சர்லாந்து நோக்கிக் கிளம்பினேன்.

காசோ கையிலே கொஞ்சம்தான் இருந்தது. எனவே கால் நடையாகக் கடுகி நடந்தேன்....''*

பாரிசிலிருந்து தெற்கு பிரான்ஸ் வழியாக ஸ்விட்சர்லாந்து போய்ச் சேருவதற்கு எங்கெல்சுக்கு இரண்டு வாரங்கள் பிடித்தன. ஜெனீவா வழியாக லோசான் வந்து, மார்க்சிடமிருந்து அவருக்கு அங்கு பணம் வரவே, பெற்றுக்கொண்டு பேர்னை நோக்கிப் பயணமானுர் எங்கெல்ஸ். இங்குதான் எங்கெல்ஸ் தற்காலிகமாகக் குடியேறினுர்.

போராட்ட இயல்பு படைத்தவரும் புரட்சிப் போராட்டத்திலே நேரடியாகப் பங்கு கொள்ள வேண்டும் என்று ஆவல் ததும்பி நிற்பவருமான எங்கெல்சால் புரட்சிப் புயலிலிருந்து தூர ஒதுங்கி நிற்கும், போலிப் பண்பு ஓங்கி நிற்கும் நாடான ஸ்விட்சர்லாந்தில் தமது கட்டாயக் குடியேற்ற வாழ்வைக் கழிக்க முடியவில்லை. ஸ்விட்சர்லாந்து தொழிலாளர் இயக்கத்தில் அவர் கலந்து கொண்டார். ''பாட்டாளி வர்க்கப் பணியில் பழைய போர்வீரர்'' என்ற அத்தாட்சிப் பத்திரத்துடன் லோசான் தொழிலாளர் சங்கம் எங்கெல்சை அனுப்பி வைக்கவே, 1848 டிசம்பரில் பேர்ன் நகரில் நடந்த தொழிலாளர் காங்கிரசில் ஒரு பிரதிநிதியாக அவர் கலந்து கொண்டார்.

சொந்தப் பொருள்வகைத் தியாகங்கள் பல செய்து மார்க்ஸ் மீண்டும் வெளிக் கொணர்ந்த புதிய ரைன் பத்திரிகைக்கு, அவர் கேட்டுக் கொண்டதின் பேரில் பேர்னிலிருந்து எங்கெல்ஸ் கட்டுரைகள் சில எழுதினுர். ஹங்கேரியில் புரட்சிகரப் போராட்டம் என்ற ஒரு கட்டுரையில், எதிர்ப்புரட்சிக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த ஹங்கேரியர்கள் கடைப்பிடித்த புரட்சிப் போர் முறைகளை உற்சாகத்துடன் வரவேற்ருர்.

ஸ்விட்சர்லாந்தைப் பற்றியும் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினுர் எங்கெல்ஸ். ஜெர்மன் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் கருத்துப்படியான ''மாதிரி அரசில்'' காணப்பட்ட அரசியல் வாழ்க்கையில் குறுகிய மாநிலப் பற்று, மண்டலப் பற்று, போலிப் பண்பாளர்களின் வரை

---

* Engels, *From Paris to Bern;* Marx-Engels, *Gesamtausgabe*, Erste Abteilung Band 7, S. 536.

யறைக்குட்பட்ட வாழ்க்கை ஆகியவை பற்றிக் கேலிச்சித்திரம் வரைந்தார் எங்கெல்ஸ். ஜெர்மன் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் வற்புறுத்தி வந்த, ஸ்விட்சர்லாந்து அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகள் இருந்தது மாதிரியான கூட்டரசுத் திட்டத்துக்கு எதிராக இக்கட்டுரைகள் கருத்து வெளியிட்டன. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நாட்டில்தான் கூட்டரசு அமைப்பு பயனுள்ளதாயிருக்கும் என்று எங்கெல்ஸ் பின்னர் எழுதினர்.

1849 ஜனவரி மத்தியில்தான் ஜெர்மனிக்குத் திரும்பி வரும் வாய்ப்பு எங்கெல்சுக்குக் கிடைத்தது.

கொலோன் நகருக்கு எங்கெல்ஸ் திரும்பி வந்த பொழுது, புரட்சி பெரும் இடர்ப்பாடுகளுக்குள் தவித்தது. எல்லா முனைகளிலும் எதிர்ப்புரட்சி தனது தாக்குதலைத் தொடுத்தது. *1848* அக்டோபர் *31*லேயே, தொழிலாளிகளின் வீரஞ்செறிந்த போராட்டத்திற்குப் பின்னர் புரட்சிகர வியன்னு எதிர்ப் புரட்சியாளர்களிடம் வீழ்ந்தது. இது குறித்து **புதிய ரைன் பத்திரிகை** பின்வருமாறு எழுதியது: ''நாடகத்தின் இரண்டாம் பகுதி வியன்னுவில் நடந்து முடிந்து விட்டது. 'ஜூன் மாத நாட்கள்' என்ற பெயரில் நாடகத்தின் முதல் பகுதி பாரிசில் நடந்தேறியது... இதன் மூன்ரும் பகுதியை பெர்லினில் விரைவில் காண்போம்.''* உண்மையில் இவ்வாறு தான் நடந்தது. ஆஸ்திரிய நிகழ்சிகளால் உற்சாகம் அடைந்த பிரஷ்ய எதிர்ப்புரட்சி மேற்கொண்டும் காத்திருக்கவில்லை. நவம்பர் இரண்டாம் நாள், ஆட்சியை மேற்கொள்ளுமாறு பகிரங்கப் பிற்போக்காளரான பிரான்டென்புர்கை மன்னர் அழைத்தார். நவம்பர் பத்தாம் நாள் ஜெனரல் விராங்கெலின் படைப்பிரிவுகள் பெர்லினுக்குள் நுழைந்தன.

மார்க்ஸ் தலைமையில் இயங்கிய **புதிய ரைன் பத்திரிகை**, எதிர்ப்புரட்சிக்கு எதிராக உறுதியான போராட்டம் என்னும் பதாகையை உயர்த்திப் பிடித்தது, ''வரிவசூலை எல்லாவிதத்திலும் எதிர்ப்பது'', ''பொதுமக்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது'', ''பாதுகாப்புக் கமிட்டிகளை அமைப்பது'' ஆகிய முழக்கங்களை முன்வைத்தது இப்பத்திரிகை. இத்தகையை

---

* Marx, *Victory of Counter-Revolution in Viena;* Marx-Engels, *Gesamtausgabe*, Erste Abteilung, Band 7, S. 423.

நெருக்கடியான காலகட்டத்தில், எத்தகைய தீர்மானகரமான உடனடி நடவடிக்கைகளை பெர்லின் தேசிய சபை, மேற்கொள்ள வேண்டும் என்று எடுத்துக் காட்டியது **புதிய ரைன் பத்திரிகை.** ஜெனரல் விராங்கெலே தேசிய விரோதி என்று பிரகடனம் செய்ய வேண்டும், எதிர்ப்புரட்சிக்கு எதிராக மக்களும் ராணுவமும் ஆயுதந் தாங்கி தீவிரமாய்ப் போராட வேண்டும் என்று அறைகூவல் விடுத்தது பத்திரிகை. ஆனால், கோழைத்தனமான, பலவீனமான பிரஷ்ய தேசிய சபையோ செயலற்ற எதிர்ப்புக் காட்டுமாறும், வரிகொடுக்க வேண்டாம் என்று சொல்வதுடனும் நிறுத்திக் கொண்டது. டிசம்பர் 5 ஆம் நாள் இச்சபை ஒரேயடியாகக் கலைக்கப்பட்டு விட்டது.

பெரு முதலாளிகளின் துரோகம், குட்டி முதலாளித்துவ ஜனநாயகத் தலைவர்களின் தீர்மானமற்ற ஊசலாட்டங்கள், தேசிய சபையின் வெட்கக்கேடான கோழைத்தனம் ஆகியவற்றினால் விளைந்த தவிர்க்க முடியாத விளைவுகள் இவைதாம்.

இப்போது, பாட்டாளி வர்க்கத் தலைவர்கள் மீது பழி தீர்க்க முயன்றது எதிர்ப்புரட்சி. பிப்ரவரி 7ஆம் நாள், ''அரசாங்கத்தை அவமானப்படுத்திய'' குற்றத்திற்காக மார்க்சும் எங்கெல்சும் ஜூரிகளின் முன் நிற்க வேண்டியதாயிற்று. நீதிமன்றத்திலோ, குற்றவாளிகளே குற்றம் சாட்டுபவர்களாக மாறி நின்றனர். ''பித்தலாட்டப் பிற்போக்குக்கு எதிராக, எத்தகைய சிறப்பு மிக்க வல்லமையுடனும், ஆழமிக்க அறிவுடனும் மார்க்சும் எங்கெல்சும் போராடினர் என்பதைக் காணக் கண் கோடி வேண்டும்'' என்று கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவரான லெஸ்னர் இந்த நிகழ்ச்சியைப் பற்றி நினைவு கூர்ந்தார். குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்குத் துணியாத ஜூரிகள் அவர்களை நிரபராதிகள் என்று விடுதலை செய்தனர்.

1849 வசந்தத்தில் ஜெர்மனியின் நிலைமை மிகவும் கூர்மையடைந்து கெடுபிடியாயிற்று. இறுதி அடி கொடுப்பதற்காக எதிர்ப்புரட்சி தனது சக்தியை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டிருந்தது. இடை நிலையிலிருந்தவர்களும், மதில்மேல் பூனையாய் இருந்தவர்களும், தீர்மானமான செயலுக்கு லாயக்கற்றவர்களாயிருந்தவர்களும், இறுதிப் போராட்டத்தி

லிருந்து ஒதுங்கி நின்று மக்களை ஒன்று சேர்க்கும் முயற்சிகளை எதிர்த்து வந்ததால் குறிப்பாக இந்த நேரத்தில் மிகவும் ஆபத்தானவர்களாக இருந்தனர். நெருங்கி வரும் போராட்டங்களுக்கான தலைமை, பெருமளவில் இருந்த ஜெர்மன் குட்டி முதலாளிகளின் பிரதிநிதிகளது கைகளுக்குள் போய் விடுவதற்கான வாய்ப்புகள் வேறு பயமுறுத்தின. எனவே, **புதிய ரைன் பத்திரிகையின்** முதல் இதழிலிருந்தே, குட்டி முதலாளித்துவ ஜனநாயகத் தலைவர்களது ஊசலாட்டங்களையும், தொடை நடுங்கித் தனத்தையும், வெறுங் கனவுகளையும் கடுமையாகத் தாக்கி அம்பலப்படுத்தி வந்த மார்க்சும் எங்கெல்சும், இப்பொழுது தமது விமர்சனங்களை இன்னும் தீவிரமாக்கி இவர்களின் செல்வாக்கிலிருந்து பொதுமக்களை மீட்பதற்கு முயன்று வந்தனர்.

1849 ஏப்ரல் நடுவில், குட்டி முதலாளித்துவ ஜனநாயகத்துடன் தமக்குள்ள உறவுகளை மார்க்சும் எங்கெல்சும் அவர் தம் ஆதரவாளர்களும் நிறுவன ரீதியில் வெட்டிக் கொண்டனர். அவர்கள் தலைமையில் இயங்கிய கொலோன் தொழிலாளர் சங்கம் ஜனநாயகக் கழகத்திலிருந்து அதே போல் விலகிக் கொண்டது. தொழிலாளி மக்கள் அடைந்த அரசியல் அனுபவம், முன்னேற்றமடைந்த தொழிலாளர்கள் குட்டி முதலாளித்துவ ஜனநாயகத்திடம் அடைந்த ஏமாற்றம், தொழிலாளர் சங்கங்கள் அமைக்க வேண்டும் என்ற அவர்களின் ஆர்வம் இவையனைத்தும் பெரிய பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றை நிறுவுவது அவசியம் என்னும் பிரச்னையை முன்வைக்க உதவின. பாட்டாளி வர்க்கத்திடையே ஒற்றுமை ஓங்கச் செய்வதற்கு மார்க்சும் எங்கெல்சும் இன்னும் தீவிரமாக முயன்றார்கள். ரைன் மாநிலத்திலும் வெஸ்ட்பாலியாவிலும் இருந்த தொழிலாளர் அமைப்புகளை எல்லாம் ஒன்று சேர்க்கும் ஒரு மையமாக கொலோன் தொழிலாளர் சங்கத்தை உருமாற்றவும், பின்னர் அதையே அனைத்து ஜெர்மன் தொழிலாளர் அமைப்புக்களது கூட்டின் உறுதியான மையமாக மாற்றுவதற்கும் அவர்கள் முயற்சி செய்தனர். ஜெர்மனி முழுவதிலும் சிதறிக் கிடந்த கம்யூனிஸ்டுகள் சங்க உறுப்பினர்களுடன் தொடர்புகளை வலுப்படுத்தி பொதுமக்கள் மத்தியில் உற்சாகமிக்க பணிகளை மேற்கொள்ளுவதற்கு அவர்களைப் பயிற்றுவித்தனர்.

கூலியுழைப்பும் மூலதனமும் என்ற நூல், பாட்டாளி வர்க்கம் கட்சி அமைப்பதற்கான சித்தாந்தத் தயாரிப்புப் பணிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று மார்க்சும் எங்கெல்சும் கருதினர். ஏப்ரல் மாதம் பத்திரிகையில் இந்த நூல் பிரசுரமாகத் தொடங்கியது; இது கொலோன் தொழிலாளர் சங்கத்தில் விவாதிக்கப்பட்டு இச்சங்கத்தின் வேண்டுகோளின்படி மற்ற தொழிலாளர் கழகங்களில் விவாதத்திற்கு உள்ளகத் தொடங்கியது.

இறுதிச் சமர்கள் நெருங்கி வரவரப் புதிய ரைன் பத்திரிகையின் குரல் மேலும் மேலும் உயர்ந்து உத்வேகத்துடன் ஒலித்தது. பேருக்கு ஜனநாயகப் பத்திரிகையாக இருந்து வந்த புதிய ரைன் பத்திரிகை உண்மையான பாட்டாளி வர்க்கப் பண்புடன் பகிரங்கமாகவும் திட்டவட்டமாகவும் ஓங்கிக் குரல் கொடுத்தது. பத்திரிகையின் ஒவ்வொரு இதழிலும் இறுதித் தாக்குதலுக்குத் தயாராகுங்கள் என்ற முழக்கமே ஒலித்தது.

இந்த இறுக்கம் நிறைந்த சூழலில் ஃபிரான்க்ஃபர்ட் நாடாளுமன்றம் கூட, தனது நாடாளுமன்ற மாதிரியில் செயல்படும்படி நிர்பந்திக்கப்பட்டது. புரட்சிப் போராட்டத்தினைத் துணிவுடன் தொடுக்கும்படி பொதுமக்களுக்குத் தீர்மானமான அறைகூவல் விடுப்பதற்குப் பதிலாக ''பேரரசு அரசியல் சட்டம்'' ஒன்றினைத் தீட்டுகின்ற வேலையில் அவசர அவசரமாக ஈடுபட்டது இது. இந்த ''மாபெரும் படைப்பு'' குடிமக்கள் உரிமைகள் பற்றிய பிரகடனத்துடனும் தேர்தல் அமைப்பு பற்றிய பேரரசுச் சட்டத்துடனும் 1849 மார்ச்சில் தயாரானது. ஆனால், ஒரு ''சிறு சங்கடம்'' முளைத்தது: உண்மையில், முழுமையான அரசு என்ற ஒன்று இல்லாத பொழுது, வெறும் காகிதத்தில் மட்டும் உருவாக்கப்பட்ட ஜெர்மன் பேரரசின் தலைவராய் இருந்த, ஃபிரான்க்ஃபர்ட் நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரஷ்ய மன்னரோ, மற்ற ஜெர்மன் அரசாங்கங்களோ இந்தப் பேரரசு அரசியல் சட்டத்தினை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டன. ஃபிரான்க்ஃபர்ட்டுக்கு அருகே பிரஷ்யப் படைப் பிரிவுகள் குவியத் தொடங்கின. தோன்றிவிட்ட தகராறு ஆயுத பலத்தின் மூலமே தீர்க்கப்படப் போகிறது என்று தெளிவாகத் தெரிந்தது.

பிரஷ்யாவிலும் ஆஸ்திரியாவிலும் எதிர்ப்புரட்சி வெற்றி பெற்ற பின், புரட்சி தந்த ''பலன்களின்'' இறுதி மிச்சம் இந்தப் பேரரசு அரசியல் சட்டத்தில் இருக்கிறது என்று நம்பிய குட்டி முதலாளிகள் பெருமளவில் இதனை ஆதரித்துக் கிளர்ந்து எழுந்தனர். வரிச் சுமைகளாலும் நிலப்பிரபுத்துவத்துக்குப் புரிந்து வந்த இலவச சேவைகளாலும் அழுந்திக் கிடந்த விவசாயிகள் இவர்களுடன் சேர்ந்து கொண்டனர். தொழிலாளி வர்க்கமும் போர்க் களத்தில் குதித்தது என்பது தான் இதில் மிகவும் பிரதானமானதாகும்.

மே மாதத் துவக்கத்தில் மேற்கு, தெற்கு ஜெர்மனியில்—சக்சோனியா, ரைன் மாநிலம், வெஸ்ட்பாலியா, ஃபால்ஸ், பாதென் ஆகியவற்றில்—எழுச்சி கொழுந்து விட்டு எரிந்தது. எல்லா இடங்களிலும் எழுச்சிக்குக் குட்டி முதலாளித்துவ வர்க்கமே தலைமை தாங்கியது.

கிளர்தெழுந்துள்ள பொதுமக்களுக்கு உதவி செய்வதற்காகவும், உணர்வுபூர்வமான குறிக்கோள் ஒன்றினை அவர்கள் கைகளிலே கொடுக்கவும், போராட்டத்திற்கு அமைப்பு ரீதியில் உதவி புரிவதற்கும் மார்க்சும் எங்கெல்சும் முயன்றனர்.

ஆயுதந் தாங்கிய எழுச்சிக்குத் திட்டம் வகுத்துத் தருகின்ற வரலாற்றுப் பணியை எங்கெல்ஸ் நிறைவேற்றினர். எழுச்சியை ஒரு கலை எனப் பாவிக்கின்ற மார்க்சிய அணுகல் முறைக்கு திட்டவட்டமான முதல் முன்மாதிரியாகத் திகழ்ந்தது இது.

பொதுமக்களின் புரட்சிகர ஆற்றலை மிகவுயர்ந்த அளவுக்குப் பிரயோகிப்பது, எழுச்சியின் மையப்படுத்தப்பட்ட உறுதியான தலைமை, துணிச்சல், துரிதமான நடவடிக்கை—இவை தான் ஆயுதந் தாங்கிய எழுச்சிக்கான எங்கெல்ஸ் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். ஐரோப்பியப் புரட்சியின் பொதுவான எதிர்காலத்துடனும், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளில் புரட்சியின் புதிய வளர்ச்சியுடனும், ஹங்கேரியில் நடந்த புரட்சிப் போராட்டத்துடனும் தமது ஆயுதந் தாங்கிய எழுச்சி பற்றிய திட்டத்தை இணைத்தார் எங்கெல்ஸ். 1849 வசந்தகாலத்து ஆயுதந் தாங்கிய போராட்டம் பற்றிய எங்கெல்சின் திட்டம் முழுவதும், அச்சமற்ற துணிச்சலோடு வகுக்கப்பட்டதுடன், அரசியல், போர்த்தந்திரம், ராணுவ நுணுக்கச் சூழல்கள் ஆகிய அனைத்தையும் நிதானமாகக் கணக்கில் எடுத்துக்கொண்டே தீட்டப் பட்டதாகும்.

மே 9—10ல் ரைன் மாநிலத்தின் மார்க்கோ-பேர்கிஸ்க் தொழில் வட்டாரத்தில் வெடித்துக் கிளம்பியது ஆயுதந் தாங்கிய எழுச்சி. எல்பெர்பெல்து, ஜோலிங்கேன், காகென், இசெர்லோன் ஆகிய மையங்களையும் தழுவிக் கொண்டிருந்தது இந்த எழுச்சி.

எழுச்சியைப் பற்றிய செய்தி கிட்டியவுடன் வலது கரையிலிருந்த எழுச்சிப் பகுதிகளுக்கு உதவி செய்யும் திட்டம் ஒன்றை உடனடியாக வரைந்தார் எங்கெல்ஸ்.

தமது நண்பர்களுக்கும் போர்த் துணைவர்களுக்கும் இத்திட்டத்தைத் தெரிவித்து விட்டு பேனுவிற்கு பதிலாக ஆயுதந் தாங்கி, மே பத்தாம் தேதி, தமது பிறந்தகமான உப்பெர்தலில் உள்ள எல்பெர்பெல்துக்குப் பயணமானார் எங்கெல்ஸ்.

எல்பெர்பெல்துக்கு வந்து சேர்ந்த எங்கெல்ஸ், மிகப் பெரும் குழப்பம் நிறைந்த, காணச் சகிக்காத காட்சியைக் கண்டார். இயக்கத்திற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த குட்டி முதலாளித்துவப் பாதுகாப்புக் கமிட்டி, மிகமிக அத்தியாவசியமான, துடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வகையற்றுக் குழம்பிப் போய்க் கிடந்தது. ஆயுதந் தாங்கிய சில நூறு தொழிலாளர்களின் உதவியுடன் தீவிரமான போராட்ட நடவடிக்கைகளைத் தொடங்கி வைத்தார் எங்கெல்ஸ். தடையரண்கள் கட்டுவதைக் கண்காணிக்கும் பணியினைப் பாதுகாப்புக் கமிட்டியிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொண்ட எங்கெல்ஸ், விசேஷ இஞ்சினீயர் கம்பெனி ஒன்று அமைத்துத் தடையரண்களைக் கட்டி முடித்து, ஏற்கெனவே தயாராயிருந்த தடையரண்களில் சிலவற்றை மாற்றி அமைத்து, தொழிலாளர்களுக்கு ஆயுதம் வழங்கும் பணியை மேற்கொண்டு, தடையரண்களின் மீது போர் வீரர்களையும் பீரங்கிகளையும் பிறவற்றையும் நிறுத்தி வைத்தார்.

அண்மையில் உள்ள பிரதேசங்களில் எழுச்சியைப் பரவச் செய்வதற்கும் மார்க்கோ-பேர்கிஸ்க் வட்டாரத்தின் பாதுகாப்பைத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்வதற்கும் எங்கெல்சின் அடுத்த திட்டங்கள் வகை செய்தன.

இக்காலகட்டத்தில் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளுடன் ஐக்கியக் கூட்டணி அவசியம் என்பதால், விசேஷமான தொழிலாளி வர்க்க, சோஷலிசக் கோரிக்கைகள்

எதையும் எங்கெல்ஸ் முன்வைக்கவில்லை. இருந்த போதிலும், **புதிய ரைன் பத்திரிகையின்** ஆசிரியர்களில் ஒருவரான எங்கெல்ஸ் அங்கு வந்து சேர்ந்து விட்ட விஷயமே, எல்பெர்பெல்து முதலாளித்துவ வர்க்கத்தினரைப் பீதி கொள்ளச் செய்தது. இவர்கள் கொணர்ந்த நிர்ப்பந்தம் காரணமாக மே 14ல் பாதுகாப்புக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தில், எங்கெல்சினுடைய சேவைகளுக்குப் புகழ்மாலை சூடிவிட்டு, ''எங்கெல்ஸ் இங்கு இருப்பது இயக்கத்தில் தன்மை பற்றித் தவருன எண்ணங்களை ஏற்படுத்தும்'' என்றும், எனவே எல்பெர்பெல்திலிருந்து அவர் வெளியேறிவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது. இத்தீர்மானத்தால் தொழிலாளர்கள் பெரிதும் ஆத்திரம் அடைத்தனர். எங்கெல்ஸ் அங்கேயே இருக்க வேண்டும் என்று கோரி, ''தமது உயிரைக் கொடுத்தும் அவரைக் காப்பாற்றுவதாக'' அவர்கள் சபதம் செய்தனர். ஆனால், பிரஷ்யப் படைப் பிரிவுகள் நெருங்கி வந்து கொண்டிருக்கும் வேளையில், எழுச்சியாளர்கள் நடுவில் பிளவு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, தொழிலாளர்களை அமைதிப்படுத்தி விட்டுத் தமது பணியினைத் உதவியாளரிடம் ஒப்படைத்து விட்டு எல்பெர்பெல்திலிருந்து வெளியேறினர் எங்கெல்ஸ்.

எங்கெல்ஸ் கொலோன் நகருக்குத் திரும்பி வந்தபின், **புதிய ரைன் பத்திரிகையில்** வெளியான கட்டுரை எல்பெர்பெல்தில் நிகழ்ந்தேறிய சம்பவங்களைப் பற்றிச் சொல்லிவிட்டுப் பின்கண்டவாறு முடிவுற்றது:

''நமது பத்திரிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர் மீது வியக்கத் தக்க பந்த உறவையும் பாச உணர்ச்சியையும் வெளிக்காட்டிய மார்க்கோ-பேர்கிஸ்க் தொழிலாளர்கள், அவர்களின் ஜீவாதார நலன்களைக் காப்பதற்காக வெடித்துக் கிளம்பப் போகின்ற, இதனினும் ஆயிரம் மடங்கு கடுமையான ஒரு போராட்டத்திற்கு ஒரு முன்னுரைதான் இப்போதைய இயக்கம் என்பதைப் புரிந்து கொள்வார்களாக. புதிய புரட்சி இயக்கமோ இப்போதைய இயக்கத்தின் விளைவாக வெடிக்கப் போவதாகும். இது தொடங்கிய மறுகணமே, எங்கெல்ஸ்—இதை தொழிலாளர்கள் உறுதியாக நம்பலாம்—**புதிய ரைன் பத்திரிகையின்** மற்ற ஆசிரியர்களைப் போலவே, அந்தக் களத்தில் தம் பணியினை மேற்கொள்வார்.

அப்போது, இப்பூவுலகின் எந்தச் சக்தியும் அவரை அப்பணியினின்றும் வெளியேற்றி விட முடியாது என்பது உறுதி உறுதி.''*

இதற்கிடையில் எல்பெர்பெல்தில் எழுச்சியானது பெருநாசத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்து. காகென், ஜோலிங்கேன், இசெர்லோன் பகுதிகளில் தனிமைப்பட்டிருந்த எழுச்சிகள் தோல்வி அடைந்தன.

ரைனில் எழுச்சி தோல்வியுற்றது **புதிய ரைன் பத்திரிகை**க்கும் மரண அடியைக் கொடுத்தது. தனது வெறுப்புக்குள்ளான புரட்சிகரப் பாட்டாளி வர்க்கப் பத்திரிகையின் மீது துணிவுடன் இப்போது அடக்குமுறையைப் பிரயோகித்தது எதிர்ப்புரட்சி. ஆசிரியர்களில் ஒரு சாரார் மீது நீதி மன்ற வழக்குகளை அது தொடுத்தது. மறு சாராரையோ பிரஷ்யர்கள் மாதிரி நடத்தாமல் பிரஷ்ய நாட்டின் எல்லைகளை விட்டு வெளியேறுமாறு உத்திரவிட்டது. 1845ல் மார்க்ஸ் தமது பிரஷ்யக் குடியுரிமையை விட்டுவிட்டதைப் பயன்படுத்திக் கொண்டு ''விருந்தாளி உரிமையை'' மீறிவிட்ட ''அன்னியரைப்'' போல அவரைக் கருதி வெளியேற்ற உத்தரவு பிறப்பித்தது பிரஷ்ய அரசாங்கம். இவையெல்லாம் **புதிய ரைன் பத்திரிகையின்** முடிவாக அமைந்தன.

1849 மே மாதம் *19*ஆம் நாள் பத்திரிகையின் இறுதி இதழ் சிவப்பு மையினுல் அச்சிடப்பட்டு வெளியாயிற்று.

பத்திரிகை ஆசிரியர் குழு ''கொலோன் தொழிலாளர்களுக்கு'' விடுத்த விடைபெறும் வார்த்தைகள் பின்கண்டவாறு முடிவுற்றன: "*Neue Rheinische Zeitung* ஆசிரியர்களின் பால் அனுதாபம் காட்டிய உங்களுக்கு, உங்களிடமிருந்து விடைபெறுகையில் அவர்கள் நன்றி தெரிவிக்கிறுர்கள். தொழிலாளி வர்க்கத்துக்கு விடுதலை! என்பதே எந்நேரமும் எவ்விடத்தும் ஆசிரியர்களின் இறுதி முழக்கமாக இருக்கும்.''**

35 ஆண்டுகள் கழித்து, **புதிய ரைன் பத்திரிகையின்** முடிவைப் பற்றி உரிமையுள்ள பெருமையுடன் எங்கெல்ஸ்

---

* Engels, *From Elberfeld;* Marx-Engels-Lenin-Stalin, *Zur Deutschen Geschichte*, Band II, I Halbband, S. 345.

** K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II, Moscow 1955, p. 335.

குறிப்பிட்டார்: ''எங்கள் கோட்டையை விட்டுவிட வேண்டிய கட்டாயத்துக்கு நாங்கள் ஆளானோம். ஆனால், துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் தூக்கிக் கொண்டு, இசை தவழ, பத்திரிகையின் கடைசிச் சிவப்பு இதழை பதாகையாய்ப் பறக்க விட்டபடி நாங்கள் பின் வாங்கினோம்....''*

கொலோனை விட்டு, எழுச்சியால் ஆட்கொள்ளப்பட்டிருந்த தென் மேற்கு ஜெர்மனியை நோக்கி மார்க்சும் எங்கெல்சும் பயணமானார்கள். எழுச்சியினை ஆழப்படுத்தவும் விரிவுபடுத்தவும், குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளை புரட்சியில் ஆற்றல் மிக்க பங்கேற்குமாறு செய்யவும் தம்மாலான அனைத்தையும் இங்கு மார்க்சும் எங்கெல்சும் செய்தனர். வலதுசாரிகள் வெளியேறிய பின் பெரும்பான்மையாயிருந்த இடதுசாரிப் பிரதிநிதிகளை, பாதென், ஃபால்ஸ் படைப் பிரிவுகளை ஃபிரான்க்ஃபர்ட்டுக்கு அழைக்கும்படியும், எழுச்சிக்கு தலைமை தாங்கி அதற்கு அனைத்து ஜெர்மன் தன்மையூட்டுமாறும், மாய்ன் நதிக்கரையில் உள்ள ஃபிரான்க்ஃபர்ட்டில் மார்க்சும் எங்கெல்சும் வற்புறுத்தினர். ஆனால் அவர்களது வார்த்தைகள் அனைத்தும் வீணாயின. வேண்டுகோள் இல்லாவிடினும், ஃபிரான்க்ஃபர்ட்டுக்கு விரைந்து செல்லும்படி ராணுவத்தினருக்கு மான்கெயிம் (பாதென்) வந்து சேர்ந்த மார்க்சும் எங்கெல்சும் ஆலோசனை கூறினர்.

பாதெனிலிருந்து மார்க்சும் எங்கெல்சும் எழுச்சியின் இரண்டாவது மையமான ஃபால்சை வந்தடைந்தனர். இங்கு கெய்சர்ஸ்லாவ்டெர்னில் ஃபால்ஸ் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினர்களைச் சந்தித்தனர். இவ்வரசாங்கத்தில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினரான டெஸ்டரும் இருந்தார். அரசாங்கம் தீர்மானமான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்வதற்காக முயற்சி செய்து தோற்றவர் இவர். மார்க்சும் எங்கெல்சும் திரும்பி வருகின்ற போது, கேஸ்ஸென் ராணுவ வீரர்களால் கைது செய்யப்பட்டு, எழுச்சியில் பங்கு கொண்டவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, ஃபிரான்க்ஃபர்ட்டுக்கு அனுப்பப்பட்டனர். எனினும் அங்கு விடுதலை செய்யப்பட்டனர். மார்க்ஸ் குடும்பம் தற்காலிகமாகத் தங்கிய பீங்கென் நகரில் நண்பர்கள் பிரிந்தனர்.

---

* Engels, *Marx and "Neue Rheinische Zeitung" (1848-1849)*; K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II, Moscow 1955, p. 335.

ஜெர்மனியில் நிலவுகின்ற சூழ்நிலைமைகளைப் பார்க்கையில் உருப்படியாக இங்கு ஒன்றும் சாதிக்க முடியாது என்று முடிவு செய்த மார்க்ஸ், இதற்குப் பதிலாக பிரான்சில் பெரிய புரட்சிகர சம்பவங்கள் வெடிக்கப் போகின்றன என்று முடிவு செய்து, மத்திய ஜனநாயகக் கமிட்டியின் அத்தாட்சிப் பத்திரத்துடன் பாரிசுக்குப் போய்ச் சேர்ந்தார். எங்கெல்சோ, கெய்சர்ஸ்லாவ்டெர்னில் (ஃபால்சில்) "நடந்து கொண்டிருந்த இயக்கத்தில், *Neue Rheinische Zeitung* மேற்கொண்டிருந்த இடத்தை, ஒரு போர்வீரனின் இடத்தை" (எங்கெல்ஸ்) மேற்கொள்ளும் எண்ணத்துடன் ஃபால்ஸ் போய்ச் சேர்ந்தார்.

குட்டி முதலாளித்துவத் தலைமையின் தவறுகளுக்குப் பொறுப்பற்றுக் கொள்ள விரும்பாத எங்கெல்ஸ், படைச் சார்பு அற்ற பதவியையோ ராணுவப் பதவியையோ ஏற்கு மாறு கோரிய எண்ணிறந்த யோசனைகளை நிராகரித்தார். ஆனால், எங்கெல்சின் போராட்ட, புரட்சிகர மனப் பாங்கு அவரைச் சும்மா இருக்கவும் விடவில்லை.

எதிர்ப்புரட்சிப் பிரஷ்யப் படைப் பிரிவுகள் தாக்குதல் தொடுக்கின்றன என்ற செய்தி வந்தவுடன், ஆயுதந் தாங்கிய எங்கெல்ஸ், கம்யூனிஸ்டுகள் சங்க உறுப்பினர் வில்லிஹ், தலைமையில் இருந்த, பெரும்பாலும் தொழிலாளர்களைக் கொண்டு அமைத்திருந்த தொண்டர் படையில் போய்ச் சேர்ந்து கொண்டார்.

ஜூன் 13ல் வில்லிஹின் தலைமைக் காரியாலயம் இருந்த ஓஃபென்பாஹிற்கு எங்கெல்ஸ் வந்து அவருடைய உதவியாளரானர். வில்லிஹ் படைப்பிரிவின் போராட்டங்கள், அணிவகுப்புக்கள் அனைத்திலும் பங்கேற்றுக் கொண்டார் எங்கெல்ஸ். பின்வாங்கும் பாதென் படைப் பிரிவுகளுக்கு மூடுதிரையாய் இருந்து முன்னேறி வரும் பிரஷ்ய ராணுவத்தின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ள வேண்டிய கடிய, ஆபத்தான பணியினை இப்படைப்பிரிவு மேற்கொண்டது.

தாம் மேற்கொண்ட போர் வீரனின் பணியை எழுச்சியாளர் படையில் சிறப்புடன் செய்து முடித்தார் எங்கெல்ஸ். ஃபால்ஸ்-பாதென் படைப் பிரிவுகளில் "மிக உறுதியான கம்யூனிஸ்டுகள் துணிவு மிக்க போர்வீரர்களாயும் விளங்கினர்" என்று பின்னர் பெருமையுடன் எழுதினர் எங்கெல்ஸ்.

இந்த வாசகம் முதன்மையாக எங்கெல்சுக்கே பொருந்தும்.

எந்த வேலைக்கும் எந்த ஆபத்துக்கும் அஞ்சாமல், நிறுவனப் பணியில் வல்லுனராக எங்கெல்ஸ் பணியாற்றினார். சரியான ஆயுதங்கள் இல்லாமலும், மோசமான வினியோக முறையாலும் பீடிக்கப்பட்ட படைப்பிரிவுகள் அத்தியாவசியப் பொருள்கள் இல்லாமல் திண்டாடின. வெடி மருந்தும் ஈயமும் தோட்டாக்களும், பீரங்கிகளும், ஆடைகளும், உணவுப் பொருள்களும் தேடிப் பிடித்துக் கொண்டுவந்து சேர்ப்பதற்காக மிகவும் பாடுபட்டார் எங்கெல்ஸ். போர் வீரர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிப்பதில் உற்சாகத்துடன் ஈடுபட்டவர்களில் எங்கெல்சும் ஒருவர். போராட்டம் மூண்ட காலங்களில் எல்லாம் தீ கக்கும் போர்முனையின் முன்னணியில் எங்கெல்ஸ் கண்டிப்பாகக் காணப்படுவார். ரஷ்டாட் போர் உள்பட நான்கு பெரிய போர்களில் எங்கெல்ஸ் பங்கெடுத்துக் கொண்டார். ''உக்கிரம் நிறைந்த குண்டு வீச்சுக்களிடையே எங்கெல்சைக் கண்டவர்கள், அவர் மனக்கலக்கம் சிறிதுமற்று, எத்தகைய ஆபத்தையும் அடியோடு அலட்சியப்படுத்தியது பற்றி வெகு காலங் கழித்தும் மிக அதிகமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள்''* என்று எலியனேரா மார்க்ஸ் எழுதினர்.

ராணுவம் அனைத்தும் வெளியேறியபின் ஒரு நாள் கழித்து ஜூன் 12ஆம் நாள் வில்லிஹினுடைய படைப்பிரிவும் அதனுடன் எங்கெல்சும் ஸ்விட்சர்லாந்து பிரதேசத்துக்குள் நுழைந்தனர். தோல்வியுற்ற பாதென்-ஃபால்ஸ் ராணுவத்தின் இந்தப் படைப்பிரிவுதான் ஜெர்மன் மண்ணை விட்டுக் கடைசியாக வெளியேறிய படைப்பிரிவு ஆகும்.

இப்படியாக தெற்கு, மேற்கு ஜெர்மனியில் நடைபெற்ற எழுச்சி 1849 ஜூலை மத்தியில் அடியோடு நசுக்கப்பட்டது.

தென்மேற்கு ஜெர்மனியில் எழுச்சி அடைந்த தோல்விதான் 1848—49ஆம் ஆண்டுகளில் ஜெர்மன் புரட்சி முழுவதினுடைய தோல்வியாகவும் இருந்தது.

---

* மார்க்ஸ் எங்கெல்ஸ் பற்றிய நினைவுக் குறிப்புகள், மாஸ்கோ *1956*, பக்கம் *184*.

ஜெர்மன் தேசத்துப் பெரு முதலாளிகள் புரிந்த துரோகமும், குட்டி முதலாளிகளின் ஊசலாட்டங்களும் ஒடிசல் தனங்களும், ஜெர்மனியின் பொருளாதாரப் பின் தங்கல், அரசியல் பிளவுள் ஆகியவற்ருல் ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் பலவீனமாக, ஒழுங்கமையாமல் இருந்ததும்தான் புரட்சியின் தோல்விக்குக் காரணம் ஆகும்.

1848-49 புரட்சிகர நிகழ்ச்சிகளின் போது, கட்சிகளும், வர்க்கங்களும், பல்வேறு போதனேகளும், அரசியல் வேலைத் திட்டங்களும் சோதிக்கப்பட்டன. மார்க்சியத்திற்கு முந்திய பல்வேறு வகையான கற்பனவாதச் சோஷலிசத்திற்கு மரண அடி கொடுத்து, அதே போதில், முதல் வரலாற்றுச் சோதனையில் ஒளி கூட்டி வெளிப் போந்த பாட்டாளி வர்க்கத்தினுடைய விஞ்ஞானத் தத்துவத்தின் மேன்மையை 1848-49 புரட்சிகள் எடுத்துக் காட்டின. ''1848-49ம் ஆண்டுகளில் நடந்த புரட்சி நிகழ்ச்சிகளின் போக்கு இப்புதிய தத்துவத்தை மிகச் சிறந்த முறையில் நிரூபித்து உறுதிப்படுத்தியது. அதே போல் அக்காலம் முதல் எல்லா உலக நாடுகளிலும் நிகழ்ந்த பாட்டாளி வர்க்க, ஜனநாயக இயக்கங்கள் எல்லாம் அதை மெய்ப்பித்து உறுதிப்படுத்தியுள்ளன''* என்று எழுதினுர் லெனின்.

1848ஆம் ஆண்டு வரை விஞ்ஞானக் கம்யூனிசத்தின் தத்துவஞான அடித்தளங்களே நிறுவுவதிலேயே மார்க்ஸ், எங்கெல்சின் கவனம் அனைத்தும் ஈர்க்கப்பட்டிருந்தது என்று சொன்னுல், 1848-49 புரட்சிச் சமர்களின் போக்கில், அரசியல் கருத்துக்களிலும், போர்த் தந்திரங்கள், நடைமுறை உத்திகள் பற்றிய பிரச்னேகளிலும் அவர்கள் பெரிதும் கவனம் செலுத்தினர்.

1848-49 புரட்சியின் போது மார்க்ஸ், எங்கெல்ஸ் கடைப்பிடித்த உத்தியைக் கொச்சைப்படுத்தும் பலவிதமான மென்ஷிவிக்குகள், டிராட்ஸ்கியவாதிகள் ஆகியோரின் முயற்சிகளே எதிர்த்துப் போராடும் பொழுது லெனின் அடிக்கடி கோடிட்டுக் காட்டியபடி மார்க்சிய மூலவர்களின் இந்த

---

* வி. இ. லெனின், கார்ல் மார்க்ஸ், (வி. இ. லெனின், மார்க்ஸ்-எங்கெல்ஸ்-மார்க்சியம், மாஸ்கோ 1976, பக்கம் 10).

உத்தியே ஒரே ஒரு சரியான உத்தியாகும். புரட்சியின் வெற்றிக்கு இந்த உத்தி வழிவகுக்கவில்லையே என்றால் அதற்கு பாட்டாளி வர்க்கம் தன்னைச் சரியானபடி தயார்படுத்திக் கொள்ளவில்லை என்பதும், முதலாளித்துவம் போதுமான வளர்ச்சி பெற்றிருக்கவில்லை என்பதுமே காரணமாகும். 1848-49ல் மார்க்சும் எங்கெல்சும் கடைப்பிடித்த அரசியல் வழியில் மிகவும் தீர்மானமானதாயும், அடிப்படையானதாயும் அமைந்த அம்சங்களைப் பற்றி லெனின் எழுதுகையில், ''புரட்சிகர உத்தியை, போராட்டத்தின் முன்னேற்றத்தை மிகவுயர்ந்த கட்டத்திற்குக் கொண்டு போகின்ற உத்தியை, மிதவாத துரோகிகளின் பின்னே பாட்டாளி வர்க்கத்தைச் செலுத்தாமல் பாட்டாளி வர்க்கத்திற்குப் பின்னே விவசாய வர்க்கத்தைச் செலுத்துகின்ற உத்தியை அவர்கள் பாட்டாளி வர்க்கத்திற்குப் போதித்தார்கள்''* என்று சொன்னார்.

* * *

ஜூன் ஆரம்பத்தில் ஜெர்மனியிலிருந்து கிளம்பி பாரிசுக்கு மார்க்ஸ் போன பின்பு, இரண்டு மாதங்களுக்கு மேலாக மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இருந்த எல்லாத் தொடர்புகளும் அறுந்துவிட்டன. மிகவும் ஆபத்தான இடங்களிலேயே எப்பொழுதும் இருப்பதற்கு எங்கெல்ஸ் முயற்சி செய்பவர் என்பதால் எங்கெல்சின் பாதுகாப்பு பற்றி சதா கவலைப்பட்டுக் கொண்டிருந்தார் மார்க்ஸ். தம் பங்கிற்கு எங்கெல்சும் தமது நண்பருக்காக மிகவும் கவலைப்பட்டார். 1849 ஜூலை 25ஆம் நாள் மார்க்சின் துணைவியாருக்கு ஸ்விட்சர்லாந்திலிருந்து எங்கெல்ஸ் எழுத முடிந்த முதல் கடிதத்தில் ஆழமிக்க அச்சம் நிறைந்த கவலையுடன் அவர் எழுதினார்: ''சுதந்திரமாக மார்க்ஸ் வெளியே இருக்கிறார் என்பது மட்டும் எனக்குத் தெரிந்தால்..! நம்மவர்கள் ஜெர்மனியிலும், குறிப்பாக பாரிசில் மார்க்சும், இருக்கின்ற ஆபத்துச் சூழ்நிலைகளை விட, பிரஷ்யத் தோட்டாக்களுக்கிடையே வெகு குறைவான ஆபத்துக்குத்தான் நான் ஆளாகி இருந்தேன் என்று அடிக்கடி நினைக்கிறேன். மார்க்சைப் பற்றித் தகவல் தந்து என்னை நிம்மதிப்படுத்துங்கள்''.**

---

* V. I. Lenin, *Works*, 4th Russ. ed., Vol. 15, p. 32.

** *Engels' Letter to I. Marx on July 25*, 1849.

இதற்கு பதிலாக மார்க்சிடமிருந்தே கடிதம் வந்தது. ''உன்னைப் பற்றி மிகுந்த கவலைக்குள்ளாகி இருந்தேன் நான். உன் கையால் எழுதப்பட்ட கடிதம் நேற்றுக் கிடைக்கப் பெற்று அளவு கடந்த ஆனந்தம் கொண்டேன்'' என்று எழுதினர் மார்க்ஸ். இதே கடிதத்தில்: ''பாதென்-ஃபால்ஸ் புரட்சி பற்றிய வரலாறே, அல்லது அது பற்றி ஒரு விமர்சனமோ எழுதுவதற்கு ஒரு அருமையான வாய்ப்பு உனக்குக் கிட்டி இருக்கிறது. ஜனநாயகக் கட்சி பற்றி *Neue Rheinische Zeitung* பத்திரிகையின் பொதுவான கருத்தினையும் நீ இச்சந்தர்ப்பத்தில் வெளியிடலாம்''* என்றும் எங்கெல்சுக்கு மார்க்ஸ் எழுதினர்.

மார்க்சின் இந்த ஆலோசனை எங்கெல்சின் எண்ணத்துடன் முற்றிலும் ஒன்றுபட்டதாய் இருந்ததால் உடனடியாக அவர் எழுதத் தொடங்கினர். **பேரரசு அரசியல் சட்டத்திற்காக ஜெர்மனியில் நடைபெற்ற போர்** என்ற தலைப்பில் எங்கெல்சின் நூல் விரைவில் தயாராயிற்று. ரைன் பிரஷ்யாவிலும், பாதெனிலும் ஃபால்சிலும், 1849 மே-ஜூலை மாதங்களில் நடந்த ஆயுதப் போராட்டத்தின் ஒவ்வொரு நடவடிக்கையையும் தெளிவாகவும் உயிரோட்டத்துடனும் உண்மையான இலக்கிய வல்லமையுடன் இந்த நூலில் எங்கெல்ஸ் வர்ணிக்கிறர். பேரரசு அரசியல் சட்டத்திற்கான போராட்டம் வெடித்த காரணங்களையும் அதன் போக்கையும் ஆய்வு செய்து, இந்தப் போராட்டத்தில் வர்க்கங்கள், கட்சிகள் முதலியவற்றின் நிலைகளையும், குறிப்பாக, தொழிலாளி வர்க்கம், விவசாயி வர்க்கம் ஆகியவற்றின் பாத்திரத்தையும் அற்புதமான கூர்மையுடன் எடுத்துக் காட்டுகிறர்.

மேற்கு ஜெர்மனியிலும் தெற்கு ஜெர்மனியிலும் நடந்த ஆயுதந் தாங்கிய போராட்டத்தைப் பற்றி, ஒதுங்கி நின்று கவனித்த ஒரு பார்வையாளனுக இன்றி, போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டவர் என்ற முறையில் பேசி, இயக்கத்திற்குத் தலைமை தாங்கி அவ்வியக்கத்தைக் குட்டிச் சுவராக்கிய குட்டி முதலாளித்துவத் தலைவர்களைப் பற்றி மூடி மறைக்காத வெறுப்புடன், எடுத்துக் கூறுகிறர் எங்

---

* *Marx' Letter to Engels on August 1, 1849;* Marx-Engels, *Gesamtausgabe*. Dritte Abteilung, Band I, S. 111.

கெல்ஸ். ராணுவ நடவடிக்கைகளை எட்டுக்கு எட்டு விவர மாக ஆய்வு செய்த எங்கெல்ஸ், ஆயுதந் தாங்கிய எழுச்சிக்கு, எந்த மாதிரி தலைமை தாங்கக் கூடாது என்று தெளிவுற வரைந்து காட்டுகிறார். பாரிஸ் தொழிலாளர்கள் நடத்திய ஜூன் மாதப் போராட்டங்களையும் ஹங்கேரிய, இத்தாலியப் புரட்சிப் போராட்டத்தையும் குறித்து எங்கெல்ஸ் எழுதிய கட்டுரைகளில் அவர் உருவாக்கத் தொடங்கிய ஆயுதந் தாங்கிய எழுச்சி பற்றிய மார்க்சியத் தத்துவம் பேரரசு அரசியல் சட்டத்திற்காக ஜெர்மனியில் நடைபெற்ற போர் என்ற நூலில் இன்னும் வளர்ச்சி பெற்றது.

1849 ஆகஸ்டு கடைசியில் பாரிசிலிருந்து மார்க்ஸ் எழுதிய கடிதம் எங்கெல்சுக்குக் கிடைத்தது. மர்பிகான்* இலாகா சேறும் சகதியும் நிறைந்த பிரெத்தானி என்னும் இடத்திற்குத் தம்மை அனுப்புவதாக மார்க்ஸ் அக்கடிதத்தில் எழுதி இருந்தார். மறைமுகமான இந்தக் கொலை முயற்சிக்கு இணங்க விரும்பாத மார்க்ஸ் பிரான்சை விட்டு வெளியேறுவதென்று தீர்மானித்தார். லண்டனுக்குச் சென்று அங்கு ஜெர்மன் பத்திரிகை ஒன்று துவக்குவது என்று எண்ணமிட்ட மார்க்ஸ் எங்கெல்சுக்கு எழுதினர்: ''எனவே நீ உடனடியாக லண்டனுக்குப் புறப்பட்டு வர வேண்டும். உன்னுடைய பாதுகாப்பை முன்னிட்டும் நீ இதைச் செய்ய வேண்டும். பாதெனுக்காக ஒரு முறையும் எல்பெர்பெல்துக்காக ஒரு முறையுமாக இரண்டு தடவை உன்னைச் சுட்டுக் கொன்றிருப்பார்கள் பிரஷ்யர்கள். உன்னல் ஒன்றும் செய்ய முடியாமலிருக்கிற அந்த ஸ்விட்சர்லாந்தில் நீ இருந்து என்ன பயன்? லண்டனிலோ நமக்குச் செய்வதற்குப் பணிகள் இருக்கின்றன.''**

வற்புறுத்தல் மிக்க தமது நண்பரின் ஆலோசனையை விருப்பமுடன் ஏற்றுக்கொண்டார் எங்கெல்ஸ். இத்தாலிக்குக் கிளம்பிய எங்கெல்ஸ், அக்டோபர் 6ஆம் நாள் ஜெனீவா நகரில் பாய்மரக் கப்பல் ஒன்றில் புறப்பட்டு நவம்பர் நடுவில் லண்டனுக்கு வந்து சேர்ந்தார். செயல் ஆர்வமே ஒரு இயல்பாய் அமைந்த எங்கெல்சினை, எதற்கும் அடங்காத

---

* மர்பிகான்—பிரான்சில் ஒரு பிரதேசம்.

** *Engels' Letter to Marx on August 23, 1949;* K. Marx and F. Engels, *Works*, Russ. ed., Vol. XXI, p. 114.

அவரது அறிவுத் தாகம் பயண வழியிலும் சும்மா இருக்க விடவில்லை. பயணத்தின் போது கப்பலோட்டம் பற்றிய விஞ்ஞானங்களைக் கற்றறிய முற்பட்டார்.

எங்கெல்ஸ் லண்டன் வந்து சேர்ந்ததிலிருந்து, மார்க்சுடன் அவரது புரட்சிகரக் கூட்டுப் பணி மீண்டும் தொடங்கியது. அப்போது நிலவிய சூழ்நிலையோ மிகவும் கடுமையானதாக இருந்தது. எங்கு நோக்கினும் பிற்போக்கு தாண்டவமாடிக் கொண்டிருந்தது. மிகவும் உறுதியற்றிருந்த அரசியல் குடியேற்றக்காரர்களைக் கொண்ட பகுதியோரிடையில், தாம் வீழ்ச்சியடைந்து விட்டது போன்ற மனநிலையும், கலக்கமும், தமது பணியில் நம்பிக்கையின்மையும் பரவத் தொடங்கின. இத்தகைய சூழலில் மார்க்சும் எங்கெல்சும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர்களாக மிக உயர்ந்து நின்றார்கள். இப்பொழுது, அவர்களுக்கே உரிய உருக்கனைய உறுதியும், அழுத்த மிக்க மனோதிடமும், தாம் மேற்கொண்ட பணியின் நியாயத்தைப் பற்றிய ஆழமான விஞ்ஞானபூர்வ உறுதியில் நிற்கும் வருங்காலத்தைப் பற்றிய அசைக்கவொண்ணா நம்பிக்கையும் அவர்களிடம் இன்னும் சிறப்பாக மிளிர்ந்தன.

கம்யூனிஸ்டுகள் சங்கத்தை உயிர்ப்பிக்கவும், திருத்தியமைக்கவும் மார்க்சிய மூலவர்கள் முனைந்தனர். இயக்கத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டு வந்த சங்க உறுப்பினர்கள் ஒன்று கைது செய்யப்பட்டிருந்தனர், அல்லது பல்வேறு பக்கங்களுக்குச் சென்று விட்டிருந்தனர். தொடர்புகள் அறுந்து போயிருந்தன. இதன் காரணமாகவும், கடிதங்கள் எழுதினால் அவை பிரித்துப் படிக்கப்படுமோ என்ற அச்சத்தினாலும் கடிதப் போக்குவரத்து நின்று போயிருந்தது சில காலம்.

எனினும் மார்க்சின் ஊக்கமிக்க பணிகளினால், 1849 செப்டம்பரிலேயே கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்திய கமிட்டி மறுநிர்மாணம் செய்யப்பட்டிருந்தது. லண்டன் வந்து சேர்ந்தவுடன் எங்கெல்சும் இக்கமிட்டியில் ஒருவரானார். கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் பழைய தலைவர்கள் அனைவரும் மார்க்சையும் எங்கெல்சையும் சுற்றி விரைவிலேயே குழுமினர். இவர்களுடன் கூட சில உறுப்பினர்களும் இன்னும் புதிதாக வந்து சேர்ந்தனர். இவர்களில், பாதென்-ஃபால்ஸ் போரில் எங்கெல்சுடன் சேர்ந்து நின்று சமர் புரிந்த

வில்லிஹ், கோன்ராட் ஷ்ராம், வில்கெல்ம் லீப்க்னெஹ்ட் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

ஜெர்மனியுடன் தொடர்பு கொள்வதற்காக சங்கத்தின் மத்திய கமிட்டி 1850 மார்ச்சில் ஹென்றிக் பௌவரை விசேஷத் தூதராக அனுப்பி வைத்தது. இவர் மூலமாக மார்க்ஸ், எங்கெல்சால் எழுதப்பட்ட **கம்யூனிஸ்டுகள் சங்கத்துக்கு மத்திய கமிட்டியின் அறைகூவல்** அனுப்பி வைக்கப் பட்டது. மிக முக்கியமான இந்த ஆவணத்தில், 1848-49 ஜெர்மன் புரட்சியின் லாப நஷ்டங்களைச் சேர்த்துக் காட்டி, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் கம்யூனிஸ்டுகள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை உத்திகளைத் திட்ட வட்டமாக உருவகப்படுத்தி, இடையறுத புரட்சி பற்றிய தமது கருத்தை விரிவாக வடிவமைத்துக் கொடுத்தனர் மார்க்சும் எங்கெல்சும்.

புரட்சிகர ஆண்டுகளில் முரணற்ற கொள்கைப் பிடிப் புள்ள ஒரே ஒரு புரட்சிகர வர்க்கமான பாட்டாளி வர்க்க அணிகளின் முன் வரிசையில் கம்யூனிஸ்டுகள் சங்க உறுப்பி னர்கள் எப்போதும் இருந்தார்கள் என்றும், சங்கத்தின் அர சியல் செயல் திட்டம்தான் ஒரேயொரு சரியான திட்டமாக இருந்தது என்றும் மார்க்சும் எங்கெல்சும் இந்த **அறைகூவ லில்**, பிரதானமாக எடுத்துக் காட்டினர். எனினும், அதே நேரத்தில் சங்கத்தின் முந்தைய வலுவான அமைப்பு பெரு மளவுக்கு பலவீனமடைந்திருந்தது. சில இடங்களில் சங்க அமைப்புக்கள் குட்டி முதலாளித்துவ ஜனநாயகக் கட்சியின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தன. வருங்கால ஜெர்மன் புரட்சியில் தொழிலாளி வர்க்கக் கட்சி எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு ஒன்றுபட்டும், ஒழுங்கமைந்தும், சுதந்திரமாக வும் செயல்பட வேண்டும் என்று மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினர்.

1848ல் ஜெர்மானிய மிதவாத முதலாளித்துவ வர்க்கத் தினர் புரிந்த துரோகத்தைப் போலவே, வரவிருக்கும் புரட்சியில் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் துரோ கம் புரிவார்கள் என்று **அறைகூவலில்** சொல்லப்பட்டது. இப் பொழுதோ, ஒன்றுபட வேண்டும் என்று போதனை செய்து பாட்டாளி வர்க்கத்தைத் தன்னுடைய தலைமையின் கீழுள்ள ஒரு பெரிய எதிர்க்கட்சிக்குள் குட்டி முதலாளிகள் கவர்ந்து

இழுக்கப் பார்க்கின்றனர். குட்டி முதலாளித்துவ ஜனநாயகத்தின் ஒட்டி நிற்கும் வாலாக பாட்டாளி வர்க்கத்தை மாற்றும் இந்த முயற்சிகளுக்கு எதிராக உறுதியான போராட்டம் நடத்தியாக வேண்டும். பகிரங்க, ரகசிய அமைப்புகளை சுயேச்சையாகத் தொழிலாளிகள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். புரட்சிகரமான தொழிலாளி வர்க்கக் கட்சி குட்டி முதலாளித்துவ ஜனநாயகத்துடன் கொள்ள வேண்டிய உறவு பின்கண்டவாறு இருக்க வேண்டும்: அதனுடன் கூட நின்று பொது எதிரியை எதிர்த்துப் போராடுவது; குட்டி முதலாளித்துவ ஜனநாயகம் தனது சொந்த நலன்களிலே நிலை கொண்டிருக்கிற பொழுதெல்லாம் அதனை எதிர்த்துச் சமர் புரிவது. தொழிலாளர்களின் கூலி அடிமை முறையைக் காத்துக் கொண்டு, இருக்கின்ற சமுதாயத்தின் அடித்தளங்களை அப்படியே வைத்துக் கொண்டு, சமுதாயத்தைச் சீர் திருத்தலாம் என்ற அளவுக்கு மட்டும் புரட்சியை மட்டுப் படுத்திக் கொள்ளுவதற்கு ஜனநாயகவாதக் குட்டி முதலாளித்துவப் பகுதியோர் முயற்சி செய்கின்ற பொழுது, ''அதிகமாகவோ குறைவாகவோ உடைமை கொண்டிருக்கும் வர்க்கங்கள் யாவும் ஆதிக்கம் செய்வதிலிருந்து ஒதுக்கித் தள்ளப்படுகின்ற வரை, ஆட்சி அதிகாரத்தினைப் பாட்டாளி வர்க்கம் வென்று கைப்பற்றுகிற வரை, புரட்சியினை இடைவிடாது தொடர்ந்து முன்கொண்டு செல்வதில்தான் நமது நலன்களும் கடமைகளும் அடங்கி இருக்கின்றன.... தனியார் சொத்துரிமையை மாற்றி அமைப்பதல்ல, அதனை ஒழித்துக் கட்டுவதுதான், வர்க்க முரண்பாடுகளை ஊதி அணைப்பதல்ல, அவ்வர்க்கங்களையே ஒழித்துக்கட்டுவதுதான், இருந்து வருகிற சமுதாயத்தை ஏற்றி உயர்த்துவதல்ல, ஒரு புதிய சமுதாயத்தை உருக்கி வார்ப்பதுதான் நம் முன்னுள்ள பணியாகும்.''*

இப்பணிகளை நிறைவேற்றுகின்ற வகையில், புரட்சி வெற்றி பெற்று ஒரு குட்டி முதலாளித்துவ அதிகார பூர்வ அரசாங்கம் ஏற்படுமானல், அதனுடனேயே, ஊராட்சி மன்றங்கள், கிளப்புகள், தொழிலாளர் கமிட்டிகள் ஆகியவற்றை

* Marx and Engels, *Address of the Central Committee to the Communist League;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 110.

உருவாக்குவதன் மூலம் ''தமது சொந்தப் புரட்சிகரத் தொழிலாளி வர்க்க அரசாங்கங்களை நிறுவ வேண்டும்.''

முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் துரோகத்தன மான அரசியலுக்கு எதிராக வெற்றிகரமாகச் செயல்படு வதற்கு ஏற்றவாறு தொழிலாளிகள் ஆயுத பாணிகளாய் இருக்க வேண்டும், தமது சொந்த ராணுவ அமைப்பையும் பெற்றிருக்க வேண்டும். இறுதியாக, அரைகுறைச் சீர்திருத் தங்களின் மூலமாக விவசாயப் பொதுமக்களைக் கவர்ந்திழுப் பதற்கு முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் மேற்கொள்ளு கின்ற முயற்சிகளை எதிர்த்து அவசியம் சமராட வேண்டும். நிலப்பிரபுக்களின் பறிமுதல் செய்யப்பட்ட நிலவுடைமை கள் ''அரசுச் சொத்தாக மாற வேண்டுமென்றும், பெரிய பயிர்த் தொழிலின் அனுகூலங்களையெல்லாம் பயன்படுத்தி ஒன்றுபட்ட விவசாயப் பாட்டாளிகள் உழுது பயிரிடுகிற தொழிலாளர் பண்ணைகளாக அவற்றை மாற்ற வேண்டு மென்றும்''* தொழிலாளர்கள் கோர வேண்டும்.

முடியுமான அளவுக்கு சுயேச்சையான பகுதிகள் கொண்ட கூட்டாட்சிக் குடியரசு ஒன்றை அமைப்பதற்காக முயற்சி செய்கின்ற குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளுக்கு எதிராக, பிரிக்கப்பட முடியாத முழுமையான ஜெர்மன் குடி யரசுக்காகவும் ஆட்சியதிகாரத்தின் மிக உறுதியான மத்தி யத்துவத்திற்காகவும் தொழிலாளர்கள் போராட வேண்டும்.

எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குப் புரட்சி யைத் தொழிலாளர்கள் முன்கொண்டு செல்ல வேண்டும். ''அவர்களின் போராட்ட முழக்கம் 'இடையறாத புரட்சி' என்றே ஒலிக்க வேண்டும்.''**

இந்த **அறைகூவலில்** காணப்படும் இடையறாத புரட்சி எனும் கருத்து, மார்க்சியத்தின் போர்த்தந்திரம், நடைமுறை உத்திகள் ஆகியவை விஞ்ஞான பூர்வமாக மேலும் வளர்ச்சி பெறுவதைக் குறிக்கின்ற கருத்தாகும்.

---

* Marx and Engels, *Address of the Central Committee to the Communist League;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955.

** Marx and Engels, *Address of the Central Committee to the Communist League;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955

கம்யூனிஸ்டுகள் சங்கத்தை உயிர்ப்பிப்பதற்கும், மறுநிர் மாணம் செய்வதற்கும் மார்க்சும் எங்கெல்சும் ஆற்றிய ஓய்வு ஒழிச்சலற்ற பணி விரைவில் பயன் தந்தது. 1850 ஜூனில் மார்க்ஸ், எங்கெல்சால் தயாரிக்கப்பட்ட இரண்டாவது கம் யூனிஸ்டுகள் சங்கத்துக்கு மத்திய கமிட்டியின் அறைகூவலில் சங்கத்தின் வெற்றிகள் பற்றி மத்திய கமிட்டியின் சார்பில் தகவல் தந்தனர். ஜெர்மனியில் ஒரு திரளான பாட்டாளி வர்க்கக் கட்சியை அமைப்பதற்காக மார்க்சும் எங்கெல் சும் போராடுகின்ற பொழுதே, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் சிறந்த புரட்சிகர சக்திகளை தம்மைச் சுற்றி ஒன்று சேர்த்தனர். இரண்டாம் அறைகூவலில், விசேஷமான பிரதிநிதிகள் சிலரின் மூலமாக, பிரெஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷ்காரர், ஹங்கேரியர்கள் ஆகியோரின் உண்மையான புரட்சிகர கட்சிகளுடன் மத்திய கமிட்டி தொடர்பு கொள் கிறது என்று எடுத்துக் காட்டப்பட்டது.

சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சி வீரர்களை ஒன்று சேர்ப்பதற்கு எங்கெல்ஸ்தான் மிகச் சுறுசுறுப்புடன் பணி யாற்றினர். லண்டனில் நடந்த சர்வதேசியக் கூட்டங்களில் பல முறை பேசினர் அவர். குறிப்பாக, புரட்சிகர சார்ட் டிஸ்டுகளுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந் தார். அவர்களின் அணிகளில் நின்று 1842-43ஆம் ஆண்டு களிலேயே எங்கெல்ஸ் போராடி இருந்தார்.

உதாரணமாக, *The Democratic Review of British and Foreign Politics, History and Literature* என்னும் பத்திரி கையில் 1849 டிசம்பர் முதல் 1850 ஆகஸ்டு வரை **பிரான்ஸ் கடிதங்கள்** என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளை பெயரின்றி எழுதி வெளியிட்டார் எங்கெல்ஸ். இவற்றில் 1848-1849 புரட்சியின் சில பிரதான படிப்பினைகளை முதன் முதலாகத் தொட்டு, பிரெஞ்சு அரசியல் வாழ்க்கையில் அடுத்த நிகழ்ச்சி களைப் பற்றிய பகுப்பாய்வினைத் தந்தார். அரசாங்கத்தின் வரிக் கொள்கையாலும், வட்டிக்காரர்களின் தொல்லைகளா லும் அவதியுற்ற விவசாயிகளும் நகரக் குட்டி முதலாளித்துவ வர்க்கமும் புரட்சி தந்த அனுபவத்தால், ''மூலதனத்தின் பிடியிலிருந்து தாம் விடுதலை அடைய வேண்டுமானல், முழு மையாக, எந்தவித நிபந்தனையும் இல்லாமல் தொழிலாளி கள் விடுதலை அடைய வேண்டியது அவசியம் என்று விருப்ப

மின்றியே தாமாக முடிவுக்கு வந்தார்கள்...'' என்று எங்கெல்ஸ் மெய்ப்பிக்கிறுர். தொழிலாளி வர்க்கத்திற்குள்ளேயே நிகழ்ந்த மாற்றங்களை—பல்வேறு விதமான குட்டி முதலாளித்துவ சோஷலிச அமைப்புக்களைப் பற்றியும் இவற்றின் தலைவர்களைப் பற்றியும் அவர்கள் அடைந்த ஏமாற்றம், தொழிலாளர்கள் சுதந்திரமாக இருக்க விரும்பியது, தமது வர்க்கத்தின் தேவைகளையும் நலன்களையும் உண்மையில் வெளியிடுகிற புரட்சிகர சோஷலிசக் கண்ணேட்டங்களை நோக்கி அவர்கள் ஈர்க்கப்பட்டது ஆகியவற்றைப் பற்றியும் எங்கெல்ஸ் குறிப்பிடுகிறுர். பிரெஞ்சுத் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் போராட்டத்தையும் பற்றிக் கூறுகிற எங்கெல்சின் இந்தக் கட்டுரைகள் பிரிட்டிஷ் தொழிலாளர்களைப் பாட்டாளி வர்க்க சர்வதேசிய மனப்பாங்கில் பயிற்றுவித்தன.

பாட்டாளி வர்க்கப் புரட்சி வீரர்களை உறுதியாக ஒன்று சேரப் பயிற்றுவிப்பதற்கு புதிய பத்திரிகை ஒன்று அவசியம் என்று மார்க்சும் எங்கெல்சும் கருதி, அத்தகைய பத்திரிகை ஒன்று வெளிக்கொணருவதற்குத் தமது சக்தியிலும் நேரத்திலும் பெரும் பகுதியைச் செலவிட்டனர். 1850ல் **புதிய ரைன் பத்திரிகை. அரசியல்-பொருளாதார மதிப்புரை** என்ற சஞ்சிகையின் ஆறு இதழ்கள் வெளி வந்தன. மார்க்சிஞல் பதிப்பிக்கப்பட்ட இந்தப் பத்திரிகை ஹாம்புர்கில் அச்சாகியது. 1848-49ல் பிரான்சிலும் ஜெர்மனியிலும் நடந்த புரட்சிகளின் விளைவுகளைப் பற்றிய மார்க்ஸ், எங்கெல்சின் கட்டுரைகள் பலவும், அவர்களால் எழுதப்பட்ட விமர்சனங்களும் சர்வதேச நிலைமை பற்றிய மதிப்புரைகளும் பத்திரிகையில் பிரசுரமானவற்றில் அடங்கும்.

பத்திரிகையின் பிப்ரவரி, ஏப்ரல் மாத இதழ்களில் சர்வதேச நிலைமை பற்றிய மதிப்புரைகளிலிருந்து, புரட்சியின் புதிய எழுச்சி அப்போது தோன்றும் என்று மார்க்சும் எங்கெல்சும் நம்பியதாகத் தெரிகிறது. ஆனுல், 1850 கோடை காலத்திலேயே, எதார்த்த நிலைமைகள் வெகுவாக மாறிவிட்டன என்றும், புரட்சி விரைவில் வெடிக்கப் போகிறது என்ற நம்பிக்கைக்கு ஆதாரம் ஏதுமில்லை என்றும் அவர்களுக்கு விளங்கியது. 1848ஆம் வருடத்திய புரட்சிக்கு வழி வகுத்த 1847ஆம் வருடத்திய தொழில் நெருக்கடி முற்றுக மறைந்து

போய், புயல் வேகத்தில் இயந்திரத் தொழில் எழுச்சி ஏற்பட்டது. 1850 இலையுதிர் காலத்தில் வெளிவந்த பத்திரிகையின் ஐந்தாவது, ஆருவது இதழ்களில் பிரசுரமான சர்வதேச நிலைமை பற்றிய மதிப்புரையில் மார்க்சும் எங்கெல்சும் இதனைத் தெளிவாகவும் நிர்ணயமாகவும் எடுத்துக் காட்டினுர்கள்.

புதிய எதார்த்த நிலைமைகளைக் கருத்தில் கொண்ட மார்க்சும் எங்கெல்சும் கட்சி கடைப்பிடித்து வந்த உத்திகளை மறுபரிசீலனை செய்யுமாறும், உண்மையான பாட்டாளி வர்க்கத் தலைவர்களுக்கு மட்டுமே உரித்தான நேர்மையுடனும் துணிச்சலுடனும் கோரினர். புரட்சி தவிர்க்க முடியாதது என்ற கேந்திர முக்கியத்துவமுள்ள அடிப்படைப் பாதையை மாற்ருமல் அந்தக் கால கட்டத்தில் புதிய போராட்டத்திற்கு ஏற்றவாறு நடைமுறை உத்திகளை மாற்றிக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. வரவிருந்த புரட்சியின் காலம் நகர்ந்து சென்று விட்டதால், சங்கடம் மிகுந்த நீண்ட காலத்துக்குச் சக்திகளை எல்லாம் ஒன்று சேர்த்து வரப் போகிற புரட்சிக்காக இச்சக்திகளை ஒழுங்காகவும் முறைப்படியும் தயார்படுத்த வேண்டி இருந்தது.

மார்க்சும் எங்கெல்சும் மேற்கொண்ட இந்தப் புதிய நிலை கம்யூனிஸ்டுகள் சங்கத்திலும் அதன் மத்திய கமிட்டியிலும் நடந்து வந்த போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது. மத்திய கமிட்டியின் ஒரு பிரிவினர் வில்லிஹ், ஷாப்பெர் ஆகியோர் தலைமையில், லண்டன் சங்க உறுப்பினர்களில் கணிசமான பகுதியினரின் ஆதரவுடன் மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் எதிராகப் போராடினர்.

புரட்சி அலை அடங்கி ஓய்ந்து போன கடுமையான சூழ்நிலைகளில் நிதானத்துடன் போராடும் திராணியற்ற ''இடதுசாரி''—சந்தர்ப்பவாதப் பிரிவினர்கள் இவர்கள். எதார்த்த நிலைமைகளை அலட்சியம் செய்து விட்டு, எந்த நேரத்திலும் புரட்சியைச் ''செய்து முடிக்கலாம்'' என்ற வெறும் அசட்டுத் துணிச்சலில் உடனடியான ஆயுதந் தாங்கிய எழுச்சிக்கு அழைப்பு விடுத்தார்கள் அவர்கள்.

வில்லிஹ்-ஷாப்பெர் குழுவின் தன்னிச்சைக் கண்ணேட்டத்தினைக் கடுமையாக விமர்சனம் செய்து, மத்திய கமிட்டிக் கூட்டத்தில் 1850 செப்டம்பர் 15ல் மார்க்ஸ் பேசினுர்:

''கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையில் கண்டுள்ள பொருள்முதல் வாத கண்ணோட்டத்திற்கு பதிலாக, கருத்துமுதல்வாதக் கண்ணோட்டம் முன்வைக்கப்படுகிறது. எதார்த்தத்தில் இருக்கின்ற உறவுகள் தாம் புரட்சியில் பிரதானமானவை என்பதற்குப் பதிலாக மனவிருப்பம்தான் பிரதானமானது என்று சொல்லப்படுகிறது. 'நிலவுகின்ற சூழ்நிலைகளை மாற்றி அமைக்கவும், ஆதிக்கம் செலுத்துவதற்குத் திறமையுள்ளவர்களாக உங்களை நீங்களே செய்து கொள்வதற்கும் இன்னும் 15, 20, 50 வருடங்கள் நீங்கள் உள்நாட்டுப் போரில் ஈடுபட வேண்டி இருக்கலாம்' என்று நாங்கள் தொழிலாளர்களைப் பார்த்துச் சொல்லுகின்ற பொழுது, அதற்குப் பதிலாக, 'இப்பொழுதே உடனடியாக நாம் ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்டு விட வேண்டும், இல்லையேல் படுத்துறங்கப் போய் விடலாம்' என்று சொல்லுகிறார்கள்.''*

செப்டம்பர் 15ல் போராட்டச் சிக்கு அவிழ்ந்தது. கம்யூனிஸ்டுகள் சங்க மத்திய கமிட்டியை கொலோனுக்கு மாற்றி, மத்திய கமிட்டியின் அதிகாரத்தை கொலோன் வட்டாரக் கமிட்டியின் கையில் ஒப்படைப்பது என்று மார்க்ஸ், எங்கெல்ஸ் தலைமை வகித்திருந்த மத்திய கமிட்டியின் பெரும்பான்மை தீர்மானித்தது. சங்கத்தின் மத்தியத் தலைமையை, வில்லிஹ்-ஷாப்பெர் குழுவின் எண்ணிறந்த லண்டன் ஆதரவாளர்களின் செல்வாக்கிலிருந்து மீட்பதற்காக் இவ்வாறு தீர்மானிக்க வேண்டியது அவசியமாக இருந்தது.

1848-49 புரட்சிக்குப் பிந்தைய முதலாண்டுகளில் மார்க்ஸ், எங்கெல்ஸ் எழுதிய சித்தாந்த நூல்களில் மிக முக்கியமானது, இந்தப் புரட்சி தந்த படிப்பினைகளைப் பகுப்பாய்வு செய்து புரட்சிப் போராட்டத்தின் புதிய அனுபவங்களைத் தொகுத்துக் கொடுத்தது ஆகும். 1848 முதல் 1850 வரை பிரான்சில் வர்க்கப் போராட்டம், லுயீ போனபார்டின் பதினெட்டாவது புரூமெர் என்ற மார்க்சின் நூல்களும், ஜெர்மனியில் விவசாயிகளின் போர், ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் ஆகிய எங்கெல்சின் நூல்களும் இந்தப் பணியின் பாற்பட்டவையாகும்.

உயிரோட்டமுள்ள, படைப்பாற்றலுள்ள மார்க்சிய

---

* K. Marx and F. Engels, *Works*, Russ. ed., Vol. VIII, p. 306.

போதனை புரட்சிகர நடைமுறையுடன் இடையருத தொடர்பு கொண்டு உருவாகி வளர்ச்சி பெறுகிறது என்பதற்கு இந்த நூல்கள் சான்றுய் விளங்குகின்றன. புரட்சிப் புயல் வீசுகின்ற காலத்தில், மிகப் பெரும் வல்லமையுடன் முன் முயற்சி எடுத்துப் பொதுமக்கள் செயல்படுகின்ற பொழுது, வரலாற்றுப் போக்கில் அவர்களது படைப்பாற்றல்மிக்க பாத்திரம் வெளிப்படுகிற போது, பாட்டாளி வர்க்கமும் உழைப்பாளி மக்களும் பெறுகிற அனுபவங்களைத் தொகுத்து வழங்கி, மார்க்சும் எங்கெல்சும் மிக முக்கிய முடிவுகளால் தமது போதனையை இன்னும் வளமைப்படுத்தினர்.

1850ல் மார்க்ஸ் எழுதிய **பிரான்சில் வர்க்கப் போராட்டம்** என்னும் நூலில் 1848-49ஆம் ஆண்டுகளின் புரட்சி தந்த தீர்மானமான படிப்பினையை, அதாவது **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்** கண்டுள்ள, பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவை பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் மெய்ப்பிக்கப்படுவதை மிக உறுதியாகக் கோடிட்டுக் காட்டுகிருர் மார்க்ஸ்.*

தமது ''போதனைகளுக்கு'' ஏற்றவாறு வர்க்கப் போராட்டம் என்பதையே விட்டு விட்டவர்கள் கடைப்பிடித்து வந்த, புரட்சிகளின் போக்கில் போண்டியாகிப் போன கற்பனுவாத, குட்டி முதளாளித்துவ சோஷலிசத்திற்கு எதிராக, புரட்சிகர சோஷலிசம், கம்யூனிசம் ஆகியவற்றை மார்க்ஸ் முன் வைத்தார். ''**இடையருத புரட்சிப் பிரகடனம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவையே** இந்தக் கம்யூனிசம். **வர்க்க வேறுபாடுகள் என்பதையே ஒழிப்பதற்கும்,** இந்த வேறுபாடுகளின் அடித்தளமான உற்பத்தி உறவுகள் அனைத்தையும் ஒழிப்பதற்கும், இந்த உற்பத்தி உறவுகளுக்குத் துணை போகும் சமுதாய உறவுகள் அனைத்தையும் ஒழிப்பதற்கும், இந்த சமுதாய உறவுகளிலிருந்து முளைத்து எழுகின்ற எல்லாக் கருத்துக்களையும் அடியோடு மாற்றி அமைப்பதற்

---

* ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்ற சொற்ருெடர் **பிரான்சில் வர்க்கப் போராட்டம்** என்னும் நூலில் முதன் முதலாக மார்க்சினுல் பயன்படுத்தப்பட்டது. இந்த நூல் 1848 முதல் 1849 வரை என்ற தலைப்பில் கட்டுரைத் தொடராக முதலில் வெளியாயிற்று.

கும் மாறுகின்ற கட்டத்தின் அவசியமான ஒரு படியாகும் இப்பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது.''*

இதே நூலில், சமுதாயத்தைப் பொருளாதார முறையில் புனர்நிர்மாணம் செய்வதற்காகப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் செய்ய வேண்டிய பணிகளையும் திட்டவட்டமாக வரையறுத்துக் காட்டுகிறார் மார்க்ஸ். முன்னர் கற்பனாவாதச் சோஷலிசமும் கம்யூனிசமும் முன்வைத்த தெளிவற்ற கோரிக்கையான ''சொத்துக்களின் பொதுவுடைமை''க்குப் பதிலாக சமுதாயத்தைப் பொருளாதாரத் துறையில் புனர்நிர்மாணம் செய்வதற்கான வழியையும் முறையையும் சுருக்கமாக வகுத்தளிக்கிறார்: ''உற்பத்திச் சாதனங்களைக் கைப்பற்றுவது, அவற்றைத் தொழிலாளி வர்க்கத்தின் கூட்டுக்குக் கீழ்ப்படியச் செய்வது, இதன் மூலம் கூலி உழைப்பு, மூலதனம் இவற்றுக்கிடையே நிலவும் பரஸ்பர உறவு ஆகியவற்றை ஒழித்துக் கட்டுவது.''

அரசைப் பற்றிய தமது போதனையை மேலும் வளமைப்படுத்தி அதற்கு உருவம் கொடுப்பதற்கு மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் *1848-49* புரட்சிகளின் அனுபவம் உதவி செய்தது. லுயீ போனபார்ட்டின் பதினெட்டாவது புரூமெர் என்ற நூலில் *(1852)* பழைய அரசு இயந்திரத்தைப் பற்றிப் பேசுகையில் மார்க்ஸ் பின்கண்ட மிகமிக முக்கியமான முடிவுக்கு வந்தார்:

''இவ்வியந்திரத்தை உடைத்தெறிவதற்குப் பதிலாக, இதனைச் செம்மைப்படுத்துவதிலேயே எல்லாப் புரட்சிகளும் ஈடுபட்டன.''**

இதனை மேற்கோள் காட்டி லெனின் எழுதினார்: ''மார்க்சியமானது சிறப்புக்குரிய இந்த வாசகத்தில், கம்யூனிஸ்டு அறிக்கையுடன் ஒப்பிடுகையில் மிகப் பெரியதொரு முன்னேற்ற அடி எடுத்து வைக்கிறது. கம்யூனிஸ்டு அறிக்கையில் இன்னமும் அரசு மிகப் பெருமளவுக்குக் கருத்தியலான முறையிலேதான், மிகவும் பொதுப்படையான தொடர்களிலும் வாக்கியங்களிலும்தான் பரிசீலனைக்கு எழுப்பப்படுகிறது.

---

* K. Marx, *Class Struggle in France;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II, Part I, Moscow 1952, pp. 226-227.

** Marx, *Eighteenth Brumaire of Louis Bonaparte;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 333.

மேலே தரப்பட்ட வாசகத்தில் இப்பிரச்சினை ஸ்தூலமான முறையில் பரிசீலிக்கப்படுகிறது; மிகமிகத் துல்லியமான, திட்டவட்டமான, நடைமுறை சார்ந்த, கண்கூடான முடிவு பெறப்படுகிறது: முந்தியப் புரட்சிகள் எல்லாம் அரசுப் பொறியமைவைச் செம்மையே செய்தன, ஆனால் இந்தப் பொறியமைவு தகர்த்து நொறுக்கப்பட்டாக வேண்டும்.

இம்முடிவுதான் அரசு பற்றிய மார்க்சிய போதனையில் தலையாயதும் அடிப்படையானதுமான அம்சம்.''*

பிரான்சில் வர்க்கப் போராட்டம், லூயி போனபார்டின் பதினெட்டாவது புரூமெர் ஆகிய நூல்களில், பாட்டாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையிலான உறவுகளைப் பற்றிய பிரச்னையில் மிகப் பெரும் கவனம் செலுத்துகிறார் மார்க்ஸ். பாட்டாளி வர்க்கம் விவசாயி மக்களைத் தன் பால் ஈர்த்து இழுக்க முடியாமல் போனது ஏன் என்று ஆய்வு செய்கிறார் மார்க்ஸ். இந்த ஒற்றுமையின்மையே புரட்சி தோல்வியடையக் காரணமாய் இருந்தது. விவசாயி மக்கள் தமது நலன்களைச் சரியாகப் புரிந்து கொண்டால் நகரப் பாட்டாளி வர்க்கத்துடன் ஒன்று சேருவதற்கு அவர்கள் முன் வருவர் என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். ''முதலாளித்துவ அமைப்பைத் தூக்கியெறிவதற்குப் பணிக்கப்பட்டுள்ள நகரப் பாட்டாளி வர்க்கத்தைத்தான் தமது இயல்பான கூட்டாளியாகவும் தலைவனாகவும்... விவசாயிகள் காண்கின்றனர்.''** 1848-49 புரட்சி தந்த படிப்பினைகளின் அடிப்படையில் செய்த இந்தத் தலைசிறந்த முக்கியத்துவமுள்ள அரசியல் முடிவினை 1856 ஏப்ரல் 16ல் எங்கெல்சுக்கு எழுதிய கடிதத்தில் இன்னும் வளமைப்படுத்துகிறார் மார்க்ஸ்: '''விவசாயிகளின் போரினது' இரண்டாவது பதிப்பு ஒன்று பாட்டாளி வர்க்கப் புரட்சியை ஆதரிப்பதைப் பொறுத்துத்தான் ஜெர்மனியின் பிரச்னை அனைத்தும் தீர்க்கப்படும்.''

விவசாயிகள் பிரச்னையில் எங்கெல்சும் வெகு கூரிய கவனம் செலுத்தினார். மதிப்புரை என்னும் பத்திரிகையின்

* வி. இ. லெனின், அரசும் புரட்சியும் (வி. இ. லெனின், நூல் திரட்டு, இரண்டாம் பாகம்), மாஸ்கோ 1977, பக்கங்கள் 244-245).

** Marx, *Eighteenth Brumaire of Louis Bonaparte;* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. I, Moscow 1955, p. 338.

கடைசி இரட்டை இதழில் (1850 நவம்பர் 5 ஆவது, 6ஆவது இதழ்கள்), **ஜெர்மனியில் விவசாயிகளின் போர்** என்னும் வரலாற்று முக்கியத்துவமுள்ள எங்கெல்சின் நூல் வெளியாயிற்று.

1525ல், ஜெர்மனியில், நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக நடந்த மாபெரும் விவசாயிகள் எழுச்சி பற்றி, இந்த விவசாயிகள் போரின் காரணங்களையும் போக்கையும் விளைவுகளையும் நிர்ணயித்த அம்சங்கள் பற்றி, வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் இந்த மகத்தான நூலில் ஆய்வு செய்து விளக்கம் தருகிறார் எங்கெல்ஸ். வர்க்கப் போராட்டத்தில் விவசாயிகள் வகிக்கின்ற பங்கையும் பெறுகின்ற முக்கியத்துவத்தையும், விவசாயி மக்களுக்குத் தலைமை தாங்குவதற்குப் பாட்டாளி வர்க்கம் போராட வேண்டிய தன் அவசியத்தையும் அழுத்தந் திருத்தமாகக் கோடிட்டுக் காட்ட ஒரு சாதனமாக இந்த நூல் எங்கெல்சுக்கு விளங்கியது. 1525ல் நடந்த வர்க்கப் போராட்டத்தின் திட்டவட்டமான வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில், 1848-49 புரட்சிச் சமர்களின் படிப்பினைகளைப் பொதுமக்களுக்கு விளக்கினார் எங்கெல்ஸ். நவீன முதலாளிகளின் முன்னோடிகளாக இருந்த பியூர்கெர்கள் புரிந்த துரோகமும், அரசியல் ரீதியில் ஜெர்மனி சிதறுண்டு கிடந்ததும், உள்ளூர் சுயாட்சி வாதமும் (இவ்வாதத்தின் விளைவாக, பொதுவான தேசிய இயக்கம் ஜெர்மனியில் நடைபெறாமல், ஆங்காங்கு வெடித்துக் கிளம்பிய நூற்றுக் கணக்கான எழுச்சிகள் பெரும்பாலும் தனித்தனியாக ஒடுக்கப்பட்டன) விவசாயிகளின் எழுச்சிகள் தோல்வியடைய வகை செய்தன என்று எங்கெல்ஸ் எடுத்துக் காட்டினார். இந்த நூலில், மகத்தான விவசாயிகள் போரில் உறுதி வாய்ந்த உரமேறிய தலைவர்களைப் பற்றிச் சொல்லி, ஜெர்மன் மக்களுக்கு அவர்களின் புரட்சிகர மரபினையும் நினைவூட்டுகிறார் எங்கெல்ஸ்.

1851-52ல் எங்கெல்ஸ் எழுதிய **ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப் புரட்சியும்** என்கிற நூலும் 1848-49 புரட்சிச் சமர்களின் விளைவுகளை எடுத்துச் சொல்லுகிறது. வரலாற்றுப் பொருள்முதல்வாத ஆய்வு முறையை மிகத் திறமையுடன் கையாள்பவரும், நிகழ்ச்சிகளில் நேரடியாகத் தாமே பங்கு கொண்டவரும், அந்நிகழ்ச்சிகளை ஆழமான அறிவுடன்,

தெளிவாகப் புரிந்து கொண்டவருமான எங்கெல்சுக்கு, சுவடு மறையாமல் இருந்த 1848-49 ஜெர்மன் புரட்சிக்கான காரணங்களை, உந்து சக்திகளை, முக்கிய கட்டங்களை, சர்வதேச நிலைமையை, அப்புரட்சி தந்த விளைவுகளை, படிப்பினைகளை உடனடியாகவும் மிகச் சிறப்பாகவும் பகுப்பாய்வு செய்ய அவரது திறமைகள் யாவும் உதவின.

எங்கெல்சினுடைய இந்த நூலின் மிக முக்கிய பகுதி ஆயுதந்தாங்கிய எழுச்சி பற்றிச் சொல்லுகிறது. 1848-49 ஆயுதப் போராட்டத்தில் எங்கெல்ஸ் பெற்ற அனுபவங்களும், **ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப் புரட்சியும்** என்னும் நூலில் அவற்றை அவர் பொதுமைப்படுத்தியதும், பாட்டாளி வர்க்கத்தின் விஞ்ஞானபூர்வப் போர்த்தந்திரம், நடைமுறை உத்திகள் ஆகியவற்றிற்குக் கிடைத்த நிரந்தரப் பொக்கிஷமாகும்.

ஆயுதந்தாங்கிய எழுச்சியை ஒரு கலையாகப் பாவிக்கிற மார்க்சிய போதனைக்கு ஒரு சிறப்பு மிக்க சூத்திரம் இந்த நூலில் அடங்கி இருக்கிறது. பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற வேண்டுமானால் அதற்கு வழிகாட்டியாய் இருக்க வேண்டிய எழுச்சியின் அடிப்படை ''விதிகள்'' வெகு வெகு துல்லியமாக சுட்டிக் காட்டப்படுகின்றன: ''போரினைப் போல, பிற வகைக் கலைகளைப் போல எழுச்சியும் ஒரு கலையாகும். குறிப்பிட்ட விதிகளுக்கு அது கட்டுப்பட்டிருக்கிறது. இவற்றைக் கடைப் பிடிக்காத குற்றத்தைச் செய்த கட்சி அடியோடு நாசமாகும்... முதலாவதாக, இறுதி வரை ஏறிச் செல்லும் உறுதியில்லை என்றால் எழுச்சியுடன் ஒரு போதும் விளையாடக் கூடாது.... இரண்டாவதாக, எழுச்சியைத் தொடங்கிய பின் மிகப் பெரும் உறுதியுடன் செயல்பட்டு முன்னேறித் தாக்க வேண்டும். எந்தவொரு எழுச்சியிலும் தற்காப்புப் போர் நடத்துவது பேரழிவைத்தான் கொண்டு வரும்.... எதிரியின் படைகள் சிதறுண்டு கிடக்கும் பொழுதே திடுதிப்பென்று தாக்க வேண்டும்; ஒவ்வொரு நாளும் புதுப் புது வெற்றிகளை ஈட்ட வேண்டும்—அவை சிறுசிறு வெற்றிகளாயினும் பரவாயில்லை; எழுச்சியாளர்களின் வெற்றிகரமான முதல் முன்னேற்றம் எதிரிகளை விட அவர்களை ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களாக்கும். இதனைக் கட்டிக்காக்க வேண்டும். பலமிக்கதாயும் நம்பிக்கையுள்ளதாயும் தோன்றும்

பக்கத்தை நோக்கி எப்போதும் செல்லுகின்ற ஊசலாட்டக் காரர்களைக் கவர்ந்து இழுக்க வேண்டும்; நமது பக்கத்தை நோக்கி எதிரி தனது ராணுவத்தை ஒன்று சேர்த்துத் திரும்பு முன்னே எதிரியைப் பின்வாங்கி ஓடுமாறு நிர்ப்பந்திக்க வேண்டும்.''*

எழுச்சியைத் தொடங்கு முன்னே, அரசியல் நிலைமைகளை யும் ராணுவ நிலைமைகளையும் தெளிந்த மனத்துடன் எடை போட்டுப் பார்க்க வேண்டும். எழுச்சி மேற்கொள்வது என்று முடிவெடுத்த பின்னே, அதற்கான தயாரிப்பு வேலை களைத் தொடங்கிய பின்னே, எழுச்சியை ஒரு கலை எனப் பாவித்து, மிகப் பெரும் உறுதியுடனும், துணிச்சலுடனும் செயல்பட்டு இடையறாத தாக்குதல்களைத் தொடுக்க வேண்டும்.

எழுச்சி ஒரு கலையாகும் என எங்கெல்ஸ் செய்த மேதைமை மிக்க முடிவுகள், மார்க்சியக் களஞ்சியத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிய ஒரு முக்கியமான பிரிவாகி உள்ளன.

இவ்வாறு, *1848-49* புரட்சியின் அனுபவங்களைப் பொது மைப்படுத்தும் மார்க்ஸ், எங்கெல்சின் தத்துவ நூல்கள், நடைமுறையில் தனது முதல் சோதனையில் மார்க்சியம் சிறப் புடன் தேறிவிட்டது என்று காட்டியது மட்டுமல்லாமல், இந்த நடைமுறையின் அடிப்படையில் மேலும் வளர்ச்சியுறு வதற்கும், வளமை எய்துவதற்கும் வியத்தகு திறமை பெற் றுள்ளது அது என்றும் காட்டின.

தத்துவப் பணிகளைத் தவிர, பாட்டாளி வர்க்கப் புரட்சி வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும் அவர்களை ஒருங்கு சேர்ப்பதிலும் விடாமுயற்சியுடன் மார்க்சும் எங்கெல்சும் பணியாற்றினர்.

1850 செப்டம்பர் பிளவுக்குப் பின் கம்யூனிஸ்டுகள் சங் கம் கடுமையான காலத்தைக் கடந்து செல்ல வேண்டியதா யிற்று. வில்லிஹ்-ஷாப்பெர் ஆகியோரும் அவர்களது ஆதர வாளர்களும் செய்து வந்த சீர்குலைவு வேலைகளுடன் போலீ சின் அடக்குமுறைகளும் சேர்ந்து கொண்டன. *1851* மே-ஜூன் மாதங்களில் கொலோன் மத்திய கமிட்டியின் உறுப்

* Engels, *Revolution and Counter-Revolution in Germany;* K. Marx, *Selected Works* in two volumes, Vol. II, Moscow-Leningrad 1936, p. 110.

பினர்கள் பலரும், சங்கத்தின் மற்ற முக்கியப் பிரமுகர்களும் ஜெர்மனியில் கைது செய்யப்பட்டனர். போலீஸ் உளவாளி களான ஆத்திரமூட்டும் பேர்வழிகளைக் கொண்டு, கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக மிருகத்தனமான வழக்கு தயாரிக்கத் தொடங்கியது அரசாங்கம். இவ்வழக் கின் பொய்மையை அம்பலப்படுத்துவதில் ஈடுபட்டிருந்த மார்க்சுக்கு மகத்தான உதவிகள் செய்தார் எங்கெல்ஸ். பிரஷ்யப் போலீஸ் உளவாளி ஷ்டிபெரின் ஆத்திரமூட்டல், பித்தலாட்டம், சூழ்ச்சிகள் ஆகியவற்றின் முகமூடியைக் கிழித்து ஆங்கிலேய, ஜெர்மன் பத்திரிகைகள் பலவற்றில் அவர்கள் எழுதினர்கள். அதே நேரத்தில் குற்றம் சாட்டப் பட்டவர்களின் பாதுகாப்புக்காகத் தகவல்களையும் ஆவணங் களையும் சேகரித்து வந்தனர்.

இந்த வேளையில், வில்லிஹ்-ஷாப்பெர் பிரிவும், இவர் களின் குட்டி முதலாளித்துவக் குடியேற்றக்கார ஆதரவாளர் களும் தொடுத்த கடுமையான, மேலும் மேலும் அருவருப் பான தாக்குதல்களையும் மார்க்சும் எங்கெல்சும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டி இருந்தது. 1852 மே—ஜூனில் மார்க் சும் எங்கெல்சும் சேர்ந்து மாபெரும் குடியேற்ற வீரர்கள் என்னும் விமர்சனக் கட்டுரை ஒன்று எழுதினர். இக்கட்டு ரையில், லண்டனில் குடியேறியுள்ள ஜெர்மன் அரசியல் வாதிகளின் குட்டி முதலாளித்துவத் தலைவர்கள், உண்மை யான புரட்சிகரப் பணிகளுக்குப் பதிலாக, பரிதாபகரமான வாய்ச் சவடால் வேலைகளில் ஈடுபட்டிருப்பதைத் தீவிரமாகத் தாக்கித் தகர்த்தனர்.

1852 அக்டோபர்—நவம்பரில், கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்டுகள் சங்க உறுப்பினர்கள் பதினொரு பேர் மீது வழக்கு தொடுக்கப்பட்டு, அதில் ஏழு பேருக்கு வேறு வேறு காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. கொலோன் நக ரில் கம்யூனிஸ்டுகளுக்குத் தண்டனை வழங்குவதற்குப் பிரஷ்ய அரசாங்கம் மேற்கொண்ட கேடுகெட்ட உத்திகளை அம்பலப் படுத்த கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கின் உண்மை உருவம் என்ற பிரசுரத்தை மார்க்சும், கொலோ னில் கம்யூனிஸ்டுகள் மீது வழக்கு என்ற கட்டுரையை நியூ யார்க் டிரிப்யூன் பத்திரிகையில் எங்கெல்சும் எழுதினர்.

ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகள் கைதானதும், அதன்பின்

அவர்கள் மீது கொலோனில் நடந்த வழக்கும் கம்யூனிஸ்டு கள் சங்கத்திற்கு மரண அடி கொடுத்தன. மார்க்ஸ், எங் கெல்சின் தலைமையில் இருந்த லண்டன் குழுவிற்கும், ஐரோப் பியக் கண்டத்திற்கும் இடையே இருந்த தொடர்புகள் அறுந்து போயின. கம்யூனிஸ்டுகள் சங்கம் நடைமுறையில் உயிரிழந்தது. 1852 நவம்பர் மத்தியில் மார்க்சின் ஆலோசனை யின் பேரில் கம்யூனிஸ்டுகள் சங்கம் தான் கலைக்கப்பட்டு விட்டதாக அறிவித்தது.

பிற்போக்கின் பெருந்தாண்டவத்தினாலும், அரசாங்கத் தின் அடக்குமுறைகளாலும் கலைந்து விடுமாறு கட்டாயப் படுத்தப்பட்ட போதும், கம்யூனிஸ்டுகள் சங்கம் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் கோட்பாடுகளே தனது சித்தாந்தப் பதாகை யாகுமெனப் பறைசாற்றி, மார்க்சியமானது தொழிலாளர் இயக்கத்துடன் ஒன்று சேர்ந்ததன் துவக்கத்தைக் குறித்து, இவ்விதம் பாட்டாளி வர்க்கக் கட்சியின் முதலாவது வர லாற்று வடிவமாய்த் தொழிலாளர் இயக்க வரலாற்றில் ஆழ மான சுவடு பதித்துள்ளது. பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றை உருவாக்குவதற்காக மார்க்சும் எங்கெல்சும் நடத்திய போராட்ட வரலாற்றில், கம்யூனிஸ்டுகள் சங்கத்தில் அவர் கள் செய்த பணிகள் பிரகாசமிக்கதாய் விளங்குகின்றன. கம்யூனிஸ்டுகள் சங்கம் கலைக்கப்பட்ட பின்னரும் கூட, புரட்சிகரத் தத்துவத்தைப் பிரசாரம் செய்வதிலும், தொழி லாளி மக்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும், அவர்களைப் புதிய புரட்சிப் போர்களுக்குத் தயார் செய்வதிலும், மார்க்சாலும் எங்கெல்சாலும் பயிற்றுவிக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத் தின் சிறந்த பிரதிநிதிகள் தொடர்ந்து ஈடுபட்டனர்.

6

பிற்போக்குக் காலத்திலும் முதலாளித்துவ-ஜனநாயக இயக்கங்கள் புதிய எழுச்சி பெற்ற காலத்திலும் எங்கெல்ஸ்

பிற்போக்கு தலைவிரித்தாடிய காலத்தில், மார்க்சும் எங்கெல்சும் தத்துவ, கட்சி, அரசியல் பணிகள் மேற்கொள்வதற்கு இடையூருக, எல்லையற்ற தொல்லைகள் நிறைந்த நிலைமைகள் உருவாயின. நாடு கடத்தப்பட்ட கொடுமைகள் எல்லாம், பணமில்லாத் துன்பங்கள் அனைத்தும் அவர்களை நெருக்கிச் சூழ்ந்தன. பாட்டாளி வர்க்கத் தலைவர்களுக்கு மிகமிகச் சாதாரணமான தேவைகள் கூடக் கிட்டாமல் செய்து, முதலாளித்துவ சமூகம் அவர்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டது. பத்திரிகைத் தொழில் மூலமாக எப்படியோ ஒரு வழியாக எங்கெல்ஸ் தன் வாழ்வைச் சமாளித்துக் கொண்டாரென்ருல், குடும்பப் பாரத்தால் அழுத்தப்பட்ட மார்க்சுக்கு இது நினைத்தும் பார்க்க முடியாததாய் இருந்தது.

பாட்டாளி வர்க்கத்திற்கு அதன் ஆசானைக் காத்துக் கொடுப்பதற்காகவும், மார்க்சினுடைய மேதைமைக்கு வழி சமைத்துக் கொடுப்பதற்காகவும் செய்யு முடியாத தியாகம் எங்கெல்சுக்கு அந்த நிலைமைகளில் ஏதுமில்லை.

அப்போது நிலவிய சூழ்நிலைகளில், தனது நண்பருக்கு உதவுவதற்காக எங்கெல்சுக்குக் கிட்டிய ஒரே ஒரு வழி, ''கேடு கெட்ட வர்த்தகத் தொழிலுக்குத்'' திரும்பிப் போவதுதான். முறையீடின்றி, முணுமுணுப்பில்லாமல், முகச் சுளிப்பின்றி எங்கெல்ஸ் இதனை மேற்கொண்டார். செய்யக் கூடியது வேறு எதுவுமே இல்லை. தமது நண்பரின் எல்லையற்ற தன்னலத் தியாகத்தை மார்க்சும் இயற்கையாக ஏற்றுக் கொண்டார். உண்மையில், தமது வாழ்க்கையை அவர்கள் எதற்காகச் சமர்ப்பித்து விட்டார்களோ, அதன் வெற்றிக்காக முன்னைப் போலவே தோளோடு தோள் நின்று அவர்கள் சமர் புரிந்தனர். அவர்களிடையே இருந்த வேலைப் பிரிவின் வடிவத்தை மாற்றி அமைத்துக் கொள்ளுமாறுதான் புதிய

சூழ்நிலைகளால் செய்ய முடிந்தது. தமது நண்பருடைய மேதைமையின் மேன்மையை எப்போதும் போற்றிப் புகழ்ந்து அவருக்குத் தலைவணங்கிய எங்கெல்ஸ், மார்க்சினுடைய தத்துவ அரசியல் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்காக, மார்க்சுக்கும் அவர் குடும்பத்திற்கும் அவசியமான பொருளாதாரத் தேவைகளைக் குறிப்பிடத்தக்க அளவு நிறைவு செய்வது இயல்பான தமது கடமை என்று கருதினார்.

1850 நவம்பரில் மாஞ்செஸ்டரில் குடியேறினார் எங்கெல்ஸ். இங்கே, ''எர்மென் மற்றும் எங்கெல்ஸ்'' நிறுவனத்தின் வர்த்தகத் துறைப் பிரதிநிதியாகப் பணியாற்றத் தொடங்கினார்.

எங்கெல்ஸ் வர்த்தகத் தொழிலுக்குத் திரும்பிச் சென்றதையும் பிரிட்டிஷ் மியூசியத்தில் கடுமையான ஆராய்ச்சிப் பணியினை மார்க்ஸ் மேற்கொண்டதையும் சுட்டிக் காட்டி ''ஐரோப்பியக் கமிட்டிகள்,'' ''தாற்காலிக அரசாங்கங்கள்'' போன்றவற்றில் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந்த குட்டி முதலாளித்துவக் குடியேற்றக்காரர்கள் பொய்களையும் அவதூறுகளையும் மார்க்ஸ், எங்கெல்ஸ் மீது வெள்ளமெனப் பொழிந்தனர். குடியேற்றக்காரர்கள், ரூகே, வில்லிஹ் போன்றோர் மூலமாக, மார்க்சையும் எங்கெல்சையும் ''எல்லோராலும் ஒதுக்கித் தள்ளப்பட்ட தனி மனிதர்கள்'' என்றும் இன்னும் பலவாறாகவும் மிகக் கொச்சையாக ஏசினர். எங்கெல்சை ஒரு ''வியாபாரி'' என்று கண்டனம் செய்தும் வந்தனர். ஆனால், கடமையையே செய்து வருகிறோம் என்ற உணர்வு இந்தக் கேலிகளுக்கும் குத்தல்களுக்கும் எதிராக எங்கெல்சைப் பாதுகாத்தது. இத்தகைய நேரங்களில் கோபாவேசமாக சண்டையில் பாயத் தயாரான மார்க்சை, குடியேற்றக்காரர்களின் ''அவதூறுகளையும் நீசத்தனங்களையும்'' சட்டை செய்ய வேண்டாம் என்று கூறிச் சமாதானப் படுத்தினார் எங்கெல்ஸ். மூலதனம் என்ற நூலை எழுதி வந்த மார்க்சின் பணிகளுக்கு உதவி செய்வதன் மூலம், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்காக எல்லாக் குட்டி முதலாளித்துவ வாய்ச் சவடால் வீரர்களைக் காட்டிலும் தாம் மிக அதிகம் சேவை செய்வதாக எங்கெல்ஸ் கருதினார்.

எனினும், ''கேடுகெட்ட வர்த்தகத்தின்'' வெறுக்கத் தக்க பாரத்தை இன்னும் சிறிது காலம் மட்டுமே தாம் சுமக்க

நேரும் என்று எங்கெல்ஸ் நம்பினுர். இயந்திரத் தொழில் எழுச்சியின் முடிவு நெருங்குகிறது என்றும், நெருக்கடி வெடிக்கப் போகிறது என்றும், அதன் பின்னே புதிய புரட்சிப் புயல் வீசப் போகிறது என்றும் எங்கெல்ஸ் கருதினுர்.

ஆனுல், எங்கெல்சின் இந்த நம்பிக்கைகள் மெய்யாகு மாறு விதிக்கப்படவில்லை. ''சிறைக் கொட்டடியில்'' அவர் உழன்றது சுமார் 20 ஆண்டுகள் நீடித்தது. நிறுவனத்தின் பிரதிநிதியாக வேலை தொடங்கிய அவர், 1860ஆம் ஆண்டு அதில் பொறுப்புள்ள பிரதிநிதியாகவும் தந்தையின் மறைவுக்குப் பின் தாம் பெற்ற பங்குப் பணத்தை அதில் முதலீடு செய்து 1864 முதல் அதன் உடைமையாளர்களில் ஒருவராகவும் இந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருந்தார்.

அவரது வேலைச் சூழல்கள் தமது இயல்புக்கு மாறுபட்டவர்கள் மத்தியில் சுற்றிச் சுழலுமாறும், வெளி மரியாதைகளைக் கைக்கொள்ளுமாறும் ஒரு இரட்டை வாழ்க்கையை மேற்கொள்ளுமாறும் அவரைக் கட்டாயப்படுத்தின. முதல் முறை மாஞ்செஸ்டரில் எங்கெல்ஸ் வசித்த பொழுதே அவர் காதலித்து மணந்து கொண்ட, ஒரு எளிய அயர்லாந்து தொழிலாளப் பெண்மணியான அவரது மனைவி மேரி பேர்ன்ஸ் வீட்டில்தான், தமக்கு அன்னியமான சூழ்நிலையிலிருந்து ஒதுங்கி ஓய்வு கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது அவருக்கு. இங்குதான், தமது பழைய நண்பர்களான வில்கெல்ம் வோல்ஃப், துரோன்கே, வேயெர்த்து, ஜோன்ஸ், புதிய நண்பர்களான வக்கீல் சாம்யுவேல் மூர், சிறந்த இரசாயன விஞ்ஞானி கார்ல் ஷார்லிம்மர் போன்ற பலரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் அவருக்கு வாய்த்தது.

கடுமையான துன்பம் அவரைச் சூழ்ந்திருந்த இந்த நேரத்தில், விசுவாசமும் அன்பும் நிறைந்த இந்தப் பெண்மணிதான் எங்கெல்சுக்குப் பெரும் ஆதரவாகவும் ஆறுதலாகவும் இருந்தார். 1863 ஜனவரி 6ல் இதய நோய் கண்டு மேரி காலமானுர். இந்த இழப்பு எங்கெல்சைக் கடுந் துக்கத்துக்கு ஆளாக்கியது. அவர் மார்க்சுக்கு பின்வருமாறு எழுதினுர்: ''நான் இவ்வளவு நீண்ட காலம் இப்பெண்மணியுடன் வாழ்க்கை நடத்தியதால் அவளது மறைவு என்னைப் பெரிதாக உலுக்கி விடாமல் இருக்க முடியாது. அவளுடன் கூடவே எனது

இளமையின் கடைசித் துளியையும் புதைத்து மூடி விட்டதாக நான் உணர்ந்தேன்.''*

மார்க்சும் எங்கெல்சும் வேறு வேறு நகரங்களில் இருபதாண்டுகளுக்கு மேலாக வாழுமாறு நிர்பந்திக்கப்பட்ட போதிலும், அவர்களிடையே நிலவிய வரலாறு காணுத நட்பு மேலும் மேலும் இறுகி வலுப் பெற்றது. ''ஒன்ருக வாழவும், ஒன்ருகப் பணியாற்றவும், ஒன்ருகச் சிரித்து மகிழவும்'' முன்போல் முடியவில்லையே என்று அடிக்கடி அவர்கள் துக்கப்பட்டார்கள் என்பது உண்மையே. மார்க்ஸ் மாஞ்செஸ்டர் போவதோ, எங்கெல்ஸ் லண்டன் வருவதோ அடிக்கடி நிகழக் கூடியதாயில்லை. இதன் காரணமாகவே கடிதப் போக்குவரத்து வெகு உயிரோட்டத்துடன் நடைபெற்றது. உதாரணமாக, எங்கெல்சிடமிருந்து பதில் வரச் சற்றே தாமதமாக வேண்டியதுதான், கவலை கொண்ட மார்க்சிடமிருந்து கடிது வரும் கேள்வி: ''இனியவனே எங்கெல்ஸ்! நீ அழுகிருயா சிரிக்கிருயா, தூங்குகிருயா துயில் நீங்குகிருயா?''

நீண்ட காலத்திற்கு விஞ்ஞானக் கம்யூனிச மூலவர்கள் வேறு வேறு நகரங்களிலே பிரிந்து வாழுமாறு நிர்பந்திக்கப்பட்ட காரணத்தினுலேயே, மார்க்ஸ், எங்கெல்சின் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு ஆய்வுச் சாலையாக, அவர்கள் விட்டுச் சென்ற இலக்கிய மாணிக்கமாக பிரம்மாண்டமான கடிதத் திரள் நமக்குக் கிடைத்திருக்கிறது.

மார்க்ஸ், எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்து பற்றி லெனின் எழுதினுர்: ''இதனுடைய விஞ்ஞான, அரசியல் முக்கியத்துவம் பிரம்மாண்டமானது. இங்கு மார்க்சும் எங்கெல்சும் வாசகரின் முன்னே முழு உருவில் உயர்ந்து நின்று பேசுகிருர்கள் என்பது மட்டுமல்ல. மிகவும் புதியதான (கடந்த காலத்திய கருத்துக்களைப் பொறுத்தவரை), மிகவும் முக்கியமான, மிகவும் கடினமான விஷயங்களுக்கு அழுத்தம் கொடுத்து, அவற்றைத் தெளிவுபடுத்தி—சில சமயங்களில் கூட்டாக விவாதித்து, ஒருவருக்கு ஒருவர் மெய்ப்பித்துக் காட்டி—தமது போதனையின் பல்வேறு அம்சங்களைப் பற்றி கடிதங்களில் அடிக்கடி அவர்கள் பேசுகையில்... மார்க்சியத்

* *Engels' Letter to Marx on January 26, 1863;* Marx-Engels, *Gesamtausgabe*, Dritte Abteilung, Band 3, S. 121.

தின் வளமை மிக்க தத்துவார்த்த உள்ளடக்கம் பரந்து விரிந்து நம் கண் முன்னே உயர்ந்து மேலோங்கி நிற்கிறது.

''கடிதப் போக்குவரத்து அனைத்திலும் சொல்லப் படுகிற, விவாதிக்கப்படுகிற விஷயங்கள் எல்லாம் வந்து சேருகின்ற மையப் புள்ளியை, ஒரேயொரு வார்த்தையில் குவித்துக் காட்டுவதற்கு முயற்சி செய்வோமேயானால், அந்த வார்த்தை **இயக்கவியல்** என்பதாய்த்தான் இருக்கும். பொருள்முதல்வாத இயக்கவியலைப் பிரயோகித்து அரசியல் பொருளாதாரம் அனைத்தையும் மறு நிர்மாணம் செய்வது, இதன் அடிப்படையில் வரலாறு, இயற்கை இயல், தத்துவ ஞானம், அரசியல், தொழிலாளி வர்க்கக் கொள்கை, உத்தி ஆகியவற்றை அடியோடு மறுபரிசீலனை செய்வது முதலியற்றிலேயே வேறெதிலும் விட மார்க்சும் எங்கெல்சும் அக்கறை செலுத்தினர். இதில்தான் மிகமிக முக்கியமானதும், மிகமிகப் புதியதுமான பங்கினை அவர்கள் செலுத்தி இருக்கிறார்கள். இதில்தான், புரட்சிகரச் சிந்தனையினது வரலாற்றில் மேதைமை மிக்க அடியெடுத்து முன்னேக்கி வைக்கிறார்கள் அவர்கள்.''*

இந்தக் கடிதப் போக்குவரத்தில் ஊடுருவி நிற்கும் உற்சாகம் மிக்க, போராட்ட மனம் மிளிரும், உயிரோட்டமுள்ள மனநிலையை ஒரு வியக்கத்தக்க அம்சமாகக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. மார்க்சையும் எங்கெல்சையும் எதிரிகள் எவ்வளவுதான் துன்புறுத்திய போதிலும், முதலாளித்துவப் பத்திரிகைகள் பொய்களையும் அவதூறுகளையும் எவ்வளவு தான் வெள்ளமென அவர்கள் மீது பாய்ச்சிய போதிலும், உயிர் பிழைத்திருப்பதற்காக அயர்வு உண்டாக்கும் எத்தகைய சில்லறைப் போராட்டத்தை அவர்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தாலும் மகிழ்ச்சி மிக்க மனநிலையையும், ஹாஸ்ய உணர்வையும் உற்சாகத்தையும், போராட்டத்திற்கான தகர்க்க முடியாத மனவுறுதியையும் அவர்கள் ஒருபோதும் விட்டுவிடவில்லை.

மார்க்ஸ் விட்டுச் சென்ற இலக்கியச் சொத்துக்களை ஆராய்ச்சி செய்கையில் இக்கடிதங்களை மீண்டும் படித்த எங்கெல்ஸ் பேக்கருக்குப் பின்வருமாறு எழுதினர்: ''எதிரிகள்

* V. I. Lenin, *Marx-Engels-Marxism*, Moscow 1953, pp. 74-76.

எங்களுக்கு அள்ளிக் கொடுத்த மகிழ்ச்சி மிக்க பலப்பல நிமிடங்களும் அந்தப் பழைய காலமும் என் கண் முன்னே இன்னும் ஒருமுறை நிழல் போல் ஓடின. அந்தப் பழைய சம்பவங்களை அடிக்கடி நினைத்து நினைத்து, சிரிக்கச் சிரிக்க எனக்குக் கண்ணீரே வந்து விடுகிறது. எங்களிடமிருந்த ஹாஸ்ய உணர்வை மட்டும் எதிரிகளால் ஒருபோதும் தட்டிப் பறிக்க முடியவில்லை.''

மார்க்சின் மறைவிற்குப் பின் ஒரு இலக்கியவாதி தமது கட்டுரையில் ''துக்கம் தோய்ந்த மார்க்ஸ்'' பற்றி எழுதிய போது, இது பற்றி பெர்ன்ஷ்டைனுக்கு எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினர்: ''எனக்கு விசேஷமான மகிழ்ச்சிகர மன நிலை இருக்கும் போது ஒரு வேளை நான் அவருக்குச் எப்படியாவது சூடு கொடுப்பேன். மூருக்கும் எனக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்தை மட்டும் இந்த மர மண்டைகள் படிக்க முடிந்தால் ஒரேயடியாய்த் திகைத்துப் போவார்கள். துணிவும் மகிழ்ச்சியும் துள்ளும் எங்கள் வசன நடைக்கு முன்னல் ஹைனேயின் கவிதை வெறும் குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைதான். மூர் மூர்க்காவேசம் கொள்வதுண்டு, ஆனல் ஒரு போதும் முணுமுணுத்தது கிடையாது.''

மார்க்சையும் எங்கெல்சையும், மாபெரும் தத்துவஞானிகளாக, பாட்டாளி வர்க்கத்தின் தலைவர்களாக, தமது காலத்தில் தலைசிறந்த மனிதர்களாக, வியப்பூட்டும் வலிமையுடைய அறிவாற்றல் கொண்டவர்களாக, கொண்ட நோக்கில் குறியான பார்வை செலுத்துவோராக நாம் புரிந்து கொள்வதற்கு, அவர்களுக்கு இடையே நடந்த கடிதப் போக்குவரத்து செழுமை மிக்க தகவல்களைத் தருகிறது. இறுதியாக, தேவைகளின் பளுவினல் சாய்ந்து விழாமல் இருப்பதற்காக மார்க்ஸ் எனும் பாட்டாளி வர்க்க மேதை, இடையருத, கடுமையான, களைப்பூட்டும் போராட்டம் நடத்த வேண்டி இருந்ததை முழுச் சித்திரமாக இக்கடிதப் போக்குவரத்துத்தான் எடுத்துக் காட்டுகிறது; இந்தக் கடிதப் போக்குவரத்து மட்டுமே, பயனேதும் கருதாத, விசுவாசத்தின் உறைவிடமாகத் திகழ்ந்த மார்க்சின் நண்பரான பிரெடெரிக் எங்கெல்சினது குண நலன்களின் நிறை உருவையும் தரவல்லதாய் உள்ளது.

நிறுவனத்தின் பிரதிநிதியாக எங்கெல்ஸ் இருந்த பொழுது மார்க்சுக்கு அவர் செய்ய முடிந்த உதவி இன்னும்

மிகவும் போதாததாக இருந்தது. மார்க்சின் கழுத்தைப் பிடித்து நெருக்கியது வறுமை. தமக்கும் குடும்பத்துக்கும் வேண்டிய மிக மிக அவசியமான தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாமல் இருந்தார் அவர். கடன் கொடுத்தவர்களுடன் முடிவற்ற ''போர்'' நடத்தி, வாடகைக்காக வீட்டுக்காரனும், வாங்கிய பொருள்களுக்காகக் கடைக்காரர்களும் தரும் தொந்தரவுகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் படாத பாடுபட்டார் அவர். ஒருவருக்குப் பின் ஒருவராகக் குடும்பத்தினரைப் பலி கொண்டது ஏழ்மை. குடும்பம் முழுதும் அன்பு பாராட்டி வளர்த்த வியக்கத்தக்க சிறுவனுன மகன் மூஷின் மறைவு மார்க்சுக்கு பேரிழப்பாய் இருந்தது. இக்குழந்தையின் நோய் கண்டு மார்க்சுடன் சேர்ந்து துக்கம் கொண்ட எங்கெல்ஸ், சிறுவனை மரணத்தின் கோரப்பிடியிலிருந்து மீட்பதற்காகத் தம்மாலான அனைத்தையும் செய்தார். தமது அன்பு மகனது நோயின் போக்கு பற்றி எங்கெல்சுக்குப் பின்கண்டவாறு எழுதினுர் மார்க்ஸ்: ''எனக்குப் பதிலாக வேலை செய்து, நீ எனக்குச் செய்து வரும் தோழமை உதவிக்காகவும் குழந்தைக்காகப் பரிவு காட்டுவதற்காகவும் உனக்கு நான் எவ்வாறு நன்றி கூறுவது என்றே தெரியவில்லை.''*

சிறுவனை அடக்கம் செய்துவிட்டு எங்கெல்சுக்கு எழுதினுர் மார்க்ஸ்: ''துன்பங்கள் பலவற்றை நான் ஏற்கெனவே அனுபவித்திருக்கிறேன். ஆனுல், உண்மையான துக்கம் என்பது என்னவென்று இப்பொழுதுதான் உணர்கிறேன்....

''இந்த நாட்களில் நான் அனுபவித்த பயங்கரமான சித்திரவதைகளின் இடையில் உன்னைப் பற்றிய சிந்தனையும், உன்னுடைய நட்பைப் பற்றிய சிந்தனையும், நாமிருவரும் இப்பூமியில் உருப்படியாகச் செய்வதற்கு இன்னும் ஏதோ இருக்கிறது என்ற நம்பிக்கையும்தான் எனக்கு எப்போதும் ஆதரவாக இருந்து வந்தன.''**

மார்க்ஸ் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை ஈடு செய்வதற்குத் தம்மாலான அனைத்தையும் செய்தார் எங்

---

* *Marx' Letter to Engels on March 30, 1855;* K. Marx and F. Engels, *Works*, Russ. ed., Vol. XXII, p. 92.

** *Marx' Letter to Engels on April 12, 1855;* K. Marx and F. Engels, *Works*, Russ. ed., Vol. XXII, p. 94.

கெல்ஸ். மான்செஸ்டரில் எங்கெல்ஸ் குடியேறிய பின், விரைவிலேயே இலக்கியப் பணி மூலமாக மார்க்சுக்கு இன்னும் கூடுதலாகப் பொருளாதார உதவி நல்கும் வாய்ப்பு இருந்ததால், இவ்வாய்ப்பை இரு கைகளாலும் இறுகப் பற்றிக் கொண்டார் எங்கெல்ஸ். 1851 ஆகஸ்டில் *New-York Daily Tribune* என்னும் அமெரிக்க முற்போக்குப் பத்திரிகையில் பணியாற்றுமாறு அப்பத்திரிகை மார்க்சுக்கு அழைப்பு விடுத்தது. உதவி கோரி எங்கெல்சுக்கு மார்க்ஸ் கடிதம் எழுதினர்: "*New-York Tribune*ஐப் பொறுத்தவரை, நீ எனக்கு இப்போது உதவி செய்ய வேண்டும், ஏனெனில், நான் பொருளாதார ஆராய்ச்சியில் கழுத்து வரை மூழ்கிக் கிடக்கிறேன். 1848 முதல் தொடங்கி, ஜெர்மனியைப் பற்றி சில கட்டுரைகள் எழுது."* உடனடியாகப் பணி தொடங்கிய எங்கெல்ஸ் ஒன்றுக்குப் பின் ஒன்றாக மார்க்சுக்குக் கட்டுரைகள் எழுதி அனுப்பி வந்தார். மார்க்ஸ் அவற்றை நியூயார்க் டிரிப்யூன் பத்திரிகைக்கு முறையாக அனுப்பினர். அப்படித்தான் ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப் புரட்சியும் என்ற புகழ்பெற்ற கட்டுரைத் தொடர் பிறந்தது. மார்க்ஸ், எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்து வெளியான பின்புதான் இந்தக் கட்டுரைத் தொடர் மார்க்ஸ் எழுதியது அல்ல, எங்கெல்ஸ் எழுதியது என்று தெரியலாயிற்று.

நியூயார்க் டிரிப்யூன் பத்திரிகையில் மார்க்சுக்கு பதிலாக எங்கெல்ஸ் எழுதிய பெருமளவான கட்டுரைகளைத் தவிர, மார்க்ஸ் எழுதிய கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும் அவருக்கு உதவி புரிந்து வந்தார் எங்கெல்ஸ் (இந்தக் காலத்தில் ஆங்கில மொழியில் மார்க்ஸ் அவ்வளவாகப் புலமை பெற்றிருக்கவில்லை. 1853ஆம் ஆண்டு முதலாகத்தான் அவர் நேரடியாக ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினர்.) நியூயார்க் டிரிப்யூன் பத்திரிகைக்குப் பல்லாண்டுகளாக மார்க்ஸ் அனுப்பிய எண்ணிறந்த கட்டுரைகளில், குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பகுதி எங்கெல்சால் எழுதப் பட்டதாகும்.

ஆனல், எங்கெல்சின் உதவியுடன் மார்க்ஸ் நியூயார்க் டிரிப்யூன் பத்திரிகையில் ஆற்றிய பெரும் இலக்கியப் பணிக்

---

* *Marx' Letter to Engels on August 14, 1851;* Marx-Engels, *Gesamtausgabe*, Dritte Abteilung, Band I, S. 241.

காக, அவருக்குக் கிடைத்த சன்மானமோ மிகமிகக் கொஞ் சமாய் இருந்தது. நியூயார்க் டிரிப்யூன் ஆசிரியர் டானு தமது நிருபரிடம் ஒரு முதலாளி—வணிகனைப் போல் நடந்து கொண்டு, இலக்கிய ஊதியத் தொகையை எல்லா விதத்தி லும் வெட்டிக் குறைத்து, கடைசியாக மார்க்சுக்குச் சன் மானத் தொகையில் பாதி மட்டுமே தரத் தொடங்கினுர். இதன் காரணமாக, மார்க்சின் பொருளாதார நிலைமை மீண்டும் படுமோசமாயிற்று.

மார்க்சுக்குத் துன்பம் மிகுந்த இந்தக் காலத்தில், அதே டானு, தான் வெளியிடும் புதிய அமெரிக்கக் கலைக் களஞ்சியத் துக்கும் எழுதித் தரும்படி மார்க்சைக் கோரினுர். இந்த வேலையை மேற்கொள்ளுவதற்கும் ஆவலுடன் இணங்கினுர் எங்கெல்ஸ். பகலில் அலுவலக வேலையில் ஈடுபட்டிருந்ததால், இரவு நேரங்களில் அமர்ந்து கலைக் களஞ்சியத்துக்கு எங் கெல்ஸ் எழுத வேண்டியதாயிற்று. இதையறிந்த மார்க்ஸ் இந்த வேலையையே உடைப்பில் போட்டு விடுவதென்று பல முறை எண்ணம் கொண்டார். ஆனுல், தமது வாழ்வின் பிர தான பணி என்று மார்க்ஸ் அப்போது கருதிய பொருளா தார ஆய்வினை இடைவிடாது செய்வதற்காக அவரும் இரவு நேரங்களில் கட்டுரைகள் எழுத வேண்டியதாயிற்று.

பத்திரிகை வேலையில் மட்டும்தான் மார்க்சுக்கு எங் கெல்ஸ் உதவி செய்தார் என்பதில்லை. பல்வேறு தத்துவப் பிரச்னைகளிலும் தமக்கு ஆலோசனைகள் கூறும்படி நண் பரைக் கோருவார் மார்க்ஸ். இவற்றுக்கெல்லாம் முழுமை யான, கவனமாகச் சிந்திக்கப்பட்ட, அவ்வப்போது தனி விதத்தில் ‘‘செம்மைப்படுத்தப்பட்ட’’ பதில்களை கண்டிப் பாகப் பெறுவார் மார்க்ஸ். தமது நண்பரின் கலைக் களஞ் சிய அறிவு, விஞ்ஞானங்கள் அனைத்திலும் அவர் கொண் டிருந்த அக்கறை, அசாதாரணமான நினைவாற்றல், பத் திரிகை வேலையை மட்டுமின்றி ஆழமிக்க விஞ்ஞானப் பணியை யும் அவர் செய்து முடிக்கின்ற வேகம், லாவகம் ஆகியவற்றை மிக உயர்வாக மதித்தார் மார்க்ஸ்.

ஒரு புறம் தத்துவப் பணியில் மார்க்சுக்கு எங்கெல்ஸ் உதவி புரிந்தார் என்ருல், மறுபுறமோ, எங்கெல்சுக்கு அக் கறையுள்ள தத்துவப் பிரச்னைகள் பலவற்றிலும் தாம் கொண் டுள்ள கருத்தை எங்கெல்சுக்குத் தெரிவித்துச் செயல் பூர்வ

மாய் தமது நண்பருக்கு உதவினர் மார்க்ஸ். வரலாறு, இலக்கியம், மொழியியல், ராணுவம் போன்ற துறைகளின் விசேஷமான பிரச்னைகளில் எங்கெல்சுக்குத் தேவையான தகவல்களை நாட்கணக்காய் பிரிட்டிஷ் மியூசியத்தில் அவர் துருவித் தேடி அலைவார்.

மாஞ்செஸ்டரில் இருந்த நாட்களில் எங்கெல்ஸ் செய்த தத்துவப் பணியில் ராணுவ விஞ்ஞானங்கள் பற்றிய ஆராய்ச்சி குறிப்பாக முக்கிய இடம் வகிக்கிறது. பெர்லினில் ராணுவச் சேவை செய்யச் சென்ற நாட்களிலேயே யுத்த சம்பந்தமான விஷயங்களில் அவர் அக்கறை செலுத்தத் தொடங்கினர். ராணுவ சம்பந்தமான, முதன்மையாக ஆயுதந் தாங்கிய எழுச்சி பற்றிய பிரச்னைகளில் வெகு சிரத்தையுடன் ஈடுபட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளுமாறு 1848-49 புரட்சிப் போராட்டத்தின் தேவைகள் அவரை நிர்ப்பந்தித்தன. மாஞ்செஸ்டர் வாழ்க்கையின் போது ராணுவ விஞ்ஞானங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக இல்லாமல் முறையாகவும் மிகக் கவனமாகவும் அவர் பயின்றார்.

நியூயார்க் டிரிப்யூன் பத்திரிகைக்கும் அமெரிக்கக் கலைக் களஞ்சியத்துக்கும் எழுதி வந்த மார்க்சுக்கு உதவி செய்ய விரும்பியே, இந்த ஆய்வுகளை எங்கெல்ஸ் ஓரளவுக்கு மேற்கொண்டார். எனினும், ராணுவப் பிரச்னைகள், ஆயுதப் போராட்டம் பற்றிய பிரச்னைகள், வருங்காலப் புரட்சியில் வகிக்கப் போகும் பிரம்மாண்டமான பங்கு பற்றிய தெளிவான அறிவுதான் ராணுவ விஞ்ஞானங்களை கடுமையாகக் கற்றறியும்படி எங்கெல்சை உந்தித் தள்ளிய பிரதான காரணமாகும்.

மேம்போக்கான அறிவினை அடியோடு வெறுப்பவரான எங்கெல்ஸ், ராணுவப் பிரச்னைகளை ஒரு பொழுதுபோக்காக அணுகாமல், ஆதார பூர்வமாய் அறிந்து கொள்ள விரும்பும் ஒரு மனிதராக தாம் கற்றறிய எண்ணிய விஷயத்தின் ''சிறு சிறு விவரங்களையும்'' ''மிகச் சிறு நுணுக்கங்களையும்'' தெரிந்து கொள்ள முயன்றார். தொடக்கத்தில், பரீட்சையில் தேர்வதற்கு படைகளின் பலவித ஆயுதங்களிலும் என்னென்னவெல்லாம் ஒரு இராணுவ அதிகாரி அறிந்திருக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் எனும் குறிக்கோள் கொண்டார் எங்கெல்ஸ்.

1851ஆம் ஆண்டிலேயே, மாஞ்செஸ்டருக்கு எங்கெல்ஸ் வந்து சேர்ந்த முதல் மாதங்களிலேயே, ராணுவ விஞ்ஞானங்களில் பிரம்மாண்டமான அறிவு பெற்று விட்டதை மெய்ப்பித்தார் எங்கெல்ஸ். 1852 பிரான்சில் புரட்சி வெற்றிகரமாக நிகழ்ந்தேறும் பட்சத்தில், அந்நாட்டுக்கு எதிராக புனிதக் கூட்டணி நடத்தப் போகும் போரின் வாய்ப்புகள், சாத்தியங்கள் பற்றி ஆய்வு செய்த தமது முடிவுறுத கையெழுத்துப் பிரதியில், 18ஆவது நூற்றாண்டின் முடிவில் பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியை ஒட்டி நடந்த போர்களிலிருந்து ஆரம்பித்து ராணுவக் கலையின் வரலாறு பற்றிய சித்திரம் தீட்டிக் காட்டி, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போதும், அதற்கு அப்புறமும், இந்தக் கலை வளர்ச்சியுறுவதற்கான வாய்ப்புக்களையும் எங்கெல்ஸ் எடுத்துக் காட்டுகிறார். எந்தப் புரட்சியும் வெற்றிகரமாக முன்னேறுகின்ற பொழுது, புதிய கட்டுப்பாட்டையும் புதிய ராணுவத்தையும் புரட்சி உருவாக்குவதற்கு முன்பு பழைய இராணுவம் சீர்குலைவது தவிர்க்க இயலாதது என்னும் எங்கெல்சின் கருத்துக்கள் மிகவும் கவனிக்கத் தக்கவை.

தேசியப் பொருளுற்பத்தி மையப்படுத்தப்பட்டு, வலுப்படுத்தப்பட்டு, வர்க்கங்கள் ஒழிக்கப்பட்ட பின்னர் எழுகின்ற புதிய சமுதாயத்தின் இராணுவ வல்லமை தகர்க்க முடியா ஆற்றல் கொண்டதாய் இருக்கும் என்று தீர்க்கதரிசனத்துடன் விவரிக்கிறார் எங்கெல்ஸ்.

''அளவிலும் போர்த்தந்திர இயக்க ஆற்றலிலும் இந்தப் படைப் பிரிவுகள் சரித்திரம் கண்டும் கேட்டும் இராத பயங்கர வல்லமை பெற்றிருக்கும். உத்தி பூர்வ இயக்கத்திலும் (ரோந்து புரிவதில், சுடுகின்ற அணிகளில், போர்க்களப் பணிகளில்) இந்தப் படைவீரர்கள் மிக உயர்ந்த பயிற்சி பெற்றவர்களாய் விளங்குவார்கள். தற்காலச் சமூகம் தரும் எல்லாப் படைவீரர்களையும் விட, இவர்கள் பலத்திலும், லாவகத்திலும், அறிவுத்திறத்திலும் மேம்பட்டு விளங்குவார்கள்.''

இறுதியாக, வல்லமை மிக்க இராணுவத் தொழில் நுணுக்கம் சோஷலிச இராணுவங்களின் கைகளில் இருக்கும். நெப்போலியன் தொடுக்கின்ற போர் முறைக்கு அப்போது இருந்த உற்பத்தி சக்திகள் எப்படி அடித்தளமாக இருந்தனவோ,

அதே போல், செம்மையுற்று மேன்மையுறும் புதிய இராணுவத்தின் வளர்ச்சிக்கு புதிய உற்பத்திச் சக்திகள் அடித்தளமாக விளங்கும்.

இராணுவ விவகாரங்கள் பற்றி எங்கெல்ஸ் எழுதியுள்ள கட்டுரைகள் ஏராளம். உதாரணமாக, 1853-55ஆம் ஆண்டுகளில் கிரீமிய யுத்தத்தைப் பற்றி பெரிய தொடர் கட்டுரை எழுதினுர் எங்கெல்ஸ். 1855ல் அமெரிக்கப் பத்திரிகைகளில் ஐரோப்பிய அரசுகளின் இராணுவங்களது தன்மை பற்றிச் சில கட்டுரைகள் வரைந்தார். முதலாளித்துவ அரசுகளின் காலனி விஸ்தரிப்பு நடவடிக்கைகளேயும், காலனியாதிக்கத்திற்கு எதிராக நடந்த தேசிய விடுதலே இயக்கத்தையும் மிகவும் கூர்ந்து கவனித்தார் எங்கெல்ஸ்.

உதாரணமாக, சீனுவைக் கபளீகரம் செய்வதற்காக இங்கிலாந்தும் பிரான்சும் நடத்திய இரண்டாவது ''அபினிப் போர்'' குறித்தும், ஆங்கிலேயக் காலனியாதிக்கவாதிகளுக்கு எதிராக இந்தியாவில் நடந்த தேசிய விடுதலே எழுச்சி பற்றியும், பாரசீகத்திற்குள் ஆங்கிலேயர்கள் ஊடுருவியது குறித்தும் எங்கெல்சின் பேனு முனேயிலிருந்து 1857-58ல் கட்டுரைகள் முளேக்கின்றன. மார்க்ஸ் ஏற்கெனவே ஆய்வு செய்து வந்த தேசிய—காலனிப் பிரச்னே பற்றி இந்தக் காலத்தில் எங்கெல்சும் தமது கட்டுரைகளில் ஆராய்ச்சி செய்கிருர்.

இந்தியாவிலும் சீனுவிலும் நடக்கின்ற சம்பவங்களேப் பற்றிய தமது கட்டுரைகளில் (மிகப் பெரும்பான்மையான மற்ற ''இராணுவக்'' கட்டுரைகளில் கண்டுள்ளது போலவே) வெறும் இராணுவ ஆராய்ச்சியின் எல்லேகளிலிருந்து வெளியே போகிருர் எங்கெல்ஸ். நியூயார்க் டிரிப்யூன் பத்திரிகையின் தேவைகளுக்கு ஏற்ப எழுத வேண்டிய கட்டாயம் எவ்வளவுதான் எங்கெல்சுக்கு ஏற்பட்ட போதிலும், அக்கட்டுரைகளின் தன்மையும் போக்கும், அவை வெறும் ''இராணுவ வல்லுனரால்'' மட்டும் எழுதப்பட்டவையல்ல, ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சி வீரராலும் எழுதப்பட்டவை என்று தெளிவாக வெளிக்காட்டுகின்றன. உதாரணமாக, இந்தியாவில் நடந்த தேசிய விடுதலே எழுச்சி குறித்து அவர் எழுதிய கட்டுரைகளில், இராணுவ நடவடிக்கைகள் பற்றி நிபுணத்துவம் மிக்க ஆய்வு தருவது தவிர, ஆங்கிலேயக் காலனியா

திக்கக் கொள்கைக்கு எதிராகக் கரம் நீட்டிக் கொலைக் குற்றம் சாட்டுகிறார் எங்கெல்ஸ்.

அவர் எழுதிய **பாரசீகமும் சீனாவும்** (1857) என்னும் கட்டுரையில், அன்னிய ஆக்கிரமிப்புக்கு எதிராக சீன மக்களின் போராட்டம் வலுத்து வருவதைக் கோடிட்டுக் காட்டி, வெளி நாட்டாருக்கு எதிராகத் தீவிரமாகவும், ஒரு வெறியுடனும் பொதுமக்கள் போராடி வருகின்றனர் என்று மகிழ்ச்சி பொங்கக் குறிப்பிடுகிறார்.

சீன மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் இந்தத் தொடக்கத்தை ''பழைய சீனத்தினுடைய சாவு காலத்தின்'' முன்னோடி என்றார் எங்கெல்ஸ். 50ஆம் ஆண்டுகளில் **நியூயார்க் டிரிப்யூன்** பத்திரிகையில் இந்தியாவைப் பற்றியும் சீனாவைப் பற்றியும் மார்க்சும் எங்கெல்சும் எழுதிய கட்டுரைகளிலும், ஐரோப்பாவில் தேசியப் பிரச்னை பற்றி அவர்கள் செய்த மதிப்பீடுகளிலும் தேசிய-காலனிப் பிரச்னை பற்றிய புரட்சிகர-பாட்டாளி வர்க்கக் கொள்கையின் அடிப்படைகள் தரப்பட்டுள்ளன.

தமது விடுதலைக்காகப் போராடி வரும் காலனி நாடுகளின் மக்களுடனும் சுதந்திரமற்ற நாடுகளின் மக்களுடனும் ஒருமைப்பாடு கொள்ளுமாறும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் கடைப்பிடிக்குமாறும் தொழிலாளி வர்க்கத்தையும், உழைப்பாளி மக்களையும் தமது மகத்தான நண்பருடன் சேர்ந்து பயிற்றுவித்தார் எங்கெல்ஸ்.

முக்கியமான சர்வதேச நிகழ்ச்சிகள் அனைத்தைப் பற்றியும் மார்க்சும் எங்கெல்சும் தமது கட்டுரைகளில் கருத்து வெளியிட்டனர். தம்மிடையே ஏற்படுத்திக் கொண்ட வேலைப் பங்கீட்டின்படி அப்போது நிகழ்ந்து வந்த போர்கள் பற்றியும் அப்போர்களின் போக்குகள் பற்றியும் எழுத வேண்டியது எங்கெல்சின் வேலையாய் இருந்தது.

பிரான்சும் பியெமொன்டும் ஆஸ்திரியாவுக்கு எதிராக நடத்திக் கொண்டிருந்த போர் பற்றி **நியூயார்க் டிரிப்யூன்** பத்திரிகையிலும் லண்டனில் வெளியான ''மக்கள்'' (*Das Volk*) என்னும் ஜெர்மன் பத்திரிகையிலும் 1859ல் இருபதுக்கும் மேற்பட்ட எங்கெல்சின் கட்டுரைகள் வெளி வந்தன. மொரோக்கோவில் ஸ்பானியர் நடத்திய யுத்தம் பற்றியும், தென் இத்தாலியில் கரிபால்டி மேற்கொண்ட புரட்சிப் போர்

கள் பற்றியும் நியூயார்க் டிரிப்யூன் பத்திரிகைக்கு எங்கெல்ஸ் 1860ல் எழுதினர். வியன்ன பத்திரிகையான *Die Presse*க்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடந்த உள்நாட்டுப் போர் பற்றி கட்டுரைகள் எழுத மார்க்சுக்கு 1861ல் எங்கெல்ஸ் உதவி செய்தார். 1860-1862ல் பிரிட்டிஷ் ராணுவப் பத்திரிகை ஒன்றிலும், 1862-64ல் ஜெர்மன் ராணுவப் பத்திரிகை ஒன்றிலும் எங்கெல்ஸ் கட்டுரைகள் எழுதினர். 1866ல் ஆஸ்திரிய-பிரஷ்யப் போர் பற்றிக் கட்டுரைகள் பலவும், 1870-71ல் பிரெஞ்சு-பிரஷ்யப் போர் பற்றி நீண்ட தொடர் கட்டுரைகளும் எங்கெல்ஸ் எழுதினர். இவை தவிர, புதிய அமெரிக்கக் கலைக் களஞ்சியத்துக்கு மார்க்சும் எங்கெல்சும் ராணுவ சம்பந்தமான சுமார் 80 கட்டுரைகள் எழுதினர். இவற்றில் பெரும்பான்மையானவை எங்கெல்சால் எழுதப்பட்டவை. ராணுவம், பீரங்கிப்படை, குதிரைப் படை, தரைப்படை, அரண் செய்தல், கப்பற்படை போன்ற கட்டுரைகளும் இவற்றில் அடங்கும்.

எங்கெல்சின் ராணுவ சம்பந்தமான கட்டுரைகளைப் படிக்கும் போது, அவருடைய கூரிய ஞானமும் தகவல்களை, திட்டவட்டமான உண்மைகளை அவர் ஆழ்ந்து ஆய்வு செய்வதும் நம்மை வியப்புக்குள்ளாக்குகின்றன. எனவே, பெயரின்றி வெளிவந்த எங்கெல்சின் கட்டுரைகளை மகத்தான ஒரு ராணுவ வல்லுனரின் கட்டுரைகள் என்று வாசகர்கள் நினைத்ததில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

தமது நண்பரின் ராணுவ அறிவு பற்றி மிகவுயர்ந்த மதிப்புக் கொண்டிருந்த மார்க்ஸ், ''மாஞ்செஸ்டரில் உள்ள ராணுவ அமைச்சகத்தை'' முழுமையாக நம்புவதாயும் எந்த ராணுவப் பிரச்னை பற்றியும் இது தனக்கு உடனடியாக ஆணைகள் அனுப்பலாம் என்றும் கூறினர்.

புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முதல் ராணுவ வல்லுனராகவும், முதல் ராணுவச் சித்தாந்தவாதியாயும் எங்கெல்ஸ் விளங்கினர். பரந்த அரசியல் தொடுவானமாய், பொருளாதாரத்தில் பொதிந்த அறிவும், சர்வதேச உறவுகளில் சிறந்த தேர்ச்சியும் கொண்டு பொருள்முதல்வாத இயக்கவியலை நிபுணத்துவத்துடன் கையாண்ட எங்கெல்ஸ், சொந்தச் சிந்தனையற்ற ராணுவ விஞ்ஞானிகளின் குழுவுக்கு மாறுபட்ட விதத்தில், சமுதாயத்தின் வளர்ச்சி,

வர்க்கப் போராட்டம் ஆகியவற்றின் போக்கினுல் ஏற்படும் சமுதாய நிகழ்ச்சியே போர் என்று காண அவருக்கு உதவின.

போர் பற்றியும் ராணுவ விவகாரம் பற்றியும் பொதுமைப்படுத்தப்பட்ட மார்க்சியக் கோட்பாடுகளின் சூத்திரத்தை டூரிங்குக்கு மறுப்பு என்னும் தமது நூலில் எங்கெல்ஸ் தருகிறுர். இந்த நூலில் அவர் பின்வருமாறு எழுதுகிறுர்: ''குறிப்பாகத் தரைப் படை மற்றும் கடற்படை போன்று பொருளாதார முன்தேவைகளே அதிகமாகச் சார்ந்திருக்கும் வேறு எதுவும் இலலே. ஆயுதங்கள், அமைப்பு, ஸ்தாபனம், போர்த் தந்திரங்கள், ஆதாரப் போர்த் தந்திரங்கள் ஆகியவை எல்லாவற்றுக்கும் மேலாக உற்பத்தி மற்றும் தகவல் போக்குவரத்துகளில் எட்டப்பட்டுள்ள கட்டத்தையே சார்ந்திருக்கின்றன. இங்கு மேதையுள்ள, தளபதிகளின் 'மனதின் சுதந்திரமான படைப்புகள்' புரட்சிகரப்படுத்தும் விளேவை ஏற்படுத்தவில்லே, மாறுக மேலும் சிறந்த ஆயுதங்கள் புனேவும் மனிதக் கருவியிலான அதாவது படையாட்களிலான மாறுதலும் தான் அதை ஏற்படுத்தின், ஆக அதிகமாய்ப் போனுல், மேதையுள்ள தளபதிகள் வகித்த பங்கு, புதிய ஆயுதங்கள் மற்றும் போர் வீரர்களுக்குத் தக்கபடி போர் முறைகளே மாற்றி அமைத்துக் கொள்ளும் அளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.''* டூரிங்குக்கு மறுப்பு என்னும் நூலில் இந்தக் கண்ணேட்டத்தில் தான் ராணுவக் கலேயின் வளர்ச்சியை வரலாறு பூர்வமாய் வரைந்து கொடுக்கிறுர் எங்கெல்ஸ்.

1870 பிரெஞ்சு-பிரஷ்யப் போருக்குப் பின் தொடங்கிய ராணுவ வெறியின் வளர்ச்சி, முதலாளித்துவ சமூகத்தின் முரண்பாடுகள் அனேத்தினுடைய எல்லேக்கும் இறுதிக்கும் கொண்டு செல்லும் என்றும், இதன் விளேவாக ஆதிக்க வர்க்கத்திற்கு அடக்கும் கருவியாக விளங்கும் ராணுவம், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்கு மாபெரும் முக்கியத்துவம் உடையதாக மாறும் என்றும் மிகப் பெரும் தீர்க்கதரிசனத்துடன் இதே நூலில் முன்னறிவித்தார் எங்கெல்ஸ். ''இராணுவ வெறி ஐரோப்பாவில் மேலாதிக்கம் செலுத்தி

---

* பி. எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு.

அதை விழுங்கி வருகிறது. ஆனல் இந்த இராணுவ வெறி தனக்குள் தனது சொந்த அழிவுக்கான வித்துக்களையும் சுமந்து கொண்டிருக்கிறது. தனிப்பட்ட அரசுகளிடையே நடக்கும் போட்டி ஒரு புறம் தரைப்படை, கடற்படை, பீரங்கிப் படை ஆகியவற்றுக்காக ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகப் பணம் செலவழிக்குமாறு அவ்வரசுகளைக் கட்டாயப்படுத்தி, அவற்றின் நிதி வீழ்ச்சியை மேலும் மேலும் துரிதமாக்கி வருகிறது; மறுபுறத்தில் மேலும் மேலும் விரிவான முறையில் சர்வப்பொது கட்டாய ராணுவ சேவையைக் கையாளுமாறு கட்டாயப்படுத்துகிறது, இவ்வாறு காலம் செல்லச் செல்ல மக்கள் முழுமையும் ஆயுதங்களை உபயோகிப்பதில் பரிச்சயம் பெற்று இதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட தருணத்தில் தலைமையிலுள்ள போர்த் தளபதிகளை எதிர்த்துத் தமது சித்தத்தை நிலை நாட்டுமாறு செய்கிறது. நகரிலும் நாட்டுப்புறத்திலுமான தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் மக்கள் திரளுக்கு ஓர் உறுதி ஏற்பட்ட உடனே இந்தத் தருணம் வந்து வாய்க்கும். இந்தக் கட்டத்தில் அரசர்களின் இராணுவங்கள் மக்களின் இராணுவங்களாக மாற்றமடையும்; இந்தப் பொறியமைவு வேலை செய்ய மறுக்கிறது, இராணுவ வெறி தனது சொந்தப் பரிணமத்தின் இயக்கவியலாலேயே வீழ்ச்சியடைகிறது.''*

எங்கெல்ஸ் விட்டுச் சென்ற வளமான ராணுவ இலக்கியச் சொத்து இன்று வரை மதிப்பு மிக்கதாய் இருந்து வருகிறது. ராணுவ விஞ்ஞானங்களில் பெரும் கவனம் செலுத்தி வந்த லெனின், மக்கள் பெருந்திரளும் மக்களிடையுள்ள வர்க்கங்களும் மாபெரும் வரலாற்றுச் சமர்களில் பெருங் கருவியாய்ப் பயன்படுத்தும் ராணுவ அறிவும், ராணுவ நுணுக்கமும், ராணுவ அமைப்புப் பணியும் வகிக்கின்ற பிரம்மாண்டமான முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டி இந்த ராணுவ விவகாரங்களை எங்கெல்சிடமிருந்து கற்றறியும் படி கட்சியைப் பன்முறை கேட்டுக் கொண்டார்.

குழந்தைப் பருவத்திலும் இளமைக் காலத்திலும் மொழிகளைக் கற்பதில் வியக்கத்தக்க ஆற்றல் கொண்டிருந்த எங்கெல்ஸ், ராணுவ விஞ்ஞானத்தில் செய்து வந்த ஆய்வு

---

* ஃபி. எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு.

களுடனேயே மொழி ஆய்வினையும் மாஞ்செஸ்டரில் மேற் கொண்டார். மொழி இயலில் முறையான ஆய்வு செய்து உண்மையிலேயே வியக்கத்தக்க தேர்ச்சி பெற்றார். விஞ் ஞானப் பற்றினால் மட்டும் இந்த வேலையை அவர் செய்ய வில்லை, இது நாள் வரை செய்து வந்ததும், இனிமேலும், அவர் செய்யப் போவதுமான சர்வதேசியப் புரட்சிப் பணி யினது நடை முறைத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடனும் இப்பணியினை அவர் எடுத்துக் கொண்டார்.

அடிப்படை ஐரோப்பிய மொழிகளை ஏற்கெனவே முற் றாக அறிந்திருந்த, பண்டைய கிரேக்க, லத்தீன் மொழிகளை நன்கு கற்றிருந்த எங்கெல்ஸ், 1856ல், அவருடைய சொந்த வார்த்தைகளில், "ஆர்வத்துடனும் ஆதாரபூர்வமாகவும்" ருஷ்ய மொழியைக் கற்றறிய முற்பட்டார்.

எங்கெல்ஸ் விட்டுச் சென்றுள்ள இலக்கியச் சொத்துக் களில் கிடைத்துள்ள **எவ்கேனி அனேகின்** என்னும் ருஷ்யக் கவிதையிலிருந்து ஜெர்மன் மொழியில் அவர் பெயர்த்துள்ள பதினைந்து செய்யுட்கள், ருஷ்ய மொழியைக் கற்கிற போதே அவர் எவ்வளவு கவனமாக ருஷ்ய இலக்கியத்தையும் கற்று வந்தார் என்பதற்குச் சான்றாய் விளங்குகின்றன. **செம்பா லான குதிரை வீரன்** என்னும் புஷ்கின் கவிதையையும், **அறிவு தந்த துன்பம்** என்னும் கிரிபயேதவின் நாடகத்தையும் எங்கெல்ஸ் படிக்கையில் அவர் எடுத்து வைத்துள்ள குறிப்புக் கள் நமக்குக் கிட்டியுள்ளன. சல்திக்கோவ்-ஷெத்ரின், கேர்ட் சென், தப்ரல்யூபவ், செர்னிஷேவ்ஸ்கி ஆகியோரின் நூல்களை யும் எங்கெல்ஸ் படித்திருக்கிறார்.

பின்னர் எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: "...வழக் கில் உள்ள மொழிகளில் மிகவும் சக்தி வாய்ந்ததும் மிகவும் வளம் வாய்ந்ததுமான மொழிகளில் ஒன்று ருஷ்ய மொழி என்பதனாலும், அது விரித்துப் பரப்பும் இலக்கியத்துக் காகவும் எல்லா விதத்திலும் கற்கத் தகுந்தது அம்மொழி..."

கிரீமிய யுத்தம் காரணமாயும், கிழக்கத்தியப் பிரச்னையை* இன்னும் தீவிரமாய் ஆய்வு செய்ய வேண்டும்

* கிழக்கத்தியப் பிரச்னை—முதலாவதாக, துருக்கியால் ஒடுக்கப்பட்டிருந்த ஸ்லாவ் இன மக்களும் மற்ற மக்களும் நடத்திய தேசிய விடுதலை இயக்கத்தினால் சுல்தானியத்

என்பதாலும் பாரசீக மொழி கற்கத் தொடங்கினுர் எங்கெல்ஸ். 50ஆம் ஆண்டுகளின் இறுதியில் பண்டைய ஜெர்மன் மொழிகளைக் கற்ருர். ஷ்லேஸ்விக்—கொல்ஷ்டைன் ஆகியவற்றுக்காக நடந்த போராட்டமும், 1864ல் நடந்த டென்மார்க் போரும் ஸ்காண்டிநேவிய மொழிகளைக் கற்குமாறு எங்கெல்சைத் தூண்டின.

அறுபதாம் ஆண்டுகளின் இறுதியில் முதல் அகிலத்தில் அயர்லாந்துப் பிரச்னை கூர்மையாக விவாதிக்கப்பட்ட போது கேல்த்ஜரிஷ் மொழிகளை அவர் கற்கத் துவங்கினுர். இதே ஆண்டுகளில் டச்சு-பிரீஸ், ஸ்காண்டிநேவிய மொழிகளையும் பயின்ருர். ருமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகளில் முளைத்து எழுந்து வந்த சோஷலிச இயக்கத்துக்குத் தலைமை தாங்கி வழிடத்த வேண்டி இருந்ததால் தமது வாழ்வின் அந்திமக் காலத்தில் ருமேனிய, பல்கேரிய மொழிகளைப் பயின்ருர்.

உண்மையான பன்மொழிப் புலவரான எங்கெல்ஸ் பன்னிரண்டு மொழிகளில் சரளமாகப் பேசவும் எழுதவும் செய்தார், படிப்பதற்கு மட்டுமோ இருபது மொழிகளில் அவரால் முடிந்தது.

எங்கெல்சினுடைய அகன்ற பன்மொழிப் பயிற்சி, வெறுமே ஒரு மொழியின் ''நுணுக்கத்தைக்'' கற்றுத் தேர்வதில் அடங்கிவிட இல்லை. ஒரு மொழியைக் கற்றுக்கொள்வது என்று சொன்னுல் அம்மொழி பேசும் மக்களின் வரலாறு, கலாசாரம், இலக்கியம் ஆகியவற்றைத் தொடர்பு படுத்துவதில் மொழியின் சிறப்பு இயல்புகள், அதன் தோற்றம், வளர்ச்சிப் போக்கு போன்ற அனைத்தையும் கற்றுக் கொள்வது என்றே எங்கெல்ஸ் புரிந்து கொள்கிருர்.

பிரம்மாண்டமான எண்ணிக்கையில் எங்கெல்ஸ் மொழிகளைக் கற்றிருந்ததானது மொழி இயல், ஒப்புநோக்கு மொழி இயல் ஆகியவற்றின் பொதுவான பிரச்னைகளைப் பயின்று இந்த

துருக்கி பெறவிருந்த வீழ்ச்சியாலும், இரண்டாவதாக, துருக்கியின் கீழ் இருந்த பிரதேசங்களைப் பங்கு போட்டுக் கொள்வதற்காக பிரிட்டன், பிரான்ஸ், பிரஷ்யா, ஆஸ்திரியா, ருஷ்யா ஆகியவற்றுக்கு இடையே நடந்த போராட்டத்தாலும் கூர்மையடைந்த சர்வதேசிய முரண்பாடுகளை இது குறிக்கிறது.

விஞ்ஞானங்களுக்கும் உறுதியான மார்க்சிய அடித்தளத்தை அமைத்துத் தர அவருக்கு உதவியது.

எண்பதாம் ஆண்டுகளில் பண்டைய ஜெர்மானியர்களின் வரலாறு பற்றிய நூல் எழுதுவதற்கும் குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூல் எழுதுவதற்கும் எங்கெல்சினுடைய மொழி இயல் பயிற்சி மிகவும் பயன்பட்டது. மனித இன வரலாற்று வளர்ச்சியின் முதல் கட்டங்களை ஆய்ந்தறிவதற்கு அளப்பறிய மதிப்புடைய ஊற்றுக்கண்ணாக இந்தப் பயிற்சி எங்கெல்சுக்கு உதவி செய்தது.

1876ம் ஆண்டு எங்கெல்ஸ் எழுதிய, ஆனால் முடிக்காமல் விட்டுச் சென்ற மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்* என்னும் நூலில் மொழியின் தோற்றம் பற்றிய மார்க்சியக் கண்ணோட்டத்தைப் பொதுமைப்படுத்தப்பட்ட வடிவில் தருகிறார் எங்கெல்ஸ்.

மாஞ்செஸ்டரில் எங்கெல்ஸ் இருந்த காலத்தில், தமது மொழி இயல் பயிற்சியுடன் கூடவே உலக இலக்கியத்தையும் தொடர்ந்து கற்றார். அந்த நூற்றாண்டின் சர்வகலா வல்லுனர்களில் ஒருவராய்த் திகழ்ந்த எங்கெல்ஸ் இந்தத் துறையிலும் பிரகாசமிக்க வெற்றிகளை ஈட்டினார். பலப்பல மக்களின் இலக்கியத்தில், ஐரோப்பிய இலக்கியத்தில் மட்டுமின்றி கிழக்கத்திய இலக்கியத்திலும், நவீன கால இலக்கியத்தில் மட்டுமின்றி வரலாற்று வளர்ச்சியின் முந்திய காலத்து இலக்கியத்திலும் மிகப் பெரும் நிபுணராக விளங்கினார் எங்கெல்ஸ்.

இறுதியில் சமுதாயத்தின் பொருளாதார அடித்தளத்தால் நிர்ணயிக்கப்படுகிற சமுதாய உணர்வின் ஒரு வடிவமாகக் கலையும் இலக்கியமும் விளங்குகின்றன என்று கண்ட எங்கெல்ஸ் இலக்கியத்திலும் கலையிலும் பல்வேறு போக்குகளுக்கு இடையில் நிகழும் போராட்டத்தின் வர்க்க வேர்களை எடுத்துக் காட்டுகிறார். சித்தாந்தப் பற்றும் வாழ்க்கை உண்மையும், ''உண்மை பொதிந்துள்ள விவரங்களும், மாதிரிச் சூழ்நிலைகளில் மாதிரிப் பாத்திரங்கள் உண்மை

---

* எங்கெல்ஸ், மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம், மாஸ்கோ 1975, பக்கங்கள் 3-25.

யாய்ப் படைக்கப்படுவது அடங்கிய''* எதார்த்தவாதமும் கலையிலும் இலக்கியத்திலும் மிளிர வேண்டும் என்ருர் எங்கெல்ஸ்.

பல்சாக் எதார்த்தவாதத்தின் தலைசிறந்த நிபுணர் என்று எங்கெல்ஸ் கருதினர். ''பொருளாதார விவரங்களில் (உதாரணமாக, புரட்சிக்குப்பின் நடந்த அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்களின் மறுவினியோகம் போன்றவற்றில்), இந்தக் காலத்திய சரித்திர ஆசிரியர்கள், பொருளாதாரவாதிகள், புள்ளிவிவர நிபுணர்கள் ஆகியோரின் புத்தகங்களிலிருந்து நான் தெரிந்து கொண்டதை விட பல்சாக்கின் மனித ஹாஸ்ய நாடகத்தில் இருந்து அதிகமாகத் தெரிந்து கொண்டேன்'' என்று கார்க்னெசுக்கு எழுதினர் எங்கெல்ஸ்.

எங்கெல்சினுடைய பல்வேறு நூல்களிலும் கடிதங்களிலும் கண்டுள்ள ஏராளமான குறிப்புக்கள், கலை, இலக்கியம் ஆகிய பிரச்னைகளை மார்க்சியம் எப்படி அணுகுகிறது என்பதற்கு எல்லையற்ற முக்கியத்துவமுள்ள எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றன.

50ஆம் ஆண்டுகளின் முடிவில் இயற்கை விஞ்ஞானங்களான இரசாயனம், பௌதிகம், உடலியல், உயிரியல் போன்றவற்றை மிகத் தெளிவாகக் கற்றறியத் தொடங்கினர் எங்கெல்ஸ். இயற்கை விஞ்ஞானத் துறையைப் பொருள் முதல்வாத இயக்கவியலைப் பிரயோகித்து எவ்வாறு ஆய்வு செய்வது என்பதில்தான் அவர் பெரும் கவனம் செலுத்தினர். இத்துறையில் வெளிவருகிற புதிய புதிய கண்டுபிடிப்புக்களை எல்லாம் மிகக் கூர்மையாகக் கவனித்து வந்த எங்கெல்ஸ், அப்போதுதான் வெளிவந்த உயிரினங்களின் தோற்றம் என்னும் டார்வினின் நூல் கண்டு பெரு மகிழ்ச்சி கொண்டு, இயற்கையின் வரலாற்று வளர்ச்சியை மெய்ப்பிப்பதற்குச் செய்யப்படும் பிரம்மாண்டமான, வெற்றிகரமான முயற்சி இது என்று கூறினர்.

ஒவ்வொரு நாளும் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு நிறுவனத்தின் வெளிநாட்டுக் கடிதப் போக்குவரத்தை முறையாகச் செய்ய வேண்டி இருந்த எங்கெல்ஸ், இந்த மகத்தான

---

* *Engels' Letter to M. Garkness on April, 1888;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, pp. 478-479.

தத்துவப் பணிகளையும் இலக்கியப் பணிகளையும் அரசியல் பணிகளையும் செய்தது நம்மை வரம்பற்ற வியப்புக்குள் ஆழ்த்துகிறது.

தமது புரட்சிகர நடைமுறைப் பணிகளையும் எங்கெல்ஸ் விட்டு விடவில்லை. பிற்போக்கு மேலோங்கி, தொழிலாளர் இயக்கம் தொய்வு கண்ட வேலையில் பல்வேறு நாடுகளிலும் இருந்த தமது ஆதரவாளர்களுடன் தொடர்பினை விடாமல் வலுப்படுத்திக் கொண்டு, தத்துவத்தைக் கற்றறியும் படியும் விரைவில் வரவிருக்கும் புதிய போர்களுக்குத் தயார் செய்து கொள்ளுமாறும் அவர்களைத் தூண்டுவதற்கு மார்க்சும் எங்கெல்சும் முயன்று வந்தனர்.

மாஞ்செஸ்டரில் எங்கெல்ஸ் இருந்த நாட்களின் முதல் ஆண்டுகளில் ஆற்றிய புரட்சிகர நடைமுறைப் பணிகளில் மிக முக்கியமானது சார்ட்டிச இயக்கத்தில் அவர் பங்கெடுத்துக் கொண்டதாகும். 1848 ஏப்ரலில் இயக்கம் தோல்வியுற்ற பின்பு அது கடுமையாகத் தாழ்வு கண்டது. புயல்வேக இயந்திரத் தொழில் வளர்ச்சி, ''உலகத் தொழில் பட்டறையாக'' பிரிட்டன் பெற்ற மாற்றம், பரந்துகிடந்த காலனி நாடுகளில் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் அடித்த கொள்ளை ஆகிய அனைத்தும் மிகத் தகுதி வாய்ந்த பிரிட்டிஷ் தொழிலாளர்களின் நிலைமையை ஓரளவுக்கு மேலுயர்த்தி அவர்கள் நடுவில் சந்தர்ப்பவாத மனப் போக்கு தலைதூக்க வகை செய்தன. இத்தகைய சூழலில் சார்ட்டிசத் தலைவர்களில் ஒரு பிரிவினர் மிகவும் கஷ்டப்பட்டு இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்தனர். ஓகோன்னர் தலைமையில் இருந்த மற்ற பகுதியினரோ சார்ட்டிச வேலைத்திட்டத்தைத் தூக்கியெறிந்து விட்டு, முதலாளித்துவத் தீவிரவாதிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

ஓகோன்னர் தலைமையில் உள்ள சந்தர்பவாதப் பிரிவினரை எதிர்த்துப் தீவிரமாகப் போராடுமாறும், அப்பிரிவினரை அகற்றிவிடுமாறும் கார்னி, ஜோன்ஸ் ஆகியோரின் தலைமையில் இருந்த இடதுசாரி சார்ட்டிஸ்டுகளுக்கு மார்க்சும் எங்கெல்சும் பலவாறு எடுத்துக் கூறினர். இடதுசாரி சார்ட்டிஸ்டுகளுக்கு எல்லா வகையிலும் உதவி செய்து வந்த மார்க்சும் எங்கெல்சும், சார்ட்டிசத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையே இடைவிடாத தொடர்பு இருக்க வேண்டிய

அவசியத்தையும் (பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்னும் நூலிலேயே இதுபற்றி எங்கெல்ஸ் எழுதி இருக்கிறார்), சார்ட்டிசப் பத்திரத்துக்காக நடத்தும் அரசியல் போராட்டத்தைத் தொழிலாளி வர்க்கத்தின் அன்றாடப் பொருளாதாரப் போராட்டங்களுடன் ஒன்றிணைக்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டினர்.

சார்ட்டிசப் பத்திரிகைகளில் எங்கெல்ஸ் நிறைய எழுதினார். சார்ட்டிசப் பத்திரிகைகளான மக்களுக்கான குறிப்புக்கள் *Notes to the People*), மக்கள் பத்திரிகை (*People's Paper*) ஆகிய வற்றிலும் கட்டுரைகள் வரைந்தார். மாஞ்செஸ்டரில் அமைப்பு ரீதியான வேலையையும் பிரசார வேலையையும் மேற்கொண்டார். ''இந்த ஆட்களுடன் (இடதுசாரிச் சார்ட்டிஸ்டுகளுடன்—ஆசிரியர்) சேர்ந்து சிறு கிளப்பு ஒன்று நிறுவவோ அல்லது அடிக்கடி கூட்டங்கள் நடத்தவோ முயற்சி செய்து அவர்களுடன் அறிக்கை பற்றி விவாதிக்கப் போகிறேன்'' என்று 1851 ஜனவரி 8ல் மார்க்சுக்கு எழுதினார் எங்கெல்ஸ். அதன் பின்பு ஒரு மாதம் கழித்து, ஒரு புதிய சார்ட்டிச உள்ளூர் அமைப்பை மாஞ்செஸ்டரில் தன்னால் நிறுவ முடிந்துள்ளது என்று மார்க்சுக்குத் தெரிவித்தார்.

தொடக்கத்தில் கார்னியின் மீது எங்கெல்சுக்குப் பெரும் செல்வாக்குச் செலுத்த முடிந்தது. ஆனால் கம்யூனிஸ்டுகள் சங்கத்தில் பிளவு ஏற்பட்டபின், கார்னி அரசியலில் இரட்டை வேடம் போடத் துவங்கி, குடியேற்றக்காரர்களின் பலப்பல குழுக்கள் மத்தியில் பல்வேறு உபாயங்களைக் கையாண்டு அவற்றின் ''பெரிய மனிதர்களான'' லுயீ பிளான், வில்லிஹ், வில்லிஹ் குழுவினர் போன்றோருடன் குலாவியபடி மார்க்ஸ், எங்கெல்சை விட்டு விலகிப் போனார்.

கார்னியைத் திருத்துவதற்கு மார்க்சும் எங்கெல்சும் செய்த முயற்சிகள் ஒன்றும் பலனளிக்க வில்லை. அவர் குட்டி முதலாளித்துவச் சகதியில் உழன்று, சேறு படிந்தவராய் தன்னுடன் கொண்டிருந்த உறவை முறித்துக் கொள்ளுமாறு மார்க்சையும் எங்கெல்சையும் நிர்ப்பந்தித்தார்.

கார்னியுடன் முறித்துக் கொண்ட மார்க்சும் எங்கெல்சும் சார்ட்டிச இயக்கத்தின் மற்றொரு இடதுசாரித் தலைவரான ஏர்னெஸ்டு ஜோன்சுடன் இன்னும் அதிகமாக நெருங்கிய தொடர்பு கொண்டார்கள். இவர் இயக்கத்தைப் புனர்

நிர்மானம் செய்வதற்காக ஊக்கமிக்க வேலை செய்து வந்தார், ஆரம்பத்தில் மார்க்ஸ், எங்கெல்சின் வழிகாட்டுதல்களுக்கும் ஆலோசனைகளுக்கும் கூர்ந்து செவி மடுத்தார். மக்களுக்கான குறிப்புக்கள் (*Notes to the People*) என்னும் பத்திரிகையை வெளிக் கொண்டு வருவதற்கு ஜோன்சால் முடிந்தது. மார்க்சும் எங்கெல்சும் இப்பத்திரிகையில் நிறையக் கட்டுரைகள் எழுதி பத்திரிகையின் பொருளாதார அடித்தளத்தை நிறுவுவதற்கு உதவியதால், தனது முதல் வெற்றிகளுக்கு மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் ஜோன்ஸ் பெரிதும் கடமைப்பட்டிருந்தார். பத்திரிகையைப் பதிப்பிக்கும் வேலையிலும் நேரடியாக ஈடுபட்டார் மார்க்ஸ்.

சார்ட்டிசம் புதிய அடித்தளத்தில் புத்துயிர் பெற்று எழ வேண்டும் என்பதற்காகத் தம்மாலான அனைத்தையும் மார்க்சும் எங்கெல்சும் செய்தபோதிலும் அதைப் பற்றி எந்த வித மாயையையும் அவர்கள் மனத்தில் கொண்டிருக்கவில்லை. சார்ட்டிசம் வீழ்ச்சி அடைந்து வருகிறது என்றும், சிறு சிறு கும்பல்களாக அது சிதறி விழப் போகிறதென்றும், இக்கும்பல்கள் முதலாளித்துவத் தீவிரவாதிகளின் ஆமாஞ்சாமிகளாகப் போகின்றன என்றும் அவர்கள் கண்டார்கள். வலதுசாரிச் சார்ட்டிஸ்டுகளின் உதாரணத்தைப் பின்பற்றி சுயேச்சையான தொழிலாளர் இயக்கமே தேவையில்லை என்று ஜோன்ஸ் உதறித்தள்ளி விடவே அவருடனும் தமது உறவுகளை மார்க்சும் எங்கெல்சும் இறுதியாகத் துண்டித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

1858 அக்டோபர் 7ல் எழுதிய கடிதத்தில் முதலாளித்துவத் தீவிரவாதிகளை நோக்கி ஜோன்ஸ் திரும்பி விட்டதைப் பற்றி மார்க்சுக்குத் தகவல் தந்த எங்கெல்ஸ், ஆங்கிலேயப் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கம் தாற்காலிகமாகத் தொய்வு அடைந்ததற்குக் காரணங்களை விவரிக்கிறார்:

''...பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கம் எதார்த்தத்தில் மேலும் மேலும் முதலாளித்துவ மயமாகி வருகின்றது. இறுதியாகப் பார்க்கப் போனால், எல்லா முதலாளித்துவ தேசங்களிலும் கடைந்தெடுத்த முதலாளித்துவ தேசமான இது, முதலாளித்துவப் பிரபுவம்சத்தையும் முதலாளித்துவ மயமான பாட்டாளி வர்க்கத்தையும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு அருகில் அமர்த்திக் கொள்ள விரும்புவதாகத்தான்

தோன்றுகிறது. ஜோன்சினுடைய புதிய போக்கை... உண்மையில் இப்படித்தான் விளக்க வேண்டும். உலகம் முழுவதையும் சுரண்டிக் கொண்டிருக்கும் இத்தகைய ஒரு தேசத்தில் இதுவும் ஓரளவுக்கு விதிக்குட்பட்டது என்பது சொல்லாமலே விளங்கும்.''*

50ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தில் நிலவி வந்த சந்தர்ப்பவாதத்தின் வேர்களை ஆழமாக அலசிக் காட்டிய எங்கெல்சின் இந்தப் பகுப்பாய்வை, ஏகாதிபத்தியக் காலகட்டத்தில் சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் நிலவும் சந்தர்ப்பவாதத்தை ஆராய்ச்சி செய்கையில் பல முறை மேற்கோள் காட்டினுர் லெனின்.

* * *

50ஆம் ஆண்டுகளின் இறுதியில் தேசிய விடுதலை இயக்கங்களும் முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களும் ஐரோப்பாவில் உயிர்ப்புப் பெறத் தொடங்கின.

முதலாளித்துவப் புரட்சி தீர்க்காத பிரச்னைகள் பல நாடுகளில் புதிய தெம்புடன் எழுந்து நின்றன. ஜெர்மனியிலும் இத்தாலியிலும் முதலாளித்துவம் வளர்ச்சி அடைய அடைய சிதறுண்டு கிடந்த நாட்டை ஒன்றிணைக்க வேண்டிய, ஒரே அரசு அமைத்திட வேண்டிய பணி மேலும் மேலும் கூர்மையாகி வந்தது.

ஆயினும், எந்தச் சக்திகளால், எந்தச் சாதனங்களால், எந்த வழிகளில் இந்தக் காரியத்தை நிறைவேற்றுவது என்னும் பிரச்னை எழுந்தது.

1859ஆம் ஆண்டு மூன்றும் நெப்போலியன் (லுயீ போனபார்ட்) வடக்கு இத்தாலிக்காக ஆஸ்திரியாவுடன் போர் தொடுத்த போது ஜெர்மனியில் தேசியப் பிரச்னை மேலும் கூர்மை அடைந்தது. இந்தப் போரைப் ''பிரபலப்''படுத்துவதற்காகவும், அதன் மூலம் ஆட்டம் கண்டு கொண்டிருந்த தனது சிம்மாசனத்தை வலுப்படுத்தவும், ஆஸ்திரிய அடிமைத் தனத்திலிருந்து இத்தாலிக்கு விடுதலை என்னும்

---

* *Engels' Letter to Marx on October 7, 1858;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, pp. 132-133.

வாய்ச்சவடால் கோஷத்துடன் அப்போரினை நியாயப்படுத்தினான் லுயீ போனபார்ட்.

ஆஸ்திரியாவுக்கு எதிராக பிரான்ஸ் நடத்திய போரை ஒட்டி பிரஷ்யா இந்தப் போரில் மேற்கொள்ள வேண்டிய நிலை பற்றிய பிரச்னையும், ஜெர்மனியை ஒன்றிணைப்பதற்கான வழிகள் பற்றிய பிரச்னையும் மேலெழுந்தன. இதுவே தகுந்த சமயம் என்று கருதி இத்தாலிக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையே நடந்த போரினைப் பற்றி ராணுவப் போர்த்தந்திரக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்து பிரசுரம் ஒன்றினை எழுதினார் எங்கெல்ஸ். இதில் இந்தப் போரைப் பற்றிய அரசியல் மதிப்பீடு செய்து ஜெர்மன் ஜனநாயகம் இந்தப் போரில் கடைப்பிடிக்க வேண்டிய நிலை என்ன என்று வகுத்துத் தருகிறார் எங்கெல்ஸ்.

போவும் ரைனும் *(1859)* என்றழைக்கப்பட்ட இந்தப் பிரசுரத்தில் இத்தாலியின் தேசிய விடுதலைக்கு ஆர்வமிக்க ஆதரவு நல்கி, அதே போதில் இத்தாலிக்குத் தேசிய சுதந்திரம் என்னும் பதாகையின் கீழ் இத்தாலிய மக்களுக்குப் புதிய அடிமைத் தனத்தைக் கொண்டு வரும் போனபார்டின் முகமூடியையும் கிழித்தெறிகிறார் எங்கெல்ஸ். போ நதிக் கரையில் போர் நடத்தி வரும் போனபார்ட், உண்மையில் ரைன் மீது குறி வைக்கிறான், அதாவது, ஜெர்மனியைத் தாக்கத் திட்டமிடுகிறான் என்றும் பிரசுரத்தில் எங்கெல்ஸ் மெய்ப்பிக்கிறார். தன்னுடைய அண்டை நாடான ஜெர்மனி பொருளாதார, அரசியல் ரீதியில் சிதறுண்டு கிடப்பதே தனக்கு நல்லது என்று போனபார்டின் பிரான்ஸ் எண்ணியது. எனவே, போனபார்டுக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்க வேண்டியது அவசியம் என்று கருதிய எங்கெல்ஸ், போனபார்டுக்கு எதிராகப் பிரஷ்யா போர் நடத்தினால் பரவலான மக்கள் இயக்கத்தை அது தூண்டி விடும் என்றும், அவ்வியக்கம் பிரஷ்ய அரசாங்கத்தைப் புரட்சியின் மூலம் ''அடிமட்டத்திலிருந்து'' துடைத்தெறிந்து ஜெர்மனியை ஒன்று சேர்க்கும் என்றும் எண்ணினார்.

ஜெர்மனியை ஒன்றுபடுத்துவது பற்றிய பிரச்னையில் தமது கட்சி-அரசியல் கருத்தை ராணுவப் போர்த்தந்திரங்கள் நிரம்பிய ஒரு நூல் வடிவில் மிகத் திறமையுடன் எழுதி,

மார்க்சின் ஆலோசனைப்படி பெயரின்றி வெளியிட்டார் எங்கெல்ஸ்.

1860ல் அதேபோல் பெயரின்றி எழுதி வெளியிட்ட இரண்டாவது பிரசுரம் முதல் பிரசுரத்தின் தொடர்ச்சியைப் போல **சவோய்யா, நீத்சா, ரைன்** என்ற பெயரில் வெளியாயிற்று.

ஆஸ்திரிய-இத்தாலிய-பிரெஞ்சுப் போர் குறித்து மார்க்சும் எங்கெல்சும் மேற்கொண்ட நிலையின் காரணமாக, 1848ஆம் ஆண்டு முதல் மார்க்சுடன் கடிதப் போக்குவரத்து கொண்டிருந்தவரும், மார்க்ஸ் கட்சியினது ஆதரவாளர் என்று தன்னை அறிவித்துக் கொண்டிருந்தவருமான பெர்டினுண்டு லஸ்ஸாலுடன் அவர்களுக்குக் கடுமையான கருத்து வேறுபாடு தோன்றியது.

ஆஸ்திரிய-இத்தாலிய-பிரெஞ்சுப் போர் நடந்து கொண்டிருந்த வேளையில் லஸ்ஸால் எழுதிய **இத்தாலியப் போரும் பிரஷ்யாவின் கடமைகளும்** என்னும் பிரசுரம், உண்மையில் எங்கெல்சின் **போவும் ரைனும்** என்னும் பிரசுரத்திற்கு எதிராக எழுதப்பட்டதேயாகும். புரட்சிகர வழியின் மூலம் ஜெர்மனியை ஜனநாயகக் குடியரசாய் ஒன்றிணைப்பதற்காகத் தொடர்ந்து போராடி வந்த மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் எதிராக, ஜெர்மனியின் ஒன்றிணைப்பில் பிரஷ்யா தலைமைப் பீடத்தில் இருக்க வேண்டும் என்று கூறி பிற்போக்குத்தனமான பிரஷ்யாவுக்கு ஆதரவு தர வேண்டுமென்றுர் லஸ்ஸால்.

ஐரோப்பாவின் தலைமை ஸ்தானத்துக்குப் போட்டி போட்டுக் கொண்டிருந்த போனபார்ட் பிரான்சின் முகமூடியைக் கிழித்து, தேசிய விடுதலைப் பணியை மேற்கொண்டு, தமது சொந்தக் கைகளாலேயே நாட்டை ஒன்றிணைக்கும்படி இத்தாலிய மக்களுக்கு மார்க்சும் எங்கெல்சும் அறைகூவல் விடுத்துக் கொண்டிருந்த நேரத்தில், இத்தாலிய மக்களுக்காக ''விடுதலைப் பணி'' புரிகிறுன் போனபார்ட் என்று ஒரு மாயையைப் பரப்பி, அதன் மூலம் பிரெஞ்சுப் பேரரசனின் நாடு பிடிக்கும் அரசியலுக்கு ஆதரவு தந்தார் லஸ்ஸால்.

லஸ்ஸால் மேற்கொண்ட நிலைக்கு எதிராக மார்க்சும் எங்கெல்சும் கடுமையான தாக்குதல் தொடுத்தனர். லஸ்ஸாலுக்கு அவருடைய புத்தகம் பற்றி மார்க்ஸ் எழுதினுர்: ''உங்களது கருத்துக்கள் என்னுடைய கருத்துக்களுடனே, பிரிட்

டனிலுள்ள எனது கட்சி நண்பர்களின் கருத்துக்களுடனே எந்தவித சம்பந்தமும் இல்லாதவை.''

எங்கெல்சின் வார்த்தைகளில் 1862 வரை ''தனி வகை பிரஷ்யக் கொச்சை ஜனநாயகவாதியாய் பலமான போன பார்டிச மனப்பாங்கு கொண்டிருந்த'' லஸ்ஸால் ஜெர்மனியில் தொழிலாளி வர்க்கக் கட்சியின் அமைப்பாளராகவும் சித்தாந்தவாதியாகவும் செயல்பட்டபோது மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் லஸ்ஸாலிடம் இருந்த கடுமையான கருத்து வேறுபாடுகள் மேலும் தீவிரமடைந்தன. ஜெர்மனியில் முதலாளித்துவ ஜனநாயக இயக்கம் உயிர்ப்புப் பெற்றதும், பிரஷ்யாவில் பிரதிநிதிகள் சபைக்கும் அரசாங்கத்துக்கும் இடையே தோன்றிய கூர்மையான அரசியல் சட்ட மோதலும் தொழிலாளி வர்க்க இயக்கம் விழிப்படைய உதவி செய்தன. அப்பொழுதுதான் தோன்றிய அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்துக்குத் தலைவராகி விடுவதற்கு இதுவே சரியான சமயம் என்று எண்ணினர் லஸ்ஸால்.

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை, கம்யூனிஸ்டுகள் சங்கத்துக்கு மத்திய கமிட்டியின் அறைகூவல் ஆகியவற்றில் மார்க்சும் எங்கெல்சும் பிரகடனப்படுத்தி இருந்த வேலைத்திட்டத்துக்கு அடியோடு மாறுபட்ட வகையில் இச்சங்கத்தின் வேலைத் திட்டத்தைப் பலப்பல கட்டுரைகளிலும் பேச்சுக்களிலும் வெளியிட்டார் லஸ்ஸால்.

அரசு பற்றிய மிக முக்கியமான பிரச்னையில் மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் லஸ்ஸாலிடம் இருந்த அடிப்படைக் கருத்து வேறுபாடுகள் தெள்ளத் தெளிவாக வெளியாயின.

வர்க்கங்களும் பகைமை முரண்பாடுகளும் நிலவும் சமுதாயத்தில் அரசு என்பது ஆதிக்கம் செலுத்துகின்ற வர்க்கத்தின் கைக்கருவியாக இருந்து, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை அடக்கி நசுக்குவதற்குப் பயன்படுத்தப் படுகிறது என்று மார்க்சிய மூலவர்கள் கருதினர் என்ருல், லஸ்ஸாலோ, ''சுதந்திரத்தை நோக்கி மனித இனத்தைப் பயிற்றுவிப்பதும் முன்னேற்றுவதுமே அரசின் குறிக்கோள்'' என்ருர்.

சமாதான வழியில் சட்ட பூர்வமாக மட்டுமே போராட்டம் நடத்த வேண்டும் என்று தொழிலாளி வர்க்கத்துக்கு லஸ்ஸால் போதித்தார். பொது வாக்குரிமை அளிக்கப்பட்டு விட்ட உடன், உரிமையும், பொருள்வளமும் எல்லோருக்கும்

சரிசமமாகக் கிடைக்கச் செய்கின்ற ''சுதந்திரமான மக்கள் அரசாக'' அரசு அமைந்து விடும் என்று நினைத்தார் லஸ்ஸால். பொருளுற்பத்தித் தோழமை அமைப்புக்கு உதவி செய்வதன் மூலம் இந்த அரசு ''தொழிலாளி வகுப்பை அரசின் சொந்தத் தொழிலதிபர்களாக மாற்றிவிடும்'' என்றார் அவர். இவ்வாறாக, பொது வாக்குரிமை அளிப்பதன் மூலம் உற்பத்திச் சாதனங்கள் அவர்களுக்குக் கிட்டுமாறு உதவி, சுரண்டலிலிருந்து அவர்களை மீட்கிறது பிரஷ்ய அரசு என்ற ஒரு தீமை மிகுந்த பிரமையைத் தொழிலாளர்களுக்கு ஊட்டினார் லஸ்ஸால். உண்மையான ஒவ்வொரு தொழிலாளர் இயக்கத்துக்கும், வர்க்கப் போராட்டத்துக்கும், வேலை நிறுத்தங்களுக்கும், தொழிற்சங்க அமைப்புக்களுக்கும் எதிரியானார் லஸ்ஸால்.

மார்க்சும் எங்கெல்சும் லஸ்ஸாலிடம் கொண்டிருந்த கோட்பாடு பூர்வமான தத்துவார்த்த வேறுபாடுகள் அதே போல அவர்கள் கடைப்பிடித்த நடைமுறை உத்தியிலும் அரசியல் வழிமுறையிலும் அடிப்படையிலேயே காணப்பட்டன. லஸ்ஸாலிடமே நேரடியாக மார்க்ஸ் அறிவித்தார்: ''வெகு தொலைவிலுள்ள இறுதி இலக்குகளைத் தவிர, ஒவ்வொரு விஷயத்திலும் அரசியல் ரீதியில் நாம் தீர்மானமாக வேறுபடுகிறோம்.''

பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் விவசாய மக்கள் பரவலாக பங்கு கொண்டு, புரட்சி செய்வதன் மூலமாகவே ஜெர்மனியின் தேசிய ஒற்றுமையைக் கொண்டு வர முடியும் என்று மார்க்சும் எங்கெல்சும் கருதிய போது, ''ஒரு முழுமையான பிற்போக்குத் திரள்'' தான் விவசாய வர்க்கமும் பாட்டாளி வர்க்கம் அல்லாத மற்ற மக்கள் பகுதியும் என்றும், நிலப்பிரபுக்களுக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக விவசாயிகள் நடத்துகின்ற இயக்கங்கள் பிற்போக்குத்தனமானவை என்றும் லஸ்ஸால் எண்ணினார்.

பிரஷ்ய நிலப்பிரபுக்களின் தலைமையில் ''மேல்மட்டத்தில்'' ஜெர்மனியை ஒன்றிணைப்பதற்கு பிஸ்மார்கின் அரசாங்கம் செய்து வந்த முயற்சிகளுக்கு முழு ஆதரவு நல்கினார் லஸ்ஸால். அரசியல் சட்ட மோதலின் போது மிதவாத முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராகத் தான் நடத்திய போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் ஆதரவு பெறுவதற்காக

அவ்வர்க்கத்துடன் பிஸ்மார்க் கொஞ்சிக் குலாவினுர் என்ருல், பொது வாக்குரிமை தருவதாக வாக்களித்த அதே பிஸ்மார்க்குடன் நேரடிப் பேச்சு வார்த்தைகள் நடத்தினுர் லஸ்ஸால்.

லஸ்ஸாலுக்கும் பிஸ்மார்க்குக்கும் இடையில் நடந்த இந்தப் பேச்சு வார்த்தைகள் பற்றி மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் ஏதும் தெரிந்திருக்கவில்லையாயினும், பிரஷ்ய நிலப் பிரபுக்களுடனும், பிஸ்மார்க் அரசாங்கத்துடனும் லஸ்ஸால் சரசமாடிக் கொண்டிருத்தது அவர்களுக்குத் தெரியாமல் இருக்க இல்லை. ''நேரடியாக பிஸ்மார்க்குக்காகவே நம்முடைய ஆசாமி இப்போது வேலை செய்கிருர்'' என்று லஸ்ஸாலைப் பற்றி எழுதினுர் எங்கெல்ஸ்.

1864 ஆகஸ்டு *31*ல் நடந்த ஒரு சவால் சண்டையில் அடைந்த காயத்தின் விளைவாக லஸ்ஸால் காலமான பின்பு, வெளியான அவருடைய கடைசி கால அரசியல் திட்டங்கள் மார்க்சும் எங்கெல்சும் ஏற்கெனவே கொண்டிருந்த சந்தேகங்களை ஊர்ஜிதம் செய்தன. ஷ்லேஸ்விக்-கொல்ஷ்டைனைப் பிரஷ்யாவுடன் பலாத்காரமாக இணைத்துக் கொள்வதற்காக டென்மார்க்குக்கு எதிராக பிரஷ்யா நடத்தவிருந்த போரில் பிஸ்மார்க்குக்கு ஜெர்மன் தொழிலாளர்களின் ஆதரவைத் தந்து, இந்தச் சேவைக்குப் பிரதி உபகாரமாக, பிஸ்மார்க் வாக்களித்திருந்தபடி பொது வாக்குரிமை பெறுவதென்று லஸ்ஸால் திட்டமிட்டிருந்ததாக, லீப்க்னெஹ்ட் மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் தகவல் தந்தார். லஸ்ஸாலின் இந்த நோக்கங்களை அறிந்த எங்கெல்ஸ் மார்க்சுக்கு எழுதினுர்: ''எதார்த்தத்தில் இது நீசத்தனமாகும், பிரஷ்யர்களுக்காகத் தொழிலாளி வர்க்க இயக்கம் அனைத்துக்கும் துரோகம் புரிவதாகும்.''*

முற்போக்காளர் கட்சி என்று சொல்லப்பட்ட முதலாளி வர்க்கக் கட்சியினது செல்வாக்கிலிருந்து தொழிலாளர்களை விடுவிப்பதில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் லஸ்ஸால் உதவி புரிந்திருக்கிருர் என்பதாலும், பொறுத்திருந்து பார்ப்போம் என்று நினைத்ததாலும், தொழிலாளர்கள் மத்தியில் லஸ்ஸால் பிரசாரம் துவக்கிய உடனேயே, அவருக்கு எதிராக

* *Engels' Letter to Marx on January 27, 1865;* Marx-Engels, *Gesamtausgabe*, Dritte Abteilung, Band 3, S. 219.

பகிரங்கமாக மார்க்சும் எங்கெல்சும் தாக்குதல் தொடுக்க வில்லை. தமது ஆதரவாளர்களின், முதன்மையாக வில்கெல்ம் லீப்க்னெஹ்ட் மூலமாக அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தில் உள்ளிருந்தே வேலை செய்யவும், இந்தச் சங்கத் திலிருந்த தொழிலாளர்களுக்கு சரியான வழியில் செல்வதற் காக உதவி புரியவும் மார்க்சும் எங்கெல்சும் முயன்றனர். தொழிலாளர் இயக்கத்துக்கு லஸ்ஸால் புரிந்த துரோகத்தை அறிந்த அவர்கள் லஸ்ஸாலியத்துக்கு எதிராக பகிரங்கப் போராட்டம் தொடங்கினர். ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தில் சந்தர்ப்பவாதத்தின் ஆரம்ப கர்த்தாவா யிருந்த லஸ்ஸால் விட்டுச் சென்ற சொத்தான லஸ்ஸாலிய மரபுகள் ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் வேர் பரப்பி விட்டதால் மார்க்சிய மூலவர்கள் இந்தப் பரம்பரைச் சொத் துக்கு எதிராக நெடிய போராட்டம் நடத்த வேண்டியதா யிற்று. தேசிய, சந்தர்ப்பவாத லஸ்ஸாலியப் பிரிவுக்கு எதி ராக மார்க்சும் எங்கெல்சும் தொடுத்த போராட்டம், முதல் அகிலம் நடந்த காலத்தில், குறிப்பாக மிகவும் கூர்மையாக இருந்தது.

7

முதல் அகிலமும் பாரிஸ் கம்யூனும் நடந்த நாட்களில் எங்கெல்ஸ்

பிற்போக்கு பேயாய் ஆடி வந்த சூழ்நிலைமையில், மார்க்சும் எங்கெல்சும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமைக்காகத் தொடர்ந்து நடத்திய அலுப்பு சலிப்பற்ற கடிய போராட்டத்தால், சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பான முதல் அகிலத்தை 1864ல் நிறுவ முடிந்தது.

இந்த வெகுஜன சர்வதேசப் பாட்டாளி வர்க்க அமைப்பை நிறுவுவதற்கு வரலாற்றுச் சூழல்கள் அனைத்தும் அப்போது உதவி புரிந்தன. 1857ல் வெடித்த தொழில் நெருக்கடிதான் தொழிலாளர் இயக்கத்தின் புதிய எழுச்சிக்குத் தொடக்க முனையாக இருந்தது. பல்வேறு நாட்டுப் பாட்டாளிகளின் தலைவிதியும் துன்பங்களும் ஒன்றேயாக இருப்பது முதலாளித்துவம் முன்னேறி வந்த காலத்தில் மேலும் மேலும் தெளிவாகி வந்தது. நெருக்கடி காலத்தில் அந்த நெருக்கடியின் பாரம் அனைத்தையும் தொழிலாளர்களின் தோள்களிலே ஏற்றி விடுவதற்கு முதலாளி வர்க்கம் முயற்சி செய்த போது இன்னும் குறிப்பாக இது உணரப்பட்டது. முதலாளிகளின் இந்தப் போக்குக்கு வேலை நிறுத்தங்களால் தொழிலாளர்கள் பதிலளித்த போது, வெளிநாட்டிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்தனர் முதலாளிகள். எனவே, மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிராக, எல்லா நாட்டுப் பாட்டாளிகளும் ஒன்றுபட்டும் இணைந்தும் போராட வேண்டியது அவசியம் என்று தமது சொந்த அனுபவத்தினால் உணர்ந்தனர் தொழிலாளர்கள்.

50ஆம் ஆண்டுகளின் இறுதியிலும் 60ஆம் ஆண்டுகளின் தொடக்கத்திலும் தேசிய விடுதலை இயக்கங்கள் உள்ளிட்ட முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்கள் உயிர்ப்புப் பெற்ற

தானது தொழிலாளி வர்க்கத்தை அரசியல் ரீதியில் விழிப்புறச் செய்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடந்த உள்நாட்டுப் போரின் போது பிரிட்டிஷ் தொழிலாளர்கள் நடத்திய இயக்கம் சர்வதேசத் தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கு ஒரு தெளிவான சான்ருகும். அமெரிக்காவின் அடிமை உடைமைத் தென்பிராந்தியத்திற்கு ஆதரவாகவும், இத்தென்பிராந்தியத்தை விட முற்போக்கான வட மாநிலங்களுக்கு எதிராகவும் ஆதிக்க வர்க்கங்கள் தலையிடுவதற்கு ஏற்பாடு செய்வதையும் பெரும் ஆர்பாட்டங்களாலும் எதிர்ப்புக் கூட்டங்களாலும் தடுத்து நிறுத்தினர் தொழிலாளர்கள்.

1863ல் போலந்து எழுச்சியின் போது சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒற்றுமையின் வளர்ச்சி இன்னும் தெளிவாய் வெளியாயிற்று. ஒடுக்கப்பட்டுக் கிடந்த போலந்து மக்களுக்குப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்ட சர்வதேசியப் பொதுக்கூட்டங்களின் மூலம் ஆர்வமிக்க ஆதரவை நல்கி ஒடுக்கு முறையால் பாட்டாளிகளின் குருதி கொட்டிய ருஷ்ய ஜாரிசத்தின் மீது வெறுப்பை உமிழ்ந்தார்கள் தொழிலாளர்கள்.

சர்வதேசப் பொருளாதார, அரசியல் சூழ்நிலையையும், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் புதிய எழுச்சியையும் சரியாக மதிப்பீடு செய்த மார்க்ஸ், தாம் எங்கெல்சுடன் சேர்ந்து எந்த சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒற்றுமைக் கருத்துக்காக விடாமுயற்சியுடன் நீண்ட காலம் போராடினரோ அது இப்போது உயிர் பெற்று வெற்றிகரமாக உருப்பெறுவதற்கான வாய்ப்புகள் வந்தடைந்துள்ளன என்ற முடிவுக்கு வந்தார். 1864 செப்டம்பர் 28ல் லண்டனிலுள்ள சென்ட்-மார்டின்ஸ் மண்டபத்தில் நடந்த சர்வதேசியக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார். இங்குதான் சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பு நிறுவப்பட்டது. இதன் தலைவராயும் சித்தாந்தவாதியாயும் மார்க்ஸ் திகழ்ந்தார்.

முதலாளித்துவ ஜனநாயகத்திலிருந்து தொழிலாளி வர்க்கம் விடுபட உதவுவது, சுயேச்சையான தொழிலாளி வர்க்க இயக்கம் தோன்றுவதற்கு வழி வகுப்பது, பல்வேறு சோஷலிச, அரைச் சோஷலிசப் பிரிவுகளின் செல்வாக்கிலிருந்து

தொழிலாளிகளை மீட்பது, முரணற்ற பாட்டாளி வர்க்க சர்வ தேசிய மனப்பாங்கில் தொழிலாளி மக்களைப் பயிற்றுவிப்பது, கட்சி ஒன்று உருவாக்குவதற்காக அவர்களைத் தயார் படுத்துவது ஆகியவைகளே இந்த அமைப்பின் முக்கியமான பணிகள் என்று மார்க்ஸ் கருதினர்.

பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பை கறாரான ஜன நாயகக் கொள்கைகளின் அடிப்படையில் தோற்றுவித்தார். மார்க்சியத்திற்கு அயலான, தனிநபர் வழிபாட்டுக்கு இட்டுச் செல்லும் எல்லாவற்றையும் தீர்மானமாகத் தடுத்து நிறுத்தினுர் அவர். குட்டி முதலாளித்துவத் தலைவர்கள் தமது அமைப்புக்களில் இந்தத் தனிநபர் வழிபாட்டைப் புகுத்தி அதிலேயே திளைத்துக் கொண்டிருந்தனர். 1877 நவம்பரில், ஒரு கடிதத்தில் மார்க்ஸ் சொன்னுர்: ''...அகிலம் செயல் பட்ட பொழுது என்னுடைய பணிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்துப் பல்வேறு நாடுகளிலிருந்து வந்த ஏராளமான பாராட்டுகள் என்னைச் சலிப்பூட்டி அருவருப்படையச் செய்ததை எல்லாவிதமான தனிநபர் வழிபாட்டையும் வெறுத்துப் பகைக்கிற நான் வெளியில் சொல்லாமல் இருந் தேன்—நான் அவற்றுக்கு ஒரு போதும் பதில் எழுதியது கூட இல்லை, சில நேரங்களில் இவற்றைக் கண்டித்து மட் டும் வந்திருக்கிறேன். எங்கெல்சும் நானும் கம்யூனிஸ்டுகளின் ரகசியச் சங்கத்தில் முதலில் சேரும் போது, மூடத்தன மாக அதிகாரத்திற்கு முன் அடிபணியத் துணை செய்யும் சங்கத்தின் எல்லாப் பகுதிகளையும் விதிகளிலிருந்து வீசியெறிந்து விட வேண்டும் என்று கண்டிப்பான நிபந்தனை விதித்தே அதில் சேர்ந்தோம்...''*

சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப் புக்குத் தலைமை தாங்கி அதனை வழி நடத்துவதில் ஆரம்ப நாட்களிலேயே சிக்கல்கள் தோன்றின: பல்வேறு மட்டத்தில் வளர்ச்சியுற்றிருந்த பற்பல நாடுகளிலுள்ள தொழிலாளர் இயக்கத்தை ஒன்றிணைக்க வேண்டி இருந்தது; வேறுவேறு விதமான சக்திகளிடமிருந்த செக்டேரியவாதம், குட்டி முத

**Marx' Letter to Bloss on November 10, 1877*, K. Marx and F. Engels, *Works*, Vol. XXVI, Russ. ed., pp. 487-88.

லாளித்துவப் போக்குகள் ஆகியவற்றைக் களைந்து அச்சக்தி களை ஒழுங்காக வேலை செய்யுமாறு ஆக்கி தொழிலாளி இயக்கத்தை மேலும் மேலும் உயர்ந்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல வேண்டி இருந்தது.

அகிலத்தின் முதல் வேலைத்திட்ட ஆவணங்களான **அமைப்பு அறிக்கை, தற்காலிக விதிகள்** ஆகியவற்றை வகுக்கும் போது கஷ்டங்களைச் சந்தித்த மார்க்ஸ் இது பற்றிப் பின்வருமாறு எங்கெல்சுக்கு எழுதினார்: ''பாட்டாளி வர்க்க இயக்கம் இப்போது இருக்கின்ற மட்டத்திலே அது ஏற்றுக் கொள்ளத் தக்க வடிவத்தில் நமது கருத்துக்களைத் தருவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.... முந்தைய வாக்குத் துணிவுக்கு வகை செய்கின்ற அளவில் இயக்கம் விழிப்புறுவதற்கு இன்னும் சிறிது பொறுத்திருக்க வேண்டும்.''*

இந்தப் பணியில் மார்க்ஸ் மிகச் சிறப்பாக வெற்றி கண்டார். தமது கண்ணோட்டங்களில் இம்மியும் விட்டுக்கொடுக்காமல், அவர் வகுத்த வேலைத்திட்டம், பிரிட்டிஷ் தொழிற் சங்கவாதிகளுக்கும், பிரெஞ்சுப் புரூதோனிஸ்டுகளுக்கும், ஜெர்மன் லஸ்ஸாலியர்களுக்கும் அகிலத்தின் கதவைத் திறந்தே வைத்திருந்தது.

பொதுமக்கள் பெறுகின்ற நடைமுறை அனுபவமும், பல்வேறு விதமான குட்டி முதலாளித்துவக் கண்ணோட்டங்களுக்கு எதிராக தாமும் எங்கெல்சும் தொடர்ந்து நடத்தி வந்த போராட்டமும், தொழிலாளர்கள் குட்டி முதலாளித்துவக் கண்ணோட்டங்களிலிருந்து மீண்டு விஞ்ஞானக் கம்யூனிசத்தைப் புரிந்து கொள்ளுமளவுக்கு உயர்ந்து செல்ல வகை செய்யும் என்று மார்க்ஸ் கருதினார். உதாரணமாக, சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பு உருவான ஆரம்ப நாட்களிலிருந்தே, மார்க்சியக் கருத்துக்கள் அகிலத்தில் மேலோங்குவதற்காக முறையாகவும் கடுமையாகவும் போராட்டம் நடத்தினார் மார்க்ஸ்.

பழையபடி எங்கெல்ஸ் மாஞ்செஸ்டரிலேயே வாழ்ந்து வருமாறும், தமது நேரத்தின் பெரும் பகுதியை ''நாய்த்தனமான வர்த்தகத்தில்'' செலவிடுமாறும் நிர்பந்திக்கப்பட்ட

---

* *Marx' Letter to Engels on November 4, 1864;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 182.

தால், அகிலத்தை உருவாக்குவதிலும், அவ்வகிலத்தின் நிர்வாக அமைப்பில் பொதுக் குழுவின் வேலையில் நேரடியாகப் பங்கு கொள்ளவும் அவருக்கு முடியவில்லையாயினும், அகிலத்தை நிர்வகிப்பதில் மிகவும் செயல்பூர்வமான உதவியை அவர் மார்க்சுக்கு நல்கி வந்தார். அகிலத்தில் நடந்து வருகின்ற பணிகள் பற்றியும் பொதுக் குழுவில் தாம் நடத்துகின்ற போராட்டம் பற்றியும் முறையாக எங்கெல்சுக்கு அறிவித்து வந்தார் மார்க்ஸ். பலப்பல பிரச்னைகளில் தமக்கு ஆலோசனைகள் கூறுமாறும் பொதுக் குழுக் கூட்டத்துக்குத் தேவையான தகவல் சேகரித்துத் தருமாறும் எங்கெல்சிடம் அவர் அடிக்கடி கேட்டுக் கொண்டார். உதாரணமாக, சக்சோனிய நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் சங்கங்கள் பற்றிய விவரமான விரிவுரை ஒன்று எங்கெல்சால் வரையப்பட்டு, பொதுக் குழுவின் ஜெர்மன் செயலாளராகவும் நிருபராகவும் திகழ்ந்த மார்க்சின் விரிவுரை என்ற வகையில் அகிலத்தின் பொதுக் குழுவால் 1869ல் பிரசுரிக்கப்பட்டது.

அகிலத்தில் வெடித்துக் கிளம்பிய போராட்டத்தை ஒட்டி மார்க்சியத்திற்கு ஆதரவாகவும், மார்க்சியத்தின் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ விரோதிகளுக்கு எதிராகவும் பத்திரிகைகளில் பல முறை கட்டுரைகள் எழுதினர் எங்கெல்ஸ்.

அகிலம் அமைந்தவுடன் மார்க்ஸ் எதிர்த்துப் போராட வேண்டியிருந்த முதல் பகைவனாக விளங்கியது புரூதோனிசம். சிறு தொழில் உற்பத்தியும் கைத்தொழிலும் இன்னும் குறிப்பிடத்தக்க அளவில் இருந்து வந்த பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி போன்ற சில நாடுகளில் புரூதோனின் செல்வாக்கு அதிகமாய் இருந்தது.

அகிலத்தில் மார்க்சுக்கு எதிராக புரூதோனிஸ்டுகள் போராடிய முதன்மையான பிரச்னைகளில் ஒன்று போலந்தின் சுதந்திரம் பற்றியதாகும். போலந்து பற்றிய பிரச்னை தொழிலாளர்கட்குச் சம்பந்தமில்லாதது போலவும் எனவே அதனை ஒரு ''அரசியல்'' பிரச்னையாக 1866ல் நடக்க இருந்த அகிலத்தினது ஜெனீவா காங்கிரசின் நிகழ்ச்சி நிரலில் சேர்த்து விவாதிக்கக் கூடாது என்றும் புரூதோனிஸ்டுகள் வாதாடினர். மார்க்சின் வேண்டுகோளுக்கு இணங்க, தொழிலாளி வர்க்கத்துக்குப் போலந்து ஒரு பிரச்னையா? என்ற தலைப்பில் எங்

கெல்ஸ் ஒரு தொடர் கட்டுரை எழுதினர். இந்தக் கடடுரை களில், தேசியப் பிரச்னையை அசட்டை செய்வதன் மூலமும், போலந்துக்காரர்களுக்கு ஆதரவு தர மறுப்பதன் மூலமும், உண்மையில் பிரஷ்ய, ஆஸ்திரிய முடியரசுகள், பிற்போக்குத் தனமான ருஷ்யாவின் ஜாரிசம் ஆகியவற்றின் அடக்குமுறை அரசியலுக்கு புரூதோனிஸ்டுகள் நடைமுறையில் உதவி புரி கிருர்கள் என்று எடுத்துக் காட்டி அவர்களின் முகமூடியைக் கிழித்தெறிந்தார் எங்கெல்ஸ்.

புரூதோனிஸ்டுகளுக்கு எதிராகப் போராடி வந்த அதே நேரத்தில், ஜெர்மன் தொழிலாளிகள் பாட்டாளி வர்க்க சர்வதேச அமைப்புடன் இணைவதற்கு முட்டுக்கட்டை போட்டு வந்த லஸ்ஸாலிய மரபுகளுக்கு எதிராகவும் மார்க்சும் எங்கெல்சும் போராட்டத்தைத் துவக்கினர்கள்.

அகிலம் நிறுவப்பட்ட சில காலத்துக்குப் பின் அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத் தலைவர்களில் ஒருவராய் இருந்த ஷ்வேய்ட்சர் என்பவரிடமிருந்து, அவர் ஆரம்பிக்க இருக்கும் **சமூக ஜனநாயகவாதி** என்ற பத்திரிகையில் பணி யாற்ற வருமாறு மார்க்சுக்கு அழைப்பு வந்தது. ஷ்வேய்ட் சரின் கடிதத்தில், ஜெர்மன் தொழிலாளர் கட்சியை நிறுவி, அக்கட்சியின் முன்னணி வீரராய் இருந்து மார்க்ஸ் ஆற்றிய பணிகளைக் கோடிட்டுக் காட்டியதும், பத்திரிகையின் பணி கள் பற்றி அவர் அனுப்பி இருந்த நகல் குறிப்பில் வழக்க மான லஸ்ஸாலிய கோஷங்கள் இல்லாதிருந்ததும், அகிலத் தின் கருத்துக்களை ஜெர்மனியில் பரப்புவதற்கு இந்தப் பத் திரிகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மார்க்சை யும் எங்கெல்சையும் நம்பச் செய்தன. எனவே கூட்டுப் பணி புரிவதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்தனர். முத லாவதாக அகிலத்தின் **அமைப்பு அறிக்கையைப்** பத்திரிகை யில் பிரசுரிப்பதற்காக மார்க்ஸ் அனுப்பினர். ஆனல், **சமூக ஜனநாயகவாதியின்** முதல் சோதனை இதழ்களே மார்க்ஸ், எங்கெல்சிடம் கவலையைத் தோற்றுவித்தின. லஸ்ஸாலிய மரபுப்படி பிஸ்மார்க்கின் நிலப்பிரபுத்துவ அரசாங்கத்திடம் கொஞ்சிக் குலாவத் தொடங்கியது பத்திரிகை. புரூதோனின் மரணத்தை ஒட்டி **சமூக ஜனநா யகவாதியில்** மார்க்ஸ் எழுதிய கட்டுரையில், அப்போதைய ''அரசாங்கத்துடன் செய்து கொள்கிற சமரசம் அனைத்துக்

கும் (அது வெறும் தோற்றமாயினும்)'' தாக்குதல் தொடுக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். போன பார்டுடன் புரூதோன் சரசமாடியது ''நீசத்தனம்'' என்று எடுத்துக் காட்டினார். நிலப்பிரபுக்களுக்கு எதிராக விவசாயி கள் நடத்திய போர் பற்றிய, படிப்பினை மிக்க, பழைய டேனிஷ் விவசாயப் பாடல் ஒன்றின் மொழிபெயர்ப்பைப் பின்கண்ட முடிவுடன் சமூக ஜனநாயகவாதிக்கு எங்கெல்ஸ் அனுப்பினார்:

''எந்த நாட்டின் உடைமை வர்க்கங்களில் முதலாளித் துவ வர்க்கம் இருக்கிற அதே அளவுக்கு நிலப்பிரபுத்துவ உயர் குடியினர் உள்ளனரோ, எந்த நாட்டின் பாட்டாளி வர்க்கத்தில் இயந்திரத் தொழில் சார்ந்த தொழிலாளர்கள் இருக்கிற அதே எண்ணிக்கையிலோ அல்லது இன்னும் அதி கமாகவோ விவசாயத் துறைப் பாட்டாளிகள் இருக்கிறார் களோ அந்த ஜெர்மனியைப் போன்ற ஒரு நாட்டில்—உற் சாகமிக்க இந்த பழைய விவசாயப் பாடல் மிகப் பொருத் தமானதாகும்.''

பத்திரிகையை நேர்வழிக்குத் திருப்ப மார்க்சும் எங்கெல் சும் செய்த இது போன்ற எத்தனையோ முயற்சிகள் பலன ளிக்கவில்லை. நிலப்பிரபுத்துவ பிஸ்மார்க் அரசாங்கத்துடன் கொஞ்சிக் கொண்டிருந்த அதன் கொள்கை தொடர்ந்தது. விரைவிலேயே சமூக ஜனநாயகவாதிக்கு எதிராக மார்க்சும் எங்கெல்சும் அதிகாரபூர்வ அறிக்கை வெளியிட வேண்டிய தாயிற்று. 1865 பிப்ரவரி 23ல் எழுதப்பட்ட இந்த அறிக் கையில், குறைந்த பட்சம் முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் போராடுகின்ற அளவுக்காவது பிஸ்மார்க்கின் அமைச்சரவைக்கும் நிலப்பிரபுத்துவ எதேச்சாதிகாரக் கட் சிக்கும் எதிராகத் தீர்மானமாகப் போராட வேண்டும் என்று தாம் பன்முறை கோரியதை ஆசிரியர் குழு ஏற்றுக் கொள் ளாததால் பத்திரிகையிலிருந்து வெளியேறுவதாக மார்க்சும் எங்கெல்சும் தெரிவித்தனர்.

லஸ்ஸாலியர்களின் ''பிரஷ்ய மன்னர் அரசாங்க சோஷ லிசத்தின்'' முகமூடியைக் கிழித்தெறிந்த எங்கெல்ஸ், சமூக ஜனநாயகவாதி மிக எளிதாக பிஸ்மார்க்கினால் விலைக்கு வாங் கப்பட்டு விட்டதோ என்று அடிக்கடி ஐயப்பட்டார். இந்தச்

சந்தேகம் முழுதும் மெய்யே என்று வரலாறு காட்டி விட்டது.

சமூக ஜனநாயகவாதியுடன் முறித்துக் கொண்ட உடனேயே, **பிரஷ்யாவில் ராணுவப் பிரச்னையும் ஜெர்மன் தொழிலாளர் கட்சியும்** என்னும் தனிப் பிரசுரத்தில் லஸ்ஸாலியர்களை விவரமாக விமர்சனம் செய்தார் எங்கெல்ஸ். இப்பிரசுரம் 1865ல் வெளிவந்தது. பிரஷ்யாவில் ராணுவப் பிரச்னை, அதாவது பிரஷ்யப் படைப் பிரிவுகளைத் திருத்தி அமைக்கும் பிரச்னை ஜெர்மனியில் மிகக் கூர்மையான பிரச்னையாக வளர்ந்து, 1861லேயே முதலாளித்துவ வர்க்கத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையே வெடித்துக் கிளம்பிய ''அரசியல் சட்ட மோதல்'' ஒன்றுக்கு ஆரம்பமாய் அமைந்தது.

இந்த மோதலை ஒரு திட்டவட்டமான உதாரணமாக்கி, நிலப்பிரபுக்களும் அவர்களின் அரசாங்கமும் ஒரு புறம் நிற்க, மிதவாத முதலாளித்துவ வர்க்கம் மறுபுறம் நின்று போராடுகையில், இந்த உடைமை வர்க்கப் பிரிவுகளுடன் பாட்டாளி வர்க்கக் கட்சி எத்தகைய உறவு கொள்ள வேண்டும் என்று விளக்கினார் எங்கெல்ஸ்.

லஸ்ஸாலியர்களுக்கு மாறாக, பிரஷ்ய பிற்போக்கு அரசாங்கத்தையும், நிலப்பிரபுக்களையும் எக்காரணம் கொண்டும் பாட்டாளி வர்க்கம் ஆதரிக்க முடியாது என்று எங்கெல்ஸ் எடுத்துக் காட்டினார். முதலாளித்துவ வர்க்கத்துடன் போராடும் நோக்கத்தோடு தொழிலாளிகளுடன் குலாவி அவர்களுக்குச் சில சலுகைகளையும் அவ்வப்போது அளிக்கிறது பிற்போக்கு. ஆனால் தொழிலாளர் இயக்கம் சுயேச்சையான ஒரு சக்தியாக மாறுகின்ற பொழுது, அவ்வியக்கத்துக்குத் தொல்லைகள் கொடுத்து அதனை ஒழித்துக் கட்டி விட முயலுகிறது அரசாங்கம்.

முதலாளித்துவ வர்க்கத்தைப் பொறுத்த மட்டிலுமோ, பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஆயுதம் வழங்காமல் ஆட்சி அதிகாரத்தை அது வென்று பெற முடியாது. முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்த்தரப்பு முன்னுக்குப்பின் முரணின்றி இருக்க வேண்டுமானால், நேரடியான பொது வாக்குரிமையும், பத்திரிகைச் சுதந்திரமும், சங்கங்கள் அமைக்க, கூட்டங்கள் நடத்த உரிமையும் தர வேண்டும்

என்று அது கோர வேண்டும். தனது நலன்களுக்காகவும் முதலாளித்துவ வர்க்கத்தையே எதிர்த்துப் போராடுவதற்கும் அவ்வுரிமைகளை எல்லாம் தொழிலாளர் கட்சி பயன் படுத்திக் கொள்ள முடியும்.

ஆனால், இந்த அரசியல் சட்ட மோதல் விஷயத்தில் முதலாளித்துவ வர்க்கம் நடந்து கொண்ட விதத்தை ஆய்வு செய்த எங்கெல்ஸ் முடியரசுடன் சமரசம் செய்து கொள்ளவே முதலாளித்துவ வர்க்கம் மேலும் மேலும் விரும்புகிறதென்றும், 1848ல் நடந்தது போலவே தனக்குத் தானே மீண்டும் துரோகம் இழைத்துக் கொள்ள அது தயாராகிக் கொண்டிருக்கிறது என்றும் முடிவு கட்டினார். முதலாளித்துவ வர்க்கத்தின் கோழைத்தனமான கொள்கையை தொழிலாளிகள் அம்பலப்படுத்த வேண்டும் என்றும், முதலாளித்துவ வர்க்கம் தன்னைத் தானே காட்டிக் கொடுத்தால், முதலாளித்துவ வர்க்கத்தை மீறி முதலாளித்துவ ஜனநாயகக் கோரிக்கைகளான பத்திரிகைச் சுதந்திரம், சங்கங்கள் அமைக்கவும் கூட்டங்கள் நடத்தவும் உரிமை ஆகியவற்றுக்காகத் தொழிலாளர் கட்சி தொடர்ந்து கிளர்ச்சி செய்ய வேண்டும் என்றும் எங்கெல்ஸ் கூறினார். தொழிலாளர் கட்சி முதலாளிகளின் வாலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கப் போவதில்லை. சுயேச்சையான ஒரு கட்சியாக அது இயங்கும் என்றார் அவர். தமது தனி வர்க்க நலன்களை தொழிலாளிகளுக்கு விளக்கிக் கூறும் அவ்வர்க்கத்தின் கட்சி, ''நெருங்கி வரும் புரட்சிப் புயலில் (இந்தப் புயல், வர்த்தக நெருக்கடிகளையும், பகலும் இரவும் சமமாயுள்ள நாட்களில் வருகின்ற புயல்களையும் போன்று வழக்கம் போல திரும்பத் திரும்ப வரும்) செயல்படத் தயாராய் இருக்கும்.''*

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் குறிப்பிடப் பட்ட போர்த்தந்திரங்களையும், நடைமுறை உத்திகளையும், 60ஆம் ஆண்டுகளில் நிலவிய ஜெர்மன் சூழ்நிலைகளில் பிரயோகிப்பதற்காகத் திட்டவட்டமாக உருவகப்படுத்தி எங்கெல்ஸ் எழுதிய பிரசுரத்தில் கண்டுள்ள முக்கிய சிந்தனைகள் இவை.

அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தை சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பில் ஈர்ப்பதற்கு

---

* K. Marx and F. Engels, *Works*, Russ. ed., Vol. XIII. Part I, p. 76.

எண்ணமிட்டிருந்த, ஜெர்மன் செயலாளர்-கடிதத் தொடர் பாளராக இருந்த மார்க்ஸ், அகிலத்தின் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதில் பெரும் பங்காற்றிய அவ்வமைப்பின் தனிப் பிரிவுகளை ஜெர்மனியிலேயே நிறுவுவதற்கு முயற்சி செய்யத் தொடங்கினர்.

அகிலத்தின் கோட்பாடுகளுக்காக, லஸ்ஸாலியர்களுக்கு எதிராக மார்க்சும் எங்கெல்சும் நடத்திய போராட்டம், லஸ்ஸாலிய அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஜெர்மன் தொழிலாளர் அமைப்பை உருவாக்குவதில் பெரும் செல்வாக்குச் செலுத்தியது.

தொழிலாளி மக்களின் சொந்த நடைமுறை அனுபவமும் லஸ்ஸாலிய வறட்டுச் சூத்திரங்களின் தவற்றை அவர்களுக்கு மேலும் மேலும் நன்கு உணர்த்தி, இதற்கு வழி வகுத்தது.

கடைசல் தொழிலாளியான ஆகஸ்டு பேபெல் என்பவரும், 1848 புரட்சியில் பங்கெடுத்துக் கொண்டவரும் மார்க்ஸ், எங்கெல்சின் ஆதரவாளருமான வில்கெல்ம் லீப்க்னெஹ்டும் இந்தப் புதிய கட்சியின் அமைப்பாளர்களாக இருந்தனர். இவர்கள் இருவரும் 1867ஆம் ஆண்டு வடக்கு ஜெர்மன் ரெய்ச்டாக்கின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வரலாற்றின் முதல் பாட்டாளி வர்க்கப் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்களுக்கு, முற்றிலும் புதியதான சிக்கல் மிகுந்த இந்த வேலையில் மார்க்சும் எங்கெல்சும் உதவிகள் புரிந்தனர். பேபெல், லீப்க்னெஹ்ட் ஆகியோரின் செல்வாக்கினுல், ஜெர்மன் தொழிலாளர் கழகங்களின் சங்கம் மிதவாத முதலாளித்துவத்துடன் துண்டித்துக் கொண்டு 1868ல் அகிலத்தின் அரங்கில் சேர்ந்து கொள்வதாக நியூரென்பர்க் காங்கிரசில் அறிவித்தது. இந்தச் சங்கமும் ஜெர்மனியில் தோன்றிய அகிலத்தின் பிரிவுகளும், அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்திலிருந்த எதிர்த்தரப்புப் பிரிவும் சேர்ந்து 1869ல் எய்செனுஹில் நடந்த காங்கிரசில், அன்று முதல் எய்செனுஹ் கட்சி என்று அழைக்கப்பட்டு வந்த சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி அமைவதற்கு அடித்தளமாக இருந்தன.

ஒரு தேசிய வரையறைக்குள் இயங்குகின்ற முதல் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சிக்கு அடித்தளம் இவ்வாறு

தான் நிறுவப்பட்டது. ஜெர்மன் தொழிலாளர் இயக்கம் பெற்ற அனுபவம் தனித்தனி நாடுகளில் பாட்டாளி வர்க்கக் கட்சிகளை உருவாக்குவதற்கான போராட்டத்தில் மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இப்போது பயன்பட்டது.

1875 வரையுள்ள ஜெர்மன் தொழிலாளர் இயக்க வரலாறு லஸ்ஸாலியர்களுக்கும் எய்செனுஹ்வாதிகளுக்கும் இடையில் நடந்த இடையருத கூரிய போராட்டத்தால் நிறைந்திருந்தது. ஜெர்மனியின் அரசியல் வாழ்க்கையில் முக்கியமான பிரச்னையாக இருந்த, ஜெர்மனியின் தேசிய இணைப்பிற்கான வழிகள் பற்றிய பிரச்னையில், லஸ்ஸாலியர்களும் எய்செனுஹ்வாதிகளும் அடிப்படையிலேயே வேறு வேறு கருத்துக்கள் கொண்டிருந்ததுதான் இந்தப் போராட்டத்திற்கு வரலாறு பூர்வமான காரணமாகும்.

இந்த ஒன்றிணைப்பு ''அப்போது வர்க்கங்களிடையே நிலவிய பலப்பல உறவுகளைக் கருத்தில் கொண்டால் இரண்டு விதங்களில் நிகழ்ந்திருக்கக் கூடும். ஒன்று, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் புரட்சி நடந்தேறி ஒரு அனைத்து ஜெர்மன் குடியரசு அமைவதன் மூலம் இது சாத்தியமாயிருக்கலாம், அல்லது, நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் மேலோங்கச் செய்கிற அரச பரம்பரைகளுக்கு இடையே நடக்கும் போர்களின் மூலம் ஜெர்மனி ஒன்றுபட்டிருக்கலாம்.

''பாட்டாளி வர்க்க வழியிலோ ஜனநாயக வழியிலோ வெற்றி பெற வாய்ப்புக்கள் மிகவும் குறைவே என்று கண்ட லஸ்ஸாலும் லஸ்ஸாலியர்களும், யூங்கெர் பிஸ்மார்க்கின் ஆதிக்கத்திற்குத் தம்மைப் பழக்கப் படுத்திக் கொள்ளும் ஒரு நிலையற்ற தந்திரத்தைக் கைக்கொண்டனர். அவர்களின் தவறுகள் தொழிலாளர் கட்சியை போனபார்டிச, அரசாங்க சோஷலிசத்தை நோக்கிச் சாயச் செய்தன. இதற்கு மாருக, பிரஷ்யவாதத்திற்கும், பிஸ்மார்க்வாதத்திற்கும், தேசிய வாதத்துக்கும் கொடுக்கப்படுகிற ஒவ்வொரு சிறு சலுகையையும் எதிர்த்து, முறையாகவும் தொடர்ந்தும் போராடி ஜனநாயக, பாட்டாளி வர்க்க வழிக்காகப் பாடுபட்டனர் பேபெலும் லீப்க்னெஹ்டும்.''*

---

* V. I. Lenin, *August Bebel;* V. I. Lenin, *Works*, 4th. Russ. ed., Vol. 19, p. 265.

லஸ்ஸால், ஷ்வேய்ட்சர் ஆகியோருடைய தேசியவாத மனப்போக்கினை மேற்கொண்டு அகிலத்தில் சேர்வதற்கு மறுத்து விட்டனர் லஸ்ஸாலியர்கள். எய்செனுஹ்வாதிகளைப் பொறுத்தவரை அவர்கள் அகிலத்தில் சேர்ந்து கொண்டதுடன் தமது வேலைத்திட்டத்தை அகிலத்தின் கொள்கைகளுடன் ஒன்றுபடுத்திக் கொண்டனர். ஆனுல், எய்செனுஹ்வாதிகள் அகிலத்தின் பொதுக் காரியங்களில் சரியாகப் பங்கெடுத்துக் கொள்வதில்லை என்றும், ஜெர்மனியில் அகிலத்தின் கோட்பாடுகளைப் போதுமான அளவுக்குப் பிரசாரம் செய்யவில்லை என்றும், மிகவும் குறைவான பொருள்வகை ஆதரவுதான் அகிலத்துக்குத் தருகின்றனர் என்றும் மார்க்சும் எங்கெல்சும் லீப்க்னெஹ்டிடம் அடிக்கடி குறைப்பட்டுக் கொண்டனர்.

இன்னும் பல பிரச்னைகளில் மார்க்சிய மூலவர்கள் எய்செனுஹ்வாதிகளை விமர்சனம் செய்யவும் திருத்தவும் நேர்ந்தது. உதாரணமாக, பிரஷ்யாவின் மீது சரியான வெறுப்புக் கொண்டிருந்த லீப்க்னெஹ்ட், அதன் போட்டியாளனுன ஆஸ்திரியாவுக்குப் புகழ்மாலை சூட்டத் தொடங்கியதை அவர்கள் கண்டித்தனர். ஆனுல், எய்செனுஹ்வாதிகளின் முதிர்ச்சியின்மை தத்துவத் துறையில்தான் அதிகம் வெளிப்பட்டது; அவர்களது வேலைத்திட்டத்தில் லஸ்ஸாலியச் செல்வாக்கு காணப்பட்டது, (''சுதந்திரமான மக்கள் அரசு'', உற்பத்திக் கூட்டுறவுகள் ஆகியவை எய்செனுஹ்வாதிகளின் வேலைத் திட்டத்தில் இருந்தன).

எய்செனுஹ்வாதிகள் முதிர்ச்சியற்றும், தவறுகள் புரிந்தும் வந்த போதிலும், மார்க்சும் எங்கெல்சும் தொடர்ந்து வழிகாட்டி அவர்களது தவறுகளைத் திருத்தி வந்ததால், ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் முன் நின்ற அடிப்படைப் பிரச்னைகளில் அவர்கள் சரியான உத்தியைக் கடைப்பிடித்த காரணத்தால் ''உண்மையான சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி ஒன்று அமைப்பதற்கு உறுதியான அடித்தளத்தை நிறுவுவதற்கு அவர்களால் முடிந்தது. கட்சியின் அடித்தளம் பற்றிய பிரச்னைதான் அப்போது முக்கியமாக இருந்தது.''*

---

* Lenin, *August Bebel;* V. I. Lenin, *Works*, 4th Russ. ed., Vol. 19, p. 266.

பல்லாண்டுகளாய்ப் பாடுபட்டு மார்க்ஸ் எழுதி முடித்த பிரதானமான, பிரம்மாண்டமான தத்துவ நூலான மூலதனத்தின் முதல் தொகுதி 1867ஆம் ஆண்டு வெளி வந்ததும், அது செலுத்திய செல்வாக்கும் லஸ்ஸாலியர்களுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் எய்செனுஹ்வாதிகள் பெற்ற வெற்றிகளுக்கு முக்கியமான ஒரு காரணமாகும்.

மிகவும் தொல்லை நிறைந்த சூழ்நிலைகளில் மூலதனத்தின் முதல் தொகுதியை மார்க்ஸ் எழுதி முடித்தார்.

தத்துவ ஆய்வுகளைக் கடுமையாக மேற்கொண்டிருந்த மார்க்ஸ், அகிலத்தை வழிநடத்துகின்ற சிக்கலான, ராட்சச வேலையையும் செய்யவேண்டி இருந்தது. தத்துவப் பணிகளையும் நடைமுறை வேலையையும் உடல் தாங்காத அளவுக்கு ஒரே நேரத்தில் செய்தது, ஏற்கெனவே கெட்டுக் கிடந்த மார்க்கின் ஆரோக்கியத்தை இன்னும் சீர்கேடாக்கியது. இதனுடன், முன்னை விட அதிகமாயில்லாவிடினும், சிறிதும் குறையாத அளவுக்குப் பொருளாதாரத் தேவைகளும் அவரை மேலும் மேலும் அழுத்தின. 1862ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடந்த உள்நாட்டுப் போரை ஒட்டி நியூயார்க் டிரிப்யூனுக்கு அவர் கட்டுரைகள் எழுதி வந்தது நின்று போயிற்று. நிறுவனத்தின் பொறுப்புள்ள பிரதிநிதியாகவும், பின்னர் அதன் உடைமையாளர்களில் ஒருவராகவும் எங்கெல்ஸ் ஆன பின்பு அவர் மார்க்சுக்குச் செய்து வந்த பொருளாதார உதவிகள் பெருமளவு அதிகரித்த போதிலும், மார்க்சின் மகள்மார் வளர்ந்து வந்ததன் காரணமாக, அவர் குடும்பத்தின் தேவைகளும் அதிகரித்து வந்தன. எனவே, அணிந்து வந்த ஆடைகள் முதல் வீட்டுச் சாமான்கள் வரை ஒவ்வொன்றாய் அடகுக் கடைக்குப் போய்ச் சேர்ந்ததால், மார்க்ஸ் வீட்டை விட்டு வெளியில் வரக் கூட முடியாமலிருந்தது. கையில் காசில்லாததால் காகிதம் வாங்க முடியாது போகவே எழுதுவதற்கும் இயலாமல் போயிற்று.

இத்தகைய தொல்லை மிகுந்த ஒரு நேரத்தில் புதிய உதவி கோரி எங்கெல்சுக்கு எழுதினுர் மார்க்ஸ்: ''இந்தக் கடிதத்தை உனக்கு எழுதுவதை விட எனது கட்டை விரலை வெட்டி எறிவதற்கு நான் தயாராய் இருப்பேன் என்று நீ நம்பலாம். வாழ்க்கையில் பாதியை யாரையோ சார்ந்திருந்தே கழிக்கிறேம் என்ற உணர்வு அளவற்ற மனச்சோர்வுக்கு என்னை

ஆளாக்கி விடுகிறது. இத்தகைய வேளையில், நாம் இருவரும் கூட்டாக வேலை செய்கிறோம் என்பதும், இதில் தத்துவப் பணிக்கும் கட்சி வேலைக்குமே எனது நேரம் செலவிடப்படுகி றது என்பதும் பற்றிய உணர்வுதான் எனக்குள்ள ஒரேயொரு ஆறுதல்.''*

அன்பு நிறைந்த விசுவாசம் மிக்க ஒரு நண்பராக, தமது தலைவரைப் போற்றிக் காக்கும் ஒரு கட்சி உறுப்பினராக, மார்க்சுக்கு உதவி செய்வதற்காக ஒவ்வொரு முறையும் ஓடோடி வந்தார் எங்கெல்ஸ். சில பவுன்கள் பணம் அனுப்பி இருப்பதாய் வழக்கமாகத் தொடங்கும் எங்கெல்சின் கடிதங் கள் அனைத்தும், மார்க்சையும் அவர் குடும்பத்தையும் பற்றி கவனம் மிக்க கவலையும், வருத்தம் நிறைந்த அக்கறையும் கொண்டதாய் இருக்கும். மார்க்சின் உடல் நிலை திடீரென்று மோசமானதைக் கேள்விப்பட்டுக் கலவரம் அடைந்த எங் கெல்ஸ் மருத்துவர்களுடன் கலந்து பேசி, மரண அபாயத் துக்கு இட்டுச் செல்லக் கூடிய இந்த வியாதிக்குத் தீவிர சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும், அதற்காக மாஞ்செஸ் டருக்கு வருமாறும், வந்து ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறும் கோரி மார்க்சை வற்புறுத்தினர். ''...எனக்கும் உன் குடும் பத்துக்கும் நீ ஒரே ஒரு உதவி செய், சிகிச்சைக்கு உன்னை ஆளாக்கிக் கொள். உனக்கு ஏதாவது நேர்ந்தால் இந்த இயக்கமெல்லாம் என்னவாகும்? நீ இது மாதிரியே நடந்து கொண்டால் கண்டிப்பாக ஏதாவது நடந்தே தீரும். இந்த நிலையிலிருந்து உன்னை நான் மீட்காத வரை இரவும் பகலும் எனக்கு நிம்மதி இல்லை, இருக்கப் போவதும் இல்லை. உன் னிடமிருந்து தகவல் வராத ஒவ்வொரு நாளும் நான் கவலை யுறுகிறேன், மீண்டும் உனக்கு மோசமாகி விட்டதோ என்று அஞ்சுகிறேன்.''**

கார்ல் மார்க்ஸ் என்ற தலைப்பில் லெனின் எழுதிய கட்டுரையில், தன்னலம் கருதாத எங்கெல்சின் இடையறாத நிதி உதவி மட்டும் இல்லையேல், மார்க்ஸ் மூலதனத்தை முடிக்காமல் மட்டும் இருந்திருக்க மாட்டார், ஏழ்மையின்

---

* *Marx' Letter to Engels on July 31, 1865;* Marx-Engels, *Gesamtausgabe*, Dritte Abteilung, Band 3, S. 279.

** *Engels' Letter to Marx on February 22, 1866;* Marx-Engels, *Gesamtausgabe*, Dritte Abteilung, Band 3, S. 311.

பாரத்தால் நசுக்கப்பட்டு மாண்டே போயிருப்பார் என்று கோடிட்டுக் காட்டினர்.

மூலதனத்தை முடிக்கின்ற பணிக்கு எங்கெல்ஸ் செய்த உதவி வெறும் பொருளாதார உதவி மட்டும் அல்ல. மிக முக்கியமான தத்துவப் பிரச்னைகள் பற்றி எங்கெல்சின் ஆலோசனைகளைக் கோரிப் பெற்றார் மார்க்ஸ்; தமது கடிதங்களில் தாம் கண்ட முடிவுகளை வரைந்து தந்து அவைபற்றி எங்கெல்சின் கருத்துக்களைக் கேட்டறிந்தார். பொருளாதாரத்தின் நடைமுறைப் பிரச்னைகள் பற்றியும் பொருளாதாரப் பிரச்னைகளில் பெரும் வல்லுனராயிருந்த தமது நண்பரை அடிக்கடி அணுகினர் மார்க்ஸ்.

அளவு கடந்த விஞ்ஞான நேர்மைக்காகவும், எடுத்துக் கொண்ட பிரச்னை பற்றி எழுதப்பட்டுள்ள புத்தகங்களில் ஒன்றைக் கூடப் படிக்காமல் விடவில்லை என்றும், அவற்றில் கண்டுள்ள எதிர் மாறான கருத்துக்கள் எல்லாம் சரியாக மறுக்கப்பட்டுள்ளன என்றும் திட்டவட்டமாக உறுதி செய்து கொள்ளுகின்ற வரை தமது நூல் முடிந்து விடவில்லை என்று கருதுகின்ற மார்க்சின் போக்கிற்காகவும் நட்பு முறையில் அவரை அடிக்கடி கடிந்து கொள்வார் எங்கெல்ஸ். மார்க்சின் வேலையில் காணப்படும் இந்தச் சிறப்புத் தன்மைகளின் காரணமாக மூலதனத்தின் முதல் தொகுதி அச்சேறுவதற்கு அளவற்ற தாமதமாகிறது என்பதால் இடையறாது அவரை அவசரப்படுத்தி வந்தார் எங்கெல்ஸ். மற்ற தொகுதிகள் முடிவதற்குக் காத்திராமல் முதல் தொகுதியை வெளியிடுமாறு அவரை நிர்ப்பந்தித்தார்.

“நூல் முற்ற முழுதாக என் முன்னால் கிடக்கின்ற வரை நான் எதையும் அச்சுக்கு அனுப்ப முடியாது. என்னுடைய கட்டுரைகளில் எத்தகைய குறைபாடுகள் இருப்பினும், அவை ஒரு இலக்கிய முழுமை பெற்றிருக்கின்றன என்கிற பெருமையாவது அவற்றுக்கு இருக்கட்டும்”*—என்று எங்கெல்சின் அவசரத்திற்கு மறுப்புத் தெரிவித்தார் மார்க்ஸ்.

இறுதியாக, 1867 மார்ச்சு மாதம் 27ம் நாள் மூலதனத்தின் முதல் தொகுதியினது கையெழுத்துப் பிரதி முடிந்து

---

* *Marx Letter to Engels on July 31, 1865;* Marx-Engels, *Gesamtausgabe*, Dritte Abteilung, Band 3, S. 279.

விட்டது என்னும் செய்தியையும், அச்சிடுவதற்காக ஹாம்புர்குக்கு அதனை எடுத்துச் செல்லத் தாம் உத்தேசித்திருப்பது பற்றியும் எங்கெல்சுக்கு எழுதினார் மார்க்ஸ். இந்தச் செய்தியைப் பெருங்குதூகலத்துடன் வரவேற்றார் எங்கெல்ஸ்.

ஹாம்புர்கிலிருந்து அச்சுப்பிரதிகள் திருத்தத்துக்காக வந்து சேர்ந்த பொழுது, எல்லாவற்றுக்கும் மேலானதாகத் தாம் மதித்த எங்கெல்சின் எண்ணத்தை அறியும் பொருட்டு அந்த அச்சுப்பிரதிகளை மாஞ்செஸ்டருக்கு அனுப்பி வைத்தார் மார்க்ஸ்.

1867 ஆகஸ்டு *16*ல், மூலதனத்தின் கடைசி அச்சுப்பிரதியான *49*ஆவது தாளைத் திருத்தி முடித்து விட்டதாக எங்கெல்சுக்கு அறிவித்து முன்னுரையும் எழுதி அனுப்பி விட்டார். மார்க்ஸ் எழுதினார்: ''ஒருவாறாக, இந்தத் தொகுதி முடிந்து விட்டது. இந்தப் பணி முடிந்ததில் நான் உனக்குத் தான் கடமைப்பட்டிருக்கிறேன்! உன்னுடைய தன்னலத் தியாகம் மட்டும் இல்லாமல் போயிருந்தால், என்னதான் முயன்றிருந்தாலும் மூன்று தொகுதிகளுக்குமான இந்த பிரம்மாண்டமான பணியை நான் நிறைவேற்றியே இருக்க முடியாது! நிறைந்த நன்றியுணர்வுடன் உன்னை நான் அணைத்துக் கொள்கிறேன்!... அன்புக்குரியவனே, உண்மையான நண்பனே, உனக்கு எனது வாழ்த்துக்கள்!''*

மூலதனத்தின் முதல் தொகுதி முடிவுற்றதானது, மார்க்ஸ், எங்கெல்சின் வாழ்கையில் மட்டும் மகத்தான ஒரு நிகழ்ச்சியாக இருக்கவில்லை,—தொழிலாளர் இயக்கம் அனைத்திற்கும், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தத்துவத்தினது வளர்ச்சி முழுமைக்குமே அனைத்துலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரம்மாண்டமான நிகழ்ச்சியாகும் அது.

''முதலாளிகளும் தொழிலாளர்களும் இப்பூவுலகில் இருந்து வரத் தொடங்கிய நாளிலிருந்து, தொழிலாளர்களுக்கு இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புத்தகம் இதுவரை தோன்றவே இல்லை.'' என்று மூலதனத்தைப் பற்றி எங்கெல்ஸ் எழுதினார்.

மார்க்சினுடைய பொருளாதாரப் போதனை முழுமை

---

* *Marx' Letter to Engels on August 16, 1867;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 231.

யுற்று, மூலச் சிறப்பு எய்துவதற்கு மார்க்ஸ் கடுமையான விஞ்ஞான ஆய்வுகளை இருபத்தைந்து ஆண்டுகள் மேற்கொள்ள வேண்டி இருந்தது. **மெய்யறிவின் வறுமை** *(1847)*, **கூலி உழைப்பும் மூலதனமும்;** *(1849)*, **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** *(1848)* ஆகிய மார்க்சின் நூல்களிலேயே இந்தப் போதனை யின் அடித்தளங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

அதற்கு அடுத்த அவரது ஆராய்ச்சிகளின் விளைவாய் அமைந்தவை, *1857-59*ஆம் ஆண்டுகளில் (**மூலதனத்தின்** ஆரம்ப வடிவமாக) எழுதிய பொருளாதாரம் பற்றிய மார்க் சின் விரிவான கையெழுத்துப் பிரதிகளாகும். அரசியல் பொருளாதாரத் துறையையும், அதன் முறையையும் அவர் புரிந்து கொண்ட விதத்தை இக்கையெழுத்துப் பிரதிகளின் முன்னுரையில்தான், வேறு எங்கும் விட, முழுமையாகத் தருகிறார் மார்க்ஸ். உள்ளடக்கத்தில் மிக வளமை கொண் டிருந்த இந்தக் கையெழுத்துப் பிரதியில் முக்கியமான அம்சம் மார்க்சின் இரண்டாவது மாபெரும் கண்டுபிடிப்பான உபரி மதிப்பு பற்றிய போதனை ஆரம்ப வடிவில் இதில் கொடுக்கப் பட்டிருப்பதாகும். *1859*ல் **அரசியல் பொருளாதார விமர்சனத் துக்குச் செலுத்தும் ஒரு பங்கு** என்னும் மார்க்சின் நூல் வெளியாயிற்று. வரலாற்று நூல்களில் மட்டுமின்றி, பொரு ளாதார ஆய்வுகளிலும் மார்க்சுக்கு வழிகாட்டும் நூலிழை யாகத் திகழ்ந்த சூத்திரமான, வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தின் சாரம் இந்த நூலின் முன்னுரையில்தான் மேதை மையுடன் வகுத்தளிக்கப்படுகிறது.

இந்த ராட்சச உழைப்பின் கூட்டுத் தொகையாக விளைந் ததுதான், மெய்யாகவே பிரம்மாண்டமான நூலாய் விளங் கும் **மூலதனம்** ஆகும். அழியாப் புகழ் வாய்ந்த இந்தப் படைப்பில், புரட்சிகர உத்வேகத்துடன் கறாரான விஞ்ஞானத் துவமும், சிறிதும் பிசகாத எதார்த்தத்துடன் ஆழமான கட்சிப் பற்றும் இணைந்து பரவுகின்றன. வல்லமை வாய்ந்த பொருள் முதல்வாத இயக்கவியலைப் பிரயோகித்து மார்க்ஸ் படைத்த பொருளாதாரப் போதனை அரசியல் பொருளா தாரத்தை அடியோடு மாற்றி விட்டது.

சுரண்டும் வர்க்கங்களின் தன்னலத் தப்பெண்ணங்களும் எல்லைக்குள் நின்று விடுகிற தன்மையும் இல்லாத பாட்டாளி வர்க்கத்தினுடைய சித்தாந்தவாதி ஒருவரால்தான், முத

லாளித்துவ வளர்ச்சியின் எதார்த்த விதிகளைக் கண்டு பிடிக்கவும், முதலாளித்துவ சமுதாயத்தினுடைய தோற்றத்தையும், வளர்ச்சியையும், வீழ்ச்சியையும் ஆய்வு செய்து, அச்சமுதாயத்தின் வரலாற்று எல்லைகளை, அதன் மறைந்து போகும் தன்மையை மெய்ப்பித்துக் காட்டவும் முடியும்.

உற்பத்தியில் அராஜகம், நெருக்கடிகள், வேலையில்லாத் திண்டாட்டம், ஒப்பு நோக்கிலும் முற்ற முழுக்கவும் ஏழ்மைக் குழியில் பாட்டாளி வர்க்கம் தள்ளப்படுவது, நகரத்துக் குட்டி முதலாளிகளும் விவசாயிகளும் போண்டியாகிப் போவது ஆகிய முதலாளித்துவத்தின் அனைத்துக் குறைகளும் கேடுகளும், முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாட்டிலிருந்துதான், அதாவது, உற்பத்தியானது சமுதாய மயமானதாக இருக்கையில், அவ்வுற்பத்தியின் பயன்கள் தனி முதலாளிகளின் கைகளுக்குள் போய்விடுகின்ற முரண்பாட்டிலிருந்துதான் முளைக்கின்றன என்று மூலதனத்தில் மார்க்ஸ் மெய்ப்பித்துக் காட்டினர்.

மார்க்சினுடைய மகத்தான கண்டுபிடிப்பு உபரி மதிப்பு பற்றிய போதனையாகும். இதுவே மார்க்சினுடைய பொருளாதாரத் தத்துவம் அனைத்திற்கும் மூலைக் கல்லாக இருக்கிறது என்று லெனின் கூறினர். முதலாளித்துவத்தின் கைகளில் கிட்டுகின்ற லாபம், நிலவாடகை போன்ற உழைக்காமல் கிட்டும் வருமானம் அனைத்துக்கும் பொதுவான ஊற்றுக் கண்ணாய் இருப்பது உபரி மதிப்பே, ஊதியம் தரப்படாத உழைப்பே என்று விஞ்ஞான பூர்வமாக மார்க்ஸ் நிரூபித்தார். உபரி மதிப்பு என்பது தொழிலாளியினுடைய உழைப்பின் மதிப்புக்கும் அவனது உற்பத்தி ஆற்றலுக்குரிய விலைக்கும் இடையே இருக்கின்ற வேறுபாடு, அதாவது, அவனுடைய உழைப்பின் மதிப்புக்கும் அவனும் அவனது குடும்பமும் உயிர் வாழ மிகமிக அவசியமாய் இருக்கின்ற தேவைகளின் மதிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடு. முதலாளித்துவ உற்பத்தியின் சாரத்தைக் குறிக்கின்ற உபரி மதிப்பு பற்றிய விதிதான் முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதியாகும். முதலாளித்துவ ஆதரவாளர்களால் மிக உன்னிப்பாக மறைத்து வைக்கப்படுகிற முதலாளித்துவச் சுரண்டலின் ரகசியத்தை, உபரி மதிப்பு பற்றிய மார்க்சிய போதனை அம்பலமாக்கி, முதலாளித்துவ வர்க்கத்திற்கும் பாட்டாளி

வர்க்கத்திற்கும் இடையில் நிலவும் பகைமையின் அஸ்தி வாரத்தையே கண்ணுக்கு முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

மார்க்சினுல் கண்டுபிடிக்கப்பட்ட முதலாளித்துவச் சேமிப்பு பற்றிய பொதுவான விதி, முதலாளித்துவ சமுதாயம் வளர்ச்சியடைய அடைய அச்சமுதாயத்தில் நிலவும் பகைமை மேலும் மேலும் கடுமையாகி வரும் என்று கூறுகிறது. சோஷலிசப் புரட்சிக்கான பொருள்வகை முன்தேவைகள் முதலாளித்துவ சமுதாயத்திற்குள்ளேயே உற்பத்தி ஆகின்றன என்பது மட்டுமின்றி பாட்டாளி வர்க்கப் புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டி, எல்லா அடிமைத்தனங்களையும் எல்லாச் சுரண்டல்களையும் என்றென்றைக்குமாக ஒழிக்கப் போகிற ஒரு சமுதாயச் சக்தியையும் தன்னுள்ளேயே முதலாளித்துவ சமுதாயம் உருவாக்குகிறது.

தனது ஆய்வுகளின் முடிவுகளைத் தொகுத்துக் கூறுகையில், முதலாளித்துவச் சேமிப்பினுடைய வரலாற்றுப் போக்கினைப் பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிருர் மார்க்ஸ்:

''மூலதன அதிபர்களின் எண்ணிக்கை இடைவிடாது குறைந்து வரும் பொழுதே.... திரள் திரளாய் ஏழ்மையும், ஒடுக்கு முறையும், அடிமைத்தனமும், சீர்கேடும், சுரண்டலும் பெருத்து வருகின்றன; ஆனுல் இவற்றினேடு, இடையருது எண்ணிக்கையில் பெருகி வரும் தொழிலாளி வர்க்கத்தின் ஆத்திரமும் வளர்ந்து வருகிறது;முதலாளித்துவ உற்பத்தி முறையின் போக்கினுலேயே அவ்வர்க்கம் ஒன்றுபட்டு ஒழுங்கமைந்து இயங்கக் கற்றுக் கொள்கிறது. மூலதன ஏகபோகத்திலும், அதன் கீழும் வளர்ந்து வந்த உற்பத்தி முறைக்கு அந்த ஏகபோகமே கைவிலங்கு பூட்டுகிறது. உற்பத்தி முறை மையப்படுவதும், உழைப்பு சமுதாயமயமாவதும் முதலாளித்துவ மேலோட்டுக்குள் அடங்காத ஒரு மட்டத்திற்கு வளர்ந்து விடுகின்றன. அப்போது இந்த மேலோடு வெடித்துச் சிதறுகிறது; முதலாளித்துவத் தனிச் சொத்துரிமைக்குச் சாவு மணி அடிக்கப்படுகிறது; பறிமுதல் செய்தவர்களே பறிமுதல் செய்யப்படுகிருர்கள்.''*

முதலாளித்துவம் அழிந்துபடுவதும், புதிய கம்யூனிச

* K. Marx, *Capital*, Vol. I, Moscow 1954, p. 763.

சமுதாயம் வெற்றி விழாக் கொண்டாடுவதும் தவிர்க்க முடியாதவை என்னும் வரலாற்று உண்மையைத் தொழிலாளர்கள் விஞ்ஞான பூர்வமாய்ப் புரிந்து கொள்வதற்கு ஒரு ஆயுதமாய் விளங்குகிறது **மூலதனம்.** இந்த நூலில் விஞ்ஞானக் கம்யூனிசம் எல்லாம் தழுவிய ஆழமான அடிப்படை பெறுகிறது. அரசியல் பொருளாதாரம், தத்துவஞானம், சோஷலிசம் என்னும் மார்க்சியத்தின் எல்லாப் பிரிவுகளும் பெறுகின்ற வளர்ச்சியில், மேதைமை மிளிரும் இந்தப் படைப்பு ஒரு ராட்சச அடி எடுத்து வைக்கிறது.

முதலாளித்துவ விஞ்ஞானம் **மூலதனத்தை** எங்ஙனம் வரவேற்றது?

மார்க்சினது கரூரான விஞ்ஞான வாதங்களுக்கு வெறும் அவதூறுகளாலும், அள்ளித் தரும் சாபங்களாலும் விடையளித்து விட முடியாது என்று கண்ட அது, **மூலதனத்தின்** தோற்றத்தைப் பற்றியே மௌனம் கடைப்பிடிப்பதென்றும், அப்படி ஒரு நூல் எழுதப்பட்டுள்ளதாகவே காட்டிக் கொள்ளாமல் இருந்து விடுவது... என்றும் முடிவு செய்தது.

மூலதனத்தை மௌனத்திஞல் முற்றுகை இட்டிருந்த முதலாளித்துவப் பத்திரிகைகளின் சாகசத்தை உடைத்தெறிவதற்கு, அப்போது தொழிலாளர்களுடையதாகவோ, தொழிலாளர்களுக்கு நெருக்கமானதாகவோ இருந்த வெகு சில பத்திரிகைகளில் பிரபலமான விமர்சனங்கள் எழுதியதுடன் எங்கெல்ஸ் நின்றுவிடவில்லை. அவருக்கு அபூர்வமான யோசனை ஒன்று தோன்றியது. மற்றவர்களின் பெயர்களில் **மூலதனத்தைப்** பற்றிக் கண்டன விமர்சனங்கள் எழுதி சில முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கு அனுப்ப முடிவு செய்தார் எங்கெல்ஸ். அவரது கண்டன விமர்சனங்கள் முதலாளித்துவப் பத்திரிகைகள் பலவற்றில் பிரசுரமாகவே எங்கெல்சின் இந்த ''ராணுவச் சூழ்ச்சி'' வெற்றி அடைந்தது. எப்படியாயினும் ''விமர்சகரின்'' கூற்றல்ல, மார்க்சின் கூற்றுதான் சரி என்னும் கருத்து வாசகர்கள் மனத்தில் பதியுமாறு வியக்கத்தக்க திறமையுடன் எங்கெல்ஸ் இந்த விமர்சனங்களை எழுதியிருந்தார்.

மூலதனத்தின் முதல் தொகுதி முற்றுப் பெற்றதானது, மார்க்சினது வாழ்க்கையில் மட்டுமின்றி, தனது சொந்த வாழ்விலும் ஒரு திருப்பு முனை என்று மதிப்பீடு செய்தார்

எங்கெல்ஸ். மார்க்சினுடைய இலக்கிய வருமானம் இனிமேல் கூடிவிடும் என்றும், இந்த வர்த்தகத் துறைக்கு ஒரேயடியாகத் தாம் தலை முழுகி விடலாம் என்றும், நிறுவனத்திலிருந்து வெளியேறும் போது கிடைக்கின்ற பணத்திலும் இலக்கிய வருமானத்திலும் இனிமேல் மார்க்சுடன் இருந்து வாழ்க்கை நடத்தலாம் என்றும் நம்பிக்கைகள் எங்கெல்சின் மனதில் துளிர்த்தன. எங்கெல்ஸ் மார்க்சுக்கு திறந்த மனத்துடன் எழுதினார்: ''எனக்கு உளச்சோர்வு ஏற்படுத்தி, எனது நேரத்தை எல்லாம் தட்டிப் பறிக்கும் இந்த நாய்த்தனமான வர்த்தகத்துக்குத் தலைமுழுகி விட வேண்டும் என்பது தவிர வேறு எந்த ஆசையும் எனக்கில்லை.''*

எனினும், மூலதனத்தின் முதல் தொகுதி வெளியாகி இரண்டு வருடத்திற்குப் பின்புதான், தனது ஆசையை எங்கெல்சால் நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது.

1869 ஜூலை *1*ல்தான் எங்கெல்ஸ் மார்க்சுக்கு எழுதினார்: ''*உர்ரா!* இனிய வர்த்தகத்தை இன்று நான் தொலைத்து விட்டேன். நான் சுதந்திர மனிதன்.'' ''எகிப்தியச் சிறை'' யிலிருந்து தப்பி ஓடி வந்து விட்டமைக்காக எங்கெல்சுக்கு உளமாற வாழ்த்துத் தெரிவித்தார் மார்க்ஸ். தம் தலைவிதியைப் பற்றி ஒரு நாள் கூட எங்கெல்ஸ் முணுமுணுத்துப் பார்த்திராத அவரது நண்பர்கள், எங்கெல்சிற்குப் பேரானந்தம் மிக்க பெரு நாளான இன்றுதான், அவர் நிறுவனத்தில் உழன்று கழித்த நெடிய வருடங்கள் எங்கெல்சுக்கு எவ்வளவு துன்பமயமாய் இருந்திருக்கும் என்று அறிந்தார்கள். எங்கெல்ஸ் வீட்டில் அப்போது விருந்தாளியாய் தங்கி இருந்த மார்க்சினுடைய இளைய மகள் எலியனோரா (தூஸ்ஸி), தனது நினைவுக் குறிப்புக்களில் நினைவகலாத இந்த நாளைப் பற்றி பின்வருமாறு சொல்லுகிறார்:

''அலுவலகத்துக்குக் கடைசி முறையாகப் போகின்ற போது, காலணிகளை இழுத்து மாட்டிக் கொண்டு 'கடைசி முறை! கடைசி முறை!' என்று அவர் கூவிக் கொண்டிருந்ததை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன்.

''சில மணி நேரம் கழித்து, எங்கெல்சிற்காகக் காத்துக் கொண்டிருந்த நாங்கள், வீட்டிற்கு முன்னுள்ள ஒரு சிறு

---

* *Engels' Letter to Marx on April 27, 1867;* K. Marx and F. Engels, *Works*, Russ. ed., Vol. XXIII, p. 406.

சதுக்கத்தின் வழியாக அவர் வருவதைக் கண்டோம். கைத்தடியைச் சுழற்றி வீசியபடி மகிழ்ச்சியால் பிரகாசித்தவாறு ஆடிப் பாடிக்கொண்டு அசைந்து நடந்து வந்தார் எங்கெல்ஸ். பின்னர் நாங்கள் விழா நாளில் கொண்டாடுவது போல மேசைமுன்னே அமர்ந்து ஷாம்பேன் மது அருந்தி மகிழ்ச்சியில் திளைத்தோம்.

''அப்போது இதையெல்லாம் அறிந்து கொள்ள முடியாத மிகச் சிறியவளாய் இருந்தேன் நான். இப்போதோ, கண்ணீர் கலங்காமல் இதை நான் நினைத்துப் பார்க்கவும் முடிவதில்லை.''*

உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கெல்ஸ் எழுதிய கடிதங்களில், பலப்பல வருடங்களாகத் தன் தோளிலே ஏறி அழுத்தி வந்த பெரும் பாரத்தை ஒரேயடியாய் உதறி எறிந்து விட்ட மனிதனின் உற்சாகம் காணக் கிடக்கிறது. ''இன்று எனது விடுதலை வாழ்வின் முதல் நாள்... இந்தப் புதிய சுதந்திரம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நேற்றிலிருந்து பத்து வருடம் இளமை பெற்ற முற்றிலும் புதிய மனிதனுகி விட்டேன் நான்'' என்று தனது அன்னைக்கு எழுதினுர் எங்கெல்ஸ்.

கடுமையான அரசியல் நிகழ்ச்சிகள் ஐரோப்பாவை நோக்கி இடியும் புயலும் போல விரைந்து வந்து மிரட்டிக் கொண்டிருக்கையில், விஞ்ஞான, அரசியல் பணிகள் புரிவதற்காக தாம் முற்றிலும் விடுதலை பெற்று விட்டது குறித்து குறிப்பாக களிப்பு மிக எய்திஞர் எங்கெல்ஸ். கூகெல்மானுக்கு அவர் பின்வருமாறு எழுதினுர்: ''திடீரென்று ஒரு நாள் இடி தாக்கி விடலாம் என்ற அளவுக்கு ஐரோப்பாவில் நிகழ்ச்சிகள் தீவிரம் அடைந்து வருகின்ற வேளையில், பீடை பிடித்த வர்த்தகத்தை வீசியெறிந்து விட்ட நான், இனிமேல் சொந்த விருப்பத்தின் படி பணி புரிய முடியும் என்பதில் எவ்வளவு ஆனந்தம் அடைகிறேன் என்பது சொல்லாமலே விளங்கும்''.

எனினும், தமது விவகாரங்களை முடிப்பதற்காக இன்னும் சில காலம் எங்கெல்ஸ் மாஞ்செஸ்டரில் இருக்க நேர்ந்தது.

---

* மார்க்ஸ், எங்கெல்ஸ் பற்றிய நினைவுக் குறிப்புகள், பக்கம் 185.

அப்போதுதான் ஜெர்மனியில் தோன்றியிருந்த பாட்டாளி வர்க்கக் கட்சியை வழி நடத்துவதில் மார்க்சுக்கு உதவி செய்ய எங்கெல்சுக்கு இப்போது வாய்ப்புக் கிடைத்தது என்பதே இதில் பிரதானமான அம்சம். 1869ல் நடந்த அகிலத்தின் பாசெல் காங்கிரஸ் நிறைவேற்றிய, மார்க்சியத்திற்கு அகிலத்தில் கிடைத்த பெரிய சித்தாந்த வெற்றியான, நிலவுடைமையில் கூட்டுறவு அவசியம் என்னும் தீர்மானத்திற்கு, எய்செனுஹ் கட்சி போதுமான அளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லே என்பதிலிருந்து, அக்கட்சியினது தலைவர்களின், குறிப்பாக லீப்க்னெஹ்டின் முதிர்ச்சியின்மை வெளிப்பட்டது. 1870ல் ஜெர்மனியில் விவசாயிகளின் போர் என்னும் தமது நூலை மீண்டும் வெளியிட்ட எங்கெல்ஸ், அதற்கு எழுதிய முன்னுரையில் பாசெல் காங்கிரசின் தீர்மானம் ஜெர்மனிக்கும் பிரம்மாண்டமான முக்கியத்துவம் வாய்ந்ததே என்று எடுத்துக் காட்டினுர். விவசாயப் பிரச்னையில் மார்க்சினது கருத்துக்களையும் தமது கருத்துக்களையும் மேலும் வளமைப்படுத்திய எங்கெல்ஸ், விவசாயிகளின் பல்வேறு பிரிவினரை வேறுவேறு விதமாக அணுக வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினுர். சிறு விவசாயிகளைத் தவிர, மிகப் பெரும் எண்ணிக்கையில் உள்ளவர்களாயும் பாட்டாளி வர்க்கத்தின் இயற்கையான கூட்டாளிகளாகவும் விளங்குகிறவர்கள் விவசாயத் தொழிலாளர்களே என்று மெய்ப்பித்து, பாட்டாளி வர்க்கக் கட்சி கிராமங்களில் பணிபுரிய வேண்டியதன் முக்கியத்தைக் கோடிட்டுக் காட்டினுர்.

அலுவலக வேலையிலிருந்து விடுதலை பெற்ற எங்கெல்ஸ் தமது நேரத்தை இன்னும் அதிகமாக விஞ்ஞான ஆய்வுகளுக்குப் பயன்படுத்த முடிந்தது.

இப்போது அவருக்கு சற்று ஓய்வு நேரம் கிட்டியதால் அயர்லாந்தின் வரலாற்றை ஆய்வு செய்யத் தொடங்கினுர். அடிமைப்பட்டுக் கிடந்த அயர்லாந்தை இன்னும் நெருக்கமாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு தமது துணைவி லீசி பேர்ன்சுடனும் (மறைந்து போன மேரியின் சகோதரி) மார்க்சின் மகள் எலியனேராவுடனும் அந்த நாட்டைச் சுற்றிப் பார்த்து வரக் கிளம்பினுர்.

எங்கெல்சுக்கு அயர்லாந்தின் மீது அக்கறை பிறந்தது தற்செயலானதல்ல. அயர்லாந்துப் பிரச்னை அகிலத்தின்

பணிகளில் ஒரு முக்கிய பங்கு வகித்தது. பிரிட்டிஷ் தொழிலாளர்களுக்கும் அயர்லாந்துத் தொழிலாளர்களுக்கும் இடையே ஆதிக்க வர்க்கங்கள் செயற்கையாக ஊதிப் பெருக்கி விட்ட தேசியப் பகைமையே பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் பலவீனத்துக்கு காரணம் என்று மார்க்சும் எங்கெல்சும் கண்டனர். ''அயர்லாந்தின் தேசிய விடுதலையானது சூட்சுமமான வெறும் நேர்மை, மனிதநேயம் பற்றிய பிரச்னையல்ல என்றும், தனது சொந்த சமுதாய விடுதலைக்கு அதுவே முதல் பெருந்தேவை ஆகும்''* என்றும் பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கம் உணருமாறு செய்ய வேண்டியது அகிலத்தின் கடமை என்று அவர்கள் கருதினர்.

அயர்லாந்தின் சுதந்திரத்துக்காகத் தீவிரமாகப் போராடும்படி பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்திற்கு மார்க்சும் எங்கெல்சும் அறைகூவல் விடுத்தனர்: அயர்லாந்து துண்டு படுவதும், அங்கே விவசாயப் புரட்சி நிறைவேறுவதும், பிரிட்டிஷ் ஆதிக்க வர்க்கங்களுக்கு (முதலாளிகள்-நிலப் பிரபுக்கள் ஆகியோருக்கு)பெருத்த அடி கொடுத்து பிரிட்டனிலேயே புரட்சிக்கு ஒரு உந்துதல் கொடுக்கும் என்றும், தனது பங்கிற்கு, ஆங்கிலேயப் புரட்சி ஐரோப்பிய நாடுகளில் உள்ள புரட்சிகர இயக்கம் முழுதின் மீதும் செல்வாக்குச் செலுத்தும் எனவும் மார்க்சும் எங்கெல்சும் கருதினர்.

''தேசீய இயக்கங்கள் விஷயத்தில், ஒடுக்கும் தேசீய இனத்தின் பாட்டாளி வர்க்கம் பின்பற்ற வேண்டிய கொள்கைக்கு மார்க்சும் எங்கெல்சும் அயர்லாந்துப் பிரச்சினையில் கடைப்பிடித்த கொள்கை ஒரு சிறந்த உதாரணமாகும்; அவ்வுதாரணமானது தனது மாபெரும் செயல்முறை முக்கியத்துவத்தில் இம்மியும் இன்று இழந்து விடவில்லை''** என்று எழுதினார் லெனின்.

விவசாய இயக்கம் அயர்லாந்தில் புதிய எழுச்சி பெற்றதையும், அயர்லாந்துப் புரட்சி வீரர்களான ஃபேனிகளை பிரிட்டிஷ் அரசாங்கம் காட்டுமிராண்டித்தனமாக நசுக்கியதையும் தொடர்ந்து, அயர்லாந்துப் பிரச்னை மிகவும் தீவிர

---

* *Marx' Letter to Z. Meyer and A. Bebel on April 9, 1870;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 287.

** வி.இ. லெனின், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, மாஸ்கோ, *1971*, பக்கம் *83*.

மடைந்த வேளையில் எங்கெல்ஸ் அயர்லாந்தை ஆய்வு செய்யப் புகுந்தார். எங்கெல்ஸ் தமது துணைவியான லீசி பேர்ன்சை ''புரட்சிகர மனப்பாங்குள்ள அயர்லாந்துக்காரி'' என எழுதினுர். அவர் தமது மக்கள் நடத்திய தேசிய சுதந்திரத்திற்கான போராட்டத்தின்பால் ஆர்வம் மிக்க அனுதாபம் கொண்டு, அயர்லாந்துப் புரட்சி வீரர்களை அரசாங்க வேட்டையிலிருந்து காத்துத் தமது வீட்டில் அடைக்கலம் கொடுத்து, பல வகையான பிற உதவிகளையும் நல்கினுர்.

''எனது மனைவி.... உண்மையான அயர்லாந்துப் பாட்டாளி வர்க்கச் சந்ததியில் தோன்றியவள். தனது வர்க்கத்தின் மீது அவள் கொண்டிருந்த இயல்பான ஆர்வமிக்க அன்பு 'படிப்பாளிகளும்' 'உணர்ச்சி மிக்கவர்களும்' ஆன முதலாளி வர்க்க மகள்மாரின் நாகரீகத்தனத்தையும் புத்திசாலித்தனத்தையும் விட எனக்கு எல்லையற்ற இனிமையுள்ளதாய் இருந்தது. நெருக்கடியான நேரங்களில் இவர்கள் எல்லோரும் நல்கி இருக்கக் கூடிய ஆதரவை விட அவள் எனக்கு எப்போதும் அதிகமான ஆதரவு நல்கி வந்தாள்'' என்று பின்னர் நினைவு கூர்ந்தார் எங்கெல்ஸ்.

அயர்லாந்து தேசிய விடுதலை இயக்கத்திற்கு அனைத்து ஆதரவுகளையும் நல்கிய எங்கெல்ஸ்,அதே நேரத்தில்,ஃபேனிகளின் சதிகாரத் தந்திரங்களையும், அவர்களின் ''அரசுக் கவிழ்ப்புக்கான சூழ்ச்சிகளையும்'', விடுதலை வேட்கை கொண்ட பரவலான அயர்லாந்து மக்களுடன் அவர்கள் தொடர்பு கொள்ளாமல் இருந்ததையும் வன்மையாகக் கண்டித்தார்.

அயர்லாந்துப் பிரச்னைக்குப் பெரும் தத்துவ, அரசியல் முக்கியத்துவம் தந்த எங்கெல்ஸ், அயர்லாந்து வரலாறு பற்றி ஒரு பெரிய நூலில், முதல் பிரிட்டிஷ் காலனியாகவும் ''பிரிட்டிஷ் நிலப்பிரபுத்துவத்தின் கோட்டையாகவும்'' இந்த நாடு மாறிய நிகழ்ச்சிப் போக்கையும் எடுத்துக்காட்ட நினைத்தார். இந்த நூலை வரைந்து கொண்டிருக்கையில் 1869 அக்டோபர் 24ல் மார்க்சுக்கு எழுதினுர் எங்கெல்ஸ்: ''ஒரு நாட்டு மக்கள் இன்னெரு நாட்டு மக்களை அடிமைப்படுத்துவதனுல் என்ன வேதனைக்கு உள்ளாகின்றனர் என்பதற்கு அயர்லாந்து வரலாற்றை ஒரு உதாரணமாகக் காணலாம்.''

நான்கு பகுதிகளாய் எங்கெல்ஸ் எழுத விரும்பிய நூலின் முதல் பகுதியான இயற்கை வளங்கள் என்பதையும் இரண்

டாம் பகுதியின் ஒரு பிரிவான பண்டைய அயர்லாந்து என் பதையும் மட்டும்தான் அவர் எழுதினார்.

அயர்லாந்து வரலாறு பற்றிய நூலை எங்கெல்ஸ் எழுதி முடிக்கவே இல்லை. எங்கெல்ஸ் ஏற்கெனவே எதிர்பார்த்த படி, தத்துவப் பணிகளிலிருந்து அவரை நீண்ட காலத்துக்கு இழுத்துச் சென்ற, மிகப் பெரிய அரசியல் சம்பவங்கள் ஐரோப்பாவில் முற்றி வந்தன. அதாவது, பிரெஞ்சு-பிரஷ்யப் போரும், பாரிஸ் கம்யூனும் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

* * *

பிரஷ்யாவிற்கும் பிரான்சிற்கும் இடையில் 1870 ஜூலை 19ல் போர் தொடங்கியது. ஜூலை 23லேயே அகிலத்தின் பொதுக் குழு, பிரெஞ்சு-பிரஷ்யப் போர் பற்றி அனைத்து நாட்டுத் தொழிலாளர்களுக்கும் மார்க்சினால் எழுதப்பட்ட ஒரு விசேஷ அறைகூவலை விடுத்தது.

போனபார்டின் நலன்களுக்காக அரச பரம்பரைப் போர் நடத்துகிறது பிரான்ஸ் என்றும், ஜெர்மனி சிதறுண்டு கிடப் பதில் அக்கறை கொண்டு, அது ஒன்றுபடுவதற்குக் குறுக்கே நிற்பதற்காகப் போனபார்ட் பிரான்ஸ் தொடுத்துள்ள இந்தப் போரில், ஜெர்மனி தனது தற்காப்பிற்காகவே போரா டுகிறது என்றும் மார்க்ஸ் இந்த அறைகூவலில் குறிப்பிட் டார். ஆயினும், இந்தப் போரில் ஜெர்மனியின் உண்மையான நலன்களுக்கும், இதில் பிற்போக்கு பிரஷ்யா கொண்டுள்ள கொள்ளைக்கார நோக்கங்களுக்கும் இடையே உள்ள கூரிய வேற்றுமையை இந்த அறைகூவலிலேயே கோடிட்டுக் காட்டு கிறார் மார்க்ஸ்.

''ஜெர்மனியைப் பொறுத்த வரை, இந்தப் போர் தற்காப்புப் போர்தான். ஆனால், தற்காத்துக் கொள்ளும் நிர்ப்பந்தம் அதற்கு வந்ததற்கு யார் காரணம்? ஜெர்மனிக்கு எதிராகப் போர் தொடுப்பதற்குப் போனபார்டுக்கு வாய்ப் புகள் தந்தது யார்? பிரஷ்யா தான்!''

பிரஷ்யாவின் ஆக்கிரமிப்பு எண்ணங்களின் காரணமாக, தற்காப்புப் போர் ஆக்கிரமிப்புப் போராகவும், கொள்ளைக் காரப் போராகவும் மாறி விடாமல் இருக்குமாறு தொழிலா ளர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மார்க்ஸ் கூறி

ஞர். பிரெஞ்சுத் தொழிலாளர்களும் ஜெர்மன் தொழிலாளர்களும் விடுத்த பல வேண்டுகோள்களையும் நிறைவேற்றிய தீர்மானங்களையும் எடுத்துக்காட்டி, இந்தப் போரில் முற்போக்குத் தொழிலாளர்கள் சரியான சர்வதேசிய நிலையை மேற்கொள்ள முடிந்திருக்கிறது என்று திருப்தியுடன் குறிப்பிட்டார். ''வரலாற்றில் இதற்கு இணையாக காணப்படாத இந்த உண்மை மட்டுமே, இன்னும் ஒளி மிகுந்த எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகளுக்கு வழி திறந்து விடுகிறது. பொருளாதார ஏழ்மையும் அரசியல் வெறித்தனமும் கொண்ட பழைய சமுதாயத்திலிருந்து மாறுபட்டதாக, சமாதானம் என்பதைச் சர்வதேசக் கோட்பாடாகக் கொண்ட புதிய சமுதாயம் ஒன்று பிறந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு நாட்டவரையும் ஆட்சி செய்வது ஒன்றேயான உழைப்பே அல்லவா?

''இதனை முன்னறிவிப்பது தான் சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பு.''*

1870 ஆகஸ்டு 15ல் மார்க்சுக்கு எழுதிய கடிதத்தில், அவரது வேண்டுகோளின்படி, பிரெஞ்சு-பிரஷ்யப் போர் நடக்கின்ற சிக்கலான சூழ்நிலைமைகளில் ஜெர்மன் தொழிலாளர்களும் அவர்கள் கட்சியும் கடைப்பிடிக்க வேண்டிய உத்திகள் பற்றித் தமது கருத்தை வெளியிட்டார் எங்கெல்ஸ்: ஜெர்மனியின் தேசிய நலன்களுக்கும், பிரஷ்ய அரச பரம்பரை நலன்களுக்கும் இடையில் கண்டிப்பாக வேறுபாடு காண வேண்டும்; எல்சாஸ்-லோடரிங்கை வலுக்கட்டாயமாக இணைத்துக் கொள்வதை எதிர்க்க வேண்டும்; பாரிசில் தேசிய வெறியற்ற, குடியரசு அரசாங்கம் தோன்றிய உடனேயே சமாதானம் காண முயல வேண்டும்; இந்தப் போரினை அங்கீகரிக்காதவர்களும், தம்மில் ஒருவருக்கு எதிராக ஒருவர் போராடாதவர்களுமான பிரெஞ்சு, ஜெர்மன் தொழிலாளர்களுக்கு இடையில் ஒற்றுமையைத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும். இந்த வழியை முழுக்க முழுக்கச் சரியே என்று ஏற்றுக் கொண்ட மார்க்ஸ், ஜெர்மன் சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சிக்கு இதே போன்று அறிவுரைகள் வழங்கினார்.

---

* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 490.

பிரஷ்ய அரசின் கொள்கைகளில் தமக்கு நம்பிக்கை இல்லை என்பதைக் காட்டுகிற விதத்தில் 1870 ஜூலையில் நடந்த ரெய்ச்டாக் கூட்டத்தின் ராணுவ ஒதுக்கீடுகள் பற்றிய முதல் ஓட்டெடுப்பில் ரெய்ச்டாக் உறுப்பினர்களான பேபெலும் லீப்க்னெஹ்டும் கலந்து கொள்ளாத போது, தேசிய மனப் போக்கினுல் உந்தப்பட்ட லஸ்ஸாலியர்கள் ஒதுக்கீடுகளுக்கு ஆதரவாக வாக்களித்து, நிபந்தனையற்ற முறையில் பிஸ்மார்க்கை ஆதரித்தார்கள்.

எல்சாஸ்-லோடரிங்கை இணைத்துக் கொள்ளும் எண்ணத்தை பிஸ்மார்க் வெளிப்படையாகவே அறிவித்ததும், மார்க்ஸ் தமது முதல் அறைகூவலில் தொலைநோக்குடன் சொல்லி இருந்த லுயீ போனபார்டின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, 1870 செப்டம்பர் 4ல் பிரான்ஸ் ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டதுமான இவ்விரு நிகழ்ச்சிகளும், ஒரு புதிய அறைகூவல் விடுக்குமாறு அகிலத்தின் பொதுக் குழுவை நிர்பந்தித்தன. இதில், ஜெர்மனி நடத்தும் போர் இப்போது ஆக்கிரமிப்புப் போராக மாறிவிட்டதென்றும், எல்சாஸ்-லோடரிங்கை இணைத்துக் கொண்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறும், பிரான்சுக்கு கௌரவம் தருகின்ற முறையில் சமாதானம் மேற்கொள்ளுமாறும், பிரெஞ்சுக் குடியரசை அங்கீகரிக்குமாறும் தொழிலாளர்கள் கோர வேண்டும் என்று மார்க்ஸ் ஆலோசனை கூறினுர். புதிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டாம் என்றும், குடியரசு தரும் சுதந்திரத்தைத் தமது சொந்த வர்க்கத்தை ஒன்றுபடுத்துவதற்குப் பயன்படுத்துமாறும், பிரெஞ்சுத் தொழிலாளர்களை அவர் கேட்டுக் கொண்டார். இந்த அறைகூவலில் எல்சாஸ்-லோடரிங்கை ஜெர்மனி இணைத்துக் கொண்டதானது ஜாரிச ருஷ்யாவின் அணைப்புக்குள் பிரான்சைத் தள்ளி விடும் என்று தமக்கே உரிய மேதைமை மிக்க தெளிவான தொலைநோக்குடன் எடுத்துக் கூறினுர் மார்க்ஸ். கேந்திர முக்கியத்துவம் எனும் ராணுவக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது எல்சாஸ்-லோடரிங் இணைப்பு ஜெர்மனிக்குத் தேவையற்றது என்று மெய்ப்பிக்கும் அறைகூவலின் பகுதி எங்கெல்சால் எழுதப்பட்டது.

போரின் தன்மை மாறிப் போகவே தமது உத்திகளை மாற்றிக் கொள்ளுமாறு ஜெர்மன் தொழிலாளர்கள் நிர்ப்

பந்திக்கப்பட்டார்கள். ரெய்ச்டாக் கூட்டத்தில் ராணுவ ஒதுக்கீடு பற்றிய ஓட்டெடுப்பில் பேபெலும் லீப்க்னெஹ்டும் எதிர்த்து ஓட்டளித்து, பிரெஞ்சு மக்களுக்கெதிரான இந்த ஆக்கிரமிப்புப் போருக்குத் தமது கண்டனங்களைத் தெரிவித்தனர்.

இதையடுத்து பேபெலும் லீப்க்னெஹ்டும், பின்னர் சமூக ஜனநாயகவாதிகள் பலரும் கைது செய்யப்பட்டு சிறையிடப் பட்டனர். கைது செய்யப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் தார்மீக ஆதரவும் பொருள்வகை உதவிகளும் செய்வதற்கு ஓடோடி வந்தார் எங்கெல்ஸ். லீப்க்னெஹ்டின் துணைவியாருக்கு எழுதிய கடிதத்தில் எங்கெல்ஸ் கூறினார்: ''இந்தப் போரின் போது ஜெர்மன் தொழிலாளர்கள் காட்டிய அளவற்ற ஆற்றலும் கொள்கைப் பிடிப்பும், அவர்களை ஐரோப்பியத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கே தலைமை தாங்குமாறு செய்திருக்கிறது. இது எவ்வளவு பெருமை மிக்க மனநிறைவை எங்களுக்குத் தருகிறது என்று நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்!''*

மார்க்சின் தலைமையில் இருந்த முதல் அகிலம், போரினால் விளைந்த வரலாற்றுச் சோதனையில் மிகச்சிறப்பாகத் தேர்வு கண்டு, பிரெஞ்சு-பிரஷ்ய போர் நடந்த சிக்கலான சூழ்நிலைமைகளில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தது.

பிரெஞ்சு-பிரஷ்யப் போரின் ஆரம்பத்திலிருந்தே, *Pall Mall Gazette* என்ற பத்திரிகைக்கு ராணுவ நடவடிக்கைகளின் போக்கு பற்றி விமர்சனக் கட்டுரைகளை முறையாக அனுப்பி வந்தார் எங்கெல்ஸ். மேற்கொண்டு ராணுவ நடவடிக்கைகள் எப்படி விரிவடையப் போகின்றன என்று கட்டுரைகளில் எழுதப்பட்டிருந்ததோ அப்படியே ஒவ்வொரு முறையும் நடந்ததால் போர்க் குறிப்புகள் என்னும் தலைப்பில் வந்த எங்கெல்சின் இக்கட்டுரைகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. உதாரணமாக, செதானில் பிரெஞ்சு ராணுவம் முறியடிக்கப்படும் என்று எட்டு நாட்களுக்கு முன்னரே அறிவித்தார் எங்கெல்ஸ். இக்கட்டுரைகள் யாவும் பெயரின்றி

* *Engels' Letter to N. Liebknecht on December 19, 1870;* K. Marx and F. Engels, *Works*, Vol. XXVI, p. 82.

வெளிவந்ததால் இவை ஒரு மிகப் பெரிய ராணுவ நிபுணரால் எழுதப்படுவதாக எல்லோரும் நினைத்தார்கள்.

''இன்னும் சில காலத்திற்கு இந்தப் போர் தொடருமேயானால், லண்டனினுள்ள ராணுவ வல்லுனர்களில் தலைசிறந்தவனாக விரைவில் நீயே கருதப்படுவாய்'' என்று எங்கெல்சுக்கு மார்க்ஸ் எழுதினார்.

இக்கட்டுரைகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருப்பது யார் என்றறிந்த எங்கெல்சின் நண்பர்கள் எல்லையற்ற வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டனர். இந்த நேரத்தில்தான் மார்க்சின் மகள்மாரில் ஒருவரான ஜென்னி ''ஜெனரல்'' என்னும் பட்டப் பெயரை எங்கெல்சுக்குச் சூட்டினார். எங்கெல்சின் நண்பர்கள் மத்தியில் இந்தப் பட்டப் பெயர் என்றென்றைக்குமாக நிலைத்து நின்றது.

1870 செப்டம்பரில் மாஞ்செஸ்டரிலிருந்து லண்டனுக்கு வந்த எங்கெல்ஸ், மார்க்ஸ் இருந்த இடத்திலிருந்து *10* நிமிட நடைதூரத்தில் குடியேறினார். முன்னர் எல்லாப் பிரச்னைகளையும் கடிதங்கள் மூலமாகவே விவாதிக்க வேண்டி இருந்ததற்கு பதிலாக, இப்போது நேரடியாகச் சந்தித்து அவற்றைப் பற்றி இருவரும் விவாதித்தார்கள்.

ஒவ்வொரு நாளும் மார்க்சின் வீட்டிற்கு வந்து விடுவார் எங்கெல்ஸ். அவர்கள் இருவருமாக ஒன்று, உலாவச் செல்வார்கள், அல்லது மார்க்ஸ் பணி புரியும் அறையில் தங்கி விடுவார்கள். அறையில் குறுக்கு விட்டத்தில் மாறி மாறி நடந்து மூலையில் குதி கால்களை அழுத்தித் திரும்புவார்கள். அவ்வாறு மணிக் கணக்கில் நடந்தபடி பலப்பல பிரச்னைகள் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். ஏதாவது ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி பல சந்திப்புக்களில் கூட உரையாடுவார்கள் என்று எலியனோரா மார்க்ஸ் நினைவு கூர்ந்தார்.

''மாறுபட்ட கருத்துக்கள் உள்ளதாய் ஏதாவது ஒரு பிரச்னை வந்து விட்டால், ஒரே அபிப்பிராயத்திற்கு வருவதற்காக அது பற்றிச் சந்திப்புக்களுக்கு இடையே தனித்தனியே இருவரும் சிந்திப்பர். தம்மிடையே கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தைப் போல தமது சிந்தனைகள், பணிகள் பற்றிய வேறு எந்த விமர்சனத்திற்கும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்த

தில்லை. இருவரும் அவ்வளவு உயர்வாக ஒருவரை ஒருவர் மதித்தனர்.

''அனைத்தையும் ஆய்ந்து தெளிந்த எங்கெல்சின் அறிவையும், ஒரு விஷயத்திலிருந்து மறு விஷயத்திற்கு மிக எளிதாக மாறிச் செல்லத்தக்கவாறு வியப்புக்குரியதாய் வளைந்து கொடுக்கும் அவரது மதியையும் பற்றி மிகப் பெரும் குதூகலம் அடைந்தார் மார்க்ஸ். தனது பங்கிற்கு எங்கெல்சோ, மார்க்சினுடைய மகத்தான ஆய்வு அறிவையும், அவ்வாய்வுகளைச் சேர்த்து இணைக்கும் வல்லமையையும் கண்டு புளகாங்கிதம் அடைந்தார்''* என்று மார்க்சின் மகள் லௌராவின் கணவர் போல் லஃபார்க் சொல்லுகிறார்.

எங்கெல்ஸ் லண்டனுக்கு வந்து சேர்ந்த பின், மார்க்சின் ஆலோசனைப்படி அவர் அகிலத்தின் பொதுக் குழுவில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இப்போது பேரானந்தத்துடன் அரசியல், அமைப்புப் பணியில் தமது அறிவைச் செலுத்தினார் எங்கெல்ஸ். பிரெஞ்சுக் குடியரசை அங்கீகரிக்கக் கோரி நடந்த இயக்கத்திற்கு மார்க்சுடன் சேர்ந்து தலைமை தாங்கிய எங்கெல்ஸ், இந்த இயக்கத்தில் தேவையான அளவு செயலூக்கத்துடன் பங்கெடுத்துக் கொள்ளாமலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைக்கு கொஞ்சம்கூட ஆற்றல் மிக்க எதிர்ப்புத் தெரிவிக்காமலும் இருந்த அகிலத்தின் உறுப்பினர்களான பிரிட்டிஷ் தொழிற் சங்கத் தலைவர்களைக் கடுமையாகச் சாடினார்.

போர்க் குறிப்புகள் என்னும் தொடர் கட்டுரையில் பிஸ்மார்க் அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கும் ''பிரஷ்ய வகை'' காட்டுமிராண்டித்தனமான போர்முறைகளுக்கும் சாட்டையடி கொடுக்கிறார் எங்கெல்ஸ். பிரஷ்ய ராணுவத்திற்கு எதிராகத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்துமாறும், கோட்டைகளைக் காப்பதற்கான ஏற்பாடுகளுடன் நாலா புறமும் ஜெர்மானியர்களுக்குப் பீதி உண்டாக்கும் வகையில் ஆயுதந்தாங்கிய படைப் பிரிவுகளை உருவாக்குமாறும், தகவல் போக்குவரத்தை நிர்மூலமாக்குமாறும்,

---

* மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய நினைவுக் குறிப்புகள், பக்கம் 83.

பாலங்களையும் இருப்புப் பாதைகளையும் தகர்த்தெறியும்படியும், பின்னணியில் உள்ள உணவுப் பொருள்களையும் ஆயுதத் தளவாடங்களையும் நாசமாக்கும்படியும் பிரெஞ்சுப் பொது மக்களுக்கு அறைகூவல் விடுத்தார் எங்கெல்ஸ். கேடுகெட்ட முறையில் நாட்டுக்குள் புகுந்துள்ள ஆக்கிரமிப்பாளர்களை அடித்து விரட்டுவதற்காக ஆயுதமேந்தியிருந்த பிரெஞ்சு கொரில்லா வீரர்களை வரவேற்றார் எங்கெல்ஸ்.

பிரெஞ்சுக் குடியரசின் அங்கீகாரத்திற்காக மார்க்சும் எங்கெல்சும் இயக்கம் நடத்திய அதே வேளையில், தொழிலாளர்களைக் கண்டு அஞ்சி, பிரெஞ்சு மக்களுக்கு எதிராக அடக்கு முறையைப் பிரயோகிப்பதற்காகத் தமது கைகளை விடுவித்துக் கொள்ளத் துடித்து, பிரான்சையே காட்டிக் கொடுக்கும் முறையில் எத்தகைய நிபந்தனைக்கும் உட்பட்டு, பிரஷ்யர்களுடன் சமாதானம் முடித்துக் கொள்ளுவதற்காகச் சூழ்ச்சிகள் செய்து வந்த பிரெஞ்சு அரசாங்கத்தையும் ஜெனரல்கள் குழுவையும் மார்க்சும் எங்கெல்சும் அம்பலப் படுத்தினர். ''தேசப் பாதுகாப்பு அரசாங்கம்'' என்று தன்னைத் தானே அழைத்துக் கொண்டிருந்த இந்த அரசாங்கம் வெறும் ''தேசத் துரோக அரசாங்கமே'' என்று பொருத்தமாக அழைத்தார் மார்க்ஸ்.

பிரெஞ்சு அரசாங்கத்தின் சரணாகதி அயல் நாட்டுக் கொள்கையைக் கண்டும், பாரிஸ் நகரை அரண் செய்து நின்ற பாதுகாவலர்களான ஆயுதந்தாங்கி நின்ற தொழிலாளர்களின் மனவுறுதியை, ராணுவத் தோல்விகளாலும் பசி பட்டினியாலும் உடைத்தெறிவதற்கு அரசாங்கம் செய்து வந்த முயற்சிகளைக் கண்டும், அரசின் துரோகத்தனத்தை பிரெஞ்சுத் தொழிலாளர்கள் விரைவிலேயே புரிந்து கொண்டார்கள். மார்ச்சு மாதம் 18ம் நாள் இரவு பாரிஸ் பாட்டாளி வர்க்கத்தின் மீது கடுமையான தாக்குதலைத் தொடுத்து, மன் மார்தர் குன்றுகளின் மீது தேசியக் காவற் படையினர் நிறுவி இருந்த பீரங்கிகளைக் கைப்பற்றுவதற்கு தியேர் அரசாங்கம் முயன்றது. இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். பயபீதி கொண்ட அரசாங்கம் வெர்சாலுக்கு ஓடிப் போயிற்று. வரலாற்றில் முதல் முறையாக ஆட்சி அதிகாரம் தொழிலாளர்களின் கைகளுக்கு வந்தது.

பிரஷ்யப் படைப் பிரிவுகள் பாரிசின் தலைவாயிலில்

நிற்கும் பொழுது, அகாலமான எழுச்சியை மேற்கொள்ள வேண்டாம் என்று பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கத்தை 1870 செப்டம்பர் 4ல் நிகழ்ந்த ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின் மார்க்சும் எங்கெல்சும் எச்சரித்திருந்தனர்.

ஆனால், நிகழ்ச்சிகளின் போக்கும், வர்க்கப் போராட்டத்தை உசுப்பி விட்ட சம்பவங்களும் மார்ச் 18ல் புரட்சிக்கு இட்டு வந்து சேர்த்தவுடனேயே உண்மையான பாட்டாளி வர்க்கத் தலைவர்களுக்கே உரிய ஊக்கமும் ஆர்வமும் கொண்டு, ''விண்ணைச் சாடப் புகுந்தவர்களின்'' (மார்க்ஸ்) உதவிக்கு விரைந்து வந்து பாரிஸ் நகர் பாட்டாளி வர்க்கத்தின் வீரஞ்செறிந்த போராட்டத்தில் மார்க்சும் எங்கெல்சும் பங்கெடுத்துக் கொண்டனர்.

புரட்சிகரப் பாரிசின் உதவிக்காக சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தையும் பிரெஞ்சுத் தொழிலாளர்களையும் திரட்டுவதற்காக மார்க்ஸ் தலைமையில் இருந்த அகிலத்தின் பொதுக் குழு செய்து வந்த கடுமையான பணிகளில் மிகத் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார் எங்கெல்ஸ்.

மார்ச் 21ஆம் நாள் அகிலத்தின் பொதுக் குழுக் கூட்டத்திலேயே பாரிஸ் நிகழ்ச்சிகள் பற்றி விவரமான தகவல்கள் தந்தார் எங்கெல்ஸ். தமக்கு வந்த கடிதங்களின் அடிப்படையில், பாரிசில் ஆட்சி அதிகாரம் மக்கள் கைகளிலே இருக்கிறது என்றும், தேசியக் காவற்படையின் மத்திய கமிட்டியில் உள்ளவர்கள் ''பிரபலமானவர்கள்'' பட்டியலில் இல்லாதவர்களேயாயினும், தொழிலாளர்களிடையே நன்கு அறிமுகமானவர்கள்தாம் என்றும் விவரங்கள் தந்தார் எங்கெல்ஸ். இந்தக் கூட்டத்திலேயே, பாரிஸ் எழுச்சியாளர்களுக்கு ஆதரவு தருமாறும், அனுதாபங்களை வெளியிடுமாறும் பிரிட்டிஷ் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் தீர்மானம், மார்க்ஸ் ஆலோசனையின் பேரில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஏப்ரல் 11ல் நடந்த பொதுக் குழுக் கூட்டத்தில், பாரிசில் நிகழ்ந்து கொண்டிருந்த போராட்டத்தின் போக்கு பற்றிய விவரங்களை வெளியிட்ட எங்கெல்ஸ், கம்யூன் செய்த அடிப்படையான தவறுகளில் ஒன்றைச் சுட்டிக் காட்டினார் ''... வெர்சால் பலவீனமாக இருந்த போதே அதனை எதிர்த்துத் தாக்கி நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், அந்த அனுகூலமான காலம் பயன்படுத்தப்படாமல் போயே விட்டது. இப்போது, அனேகமாக, வெர்சாலின் கை மேலோங்கி அது பாரிஸ்காரர்களை நெருக்கிவிடும்.'' ஆயினும், தொழிலாளர்கள் ''முந்தைய எல்லா எழுச்சிகளிலும் இருந்ததைவிட எவ்வளவோ மேலான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறார்கள்''* என்று குறிப்பிட்டார் எங்கெல்ஸ்.

கம்யூன் வீரர்களுக்கு ஆலோசனைகள் வழங்கியும், அவர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டியும், பிரஷ்ய ராணுவம் இருக்கும் நிலைமை பற்றிக் கிடைத்த ரகசியத் தகவல்களை அவர்களுக்கு அனுப்பியும், பாரிசைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிவுரைகள் தந்தும் இன்னும் பலவாறாகவும் கம்யூன் வீரர்களுக்கு உதவி புரிந்தனர் மார்க்சும் எங்கெல்சும்.

நாற்புறமும் சூழப்பட்டிருந்த பாரிசுக்கு அளவற்ற இடையூறுகளுக்கிடையே மார்க்சும் எங்கெல்சும் அனுப்பி வைத்த ஆலோசனைகள், முற்போக்குப் பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்று இல்லாத அடிப்படைக் கோளாறை களைந்தெறிய முடியவில்லை. பிளாங்கிஸ்டுகளாலோ புரூதோனிஸ்டுகளாலோ, பாட்டாளி வர்க்கப் போர்த்தந்திரங்களையும் நடைமுறை உத்திகளையும் வகுத்து, உருக்குப் போன்ற உறுதியுடன் அவற்றைச் செயல்படுத்த வல்ல சரியான வழிகாட்டும் கம்யூன் தலைவர்களாய் இருக்க முடியவில்லை.

கம்யூன் செய்த தவறுகளை விமர்சிக்கும் பொழுது, பாரிஸ் தொழிலாளர்களின் வீரம், படைப்பாற்றல், முன்முயற்சி ஆகியவற்றை மிக உயர்வாக மார்க்சும் எங்கெல்சும் மதித்தனர். இந்தப் போராட்ட அனுபவத்தின் அடிப்படையில் புரட்சிகரத் தத்துவத்திற்கு மிக மிக முக்கியமான சில முடிவுகளை அவர்கள் வகுத்தளித்தனர். 1871 ஏப்ரல் 12ல் கூகெல்மானுக்கு எழுதிய பிரபலமான கடிதத்தில் மார்க்ஸ் சொன்னார்: ''என்னுடைய **பதினெட்டாவது புரூமெரின்** கடைசி அத்தியாயத்தை நீ புரட்டிப் பார்த்தால், பிரெஞ்சுப் புரட்சிக்கான அடுத்த முயற்சிக்கு நான் பின்வருமாறு

---

* *The General Council of the First International, 1870-1871, Minutes*, p. 171.

அறிவிப்பதைக் காண்பாய்: இதுவரை நடந்து வந்துள்ளபடி அதிகார வர்க்க இராணுவ இயந்திரத்தை ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்கு மாற்றிக் கொடுக்கலாகாது, அவ்வியந் திரத்தை உடைத்தெறிய வேண்டும். இந்தக் கண்டத்தில் நடக் கும் உண்மையான எந்த மக்கள் புரட்சிக்கும் இது ஒரு முன் தேவையாகும். வீரஞ் செறிந்த நமது பாரிஸ் தோழர்கள் இந்த முயற்சியைத்தான் இப்போது மேற்கொண்டிருக்கிறார் கள். இந்தப் பாரிஸ்வாசிகளிடம்தான் எத்தகைய சம யோசித சாமர்த்தியம், எத்தகைய வரலாற்று முன்முயற்சி, எத்தகைய தியாகத் திறமை!.. இத்தகைய வீரச் செயல்களை இதுவரை சரித்திரம் காணவேயில்லை.''

கூகெல்மானுக்கு எழுதிய இந்தக் கடிதத்தில், ஐரோப் பியக் கண்டத்தில் மட்டுமே அரசு இயந்திரத்தை உடைத் தெறிய வேண்டியது அவசியம் என்னும் முடிவுடன் நின்று விடுகிறார் மார்க்ஸ். பிரிட்டன் இதற்கு விதிவிலக்கு என் கிறார். பிரிட்டனில் மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் தொழிலாளி வர்க்கத்தினர் என்றும், இங்கு இராணுவக் குழுவினர் இருக்கவில்லை என்றும் அதிகாரவர்க்கம் இன்னும் கணிசமான அளவுக்கு ஆதிக்கம் செலுத்தவில்லை என்றும், எனவே பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கம் அமைதியான வழியில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது சாத்தியமே என் றும் அப்போது மார்க்ஸ் கருதினார். ''பிரிட்டனில் ஆதிக்கம் வகிக்கின்ற வர்க்கங்கள் அடிமைத்தனத்திற்குப் பாதுகாப் பாகக் கலகம் செய்யாமல் இந்த சமாதான, சட்ட பூர்வப் புரட்சியை ஏற்றுக் கொள்ளும் என்று நாம் எதிர்பார்ப்பது கடினம்தான் என்றும் தொடர்ந்து கூற ஒரு போதும் மார்க்ஸ் மறக்கவில்லை'' என்று எழுதினார் எங்கெல்ஸ்.

பாரிஸ் கம்யூன் தோல்வி அடையப் போகின்ற சாத் தியத்தை மார்க்சும் எங்கெல்சும் எதிர்பார்த்த போதிலும், அனைத்துலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பத் திற்கு அடிக்கோல் நாட்டியதன் மூலம் கம்யூன் ஏற்கெனவே வகித்த மகத்தான வரலாற்றுப் பாத்திரத்தை அவர்கள் கோடிட்டுக் காட்டினர். 1871 ஏப்ரல் 17ல் கூகெல்மானுக்கு மார்க்ஸ் எழுதினார்: ''மூலதனம் படைத்த வர்க்கத்துடனும் அதன் நலன்களுக்குப் பிரதிநிதியான அரசாங்கத்துடனும் தொழிலாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தை பாரிஸ்

கம்யூன் ஒரு புதிய கட்டத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. இந்தத் தடவை இந்த விஷயம் எப்படி முடிவுற்ற போதிலும், அனைத்துலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புதிய ஆரம்பப் புள்ளி வெற்றிகரமாகக் கிட்டிவிட்டது.''

பாரிசில் தடையரண்களுக்கிடையே இன்னும் போராட்டம் நடந்து வந்த வேளையில் அகிலத்தினது பொதுக் குழுவின் பிரான்சில் உள்நாட்டுப் போர் என்னும் அறைகூவலை வரைந்து மே 30ல் நடந்த பொதுக் குழுக் கூட்டத்தில் அதனை வாசித்தார் மார்க்ஸ். இந்த நூலில் நடந்து வரும் நிகழ்ச்சிகளின் ஆழமிக்க அர்த்தத்தைப் புரிந்து கொள்ளும் தமக்கே உரித்தான மேதைமையுடன் பாரிஸ் கம்யூனின் அனைத்துலக வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டினார்.

இந்த நூலில் பொதுமக்களின் வரலாற்று அனுபவத்தைத் தத்துவ ரீதியில் பொதுமைப்படுத்தி அரசைப் பற்றிய, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிய தமது போதனையை வளமைப்படுத்துகையில் அளவற்ற சிறப்பு வாய்ந்த இன்னும் ஒரு அடி எடுத்து வைக்கிறார் மார்க்ஸ்.

பழைய அரசு இயந்திரத்தை பாட்டாளி வர்க்கம் உடைத்தெறிய வேண்டும் என்று ஏற்கெனவே முன்வைத்திருந்த தமது மிக முக்கியமான கோட்பாட்டை, கம்யூனின் பணிகளைத் திட்டவட்டமாக ஆய்வு செய்கையில் ஆதார பூர்வமாக இன்னும் எடுப்பாகக் காட்டினார் மார்க்ஸ். ''தொழிலாளி வர்க்கம் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டிருந்த அரசு இயந்திரத்தை வெறுமே கைப்பற்றித் தனது சொந்த நலன்களுக்காக அதனைப் பயன்படுத்த முடியாது'' என்று கம்யூன் நடைமுறையில் நிரூபித்திருக்கிறது. முதலாளி வர்க்கத்தின் பழைய அரசு இயந்திரத்தைப் பாட்டாளி வர்க்கம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய இந்த முடிவு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று மார்க்சும் எங்கெல்சும் கருதியதால், கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கைக்கு 1872ல் அவர்கள் எழுதிய முன்னுரையில், மார்க்சியத்தின் முதல் வேலைத் திட்ட அறிக்கைக்கு மிக முக்கியமான ஒரு பிற்சேர்க்கை என்று இதனைக் குறிப்பிட்டனர்.

பாட்டாளி வர்க்கம் எந்த மாதிரியான புதிய அரசை நிறுவ வேண்டும் என்று எல்லைக் கோடுகள் வரைந்து காட்டுவதற்கு பாரிஸ் கம்யூனின் அனுபவம் மார்க்சுக்கு உதவிற்று.

கம்யூன் போன்ற அரசு ''இறுதியாகக் கிட்டிய, வெளிப்படை யான அரசியல் வடிவம். இதன் மூலம் உழைப்புக்குப் பொரு ளாதார விடுதலை நல்க முடியும்'' என்னும் முடிவுக்கு வந்தார் மார்க்ஸ்.

விவசாயிகள், நகரத்துக் குட்டி முதலாளிகள் ஆகியோரின் நலன்களது பாதுகாவலனுகவும், பிரெஞ்சுச் சமுதாயத் தின் ஆரோக்கியமான சக்திகளின் பிரதிநிதியாகவும், உண் மையான ஒரே ஒரு பிரெஞ்சுத் தேசிய அரசாங்கமாகவும் இருந்தது கம்யூனே என்று தமது நூலில் மெய்ப்பிக்கிருர் மார்க்ஸ். கம்யூன் வீரர்களின் தீரச்செயல்களுக்குப் புகழ்மாலை சூடிய மார்க்ஸ் அவர்களைக் கொன்று குவித்த கொலைபாத கர்களுக்கு ஆவேசத்துடன் சாட்டையடி கொடுக்கிருர்.

பிரெஞ்சு-பிரஷ்யப் போருடனும், பாரிஸ் கம்யூனுடனும் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றில் ஒரு பிரம்மாண்ட மான காலகட்டம் முடிவுற்றது. இந்தக் காலகட்டத்தின் தொடக்கத்தில் மார்க்ஸ், எங்கெல்சின் போதனை ஆதிக்கம் செலுத்தியது என்று கொஞ்சமும் சொல்ல முடியாமல் எத் தனையோ சோஷலிசப் போக்குகளில் ஒன்று என்று மட்டுமே கொள்ளத் தக்கதாய் இருந்தது என்ருல், 1848ஆம் வருடப் புரட்சியும், இன்னும் அதிகமாக பாரிஸ் கம்யூனும் மார்க் சியத்துக்கு முந்தைய எல்லா விதமான குட்டி முதலாளித் துவ சோஷலிசப் போக்குகளுக்கும் மரண அடி கொடுத்தன. மார்க்சியத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த விதவிதமான சோஷலிசப் பிரிவுகளின், கும்பல்களின் வறட் சியும் வறுமையும் தீவிரமான புரட்சிச் சமர்களின் போது வெளியாயின. ''புரட்சிகளும் புயலும் வீசிக்கொண்டிருந்த முதல் காலகட்டத்தின் (1848—1871) இறுதியில் மார்க் சியத்துக்கு முந்திய சோஷலிசம் செத்தது'' என்ருர் லெனின்.

1868ல் புருசெல்சிலும், 1869ல் பாசெலிலும் நடந்த காங்கிரசுகளில் கூட்டுச் சொத்துடைமை பற்றி எடுக்கப் பட்ட முடிவுகளே குட்டி முதலாளித்துவச் சீர்திருத்த வாதத்தை முறியடித்து விஞ்ஞானக் கம்யூனிசத்தின் கோட் பாடுகள் வெற்றி பெற்றதைக் குறித்தன. ஆனுல், மார்க்சியத் தின் சித்தாந்த வெற்றி மிகத் தெளிவாக வெளிப்பட்டது பிரான்சில் உள்நாட்டுப் போரில்தான். இந்த நூலிலும் ''முன்பு போலவே துணிவு மிக்க வார்த்தைகளைப்'' பொழிகிருர்

மார்க்ஸ். சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பினது பொதுக் குழுவின் இந்த அறைகூவலை அவரது அமைப்பு அறிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தனது சித்தாந்த வேலைத்திட்டத்தை வகுத்தளிப்பதில் எவ்வளவு நீண்ட பயணம் செய்திருக்கிறது அகிலம் என்பது விளங்கும்.

எனினும், மார்க்சியத்துக்கு முந்திய சோஷலிசமும், தொழிலாளர் இயக்கத்தில் இருந்த பல்வேறு குட்டி முதலாளித்துவப் போக்குகளும் ஒரு போராட்டம் நடத்தாமல் தமது நிலைகளை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. மேலும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அடிப்படைப் பிரச்னைகள் அனைத்தையும் முன்னணிக்குக் கொண்டு வந்த பாரிஸ் கம்யூனுக்குப் பிறகுதான் அகிலத்துக்குள் போராட்டம் வலுக்கத் தொடங்கியது. பகூனிஸ்டுகள், பிரிட்டிஷ் தொழிற் சங்கங்களின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள், மற்ற மார்க்சிய விரோத சக்திகள் ஆகிய அனைவரும் மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும், அவர்களது ஆதரவாளர்களுக்கும் எதிராக ஒரு முகமாய்த் தாக்குதல்கள் தொடுத்தனர்.

பாரிஸ் கம்யூனுக்குப் பின்பு அனைத்து நாட்டு அரசாங்கங்களும் அகிலத்துக்கு எதிராகக் கொடிய அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டிருந்த வேளையில் இந்தப் போராட்டம் தொடங்கியது. ராணுவ நீதி மன்றங்கள், குடிமக்கள் நீதி மன்றங்கள், நேர் போலீஸ், ரகசியப் போலீஸ், ஆதிக்க வர்க்கங்களின் அளவிறந்த பத்திரிகைகள் ஆகிய அனைத்தும், சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பை வேட்டையாடப் போட்டியிட்டுக் கொண்டிருந்தன. இது அகிலத்தில் இருந்த சந்தர்ப்பவாதிகளின் மீது செல்வாக்குச் செலுத்தாமல் இருக்கவில்லை.

பிரான்சில் உள்நாட்டுப் போர் பிரசுரமான உடனேயே அகிலத்தின் பொதுக் குழுவில் கடுமையான கருத்து வேறுபாடுகள் தோன்றின. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரப் பதாகை பகிரங்கமாக உயர்த்திப் பிடிக்கப்பட்ட அகிலத்தின் ஆவணத்திற்கு எதிராக, ஆங்கிலேயத் தொழிற்சங்கத் தலைவர்களான ஒஜெரும் லெக்ராப்டும் ஆட்சேபம் தெரிவித்தனர். **பிரான்சில் உள்நாட்டுப் போர்** வெளியானவுடனே, வெறிபிடித்து ஓலமிட்ட முதலாளித்துவப் பத்திரிகைகள் இந்தத் தொழிற்சங்கத் தலைவர்களின் மீது செல்வாக்குச்

செலுத்தின. இப்பத்திரிகைகள் பாரிஸ் நிகழ்ச்சிகளை அகிலம் செய்த ''சதியின்'' விளைவே என்று சித்திரம் தீட்டின. அகிலத்திற்குக் கடும் சோதனை மிகுந்த வேளையில் ஓஜெரும் லெக்ராப்டும் வெளிப்படையாகத் துரோகம் புரியத் தலைப் பட்டனர். அகிலத்தின் பொதுக் குழு பிரிட்டிஷ் தொழிற் சங்கங்களின் துரோகத் தலைவர்களை ஒருமனதாய் தனது அணியிலிருந்து விரட்டியது.

பிரெஞ்சு-பிரஷ்யப் போருக்கும், பாரிஸ் கம்யூனுக்கும் முன்பிருந்தே மார்க்கியத்திற்கு எதிராகப் போராடி வந்த பகூனிஸ்டுகள், இச்சமயத்தில் பொதுக் குழுவிற்கு எதிராகத் தமது தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தினர்.

*1869*ல் அகிலத்திற்குள் நுழையும் பொழுது, ''சோஷலிச ஜனநாயகத்தின் கூட்டணி'' என்ற தமது அமைப்பைக் கலைத்து விடுவதாக வாக்களித்திருந்த பகூனின், அவ்வாறு செய்யாமல் அவ்வமைப்பை ரகசியமாக விரிவுபடுத்துவதற்கு முயன்று, அதன் மூலம் அகிலத்திற்குள்ளே அராஜகவாதிகளின் அமைப்பு ஒன்றைத் தோற்றுவித்தார். இந்த ரகசிய அமைப்பினை உபயோகித்துக் கொண்டு சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பினுடைய தலைமையைக் கைப்பற்றி விடுவதற்குத் திட்டமிட்டார் பகூனின். குட்டி முதலாளிகள் குறிப்பிடத்தக்க அளவு இருந்த ஸ்பெயின், இத்தாலி, ரோமானிய ஸ்விட்சர்லாந்து, பெல்ஜியம் போன்ற பல நாடுகளில் பகூனினது அராஜகக் கருத்துக்களுக்கு ஆதரவு கிட்டியது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சி நடுங்கிய, ''வெறிகொண்ட குட்டி முதலாளிகள்'', இயக்கத்திற்குள் அப்பொழுதுதான் நுழைந்த பின்தங்கிய தொழிலாளர் பகுதிகள் ஆகியோரின் நடுவில், பகூனினது கலகக்காரப் பிரசாரம் மிகவும் எடுப்பாகக் கவ்விக் கொண்டது. தொழிலாளர் இயக்கத்தின் ஏதாவது ஒரு கொள்கைப் பிரச்னையில் மார்க்சுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்த, ஆனல் பகூனிய அராஜகவாதக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத, அகிலத்தில் இருந்தவர்கள் அனைவரையும் தம்பால் இழுத்துக் கொள்ள பகூனிஸ்டுகள் முயன்று வந்தனர்.

கம்யூன், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்கக் கட்சி ஆகியவற்றை ஒவ்வொன்றும் அணுகுகின்ற

முறையே அகிலத்தில் இருந்த பல்வேறு போக்குகளை மதிப்பீடு செய்யும் உரைகல்லாக இருந்தது.

எங்கெல்ஸ் லண்டனுக்கு வந்தபின்பு அகிலத்தின் தலைமையில் பணியாற்றுவதிலும், மார்க்சியத்திற்கு விரோதமான போக்குகளுக்கு எதிராகப் போராடுவதிலும் பிரம்மாண்டமான ஆதரவு மார்க்சுக்குக் கிட்டியது.

தமது எல்லையற்றுப் பரந்த அறிவினாலும், அரசியல் அனுபவத்தாலும், பொங்கிப் பெருகும் ஆற்றலாலும், விரைவில் அகிலத்தில் மிகப் பெரும் செல்வாக்குப் பெற்றார் எங்கெல்ஸ்.

பொதுக் குழுவின் பணியில் பெருமளவினைத் தமது தோள்களில் ஏற்றுக் கொண்டார் எங்கெல்ஸ். பெல்ஜியச் செயலாளராயும், சற்று பின்னர் ஸ்பெயின் செயலாளராகவும் கடிதத் தொடர்பாளராகவும் பொறுப்பேற்றார் அவர். 1871 ஆகஸ்டில் ஸ்பெயின் செயலாளராக இருக்கும் பொழுதே, இத்தாலியச் செயலாளராக எங்கெல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் ஸ்பெயின், இத்தாலி தவிர போர்த்துகல், டென்மார்க் ஆகிய நாடுகளின் செயலாளராயும் இருந்து பணியாற்ற நேர்ந்தது.

அகிலத்தில் பணியாற்றி வந்த காலத்தில், பலப் பல மொழிகளில் எங்கெல்ஸ் பெற்றிருந்த பிரகாசமான அறிவினை, அகிலத்தின் ஆவணங்கள் பலவற்றை மொழி பெயர்ப்பதற்கும், பெருமளவில் அவர் நடத்தி வந்த கடிதப் போக்குவரத்திற்கும் இப்போது விரிவாகப் பயன்படுத்த முடிந்தது.

''ஐரோப்பிய மொழிகளிலும், தனித்தனி வட்டார மொழிகளிலும் கூட எங்கெல்ஸ் பெற்றிருந்த ஞானம் நம்ப முடியாததாக இருந்தது...'' என்று லஃபார்க் நினைவு கூர்ந்தார்.

''கடிதப் போக்குவரத்து யாருடன் நடத்துகிறாரோ அவருடைய தாய் மொழியிலேயே எழுதுவார் எங்கெல்ஸ். உதாரணமாக, லவ்ரோவுக்கு ருஷ்யனிலும், பிரெஞ்சுக்காரர்களுக்கு பிரெஞ்சு மொழியிலும், போலந்துக்காரர்களுக்கு போலந்து மொழியிலும் அவர் எழுதுவார்.''*

புரட்சிப் பணிகளே வாழ்க்கைப் பேரின்பம் என்று கருதிய

---

* மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய நினைவுக் குறிப்புகள், பக்கங்கள் 84-85.

எங்கெல்ஸ், பிரம்மாண்டமான நடைமுறை நிறுவன வேலையை அகிலத்தில் பரவலாகத் துவக்கி வைத்தார்.

பாரிஸ் கம்யூன் வீழ்ச்சிக்கு பின் குடியேற்றக்காரர்கள் திரள் திரளாகப் பாரிசிலிருந்து வெளியேறி லண்டனுக்குச் சென்ற போது, கம்யூன் வீரர்களுக்கு பொருள்வகை உதவிகள் செய்வதற்காக பொதுக் குழு ஆற்றிய பணிகளில் முன்னணியில் இருந்தார் எங்கெல்ஸ்.

பல நாடுகளின் செயலாளர்-கடிதத் தொடர்பாளராயிருந்த எங்கெல்ஸ், தம்மை ஒடுக்குவோரை எதிர்த்துச் வெஞ்சமர் தொடுத்த பாட்டாளி வர்க்கத்தின் ஒவ்வொரு பட்டாளத்திற்கும் உதவி புரிய விரைந்தோடி வந்தார். அன்த்வேர்பென் சுருட்டுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்துக்கும், புரூசெல்சில் நடந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கும் பொருள்வகை உதவிகளுக்கு ஏற்பாடு செய்தார் எங்கெல்ஸ். பர்செலோன் நெசவாலைத் தொழிலாளர்களும், சந்தாந்தெரில் உள்ள பீப்பாய் செய்பவர்களும், வலேன்சிய தோல் பதனிடுவோர்களும் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தங்களுக்கும் உதவி செய்யக் கோரி லண்டன் தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டார் எங்கெல்ஸ். இது போன்ற ஒவ்வொரு வேலைநிறுத்தத்திற்கும் பிறகு புதிது புதிதாய்ப் பாட்டாளி வர்க்கப் பட்டாளங்கள் சர்வதேசத் தொழிலாளர் தோழமை அமைப்புக்குள் வந்து சேர்ந்தன.

தலைமை தாங்குவதற்கு மிகக் கஷ்டமானவையாயிருந்த அகிலத்தினது பொதுக் குழுவின் பிரிவுகளுக்குத்தான் எங்கெல்ஸ் செயலாளராய் இருந்தார். ஸ்பெயினிலும் இத்தாலியிலும் பகூனிஸ்டுகளின் ரகசிய அமைப்பு வலைப் பின்னல் போல் பரவி இருந்தது, இந்நாடுகளில் அகிலத்திலிருந்த பிரிவினது தலைமைப் பதவியில் இருந்தவர்கள் பகூனினது செல்வாக்குக்கு அடிக்கடி ஆளானுர்கள்.

பொதுக் குழுவின் பெயரில் தேசியப் பிரிவுகளின் தலைமைக்கு எங்கெல்ஸ் அனுப்பி வந்த ஆணைகளிலும் சுற்றறிக்கைகளிலும், கம்யூனின் அனுபவங்களையும் படிப்பினைகளையும் விரிவாகப் பிரசாரம் செய்தார். தொழிலாளி வர்க்கத்தின் விஞ்ஞானபூர்வமான போர்த் தந்திரங்கள், நடைமுறை உத்திகள் ஆகியவற்றின் அடிப்படைகளைப் பொறுமையாக, விடாமுயற்சியுடன் விளக்கினுர். சிற்சில பிரிவுகளில் இருந்த

தலைவர்களின் பகூனியச் ''சுளுக்குகள்'' சிலவற்றை வெகு லாவகமாக எடுத்து விட்டார். பகூனினுக்கும் அவரது ஏஜன்டு களுக்கும் எதிராக சமரசத்திற்கு இடமில்லாத போராட்டம் நடத்தினார்.

அகிலத்தின் ஸ்பெயின் நாட்டுக் கூட்டுக் குழுவிற்கு எங்கெல்ஸ் எழுதிய முதல் கடிதத்திலேயே, எல்லா விதமான அரசியலிலிருந்தும் ஒதுங்கி நிற்க வேண்டும் என்று உபதேசிக்கும் பகூனின் கருத்து எவ்வளவு தீங்கு பயப்பது, தவறானது என்று விளக்கி, உடைமையாளர் வர்க்கங்களின் நலன்களுக்காகப் போராடும் பழைய கட்சிகளின் செல்வாக்கிலிருந்து பாட்டாளி வர்க்கம் விடுபட வேண்டுமானால் ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்று அமைப்பது தான் தலை சிறந்த வழி என்றும், இக்கட்சி தொழிலாளி வர்க்க விடுதலைக்காக சுயேச்சையான கொள்கையைக் கடைப் பிடிக்கும் என்றும் எடுத்துக் காட்டினார்.

எந்தவொரு பாட்டாளி வர்க்கக் கட்சியின் கொள்கையையும் வகுக்கும் பொழுது, பொதுவான நியமங்களை அடிப் படையாகக் கொள்ள வேண்டும், அந்தந்த நாட்டின் திட்ட வட்டமான தனிச் சிறப்புக்களையும் மனத்தில் கொள்ள வேண்டும் என்று சுட்டிக் காட்டினார் எங்கெல்ஸ். ''இந்தக் கொள்கையின் சிறுசிறு நுணுக்கங்கள் ஒவ்வொரு நாட்டின் தனித்தனி இயல்புகளைப் பொறுத்து வேறுபடலாம். ஆனால், உழைப்புக்கும் மூலதனத்திற்கும் இடையே நிலவும் உறவுகள் எல்லா நாடுகளிலும் ஒன்றே ஆனதாலும், உடைமையாளர் வர்க்கங்கள் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் மீது அரசியல் ஆதிக்கம் செலுத்துவது எங்கெங்கும் ஒரேமாதிரி இருப்பதாலும், பாட்டாளி வர்க்கக் கொள்கையின் கோட்பாடுகளும் இலக்கும் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாய்த்தான் இருக்கும். குறைந்த பட்சம், எல்லா மேலை நாடுகளிலும் இப்படி இருக்கும்.''

1871 செப்டம்பரில் நடந்த, அகிலத்தின் லண்டன் மாநாட்டுக் கூட்டத்தையொட்டி கடுமையான பணிகளை மேற்கொண்டார் எங்கெல்ஸ். மாநாட்டு நிகழ்ச்சி நிரலை முடிவு செய்யும் உபகமிஷனுக்கு அவர் தலைவராய் இருந்தார். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கை பற்றிய தமது உரையில், அரசியலிலேயே தொழிலாளர்கள்

கலந்து கொள்ளக் கூடாது என்று உபதேசிப்பது, பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கைக்குப் பெரிய முக்கியத் துவத்தைத் தந்துள்ள பாரிஸ் கம்யூனுக்குப் பின்னுல் குறிப் பாக, எவ்வளவு அபத்தமானது என்று மாநாட்டுப் பிரதிநிதி களுக்கு எடுத்துக் காட்டினுர் எங்கெல்ஸ். ''வர்க்கங்களை ஒழித்துக்கட்ட நாம் விரும்புகிருேம். இந்த இலக்கை எட்டு வதற்கான சாதனம் எது? பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கம். இது தெளிவுக்கு மெல் தெளிவாகி இருக்கையில், அரசியலில் கலந்து கொள்ளக் கூடாது என்று நம்மிடம் சொல்லுகிருர்கள்.'' உடைமையாளர் வர்க்கங்களின் கூட் டாட்சிக்கு எதிராக, சுயேச்சையான ஒரு அரசியல் கட்சி யாகத் தன்னை ஒழுங்கமைத்துக் கொண்டுதான் பாட்டாளி வர்க்கம் ஒரு வர்க்கமாகச் செயல்பட முடியும் என்றும், சமு தாயப் புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றவும், வர்க் கங்களை ஒழிப்பது என்ற அதன் கடைசிக் குறிக்கோளை அடை யவும் இந்தப் பாட்டாளி வர்க்கக் கட்சி மிகமிக அவசியம் என்றும் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம் கோடிட்டுக் காட்டியது.

மார்க்சியம் வெற்றி வாகை சூடியதை முரசறைந்த இந்த லண்டன் மாநாட்டுத் தீர்மானத்தைக் கண்டு பெருங் கோபம் கொண்டார்கள் பகூனிஸ்டுகள். முற்றிலும் தன்னிச்சையான ''சுயாட்சிக்'' குழுக்களின் ஒரு இணைப்பாகவும், பல்வேறு போக்குகள், பிரிவுகளின் ஒரு கலப்படமாகவும் அகிலத்தை உருமாற்றவும், அதன் போராட்டத் தலைமையகமாக இருந்த பொதுக் குழுவை ஏதோ ஒரு ''தபால் பெட்டியாகவும்'' தகவல் நிலையமாகவும் உருமாற்றிவிடவும் முயன்ற பகூ னிஸ்டுகள் ''அதிகாரத்தைத் திருடிக் கொண்டுவிட்டது'' பொதுக் குழு என்று குற்றம் சாட்டினர், ''ஜெர்மானியர்கள் சர்வாதிகாரம்'', குறிப்பாக மார்க்சின் சர்வாதிகாரம் அகிலத் தில் ஓங்கி நிற்பதாகக் கூச்சலிட்டனர். மார்க்சையும் பொதுக் குழுவையும் அவதூறுகளால் அபிஷேகம் செய் தனர். மாநாட்டு முடிவுகளுக்குக் களங்கம் ஏற்படுத்தி அகி லத்தை உள்ளிருந்தே உடைத்தெறிவதற்கு பகூனிஸ்டுகள் செய்யும் முயற்சிகளுக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தின் உருக்கனைய கட்டுப்பாட்டுக்காக தமது கடிதங்களில் எங் கெல்ஸ் போராடுகிருர்.

லண்டன் மாநாட்டுக்குப் பின், பகூனிஸ்டுகளின் செல்வாக்கு வலுவாக இருந்த இத்தாலிக்கும் ஸ்பெயினுக்கும் மீண்டும் செயலாளர்-கடிதத் தொடர்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கெல்ஸ், லண்டன் மாநாட்டின் தீர்மானங்களைப் பிரசாரம் செய்வதிலும், பகூனிஸ்டுகளின் அராஜகவாதச் சித்தாந்தத்தாலும் நாசவேலைகளாலும் விளைகின்ற தீமையை அம்பலப்படுத்துவதிலும் மகத்தான பணி புரிந்தார்.

''ஆட்சி அதிகாரம்'', ''அதிகார உரிமை'', மையப்படுத்தல், கட்டுப்பாடு ஆகிய பகூனிஸ்டுகளின் கூப்பாட்டிற்கு, தமது வல்லமை அனைத்தையும் ஒன்று கூட்டி, கடிதங்களிலும் கட்டுரைகளிலும் பதிலளித்து, அக்கூப்பாடுகளுக்கு ஆணியறைந்தார் எங்கெல்ஸ்: ''மையப்படுத்தலும் அதிகார உரிமையும் தேவையான அளவு இல்லாமல் போனதுதான் பாரிஸ் கம்யூனின் உயிருக்கு உலை வைத்தது... அதிகார உரிமை, மையப்படுத்தல் என்பவை பற்றி, அவை எந்தச் சூழ்நிலைகளிலும் கண்டனத்துக்குரிய இரண்டு தனித்தனி விஷயங்கள் என்பது போல யாராவது என்னிடம் சொல்லும் பொழுது, அப்படிப் பேசுபவர்கள் ஒன்று புரட்சி என்பது என்ன என்று அறியாதவர்களாக இருக்க வேண்டும் அல்லது அவர்கள் வெறும் வார்த்தைகளில்தான் புரட்சி வீரர்களாயிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.''*

பகூனினது தத்துவார்த்தக் கண்ணோட்டங்களை, முதன்மையாக அரசு பற்றிய அவரது கருத்துக்களை பல்வேறு கடிதங்களிலும் கட்டுரைகளிலும் கண்டனம் செய்கிறார் எங்கெல்ஸ். மூலதனமோ வர்க்க முரண்பாடுகளோ சமூகத்தின் பிரதானமான கொடுமையாக இல்லை எனவும் அரசுதான் இத்தகைய கொடுமையாக இருக்கிறது என்றும், இதுவே ஒழிக்கப்பட வேண்டியது என்றும் எதிர்காலத்தில் அகிலத்தின் அமைப்பு ஒன்றே அரசிற்கு பதிலாக இருக்க வேண்டும் என்றும் பகூனின் கருதினார். எதிர்காலச் சமுதாயம் பற்றிய அராஜகவாதக் கருத்துக்களைக் கண்டன விமர்சனம் செய்த எங்கெல்ஸ், மிலானில் இருந்த அகிலப் பிரிவின் அமைப்பா

---

* K. Marx and F. Engels, *1872*, *Selected Works*, *Vol. 2*, Moscow, pp. 332-33.

ளர் தியோதர் கூனேவுக்கு எழுதினர்: ''இந்தச் சமூகத்தில் முதன் முதலாக எந்த விதமான அதிகார உரிமையும் இருக்காது, ஏனெனில், அதிகார உரிமை, அதாவது அரசுதான், அப்பட்டமான கொடுமையாயிற்றே. (உறுதியான மனவுறுதியும், ஒருமுகப்பட்ட இறுதியான நிர்வாகம் ஒன்றும் இல்லாமல், வழி காட்டும் அமைப்பு இல்லாமல் ஆலைகளை இயக்கவும் ரயில்களை ஓட்டவும் கப்பல்களை இயக்கவும் மக்கள் என்ன செய்வார்கள்? இது பற்றி அவர்கள் நமக்கு ஒன்றும் சொல்லுவதில்லை.)... ஒவ்வொரு தனி நபரும், ஒவ்வொரு சமுதாயக் குழுவும் சுய ஆட்சி பெற்றவை. ஆனல், சமுதாயமானது, அது இரண்டே இரண்டு நபர்களைக் கொண்டதாக இருப்பினும், தமது சுயாட்சியின் காரணமாக அதிலுள்ள ஒவ்வொருவரும் எதிலாவது விட்டுக் கொடுக்காமல் எப்படி இருக்க முடியும், இது பற்றியும் பகூனின் மீண்டும் மௌனம் சாதிக்கிறர்.''*

தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இருந்த மார்க்சியத்திற்கு விரோதமான எல்லாச் சக்திகளுக்கும் ஒரு ஈர்ப்புமையமாக பகூனினது ''கூட்டணி'' விரைவில் மாறியது. ஆங்கிலேயத் தொழிற் சங்கத்தில் இருந்த மிதவாத முதலாளிகள், லஸ்ஸாலிய அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்திலிருந்த ''பிரஷ்ய-மன்னர் சோஷலிஸ்டுகள்'' இவர்கள் எல்லாம் தம்மிடையே இருந்த கருத்து வேற்றுமைகளை மறந்து மார்க்சியத்திற்கு எதிராகப் போராடுவதற்கு பகூனிஸ்டுகளுடன் சேர்ந்து கொண்டனர். அகிலத்திற்கு எதிராகப் போர் தொடுத்துள்ள நாடுகளை ஒன்று சேர்த்த ஐரோப்பியப் பிற்போக்குடன் கூட்டுச் சேர்ந்து கொண்டனர் பகூனிஸ்டுகள். இவர்களில் சிலர் போலீசுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தனர்.

அகிலத்தின் மிக ஆபத்தான பகைவனுக இருந்த பகூனிசத்தை எதிர்த்து நடந்த போராட்டத்தில் அகிலத்தின் ருஷ்யப் பிரிவிலிருந்து பலமான ஆதரவு மர்க்சுக்கும் எங்கெல்சுக்கும் கிட்டியது. இப்பிரிவின் அமைப்பாளர்களாய் இருந்தவர்களும் மாபெரும் புரட்சிகர ஜனநாயகவாதிகளான

---

* *Engels' Letter to Theodor Cuno on January 24, 1872;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 336.

செர்னிஷேவ்ஸ்கி, தப்ரல்யூபவ் ஆகியோரின் கருத்துக்களால் பயிற்றுவிக்கப்பட்டவர்களுமான ருஷ்யக் குடியேற்றக்காரர் கள் அகிலத்தின் பொதுக் குழுவில் தம்மைப் பிரதிநிதித் துவப்படுத்தும்படி மார்க்சுக்கு வேண்டுகோள் விடுத்தனர். 1870 மார்ச் 24ல் மார்க்ஸ் எழுதிய பதில் கடிதத்தில், ருஷ்யப் பிரிவு அகிலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது குறித்தும் அதன் பிரதிநிதியாக இருப்பதற்குத் தமக்குச் சம்மதமே என்றும் எழுதினுர். பகூனினும் அவரது ஆதரவாளர்களும் ருஷ்யாவிலும் நடத்தி வந்த சீர்குலேவு, நாசவேலேகள் பற்றிய ஆவணங்களை மார்க்ஸ், எங்கெல்சின் உபயோகத் திற்காகத் தந்து ருஷ்யப் பிரிவு பின்னர் பெரிய உதவி நல்கியது.

பகூனினது சூழ்ச்சியை அம்பலப்படுத்துவதற்காக, மார்க்ஸ், எங்கெல்சால் எழுதப்பட்ட **அகிலத்தில் பிளவுகள் பற்றிய கற்பனே** என்னும் ரகசியச் சுற்றிக்கையைத் தனது பிரிவுகள் அனைத்துக்கும் பொதுக் குழு அனுப்பி வைத்தது. இந்தச் சுற்றறிக்கை பகூனினது இரட்டை வேடத்தையும் பிளவு வேலேகளேயும் தோலுரித்துக் காட்டியது. அகிலத்தைக் குலேக்கும் நோக்கத்துடன் முன்வைக்கப்பட்ட பகூனினது ''சுயாட்சி'' முழக்கத்தைச் சுற்றறிக்கை வன்மையாகக் கண்டிக்கிறது. உடலெங்கும் ஆயுதந் தாங்கி பல்லேக் காட்டிக் கொண்டு நிற்கும் முதலாளித்துவத்திற்கு முன்னே, பாட் டாளி வர்க்கத்தை நிராயுதபாணியாக்கும் ''அராஜகம்'' என்னும் முழக்கத்தின் துரோகத்தனத்தை அம்பலப்படுத்தி யது சுற்றறிக்கை.

ஸ்பெயினில் அகிலத்தினுள்ளே ரகசியமாக பகூனினது அமைப்பான கூட்டணி இயங்கி வருகிறது என 1872 ஏப்ர லில் லஃபார்க்கிடமிருந்து எங்கெல்சுக்குத் தகவல் வந்தது. ஹேக் காங்கிரசிற்காக நடக்கும் தயாரிப்பு வேலேயை ஒட்டி இந்தத் தகவலுக்கான ஆவண பூர்வமான சான்றுகள் சேகரிப் பது குறிப்பாக அவசியமாயிற்று. இந்தப் பொறுப்பை முக்கியமாக எங்கெல்ஸ் ஏற்றுக் கொண்டார்.

ஹேக் காங்கிரசின் தயாரிப்பு வேலேகளுக்காகத் தீவிர மாகப் பணி புரியத் துவங்கினுர் எங்கெல்ஸ். காங்கிரசிற்கான நகல் விதிகளேத் தயாரிக்கின்ற உபகமிஷனின் தலேவராக இருந்தார் எங்கெல்ஸ். அப்போது பல்வேறு பிரிவுகளுடன்

பெருமளவு கடிதப் போக்குவரத்து நடத்துகிருர். இக்கடிதங்களில் வெளிப்படையாகவும் ரகசியமாயும் இயங்குகின்ற பகூனிஸ்டு ஏஜன்டுகளை அம்பலப்படுத்துகிருர். பொதுக் குழுவைச் சுற்றி சிறந்த சக்திகளை சேர்ப்பதற்கு முயற்சி செய்கிருர், நிறுவனப் பணிகளை வெகு சுறுசுறுப்புடன் மேற்கொள்கிருர். காங்கிரசில் மார்க்ஸ் ஆதரவாளர்கள் ஒன்றுபட்டு நம்பிக்கையுள்ள பெரும்பான்மையாகச் செயல்படுமாறு பார்த்துக் கொள்வதற்காக ஒவ்வொரு நபரையும் ஒவ்வொரு வாக்கையும் கணக்கிட்டுப் பார்க்கிருர் எங்கெல்ஸ்.

இந்த நேரத்தில்,ஹேக் காங்கிரசின் வெற்றிக்கு முன்னேடியாகச் செய்ய வேண்டிய பணிகள் சிலவற்றில் எய்செனுஹ்வாதிகள் எங்கெல்சுக்கு தொல்லை கொடுத்து வந்தனர். அகிலத்தின் கருத்துக்களை ஜெர்மனியில் பிரசாரம் செய்வதற்கு எய்செனுஹ்வாதிகளின் தலைவர்களான பேபெலும், லீப்க்னெஹ்டும் நிறையப் பணியாற்றிய போதிலும், சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பின் வேலைகளில் போதுமான அளவுக்கு பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்பதற்காக அடிக்கடி எங்கெல்ஸ் இவர்களைக் கடிந்து கொண்டார். காங்கிரசில் ஜெர்மன் தொழிலாளர்களை இன்னும் முழுமையாகப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு லீப்க்னெஹ்ட் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், இன்னும் துடியாக அவர் வேலை செய்ய வேண்டும் என்றும் எங்கெல்ஸ் பொதுக் குழுவின் சார்பில் உறுதியாகக் கோரினர்.

காங்கிரஸ் தொடங்குவதற்கு முன்னல் பகூனிஸ்டுகள் சீர்குலைவு வேலைகளை நிறையச் செய்த போதிலும் மார்க்ஸ், எங்கெல்சின் ஆதரவாளர்கள் காங்கிரசில் பெரும்பான்மை பெற்றுர்கள்.

மார்க்ஸ், எங்கெல்சின் ஆதரவாளர்களில் ஒருவரான தியோதர் கூனே அந்த நாட்களில் எங்கெல்ஸ் எப்படி இருந்தார் என்பது பற்றிப் பின்வருமாறு சொல்லுகிருர்:

''உயரமாய், ஒல்லியாய் ஆனுல் ஆரோக்கியமாய்க் காணப்பட்ட இந்த மனிதர், எடுப்பான முகச் சாயலும் நீண்ட செம்பட்டை தாடியும் கொண்டு நீல நிறக் கண்கள் படைத்தவராய் இருந்தார். அவரது அசைவுகளும், பேச்சும் விரைவானவையாயும் தெளிவானவையாயும் இருந்தன. தமக்கு எது தேவை என்பதையும், தனது வார்த்தைகளும்

செயல்களும் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் திட்டவட்டமாக உணர்ந்தவர் இந்த மனிதர் என்று சுற்றிலு மிருப்பவர்களுக்கு புரிந்தது. அவருடன் உரையாடுகிற ஒவ்வொருவரும் அறிவூட்டும் புதிய விஷயங்களை நிறையத் தெரிந்து கொள்வார்கள். அவரது மூளை விஞ்ஞான அறிவு களின் பொக்கிஷப் பெட்டி. ஒரு டஜன் மொழிகளுக்கு மேல் எங்கெல்ஸ் அறிந்திருந்தார்...''*

1872 செப்டம்பர் 2-7ல், பகூனிஸ்டுகளுக்கு எதிராக நடந்த கடுமையான போராட்டத்தின் ஊடே நடைபெற்றது காங்கிரஸ். பகூனிஸ்டுகளின் விருப்பத்திற்கு மாருக, வெற்றி கரமாக சோஷலிசப் புரட்சி நிறைவேறுவதற்கு மிக முக்கிய மான அடிப்படைத் தேவை அரசியல் போராட்டம் நடத்து வதும் பாட்டாளி வர்க்கக் கட்சி அமைப்பதுமே ஆகும் என்று காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. 1861ல் நடந்த லண்டன் மகாநாட்டில் நிறைவேற்றப் பட்ட, **தொழிலாளி வர்க்கத் தின் அரசியல் பணிகள் பற்றி** என்னும் தீர்மானம் அகிலத்தின் விதிகளில் சேர்க்கப்பட்டு அதன் உறுப்பினர்கள் ஒவ்வொரு வரையும் கட்டுப்படுத்தும் சட்டமாயிற்று. அகிலத்தில் பகூ னிஸ்டுகள் செய்து வந்த நாச வேலைகளைப் பற்றி விசாரிக்கும் கமிஷன் ஒன்று தியோதர் கூனேவின் தலைமையில் அமைக்கப் பட்டது. பொதுக் குழுவின் பெயரில் ஹேக் காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்ட சோஷலிச ஜனநாயகத்தின் கூட்டணி பற்றிய அறிக்கையில் இது பற்றி நிறையத் தகவல்கள் அடங்கி உள்ளன. பல்வேறு நாடுகளில் இருந்த அகிலத்தின் பிரிவு களில் பகூனிஸ்டுகள் நடத்தி வந்த இரட்டை நாக்கு அரசிய லுக்கும், கூறி வந்த பொய்களுக்கும், செய்து வந்த பிளவு வேலைகளுக்கும் மறுக்க முடியாத சான்றுகள் எங்கெல்சால் எழுதப்பட்ட இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. ''சுரண் டுகின்ற அமைப்பை உடைத்தெறியும் குறிக்கோளின்றி, ஆனல் அச்சுரண்டல் அமைப்பை எதிர்த்து மிகப் பெரும் ஆற்றலுடன் போராடி வரும் தோழமை அமைப்பை, உள்ளிருந்தே உடைத்தெறிவதற்கு ரகசியச் சூழ்ச்சிகள் செய்யப்படுவதை, தொழிலாளி வர்க்கம் தனது போராட்ட

---

* மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய நினைவுக் குறிப்புகள், பக்கம் 212.

வரலாற்றில் முதல் முதலாகக் காண்கிறது''* என்று இந்த அறிக்கையில் எங்கெல்ஸ் எழுதினார்.

விசாரணைக் கமிஷன் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில், இந்தக் கூட்டணியின் பிரபலமான பிரதிநிதிகளான பகூனினையும் கில்யோமையும் அகிலத்திலிருந்து விலக்குவது என்று காங்கிரஸ் முடிவு செய்தது. ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் துரோகிகள் மீது நடந்த இந்த முக்கியமான நீதி விசாரணைக் கூட்டத்தைப் போல கம்யூனின் வேறெந்தக் கூட்டமும் இவ்வளவு அதிர்ச்சி தரும் உளப் பதிவைத் தமக்கு ஏற்படுத்தியது இல்லை என்று கம்யூன் வீரர்கள் தம்மிடம் கூறியதாக எங்கெல்ஸ் பின்னர் சொன்னார்.

இவ்வாறாக, பகூனிஸ்டுகளுடன் நடந்த நெடிய போராட்டத்திற்கு இறுதி முடிவு ஹேக் காங்கிரசில் கிட்டியது. தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பணிகளுக்கும் பாட்டாளி வர்க்கக் கட்சிக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும் எதிராகப் போராட்டம் நடத்தி, தொழிலாளர் இயக்கத்தைப் பின்னுக்கு இழுத்து, சீர்குலைவுப் பிளவு வேலைகளால் முதலாளித்துவத்திற்கு மதிப்பிற்கரிய சேவை செய்து வந்த அராஜகவாதத்திற்கு எதிராக மார்க்சியம் சித்தாந்த ரீதியாக வெற்றி வாகை சூடியது.

அமைப்பு, வேலைத்திட்டம் பற்றிய கோட்பாடுகளில் அராஜகவாதத்திற்கும் சீர்திருத்தவாதத்திற்கும் எதிராக மார்க்சியம் பெற்ற மகத்தான வெற்றிக்கு ஹேக் காங்கிரசின் முடிவுகள் ஒரு சான்றாகும்.

பொதுக் குழுவின் இருப்பிடத்தை நியூயார்க்குக்கு மாற்ற வேண்டும் என்ற ஆலோசனையை முன் வைத்து அதற்கான அடிப்படைகளை விளக்கி ஹேக் காங்கிரசில் எங்கெல்ஸ் பேசினார். ஐரோப்பிய அரசாங்கங்கள் அகிலத்தை வேட்டையாடுவது அதிகமாகி வந்ததும், அகிலத்தின் பிரிட்டிஷ் கூட்டமைப்பு உட்பட அகிலத்தின் சில பிரிவுகளில் கூடு கட்டிக் கொண்டிருந்த அராஜகவாதிகளும் மற்ற குட்டி முதலாளித்துவ சக்திகளும் புரிந்த நாசவேலைகளும் பிளவு வேலைகளுமே இதற்குக் காரணம்.

---

* Engels, *The General Council's Report on the Alliance of Socialist Democracy;* K. Marx and F. Engels, *Works,* Russ. ed., Vol. XIII, Part 2, p. 497.

மார்க்ஸ், எங்கெல்சின் தலைமையை அகிலம் இழந்து விடக்கூடாது என்பதற்காக பிரதிநிதிகளில் பலர் இதற்கு மறுப்புத் தெரிவித்த போதிலும், மார்க்ஸ், எங்கெல்சின் வற்புறுத்தலின் பேரில் பொதுக் குழு இருப்பிடத்தை நியூ யார்க்குக்கு மாற்றுவது என்று காங்கிரஸ் தீர்மானித்தது.

ஹேக் காங்கிரஸ் முடிந்த பின்னர், நியூயார்க்கில் இருந்த பொதுக் குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காகப் பெரு மளவு வேலை செய்தார் எங்கெல்ஸ். பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் உள்ள தொழிலாளர்களின் தோழமை அமைப்புப் பிரிவுகளில் நடந்து வரும் வேலைகளின் நிலைமை பற்றி, அகிலத்தின் பொதுச் செயலாளராக இருந்த ஸோர்கேக்கு முறையாகவும் விவரமாகவும் தொடர்ந்து தகவல்கள் தந்தார் எங்கெல்ஸ். மார்க்சிய விரோதிகளான அராஜகவாதிகளுக்கு எதிராக அவர் தொடர்ந்து போராடினார். பகூனிஸ்டுகளின் கூட்டனிக்கு எதிராக ஆவணங்கள் வெளியிட வேண்டும் என்று ஹேக் காங்கிரஸ் செய்த முடிவினை ஒட்டி, **சோஷலிச ஜனநாயகத்தின் கூட்டணியும் சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமையும்** என்னும் பிரசுரத்தை, லஃபார்கின் உதவியுடன் மார்க்சும் எங்கெல்சும் எழுதி 1873ல் வெளியிட்டனர். இந்தப் பிரசுரத்தில், கூட்டணியின் வரலாறும், பல்வேறு நாடுகளில் அது புரிந்து வரும் சீர்குலைவு வேலைகளும் பற்றிய அறிக்கை அடங்கியுள்ளது. இப்பிரசுரத்திற்குப் பிற்சேர்க்கையாக கூட்டணியின் ஆவணங்களும் தரப்பட்டிருந்தன. காங்கிரசில் விசாரணைக் கமிஷன் உபயோகித்த ஆவணங்களைத் தவிர, கூட்டணி ருஷ்யாவில் மேற்கொண்ட நடவடிக்கைகள் உட்பட, ஹேக் காங்கிரசிற்குப் பின் பகூனிஸ்டுகள் மேற்கொண்ட பகிரங்கமான பிளவு வேலைகள் பற்றிய புதிய ஆவணங்களும் இந்தப் பிரசுரத்தில் தரப்பட்டன.

கூட்டணி பற்றிய புதிய ஆவணங்கள் பிரசுரமானது அராஜக ''அகிலத்திற்குக்'' கொடுக்கப்பட்ட புதிய அடியாகும். இதனல், அளவற்ற அவமானமடைந்த பகூனின், தாம் பொது வாழ்விலிருந்தே விலகிக் கொள்வதாக அறிவித்தார்.

பகூனிஸ்டுகளுக்கு எதிரான போராட்டத்தில், அடித்து வீழ்த்தும் விமர்சனத்துடன் பல கட்டுரைகள் எழுதினார் எங்கெல்ஸ். உதாரணமாக, **அதிகார உரிமை பற்றி**, **பகூனிஸ்டுகள் பணியாற்றுகிறார்கள்** என்னும் கட்டுரைகள் அராஜ

கத்தை நொறுக்கித் தள்ளின. பகூனிஸ்டுகளைப் பற்றிய மேற் சொன்ன இரண்டாவது கட்டுரையில், 1873ல் நடந்த ஸ்பெயின் எழுச்சியில் பகூனிஸ்டுகள் வகித்த பங்கினை ஆய்வு செய்து, ''புரட்சியை எப்படிச் செய்யக் கூடாது என்பதற்கு ஒரு அழகான மாதிரியை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்'' பகூனிஸ்டுகள் என்ற முடிவுக்கு வந்தார்.

இவ்வாறாக, அராஜகக் ''கோட்பாடுகள்'' அகிலத்தில் நிர்மூலமானதைத் தொடர்ந்து, நடைமுறைக்கும் அவை லாயக்கற்றவை என்று மெய்ப்பிக்கப்பட்டன.

* * *

அகிலத்தில் மார்க்சியம் சித்தாந்த வெற்றி ஈட்டிய அதே நேரத்தில், சர்வதேசச் சூழல் அடியோடு மாறுதல் அடைந்திருந்தது. சர்வதேசத் தொழிலாளர்களது தோழமை அமைப்பின் வேலைகளில் இந்த மாற்றங்கள் பிரதிபலிக்காமல் இருக்க முடியவில்லை.

''ஏகாதிபத்திய லாப வேட்டையால் சீர்கேடடைந்த பிரிட்டிஷ் தொழிலாளி, பாரிசில் முறியடிக்கப்பட்ட கம்யூன், ஜெர்மனியில் அப்பொழுதுதான் (1871) வெற்றியடைந்த முதலாளித்துவ ஜனநாயக இயக்கம், நூற்றாண்டுத் தூக்கத்தில் இருந்த பாதிப் பண்ணையடிமை ருஷ்யா''—கம்யூன் தோல்வி அடைந்த பின் வந்த காலத்தை இவ்வாறு உருவகப்படுத்திக் காட்டினார் லெனின். ''வந்துள்ள காலத்தைப் பற்றி அறிந்து கொண்ட மார்க்சும் எங்கெல்சும், சர்வதேச நிலைமையைச் சரியாகப் புரிந்து கொண்டனர்; சமுதாயப் புரட்சியின் தொடக்கம் மெதுவாக நெருங்கி வருவதில் செய்ய வேண்டிய பணிகளை உணர்ந்து கொண்டனர்''* என்றார் லெனின். மெதுவான தயாரிப்புப் பணிகள், சக்திகளைச் சேர்ப்பது, ஒருங்கு கூட்டுவது, தனித்தனி நாடுகளில் பாட்டாளி வர்க்கக் கட்சிகளை நிறுவுவது ஆகிய பணிகளே இப்போது முன்னணிக்கு வந்தன.

---

* Lenin, *The Tasks of the Proletariat in Our Revolution;* V. I. Lenin, *Marx-Engels-Marxism*, Moscow 1953, p. 418.

தொழிலாளி வர்க்கத்தின் முன் வரலாறு வைத்துள்ள புதிய பணிகளை நிறைவேற்றுவதற்கு அகிலத்தின் பழைய வடிவம் பொருத்தமானதாய் இருக்கவில்லை.

ஆனல், தனது மாபெரும் சரித்திரப் பணியை அகிலம் சரிவர நிறைவேற்றித் தந்தது. மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் நடத்திய சமரசத்திற்கிடமற்ற, இடையருத போராட்டத்தின் பயனுக, மார்க்சியத்துக்கு முந்திய எல்லா வகையான சோஷலிசத்துக்கும், அராஜகவாதத்துக்கும், சீர்திருத்தவாதத்திற்கும் மரண அடி கொடுக்கப்பட்டது.

மார்க்சின் போதனையைப் பிரசாரம் செய்வதில் பெற்ற வெற்றிகள், எதிர்காலத் தொழிலாளி வர்க்கக் கட்சிகளுக்கு உட்கருவாய் விளங்கப் போகிற தொண்டர்களுக்குத் தரப்பட்ட பயிற்சி ஆகியவை பல்வேறு நாடுகளில் வெகுஜன சோஷலிஸ்டுக் கட்சிகள் அமைவதற்கு ஆதாரமாக இருந்தன. ''முதலாவது அகிலம் தனது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை நிறைவேற்றிவிட்டது. உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் தொழிலாளர் இயக்கம் அளவிடற்கரிய முறையில் மாபெரும் வளர்ச்சி பெறும் காலப்பகுதிக்கு அது வழிகோலிவிட்டது. இந்தக் காலப்பகுதி உண்மையிலேயே தொழிலாளர் இயக்கம் விரிவடைந்து வளர்ந்த காலப்பகுதியாகும்; தனித்தனி தேசிய அரசுகளில் திரளான சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சிகள் நிறுவப்பட்ட காலப்பகுதியாகும்''* என்றெழுதினுர் லெனின்.

சர்வதேசத் தொழிலாளர்களின் தோழமை அமைப்பாக உருக் கொண்டிருந்த பாட்டாளி வர்க்க சர்வதேசிய ஒற்றுமை, தொழிலாளர் இயக்கத்தின் மேலும் உயர்வான கட்டத்திற்கு உரித்தான புதிய வடிவங்களை மட்டும் பெற்று, தொடர்ந்து வளர்ந்து வலிமை பெற்று வந்தது.

---

* வி. இ. லெனின், கார்ல் மார்க்ஸ்; வி. இ. லெனின், **மார்க்ஸ்-எங்கெல்ஸ்-மார்க்சியம்,** மாஸ்கோ 1976, பக்கம் 12.

8

பாரிஸ் கம்யூனுக்கும் முதல் அகிலத்துக்கும் பின்னர் எங்கெல்ஸ். மார்க்சின் மறைவு (1883)

பாரிஸ் கம்யூன் தோல்வியடைந்து, முதல் அகிலம் கலைக்கப்பட்ட பின்பு வந்த புதிய வரலாற்றுக் கட்டம், புரட்சிகள் ஏதுமற்ற ''அமைதியான'' காலமாய் மாறுபட்டு இருந்தது. ''மேற்குலகு முதலாளித்துவப் புரட்சிகளை நடத்தி முடித்து விட்டது. கிழக்குலகு இன்னும் அந்த மட்டத்துக்கு உயர்ந்தாக வில்லை. வரவிருந்த மாற்றங்களுக்காக ''அமைதி வழியில்'' தயாரிப்புகள் செய்து கொள்ளும் கட்டத்தினுள் மேற்குலகு அடியெடுத்து வைத்தது''* என்றார் லெனின்.

ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்று அமைப்பதற்கும், சோஷலிசப் புரட்சிக்காகவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காகவும் வருங்காலத்தில் நடக்க இருக்கும் சமர்களுக்கு அக்கட்சிகளைத் தயார் செய்வதற்கும் தமது கவனம் அனைத்தையும் செலுத்துகிறார்கள் மார்க்சும் எங்கெல்சும். வேலைத்திட்டத்தை வகுப்பதற்கு, போர்த்தந்திரத்தையும் நடைமுறை உத்தியையும் வரையறுப்பதற்கு ஆலோசனைகள் கூறி உதவுவதன் மூலம் இக்கட்சிகளுக்குத் தலைமை வகிக்கும் தொண்டர்களைப் பயிற்றுவிக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டினுடைய தனிச் சிறப்புக்கள், அதன் பொருளாதாரம், வர்க்கங்களிடையே நிலவும் பலாபல நிலைமைகள், குறிப்பிட்ட நாட்டில் தொழிலாளி வர்க்கம் பெற்றுள்ள அனுபவம், இயக்கத்தின் தத்துவார்த்த உறுதி, அந்த நாட்டின் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் சோஷலிசத்தையும் ஒன்று சேர்க்க விடாமல் அதற்கு எதிர் நிற்கும் இடர்

---

* வி. இ. லெனின், வரலாற்றில் கார்ல் மார்க்ஸ் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட வருங்காலம்; வி. இ. லெனின், மார்க்ஸ்-எங்கெல்ஸ்-மார்க்சியம், மாஸ்கோ *1976*, பக்கம் *119*.

கள், அந்த நாட்டின் பாட்டாளி வர்க்கக் கட்சியைப் பொது மக்கள் கட்சியாக வளர விடாத தடைகள் ஆகிய அனைத்தை யும் மிகக் கவனத்துடன் மனத்தில் கொள்கிறார்கள் மார்க் சும் எங்கெல்சும்.

இயக்கவியல் வழி முறையை இங்கே அவர்கள் பிரயோ கிக்கிறார்கள். பல்வேறு நாட்டுத் தொழிலாளி வர்க்க இயக் கத்தை அணுகும் பொழுதும் இந்த இயக்கவியல் வழி முறை யைப் பிரயோகிப்பதன் அவசியத்தை லெனின் அடிக்கடி எடுத்துக் காட்டினார்: "...ஒருமித்த சர்வதேசப் பணியை அந்தந்த நாடும் நிறைவேற்றிட வேண்டிய ஸ்தூலமான முறையில் தேசிய வழியில் பிரத்தியேகமானவற்றையும் தேசிய வழியில் தனிச்சிறப்பானவற்றையும் அலசி ஆராய வேண்டும், தேடிப்பிடித்தாக வேண்டும், வருவது அறிந்து கூற வேண்டும், உணர்ந்து கொண்டாக வேண்டும்...*

பல்வேறு நாடுகளில் சோஷலிசக் கட்சிகளை உருவாக்க உதவி செய்த மார்க்சும் எங்கெல்சும், பாட்டாளி வர்க்கப் புரட்சிகரத் தத்துவம் கலப்படம் அற்றதாய் இருப்பதற்கும், கட்சி ஒரே வார்ப்பாய் இருப்பதற்கும், குட்டி முதலாளித் துவச் சந்தர்ப்பவாதச் சக்திகளைக் கட்சியிலிருந்து அப்புறப் படுத்துவதற்கும், அக்கட்சியின் தத்துவமும் நடைமுறையும் இணைந்து ஒன்றாய் இருப்பதற்கும் பிரதானமாய்ப் போராடி னர்.

பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தின் மூன்று வடிவங்களான, சித்தாந்தப் போராட்டம், அரசியல் போராட்டம், பொருளாதாரப் போராட்டம் ஆகியவற் றிற்கு இடையே உறுதியான தொடர்பு இருக்க வேண்டும் என்று ஜெர்மனியில் விவசாயிகளின் போர் (1874) என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையில் எங்கெல்ஸ் சுட்டிக் காட்டிய திலிருந்து புரட்சிகரத் தத்துவத்திற்கு எந்த அளவு அவர் முக்கியத்துவம் கொடுத்தார் என்பதைப் புரிந்து கொள்ள லாம். இந்த மூன்று வடிவங்களின் ஒற்றுமையில் தான் தொழி லாளி வர்க்க இயக்கத்தின் வல்லமையும் அதன் வெல்லற் கரிய தன்மையும் அடங்கி இருக்கின்றன என்று கண்டார் எங்கெல்ஸ்.

---

* வி. இ. லெனின், இடதுசாரி கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு, மாஸ்கோ, 1970, பக்கம் 125.

முதல் அகிலம் கலேக்கப்பட்டதைத் தொடர்ந்து, சர்வ தேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தை வழிநடத்தும் பணி மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் குறையாதது மட்டுமல்ல, அது மேலும் அதிகமானதுடன், இன்னும் சிக்கல் மிகுந்ததாயும் ஆயிற்று. பல்வேறு நாடுகளின் சோஷலிச இயக்கத்தினது அன்றாட வேலேகளில் வழிகாட்டுகின்ற, மார்க்சியத்திற்கு எதிராக பகிரங்கமாயும், பதுங்கி நின்றும் போராடும் விரோதிகளே முறியடிக்கின்ற பணியின் பிரதானமான பாரம் எங்கெல்சின் தோள்களிலே வீழ்ந்தது. இந்தக் காலத்தைப் பற்றி எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினர்: ''மார்க்சுக்கும் எனக்கும் இடையே இருந்த வேலேப் பிரிவின் காரணமாக, மார்க்ஸ் எழுதி வந்த பிரதானமான மாபெரும் நூலின் பொருட்டு, அவருக்கு நேரம் தருவதற்காக எங்களது கருத் துக்களேப் பத்திரிகைகளில் வெளியிடுகின்ற வேலேயும், எனவே குறிப்பாக, எங்களுக்கு விரோதமான கருத்துக்களுடன் போராடுவதும் என் பங்கிற்குக் கிடைத்த வேலேயாகும்.''* பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவது பற்றி எங் கெல்ஸ் கூறுவது பல்வேறு நாட்டுச் சோஷலிஸ்டுகளுடன் நடந்த கடிதப் போக்குவரத்தையும் குறிக்கும். இதில் பெரும் பகுதியை எங்கெல்ஸ் இப்போது செய்து வந்தார்.

நாடுகள் பலவற்றில் சோஷலிஸ்டுக் கட்சிகளேத் தோற்று விப்பதற்காக மார்க்சும் எங்கெல்சும் நடத்திய போராட் டத்தில், ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்திற்குத் தனி முக் கியத்துவம் கொடுத்தனர். இது ஒன்றும் தற்செயலானதல்ல. பிரெஞ்சு-பிரஷ்யப் போருக்கும், பாரிஸ் கம்யூனின் வீழ்ச் சிக்கும் பின்னே தொழிலாளர் இயக்கத்தின் ஈர்ப்பு மைய மாக ஜெர்மனி சில காலம் விளங்கியது.

பாரிஸ் கம்யூனுக்குப் பின்னர் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் தலேமைப் பாத்திரத்தை ஜெர்மன் தொழிலாளர் கள் வகிக்க வேண்டி நேர்ந்ததற்கான காரணங்களேயும், முதன் முதலாகப் பொதுமக்களின் சமூக ஜனநாயகக் கட்சியை அவர்களால் நிறுவ முடிந்ததற்கான காரணங் களேயும் தமது பல்வேறு கடிதங்களிலும் கட்டுரைகளிலும்

---

* Engels, *The Preface to the 2nd edition of the book Concerning the Housing Question;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 549.

எங்கெல்ஸ் ஆழமாக ஆய்வு செய்கிருர். இவற்றில் முக்கிய மான காரணங்களில் ஒன்று, பிரிட்டனுடனும், பிரான்சுடனும் ஒப்பிடுகையில் காலம் தாழ்ந்தும் புயல் வேகத்திலும் ஜெர் மனி தொழில் வளர்ச்சி அடைந்ததுதான் என்று எங்கெல்ஸ் கண்டார்.

தொழிற் புரட்சியின் ஆழம், இதையொட்டி வர்க்கப் போராட்டம் பெற்ற தீவிரம், தமது முன்னேர்களான பிரிட் டிஷ்காரர்களோ பிரெஞ்சுக்காரர்களோ முன்னெப்போதும் பெற்றிராத மார்க்சிய வேலைத்திட்டத்தை கையில் பெற்றிருந் தது, பிரெஞ்சு-பிரஷ்யப் போரின் போது ஜெர்மன் தொழி லாளர்கள் பேராண்மையுடன் மேற்கொண்ட முரண்பாடற்ற சர்வதேசியக் கொள்கை நிலை ஆகியவையே ஜெர்மானியப் பாட்டாளி வர்க்கம் முன்னணிப் படையாக இருந்ததற்குக் காரணமாகும் என்று எங்கெல்ஸ் கண்டார்.

இத்தகைய அனுகூலமான சூழ்நிலைமைகள் இருந்த போதி லும், தொழிலாளர் கட்சி ஒன்றை ஜெர்மனியில் நிறுவுகின்ற நிகழ்ச்சிப் போக்கு கொஞ்சம் கூட எளிதாகவோ சுலப மாகவோ இருக்கவில்லை. முதலாளிகளையும், யூங்கெர்களையும் எதிர்த்து, தொழிலாளி வர்க்க இயக்கத்தைத் தமது பைகளுக்குள் போட்டுக் கொள்ள அவர்கள் செய்த முயற்சி களை எதிர்த்து, கட்சிக்குள் ஊடுருவி வலதுசாரி, ''இடது சாரி'' சந்தர்ப்பவாதங்களாய் வெளிப்பட்ட குட்டி முத லாளித்துவச் செல்வாக்குகளை எதிர்த்துத் தொடர்ந்து போராட்டம் நடத்தியபடிதான் சுயேச்சையான தொழிலா ளர் கட்சி அமைக்கப்பட்டது.

தமது கடிதங்களிலும், பல்வேறு கட்டுரைகளிலும், லஸ் ஸாலியவாதத்துக்கு எதிராக அலுப்பு சலிப்பற்ற போராட் டம் நடத்தியவாறு, அதே நேரத்தில் எய்செனுஹ்வாதிகளின் முதிர்ச்சியற்ற தத்துவார்த்தக் கண்ணேட்டங்களையும், அரசி யல் தவறுகளையும் விமர்சித்தபடி, அவர்கள் செல்கின்ற பாதையை நேர்படுத்தியவாறு அவர்களுக்கு உதவி வந்தார் எங்கெல்ஸ்.

உதாரணமாக, எய்செனுஹ்வாதிகளின் அதிகார பூர்வப் பத்திரிகையான **மக்கள் அரசில்** *(Volksstaat)* முல்பெர்கர் என்ற மருத்துவர் 1872ல் வீட்டுவசதிப் பிரச்னை பற்றி எழு திய பல கட்டுரைகளில் அவர்களது முதிர்ச்சியின்மை வெளிப்

பட்டது. முல்பெர்கரின் கட்டுரைகளைப் பிரசுரித்தமைக்கு எய்செனுஹ்வாதிகளுக்கு வன்மையான ஆட்சேபம் தெரிவித்து விட்டு, **வீட்டு வசதிப் பிரச்னை பற்றி** *(1872-1873)* என்ற தலைப்பில் எழுதிய தர்க்க பூர்வமான பல கட்டுரைகளில் முல்பெர்கர் கட்டுரைகளுக்கு பதிலளித்தார் எங்கெல்ஸ். இக்கட்டுரைகள் பின்னர் பிரசுர வடிவில் வெளி வந்தன.

மெய்யறிவின் வறுமை என்ற நூலில் மார்க்ஸ் ஏற்கெனவே அடித்து வீழ்த்திய புரூதோனியக் கண்ணோட்டங்களை ஜெர்மனியில் வேரோட்டுவதற்குச் செய்யப்படும் முதல் முயற்சிதான் முல்பெர்கரின் கட்டுரைகள் என்று எங்கெல்ஸ் எடுத்துக் காட்டினார்.

கேடுகளுக்குக் காரணமான முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழித்துக் கட்டாமல், வீட்டுப் பற்றாக்குறை போன்ற, முதலாளித்துவத்தின் "மோசமான" அம்சங்களை மட்டும் அழித்து விடுகிற கற்பனுமயமான திட்டம் ஒன்றை, புரூதோனின் வழியில் முல்பெர்கர் தீட்டினார். வீடுகளில் வாடகைக்குக் குடியிருப்போர் ஒவ்வொருவரும், அந்த வீட்டின் சொந்தக்காரராகி விடுவர் என்றும் சமுதாயம் என்பது "சுதந்திரமான வீட்டுச் சொந்தக்காரர்களின் ஒரு கூட்டாகவே" இருக்கும் என்றும் முல்பெர்கர் கனவு கண்டார்.

நவீனப் பாட்டாளியைக் குட்டி உடைமையாளராக மாற்றி விடும் இத்தகைய திட்டங்கள் எப்படி நிறைவேற்ற முடியாதவையாய், பிற்போக்குத் தன்மையனவாய் உள்ளன என்பதை அம்பலப்படுத்திப் பின்வருமாறு எழுதினார் எங்கெல்ஸ்: "முதலாளித்துவ உற்பத்தி முறை இருந்து வருகின்ற வரை, தொழிலாளியின் தலைவிதி சம்பந்தப்பட்ட வீட்டுப் பிரச்னையையோ, வேறு ஏதாவது சமுதாயப் பிரச்னையையோ தனித்தனியாகத் தீர்க்க முயலுவது முட்டாள் தனம்; முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழித்துக் கட்டி, வாழ்க்கைச் சாதனங்களையும், உழைப்புச் சாதனங்களையும் தொழிலாளி வர்க்கம் தனது உடைமையாகவே ஆக்கிக் கொள்வதுதான் இதற்கெல்லாம் ஒரே தீர்வு."*

"வர்க்கங்களையும் அவற்றுடன் அரசையும் ஒழித்துக் கட்டுவதை நோக்கிச் செல்கிற பாட்டாளி வர்க்கத்தின்

---

* Engels, *Concerning the Housing Question;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 609.

அரசியல் நடவடிக்கையாலும்,இவ்வர்க்கத்தின் சர்வாதிகாரத் தாலும்தான்'' இதனை நிறைவேற்ற முடியும். ''கம்யூனிஸ்டு அறிக்கையிலேயே கூறப்பட்டு, அன்று முதல் எண்ணிறந்த தடவை திரும்பத் திரும்ப இது சொல்லப்பட்டு வந்திருக் கிறது.''*

முதலாளித்துவ சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தலைகளில் கொட்டி விடப்பட்ட எல்லாத் துன்பங்களையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் துடைத்தெறியும் என்பது மட்டுமல்லாமல், எல்லைக்கும் இறுதிக்குமாக முதலாளித்து வம் இட்டுச் சென்றுள்ள நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையில் நிலவும் முரண்பாட்டையும் அது வேரோடு சாய்க் கும். புருதோனிஸ்டுகள் பிரசாரம் செய்து வந்த சிறு நில வுடைமைகளைக் காக்க வேண்டும் என்னும் பிற்போக்குத்தன மான திட்டங்களைத் தோலுரித்துக் காட்டிய எங்கெல்ஸ், ''கூட்டுறவு கொண்டுள்ள உழைப்பாளர்களின் உதவியுடன் பெருமளவில் பயிர்த்தொழில் செய்தல் வேண்டும், இதன் மூலமாகத் தான் இயந்திரங்கள் போன்ற நவீன சாதனங்களை உபயோகிக்க முடியும், இதனால் சிறு விவசாயிகளுக்கு, கூட்டுறவின் அடிப்படையில் நடக்கும் பெருமளவுப் பயிர்த் தொழிலின் அனுகூலங்களைக் கண்கூடாகக் காட்ட முடியும்,''** இதில்தான் பாட்டாளி வர்க்கத்தின் பணி இருக்கிறது என்று கண்டார்.

நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையில் உள்ள முரண் பாடு இயற்கையானதே என்றும், இது அழிக்க முடியாதது என்றும், அவ்வாறு அழிக்கக் கோருவது கற்பனாவாதம் என் றும் கூறுகிற முல்பெர்கரைக் கடுமையாகக் கண்டித்தார் எங்கெல்ஸ். சோஷலிசப் புரட்சி மூலமாகவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மூலமாகவும் முதலாளித்துவத்திற்கே உரித்தான முரண்பாடுகளை ஒழிப்பது அவசியம் என்றும், இது தவிர்க்க முடியாதது என்றும் கருதுகிறவர் அல்ல கற் பனாவாதி, மாறாக, திட்டவட்டமான எந்த வடிவங்களில் இந்த முரண்பாடு ஒழிக்கப்படும் என்பதை முன்கூட்டியே

---

* Engels, *Concerning the Housing Question;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 612.

** Engels, *Concerning the Housing Question;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p, 651.

பார்க்க விரும்புகிறவர்தான் கற்பனுவாதி. எதிர்காலச் சோஷலிச சமுதாயத்தில் வீட்டுப் பிரச்னேயோ வேறு ஏதாவது பிரச்னேயோ எந்த மாதிரித் தீர்க்கப்படும் என்று ஜோசியம் சொல்ல எங்கெல்ஸ் விரும்பவில்லை. குறிப்பிட்ட திட்டவட்டமான சமுதாய உறவுகளைப் பொறுத்து மாற்ற கால நடவடிக்கைகள் கூட வடிவங்களில் வேறுபட்டிருக்கும் என்று அவர் சுட்டிக் காட்டினர். எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருந்தத் தக்கதாகச் சீட்டு எழுதித் தருவது விஞ்ஞானம் அல்ல, பில்லி சூனிய மருத்துவமாகும்.

வீட்டு வசதிப் பிரச்னே பற்றி எங்கெல்ஸ் எழுதிய கட்டுரைகள், புரூதோனியக் கோட்பாடுகளை ஜெர்மனியில் தூவி விடுவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகளை நொறுக்கித் தள்ளின. ஆனல், லஸ்ஸாலிய மரபுகளை முறியடிப்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. இவை, அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் மீது மட்டுமின்றி, எய்செனுஹ்வாதிகள் மீதும் நிறையச் செல்வாக்குச் செலுத்தி வந்தன.

இரண்டு சோஷலிஸ்டுக் கட்சிகளும் 1875ல் ஒன்று சேர்ந்தபோது இது இன்னும் தெளிவாக வெளிப்பட்டது.

பிரெஞ்சு-பிரஷ்யப் போரையும் ஜெர்மன் பேரரசு நிறுவப்பட்டதையும் தொடர்ந்து மேல் மட்டத்தில், பிரஷ்ய முடியரசினுல் ஜெர்மனி ஒன்றிணைக்கப்படுவதற்கு வழி ஏற்பட்டதை அடுத்து தம்மிடையே பெரும் போராட்டம் நடத்தி வந்த இரண்டு கட்சிகளின் நடைமுறை உத்திகளில் இருந்த அடிப்படை வேறுபாடு மறைந்து போயிற்று.

இதையொட்டியும், அரசாங்கத்தின் அடக்குமுறையினுல் தொல்லைக்குள்ளான எல்லாச் சக்திகளும் ஒன்றுபட வேண்டும் என்னும் கடிய தேவையினுலும் இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்ந்து, ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி என்ற ஒரே கட்சியாக இணைந்து விட வேண்டும் என்ற பிரச்னே தோன்றியது.

கட்சிகள் ஒன்று சேர்வதற்கு பொதுப்படையாக மார்க்சும் எங்கெல்சும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை, ஆனுல் அவசரப்பட்டும் கோட்பாடின்றியும் ஒன்றிணைவதை மட்டுமே அவர்கள் எதிர்த்தார்கள். இணைப்புத் திட்டத்தின் கோட்பாட்டுறுதிதான், உண்மையான இணைப்பின் உறுதிக்கு உத்திரவாதமாய், போர்க்குண மிக்க பாட்டாளி வர்க்கக் கட்சி

யின் தோற்றத்திற்கு அடிப்படையாய் விளங்கும் என்று அவர்கள் கண்டார்கள். ''எந்த விலை கொடுத்தும்'' இணைப்பு ஏற்படுத்தி விடுவது என்று அலைவது ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்திற்குப் பெரும் தீங்கு கொண்டு வந்து சேர்க்கும் என்று எய்செனுஹ்வாதிகளின் தலைவர்களை, குறிப்பாக லீப்க்னெஹ்டை அவர்கள் பன்முறை எச்சரித்தனர்.

மார்க்ஸ், எங்கெல்சின் எச்சரிக்கைக்குப் பின்னும், அவர்களுக்கு வெகுநாளாய்த் தெரிந்திருந்த லீப்க்னெஹ்டின் சமரச மனப்பான்மை மேலோங்கியது. பேபெல் சிறைப்பட்டிருந்த நாட்களில், லஸ்ஸாலியத் தலைவர்களுடன் லீப்க்னெஹ்ட் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினர். இப்பேச்சு வார்த்தைகளின் விளைவாகக் கட்சிகளிடையே வரப்போகிற இணைப்பிற்கான வேலைத்திட்டமாக விளங்க வேண்டிய நகல் திட்டம் ஒன்று உருவாகியது. லஸ்ஸாலியர்களுக்கு முக்கியமான கோட்பாடு பூர்வமான சலுகைகளை அள்ளிக் கொடுக்கும் இந்த இணைப்புக்கான நகல் திட்டம் திடீரென்று கைக்குக் கிடைக்கப் பெற்ற மார்க்சும் எங்கெல்சும் கட்சியின் தலைவர்களுக்குத் தமது கடும் ஆட்சேபத்தை உடனடியாகத் தெரிவித்தார்கள். கோட்பாடற்ற அடிப்படையில் இத்தகைய இணைப்பு மேற்கோள்வதற்கு ஆட்சேபம் தெரிவித்து, திட்டத்தினை விவரமாக விமர்சனம் செய்து, அப்போதுதான் சிறையிலிருந்து வெளிவந்த பேபெலுக்கு எங்கெல்ஸ் கடிதம் வரைந்தார்.

''பிற்போக்கான ஒரே மக்கள் திரள்'' என்ற ஆய்வுரை, அரசு உதவியுடன் பொருளுற்பத்தித் தோழமை அமைப்புக்கள் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை, ''சம்பளம் பற்றிய உருக்கனைய விதி'' ஆகியவை பொது வேலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டதிலிருந்து லஸ்ஸாலியர்களுக்கு எய்செனுஹ்வாதிகளின் தலைவர்கள் எவ்வளவு சலுகைகள் அளித்தனர் என்பது விளங்குகிறது. ஆனால், தொழிற்சங்கங்கள், வேலை நிறுத்தங்கள், தொழிலாளர்களின் சர்வதேசிய ஒற்றுமை ஆகியவை பற்றியெல்லாம் இந்த வேலைத் திட்டத்தில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற முழக்கத்திற்கு பதிலாக, ''சுதந்திர மக்கள் அரசு'' என்ற லஸ்ஸாலியக் கோஷம் திட்டத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

வேலைத்திட்டத்தின் இந்த அம்சங்களை எல்லாம் கண்டன விமர்சனம் செய்த எங்கெல்ஸ், குறிப்பாக அரசு பற்றிய பிரச்னையில் காணப்படும் சந்தர்ப்பவாதக் குழப்பத்திற்குச் சாட்டையடி கொடுத்தார்.

''புரட்சியின் போது, போராட்டத்தின் போது தனது எதிரிகளை பலாத்காரமாக அடக்கி ஒடுக்குவதற்குப் பயன்படுகிற நிலையற்ற ஒரு நிறுவனமே அரசு என்பதால், சுதந்திர மக்கள் அரசு பற்றிப் பேசுவதெல்லாம் வெறும் பொருளற்ற பிதற்றலே. பாட்டாளி வர்க்கத்திற்கு அரசு இன்னும் தேவையாக இருக்கிறதென்றால், அது சுதந்திரத்திற்காக அல்ல, தனது எதிரிகளை நசுக்குவதற்குத்தான். சுதந்திரத்தைப் பற்றிப் பேசுகிற வாய்ப்பு வந்து விடுகிற போது, அரசு என்ற ஒன்று மறைந்தே போகும்''* என்றார் எங்கெல்ஸ்.

பேபெலுக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதத்தின் இந்தப் பகுதி, ''அரசு பற்றி மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்களிலே மிகச் சிறப்பானதென இல்லையேல், மிகச் சிறப்பானவற்றுள் ஒன்றெனக் கொள்ளத்தக்கக் கருத்துரை...''** என்று லெனின் கருதினார். அரசு பற்றிய மார்க்சிய போதனையைத் திரித்துப் புரட்டிக் கொண்டிருந்த ஜெர்மன் சமூக ஜனநாயகத் தலைவர்கள், எங்கெல்சின் இந்தக் கடிதத்தை 36 ஆண்டுகள் மறைத்து ஒளித்து வைத்திருந்தது ஏதோ தற்செயலானதல்ல என்று கோடிட்டுக் காட்டினார் லெனின்.

எனினும், வேலைத்திட்டம் பற்றிய எங்கெல்சின் விமர்சனம் எய்செனாஹ்வாதிகளின் தலைவர்கள் சிலருக்குப் போதுமான அளவு உறுதியூட்டுவதாய் இல்லை. உதாரணமாக, ''லண்டன் வாசிகளுக்கு'' லீப்க்னெஹ்ட் எழுதிய பல கடிதங்களில், லஸ்ஸாலியர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் தாம் மேற்கொண்ட நிலை நியாயமானதே என நிரூபிக்க முயன்றார். இதன் காரணமாக, இந்தத் திட்டத்திற்கு எதிராக இன்னும் பரவலாகத் தாக்குதல் தொடுக்க வேண்டியது அவசியம் என்று மார்க்சும் எங்கெல்சும் கருதினர்.

---

* *Engels' Letter to Bebel on March 18-28, 1875;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II, Moscow 1955, p. 42.

** வி. இ. லெனின், அரசும் புரட்சியும்; வி. இ. லெனின், நூல் திரட்டு, இரண்டாம் பாகம், மாஸ்கோ 1977, பக்கம் 298.

கோத் வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம் (1875) என்ற நூலில் இந்தப் பணியை நிறைவு செய்தார் மார்க்ஸ்.

இந்த நூலில், தவறான, விஞ்ஞான விரோத லஸ்ஸாலிய வறட்டுத் தத்துவத்தை விமர்சனம் செய்யும் மார்க்ஸ், மிக முக்கியமான தத்துவார்த்தப் பிரச்னைகளுக்கு ஒளியூட்டி, தமது புரட்சிகரத் தத்துவத்தை மேலும் செழுமைப்படுத்து கிறார்.

கோத் வேலைத்திட்டம் பற்றிய விமர்சனத்தில் ''முதலாளித்துவத்திற்கு வரப் போகின்ற அழிவையும், எதிர்காலக் கம்யூனிசத்தின் வருங்கால வளர்ச்சியையும் குறித்து'' (லெனின்) தமது தத்துவத்தைப் பிரயோகிக்கிறார் மார்க்ஸ்.

இந்த நூலில்தான் அரசு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவை பற்றிய மார்க்ஸ் எங்கெல்சின் கருத்துக்கள் மிகச் சிறப்பாக முறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவை பற்றிய போதனை கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் முதல் அடி எடுத்து வைத்து, சற்றே சூட்சுமமாக வகுத்தளிக்கப்பட்டிருந்தது என்றால், 1848ஆம் வருடத்திய அனுபவத்திற்குப் பின், முதலாளித்துவ அரசு இயந்திரத்தை ''உடைத்தெறிய'' வேண்டிய அவசியம் பற்றிப் பேசும் மார்க்ஸ், பாரிஸ் கம்யூனுக்குப் பின் 1871ல், அவ்வியந்திரத்துக்கு மாற்றாக எதை அமைப்பது என்பது பற்றிச் சொல்லுகிறார். கோத் வேலைத்திட்டம் பற்றிய விமர்சனத்தில் அரசு பற்றியும், சோஷலிசப் புரட்சி பற்றியும் மார்க்சினது புரட்சிகர போதனையின் ஒரு தொகுப்பு போல புகழ் பெற்ற பின்வரும் சிந்தனை அடங்கியிருக்கிறது:

''முதலாளித்துவச் சமுதாயத்துக்கும் கம்யூனிசச் சமுதாயத்துக்கும் இடையில் முதலாளித்துவச் சமுதாயம் கம்யூனிசச் சமுதாயமாய்ப் புரட்சிகரமாக மாற்றமுறும் காலம் கிடக்கிறது. இந்தக் காலம் அரசியல் மாற்ற காலத்துக்கு இணையாகும். எனவே, இக்காலத்தில் இருக்க வேண்டிய அரசு புரட்சிகரப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக அன்றி வேறு எதுவாகவும் இருக்க முடியாது.''

கோத் வேலைத்திட்டம் பற்றிய விமர்சனத்தில், எதிர்காலச் சமுதாயத்தின் பொருளாதாரம் பற்றிப் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கிறது. இதில், கம்யூனிசம் வளர்ச்சியுறுவதற்

கும், அரசு தேய்ந்து மறைவதற்கும் இடையில் இணைப்புப் பாதை போடப்படுகிறது. இந்நூலில் பிரம்மாண்ட முக்கியத்துவம் வாய்ந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்பு ஒன்றைச் செய்கிறார் மார்க்ஸ். கம்யூனிசச் சமுதாயத்தின் இரண்டு கட்டங்களை வேறுபடுத்திக் காட்டுகிறார் அவர். முதலாவது —கீழ் கட்டம், இரண்டாவது—மேல் கட்டம். சோஷலிசம் என்று அழைக்கப்படும் கம்யூனிசத்தின் கீழ் கட்டத்தில், உற்பத்திச் சாதனங்கள் சமூக உடைமையாக இருந்து வருகையில், பொருள்வளமோ உழைப்புக்கு ஏற்றவாறு வினியோகிக்கப்படும். சமுதாய வளத்துக்காக ஒருவன் அளித்த உழைப்பைத் தவிர, எந்த அளவுக்குச் சமுதாயத்துக்குத் தனது உழைப்பை அவன் நல்குகிறானோ, அந்த அளவுக்கே சமுதாயம் அவனுக்கு நலன்களைத் தரும். கம்யூனிசத்தின் மேல் கட்டத்தில் உற்பத்திச் சக்திகள், சமுதாய அமைப்பின் உற்பத்தித் திறன் ஆகியவற்றின் உயர் வளர்ச்சி ஏராளமாகப் பொருள் வளங்களைப் படைக்கிற போது, ''உடலுக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்'' என்ற கொள்கை கடைப்பிடிக்கப்படும்.

வேலைத்திட்டத்தின் நகலை மார்க்சும் எங்கெல்சும் கடுமையாக விமர்சனம் செய்திருந்த போதிலும், கோத் நகரில் நடந்த ஒன்றுபட்ட காங்கிரசில் சிறு திருத்தங்களுடன் இது வேலைத்திட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கோத் நகரில் செய்து கொண்ட இந்தக் கேடுகெட்ட சமரசம், மார்க்சும் எங்கெல்சும் எதிர்பார்த்தபடி கட்சியின் வளர்ச்சியில் பிரதிபலித்தது. ஒருங்கிணைப்பினால், ''முதிர்ச்சியற்ற மாணவர்களும், அதிபுத்திசாலி டாக்டர்களும் அடங்கிய பெரும் கும்பலாய்'' கட்சி நிறைந்து போகவே, கட்சிக்குள் தத்துவார்த்தக் குழப்பம் மிகுந்து, கட்சித் தலைவர்களில் பலர் டூரிங்கின் குட்டி முதலாளித்துவச் சோஷலிசத்தை நோக்கி ஈர்க்கப்பட்டார்கள்.

பெர்லின் பல்கலைக்கழகத்துத் துணைப் பேராசியர் டூரிங்கின் புதிய கண்டுபிடிப்பான சோஷலிச ''அமைப்பு'', அவருடைய கூச்சல் மிகுந்த பிரகடனத்தின்படி, தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், சோஷலிசம் ஆகியவற்றில் முழுமையான புரட்சியைக் கொண்டு வந்திருக்க வேண்டும். உண்மையிலோ, அந்தச் சோஷலிச அமைப்பு ஆடி அழிந்து

போன பலவிதமான குட்டி முதலாளித்துவக் கோட்பாடு களின் கதம்பமே ஆகும்.

சோஷலிசப் பத்திரிகைகளிலேயே புகழ் பாடப்படும் இந்தப் புதிய ''சமுதாய சீர்திருத்தவாதிக்கு'' எதிராகத் தாக்குதல் தொடுக்க வேண்டியது அவசியம் என்று மார்க் சும் எங்கெல்சும் எண்ணினர். புதிய ஆசாமிக்கு வருகின்ற புகழைக் கண்டு பீதியுற்ற லீப்க்னெஹ்ட் டூரிங்குக்கு எதிராகச் சீக்கிரம் தாக்குதல் நடத்துமாறு ''லண்டன் வாசிகளைக்'' கேட்டுக் கொண்டார்.

மூலதனப் பணியில் மூழ்கி இருந்த மார்க்சின் கவனத் தைச் சிதற விடாமல் பார்த்துக் கொள்ளும் பொருட்டு, ''சலிப்பூட்டும் டூரிங்குக்கு'' மறுப்புத் தெரிவிக்கும் பொறுப்பை எங்கெல்ஸ் ஏற்றுக் கொண்டார். மார்க்சுக் கும் எங்கெல்சுக்கும் இடையில் நிலவி வந்த வழக்கத்தின் படி, விசேஷத் துறைகளில் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்ளுவதற்காக, எங்கெல்ஸ் எழுதிய டூரிங் பற்றிய நூலுக்கு, அரசியல் பொருளாதாரம் பற்றிய பிரிவிலுள்ள பத்தாவது அத்தியாயத்தை மார்க்ஸ் எழுதினார். நூலை அச்சுக்குக் கொடுக்குமுன் கையெழுத்துப் பிரதி முழுவதை யும் எங்கெல்ஸ் மார்க்சுக்குப் படித்துக் காட்டினார். 1877 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், ஜெர்மன் சமூக ஜனநாயகப் பத்திரிகையான முன்னேற்றத்தில் *(Vorwärts)* எங்கெல்சின் தொடர் கட்டுரை **திருவாளர் யூகென் டூரிங் விஞ்ஞானத்தில் செய்துள்ள புரட்சி** என்னும் கேலித் தலைப்பில் பிரசுரமாகத் தொடங்கியது.

எங்கெல்சினது கட்டுரைகள் அச்சிடப்படுவது ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தில் இருந்த டூரிங் பக்தர்களின் கோபத்தைக் கிளறியது. 1877 மே மாதம் நடந்த கட்சி யின் கோத் காங்கிரசில் *Vorwärts* பத்திரிகையின் வாசகர்க ளுக்கு எங்கெல்சினது கட்டுரைகளால் எந்தப் பயனும் இல்லை என்ற சாக்கில், அக்கட்டுரைகளைப் பிரசுரிப்பதை நிறுத் திவிட வேண்டும் என்று மோஸ்த் என்பவரும் அவருடைய ஆதரவாளர்களும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர்.

எங்கெல்சினது கட்டுரைகளைத் தொடர்ந்து பிரசுரிப்பது என்றும் இவற்றை பத்திரிகையின் செய்திப் பகுதியில் வெளி யிடாமல், அதன் விஞ்ஞான அனுபந்தத்தில் அச்சிடுவது என்

றும் காங்கிரஸ் தீர்மானித்தது. 1878ஆம் ஆண்டின் நடுவில் எங்கெல்சின் தர்க்கவாதக் கட்டுரைகள் முடிவுற்றன. அதே ஆண்டு, டூரிங்குக்கு மறுப்பு என்று பிரபலமடைந்து ஒரு தனிப் புத்தகமாக அக்கட்டுரைகள் வெளிவந்தன.

டூரிங்கின் ''அமைப்பு முறை'' மனித அறிவின் மிகப் பரவலான துறைகளைப் பற்றி வாதிப்பதால் டூரிங்கின் அடிச்சுவட்டில் செல்கையில், எங்கெல்ஸ் சொன்னபடி, எல்லா விஷயங்களையும் அல்லது முடிந்த அளவு எல்லா விஷயங்களையும் பற்றிப் பேச வேண்டிய அவசியம் எங்கெல்சுக்கு நேர்ந்தது: காலம், இடம் ஆகியவற்றிலிருந்து இரு உலோக நாணயத் திட்டம் வரை; பருப்பொருள், இயக்கம் ஆகியவற்றின் நிரந்தரத் தன்மையிலிருந்து ஒழுக்கம் பற்றிய கருத்துக்கள் மாறும் தன்மையன என்பது வரை; டார்வினின் இயற்கைத் தேர்விலிருந்து எதிர்காலச் சமுதாயத்தின் இளைஞர்கள் கல்வி வரை எல்லா விஷயங்களும் இந்த நூலில் பேசப்படுகின்றன.

''இதன் விளைவாக எனது எதிர்மறை விமர்சனம் நேர்மறை விமர்சனமாயிற்று; இந்த வாதம் மார்க்சும் நானும் ஆதரித்துப் போராடி வருகிற இயக்கவியல் முறை மற்றும் கம்யூனிஸ்ட் உலகக் கண்ணேட்டம் பற்றிய ஏறத்தாழ ஒரு தொடர் விளக்கமாக மாற்றப்பட்டது—ஓரளவு விரிவான அளவிலான ஆதாரப் பொருட்கள் நிறைந்த ஒரு விளக்கமாக இருந்தது''* என்று எங்கெல்ஸ் எழுதினர்.

இவ்வாருக, டூரிங்குக்கு எதிரான தர்க்கவாதத்தில் தத்துவஞானம், இயற்கை இயல், அரசியல் பொருளாதாரம், வரலாறு, சோஷலிசம் ஆகியவற்றின் மிகப் பெரும் வட்டத்தைச் சூழ்ந்து நிற்கும் கேள்விகளுக்கு ஒளிபாய்ச்சி விடை தருகிற, சிறப்பு மிக்க ஒரு மார்க்சியக் கலைக் களஞ்சியம் தோன்றியது.

கருத்துமுதல்வாதத்துக்குக் கொடுக்கப்படும் எல்லாச் சலுகைகளையும் எதிர்த்து, ஒரே சீராகப் பொருள்முதல்வாதக் கண்ணேட்டத்தை முன்வைப்பதுதான் எங்கெல்சினது இந்த நூல் முழுவதும் இழையோடும் மையக் கருத்து ஆகும். ''இறுதி வரை ஒரே சீரான பொருள்முதல்வாதம், அல்லது தத்துவஞானக் கருத்துமுதல்வாதத்தின் பொய்யும் புனே

* பி. எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு.

சுருட்டும்—இதில் எது வேண்டும்? என்பதுதான் டூரிங்குக்கு மறுப்பு என்னும் நூலின் ஒவ்வொரு பத்தியிலும் கேட்கப்படு கின்ற கேள்வியாகும்''* என்று எழுதினர் லெனின்.

கருத்துமுதல்வாதத் தத்துவஞானத்துக்கும், கொச்சைத் தனமான பொருள்முதல்வாதத்துக்கும் எதிரான போராட் டத்தில், பொருள்முதல்வாத இயக்கவியலை இயற்கை, சமு தாயம், மனித சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சி குறித்த பொதுவான விதிகளின் விஞ்ஞானமாக வளர்த்து நிலை நிறுத்துகிருர் எங்கெல்ஸ்.

தத்துவார்த்த இயற்கை இயல் துறையில் தாம் மேற் கொண்ட ஆய்வுகளின் முதல் பொழிப்புரையைத்தான் டூரிங் குக்கு மறுப்பு எனும் நூலில் எங்கெல்ஸ் தந்தார். ''இயற் கையில் எண்ணற்ற மாற்றங்களின் அமளிக்கு மத்தியில் நிகழ்ச்சிகளின் வரலாற்றிலான தற்செயல் தன்மையினை ஆளுமை செய்யும் அதே போன்ற இயக்கத்தின் இயக்கவியல் விதிகள் ஊடுருவிச் செல்கின்றன....''** என்று கணிதம், பௌதிகம், இரசாயனம், உயிரியல் ஆகிய விஞ்ஞானங் களிலிருந்து அளவற்ற உதாரணங்கள் தந்து நிரூபிக்கிருர் எங்கெல்ஸ்.

இயற்கை, சமூகம் ஆகியவற்றின் வளர்ச்சி விதிகளைப் பற்றிய விஞ்ஞானமாக, உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றி அமைக்கின்ற விஞ்ஞானமாக மார்க்சியம் பெற்ற வளர்ச்சி யில் ஒரு ராட்சச அடியெடுத்து வைக்கிறது டூரிங்குக்கு மறுப்பு.

இந்த நூலின், தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், சோஷலிசம் என்னும் மூன்று பிரிவுகளில் மார்க்சியத்தின் கருத்துச் செழுமை முழுமையாய் விரிந்து மணம் பரப்பு கிறது. டூரிங்குக்கு மறுப்பு என்று நூலில் மார்க்சியத்தை வெறுமே பாதுகாப்பதுடன் எங்கெல்ஸ் நின்று விடவில்லை. இதில் இன்னும், பாட்டாளி வர்க்கத்தினது புரட்சிகரத் தத்து வத்தின் கோட்பாட்டுப் பிரச்னைகள் பலவற்றுக்கு விடைய ளித்து, இத்துடன் இவ்வர்க்கத்தின் புதிய போராட்ட அனு

---

* Lenin, *Materialism and Empirio-criticism*, Moscow 1952, p. 353.
** பி. எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு.

பவத்தை, உலக விஞ்ஞானத்தின் நவீன சாதனைகளை, குறிப் பாக இயற்கை விஞ்ஞானத்தில் புரியப்பட்டுள்ள சாதனை களைப் பொதுமைப்படுத்தி வழங்குகிறார் எங்கெல்ஸ்.

எங்கெல்சினுடைய மேதைமை மிக்க இந்த நூல், மார்க் சியத்தைக் கற்றறிய ஒரு மதிப்பரிய ஊற்றுக்கண்ணாகவும், மார்க்சிய விரோதிகளுடன் போராடுவதற்குக் கூர்மை மிக்க ஒரு ஆயுதமாகவும் இன்று வரை விளங்கி வருகிறது. டூரிங் குக்கு மறுப்பினுடைய மூன்று பகுதிகளின் அடிப்படையில் எங்கெல்ஸ் வரைந்த **வெறும் கற்பனையிலிருந்து விஞ்ஞான மாக சோஷலிசம் பெற்ற வளர்ச்சி** என்னும் பிரசுரம் மார்க் சியத்தைப் பிரபலப்படுத்துவதில் குறிப்பாகப் பெரும் பங்கு வகிக்கிறது. இந்தப் பிரசுரம் விஞ்ஞானக் கம்யூனிச தத்து வத்திற்கு புகழ் பெற்ற ஒரு முன்னுரையாக அமைந்து மார்க் சியத்தின் மூன்று ஊற்றுக்கண்களின், மார்க்சியத்தின் மூன்று உறுப்புக்களின் சிறப்பியல்புகளை எடுத்தியம்புகிறது. இப்பிர சுரத்தின் ஜெர்மன் பதிப்பிற்கு **மார்க்** எனும் பிர்சேர்க்கையை இணைத்து, பாட்டாளி வர்க்கத்திற்கும் விவசாய வர்க் கத்திற்கும் இடையில் இணைப்பு நிலவ வேண்டிய அவசியத்தை வரலாற்று ஆய்வுகளின் மூலம் மெய்ப்பித்துக் காட்டினார் எங்கெல்ஸ். **டூரிங்குக்கு மறுப்பும், வெறும் கற்பனையிலிருந்து விஞ்ஞானமாக சோஷலிசம் பெற்ற வளர்ச்சி** என்னும் பிரசுர மும், பலப்பல நாடுகளில் மார்க்சிய ஊழியர்களைத் தோற்று விப்பதில் மிகப் பெரும் பணியாற்றின.

ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியில் இருந்த குட்டி முதலாளித்துவப் பகுதியினருக்கும், முதிர்ச்சியற்ற பலவகை மாணவர்கட்கும், அறிவீனமான ''அறிஞர்களுக்கும்'' **டூரிங் குக்கு மறுப்பு** பெருத்த அடி கொடுத்தது. ஆடம்பரமான வார்த்தைகளால் தமது அறிவீனத்தை மறைத்தபடி இவர் கள் கட்சியின் சித்தாந்தவாதிகளைப் போலப் பாசாங்கு செய்து வந்தனர். இந்தச் சோஷலிஸ்டுப் பரோபகாரிகள், கியோஹ்பெர்க் என்பவரால் வெளியிடப்பட்டு வந்த ''எதிர் காலம்'' (*Zukunft*) என்ற பத்திரிகையைச் சுற்றிக் கும்பலாய்க் கூடி நின்றனர்.

சோஷலிஸ்டுகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விசேஷச் சட்டத்தைத் தொடர்ந்து, ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்துக்கு வந்த துன்பம் மிகுந்த காலத்தில்

இத்தகைய சக்திகளின் ஆபத்தான செல்வாக்கு பெருத்த நஷ்டங்களைத் தோற்றுவித்தது.

ஜெர்மன் பேரரசரைக் கொலை செய்வதற்கு ஒன்றுக்குப் பின் ஒன்றாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளே இந்தச் சட்டம் வருவதற்குக் காரணமாய் அமைந்தன. ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்துக்கும் இந்தக் கொலை முயற்சிகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையாயினும், பிஸ்மார்கின் அரசாங்கம் ஆதிக்க வர்க்கங்களையும், குட்டி முதலாளித்துவத்தையும் ''சிவப்புப் பிசாசுக்கு'' எதிராக தூக்கி நிறுத்துவதற்கு ஒரு சாக்காக இதனை பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தது. விஷயம் என்னவென்றால், ரெய்ச்டாக்குக்கு நடந்த தேர்தல்களில் சமூக ஜனநாயக இயக்கம் பெற்ற வெற்றி (1871ல் லட்சத்து ஆயிரம் ஓட்டுக்கள் பெற்ற சமூக ஜனநாயக இயக்கம் 1877ல் நான்கு லட்சத்துத் தொண்ணூற்று மூன்றாயிரம் வாக்குகள் பெற்றது) பிஸ்மார்க் அரசாங்கத்துக்கு மேலும் மேலும் கவலையைத் தந்தது. சுங்கவரிகளைக் கூட்டி, தொழில் துறைப் பொருள்களுக்கும் விவசாயப் பொருள்களுக்கும் விலையை உயர்த்தி ஆதிக்க வர்க்கங்கள் உழைப்பாளி மக்களுக்கு எதிராகப் புதுத் தாக்குதல்களைத் தொடுத்த பொழுது, சமூக ஜனநாயக இயக்கம் குறிப்பாக ஆபத்தான சக்தியாக விளங்கிற்று. தொழிலாளி வர்க்கக் கட்சியை நிராயுதபாணியாக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் சோஷலிஸ்டுகளுக்கு எதிராக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1878 அக்டோபர் 19ல் ரெய்ச்டாக்கினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தச் சட்டத்தின்படி, சோஷலிசப் பிரசாரம் செய்கின்ற எல்லா அமைப்புகளும், பத்திரிகைகளும், சங்கங்களும் தடை செய்யப்பட்டன. முற்றுகை நிலைமை கொண்டு வருவதற்கு அரசுக்குத் தனி அதிகாரம் வழங்கப்பட்டது.

கட்சித் தலைவர்களின் உத்தி முறைகளைத் திருத்தி, தொழிலாளர் கட்சிக்குப் பொருத்தமான ஒரேயொரு வழியான புரட்சிப்பாதைக்கு அவர்களை அழைத்துக் கொண்டு வருவதற்காக, ஜெர்மன் தொழிலாளி மக்களே நடவடிக்கை மேற்கொள்வர் என்று மார்க்சும் எங்கெல்சும் நம்பிக்கை கொண்டிருந்தனர். ''கட்சித் தலைவர்களின் தவறுகளை எல்லாம் பொதுமக்களே திருத்தி வந்திருக்கிறார்கள் என்ற தனிச் சிறப்பு ஜெர்மன் இயக்கத்திற்கு உண்டு. நிச்சயமாக, இந்தத்

தடவையும் இவ்வாறு நடந்தே தீரும்'' என்று எங்கெல்ஸ் தமது கடிதங்களில் அடிக்கடி அழுத்தந் திருத்தமாகக் கூறி வந்தார்.

உண்மையிலும் அவ்வாறு தான் நடந்தது. பேபெலின் தலைமையில் கட்சி ஊழியர்கள்தான் அறுந்துபோன தொடர்புகளை இழுத்துக் கட்டி, சட்ட விரோத அமைப்பினை மெல்ல மெல்ல நிறுவினர். பொதுமக்களின் இத்தகைய முன்முயற்சியினாலும் மார்க்சும் எங்கெல்சும் செய்துவந்த ஈவிரக்கமற்ற விமர்சனங்களாலும், விசேஷச் சட்டத்தினால் மனக் கலக்கம் அடைந்திருந்த கட்சித் தலைவர்களில் சிறந்தவர்கள் தமது பாதையை நேர்படுத்தத் தொடங்கினார்கள். எனினும், தகுந்த நேரத்திலும், தொடர்ந்த முறையிலும், தீர்மானகரமாகவும் அவர்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இவ்வாறு செய்யவில்லை.

விசேஷச் சட்டம் அமுலுக்கு வந்த ஆரம்ப மாதங்களில் கட்சித் தலைவர்கள் சட்ட விரோதப் பத்திரிகை தொடங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளாதது மட்டுமின்றி, தனித்தனி சமூக ஜனநாயகவாதிகளின் முன்முயற்சியினால் வெளி நாட்டில் தொடங்கப்பட்ட சுதந்திரம் (*Freiheit*), விளக்கு (*Laterne*) ஆகிய பத்திரிகைகளை வினியோகிப்பதற்கும் இடையூறு செய்தனர். இப்போதோ, சட்ட விரோதமான அனைத்துக் கட்சிப் பத்திரிகை ஆரம்பிக்கும் கட்டாயத்துக்கு அவர்களே ஆளானார்கள்.

அவர்கள் இவ்வாறு தொடங்குகின்ற பத்திரிகையின் தலைமைக் குழுவில், ''லண்டன்வாசிகள்'' என்று எதிர்காலம் (*Zukunft*) என்ற பத்திரிகையின் மூலமாக ஏற்கெனவே பெயர் பெற்றிருந்த உருப்படியில்லாத சோஷலிஸ்டுகளான கியோஹ்பெர்க், பெர்ன்ஷ்டைன், ஷ்ராம் ஆகியோரே இருப்பர் என்பதை அறிந்த மார்க்சும் எங்கெல்சும் அளவற்ற ஆத்திரம் அடைந்தனர். தன் சார்பிலும் மார்க்சின் சார்பிலும், பத்திரிகை ஆசிரியர் குழு இப்படி இருப்பதற்கு உடனடியாக பேபெலிடம் ஆட்சேபம் தெரிவித்து, ஏற்கெனவே ஒத்துக் கொண்டிருந்தபடி தானும் மார்க்சும் பத்திரிகையில் எழுத முடியாது என்று அறிவித்தார் எங்கெல்ஸ்.

சமூக விஞ்ஞானம், அரசியல் ஆகியவற்றின் ஆண்டுமலர் என்ற பெயரில் கியோஹ்பெர்கால் ஸ்விட்சர்லாந்தில்

பதிப்பிக்கப்பட்டு வெளிவந்த பத்திரிகையின் முதல் இதழ் கைவரப்பெற்ற மார்க்சும் எங்கெல்சும் இன்னும் அதிகமாக அருவருப்பு அடைந்தனர். இப்பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரைக்குக் கீழே கையெழுத்துக்குப் பதிலாக மூன்று நட்சத்திரக் குறி இடப்பட்டிருந்தது. இந்தக் கட்டுரை ''ஜூரிச் மூவர்'' என்று அவப் பேர் பெற்ற கியோஹ்பெர்க், பெர்ன்ஷ்டைன், ஷ்ராம் ஆகியோரால் எழுதப்பட்டிருந்தது. விவஸ்தையற்ற சமுதாயப் பரோபகாரப் போதனைகளால் கட்சியை முன்னர் ஊட்டி வளர்த்த இந்த ஆசாமிகள், இப்போது இன்னும் வலப்புறம் சாய்ந்து, மிகக் கொடிய சந்தர்ப்பவாத, சரணாகதிக் கருத்துக்களைப் பரப்பிக் கொண்டிருந்தனர்.

1879 செப்டம்பர் *17-18*ல் தன் பெயராலும் மார்க்சின் பெயராலும் பேபெல், லீப்க்னெஹ்ட், பிராக்கே ஆகியோருக்கும் பிறருக்கும் எழுதிய சுற்றறிக்கைக் கடிதத்தில், ''ஜூரிச் மூவரின் கொள்கை அறிக்கைக்கு'' மிகக் கடும் கண்டனம் தெரிவித்தார் எங்கெல்ஸ்.

''உறுதியான அரசியல் எதிர்ப்புக் காட்டுவதற்குப் பதிலாக எல்லாவற்றிலும் தரகுத்தனம் காட்டி, அரசாங்கத்தையும் முதலாளிகளையும் எதிர்த்துப் போராட்டம் நடத்துவதற்குப் பதிலாக அவர்களைச் சமாதானப்படுத்தித் தன் பக்கம் இழுப்பதற்காக முயற்சி மேற்கொண்டு, துன்புறுத்தி ஒடுக்குகின்ற மேலாளர்களை மூர்க்கமாக எதிர்ப்பதற்குப் பதிலாக, அடக்க மிக்க பணிவு காட்டுவதும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்வதும் தண்டனைக்கு உரியதே'' என்று ''ஜூரிச்வாசிகளின்'' கொள்கை நிலையை எங்கெல்ஸ் புட்டுப் புட்டுக் காட்டுகிறார்.

இந்தச் சரணாகதிக் கொள்கை நிலையில்தான் ''ஜூரிச் மூவர்'' தத்துவ அடித்தளத்தை அமைக்க முயன்றனர். கட்சியின் இறுதிக் குறிக்கோள்கள் பற்றித் தொழிலாளர்கள் கவலைப்படவில்லை என்றும், அருகே உள்ள நடைமுறைப் பணிகள் சிலவற்றைச் செய்து முடிப்பதில்தான் அவர்கள் அக்கறை கொள்கிறார்கள் என்றும், எனவே, ''நிலையத்திற்கு நிலையம்'' போய்க் கொண்டிருக்க வேண்டுமே தவிர சென்று சேர வேண்டிய இடம் பற்றிப் பேச வேண்டியதில்லை என்றும் கட்டுரையில் சொல்லப்பட்டது. பின்னர் பெர்ன்ஷ்டைனால்

பிரகடனப்படுத்தப்பட்ட, ''இயக்கம்தான் எல்லாம், நோக்கம் ஏதும் இல்லை'', என்ற வெட்கக் கேடான சூத்திரத்தின் சாரம் இந்தக் கட்டுரையிலேயே இருந்தது. வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்கத் தக்கதாகக் கட்சியின் வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் தமது குழந்தைகளுக்கும், பேரக் குழந்தைகளுக்கும் வேலைத்திட்டத்தை வெறும் உயிலாய் எழுதிவைக்கும் உருப்படியில்லாத சோஷலிஸ்டுகளைக் கண்டு நகைத்தார் எங்கெல்ஸ். பாட்டாளி வர்க்கப் புரட்சியைக் கண்டு குலைநடுக்கம் கொண்டு, ''சட்டபூர்வ வழியில், அதாவது சீர்திருத்தத்தை நோக்கிப்'' போகுமாறு கட்சிக்கு ஆலோசனை கூறும் குட்டி முதலாளிகளின் சரியான பிரதிநிதிகளைப் போல நடந்து கொள்ளும் இவர்களுக்கும் கடும் சாட்டையடி கொடுக்கிறார் எங்கெல்ஸ். இவர்களால் சுட்டிக் காட்டப்படும் வழியானது வெறும் சீர்திருத்தமே என்றும் ஒட்டுத் தையல்கள் மூலமாக முதலாளித்துவத்திற்குச் சப்பைக் கட்டுக் கட்டி அதனை வலுப்படுத்துகின்ற முயற்சி தானே தவிர வேறொன்றுமல்ல என்றும் எடுத்துக் காட்டினார் எங்கெல்ஸ்.

''ஜூரிச் மூவரின்'' சீர்திருத்தப் ''போதனைகளையும்'' சரணாகதித் தனமான அரசியல் நிலையையும் தரைமட்டமாக்கி இந்த மனிதர்களிடம் கட்சி எத்தகைய உறவு கொள்ள வேண்டும் என்ற பிரச்னையை நேரடியாக மார்க்சும் எங்கெல்சும் முன்வைத்தனர். ''ஜூரிச்வாசிகளின்'' கருத்துக்களும், அவர்களைக் கட்சிக்குள் விட்டுவைப்பதும் ''ஒன்றுக்கொன்று பொருத்தமற்றவை'' என்று கோடிட்டுக் காட்டினார் எங்கெல்ஸ். இவர்களைக் கட்சியின் அதிகாரபூர்வப் பதவிகளில் வைத்திருப் பதன் மூலம் கட்சி தனக்குத் தானே துரோகம் இழைத்துக் கொள்ளும் என்றார்.

கியோஹ்பெர்க், பெர்ன்ஷ்டைன், ஷ்ராம் ஆகியோரின் பகிரங்கமான சந்தர்ப்பவாதக் கருத்துக்களுக்கு மட்டும் மார்க்சும் எங்கெல்சும் தமது சுற்றறிக்கைக் கடிதத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இம்மூவருடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்ற கட்சித் தலைமையின் மனப்பான்மையையும் இவர்கள் சாடினார்கள்.

''எங்களைப் பொறுத்த வரை, எங்களது கடந்த காலத்துக்குப் பொருத்தமாக எங்கள் முன்னுள்ளது ஒரே ஒரு வழி.

வரலாற்றை இயக்குகின்ற முன்னணிச் சக்தியாக இருப்பது வர்க்கப் போராட்டமே, குறிப்பாக, இப்போதைய சமூகப் புரட்சிக்கு நெம்புகோல் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் நிகழ்கிற வர்க்கப் போராட்டமே என்று, கடந்த சுமார் 40 ஆண்டுகளாக நாங் கள் சொல்லி வந்திருக்கிறோம். எனவே, இந்த வர்க்கப் போராட்டத்தை இயக்கத்திலிருந்தே விலக்கி விட முயலும் மாந்தருடன் எக்காரணம் கொண்டும் எங்களால் சேர்ந்து கொள்ள முடியாது.... இந்தப் பெரிய மனிதர்களின் கண் ணோட்டங்களைக் கட்சியின் புதிய பத்திரிகை பிரதிபலிக்கு மேயானால், இது பாட்டாளி வர்க்கப் பத்திரிகையாக இல் லாமல் ஒரு முதலாளித்துவப் பத்திரிகையாக விளங்குமே யானால், இதற்கு பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்து, ஜெர் மானியக் கட்சியை வெளி நாடுகளில் பிரதிநிதித்துவப்படுத்தி உங்களுடன் இதுவரை நாங்கள் கொண்டிருந்த ஒருமைப்பாட் டுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழி இல்லை. ஆனால், இந்த அளவுக்குக் காரியம் முற்றி விடாது என்று நாங்கள் நம்ப விரும்புகிறோம்....''* என்று மார்க்சும் எங்கெல்சும் எழுதினார்கள்.

உண்மையில், காரியம் இந்த அளவுக்கு முற்றி விடவில்லை. மார்க்ஸ், எங்கெல்சின் அடித்து வீழ்த்தும் விமர்சனமும், உறுதி மிக்க இறுதி எச்சரிக்கையும் தமது வேலையைச் செய் தன. ஜூரிச்சில் வெளியாகத் தொடங்கியிருந்த சமூக ஜனநா யகவாதி என்ற பத்திரிகையின் ஆசிரியராக ஃபோல்மர் நியமிக்கப்பட்டார். இவர் ஏறத்தாழ சரியான கொள்கை நிலையைக் கடைப் பிடித்து வந்தார். ஆயினும், ஆரம்ப நாட் களில் சமூக ஜனநாயகவாதி உறுதியாகச் சரியான பாதையில் செல்லாததால், கட்சி ஊழியர்களும், மார்க்சும் எங்கெல்சும் இப்பத்திரிகையை அவநம்பிக்கையுடனேயே பார்த்தனர். மெல்ல மெல்லத்தான் பத்திரிகை சரியான வழிக்குத் திரும்பி, கட்சியின் போர்க்குண மிக்க பத்திரிகையாக மாறி யது. சமூக ஜனநாயகவாதி கட்சியின் புரட்சிப் பத்திரிகை யாக மாறியதற்குப் பத்திரிகையையும் அதன் தலையங்கங்

---

* Marx and Engels, *Circular Letter to Bebel, Liebknecht, Bracke and others;* K.Marx and F.Engels, *Selected Correspondence*, Moscow, p. 395.

களையும் இடைவிடாது கண்காணித்து வந்த எங்கெல்சே காரணமாவார். ஃபோல்மருக்குப் பின் பத்திரிகை ஆசிரியராக வந்த பெர்ன்ஷ்டைன் மீது எங்கெல்ஸ் தொடர்ந்து செலுத்திய செல்வாக்கினுல் அவர் நெளிவு சுழிவுடன் இடதுபுறம் சாய்ந்து அவ்வப்பொழுது எங்கெல்ஸ் கொடுத்து வந்த அறிவுரைகளை நிறைவேற்றி வந்தார்.

எனினும், கட்சிக்குள் சந்தர்ப்பவாதப் போக்குகள் ஒரேயடியாக ஒழிந்து போய் விட்டன என்று சொல்ல முடியவில்லை. கட்சியின் நாடாளுமன்றக் குழுவுக்குள் வலதுசாரிப் பிரிவு கூடு கட்டிக் கொண்டு அவ்வப்போது கட்சியின் கொள்கை மீது தாக்குதல்கள் தொடுத்தது.

கட்சியை ஒரு ''கறவைப் பசுவாகக்'' கருதி வந்த, பெரும்பாலும் அறிவாளிகளாயும், ''படித்தவர்களாயும்'' இருந்த இந்த மனிதர்களையும், சட்டபூர்வமான சமூக ஜனநாயகப் பத்திரிகைகள் தடை செய்யப்பட்டதால் தமக்குக் கிட்டி வந்த இலக்கிய வருமானத்தை இழந்துவிட விரும்பாதவர்களையும் எங்கெல்ஸ் கடுமையாக விமர்சிக்கிறுர். இந்த மனிதர்கள், சோஷலிஸ்டுகளுக்கு எதிரான சட்டத்தை ரத்து செய்து விடுமாறு பணிந்து நின்று, கீழ்ப்படிந்து, தலை வணங்கி, கெஞ்சி வேண்டியபடி இருந்தார்கள் என்று எழுதினுர் எங்கெல்ஸ்.

இந்த மனிதர்களின் கோழைத் தனமான, வெட்ககரமான நடை முறை உத்தியிலிருந்து அடியோடு மாறுபட்ட பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர உத்தியை எதிர் நிறுத்தினுர் எங்கெல்ஸ்: ''இன்னும் பலர் செய்து கொண்டிருப்பது போல, எதிரிகளின் அடிகளுக்கு வளைந்து கொடுக்கவோ, தப்பி ஓடவோ கூடாது. தீயதான நோக்கங்கள் ஏதுமில்லை நம்மிடம் எனில் எதற்காக ஊளையிடுவது, விம்மியழுவது, மன்னிப்புக் கோரிக் குழறுவது? அடிக்குப் பதில் அடி கொடுப்போம். எதிரிகள் கொடுக்கும் ஒவ்வொரு அடிக்கும் இரண்டு, மூன்று அடிகள் பதிலாய்த் தருவோம். நீண்ட காலமாய் இது தான் நமது உத்தியாய் இருந்து வருகிறது. எத்தகைய எதிரியையும் இதுவரை நன்ருகவே நாம் சமாளித்திருக்கிறேம் என்று தோன்றுகிறது.''* குட்டி முதலாளித்துவ, சந்தர்ப்

* *Engels' Letter to Bernstein on February 8, 1883;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 431.

பவாதப் பிரிவினர் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சியை குட்டி முதலாளித்துவ போலிப் பண்பாளர்களின் சீர்திருத்தக் கட்சியாக மாற்றிவிடாது உன்னிப்பாகக் கவனித்துக் கொள்ளும்படி கட்சித் தலைமையையும், மத்தியப் பத்திரிகையையும் மார்க்சும் எங்கெல்சும் கேட்டுக் கொண்டனர். சந்தர்ப்பவாதிகளுடன் உறுதி வழுவாத போராட்டம் நடத்தும்படி கட்சித் தலைவர்களிடம் கோரிய மார்க்சும் எங்கெல்சும், ''முதலாளித்துவப் போக்கு கொண்ட சக்திகளுடன்'' தவிர்க்கவியலாது முறித்துக் கொள்வதற்காகக் கட்சியைத் தயார்படுத்தினர். பிளவு கொண்டு வருகின்ற நேரம் மிகமிக அனுகூலமானதாய் இருக்குமாறு பார்த்துக் கொள்ளும் பொருட்டு மிகமிகக் கவனமாகச் சூழ்நிலைமையை ஆராய வேண்டுமென்று அவர்கள் ஆலோசனை கூறினார்கள். ''பழைய கட்சியை நம்முடன் கூட்டிக் கொண்டு போக வேண்டும். அவர்கள் ஒன்று கட்சியிலிருந்து வெளியேற வேண்டும், அல்லது வெளியேற்றப்படுவார்கள் என்ற அளவில் பிளவு நிறைவேற்றப்பட வேண்டும்.''

1884ல் புதிய கப்பல் மார்க்கம் என்ற பெயரில், உண்மையில், காலனி ஆதிக்கக் கொள்கையைப் பின்பற்ற பிஸ்மார்க் முனைந்து, அதற்கான நிதி ஒதுக்கீடு கோரிய போது சமூக ஜனநாயக இயக்கத்தின் பெரும்பான்மைப் பிரிவு, சர்வதேசத் தொடர்புகளில் இது கலாசார முக்கியத்துவமுள்ளது என்று சொல்லிக் கொண்டு, அதற்கு ஆதரவாக வாக்களிக்க எண்ணியதால் பிளவு பற்றிய பிரச்னை இன்னும் தீவிரம் அடைந்தது. எனவே, பிளவு என்பதை ஒரு நடைமுறைப் பிரச்னையாக முன்வைத்து, பிளவின் போது கட்சியின் எந்தெந்தக் பதவிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பேபெலுக்குத் திட்டவட்டமான பல ஆணைகள் பிறப்பிக்குமாறு நிர்பந்திக்கப்பட்டார் எங்கெல்ஸ். இந்தத் தடவையும் வலதுசாரிகள் பின்வாங்கியதால் பிரச்னை முடிந்து போயிற்று. ஆயினும், சந்தர்ப்பவாதிகளுடன் பிளவு கொள்வது தவிர்க்க முடியாதது, அவசியமானது என்று எங்கெல்ஸ் தொடர்ந்து கட்சியை எச்சரித்து வந்தார்.

சந்தர்ப்பவாதத்துடன் கடுமையாகச் சமர் புரிந்து வந்த வேளையில் பொதுவாகச் சரியான வழியில் சென்று கொண்டிருந்தாலும், அடிக்கடி சந்தர்ப்பவாதிகளுடன் சமரசம் காண

விரும்பிய லீப்க்னெஹ்டை மார்க்சும் எங்கெல்சும் கடுமை யாகக் கண்டித்தனர். ''சமரசம் செய்து கொள்வதாலும், பூசி மெழுகுவதாலும் நெருக்கடிக்கு ஒட்டுப் போட'' நினைக் கும் லீப்க்னெஹ்டின் போக்கினை எள்ளி நகையாடுகிறார் எங் கெல்ஸ்.

ஜெர்மன் சமூக ஜனநாயகத்தின் வலதுசாரிச் சந்தர்ப் பவாதத்தை எதிர்த்துப் போராடுகின்ற போதே ''இடது சாரியினரை'', புரட்சிகரச் சொல் வீரர்களை எதிர்த்தும் மார்க்சும் எங்கெல்சும் போராடினர்.

விசேஷச் சட்ட காலத்தில் ''இடதுசாரிச்'' சந்தர்ப்பவா தம் தோன்றியதற்கு சுதந்திரம் (*Freiheit*) என்ற பத்திரிகை ஆசிரியரான யோகன் மோஸ்த் காரணமாவார்.

ரெய்ச்டாகில் ஒரு பிரிவினரின் சந்தர்ப்பவாதத் தவறு களைக் கண்டித்த மோஸ்த் எதிர்ப்புற எல்லைக் கோட்டுக்குப் போய் நாடாளுமன்றத்தையும், சட்டபூர்வ வாய்ப்புக்களை யும் பயன்படுத்துகின்ற அவசியமே தேவையில்லை என்று மறுத்தார். சட்டபூர்வ வாய்ப்புக்களைப் பயன்படுத்த மறுப் பதோ, சமூக ஜனநாயக இயக்கத்தின் நாடாளுமன்ற உறுப் பினர்களை ரெய்ச்டாகிலிருந்து திரும்ப அழைப்பதோ அல்ல, மாறாக, இவ்வுறுப்பினர்களின் தவறுகளைத் திருத்துவதும், நாடாளுமன்றத்தைப் புரட்சிகரப் பிரசாரத்திற்கும், பொது மக்களைத் திரட்டுவதற்கும் அவர்களைப் பயன்படுத்துவதும்தான் மார்க்ஸ், எங்கெல்சினது விமர்சனங்களின் நோக்கமாகும். இந்த விமர்சனங்கள் மோஸ்தின் அராஜகவாத விமர்சனங் களிலிருந்து அடியோடு மாறுபட்டவையாகும்.

இத்தகைய ஆக்க பூர்வமான விமர்சனங்களுக்கு மாறாக, கட்சியின் எல்லாத் தலைவர்களின் மீதும் கண்டனங்கள் தொடுத்து வெறித்தனமாக இயக்கம் நடத்தினார் மோஸ்த். மார்க்சின் வார்த்தைகளில் இந்த இயக்கம் ''தனிப்பட்டவர் களை எதிர்த்துத் தாக்குவதாய் இன்றி, ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கம் அனைத்தின் மீதும் சேற்றை வாரி வீசியது''.

நாடாளுமன்ற முறையை அராஜகத்தனமாக மோஸ்த் கண்டித்து வந்தது, பகிரங்கமாக அவரைக் கட்சியிலிருந்து முறித்துக் கொள்ளச் செய்தது. 1879 செப்டம்பரில், புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று மோஸ்தின் பத்திரிகை ஆலோசனை கூறியது. இதே நேரத்தில், மோஸ்த்

தமது தத்துவக் கருத்துக்களை மறு பரிசீலனை செய்து, அராஜகத்தை நோக்கி இன்னும் வழியமைத்துப் போய்க் கொண்டிருந்தார்.

மோஸ்தைப் பின்தொடர்ந்து, ரெய்ச்டாக்கில் சமூக ஜனநாயக உறுப்பினராய் இருந்த கஸ்ஸல்மனும் அராஜக வாதத்திற்குத் தாவினர்.

வீதெனில் 1880ல் நடந்த கட்சியின் முதல் சட்ட விரோதக் காங்கிரஸ், மோஸ்தையும் கஸ்ஸல்மனையும் கட்சி யிலிருந்து விலக்கியது. கட்சியின் இலக்குகளை எட்டுவதற்கு ''எல்லாச் சட்டபூர்வ வழிகளையும்'' கட்சி கடைப்பிடிக்கும் என்ற வாசகத்தை கோத் வேலைத்திட்டத்திலிருந்து காங் கிரஸ் நீக்கி விட்டு, இதன் மூலம், மார்க்சும் எங்கெல்சும் விடாப்பிடியாகப் போதித்து வந்தபடி சட்டபூர்வ வழிகளை யும் சட்டவிரோதப் பணிகளையும் இணைத்து நடத்துவதன் அவசியத்தை ஏற்றுக் கொண்டது.

ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தில் காணப்பட்ட சந்தர்ப்பவாதத்தின் வேர்களை ஆய்வு செய்து பார்க்கையில் பெரும் எண்ணிக்கையினராய் இருந்த ஜெர்மன் குட்டி முத லாளித்துவ வர்க்கத்திலும் ''எடுபிடித்தனம், கீழ்ப்படிந்து அடங்கி நடக்கும் பண்பு போன்ற ஜெர்மனியின் எல்லா பரம் பரைச் சாபத்தீடுகளுக்கும் சகோதரன்'' என்று எங்கெல்ஸ் அழைத்த, இவ்வர்க்கத்துக்கே உரித்தான குறுகிய மனப்பாங் குப் போலித் தனத்திலும்தான் அந்த வேர்கள் பாய்ந்து பரவுகின்றன என்று மார்க்சும் எங்கெல்சும் கண்டனர்.

தத்துவத்திலும் நடைமுறையிலும் எல்லா விதமான சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்துச் சாடிய மார்க்சும் எங் கெல்சும், விசேஷச் சட்டத்தின் சிக்கல் மிகுந்த நிலைமை களில் நடைமுறை உத்திக்கும் நிறுவனப் பணிக்கும் உகந்த திட்டம் வகுப்பதில் ஜெர்மன் சமூக ஜனநாயகத்திற்கு மதிப் பிடற்கரிய உதவி நல்கி சரியான புரட்சிகரப் போராட்டப் பாதையில் முன்னேற அதற்குத் துணை செய்தனர்.

சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்ட காலத்தில் கட்சியின் பணிகள் கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு புரட்சிக் கல்வியாய் இருந்து, கட்சி அணிகளை உறுதிப்படுத்துவதற்கும் பொதுமக்களிடையே அதன் செல்வாக்கை வளர்ப்பதற்கும் பயன்பட்டன. இதன் விளைவாக இந்தக் காலம் ஜெர்மன்

சமூக ஜனநாயக இயக்கத்தின் வீரஞ் செறிந்த காலம் என்று நியாயமாகவே அழைக்கப்படுகிறது.

ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் இத்தகைய பெரும் அக்கறை கொண்டிருந்த மார்க்சும் எங்கெல்சும், மற்ற நாடுகளில், குறிப்பாக பிரிட்டனிலும் பிரான்சிலும், நடந்து வந்த இயக்கத்தை மிக உன்னிப்பாகக் கவனித்து வந்தனர். ஜெர்மனியில் அவர்கள் ஆற்றி வந்த பணியினைப் போலவே, இங்கும் தொழிலாளர் கட்சி உருவாகும் பொழுது கட்சிக்கு அடித்தளமாக இருக்கப் போகும் ஊழியர்களைப் பயிற்றுவித்து, பொதுமக்களை வழிநடத்துகின்ற கலையைப் பொறுமையுடனும் விடாமுயற்சியுடனும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தனர்.

பாரிஸ் கம்யூன் வீழ்ச்சி அடைந்த பின்பு பிரான்சில் தொழிலாளர் இயக்கம் முன்னேறி வருகின்ற சூழ்நிலைகளையும், அவ்வியக்கத்திற்குள் நிகழ்ந்து வரும் உள் வளர்ச்சியையும் மார்க்சும் எங்கெல்சும் கவனமாகப் பரிசீலித்து வந்தனர். பாரிசுக்கும் நாட்டுப் புறத்துக்கும் இடையே தொடர்பு அறுந்து போனதன் காரணமாக, புரட்சிகரப் பாரிசுக்கு நாட்டுப்புறம் உதவி அளிக்காதது மட்டுமின்றி, பாரிசுக்கு எதிராகவும் அது நேரடியாகப் போராடுமாறு ஆனதை இது வரை பிரான்சில் இருந்து வந்த புரட்சிகர இயக்கத்தினுடைய பலவீனங்களில் ஒன்றாகும் என்று எங்கெல்ஸ் கருதினார். 1871க்குப் பிறகு, ''புரட்சிகரப் பாபிலோனியாவுக்கும்'' நாட்டுப் புறத்துக்கும் இடையே உறவு நெருங்கி வருவதையும், புரட்சியின் இருப்புப் படைகள், முதன்மையாக விவசாயிகள், அணி சேர்ந்து வருவதையும் எங்கெல்ஸ் நல்விளைவு என்று குறிப்பிட்டார்.

பிரெஞ்சுத் தொழிலாளர் இயக்கத்தில் முன்னர் ஆதிக்கம் செலுத்தி வந்த புரூதோனிசம், பிளாங்கிசம் போன்ற குட்டி முதலாளித்துவப் போதனைகளுக்குப் பாரிஸ் கம்யூனின் அனுபவங்கள் மரண அடி கொடுத்ததானது இரண்டாவது நல்விளைவு என்று எங்கெல்ஸ் கருதினார். தனி இயல்புள்ள பழைய பிரெஞ்சுச் சோஷலிசத்திற்குப் பதிலாக சர்வதேசப் பாட்டாளி வர்க்க விஞ்ஞான போதனையான மார்க்சியத்தைக் கற்றறிவதற்கு பிரெஞ்சுத் தொழிலாளர்களுக்கு இது உதவியது.

ஆயினும், போராட்டமின்றி பிரெஞ்சுத் தொழிலாள மக்களை நோக்கி வழியமைத்துக் கொண்டு போய்விடவில்லை மார்க்சியம். நடைமுறையில் ஏற்கெனவே திவாலாகிப் போன பழைய கோட்பாடுகளைக் காத்து நின்ற பல்வேறு குட்டி முதலாளித்துவ, அராஜகவாதச் சக்திகள் மார்க்சியத் துக்கான வழியை இன்னும் அடைத்துக் கொண்டு நின்றன. சில பிரெஞ்சுச் சோஷலிஸ்டுகள் தமது நாட்டின் புரட்சிகர வரலாற்றில் அகம்பாவம் கொண்டு, ஒரு ஜெர்மானியரான மார்க்ஸ் தரும் புரட்சிகரப் போதனையைஏற்றுக்கொள்ளவிரும் பவில்லை என்பது போன்ற விஷயங்களும் இதில் தமது வேலை யைச் செய்தன. இது பற்றி எங்கெல்ஸ் பெர்ன்ஷ்டைனுக்குப் பின்வருமாறு எழுதினர்: ''பிரெஞ்சுக் கருத்துக்களால் உல கத்துக்கு உவகையூட்டி கருத்துக்களிலே ஏகபோகம் வகித்து வந்த தேசமும், உலகத்துக்கு ஒளி விளக்காய்த் திகழ்ந்த பாரிசும் முற்ற முழுக்கத் தயாரான சோஷலிசக் கருத்துக் களை ஒரு ஜெர்மானியரான மார்க்சிடமிருந்து பெறுகின்றன என்ற எண்ணம் தோன்றிய உடனேயே, பெருந்திரளான பிரெஞ்சுச் சோஷலிஸ்டுகள் பயபீதி அடைந்து விடுகிருர் கள். எப்படியாயினும், அது அப்படித்தான் இருக்கிறது. தமது மேதைமையினுலும், அளவற்ற விஞ்ஞான நேர்மை யினுலும், நம்ப முடியாத ஞானத்தினுலும் நம்மை எல்லாம் கடந்து உயரே நிற்கிருர் மார்க்ஸ். யாராவது அவரது கண்டு பிடிப்புக்களை குறை கூறப் புகுந்தால் அந்த நபர் அதிலேயே எரிந்து கருகிப் போவார்... மேதைமை கண்டு பொருமை கொள்ள எப்படி முடிகிறது என்று எனக்குப் புரியவே இல்லை. மார்க்சின் மேதைமை ஒரு காணற்கரிய அற்புதம். இந்தத் திறமை கிட்டப் பெருத நமக்கு, அது எட்ட இயலாத ஒன்று என்று நன்ருகவே தெரிகிறது. ஆனல், இது கண்டு பொருமை கொள்ளுவதற்கோ, ஒருவன் முழு அற்பனுய்த்தான் இருக்க வேண்டும்.''

ஆனல், பிரான்சில் தொழிலாளர் கட்சியை நிறுவியவர் களான ஜுல் கேட், போல் லஃபார்க் ஆகியோரை மார்க்சின் ஊதுகுழல்கள் என்று குற்றஞ் சாட்டிக் கொண்டிருந்த சந்தர்ப்பவாதத் தலைவர்களான மாலோன், புரூஸ் போன்ற வர்களும் இருக்கத் தான் செய்தார்கள். மார்க்ஸ் சொல்லி கேட் எழுதிய, தத்துவப் பிரிவினை உட்கொண்ட தொழிலாளர்

கட்சியின் வேலைத்திட்டம் ஒன்றை கேட் முன் வைத்த போது அதற்குப் பெரும் எதிர்ப்புக் காட்டினார்கள் இந்த மனிதர்கள்.

இந்த வேலைத்திட்டம் எப்படிப் பிறந்தது என்பது பற்றி எங்கெல்ஸ் ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''...பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சிக்கான நகல் வேலைத்திட்டம் உருவாக்க வேண்டிய நேரத்தில் கேட் இங்கு வந்தார். நானும் லஃபார்கும் இருக்கையில் எனது அறையிலேயே முன்னுரைப் பகுதியை உடனடியாக மார்க்ஸ் சொல்ல அவர் எழுதினார்: 'தனது உற்பத்திச் சாதனங்களின் உரிமையாளனாகத் தொழிலாளி என்றைக்கு மாறுகிறானோ, அன்றுதான் அவன் சுதந்திர மனிதன் ஆகிறான்; இது தனிப்பட்ட வடிவிலோ, கூட்டுறவு வடிவிலோ இருக்க முடியும்; உடைமையின் தனிப்பட்ட வடிவத்தைப் பொருளாதார வளர்ச்சி தாண்டிச் செல்லுகிறது, ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் தாண்டிச் செல்லும்; எனவே கூட்டுறவு வடிவம் போன்றவையே இனிமேல் மிச்சமாய் இருக்கும் என்று தோன்றுகிறது'. இது,கேட்போரை இணங்க வைக்கும் வாதங்களின்,வல்லமை மிக்க மாதிரி வடிவமாகும்; சிற்சில வார்த்தைகளில் பொது மக்களை எட்டுகிறதாய் இருந்த இது போன்ற வாதங்கள் எப்போதாவதுதான் எனக்குத் தட்டுப்படுகின்றன. சுருக்கமான வடிவத்தில் இருந்த இது, என்னையே வியப்புக்குள்ளாக்கித் திணற வைத்தது. பின்னர், வேலைத்திட்டத்தின் மற்ற பகுதிகளை நாங்கள் விவாதித்தோம்; சிலவற்றைச் சேர்த்தோம்; சிலவற்றை அடித்து விட்டோம். ஆனால், மார்க்சினுடைய எவ்வளவு சிறிய ஊதுகுழலாக கேட் இருந்தார் என்பதை, குறைந்த பட்ச சம்பளம் பற்றிய தனது அபத்தமான கோரிக்கையை வேலைத்திட்டத்தில் கண்டிப்பாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்திக் கொண்டிருந்ததிலிருந்தே அறிந்து கொள்ளலாம்....''*

இந்த வேலைத்திட்டம் பிரெஞ்சுக்காரர்களால் சற்றே சீர்குலைக்கப்பட்டுத்தான், 1880 அக்டோபர் 14ல், ஹாவ்ரில் நடந்த தொழிலாளர் கட்சிக் காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்

---

* *Engels' Letter to Bernstein on October 25, 1881*; K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 417.

பட்டது. பின்னர் மற்ற தொழிலாளர் மையங்களிலும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த வேலைத்திட்டம் மேற்கொள் ளப்பட்ட நிகழ்ச்சியை, பிரான்சில் முதல் உண்மையான தொழிலாளி வர்க்க இயக்கம் தோன்றி விட்டதற்கு அடையாளமாக மார்க்ஸ் கருதினார்.

ஆனால், கட்சியில் இருந்த சந்தர்ப்பவாதச் சக்திகள் மாலோன், புரூஸ் ஆகியோர் தலைமையில் இந்த வேலைத்திட் டத்தை எதிர்த்தும், கட்சியின் நிறுவனக் கோட்பாடுகளை எதிர்த்தும் போராட்டம் நடத்தினர். அவர்கள் பகூனியக் கோஷமான ''சுயாட்சி'' எனும் கோஷத்தை முன்வைத்து, உள்ளூர் நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் வேலைத்திட்டத்தை மாற்றிக் கொள்ள உரிமை இருக்க வேண்டும் என்றும், உள்ளூர் நிலைமைகளுக்கு வேலைத்திட்டம் ''ஒத்திருக்குமாறு'' செய்து கொள்ள அனுமதி வேண்டும் என்றும் கோரினர். கட்சியின் இறுதிக் குறிக்கோள்களை மறுத்து ஒதுக்கி விட்டு, இருக்கின்ற சூழ்நிலைகளில் சாத்தியமான, அடையக் கூடிய கோரிக்கைகளை மட்டுமே முன்வைக்க வேண்டும் என்றார்கள் அவர்கள். தேர்தல்களில் ''ஓட்டுப் பிடிப்பதற்காக'' கட்சி யின் வர்க்கத் தன்மையையே மறுத்து ஒதுக்கி விடுவதற்கு எதிராயும் ''சாத்தியப்பாடு'' எனும் குட்டி முதலாளித்து வக் கொள்கைக்கு எதிராகவும் கேட்டும் லஃபார்கும் உறுதி மிக்க போராட்டம் நடத்தினர்.

சாத்தியப்பாட்டாளர்களுக்கு எதிராக கேட்டும் லஃபார் கும் நடத்திய போராட்டத்திற்கு மார்க்சும் எங்கெல்சும் ஆதரவும் அங்கீகாரமும் நல்கினர். ஆனால், அதே நேரத்தில், பொதுவாகச் சரியான பாதை வழியே கேட்டும் லஃபார்கும் செல்லும் பொழுதே, வறட்டுத்தனத்தைச் சார்ந்து, செக் டேரிய வாதத்தின் பாற்பட்டு, நடைமுறை உத்திகளில் நெளிவு சுழிவு சிறிதும் காட்டாது இழைத்த தவறுகளையும் தப்புக்களையும் சுட்டிக்காட்டி மார்க்சிய மூலவர்கள் விமர் சனம் செய்தனர்.

*1882*ல் சென்ட்-எதியேனில் நடந்த காங்கிரசில், கேடிஸ்டு களுடனும் சாத்தியப்பாட்டாளர்களுடனும் பிளவு ஏற்பட் டதை, பாட்டாளி வர்க்கக் கட்சி தனது வளர்ச்சியில் இன் னும் ஒரு அடி முன் நோக்கி எடுத்து வைத்திருப்பதற்கான அடையாளம் என்று மார்க்சிய மூலவர்கள் மதிப்பிட்டனர்.

பிரெஞ்சு சோஷலிச இயக்கத்தில் நேர்ந்த இந்தப் பிளவை ஒட்டி, முதலாளித்துவச் சூழ்நிலைகளில் தொழிலாளர் கட்சிகளது வளர்ச்சியின் ஒரு விதியைப் பற்றி, அதாவது அக்கட்சிகளில் இருக்கக் கூடிய இரண்டு போக்குகளான புரட்சிகரப் போக்கு, சந்தர்ப்பவாதப் போக்கு ஆகியவற்றின் போராட்டம் குறித்து மிக மிக முக்கியமான கருத்துகளை எங்கெல்ஸ் முன்வைத்தார். ''ஒரு பெரிய நாட்டின் எந்த ஒரு தொழிலாளர் கட்சியும், பொதுவாக வளர்ச்சி பற்றிய இயக்கவியல்விதிகளுக்கு முற்றிலும் உட்பட்டு அக்கட்சிக்குள்ளே நடக்கின்ற போராட்டத்தினுலேயே வளர்ச்சியுறுகிறது எனலாம்.''* இதற்கு உதாரணமாக, ஜெர்மனியில் எய்செனுஹ்வாதிகள், லஸ்ஸாலியர்கள் ஆகியோருள் நடந்த பேராட்டத்தையும் பிரான்சில் கேடிஸ்டுகள், சாத்தியப்பாட்டாளர்கள் ஆகியோருள் நடந்த போராட்டத்தையும் குறிப்பிடுகிருர் எங்கெல்ஸ்.

பல்வேறுவிதமான சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கும் எதிரான போராட்டம், வர்க்கங்கள் உள்ள சமுதாயச் சூழல்களில் ஒவ்வொரு தொழிலாளர் கட்சிக்கும் உரிய வளர்ச்சியின் ஒரு நியதி என்று கண்ட மார்க்சியத் தந்தையர் பாட்டாளி வர்க்கக் கட்சிகளை குட்டி முதலாளித்துவ சீர்திருத்தவாதக் கட்சிகளாகவோ, அரைகுறை அராஜகவாதக் கட்சிகளாகவோ மாற்றிவிடுவதற்கு முயற்சி செய்கின்ற சந்தர்ப்பவாதிகளைத் துடைத்துத் தூர்த்து கட்சியைச் சுத்தம் செய்ய வேண்டிய அவசியத்தைச் சுட்டிக் காட்டினுர்கள். கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் மார்க்சும் எங்கெல்சும் முதன் முதலாக முன்வைத்த பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையே கட்சி எனும் கோட்பாடுகள், 1848-49ல் நடந்த புரட்சி, முதல் அகிலம், பாரிஸ் கம்யூன், இறுதியாக பல்வேறு நாடுகளில் சோஷலிசக் கட்சிகள் அமைப்பதற்காக நடந்த போராட்டம் ஆகியவற்றில் பெற்ற இன்னும் வளமையான அனுபவங்களின் அடிப்படையில் அவர்களால் மேலும் செழுமைப் படுத்தப்பட்டு, பாட்டாளி வர்க்கக் கட்சியின் வளர்ச்சி நியதி பற்றிய எங்கெல்சின் ஆழமிக்க இந்தச் சிந்தனையால் திட்டவட்டமாய் உருவம் பெறுகின்றன.

---

* *Engels' Letter to Bernstein on October 20, 1882;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 425.

பிரான்சில் தொழிலாளி வர்க்கத்தை இறுக்கமான குட்டி முதலாளித்துவச் சூழ்நிலைகள் சுற்றி நின்றதனுல், கடுமையான உள்போராட்டத்தின் வழியாகத்தான் பாட்டாளி வர்க்கக் கட்சி நிறுவப்பட்டதென்றுல் பிரிட்டனிலோ தொழிலாளர் கட்சி அமைப்பதற்கான சூழ்நிலைமைகள் இன்னும் கஷ்டமானதாய் இருந்தன.

முதன்முதலாக சுயேச்சையான பாட்டாளி வர்க்க அரசியல் இயக்கத்தின் மாதிரியை உலகுக்கு வழங்கி (சார்ட்டிசம்), அவ்வியக்கம் தொய்வு அடைந்த பின்பு முதல் அகிலத்து வழிகாட்டுதலின் கீழ் பரவலான வர்க்கப் போராட்டத்தைத் துவக்கி வைத்த பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்க இயக்கம், மீண்டும் பொருளாதாரப் போராட்டம் எனும் சிறு வட்டத்திற்குள் குறுகி ''மிகவும் சில்லறைத்தனமான தொழிற்சங்கக் குப்பைக்குள் விழுந்து தன்மீது புழுதி பூசிக் கொண்டிருந்தது'' (எங்கெல்ஸ்). சம்பள உயர்வு, வேலைநேரக் குறைப்பு ஆகியவற்றுக்கான போராட்டமே தொழிலாளர் இயக்கத்தின் ஒரே ஒரு குறிக்கோள் என்று முடிவு செய்த தொழிற்சங்கத் தலைவர்கள், பாட்டாளி வர்க்கம் சுயேச்சையான அரசியல் போராட்டம் நடத்துவதை எதிர்த்தார்கள். பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்துக்கு இதைவிடப் பேருதவி வேறென்ன இருக்க முடியும்?

பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதம் தற்காலிக வெற்றிகள் பெறுவதற்கான காரணங்களை 50ஆம் ஆண்டுகளிலேயே ஆய்வு செய்து அறிவித்த எங்கெல்ஸ், அவ்வாய்வினை மேலும் செழுமைப்படுத்தி 1883ல் பேபெலுக்கு எழுதினுர்:

''பிரிட்டனில் உண்மையான பாட்டாளி வர்க்க இயக்கம் விரிந்து பரவுகிறது என்று உன்னிடம் யாராவது சொன்னுல், எந்தக் காரணம் கொண்டும் நீ அதை நம்பி விடாதே... இப்போது தீவிரம் பெற்றிருக்கும் சக்திகள், நமது தத்துவார்த்த வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதன் மூலம் உறுதியான அடித்தளத்தில் ஏறி நின்றுல் முக்கியத்துவம் பெற முடியும். ஆனுல், இங்கு திரளான தொழிலாளர் இயக்கம் தொடங்கி, இந்நபர்களால் அவ்வியக்கதைக் கைப்பற்ற முடிந்தால்தான் இது சாத்தியமாகும்... பிரிட்டனின் உலகு தழுவிய ஏகபோகம் இறுதிக்கு வந்து விட்டது என்று தொழி

லாளர்கள் என்றைக்கு உணருகிறார்களோ, அன்றைக்குத் தான் (இதற்குள் எதிர்பாராதது எதுவும் நடந்து விடவில்லை என்றால்) உண்மையான தொழிலாளர் இயக்கம் இங்கு தோன்றும். பிரிட்டிஷ் தொழிலாளர்கள் அரசியல் மந்தத்திற்கு (Nullität), உலகச் சந்தையில் பிரிட்டன் செலுத்தி வரும் ஆதிக்கத்தில் பங்கெடுத்துக் கொள்வதுதான் பொருளாதார அடிப்படையாக இருந்தது, இருந்து வருகிறது.''

ஜெர்மனியும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறியதால் பிரிட்டன் தனது தொழில் துறை ஏகபோகத்தை இழக்கத் தொடங்கிய போதிலும், காலனிகளைச் சுரண்டுவதன் மூலம் கிடைத்து வந்த பிரம்மாண்டமான கொள்ளைகளை, பாட்டாளி வர்க்கத்தின் சலுகை பெற்ற சிறுபான்மையினரின் நிலைமையை உயர்த்தவும், மேலும் பரவலான தொழிலாளர்களுக்கு அவ்வப்பொழுது எச்சில் துண்டுகளை வீசியெறியவும் பயன்படுத்தினர் பிரிட்டிஷ் முதலாளிகள். இது, முதலாளித்துவச் சமுதாயத்துக்குள்ளேயே தொழிலாளர்களின் நிலைமையில் அடிப்படை முன்னேற்றத்தைக் கொண்டு வந்து விடலாம் என்கிற சந்தர்ப்பவாதக் கருத்துக்கள் பரவக் காரணமாயிற்று.

பிரிட்டிஷ் தொழிலாளர்களுக்கே உரிய எந்தவித தத்துவத்திலும் அக்கறை இல்லாமை காரணமாக அவர்களைத் தமது சித்தாந்தச் செல்வாக்கின் கீழ் முதலாளி வர்க்கம் எளிதாக வைத்துக் கொள்ள முடிந்தது. பிரிட்டனில் தொழிலாளர் இயக்கம் பின்தங்கிய நிலையில் இருந்ததற்கு இதுவும் ஒரு காரணம் என்று மார்க்சும் எங்கெல்சும் கருதினர்.

இந்தக் காரணங்களினால் எல்லாம், சுயேச்சையான பாட்டாளி வர்க்கக் கட்சி என்ற ஒன்றே பிரிட்டனில் இல்லாமல் போய் ஒன்றுக்கொன்று மூர்க்கமாகப் போராடிக் கொண்டிருந்த சில சோஷலிசப் பிரிவுகள் மட்டுமே இருந்தன.

பிரிட்டனில் பெரும் பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றை நிறுவுவதற்காக மார்க்சும் எங்கெல்சும் போராட்டத்தைத் துவக்கி வைத்து, தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டு, மார்க்சியப் போதனையைக் கற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவி செய்து, அப்போதனையை பிரிட்டிஷ் பத்திரிகைகளின் மூலமாகப் பிரசாரம் செய்து

வந்தனர். உதாரணமாக, 1881ஆம் வருடம் உழைப்புப் பதாகை (*Labour Standard*) என்னும் பத்திரிகையில் எங்கெல்ஸ் ஒரு நீண்ட தொடர் கட்டுரை எழுதினர். இக்கட்டுரைகளில், வெறும் பொருளாதாரப் போராட்டம் மட்டும் போதாது என்றும், முதலாளித்துவச் சுரண்டலை ஒழிக்கும் குறிக்கோள் கொண்ட ஒரு தொழிலாளர் கட்சி அமைக்க வேண்டியது அவசியம் என்றும் எளிய வடிவில் எங்கெல்ஸ் எடுத்துக்காட்டினர்.

தொழிலாளர்களின் கட்சி என்ற கட்டுரையில், ஐரோப்பாவில் அமைப்பு ரீதியில் மிகவும் ஒன்றுபட்டுள்ள தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பணி எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இல்லை பிரிட்டிஷ் பாட்டாளிகளின் அரசியல் பணி என்றும், அவர்கள் மிதவாத முதலாளி வர்க்கக் கட்சியின் ஒரு வால் போலத்தான் இருக்கிறுர்கள் என்றும் பிரிட்டிஷ் பாட்டாளிகளுக்கு விளக்கினர் எங்கெல்ஸ். ஐரோப்பியக் கண்டத்தில் இயங்கி வரும் தொழிலாளி வர்க்க இயக்கத்தை உதாரணம் காட்டி, பிரிட்டனில் சுயேச்சையான தொழிலாளர் கட்சி நிறுவ வேண்டியதன் முக்கியத்துவத்தையும், அரசியல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் பாட்டாளி வர்க்கம் போராட்டம் நடத்த வேண்டிய அவசியத்தையும் தெளிவுபடுத்தினர் எங்கெல்ஸ்.

சமுதாய வர்க்கங்கள்—அவசியமானவையும் அனுவசியமானவையும் என்னும் கட்டுரையில், முதலாளிகளின் குறுக்கீடு இல்லாமலேயே தொழிற்துறையின் பெரும் பிரிவுகளை தொழிலாளி வர்க்கம் சிறப்பாக நிர்வகிக்க முடியும் என்றும், நிர்வாகத்தில் முதலாளிகளின் குறுக்கீடு மேலும் மேலும் தீமை பயப்பதாகவே இருக்கும் என்றும் எங்கெல்ஸ் விளக்கினர்.

ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளர் இயக்கத்திலும் நிலவுகின்ற அடிப்படைக் குறையையும், தொழிலாளர் இயக்கத்துடன் சோஷலிசத்தை ஒன்றுபடுத்துவதற்கு அங்கே குறுக்கே நிற்கின்ற தடைகளையும் மார்க்சும் எங்கெல்சும் ஆழமாக எடுத்துக் காட்டினர்கள். பல்வேறு நாடுகளில் உண்மையான பாட்டாளி வர்க்கக் கட்சிகளை நிறுவுவதற்காகப் போராடிக் கொண்டே, இயக்கச் சங்கிலியை முழுவதுமாக இழுப்பதற்கு, இறுக்கமாகப் பற்றிக் கொள்ள வேண்டிய உறுதியான கண்

ணியை தொழிலாளி வர்க்கத்துக்கு மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினர்.

லெனின் எழுதினார்: ''விஞ்ஞானக் கோணத்தில் பார்க்கையில், குறிப்பிட்ட அரசியல் பொருளாதாரச் சூழ்நிலைமைகளின் திட்டவட்டமான தனித் தன்மைகளுக்குப் பிரயோகிப்பதில் பிரச்னையின் பல்வேறு அம்சங்களையும் அதன் பலப்பல பக்கங்களையும் முன்னணிக்குக் கொண்டுவந்து நிறுத்தி, அவற்றைக் கோடிட்டுக் காட்டுகின்ற திறமையையும் பொருள் முதல்வாத இயக்கவியலின் ஒரு மாதிரியையும் இங்கு நாம் காண்கிறோம். தொழிலாளர் கட்சியின் நடைமுறைக் கொள்கை, நடைமுறை உத்திகள் என்னும் கோணத்தில் பார்க்கையில், வேறுவேறு நாடுகளது தேசியத் தொழிலாளர் இயக்கத்தின் பல வேறு கட்டங்களுக்கு ஏற்றவாறு போராடி வரும் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளை கம்யூனிஸ்டு அறிக்கையின் தந்தையர் எப்படி நிர்ணயித்தனர் என்பதற்கு ஒரு மாதிரியை இங்கு நாம் காண்கிறோம்.''*

இதன் விளைவாக, எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர் இயக்கத்தின் சிறந்த பிரதிநிதிகள், தீர்மானமான நேரங்களில் எல்லாம் உதவியும் ஆலோசனையும் கோரி மார்க்சையும் எங்கெல்சையும் அணுகினர்.

தொழிலாளர் இயக்கத்தை வழிநடத்துகின்ற பொழுதே, தமது கட்சிப் பணியின் ஒரு அங்கம் என்று கருதிய தத்துவ ஆய்வுகளையும் மார்க்சும் எங்கெல்சும் தொடர்ந்து மேற்கொண்டு வந்தனர். எங்கெல்ஸ் பேக்கருக்குப் பின்கண்டவாறு எழுதினார்: ''நாம் கண்ணாரக் காண்கிறபடி, இன்று வரை வேறு எவராலும் செய்ய இயலாததும், வேறு எவரும் செய்ய விரும்பாததுமான முற்றிலும் நிர்ணயமான விஞ்ஞானப் பணிகளை நாங்கள் இருவரும்—மார்க்சும் நானும்—செய்து முடிக்க வேண்டி இருக்கிறது. உலக வரலாற்றின் அமைதியான இந்த நேரத்தை இப்பணிகளை முடிப்பதற்காக நாங்கள் பயன்படுத்த வேண்டும். அடர்த்தியான நடைமுறை இயக்கத்தின் ஆழத்திற்குள் ஏதாவது ஒரு சம்பவம் எவ்வளவு

---

* V. I. Lenin, *Preface to the Correspondence of F. A. Sorge;* V. I. Lenin, *Marx-Engels-Marxism*, Moscow; 1953, p. 235.

விரைவில் எங்களை மீண்டும் இறக்கி விடும் என்று யாரே அறிவர்? மேலும், முக்கியத்துவம் சற்றும் குறையாத இயக்கத்தின் தத்துவப் பகுதியைக் கொஞ்சமாவது வளமைப் படுத்துவதற்கு இந்தச் சிறு ஓய்வு நேரத்தை நாங்கள் பயன் படுத்தியாக வேண்டும்.''

மார்க்சினது தத்துவ ஆய்வுகளில் அடிப்படை விஷயமாக இருந்தது, மூலதனத்தின் இரண்டாவது, மூன்ருவது தொகுதி களைத் தீட்டி முடிக்கின்ற பணி. ஆனுல், மேலும் மேலும் மார்க்ஸ் நோய்வாய்ப் பட்டதால் இந்த வேலை தடைப் பட்டது.

மகத்தான விஞ்ஞான நேர்மை, கடுமையான சுயவிமர் சனம், வாழ்க்கை வழங்குகின்ற புதியவை அனைத்தையும் பொதுமைப்படுத்த வேண்டும் என்ற ஆவல்—இவை அனைத் தும் தமது நூலின் அடிப்படைப் பிரச்னைகளுக்கே மீண்டும் மீண்டும் மார்க்சைத் திரும்பி வரச் செய்தன. மூலதனத்தில் தத்துவ வழியாகப் பொதுமைப்படுத்தப்பட்டிருக்கிற ஒவ் வொன்றும், பிரம்மாண்டமான அளவில் உண்மைத் தகவல் களை ஆய்வு செய்து அந்த அடித்தளத்தில் நிறுவப்பட்டிருக் கிறது.

மூலதனத்தின் மூன்ரும் தொகுதியில் நில வாடகை பற் றிய பிரிவு இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. இந்தப் பிரிவை எழுதி முடிப்பதற்காக, சீர்திருத்தத்திற்குப் பிற்பட்ட காலத்திய ருஷ்யாவில் நிலவிய நில சம்பந்தமான உறவுகளைப் பெருமளவில் ஆய்வு செய்தார் மார்க்ஸ். மூல தனத்தை மொழிபெயர்ப்புச் செய்த தனியேல்சன், பேரா சிரியர் கவலேவ்ஸ்கி போன்ற தமது ருஷ்ய நண்பர்கள் பல ரின் மூலமாக ஏராளமான புள்ளிவிவரத் தகவல்களும், இலக் கியங்களும் பெற்று, அவற்றை மிகக் கவனமாக ஆய்வு செய் தார் மார்க்ஸ். நில வாடகை பற்றிய பிரிவை மீண்டும் செப் பனிடும் பொழுது, அவற்றை எல்லாம் பயன்படுத்த எண் ணம் கொண்டிருந்தார். எங்கெல்சின் கருத்துப்படி, மூலதனத் தின் முதல் பகுதியில் தொழில் துறை கூலி உழைப்பு பற்றிய ஆய்வில் பிரிட்டன் எத்தகைய பங்கை வகித்ததோ, அத்த கைய பங்கை நில வாடகை பற்றிய ஆய்வில் ருஷ்யா வகிக்க இருந்தது. ஆனுல், இத்திட்டத்தை மார்க்ஸ் நிறைவேற்று வதற்கு இயலாது போய் விட்டது.

எங்கெல்சைப் பொறுத்த வரை, மார்க்சியப் பிரச்சாரத்தில் பெரும் பணியாற்றி அதனை எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து பத்திரிகைகளில் காத்துக்கொண்டே, இயற்கை விஞ்ஞானங்களைத் தொடர்ந்து ஊடுருவிப் பயின்று வந்தார். இந்த ஆய்வுகளைத் துண்டு துண்டாய் மாஞ்செஸ்டரிலேயே தொடங்கிய எங்கெல்ஸ், ஹேக் காங்கிரசிற்குப் பின் இயற்கையின் இயக்கவியல் பற்றிப் பரவலாக ஆய்வு செய்யப் புகுந்தார். இந்த நூலுக்கு முன்னுரை மட்டும் எழுதி முடித்திருந்த அவர், டூரிங்கின் கைவண்ணத்தை விமர்சனம் செய்ய வேண்டிய அவசியத்தினால் இந்தப் பணியை நிறுத்தி வைக்க வேண்டியவரானார். டூரிங்குக்கு மறுப்பு எழுதி முடித்தவுடனே, 1878 ஜூனில் மீண்டும் தமது நூலுக்குத் திரும்பி வந்தார் எங்கெல்ஸ். தனித்தனி அத்தியாயங்களை ஏறத்தாழ எழுதி முடித்து, தனித்தனிக் குறிப்புக்களை நிறைய வரைந்து வைத்திருந்தார். ஆனால், மார்க்சின் மறைவுக்குப் பின்னர் இயற்கையின் இயக்கவியலை எழுதி முடிக்கும் பணியை அவர் தொடவே இல்லை. இந்த நூல் அப்படியே முடிவுறாமல் நின்றுவிட்டது. அது இருக்கின்ற முழு வடிவில் முதன் முதலாக சோவியத் யூனியனில் 1925ஆம் ஆண்டு ஜெர்மன், ருஷ்ய மொழிகளில் பிரசுரிக்கப்பட்டது.

இயற்கையின் இயக்கவியல் முடிவு பெறாத ஒரு நூலாக இருப்பினும், சிந்தனையின் செழுமையிலும் ஆழத்திலும், முழுமையான தத்துவ முக்கியத்துவத்திலும் தலைசிறந்த நூலாக விளங்குகிறது.

இந்த நூலின் முன்னுரையில், மறுமலர்ச்சிக் காலம் முதல் டார்வின் வரையுள்ள இயற்கை இயலின் வளர்ச்சி பற்றிய சிறப்பு மிக்க சித்திரம் தீட்டப்பட்டிருக்கிறது. இயக்க மறுப்பியல் கண்ணோட்டத்திற்கு எதிரான போராட்டத்தில், இயற்கையின் இயக்கவியல் பற்றிய அறிவு தடம் வகுத்துக் கொண்டு எப்படி மேலும் மேலும் முன்னேறி வந்தது என்பதை அழகுற எடுத்துக் காட்டுகிறார் எங்கெல்ஸ். விஞ்ஞான வளர்ச்சியை இறுதியாக நிர்ணயிக்கிற நடைமுறை இதில் வகிக்கும் பாத்திரத்தையும், பொருளுற்பத்தியின் பங்கையும் அவர் இங்கு கோடிட்டுக் காட்டுகிறார்.

இயற்கையின் இயக்கவியலில் தமது காலத்திய இயற்கை இயலைத் தத்துவஞான அடிப்படையில் பொதுமைப்படுத்தி,

இயற்கையில் நிகழ்பவை எல்லாம் இயக்கவியலின் பாற்பட்டே நடைபெறுகின்றன என்றும், எனவே இயற்கையை உணர்ந்து அறிவதற்கு ஒரே ஒரு சரியான வழி பொருள் முதல்வாத இயக்கவியல்தான் என்றும் எடுத்துக் காட்டினார் எங்கெல்ஸ்.

பொருளின் பல்வேறு இயக்க வடிவங்களையும், அவற்றில் இருக்கின்ற ஒற்றுமையையும், பரஸ்பரம் ஒன்று மற்றொன்றாக மாறுவதையும், அவற்றின் குணச் சிறப்புக்களையும் விளக்கித் தந்து, இயற்கை விஞ்ஞானங்களை இயக்கவியல் பொருள் முதல்வாத முறையில் வகைப்படுத்துவதற்கான அடிப்படைகளை நிறுவினார் எங்கெல்ஸ்.

தமது நூல் முழுவதிலும் மதப் பற்றுக் கொண்ட போலி விஞ்ஞானத்தை எதிர்த்துத் தீவிரமாகப் போராடுகிறார் எங்கெல்ஸ். கருத்துமுதல்வாதிகளையும் கொச்சைத்தனமான பொருள்முதல்வாதிகளையும் கண்டன விமர்சனம் செய்து, இயக்க மறுப்பியலுக்கும், முரட்டு அனுபவவாதத்துக்கும் எதிராகப் போராடி, இயக்கவியல்-பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திற்கு இயற்கை விஞ்ஞான அஸ்திவாரங்களை அவர் அமைத்துக் கொடுத்தார். இயற்கை இயலின் எல்லாத் துறைகளிலும், கணிதத்திலும், பழமைப் பற்றுள்ளோரை எதிர்த்துத் தாக்கி, அந்தக் காலத்தில் இருந்தவற்றுள் புதியவற்றையும், முற்போக்கானவற்றையும் ஆதரிக்கிறார்.

மிக முற்போக்கான, மிகவும் புரட்சிகரமான இயக்கவியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திலிருந்து இயற்கை விஞ்ஞானங்களை அணுகி மிகத் தொலை தூரம் முன்னோக்கிப் பார்த்து, அரிய பயன் மிக்க பல விஞ்ஞான அனுமானங்களை முன்வைக்கிறார் எங்கெல்ஸ். புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைக் கண்டு அவர் பேரானந்தம் கொள்கிறார். உதாரணமாக, அவர் காலத்திய விஞ்ஞானிகளில் பெரும்பாலோரின் கருத்துக்கு மாறாக, கூட்டுக் கலவையால் ஆனது அணு என்றும், அது பொருளின் சின்னஞ் சிறு எளிய கூறு அல்ல என்றும் கூறுகிற கருத்தை ஆதரித்தார் எங்கெல்ஸ். விஞ்ஞானம் மேலும் பெற்ற வளர்ச்சி எங்கெல்சின் இந்தக் கண்ணோட்டத்தை உறுதி செய்தது.

மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம் என்னும் கட்டுரையில், மனித

உடலுறுப்பின் உருவாக்கத்திலும், மொழியின் தோற்றத்திலும், மனித சமுதாயம் உருவாகியதிலும் உழைப்பு வகித்த தீர்மானகரமான பங்கினை எடுத்துக் காட்டுகிறார் எங்கெல்ஸ்.

இப்படியாக, பிரம்மாண்டமான அளவில் ஆய்வு செய்த தகவல்களின் அடிப்படையில், பொருள்முதல்வாத இயக்கவியலை இயற்கையின் ஆய்வுக்கு எவ்விதம் பயன்படுத்தலாம் என்பதற்கு மதிப்பிற்கரிய ஒரு மாதிரியை இந்த நூலில் வழங்கினார் எங்கெல்ஸ். அவர் காலத்திற்குப் பின்பு பெரும் பாய்ச்சலில் முன்னேற்றம் அடைந்துள்ள பௌதிகம், இரசாயனம், உயிரியல் போன்ற விஞ்ஞானங்களின் சில பிரிவுகளில் எங்கெல்ஸ் வகுத்தளித்த ஓரிரு கருத்துக்கள் பழைமையாகிப் போயினவெனினும், இயற்கையின் இயக்கவியல் பிரம்மாண்டமான தனது விஞ்ஞான, தத்துவஞான முக்கியத்துவத்தை இன்றும் கூட இழந்து விடவில்லை.

எங்கெல்சின் புகழ் பெற்ற நூலான இயற்கையின் இயக்கவியல், இன்னும் ஒரு புதிய கட்டத்துக்கு இயக்கவியல் பொருள்முவல்வாதம் வளர்ந்துள்ளதைக் குறிப்பிட்டு, மார்க்சியத் தத்துவச் செல்வத்துக்குள் தனது பங்கினைச் சேர்த்தது.

எங்கெல்சை அடியோடு உலுக்கி விட்டு, அவரது வாழ்க்கையையே முழுமையாக மாற்றி விட்ட சம்பவம் 1883 மார்ச்சு 14ஆம் நாள் நடந்தது. அந்தச் சம்பவம்தான் மார்க்சின் மறைவு.

மார்ச் 14ஆம் நாள் மாலை, அனைத்துலகச் சோஷலிச இயக்கத்திற்கு எத்தகைய இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதைத் தமது போராட்ட நண்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் தந்தி மூலம் தெரிவித்தார் எங்கெல்ஸ். லீப்க்னெஹ்டுக்கு எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''என்றென்றைக்குமாக உறைந்து போன முகத்துடன், அசைவற்று அவர் கட்டிலில் படுத்திருந்ததை இன்று மாலை நான் பார்த்தேன். எனினும், இந்த மேதைமை மிக்க அறிவு தனது சக்தி வாய்ந்த சிந்தனைகளால் இப்பூவுலகின் இரு பாதியிலுமுள்ள பாட்டாளி வர்க்க இயக்கத்தை வளமைப்படுத்துவதை நிறுத்தி விட்டது என்பதை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.''

''நமது கட்சியின் மிக வல்லமை வாய்ந்த அறிவு சிந்திப் பதை நிறுத்தி விட்டது. எக்காலத்துக்கும் எனக்குத் தெரிந்த இதயங்களிலேயே சக்தி மிக்க இதயம் துடிப்பதை நிறுத்தி விட்டது'' என்று பேக்கருக்கு எழுதினர் எங்கெல்ஸ்.

''மனித இனத்திற்கு ஒரு தலை குறைந்து போயிருக் கிறது. ஆனல், அந்தத் தலையோ, நமது யுகத்தில் மனித இனம் பெற்ற தலைகளிலேயே மிகச் சிறந்த தலையாகும்'' என்று அவர் ஸோர்கேக்கு எழுதினர்.

மார்க்சை இழந்தது எங்கெல்சுக்கு இரு மடங்கு துன்பம் மிக்கதாயிற்று. எந்த இயக்கத்திற்காக எங்கெல்ஸ் தமது வாழ்வை அர்ப்பணித்திருந்தாரோ அந்த இயக்கத்தின் மேதைமை மிக்க தலைவனை மார்க்சின் மறைவால் அவர் இழந்து விட்டார். தன்னுடைய இரண்டாவது ''நான்'' ஆன உருவத்தை, தனது உணர்வுபூர்வமான வாழ்வின் வழித்துணை வரை, உண்மை மிக்க நண்பரை, போராட்டத் தோழரை மார்க்சின் மறைவால் அவர் இழந்து விட்டார்.

1883 மார்ச் *17*ல், லண்டனில் உள்ள ஹைகேட் இடுகாட் டில் மார்க்சின் சவ அடக்கம் நடந்தது. தமது நண்பரின் கல்லறையருகே நின்று உணர்ச்சி ததும்ப உரை நிகழ்த்தினர் எங்கெல்ஸ். இப்பேச்சில், மார்க்சின் மாபெரும் விஞ்ஞானச் சாதனைகளையும், பாட்டாளிகள், உழைப்பாளிகள், ஒடுக்கப் பட்டோர் ஆகிய அனைவரின் மேன்மைக்காகத் தன்னலம் கருதாது அவர் வாழ்ந்த வீரஞ்செறிந்த போராட்ட வாழ்க் கையையும் சித்திரமாகத் தீட்டினர் எங்கெல்ஸ். தமது பேச்சினை தீர்க்கதரிசனம் மிக்க வார்த்தைகளில் அவர் முடித் தார்: ''அவரது பெயரும் பணியும் கால காலத்துக்கும் நிலைத்து நிற்கும்.''

அனைத்து நாட்டிலுமுள்ள பாட்டாளி வர்க்கப் புரட்சி வீரர்களுக்கும் மார்க்சின் மறைவு பற்றிய தகவல் தந்து கொண்டிருந்த, தமது வாழ்க்கையின் மிகத் துக்ககரமான நாட்களிலும் கூட, எங்கெல்ஸ் தமது மனத்தின் விழிப் புணர்ச்சியைக் காத்து நின்று, இழப்பு தந்த அடியில் இடிந்து போய் விடாமல் நிமிர்ந்தே நின்ருர்.

மார்க்சின் மறைவிற்கு அடுத்த நாள் பேக்கருக்கு எங் கெல்ஸ் எழுதினர்: ''*1848*ஆம் வருடத்துக்கு முந்தைய

பழைய போர் வீரர்களில் நானும் நீயும் மட்டும் தான் மிச்சம். அதனுல் என்ன? நமது பணி தொடருகிறது. சீறிப் பறக்கின்றன குண்டுகள், சாய்ந்து விழுகிருர்கள் நண்பர்கள்; ஆயினும், நம்மிருவருக்கும் இதில் வியப்புற ஏதுமில்லை. நம்மில் யாரையாவது குண்டொன்று தாக்கி வீழ்த்தி விடுமானுல், அப்படியே ஆகட்டும். அந்தக் குண்டு மட்டும், நீண்ட காலம் நெளியச் செய்யாதவாறு சரியானபடி தாக்கி விடட்டும்.''

9

மார்க்சின் மறைவுக்குப் பின் எங்கெல்ஸ் (1883-1895)

மார்க்ஸ் உயிர் வாழ்ந்த காலத்தில், தமது நண்பரின் மேதைமைக்கு வழி அமைத்துக் கொடுத்து, அந்த மகத்தான தோழன் மூலதனம் எழுதி முடிப்பதற்காக மனித சக்திக்கு உட்பட்ட அனைத்தையும் எங்கெல்ஸ் செய்தார் என்றால், மார்க்சினுடைய மறைவுக்குப் பின்போ, ஊசலாட்டம் ஒரு சிறிதுமில்லாமல் தமது விஞ்ஞான ஆய்வுகளை ஒதுக்கி வைத்து விட்டு, நண்பரின் நோய் காரணமாகவும் அவர் மறைந்து விட்டதாலும் முடியாமல் இருந்த மூலதனத்தை பிரசுரிப்ப தற்காகத் தமது வாழ்க்கையின் மீதி நாட்களைக் கழித்தார்.

மூலதனத்தின் இரண்டாம் தொகுதியின் கையெழுத்துப் பிரதியைப் பிரசுரிப்பதுதான் முதலில் செய்ய வேண்டிய வேலையாய் இருந்தது. தமது மறைவுக்குச் சில காலத்துக்கு முன்பு, மகள் எலியனேராவிடம் அக்கையெழுத்துப் பிரதி யைக் காட்டி ''இதை வைத்து எங்கெல்ஸ் ஏதாவது செய்ய வேண்டும்'' என்று சொல்லி இருந்தார் மார்க்ஸ். அதன் பின்பு, கையெழுத்துப் பிரதியின் மூன்றும் தொகுதியை வெளியிடுவதும், இறுதியாக, உபரி மதிப்பு பற்றிய தத்து வம் எனும் நான்காம் தொகுதியின் கையெழுத்துப் பிரதியை யும், அவரது சிறு நூல்கள் சிலவற்றையும் பிரசுரிக்க வேண்டி இருந்தது.

தமது வாழ்வின் 63ஆவது வயதில் மூலதனத்தின் கை யெழுத்துப் பிரதிகளை ஒழுங்கு செய்யும் பணியினை மேற்கொண் டிருந்த எங்கெல்ஸ், இதனை முடிக்காமல் தம் வாழ்நாள் முடிந்து விடுமோ என்று ஒவ்வொரு கணமும் கவலையுற்றார். தெளிவற்று இருந்த மார்க்சின் கையெழுத்தைப் படித்துப் புரிந்து கொண்டு, ஏடுகளை ஒழுங்கு படுத்தி முழுமையான உருவுக்குக் கொண்டு வருகின்ற பணியை எங்கெல்சைத் தவிர வேறு எவராலும் செய்திருக்க முடியாது.

மார்க்ஸ் காலமான சில நாட்களுக்குள்ளாகவே எங்கெல்சை நோய் தாக்கி, சுமார் ஆறு மாதங்களுக்கு அவரைப் படுக்கையில் கிடத்தி மூலதனப் பணியைத் தொடர முடியாமல் செய்த போது, லவ்ரோவுக்கு எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினுர்:''தனித்தனி வார்த்தைகளும், முழுமையான சொற்றொடர்களும் சுருக்கிச் சுருக்கி எழுதப்பட்டிருக்கின்ற இந்தக் கையெழுத்தினைப் படித்துப் புரிந்து கொண்டு முழுமைப் படுத்தக் கூடியவன் இன்று உயிர் வாழ்பவர்களில் நான் ஒரே ஒருவன் மட்டுமே என்பதுதான் என்னைப் பெருங் கவலைக்குள் ஆழ்த்துகிறது.''* நோயில் படுத்ததன் காரணமாய் இழந்து விட்ட நாட்களை ஈடு செய்வதற்காக, இரவு நேரங்களில் தொடர்ந்து வேலை செய்து கையெழுத்துப் பிரதிகளைத் திரும்ப எழுதிக் கொண்டிருந்தார் எங்கெல்ஸ். இதன் விளைவாக மீண்டும் நோய் தாக்கி விடவே அவர் மேசையருகே வேலைசெய்யக் கூடாது என்று மருத்துவர்கள் தடை விதித்து விட்டனர். அப்போது அவர் ''வீரஞ் செறிந்த வழி'' ஒன்றை மேற்கொள்வதென்று முடிவு செய்தார். கட்டிலில் படுத்த படியே, காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை கையெழுத்துப் பிரதியை அவர் படித்துச் சொல்ல ஒரு உதவியாளர் எழுதினுர்.

ஆனுல், கையெழுத்துப் பிரதியை எழுதி முடிப்பது அந்தப் பணியின் ஒரு சிறு பகுதிதான், வேலையின் முக்கியமான, கடினமான பகுதி அதுவல்ல. இன்னும் பெருமளவில் படைப்புப் பணி மேற்கொள்ள வேண்டி இருந்தது. எங்கெல்சைத் தவிர வேறு எவரும் இதனைச் செய்ய முடியும் என்று நினைத்தும் பார்க்க முடியாது. கையெழுத்துப் பிரதியில் அனேகமாக முழுமையாக முடித்து வைக்கப்பட்டிருந்த பகுதிகளைத் தவிர, அதே போன்ற முக்கியத்துவமுள்ள வேறு சில பகுதிகள் வெறுமே குறிக்கப்பட்டு மட்டுமே இருந்தன. கையெழுத்துப் பிரதியை மார்க்சே செப்பமிடும் பொழுது, சிறுசிறு பகுதிகளில் பலப்பல பாட பேதங்கள் வேறு தோன்றி இருந்தன. எனவே கையெழுத்துப் பிரதியையும் பாட பேதங்களையும் மிகக் கவனமாகப் பரிசீலித்து ஆங்காங்கு

---

* *Engels' Letter to P. L. Lavrov on February 5, 1884;* K. Marx and F. Engels, *Works*, Vol. XXVII, p. 352.

சிலவற்றைச் சேர்க்க வேண்டி நேர்ந்தது எங்கெல்சுக்கு. மூலதனத்தின் இரண்டாம் தொகுதிக்கான முன்னுரையில், ''நூலாசிரியரின் மனநிலையிலிருந்து மட்டுமே'' இந்தப் பணியைத் தான் சமாளித்து முடித்திருப்பதாக அழுந்தந் திருத்தமாகக் கூறினார் எங்கெல்ஸ்.

1885 பிப்ரவரியில் மூலதனத்தின் இரண்டாம் தொகுதியின் கையெழுத்துப் பிரதியை முடித்து பிரசுரத்திற்காக அச்சகத்திற்கு அனுப்பி வைத்தார்.

இது முடிந்த மறு கணமே மூன்றும் தொகுதியைச் சொல்லி எழுத வைத்தார். இறுதி முடிவுகளை எடுத்துக் கூறும் மூன்றும் தொகுதி, ''பொருளாதார விஞ்ஞானம் முழுவதிலும் பெரும் புரட்சியைக் கொண்டு வரும்.'' மார்க்சின் இந்த நூல், ''ஈடு இணையற்றது, ஒளி பாய்ச்சித் தெளிவூட்டுவது, பழைய அரசியல் பொருளாதாரம் அனைத்திலும் உண்மையிலேயே இதுவரை கண்டும் கேட்டுமிராத புரட்சி இது. இதனால் மட்டுமே, தாக்கித் தகர்க்க முடியாத அடித்தளம் நமது தத்துவத் திற்குக் கிடைத்திருக்கிறது. போர்முனைகளின் எல்லாப் பகுதிகளிலும் வெற்றிகரமான தாக்குதல் தொடுக்க நமக்கு வாய்ப்புக் கிட்டி இருக்கிறது''* என்று எழுதினார் எங்கெல்ஸ்.

மூன்றும் தொகுதியை இறுதியாகச் சரி செய்வதற்கு எங்கெல்ஸ் மிகப் பெரும் உழைப்பை நல்க வேண்டி இருந்தது. இத்தொகுதிக்கான தகவல்களை விரித்து முன்வைத்துக் கொண்டு, மிக அவசியமான திருத்தங்களையும், சேர்க்கைகளையும் ஒவ்வொரு முறையும் பெரும் கட்டுப்பாட்டுடன் செய்கிறார் எங்கெல்ஸ், மதிப்பிட முடியாத மார்க்சின் கையெழுத்துப் பிரதியைச் செப்பம் செய்யும் இந்தப் பணியை மிகப் பெரும் கவனத்துடன் ஆர்வத்துடனும் செய்கிறார் அவர். இந்தக் கையெழுத்துப் பிரதிகள் தமக்கு ''உயர்வான விஞ்ஞானப் பேரானந்தத்தின் ஊற்றுக் கண்ணாகத் திகழ்கின்றன'' என்றார் அவர். ''மார்க்சினுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு எடை தங்கத்திற்குச் சமமாய் இருப்பதால் இக்கையெழுத்துப் பிரதியைச் சரி செய்வதற்கு ஏராளமான உழைப்பு தேவைப்படுகிறது. ஆனால், இப்பணி எனக்கு

---

* *Engels' Letter to A. Bebel on April 4, 1885;* K. Marx and F. Engels, *Works*, Vol. XXVII, p. 459.

இனிமையாய் இருக்கிறது, ஏனெனில் இது பழைய நண்பரை என்னுடன் இருக்கச் செய்கிறது, அல்லவா?'' என்று பேக்கருக்கு எழுதினர் எங்கெல்ஸ்.

மூலதனத்தின் இரண்டாம், மூன்றும் தொகுதியின் வெளியீட்டுக்காக எங்கெல்ஸ் ஆற்றிய பிரம்மாண்டமான சிக்கல் மிகுந்த பணி குறித்து லெனின் எழுதினர்: ''...மூலதனத்தின் இவ்விரண்டு தொகுதிகளும் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரின் உழைப்புமாகும்.''

மூலதனத்தின் மூன்றும் தொகுதியைப் பிரசுரிக்கிற பணி சுமார் பத்து ஆண்டு உழைப்பை எங்கெல்சிடமிருந்து கறந்தது. நூலின் அளவு பெரிதாய் இருந்ததும், நூலின் உள்ளடக்கம் மிகவும் சிக்கலானதாய் இருந்ததும், எங்கெல்சினது கண் பார்வை மங்கிப் போனதும் மட்டும் இதற்குக் காரணம் அல்ல. மூலதனத்தின் இரண்டாம், மூன்றும் தொகுதிகளைப் பிரசுரிப்பதைத் தவிர இன்னும் ஏராளமான பணிகள் வேறு எங்கெல்சின் தோள்கள் மீது வீழ்ந்து கிடந்தன.

1886ல் எங்கெல்ஸ் முடித்துக் கொடுத்த மூலதனத்தின் முதல் தொகுதியினுடைய ஆங்கிலப் பதிப்பினைச் சரிபார்த்த வேலை தவிர, முதல், இரண்டாம் தொகுதிகளின் புதிய பதிப்புக்கள் வேறு அவர் வெளியிட வேண்டி இருந்தது. மெய்யறிவின் வறுமை, லுயீ போனபார்டின் பதினெட்டாவது புரூமெர், பிரான்சில் உள்நாட்டுப் போர், பிரான்சில் வர்க்கப் போராட்டம் போன்ற மார்க்சினது மற்ற நூல்களையும் அவற்றின் மொழிபெயர்ப்புக்களையும், தம்முடைய நூல்கள் சிலவற்றையும் வெளியிடுகின்ற வேலையையும், இவற்றுக்கெல்லாம், தத்துவ முக்கியத்துவத்துடன் நடைமுறை அரசியல் தன்மை வாய்ந்த தான முன்னுரைகள் எழுதுகின்ற பணியினையும் எங்கெல்ஸ் மேற்கொள்ள நேர்ந்தது.

மார்க்சின் மறைவுக்குப் பின்னர் 12 ஆண்டுகள் உயிர் வாழ்ந்த எங்கெல்ஸ், இந்தக் காலத்தில் ஏராளமான கட்டுரைகளும் அளவு கடந்த தத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவையான இரண்டு முழு நூல்களும் எழுதி முடித்திருக்கிறர். இந்நூல்களில் ஒன்ருன, குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்னும் நூலை (1881), ''மார்க்சினுடைய மரண சாசனத்தை ஓரளவுக்கு நிறைவு செய்யும்'' நூல் என்று எங்கெல்ஸ் கருதினர். அதாவது, இத்தகைய

நூல் ஒன்று எழுத வேண்டும் என்று திட்டமிட்டு, அதற்கான தகவல்களையும் சேகரித்து வந்த மார்க்ஸ் அதை எழுதி முடிக்க இயலாது போய் விட்டது. மோர்கனின் புத்தகமான பண்டைச் சமுதாயத்தில் இருந்து எடுத்த விஷயங்களையும், அதற்கு மார்க்ஸ் எழுதி வைத்திருந்த விமர்சனபூர்வமான குறிப்புக்களையும் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றத்தில் எங்கெல்ஸ் பயன்படுத்திக் கொண்டார்.

குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றத்தை ''நவீன சோஷலிசத்தின் அடிப்படையான நூல்களில் ஒன்று'' என லெனின் கருதினர். வரலாற்றைப் பொருள்முதல் வாதக் கண்ணோட்டத்தில் விளக்குவதிலும் விஞ்ஞானக் கம்யூனிசப் பிரச்னைகளுக்கான தீர்வைத் தருவதிலும் எங்கெல்சின் இந்த நூல் பிரம்மாண்டமான எட்டு எடுத்து வைத்திருக்கிறது. இந்த நூலில் மிகப் பழமையான மனித சமுதாயத்தை நம் கண் முன்னே காட்டி, பண்டைய சமுதாயத்தின் வரலாற்றையும், குடும்பத்தின் தோற்றம், அதன் பல்வேறு கட்டங்கள், வடிவங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியையும் மார்க்சிய முறையில் ஆராய்வதற்கான அடிப்படைகளை நிறுவியுள்ளார் எங்கெல்ஸ். அரசின் தோற்றம், வளர்ச்சி, எதிர்கால மறைவு ஆகியவற்றுக்கான சூழ்நிலைமைகளை வரலாறு பூர்வமாக பகுப்பாய்வு செய்துள்ளதுதான் அந்த நூலின் மூலாதாரமான விஷயமாகும். ஆதிகால சமுதாயத்தில் தொடங்கி, மனித வரலாற்றின் முந்திய காலத்தைப் பகுப்பாய்வு செய்து, பிரம்மாண்டமான வரலாற்று, அரசியல் தகவல்களின் அடிப்படையில் தீட்டப்பட்ட ஒவ்வொரு வார்த்தையின் மூலமாகவும், வர்க்கங்கள் தோன்றிய வரலாற்றுப் போக்கையும், அரசின் தோற்றத்தையும், வர்க்கப் போராட்டத்தின்போது அரசு வகிக்கின்ற பாத்திரத்தையும் பல்வேறு வரலாற்றுக் கட்டங்களில் அரசின் தனிப் பண்புகளையும், வடிவங்களையும் நமக்கு விளக்குகிறார் எங்கெல்ஸ்.

பகைமை நிலவுகின்ற, வர்க்கங்கள் இருக்கின்ற சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டுள்ள வர்க்கத்தை அடக்குவதற்கும் சுரண்டுவதற்கும் ஆதிக்கம் செலுத்துகின்ற வர்க்கம் பயன்படுத்தும் ஒரு கருவியே அரசு என்று வரலாற்று உண்மைகளின் மூலம் எடுத்துக் காட்டிய எங்கெல்ஸ், ''வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட'' தன்மை படைத்தது அரசு என்று சொல்லும்

முதலாளித்துவத் தத்துவத்தின் பொய்மையை தூள் தூளாக்கு கிருர். ஜனநாயகத் தன்மை கொண்டதான முதலாளித்துவக் குடியரசுக்கும் கூட இது பொருந்தும்: ''இந்தக் குடியரசில் செல்வம் தனது அதிகாரத்தை மறைமுகமாகச் செலுத்து கிறது, இருந்தாலும் முன்னை விட நிச்சயமாகச் செலுத்து கிறது. ஒரு பக்கத்தில், அதிகாரிகளை நேரடியாக லஞ்ச ஊழலுக்குட்படுத்துவது—இதற்கு அமெரிக்கா சாஸ்திரீய உதாரணமாக விளங்குகிறது; இன்னொரு பக்கத்தில், அர சாங்கத்துக்கும் பங்கு மார்க்கெட்டுக்குமிடையே ஒப்பந்தம் என்ற வடிவத்தில்; அரசாங்கக் கடன் அதிகமாக ஆக, பங்கு மார்க்கெட்டைத் தமது மையமாகக் கொண்டு போக்குவரத்தை மட்டுமின்றி உற்பத்தியையே, தமது கையில் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் குவித்துக் கொள்வது அதிகமாக ஆக, இப்படி ஒப்பந்தம் செய்துகொள்வது மேலும் மேலும் சுலபமாகிறது.''*

வர்க்கங்கள் இல்லாமலும், அதன் காரணமாக அரசு என்பதே இல்லாமலும் போன ஒரு வரலாற்றுக் காலம் இருந்திருக்கிறது என்ருல், அரசு என்பதே இல்லாமல் ஒழிந்து போகிற இன்னும் உயர்வான வரலாற்று வளர்ச்சிக் கட்டம் கண்டிப்பாக வந்தே தீரும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எல்லா வர்க்கங்களையும் எல்லாச் சுரண்டல்களையும் ஒழித்துக் கட்டி விடும். ''... வர்க்கங்கள்.... வீழ்ச்சியுறும். அவற் றுடன் அரசும் தவிர்க்க முடியாதபடி வீழ்ந்து போகும். உற் பத்தியாளர்களின் சுதந்திரமான, சமமான சங்கம் என்ற அடிப்படையில் உற்பத்தியை ஸ்தாபன ரீதியாக நடத்தப் போகிற சமுதாயம், அரசு இயந்திரம் முழுவதையும் அது அப்போது இருக்க வேண்டிய இடத்தில், அதாவது தொல் பொருள் மியூசியத்தில், கைராட்டை, வெண்கலக் கோடாலி ஆகியவற்றின் பக்கத்தில் கொண்டுபோய் வைத்துவிடும்.''**

அரசின் தோற்றத்தையும் சாரத்தையும் அதன் எதிர் கால வளர்ச்சிக்கான வாய்ப்புக்களையும் முற்ற முழுக்க

---

* பி. எங்கெல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகிய வற்றின் தோற்றம், மாஸ்கோ, 1974, பக்கம் 268.

** பி. எங்கெல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகிய வற்றின் தோற்றம், மாஸ்கோ, 1974, பக்கம் 270.

எங்கெல்ஸ் ஆய்வு செய்ததானது அரசைப் பற்றிய மார்க்சிய போதனைக்கு ஒரு புதிய நிதியம் சேர்த்துத் தந்தது.

எங்கெல்சினுடைய இன்னொரு நூல் அளவற்ற தத்துவார்த்த முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இதுதான் லூத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும் என்ற நூல். இது 1888ஆம் ஆண்டு வெளியாயிற்று. இந்த நூலில், தனக்கு முந்திய தத்துவஞானங்களை மார்க்சியம் எப்படிப் பார்க்கிறது என்பது காட்டப்பட்டிருக்கிறது. ஹெகலின் தத்துவஞானத்தையும், ஃபாயர்பாகின் போதனையையும் இந்த நூலில் எங்கெல்ஸ் சுருங்கச் சொல்லி, மார்க்சும் எங்கெல்சும் தமது கண்ணோட்டங்களை வகுத்துக் கொள்வதற்கு அவர்கள் எந்த அளவு செல்வாக்குச் செலுத்தினர்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிருர். இத்துடனேயே ஹெகலின் கருத்துமுதல்வாதத் தத்துவஞானத்தில் காணப்படுகிற அடிப்படைக் கோளாறுகளையும், ஃபாயர்பாகின் பொருள்முதல்வாதத்தின் ஆழமின்மையையும் புட்டுப் புட்டு வைக்கினர் எங்கெல்ஸ்.

இயக்கவியல் பொருள்முதல்வாதம், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு நிகழ்ந்த தத்துவஞானப் புரட்சியின் சாரத்தை இதில் காட்டி, மார்க்சியத் தத்துவஞானத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை முறையாக தீட்டித் தருகிருர் எங்கெல்ஸ்.

பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் ஆகிய இரு தத்துவஞான முகாம்களுக்கு இடையே நிகழும் போராட்டத்தின் கண்கொண்டு எல்லாப் பிரச்னைகளையும் பார்க்கின்ற எங்கெல்ஸ், மற்ற நூல்களில் செய்வது போலவே தத்துவஞானத்திலும் கட்சியுணர்வை வலியுறுத்துகிருர்.

தொண்ணூறும் ஆண்டுகளின் தொடக்கத்தில், ஆர். ஷ்மித், பி. ஏர்னெஸ்டு, இ. பிலோஹ், பி. மெரிங், வி. போர்கிவுஸ் ஆகியோருக்கும் இன்னும் பிறருக்கும் எங்கெல்ஸ் எழுதிய கடிதங்கள் மாபெரும் தத்துவ முக்கியத்துவம் உள்ளதாய் விளங்குகின்றன. வரலாற்றுப் போக்கை வழி நடத்துவது பொருளாதாரக் காரணம் மட்டுமே என்றும், அரசியல், சித்தாந்த மேல்கட்டுமானங்கள் எல்லாம் அமைதியான வெறும் பின்விளைவுகளே என்றும், இவை வரலாற்றின் மீது எந்த விதமான செல்வாக்கும் செலுத்துவதில்லை என்றும்

அடித்துக் கூறி வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தைக் கொச்சைப்படுத்திக் கொண்டிருந்தவர்களை இக்கடிதங்களில் எதிர்த்துத் தாக்கினர் எங்கெல்ஸ். மார்க்சியத்தை இவ்வாறு கொச்சைப்படுத்துவது, மக்களே இல்லாமலும், மக்களுக்கு அப்பாற்பட்டும் தாளுகவே இயங்குகிற போக்கே வரலாறு என்று, விதிவசக் கண்ணேட்டத்தில் வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கு இட்டுச் சென்றது. இத்தகைய கொச்சைத் தனத்தைக் கண்டனம் செய்த எங்கெல்ஸ், பொருளாதாரக் காரணங்கள் தாமாக இயங்கிச் செயல்படுவதில்லை என்றும், மக்கள்தாம் தமது வரலாற்றைப் படைக்கிருர்கள் என்றும், வரலாற்றுப் போக்கில் பொருளாதாரச் சூழ்நிலைமைகள் இறுதி நிலையில்தான் நிர்ணய சக்தியாக விளங்குகின்றன என்றும் தெளிவுபடுத்தினர்.

''...பொருள்முதல்வாதக் கண்ணேட்டத்தில் வரலாற்றைப் புரிந்து கொள்கையில், வரலாற்றுப் போக்கின் இறுதியான நிர்ணய சக்தியாக விளங்குவது எதார்த்த வாழ்க்கையில் நிகழும் உற்பத்தியும், மறுவுற்பத்தியுமே ஆகும். இதற்கதிகமாக எதையும் நானே மார்க்சோ உறுதிப் படுத்தவில்லை. பொருளாதாரக் காரணம் மட்டுமே ஒரே ஒரு நிர்ணய சக்தியாக விளங்குகிறது என்ற அர்த்தத்தில் யாராவது இதனைத் திரித்துக் கூறினல், இதனை ஏதுமற்ற, சூட்சும மான, அர்த்தமற்ற சொற்ருெடராக அவர் மாற்றி விடுகிருர் என்றே பொருள். பொருளாதார நிலைமைதான் அடிப்படை. ஆனல் வரலாற்றுப் போராட்டப் போக்கின் மீது மேல்கட்டுமானத்தின் பல்வேறு வகைகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பலப்பல நேரங்களில் அப்போராட்டத்தின் வடிவத்தை நிர்ணயிக்கின்றன. வர்க்கப் போராட்டத்தின் அரசியல் வடிவங்கள், அப்போராட்டத்தின் விளைவுகள், அதாவது போராட்டத்தில் வெற்றி வாகை சூடிய வர்க்கம் உருவாக்குகின்ற அரசு அமைப்பு போன்றவையும், சட்டத் துறை அமைப்புக்களும், இந்த உண்மையான போராட்டங் களின் பிரதிபலிப்பு போராட்டத்தில் பங்கு கொள்வோரின் மூளையில் தோன்றுவதுங் கூட, அரசியல் ரீதியான, சட்டபூர்வ மான தத்துவஞானக் கோட்பாடுகள், சமயக் கண்ணேட்டங் கள் ஆகியவையும் போதனைகளின் அமைப்புக்குள் இவையெல் லாம் மேலும் வளர்ச்சியுறுவதும் ஆகிய அனைத்தும் வர

லாற்றுப் போராட்டப் போக்கின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன''* என்று 1890ஆம் ஆண்டு செப்டம்பர் 21-22ல் பிலோகுக்கு எழுதினர் எங்கெல்ஸ்.

ஆட்சி அதிகாரம் உள்ளடங்கிய மேல்கட்டுமானம் சமுதாயத்தினது பொருளாதாரத்தின் மீது எதிர்த் திசைச் செல்வாக்குச் செலுத்துகிறது என்ற சிந்தனையை எங்கெல்ஸ் மேலும் வளமைப்படுத்தி 1890 அக்டோபர் 27ல் கி. ஷ்மித்துக்கு எழுதினர்: ''அரசியல் அதிகாரம் பொருளாதார ரீதியில் சக்தியற்றது என்ருல், பாட்டாளி வர்க்க அரசியல் சர்வாதிகாரத்திற்காக நாம் ஏன் அடித்துக் கொள்ள வேண்டும்?''

புதிய தத்துவத்தை முற்ற முழுக்கப் புரிந்து கொண்டதாகவும், சில அடிப்படைக் கோட்பாடுகளை மட்டும் புரிந்து கொண்டு (பல நேரங்களில் சரியாகப் புரிந்து கொள்ளவுமில்லை) இத்தத்துவத்தை உடனடியாக அமுலுக்கு கொண்டு வந்து விடப் போவதாகவும் அடிக்கடி நினைத்துக் கொண்டிருந்த புத்தம் புதிய ''மார்க்சிஸ்டுகளைக்'' கண்டு அருவருப்புக் கொள்கிருர் எங்கெல்ஸ்.

இவ்வாருக, வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பற்றிய கடிதங்களில், சமுதாயத்தைப் பற்றிய மார்க்சிய போதனையை வளர்த்து திட்டவட்டமாக உருவாக்கினர் எங்கெல்ஸ்.

அயர்லாந்து வரலாறு பற்றித் தாம் எழுதிக் கொண்டிருந்த நூலையோ, இயற்கையின் இயக்கவியலையோ எங்கெல்ஸ் மீண்டும் தொடவில்லை. செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணமிட்டிருந்த மற்றும் சில நூல்களையும் வரைவதற்கு அவருக்கு வாய்ப்புக் கிட்டவே இல்லை.

உதாரணமாக, வரலாற்றில் நிகழ்ந்துவரும் வன்முறையின் பாத்திரம் பற்றி ஜெர்மன் மொழியில் பிரசுரம் எழுத அவர் திட்டமிட்டிருந்தார். டூரிங்குக்கு மறுப்பு எனும் நூலின் மூன்று அத்தியாயங்களைத் தவிர, அப்பிரசுரத்திற்காகவே விசேஷமாகஎழுதப்பட்ட, 1848ஆம்ஆண்டு முதலாக ஜெர்மன் வரலாற்றில்வன்முறைவகிக்கும் பாத்திரம் பற்றிய நான்காவது அத்தியாயத்தையும் இப்பிரசுரத்தில் சேர்க்க இருந்தார்

* *Engels' Letter to Bloch on October 21-22, 1890;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 498.

எங்கெல்ஸ். 1888ல் எங்கெல்ஸ் எழுதிக் கொண்டிருந்த இப்பிரசுரம் முடிவு பெருமலே நின்று விட்டது.*

அதேபோல், மார்க்சினது வாழ்க்கை வரலாற்றை விவரமாக எழுத வேண்டுமென்றும், 1843-1863 காலத்திய ஜெர்மன் சோஷலிச இயக்க வரலாற்றையும், முதல் அகிலத்தின் சரித்திரத்தையும் எழுத வேண்டுமென்றும் எங்கெல்ஸ் எண்ணம் கொண்டிருந்தார். இதற்கு பதிலாக, மார்க்சின் வாழ்க்கை பற்றிய ஒரு சிறு நூலும், சில கட்டுரைகளும், முன்னுரைகளும்தான் (கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் வரலாறு பற்றி, மார்க்சும் ''புதிய ரைன் பத்திரிகையும்'' போன்றவை) எங்கெல்சுக்கு எழுத முடிந்தது. இவற்றில், பாட்டாளி வர்க்கக் கட்சி அமைப்பதற்காக மார்க்சும் தாமும் சேர்ந்து நடத்திய போராட்டத்தின் முதல் பகுதியைப் பற்றி விளக்கினுர்.

வர்க்கப் போராட்டத்தில் தத்துவ துறைக்கு எங்கெல்ஸ் பெரும் முக்கியத்துவம் கொடுத்த போதிலும், தத்துவத் துறையில் தம்முடைய இடத்தையும் மார்க்சினுடைய இடத்தையும் இட்டு நிரப்பத் தக்கவர் எவரையும் எங்கெல்ஸ் காணவில்லையாயினும், தாம் எண்ணமிட்டிருந்த தத்துவ நூல்கள் பலவற்றை எழுதி முடிக்கவோ, மூலதனத்தின் நான்காம் தொகுதியின் (உபரி மதிப்பு பற்றிய தத்துவம்) கையெழுத்துப் பிரதியை அச்சுக்குக் கொடுப்பதற்காகத் தயார்படுத்தவோ அவரால் முடியவில்லை.

இந்தக் காலம் முழுதும் எங்கெல்ஸ் ஆற்றி வந்த சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தை வழிநடத்துகின்ற பிரம்மாண்டமான பணியினை நினைத்துப் பார்த்தால் இதற்கான காரணம் புரியும்.

மூலதனத்தின் மூன்ரும் தொகுதிக்கான முன்னுரையில், இத்தொகுதியை வெளியிடுகின்ற பணியினை இவ்வளவு நீண்ட காலம் தாம் செய்ய நேர்ந்ததற்கான காரணத்தை விளக்குகையில், தத்துவ ஆய்வுகளின் கண்ணேட்டத்திலிருந்து சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சி தன்னிடமிருந்து அடிக்கடி மிக அதிக உதவி கோருகிறது என்று குறிப்பிட்டார் எங்கெல்ஸ். ''இவ்வியக்கத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தீவிரமாகச் செயலாற்றியுள்ள

* K. Marx and F. Engels, *Works*, Russ. ed., Vol. XVI, Part I, pp. 452-507.

என்னைப் போன்ற ஒருவனுக்கு, இவ்வியக்கம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் ஒத்தி வைக்க முடியாத கடமைப் பற்றுடன் உடனடியாக நிறைவேற்றி வைக்க வேண்டிய பணிகளாக இருக்கின்றன'' என்று எழுதினார் எங்கெல்ஸ்.

தத்துவத் துறையிலும், அரசியல் தலைமையின் நடைமுறைத் துறையிலும் மார்க்சுக்குப் பதிலாகத் தாம் பணியாற்ற வேண்டி நேர்ந்திருக்கின்ற நேரத்தில், தமது தோள்களில் விழுந்திருக்கின்ற பெரும் பொறுப்பை ஆழமாக உணர்ந்தார் எங்கெல்ஸ்.

''இரண்டாம் பிடில் வாசித்துக் கொண்டிருந்த நான், என் வாழ்க்கை விதித்திருந்த பணியினை சகிக்கத்தக்க அளவிலேயே வாழ்நாள் முழுதும் செய்து வந்திருப்பதாக எண்ணுகிறேன். என்னருகே மகத்தான முதல் பிடிலான மார்க்ஸ் இருந்தது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இப்போது தத்துவப் பிரச்னைகளில் மார்க்சின் இடத்தை ஏற்றுக் கொண்டு முதல் பிடில் வாசிக்க நேருகின்ற பொழுது, இந்தப் பணி தவறுகள் இன்றி நிறைவேற முடியாது. இதனை என்னைப் போல் வேறு யாரும் தீவிரமாக உணர இயலாது. இன்னும் வேகமாய்ப் புயல் வீசுகின்ற காலங்கள் வரும் போது மார்க்சின் மறைவு நமக்கு எத்தகைய இழப்பு என்று உணருவோம். தேவையான காலங்களில் சரேலெனச் செயல்படவும், எல்லா நேரங்களிலும் சரியான தீர்வைக் கண்டுபிடிக்கவும், முக்கியமான இடத்தில் வேகமான தாக்குதல் தொடுக்கவும் பயன்பட்ட அவரது பரந்து விரிந்த அறிவைப் போன்ற பரந்து விரிந்த அறிவை நம்மில் எவரும் பெற்றிருக்கவில்லை. அமைதியான காலங்களில், அவ்வப்பொழுது அவருடைய வாதத்தை விட என்னுடைய வாதமே சரி என்று சம்பவங்கள் மெய்ப்பித்து இருக்கின்றன. ஆனால், புரட்சிக் காலங்களில் அவருடைய கருத்தே அனேகமாகத் தவறற்றதாக இருந்தது'' என்று பேக்கருக்கு எழுதினார் எங்கெல்ஸ்.

சர்வதேசச் சோஷலிச இயக்கத்தை அந்தக் காலத்தில் வழிநடத்துவது எவ்வளவு பிரம்மாண்டமான சிக்கல் மிகுந்த பணியாக இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளுவதற்கு, இந்த இயக்கத்தின் பரவலான மாபெரும் வளர்ச்சியையும், பல்வேறு நாடுகளில் பலப்பலவாய் நிலவிய போராட்டத் தன்மையையும், போராட்டச் சூழல்களையும் மனத்தில்

கொள்ள வேண்டும். மிகப்பல ஐரோப்பிய நாடுகளில் தோன்றி இருந்த சோஷலிசக் கட்சிகளை வழிநடத்துகின்ற பொழுது, பொதுவான அம்சங்களை மனதில் கொள்ளும் பொழுதே, பல்வேறு நாடுகளின் தொழிலாளர் இயக்கத்தில் காணப்பட்ட தனியான சிறப்பியல்புகளையும் கருத்தில் கொண்டார் எங்கெல்ஸ். ஒரேயொரு முழுமையான சர்வ தேச போதனை என்ற அளவில் மார்க்சியத்தின் முக்கியத்து வத்தைக் கோடிட்டுக் காட்டுகிறார். வேறுவேறு நாடுகளில் தொழிலாளர் இயக்கத்தில் திட்டவட்டமான வடிவங்களும், நடைமுறை உத்திகளும் பலப்பலவாய்க் காணப்படுமாயி னும், பொதுவான அதன் அடிப்படைக் கோட்பாடுகளையும் தொழிலாளர் இயக்கத்தினது பொதுவான விதிகளின் முக்கி யத்துவத்தையும் நிலை நாட்டுகிறார் எங்கெல்ஸ். இக்காலத் தில் ஒவ்வொரு நாட்டையும் கவனமாகவும் விவரமாகவும் அவர் ஆய்வு செய்கிறார். அதிக எண்ணிக்கையில் வளர்ந்து வரும் சோஷலிஸப் பத்திரிகைகளைக் கூர்ந்து கவனிக்கிறார், சோஷலிசப் பத்திரிகைகளில் வழிகாட்டும் கட்டுரைகள் எழுதுகிறார், பல்வேறு நாடுகளில் உள்ள சோஷலிஸ்டுகளு டன் கடிதப் போக்குவரத்து நடத்துகிறார், லண்டனில் தமது வீட்டிற்கு வருகின்ற எண்ணிறந்த பார்வையாளர்களுடன் கலந்துரையாடுகிறார்.

''மார்க்சின் மறைவுக்குப் பிறகு, ஐரோப்பிய சோஷ லிஸ்டுகளுக்குத் தலைவராகயும் ஆலோசகராயும் எங்கெல்ஸ் ஒருவரே விளங்கினார். அரசாங்கத்தின் அடக்குமுறைகளைக் கடந்து வேகமாக, இடையறாது வளர்ச்சி பெற்று வலிமை யுற்று வந்த ஜெர்மன் சோஷலிஸ்டுகளும், பின்தங்கிய நாடு களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், உதாரணமாக, எண்ணிப் பார்த்து முதல் எட்டுக்களை எடுத்து வைக்க வேண்டி இருந்த ஸ்பானியர்களும், ருமேனியர்களும், ருஷ்யர்களும் அறிவுரை களுக்காகவும், ஆணைகளுக்காகவும் அவரையே அணுகினர். அவர்கள் எல்லோரும் முதிர்ந்தவரான எங்கெல்சினது வளமையான அனுபவ, அறிவுக் கருவூலத்திலிருந்து வேண்டு மட்டும் அள்ளி அள்ளி எடுத்துக் கொண்டனர்''* என்று எழுதினார் லெனின்.

---

* V. I. Lenin, *Frederich Engels;* V. I. Lenin, *Marx-Engels-Marxism*, Moscow 1953, p. 70.

அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வந்த எங்கெல்ஸ், ஒவ்வொரு கட்சியின் பணிகளையும் கூர்ந்து கவனித்து வந்து, தேவை ஏற்பட்டால் கட்சியை நேர்வழியில் செலுத்துவதற்காக உறுதியுடன் அதன் வேலையில் தலையிட்டார். சீர்திருத்தவாதத்தை எதிர்த்து அவர் இடையருது போராடியதைப் போலவே, குட்டி முதலாளி வர்க்க அதிதீவிர புரட்சித்தனத்தையும் எதிர்த்துத் தொடர்ந்து போராடுகிறுர் எங்கெல்ஸ்.

பிரிட்டிஷ்-அமெரிக்கச் சோஷலிச இயக்கம் தொழிலாளர் மக்களிடமிருந்து துண்டுபட்டு நின்றதையும், அவ்வியக்கத்தில் நிலவிய செக்டேரியன் வாதம், வரட்டுத்தனம் ஆகியவற்றையும் தமது நாட்டின் திட்டவட்டமான சூழல்களுக்கு ஏற்ப மார்க்சியத்தை அவ்வியக்கம் அமுல் படுத்த முடியாமல் இருந்ததையும் எங்கெல்ஸ் மிகக் கடுமையாகக் கண்டனம் செய்கிறுர்.

பலப்பல பொருளாதார, அரசியல் காரணங்களால் இந்தக் காலத்தில் அனேகமாய் எந்த விதமான அரசியல் தனித் தன்மையையும் பாட்டாளிவர்க்கம் வெளிப்படுத்தாமல் இருந்த நாடுகளான பிரிட்டன், அமெரிக்கா ஆகியவற்றின் சிறப்பு இயல்புகளை எங்கெல்ஸ் மனத்தில் கொண்டார். அரசியலைப் பொறுத்தவரை, தொழிலாளர்களை ஏமாற்றுவது, சீர்கேடுறுத்துவது, கைக்கூலி கொடுத்து விலைக்கு வாங்குவது ஆகிய கலைகளில் கைதேர்ந்த முதலாளி வர்க்கத்தின் வாலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தது இந்த நாடுகளில் இருந்த பாட்டாளி வர்க்கம்.

பாட்டாளி வர்க்கத்தை அரசியல் ரீதியில் விழிப்படையச் செய்து, உயர்வான தத்துவ அடிப்படையில் இல்லையென்ருலும், அணைபோல் தடுத்து நிற்கின்ற முதலாளி வர்க்கச் செல்வாக்கை அறுத்து உடைக்கின்ற அளவிலாவது தொழிலாளர் திரளை ஒன்று கூட்டி ஒழுங்குபடுத்த வேண்டியதுதான் இந்த நாடுகளில் உள்ள சோஷலிஸ்டுகளின் பிரதான கடமை என்று சுட்டிக் காட்டினுர் எங்கெல்ஸ்.

எனவேதான், விஞ்ஞானக் கமயூனிசப் போதனையைக் காலாவதியான வரட்டுப் போதனையாக மாற்றி, எல்லாத் தத்துவங்களையும் அலட்சியமாய் உதறித்தள்ளி விட்டு பின் தங்கிய நிலையில் இருந்த அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு

அதனை மேலிருந்து திணிக்க முயன்ற, அமெரிக்காவில் இருந்த ஜெர்மன் சோஷலிஸ்டுகளைக் கடுமையாகக் கண்டிக்கிறார் எங்கெல்ஸ்.

''அமெரிக்கப் பொது மக்களை இயங்க வைக்கிற ஒரு நெம்புகோலாக தமது தத்துவத்தை மாற்றிக் கொள்வதற்கு ஜெர்மானியர்களால் முடியவே இல்லை. பெரும்பாலும் இந்தத் தத்துவத்தை அவர்களே புரிந்து கொள்ளாமல், மனப்பாடம் செய்து கொள்ள வேண்டிய, வெறும் வரட்டுத்தனமான சூத்திரங்களாகவே அவற்றைக் காண்கிறார்கள். அவ்வாறு மனனம் செய்து கொள்வதே வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் போதும் என்று எண்ணுகிறார்கள். அவர்களுக்கு இது வெறும் சூத்திரம், செயல்படுவதற்கான வழிகாட்டி அல்ல''* என்று எழுதினார் எங்கெல்ஸ்.

மேலும், அமெரிக்கத் தொழிலாளர் இயக்கம் இருந்து வந்த சூழ்நிலைமைகளையும், இவ்வியக்கத்தின் தன்மைகளையும் ஜெர்மானியர்கள் புரிந்து கொள்ளாததால், அவர்களின் பிரசாரம் இயல்பாகவே எந்த விதமான வெற்றியையும் ஈட்டவில்லை. அமெரிக்கத் தொழிலாளர் இயக்கம் அதன் சொந்தப் பாதையில் போய்க் கொண்டிருந்தது. அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்பது, ''கூலி உழைப்பு அமைப்பினை கூட்டுறவுத் தொழில் அமைப்பு மூலம் மாற்றுவதற்காகக் கூட்டுறவு அமைப்பை நிறுவுவது'' போன்ற குழப்பம் மிகுந்த கோட்பாடுகள்தாம் அமெரிக்கத் தொழிலாளர்களின் அப்போதைய நிலைக்கு ஏற்றவையாக இருந்தன. இத்தகைய அமெரிக்கத் தொழிலாளர் அமைப்புகளை உயர் மட்டத்தில் அணுகி, செக்டேரியன் வாதத்தின் மூலம் அவைகளை ஒதுக்கித் தள்ளி விடுவதற்கு பதிலாக, திரளான தொழிலாளரின் இயக்கத்தை விசேஷ அக்கறையுடன் அணுகி, அவர்களின் தவறுகளால் வரப் போகின்ற விளைவுகளை முன்னதாகவே சுட்டிக் காட்டி, இதன் மூலம் நடைமுறைப் படிப்பினை தொழிலாளர்களுக்கு மார்க்சியத் தத்துவத்தை அமெரிக்கச் சோஷலிஸ்டுகள் சொல்லித் தர வேண்டும் என்று எங்கெல்ஸ் கருதினார்.

---

* *Engels' Letter to F. A. Sorge on November 29, 1886;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 469.

எங்கெல்சின் கருத்துப்படி, 1845-48ஆம் ஆண்டுகளில் மார்க்சும் எங்கெல்சும் கடைப்பிடித்த உத்திகளான ''தொழிலாளி வர்க்கத்தின் எந்த ஒரு உண்மையான பெரிய இயக்கத்திலும் கலந்து கொண்டு, அந்த இயக்கம் எப்படித் தொடங்குகிறதோ அதனை அப்படியே ஏற்றுக் கொண்டு, செய்யப்படுகின்ற ஒவ்வொரு தவறும், அடைகின்ற ஒவ்வொரு தோல்வியும் ஆதிமுதல் வேலைத்திட்டத்தில் கண்டுள்ள தத்துவக் கருத்துக்களில் உள்ள கோளாறின் தவிர்க்க முடியாத விளைவே என்று சுட்டிக் காட்டி சிறுகச் சிறுகத் தத்துவ மட்டத்திற்கு இயக்கத்தை உயர்த்த வேண்டும் என்பதுதான் அமெரிக்கச் சோஷலிஸ்டுகளின் முன்னுள்ள பணியாகும். கம்யூனிஸ்டு அறிக்கையில் கண்டுள்ள வார்த்தைகளில் சொன்னால் அவர்கள் இன்றைய இயக்கத்திற்குள்ளாகவே, இயக்கத்தின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும்.''*

ஓரளவு இதையொத்த சூழல் பிரிட்டிஷ் சோஷலிச இயக்கத்தில் நிலவியது. இங்கு 80ஆம் ஆண்டுகளில் தொழிலாளர் இயக்கம் இறுதியாகச் சூடு பிடித்தது. அமெரிக்காவும் ஜெர்மனியும் போட்டிக்கு வந்ததன் காரணமாக முந்தைய தொழில் துறை ஏகபோகத்தை பிரிட்டன் மெல்ல மெல்ல இழந்து வந்ததும், குறைந்த ஊதியம் பெற்றுவந்த பரவலான தொழிலாள மக்களின் நிலைமைகளை இன்னும் மோசமாக்கிய பொருளாதார மந்தம் அங்கு தொடங்கியதுமே இதற்கான சமுதாயப் பொருளாதாரக் காரணங்களாகும். 80ஆம் ஆண்டுகளின் முதல் பாதியில் தொழிலாளர் இயக்கம் மேலோங்கி வந்த போதிலும், சோஷலிச அமைப்புக்கள் ஒன்றையொன்று எதிர்த்து மூர்க்கமான பகைமை கொண்டிருந்த சிறு குழுக்களாக, தொழிலாளர்களின் மீது அனேகமாக எந்த விதமான செல்வாக்கும் செலுத்தாதவையாக இருந்தன.

திரளான தொழிலாளர் இயக்கத்துடன் தொடர்பு கொண்டவர்களாய், உண்மையான தொழிலாளர் கட்சிக்கான அடித்தளங்களை அமைக்கவல்ல, தத்துவ ரீதியில் பயிற்சி பெற்ற மார்க்சிஸ்டுகளை பிரிட்டனிலேயே பயிற்றுவிக்க எங்கெல்ஸ் முயன்றார். பிரிட்டிஷ் சோஷலிச இயக்கத்

* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 474.

தில் ஏகபோக உரிமை கொண்டாடுவதற்காகப் போராடிய சந்தர்ப்பவாதச் சமூக ஜனநாயகக் கூட்டமைப்பையும் அதன் தலைவரான கைன்டுமனையும் எதிர்த்து அவர் போராட்டம் நடத்தினார். இந்தக் கைன்டுமன் கோட்பாடற்ற பதவி வேட்டைக்காரர் என்று எங்கெல்ஸ் கருதியது சரியே என்பது பின்னர் மெய்யாயிற்று.

சமூக ஜனநாயகக் கூட்டமைப்பில் பிளவு ஏற்படுத்த தயாரிப்பு வேலைகளை எங்கெல்ஸ் தீவிரமாகச் செய்து வந்தார். இந்த அமைப்பின் இடதுசாரி எதிர்த் தரப்பினர் எங்கெல்சின் வீட்டில் கூட்டம் நடத்தி வந்தனர். இவர்கள் மத்தியில் மார்க்சின் மகள் எலியனோரா மார்க்சும், பொது விவகாரக் கட்டுரையாளரான இவரின் கணவர் எட்வர்டு ஏவெலிங்கும் இருந்தனர். ஆயினும், பிளவின் காரணமாகத் தோன்றிய சோஷலிச லீக் நடைமுறையில் தனது பாதை சரியானதென்று மெய்ப்பிக்கும் வரை, அதனுடன் ஒன்றுபட எங்கெல்ஸ் விரும்பவில்லை. விரைவில் சோஷலிச லீக் அராஜகவாதத்தை நோக்கிச் சரியவே, எங்கெல்சின் ஆதரவாளர்கள் அதனுடன் முறித்துக் கொண்டனர்.

1884ல் தோன்றிய, சிட்னி வெப் போன்ற அறிவாளிகளும், விஞ்ஞானிகளும், எழுத்தாளர்களும் அடங்கிய ஃபேபியன் கழகத்திற்கு எதிராகவும் எங்கெல்ஸ் இதே போல் தீவிரமாகப் போராடினார். சோஷலிஸ்டுகள் என்று தங்களை அழைத்துக் கொண்ட இவர்கள், உண்மையில் மிதவாதக் கட்சியின் ஒரு கிளையாகத்தான் இருந்தார்கள். ''பலப்பல ரகத்தினரான பதவி வேட்டைக்காரர்களும், சோஷலிச உணர்வு கொண்டவர்களும், பரோபகாரிகளும் நிறைந்த இந்த முதலாளித்துவ 'சோஷலிஸ்டுகள்' கும்பல், தொழிலாளிகளின் ஆதிக்கம் வந்து விடுமோ என்ற அச்சத்தால் மட்டும் ஒன்று சேர்க்கப்பட்டு, இந்த ஆபத்தைத் தடுப்பதற்காக, தமது கைகளிலே, 'படித்தவர்களின்' கைகளிலே, அதிகாரத் தலைமை இருக்க வேண்டும் என்பதற்காக எதுவும் செய்யத் தயாராயிருந்தது.''*

---

* *Engels' Letter to K. Kautsky on September 5, 1892;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 530.

வேலையற்றோரின் இயக்கம், குறைவான தொழிற் பயிற்சி பெற்றோரின் தொழிற்சங்கம் நிறுவப்பட்டது, 1889ல் நடந்த பிரபலமான லண்டன் துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை ஒத்த போர்க்குண மிக்க வேலைநிறுத்தப் போராட்டங்கள் ஆகியவைகளால் 80ஆம் ஆண்டுகளின் இரண்டாம் பாதியில் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கம் பெரு மளவில் புயல் வேகத்தில் வளர்ந்தது. இந்தத் துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தை பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தில் தோன்றுகிற ஒரு திருப்பத்தின் துவக்கம் என்று கணித்த எங்கெல்ஸ் இதனைப் பேருவகையுடன் வரவேற்றார்.

இந்த இயக்கத்தில் எங்கெல்சும் தீவிரமாகப் பங் கெடுத்துக் கொண்டார். எலியனோரா, எட்வர்டு ஏவெலிங் ஆகியோரையும் அவர்களுடன் சென்ற பாட்டாளிகளான தாமஸ் மான், ஜான் பேர்ன்ஸ், பில் தோர்ன் ஆகியோரையும் கொண்ட சோஷலிஸ்டுகளை ஒரு சிறு குழுவாக தம்மைச் சுற்றி எங்கெல்ஸ் ஒன்றுசேர்த்தார். எங்கெல்சின் வற்புறுத் தல்களையும் ஆணைகளையும் ஏற்றுக் கொண்டு, லண்டனிலுள்ள ஈஸ்ட் என்ட் தொழிலாளர் பகுதிகளில், எட்டு மணி நேர வேலை நாள் வேண்டும் என்ற கோரிக்கையுடனும், பாட் டாளி வர்க்கத்திற்குச் சுயேச்சையான அரசியல் அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற முழக்கத்துடனும் தீவிரம் அடைந்து வந்த தொழிலாளி மக்களின் மத்தியில் ஏவெலிங் தம்பதிகள் கிளர்ச்சி செய்து வந்தனர். 80ஆம் ஆண்டுகளின் இறுதியில் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய் வதிலும், தொழிற் பயிற்சியற்ற தொழிலாளர்களின் சங்கங் கள் அமைப்பதிலும் எங்கெல்சினது வழிகாட்டுதலின் கீழ் ஏவெலிங் தம்பதிகளும், பேர்ன்சும், மானும் மகத்தான பணியாற்றினர்.

தமது ஆதரவாளர்களான ஏவெலிங் தம்பதிகளும், மானும் மற்றும் பலரும் கொண்டு 1893ல் தொடங்கப்பட்ட சுயேச்சையான தொழிலாளர் கட்சியை அனுதாபத்துடன் அணுகினர் எங்கெல்ஸ். ஆனல், விரைவில் சுயேச்சையான தொழிலாளர் கட்சியில் சந்தர்ப்பவாதிகளான ராம்சேய் மாக்டனல்டு, கேர் கார்டி போன்றோரின் கை மேலோங்கவே எங்கெல்சின் ஆதரவாளர்கள் அதை விட்டு வெளியேறினர் கள்.

முக்கியமான நாடுகள் பலவற்றில் பொது மக்கள் சோஷலிசக் கட்சிகள் இன்னும் நிறுவப்படாததாலும், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அரசியல் நிலைமைகள் தேவையான அளவு இன்னும் தீவிரம் அடையாததாலும், புதிய அகிலம் தோற்றுவிப்பது பற்றிய பிரச்னை அன்றைய நிகழ்ச்சி நிரலில் ஒத்தி வைக்க முடியாதபடி முன் வருகிற வரை, புதிய சர்வ தேசியப் பாட்டாளி வர்க்க அமைப்பு ஒன்று ஏற்படுத்தும் பணியினைத் துவக்கும்படி வந்த ஆலோசனைகள் அனைத்தையும், அதற்கான காலம் கனியவில்லை என்று எண்ணி ஒதுக்கி வைத்தார் எங்கெல்ஸ்.

விஞ்ஞானக் கம்யூனிசக் கோட்பாடுகளைப் பிரகடனம் செய்து, வெறும் பிரசார சங்கமாக மட்டும் இல்லாது தீவிர நடவடிக்கைகளுக்கான ஒரு அமைப்பாக, ''சுத்தமான கம்யூனிஸ்டு'' அமைப்பாக புதிய அகிலம் விளங்க வேண்டும் என்று எங்கெல்ஸ் கருதினார். இத்தகைய ''உண்மையான அகிலம்'' அமைப்பதற்கான நேரம் வரவில்லை என்று எண்ணினார் எங்கெல்ஸ். ஆனால், 1889ல் பாரிசில் சர்வதேசத் தொழிலாளர் காங்கிரஸ் நடத்த வேண்டும் என்ற பிரச்னையில் தொழிலாளர் இயக்கத்தின் மார்க்சியப் பிரிவினருக்கும் சந்தர்ப்ப வாதப் பிரிவினருக்கும் இடையே 80ஆம் ஆண்டுகளின் இறுதியில் போராட்டம் மூண்ட போது, பிரெஞ்சுச் சாத்தியப் பாட்டாளர்களும் கைன்டுமனின் சமூக ஜனநாயகக் கூட்டமைப்பும் தலைமை தாங்கிய சந்தர்ப்பவாதச் சக்திகள் சர்வதேச அமைப்பு நிறுவுவதற்காக பரவலாகப் பெரிய தயாரிப்பு வேலை செய்து கொண்டிருந்தபொழுது, சந்தர்ப்ப வாத அகிலம் நிறுவுகின்ற முயற்சிகளைத் தகர்த்தெறிவதற்காக செய்ய வேண்டியது அனைத்தையும் செய்தார் எங்கெல்ஸ். இந்தத் திட்டத்தை நிர்மூலம் செய்வதற்காகவும், சாத்தியப்பாட்டாளர்களுக்கு எதிராக பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியின் முன்முயற்சியினால் கூட்டப்படுகின்ற சோஷலிஸ்டுகளின் சர்வதேசக் காங்கிரஸ் வெற்றியடைய வேண்டும் என்பதற்காவும் மிகத் தீவிரமாகப் பணியாற்றினார் எங்கெல்ஸ். காங்கிரசின் தயாரிப்புப் பணிகளில் காட்டும் நிதானத்துக்காகவும், விடாமுயற்சியுடன் செயல்படாததற்காகவும் தொழிலாளர் கட்சித் தலைவர்களான கேட்டையும், லஃபார்கையும் தமது கடிதங்களில் கண்டிக்கிறார் எங்கெல்ஸ்.

செல்வாக்கு மிக்க ஜெர்மன் கட்சியின் பெயரால் சாத்தியப் பாட்டாளர் காங்கிரசுக்கு எதிராக உறுதியுடன் போராடி, அதன் மூலம் அக்காங்கிரசுக்கு எதிராக மற்ற நாட்டுச் சோஷலிஸ்டுகளையும் ஒன்று திரட்டுவதற்குப் பதிலாக, தமக்கே உரித்தான இயல்பின்படி எதிரெதிராய் நிற்கும் இரு முகாம்களையும் சமாதானப்படுத்தி இரண்டு காங்கிரசுகளும் இணைய வேண்டும் என்று கனவு கண்ட லீப்க்னெஹ்டும் எங்கெல்சிடம் சரியானபடி வாங்கிக் கட்டிக் கொண்டார். இந்தப் பணிகளுடன் கூடவே, தமது நண்பர்கள், போராட்டத் தோழர்கள் ஆகியோரின் உதவியுடன் இங்கிலாந்தில் சமூக ஜனநாயகக் கூட்டமைப்புக்கு எதிராக ஆற்றல் மிக்க போராட்டம் நடத்துகிறார் எங்கெல்ஸ்.

முதல் அகிலத்தின் உள்ளே, ஹேக் காங்கிரசில், நடந்த பழைய போராட்டத்தின் தொடர்ச்சிதான் சர்வதேசக் காங்கிரஸ் நடத்துவது குறித்து நிகழ்கின்ற போராட்டமும் ஆகும் என்று எங்கெல்ஸ் கருதினார். ''எதிரி ஒருவனே தான்—முன்னர் அவன் தாங்கி நின்ற அராஜகவாதிகளின் பதாகைக்கு பதிலாக இப்போது சாத்தியப்பாட்டாளர் பதாகை தாங்கி நிற்கிறான் என்பது தான் அவனிடம் உள்ள வேறுபாடு. முதலாளித்துவ வர்க்கம் தரும் அரைகுறைச் சலுகைகளுக்காக தனது கோட்பாடுகளைத்தான் அன்று போலவே இன்றும் இவன் விலை கூறுகிறான். தலைவர்களுக்கு (நகர்மன்ற உறுப்பினர்கள், உழைப்பாளர்களை விலைகூறும் சந்தையின் உறுப்பினர்கள் ஆகியோர்) விசேஷ மரியாதை தருவது இதில் முக்கியம். நடைமுறை உத்தியோ முற்ற முழுக்க அதுவேதான்''* என்று ஸோர்கேக்கு எழுதினார் எங்கெல்ஸ்.

உண்மையில் இரண்டாவது அகிலத்தினைத் தொடக்கி வைத்த, 1889ல் நடந்த பாரிஸ் காங்கிரசின் வெற்றிக்குத் தலையாய காரணம் சந்தர்ப்பவாதிகளை எதிர்த்து எங்கெல்ஸ் நடத்திய போராட்டம்தான். சாத்தியப்பாட்டாளர்களும், சமூக ஜனநாயகக் கூட்டமைப்பும் பாட்டாளி வர்க்கத்தின் இப்புதிய சர்வதேச அமைப்பின் தலைமைப் பாத்திரத்தைப் பிடிக்க வேண்டும் என்று செய்த முயற்சிகள் படுதோல்வி அடைந்தன.

---

* *Engels' Letter to F. A. Sorge on June 8, 1889;* K. Marx and F. Engels, *Selected Correspondence,* Moscow, p. 486.

ஹேக் காங்கிரசிலேயே, முதலாளி வர்க்கத்தாலும், அரசாங்கத்தாலும் விலைக்கு வாங்கப்பட்டுள்ள மனிதர்கள் என்று மார்க்சினால் அம்பலப்படுத்தப்பட்ட பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைமையைத் தமது கைகளுக்குள் போட்டுக் கொள்ள செய்த முயற்சிகளையும் இதேபோல உடைத்தெறிந்தார் எங்கெல்ஸ். தலைமைப் பதவிக்கு உரிமை கொண்டாடிய தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எதிராக சோஷலிஸ்டுகளை ஒன்று திரட்டிய எங்கெல்ஸ், ''தொழிலாளர்கள் கூலிக்கு உழைக்கும் ஏற்பாடு ஒரு நிரந்தரமான, அசைக்க முடியாத, உலகு தழுவிய அமைப்பு என்றெண்ணுகிற மனிதர்களின் தலைமையின் கீழ் தாம் இயங்க முடியும் என்று வர்க்க உணர்வு பெற்ற இக்கண்டத்துத் தொழிலாளர்கள் நினைக்கக் கூடவில்லை'' என்று அவர்களுக்கு நிரூபிக்கும்படி சோஷலிஸ்டுகளுக்கு அறைகூவல் விடுத்தார்.

அகிலத்தில் சீர்திருத்தவாதிகளையும், சமரசவாதிகளையும் எங்கெல்ஸ் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த அதே வேளையில், அராஜகவாதிகளையும், நிவென்கெய்சைப் போன்ற அராஜகவாத ''இடதுசாரி'' சக்திகளையும்கூட எங்கெல்ஸ் எதிர்த்துப் போராடினார். அகிலத்திலிருந்து அராஜகவாதிகளை நீக்கி விடுவதென்று 1891ல் நடந்த புரூசெல்ஸ் காங்கிரஸ் செய்த முதவினை வரவேற்றார் எங்கெல்ஸ்.

ஒவ்வொரு ஆண்டும் மே முதல் நாளை பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசப் பண்டிகை நாளாகக் கொண்டாட வேண்டும் என்று பாரிஸ் காங்கிரஸ் முடிவு செய்தது. இந்தப் பண்டிகையை போராடி வந்த பாட்டாளி வர்க்கத்தின் முதல் சர்வதேசச் செயல் வடிவம் என்று கணித்த எங்கெல்ஸ், கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் புதிய ஜெர்மன் பதிப்பிற்காக 1890 மே முதல் நாளில் எழுதிய முன்னுரையில், இந்த அறிக்கை தோன்றிய காலத்திற்குப் பிந்தைய வரலாற்றை வரைந்து காட்டி, இந்த வரலாறு ஓரளவுக்கு 1848ஆம் ஆண்டுக்குப் பிந்திய தொழிலாளர் இயக்க வரலாற்றின் பிரதிபலிப்பே என்று எடுத்துக் காட்டினார். 42 ஆண்டுகளுக்கு முன்னால் தாமும் மார்க்சும் விடுத்த ''உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'' என்ற அறைகூவலுக்கு அப்போது ஒரு சிலரே செவி சாய்த்தனர் என்பதை நினைத்துப் பார்த்

தார் எங்கெல்ஸ். அதற்குப் பின் தொழிலாளர் இயக்கம் நீண்ட தொலேவு தாண்டி வந்திருக்கிறது, இதற்குச் சான்று தான் மே முதல் நாள் கொண்டாடப்படும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் பண்டிகை என்று கண்டார் எங்கெல்ஸ். ''இன்று நம் முன் விரிகின்ற காட்சி உலகப் பாட்டாளிகள் உண்மையிலேயே ஒன்று சேர்ந்து விட்டார்கள் என்பதை அனேத்து நாடுகளிலும் உள்ள முதலாளிகளுக்கும் நிலவுடைமையாளர்களுக்கு எடுத்துக் காட்டுகிறது.

''ஓ, மார்க்ஸ் மட்டும் இப்போது என்னருகே நின்று இக்காட்சியைத் தமது சொந்தக் கண்களால் காண முடிந்தால்!'' என்று எழுதினுர் எங்கெல்ஸ்.

தமது முதிர்ந்த வயதையும் கருதாமல், பிரிட்டிஷ் தொழிலாளர்களின் மே நாள் அணிவகுப்பில் தவருமல் கலந்து கொண்டு சொற்பொழிவாளர்களின் மேடையில் ஏறியமர்வார் எங்கெல்ஸ்.

1893ஆம் ஆண்டு ஜூரிச்சில் நடந்த அகிலத்தின் மூன்ருவது காங்கிரசில் கலந்து கொண்டார் எங்கெல்ஸ். காங்கிரஸ் முடிவுறும் தருணத்தில் உரை நிகழ்த்திய எங்கெல்ஸ் முதலில் ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் உரையாற்றி விட்டு, பின்னர் ஜெர்மன் மொழியில் பேசினுர். காங்கிரஸ் உறுப்பினர்கள் தமக்களித்த குதூகலமிக்க வரவேற்பால் உள்ளமுருகிய எங்கெல்ஸ் உரையின் போது, தமக்கு அளிக்கப்பட்ட இந்த வரவேற்பை, ''அதோ, அங்கு தொங்குகிறதே உருவப் படம்,அந்த மாபெரும் மனிதனின் துணேவன் என்ற வகையில் மட்டுமே'' ஏற்றுக் கொள்வதாகக் கூறி, உயரே தொங்கிக் கொண்டிருந்த மார்க்சின் படத்தைச் சுட்டிக் காட்டினுர். ''மார்க்சும் நானும், *Deutsch-Französische-Jahrbücher* யில் எங்களது முதல் சோஷலிசக் கட்டுரைகளே வெளியிட்டு இவ்வியக்கத்தில் சேர்ந்து இப்போது 50 ஆண்டுகள் முடிந்து விட்டன. அன்று சிறு குழுக்களாக இருந்த சோஷலிசம், இன்று அதிகார உலகம் அனேத்தையும் அசைத்து நடுக்கும் வல்லமை மிக்க சக்தியாக வளர்ந்திருக்கிறது. மறைந்து விட்டார் மார்க்ஸ், ஆனுல் இன்று மட்டும் அவர் உயிர் வாழ்ந்தால், உரிமை மிக்க பெருமையுடன் தமது வாழ்க்கைப் பணியைப் பின்னுேக்கி அவர் பார்ப்பதைப் போல, ஐரோப்

பாவிலும் அமெரிக்காவிலும் ஒரு மனிதனும் தமக்குப் பின் திரும்பிப் பார்க்க முடியாது'' என்ருர் எங்கெல்ஸ்.

ஜூரிச் காங்கிரசிற்கும், வியன்ஞவிற்கும், பெர்லினுக்கும் எங்கெல்ஸ் செய்த விஜயம் ஒரு வெற்றி உலாவாக இருந்தது. ஜூரிச்சில் நடந்தது போலவே இந்த நகரங்களிலும் நடந்த பொதுமக்களின் பெரும் கூட்டங்களில் பேசிய எங்கெல்ஸ், தமக்கு அளிக்கப்படுகின்ற உவகை மிக்க வரவேற்புக்கள் எல்லாம் தமக்கு அல்ல, தமது நண்பராயும், தோழராயும் இருந்த அந்த மகத்தான மார்க்சுக்கு வழங்கப்படும் வரவேற்பே என்று மீண்டும் கோடிட்டுக் காட்டினுர். வியன்ஞவில் பேசிய எங்கெல்ஸ் சொன்ஞர்: ''இந்த 50 ஆண்டு காலமாய் இயக்கத்தில் கலந்து கொண்டு, நானும் ஏதாவது செய்ய முடிந்திருக்கிறது என்ருல், அதற்காக எனக்கு ஒரு விருதும் வேண்டாம். நான் பெற்ற சிறந்த விருது நீங்கள் தான். நமக்குத் தோழர்கள் எங்கும் இருக்கிருர்கள்: சைபீரியச் சிறைகளிலும், கலிபோர்னியத் தங்கச் சுரங்கங்களிலும், ஆஸ்திரேலியா வரையும் அவர்கள் வாழ்கிருர்கள்... நாம் ஒரு வல்லரசு. அச்சமூட்டும் வல்லரசு. மற்ற வல்லரசுகளால் சாதிக்க முடிவதை விட அதிகம் சாதிக்கும் ஆற்றலுள்ள வல்லரசு நாம். இதில்தான் நான் பெருமைப் படுகிறேன்!'' என்ருர்.

இரண்டாம் அகிலம் நிறுவப்பட்ட பின்னர் எங்கெல்சின் கட்சி-அரசியல் பணிகள் இன்னும் விரிவடைந்தன.

எங்கெல்ஸ் உயிரோடிருந்த வரை, நிரந்தரமாகச் செயல் படுகின்ற அமைப்பு ஒன்று அகிலத்தின் காங்கிரசுகளால் ஏற்படுத்தப்படாததால், சித்தாந்தத் தலைவராக எங்கெல்ஸ் இருந்தது தவிர பல்வேறு நாடுகளில் உள்ள சோஷலிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவது போன்ற பொறுப்புகளும் எங்கெல்சின் தோள்களின் மீதே வீழ்ந்தன. கட்சியின் சர்வதேச நடவடிக்கைகளின் திட்டவட்டமான உதாரணங்களைக் காட்டி, இக்கட்சிகளுக்கு முரண்பாடற்ற பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை ஊட்டி வளர்த்தார் எங்கெல்ஸ். சித்தாந்த நோக்கில் ஒருமைப்பட்டு, நடவடிக்கைகளில் ஒன்றுபடுவதுதான் சோஷலிஸ்டுக் கட்சிகளின் கூட்டுப் போராட்ட வல்லமைக்கு அடித்தளமாகும் என்று எங்கெல்ஸ் கருதினுர். ஒவ்வொரு நாட்டுச் சோஷலிஸ்டுக் கட்சியும் தமது

அனுபவங்களை வேறு நாட்டுக் கட்சிகளுக்கு வழங்கி, அந்தக் கட்சிகளின் அனுபவங்களைத் தான் பெற்றுக் கொள்வதே சோஷலிஸ்டுக் கட்சிகளின் சகோதர ஒத்துழைப்பின் மிக முக்கியமான வடிவங்களில் ஒன்ருகும் என்று எண்ணினுர் எங்கெல்ஸ். ஒவ்வொரு தனிக் கட்சியையும் கூர்ந்து கவனித்து வந்த எங்கெல்ஸ், அக்கட்சிகள் ஈட்டுகின்ற வெற்றிகளிலே ஆனந்தம் கொண்டு, அவை தவறு செய்யும் பொழுது ஓடோடி வந்து உதவி நல்கி, அவற்றை நேர்வழியில் திருப்புகிருர்.

கேட், லஃபார்க் ஆகியோரின் தலைமையில் இருந்த பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சிதான் எங்கெல்சுக்குப் பெருங் கவலையைத் தந்தது.

போல், லௌரா லஃபார்கு இருவருக்கும் எங்கெல்ஸ் எழுதிய கடிதங்களில், அரசியல் அசட்டுத் துணிச்சல்காரரான ஜெனரல் புலன்ஷேயின் இயக்கம் சம்பந்தமாக லஃபார்கும் மற்ற சில சோஷலிஸ்டுகளும் ஆரம்பத்தில் இழைத்த தவறுகளைச் சுட்டிக் காட்டினுர். உலகப் போர் ஒன்று மூண்டு விடக்கூடிய அபாயத்தைத் தடுத்து நிறுத்துவதுதான் அனைத்து நாட்டுச் சோஷலிஸ்டுகளுக்கும் முதல் பெரும் கடமை என்று கருதிய எங்கெல்ஸ், புலன்ஷே இயக்கத்தின் கொடுமையான தேசிய வெறியும், பழிதீர்க்கத் துடிக்கும் போக்கும் மிகப் பெரும் அபாயத்தைக் கொண்டு வரத் தக்கவை என்று லஃபார்குக்கு தெளிவுபட விளக்கினுர்.

தொண்ணூறும் ஆண்டுகளின் தொடக்கத்தில் தொழிலாளர் கட்சிக்குத் தேர்தல்கள் தந்த பெரு வெற்றிகளைத் தொடர்ந்து, அதன் தலைவர்கள் பலரிடம் சந்தர்ப்பவாத ஊசலாட்டங்கள் தோன்றின. தேர்தல்களில் ஓட்டுப் பிடிப்பதையே தமது கட்சிப் பணிகளின் மையக் குறிக்கோளாகக் கொள்ளத் தொடங்கினுர்கள் அவர்கள். முடிந்த அளவுக்கு ஏராளமானவர்களைக் கொண்ட நாடாளுமன்றக் குழுவை அமைக்கும் நோக்கத்துடன், மில்லரான், ஜொரேஸ் ஆகியோரின் தலைமையில் அப்பொழுதுதான் நாடாளுமன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட புதிய சோஷலிஸ்டுக் குழுவுடன் கேடிஸ்டுகளும் மற்ற சோஷலிஸ்டுகளும் தமது பிரதிநிதிகளை இணைத்துக் கொண்டனர். இந்த இணைக்கப்பட்ட குழுவில்

கேடிஸ்டுகள் மிகச் சிறுபான்மையினராக இருந்ததால், குழுவின் தலைமை முழுதும் மில்லரான் கோஷ்டியின் கைகளுக்குள் சென்று விட்டது. இந்த ''ஒட்டுக்கான கல்யாணம்'' எல்லையற்ற அபாயம் மிகுந்தது என்று கருதிய எங்கெல்ஸ், மில்லரானிஸ்டுகளின் நடைமுறை வேலைத்திட்டம் சந்தேகமற்ற முறையில், சோஷலிஸ்டுகளின் வேலைத்திட்டத்தை விடத் தீவிரமானதாயினும் கூட, மில்லரானிஸ்டுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டாம் என்று சோஷலிஸ்டுகளை வற்புறுத்தி எச்சரித்து வந்தார். இந்தப் பெரிய மனிதர்களுடன் முறித்துக் கொள்ள வேண்டியது தவிர்க்கவியலாதது என்று சுட்டிக் காட்டி, பிளவுக்கான தயாரிப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை கூறினார்.

தமது மறைவிற்கு ஒரு ஆண்டுக்கு முன்னர், விவசாயம் பற்றிய பிரச்னையில் நிலவிய சந்தர்ப்பவாதக் கருத்துக்களைத் தாக்கினார் எங்கெல்ஸ். அவரது இந்தத் தாக்குதலுக்குக் காரணம், 1894ல் நான்தில் நடந்த தொழிலாளர் கட்சியின் காங்கிரசில் மேற்கொள்ளப்பட்ட பிரெஞ்சு சோஷலிஸ்டுகளின் நில உறவு பற்றிய வேலைத்திட்டமும், ஜெர்மன் சமூக ஜனநாயக தலைவர்களால் தேவையான அளவுக்கு எதிர்த்துத் தாக்கப்படாத விவசாயப் பிரச்னை பற்றிய ஃபோல்மரின் பேச்சுக்கள் பலவும் ஆகும்.

பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்ற பிறகு அவ்வர்க்கத்தின் தலைமையில் சிறு அளவு விவசாயத்திலிருந்து சமூகப் பொது விவசாய உற்பத்திக்குப் போக வேண்டிய வரலாற்று அவசியத்தையும் அதனால் விளையும் லாபங்களையும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி விளக்குவதற்குப் பதிலாக, முதலாளித்துவச் சமுதாயச் சூழ்நிலைகளில் விவசாயிகளின் சொத்துரிமை அழியாமல் காத்து நிற்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சி தனது நில உறவுகள் பற்றிய திட்டத்தில் கூறியது. இத்தகைய சறுக்குப் பலகையில் இறங்கி விட்ட பிரெஞ்சுச் சோஷலிஸ்டுகள் சிறு விவசாயிகளுக்கு மட்டும் ''சொத்துடைமைப் பாதுகாப்பு'' தருவதாக வாக்களிக்கவில்லை, கூலி உழைப்பைத் தமது நிலத்தில் பயன்படுத்தி கூலி உழைப்பாளர்களைச் சுரண்டுகின்ற விவசாயிகளுக்கும், நிலத்தைக் குத்தகைக்கு விடுகின்றவர்

களுக்கும் கூட அவர்களது நிலவுடைமைக்குப் பாதுகாப்பு வழங்குவதாக வாக்களித்தனர்.

இத்தகைய சந்தர்ப்பவாதக் கோட்பாடுகளைத் தமது வேலைத்திட்டத்திற்குள் புகுத்திக் கொண்ட பிரெஞ்சுச் சோஷலிஸ்டுகள் தன்னந்தனியாய் இருக்கவில்லை. ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தின் ஃபிரான்க்ஃபர்டு காங்கிரசில் (1894), விவசாயப் பிரச்னை பற்றிப் பேசிய ஃபோல்மர், விவசாய மக்கள் திவாலாகிப் போகாமல் இருப்பதற்காக அவர்களைக் ''காத்தருள'' பல்வேறு நடவடிக்கைகளை திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று ஆலோசனை கூறினுர். இதற்கு ஆதாரமாக, ''பிரெடெரிக் எங்கெல்சின் அங்கீகாரத்தைப்'' பெற்று விட்ட ஒன்றைப் போல பிரெஞ்சுச் சோஷலிஸ்டுகளின் நான்த் வேலைத்திட்டத்தை ஃபோல்மர் எடுத்துக் காட்டினுர். ஃபோல்மர், அவரது செல்வாக்கில் வசப் பட்டிருந்த பவாரிய சமூக ஜனநாயகவாதிகள் ஆகியோரின் சந்தர்ப்பவாதத்தை ஏற்கெனவே கண்டனம் செய்திருந்த எங்கெல்ஸ் அமைப்பு ரீதியில் ஃபோல்மரிடம் முறித்துக் கொள்ள வேண்டும் என்று பேபெலிடம் கோரினுர். நான்த் வேலைத்திட்டத்தையும் அதே போன்று ஃபோல்மரையும் இப்போது பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டியது அவசியம் என்று முடிவு செய்தார் எங்கெல்ஸ். ''முன்னேற்றம்'' (*Vorwärts*) என்ற பத்திரிகைக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதத்தில், நான்த் வேலைத்திட்டத்தைத் தாம் அங்கீகரிக்காதது மட்டுமல்லாமல் அதனைக் கண்டனம் செய்துள்ளதாயும், சிறு விவசாய நிலவுடைமையை நிரந்தரமாக வைத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் பொருளாதார ரீதியில் சாத்தியமற்ற ஒன்றுக்கு முயற்சி செய்கிருர்கள் என்றும், கோட்பாட்டைப் பலியிட்டு பிற்போக்குப் பாதையில் இவர்கள் அடியெடுத்து வைக்கிருர்கள் என்றும் எழுதினுர். சிறு விவசாய உடைமை அழிந்து போகின்ற போக்கைத் தனது தலையீட்டின் மூலம் கட்சி விரைவுபடுத்த வேண்டும் என்று இதற்குப் பொருள் அல்ல; சிறு நிலவுடைமையாளர்களின் தவிர்க்க முடியாத அழிவைக் குறைந்தபட்ச வேதனையுடன் கொண்டுவருவதற்குச் செய்கின்ற முயற்சிகளுக்கு எதிராக ஏதும் சொல்வதற்கில்லை. ஆனுல், இத்தகைய நடவடிக்கைகளைப் பற்றி மட்டுமே நான்த் வேலைத்திட்டத்தில் சொல்லப்படவில்லை.

இந்தப் பிரச்னைகள் பற்றி இன்னும் விரிவாக *Neue Zeit*ல் எழுத எண்ணமிட்டிருப்பதாக இந்தக் கடிதத்தில் எங்கெல்ஸ் அறிவித்தார். இந்த எண்ணத்தை **பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்னை** *(1894)* என்ற கட்டுரையின் மூலம் அவர் நிறைவு செய்தார். இதில், பாட்டாளி வர்க்கக் கட்சியின் வேலைத்திட்டத்தை விவசாயிகளின் சிறு உடைமை மாயைக்கு ஏற்பத் திருத்திக் கொள்ளும் ஆபத்தான நோக்கம் கொண்ட பிரெஞ்சுச் சோஷலிஸ்டுகளையும், ஃபோல்மரையும் வன்மையாகக் கண்டிக்கிறார் எங்கெல்ஸ்.

கட்சிக்குள் குட்டி முதலாளிகளும் விவசாயிகளும் நிறைய வந்து சேருவது சமூக ஜனநாயக இயக்கத்தின் பெரும் முன்னேற்றத்திற்கு மகத்தான சான்று பகருகிறது என்றும், நடைமுறையில் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கும் வர்க்கமாகி விட்டதை இது நிரூபிக்கிறது என்றும் முன்னர் அடிக்கடி சுட்டிக் காட்டி இருந்தார் எங்கெல்ஸ். ஆனால், குட்டி முதலாளிகள், விவசாயிகள் ஆகியோரின் மாயைகளுக்கும், விருப்பங்களுக்கும் சந்தர்ப்பவாதச் சலுகைகளைப் பாட்டாளி வர்க்கம் வழங்குமேயானால், தனது வரலாறு பூர்வமான தலைமைப் பாத்திரத்தைப் பாட்டாளி வர்க்கம் நிறைவேற்றாது என்பதை மறந்து விடக் கூடாது என்றும் எங்கெல்ஸ் கோடிட்டுக் காட்டினார்.

''எப்படி ஒரு கைவண்டியை ரயில் வண்டி மோதி நசுக்கி விடுமோ, அதுபோல கிழடு தட்டிப்போன, சக்தியற்ற சிறு அளவு விவசாயத்தை முதலாளித்துவத்தின் பெருமளவுப் பொருளுற்பத்தி அப்படியே மிதித்து நசுக்கி விடவே போகிறது'' என்று விவசாயிகளுக்கு விளக்கிச் சொல்லுவதற்குப் பதிலாக, விவசாய உடைமையைச் சாசுவதப்படுத்தப் போவதாக வாக்களிக்கும் நான்த் வேலைத்திட்டம் இத்தகைய மிக ஆபத்தான சந்தர்ப்பவாதச் சலுகைகள் கொண்டதுதான் என்று எங்கெல்ஸ் கருதினார்.

அதே நேரத்தில், விவசாயப் பிரச்னையானது சோஷலிஸ்டுக் கட்சிகளுக்குப் பிரம்மாண்டமான முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை என்பதையும் திட்டவட்டமாய் எடுத்துக் கூறினார் எங்கெல்ஸ். அரசியல் ஆட்சி அதிகாரத்தைத் தொழிலாளி வர்க்கம் கைப்பற்ற வேண்டுமானால், தொழில் துறையில் மிக முன்னேறிய நாடுகளிலும் கூட, சோஷலிஸ்டுக் கட்சிகள்

கிராமங்களுக்குச் சென்று அங்கு ஆற்றல் மிக்க சக்தியாக விளங்க வேண்டும் என்றார் எங்கெல்ஸ். ஆனால், கோட்பாடற்ற முறையில் விவசாயிகளிடம் ஓட்டு வேட்டையாடுவதை எதிர்த்தும், தமது செல்வ நிலைமைகளின் காரணமாகப் பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்து செயல்பட முடியாத விவசாயப் பிரிவினரைக் கவர்ந்து இழுப்பதற்காகச் செய்கின்ற முயற்சிகளை எதிர்த்தும் வந்தார் எங்கெல்ஸ்.

விவசாயிகளிடம் பலவிதமாக நடந்து கொள்ள வேண்டிய அவசியத்தைக் கோடிட்டுக் காட்டினார் எங்கெல்ஸ். ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னும், இதற்குப் பின்னும், சிறிய, நடுத்தர, பெரிய விவசாயிகளையும், இறுதியாகப் பெரிய நிலவுடைமைகளையும் சோஷலிஸ்டுக் கட்சி எப்படி அணுக வேண்டும் என்று சுட்டிக் காட்டினார் அவர்.

ஆட்சியதிகாரத்தைத் தொழிலாளி வர்க்கம் வென்று பெற்ற பின்பு விவசாயிகளை சோஷலிஸ்டுக் கட்சி எவ்வாறு அணுக வேண்டும் என்ற பிரச்னையை ஆய்வு செய்கையில் நிலத்தைக் குத்தகைக்கு விடுவதன் மூலம் அடுத்தவரின் உழைப்பைச் சுரண்டுகின்றவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதாகச் சொல்லுகின்ற நான்த் வேலைத்திட்டத்தின் கோரிக்கை சோஷலிசத்தின் அடிப்படைக் கோட்பாட்டுக்கே வேட்டு வைக்கிறதென்று குறிப்பிட்டு அருவருப்புடன் அதனை ஒதுக்கித் தள்ளினார் எங்கெல்ஸ். சிறிய விவசாயிகளின் சாகுபடியைப் பொறுத்த வரை, அது கூட்டுறவு சோஷலிச விவசாய முறைக்கு மாறிச் செல்லுவதன் திட்டவட்டமான வடிவங்கள் பாட்டாளி வர்க்கம் எந்த நிலைமைகளில் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுகிறது என்பதைப் பொறுத்தே இருக்கும் என்பதால் இவ்வடிவங்களை எங்கெல்ஸ் முன் கூட்டித் தீர்மானிக்கத் துணியவில்லை. எனவே வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கம் சிறு விவசாயிகள் விஷயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையின் மிகப் பொதுவான அடிப்படை அம்சங்களை மட்டும் எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். ‘‘...ஆட்சியதிகாரத்தைப் பெற்றுவிட்ட நாம், பெரு நிலப்பிரபுக்களின் சொத்துக்களை பலவந்தமாகப் பறிமுதல் செய்யப் போவதைப் போல, சிறு விவசாயிகளின் நிலங்களை (நஷ்ட ஈடு கொடுத்தோ, கொடுக்காமலோ) வன்முறையின் மூலமாகப் பிடுங்கிக் கொள்வது பற்றி நினைத்துக்

கூடப் பார்க்கவில்லை. உதாரணம் காட்டி, சமூக உதவிகள் நல்கி, இவர்களது தனி உற்பத்தியையும் தனிச் சொத்தையும் தோழமைக் கூட்டுறவுக்குள் கொண்டு வருவோமே தவிர, வன்முறையின் மூலமாக அல்ல. இதுவே நமது பணி. சிறு விவசாயிக்கு ஏற்கெனவே தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டிய பலன்களை அவனுக்குக் காட்டுவதற்கு ஏராளமான வசதிகள் நம்மிடம் இருக்கும்.''*

''தோழமைக் கூட்டுறவில் வந்து சேருவதென்று அவன் முடிவு செய்து விட்டால், அப்படி அவன் வந்து சேருவதை மிகவும் சுளுவாக்க வேண்டும். இவ்வாறு இன்னும் அவன் முடிவு செய்யவில்லை என்றால், தனது துண்டு நிலத்தைப் பற்றி ஆற அமரச் சிந்திப்பதற்கு அவனுக்கு அவகாசம் கொடுக்க வேண்டும்''** என்று தனது துண்டு நிலத்தின் மீது விவசாயிக்கு இருக்கின்ற ஆழமான பற்றினைக் கருத்தில் கொண்டு கோடிட்டுக் காட்டினார் எங்கெல்ஸ்.

பெரிய நிலவுடைமைகளைப் பொறுத்த வரை, தொழில் துறை முதலாளிகளின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதைப் போலவே பெரு நிலப் பிரபுக்களின் உடைமைகளையும் பறிமுதல் செய்வது பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும். இந்த உடைமைகளை நஷ்ட ஈடு கொடுக்காமல் பறிமுதல் செய்ய வேண்டுமா என்பது பாட்டாளி வர்க்கக் கட்சி எந்தச் சூழ்நிலைமைகளில் ஆட்சிக்கு வருகிறது என்பதைப் பொறுத்தும், இதைத் தவிர பெரு நிலப்பிரபுக்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் இருக்கும். ''எந்தச் சூழ்நிலைமைகளிலும் நஷ்ட ஈடு கொடுக்கவே கூடாது என்று நாங்கள் நினைக்கவேயில்லை; எல்லாவற்றையும் விலை கொடுத்தே இந்தக் கொள்ளைக்காரர்களிடமிருந்து வாங்கிவிட முடிந்தால் அது நமக்கு மிகவும் மலிவானதே என்று தமது கருத்தை மார்க்ஸ் என்னிடம் அடிக்கடி கூறி இருக்கிறார்'' என்றார் எங்கெல்ஸ்.

பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயிகள் பிரச்னை என்ற எங்கெல்சின் நூல் மிகப் பிரம்மாண்டமான தத்துவ

---

* Engels, *The Peasant Question in France and Germany;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II, Moscow 1955, p. 433.

** Engels, *The Peasant Question in France and Germany;* K. Marx and F. Engels, *Selected Works*, Vol. II, Moscow 1955, p. 435.

முக்கியத்துவம் உடையதாகும். விவசாயிகளின் வரலாற்று வாழ்வுக்கு மட்டுமின்றி சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்கும் கூட பாட்டாளி வர்க்கமும் உழைக்கும் விவசாயிகளும் கூட்டு சேர்வதன் முக்கியத்துவத்தை இந்த நூலில் அவர் காட்டியுள்ளார். சிறு விவசாய உற்பத்தி தோழமைக் கூட்டுறவு உற்பத்தி மூலம் பெருமளவு சோஷலிச உற்பத்தியாக மாறுகின்ற பாதையைத் தத்துவ ரீதியில் அமைத்துக் கொடுத்தார் எங்கெல்ஸ். கூட்டுறவு உற்பத்தி என்பது முழுமையான கம்யூனிச உற்பத்திக்கு இட்டுச் செல்லுகின்ற சங்கிலிக் கண்ணி என்ற கருத்து தமக்கு மட்டுமின்றி மார்க்சுக்கும் சொந்தம் என்று சொன்னார் எங்கெல்ஸ். ''விவசாயிகளின் தோழமைக் கூட்டுறவை சிறுகச் சிறுக உயர்ந்த வடிவத்திற்கு மாற்ற வேண்டும் என்றும், இந்தத் தோழமைக் கூட்டுறவு முழுவதும், அக்கூட்டுறவிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் பெற்றுள்ள உரிமைகளையும் கடமைகளையும், சமுதாயத்தின் மற்ற பகுதியினர் பெற்றுள்ள உரிமைகளுடனும் கடமைகளுடனும் ஒப்பிட்டுப் பார்ப்பது'' சமுதாயத்தின் மத்திய ஆட்சியதிகாரத்தின் கடமையாகும் என்று எதிர்காலத்தை மனத்தில் கொண்டு கருத்துக் கூறினார் எங்கெல்ஸ்.

எங்கெல்சின் இந்த நூல் அளவற்ற அரசியல் முக்கியத்துவமும் கொண்டதாய் இருந்தது. பிரெஞ்சுக் கட்சியிலிருந்த சந்தர்ப்பவாதிகளுக்கு மட்டுமின்றி இரண்டாம் அகிலத்தின் மற்ற கட்சிகளிலும் இருந்த சந்தர்ப்பவாதிகளுக்கு சரியான அடி கொடுத்தது இது. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் இன்னும் முன்னணியில் இருந்த ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்திலுள்ள சந்தர்ப்பவாதிகளின் மீது இதன் முதல் அடி விழுந்தது.

விசேஷச் சட்டம் ஏற்படுத்திய சூழ்நிலைமைகளில், சட்டபூர்வ பணிகளையும் சட்ட விரோத வேலைகளையும் ஒன்றிணைத்துப் பணியாற்றியதாலும், சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக மார்க்ஸ், எங்கெல்ஸ் தலைமையில் நடந்த போராட்டத்தின் காரணமாகவும், பொதுமக்களிடமிருந்து கட்சி தனிமைப்படாதது மட்டுமின்றி, அதன் தொடர்புகளை விரிவுபடுத்தி, செல்வாக்கினை வலுப்படுத்தி ஜெர்மனியின் வெகு பலமான கட்சியாக அதனை மாற்றவும் முடிந்தது. இதன் விளைவாக 1890 ஜனவரி 25ல் சோஷலிஸ்டுகளுக்கு

எதிரான சட்டத்தின் காலத்தை நீட்டிப்பதற்கு ரெய்ச்டாக் மறுத்து விட்டது. சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம் விலக்கப்பட்ட சில நாட்களுக்குள் நின்று போன பத்திரிகையான சமூக ஜனநாயகவாதியில், எங்கெல்ஸ் எழுதிய வாசகர்களிடம் விடைபெறும் கடிதத்தில், ஜெர்மன் தொழிலாளர்களும் அவர்களது கட்சியும் நிகழ்த்திய வீரஞ்செறிந்த போராட்டத்தின் விளைவுகளைத் தொகுத்துத் தருகிறார். 1848ஆம் ஆண்டையும், புதிய ரைன் பத்திரிகையையும் நினைவு கூர்ந்த எங்கெல்ஸ், விசேஷச் சட்ட காலத்தைப் பற்றியும் எழுதினர்: ''வீதென் காங்கிரசில் கட்சி மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்ட மறு கணமே, 'எல்லா வழிகளிலும்', சட்டபூர்வமான வழியிலும் சட்டவிரோதமான வழியிலும், போராட்டம் தொடங்கி விட்டது. இதுவும் ஒரு வகைப் பட்ட புரட்சிக் காலமே.''

ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தின் வரலாற்றில் இந்தக் காலத்தை மிகவும் உயர்வாக மதிப்பீடு செய்த எங்கெல்ஸ், சோஷலிஸ்டுகளுக்கு எதிராகச் சட்டமியற்றப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட சட்ட விரோதமான நிறுவன இயந்திரத்தை அப்படியே வைத்திருக்கும்படியும், ஆதிக்க வர்க்கங்கள் கட்சியைச் சட்ட பூர்வமாக மீண்டும் நடத்த விடாமல் செய்யும் பொழுது அவ்வியந்திரத்தை உடனடியாக இயங்கச் செய்ய வேண்டும் என்றும் ஆலோசனை கூறினர்.

தொழிலாளர் இயக்கத்துடன் சரசமாடுகின்ற ''புதிய போக்காக'' ஆதிக்க வர்க்கங்கள் தமது அரசியலை மாற்றிக் கொண்ட போது, கட்சியின் நடைமுறை உத்திகள் பற்றிய பிரச்னை மீண்டும் கடுமையாக எழுந்தது. 70ஆம் ஆண்டுகளின் இறுதியில் சோஷலிஸ்டுகளுக்கு எதிராகச் சட்டமியற்றப் பட்ட காலத்தில் தோன்றிய நெருக்கடி போலவே மீண்டும் கட்சிக்குள் நெருக்கடி தோன்றியது.

முதலில், ''இடதுசாரி'' சந்தர்ப்பவாத எதிர்த்தரப்பினர் ''இளைஞர்களின்'' மூலமாகத் தமது தாக்குதலைத் தொடுத்தனர். (இளைஞர்களான இலக்கியவாதிகள் சிலரும், மாணவர்களும் கொண்ட குழு ஒன்று கட்சியின் சித்தாந்தவாதிகளாகவும், தலைவர்களாகவும் தன்னை நினைத்துக் கொண்டு இந்தத் தரப்பினருக்குத் தலைமை தாங்கிற்று). சட்டபூர்வ

மான வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியத்தை இந்த எதிர்த்தரப்பினர் புரிந்து கொள்ளாமல், நாடாளுமன்ற நடவடிக்கைகளிலிருந்து கட்சி விலகி விட வேண்டும் என்று கோரி, கட்சி முழுவதுமே குட்டி முதலாளிகளின் நலன்களைக் காப்பதாகவும், சந்தர்ப்பவாதத்திற்குள் இறங்கி விட்டதென்றும் குற்றம் சாட்டினர்.

இந்த ''இளைஞர்களின்'' பத்திரிகையான சக்சோனியத் தொழிலாளர் பத்திரிகை இந்த எதிர்த்தரப்புக்கு எங்கெல்சும் ஆதரவு தருகிறார் என்று அறிவித்த போது, இந்த ''பிரமாண்டமான வெட்கக்கேட்டுக்குத்'' தீர்மானமான பதிலடி கொடுத்து, எதிர்த்தரப்பின் தத்துவத்தையும் உத்தியையும் கண்டன விமர்சனங்களால் தகர்த்தெறிந்தார் எங்கெல்ஸ்.

உருத் தெரியாது சிதைக்கப்பட்டுள்ள '' 'மார்க்சியம்' தான் எதிர்தரப்பின் தத்துவக் கருத்துக்கள்'' என்றார் எங்கெல்ஸ். 70ஆம் ஆண்டுகளின் இறுதியில் பிரெஞ்சுக்காரர்கள் சிலர் நடுவே நிலவி வந்த இது போன்ற 'மார்க்சியத்தைக்' கண்ட மார்க்ஸ் (*"tout ce que je sais, c'est que moi, je ne suis pas marxiste"*) ''எனக்குத் தெரிந்ததெல்லாம் நான் ஒரு 'மார்க்சிஸ்டு' அல்ல என்பதே'' என்று அறிவித்ததை இதை ஒட்டி நினைவுபடுத்தினார் எங்கெல்ஸ்.

''இளைஞர்களின்'' உண்மையான எதார்த்தத்துடன் ஒரு விதமான சம்பந்தமும் இல்லாத, அசட்டுத் துணிச்சல் நிறைந்த செயல் தந்திரம் குறித்துப் பேசுகையில், தனது அணிகளில் பலப்பல லட்சம் பேரைக் கொண்டிருக்கும் கட்சியையும் கூட இது ஒழித்து நாசமாக்கி, பகைமை உலகனைத்தும் முற்றிலும் தகுந்த காரணங்களுக்காக உரக்க எள்ளி நகையாடுமாறு செய்து விடக் கூடும்'' என்றார் எங்கெல்ஸ்.

''இளைஞர்களின்'' பெரும் அகந்தையையும் கட்சியின் தலைமைப் பதவிக்கு அவர்கள் உரிமை கொண்டாடுவதையும் கேலி செய்கிறார் எங்கெல்ஸ். கட்சியின் தலைமைப் பதவிக்கு ஒருவர் வர வேண்டுமென்றால், அவர் நடந்து போக வேண்டிய பாதை எதுவென்றும் அவரிடம் இருக்க வேண்டிய பண்புகள் எவை என்றும் எடுத்துக் காட்டுகிறார் எங்கெல்ஸ். ''விமர்சன பூர்வமாக அடியோடு சுயபரிசீலனை செய்யப்பட வேண்டிய அவர்களது 'பள்ளிப் படிப்பு' அதிகார அந்தஸ்தையோ, அதற்கொப்ப கட்சிப் பதவியையோ தமக்கு

நிச்சயமாக வழங்கி விடாது என்று அவர்கள் புரிந்து கொள் வார்களாக. சாதாரண உறுப்பினராகத்தான் ஒவ்வொரு வரும் நமது கட்சியில் பணி புரியத் தொடங்க வேண்டும். கட்சியில் பொறுப்புள்ள பதவிகளை வகிப்பதற்கு, வெறும் இலக்கியத் திறமையும் தத்துவ அறிவும் மட்டும், உண்மை யில் இத்திறமைகள் ஒருவருக்கு இருக்குமானால் கூட, போதா. இவற்றுடன் கூடவே, கட்சி போராட்டம் நடத்துகின்ற சூழ் நிலைகள் பற்றிய ஆதாரபூர்வமான அறிவும், போராட்ட வடிவங்களைக் கற்றறிந்து கொள்ளும் வல்லமையும் அவர் பெற்றிருக்க வேண்டும். புடம் போடப்பட்ட தனி நபர் நேர்மையும், உருக்கனைய பண்பும் அவர் பெற்றிருக்க வேண் டும். இறுதியாக, போராட்ட வீரர்களின் அணியில் சுயவிருப் புடன் அவர் இணைந்து விட வேண்டும். சுருங்கச் சொன்னால், தொழிலாளர்கள் இந்தப் 'பள்ளிப் படிப்பாளிகளிடம்' கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டியதை விடப் பன்மடங்கு அதிக மாக இவர்கள் தொழிலாளர்களிடம் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றார் எங்கெல்ஸ்.

''இளைஞர்கள்'' நாடாளுமன்றப் போராட்டத்தை எதிர்த்துக் கட்சிக்கு எதிராக பகிரங்கமாகப் போராடத் தொடங்குவதற்கு முன்பே அவர்களை இப்படிக் கண்டனம் செய்திருந்தார் எங்கெல்ஸ். எர்புர்டில் நடந்த கட்சிக் காங் கிரஸ் (இந்த நேரத்தில் ''இளைஞர்கள்'' ''இடது சாரி'' யாகப் பரிணும வளர்ச்சி பெற்றிருந்தனர்), ''இளைஞர்களின்'' தலைவர்கள் கட்சி முடிவுகளுக்குக் கட்டுப்படவில்லை என்றால் கட்சி அணிகளை விட்டு அவர்கள் வெளியேறிவிட வேண்டும் என்று ஆணையிட்டது. இதையடுத்து எதிர்த்தரப்புப் பிரதி நிதிகள் ஆர்பாட்டமாகக் கட்சிக் காங்கிரசை விட்டு வெளி யேறிக் கட்சியிலிருந்து அடியோடு முறித்துக் கொண்டனர். பின்னர், அவர்களில் ஒரு பகுதியினர் அராஜகத்தை நோக்கிச் சரிந்தனர்.

கட்சிக்குள் ''இடதுசாரி'' நபர்கள் உயிர்ப்புப் பெற்றதும், ஆதிக்க வர்க்கங்கள் திடீரென்று ''சலுகைகள்'' வழங்கத் தொடங்கியதும், கட்சிக்குள் இருந்த சீர்திருத்தவாதிகளை யும் பகிரங்க சந்தர்ப்பவாதிகளையும் தீவிரமடையச் செய் தன. கட்சியின் வலதுசாரியினர் பிரதானமாக ஃபோல்மரின் பேச்சுக்கள் மூலம் தங்கள் தாக்குதலைத் தொடுத்துக் கொண்

டிருந்தனர். அரசாங்கத்தின் ''புதிய போக்கை'' ''தொழிலாளர்களின்பால் உண்மையான நட்புப் போக்கு'' என்று கணக்கிட்டுக் கொண்டு சமூக ஜனநாயகத்தின் நடைமுறை உத்தியை பின்வரும் சூத்திரத்தில் ஃபோல்மர் முன்வைத்தார்: ''நல்லெண்ணத்திற்கு நீட்டுவோம் விரிந்த கை; தீய எண்ணத்திற்கு—முஷ்டியைக் காட்டுவோம்.'' ஆதிக்க வர்க்கங்களின் அரசாங்கம் ''மக்கள் அனைவரின் நலன்களுக்காகவும்'' செயல்பட முடியும் என்று முடிவு கட்டிய ஃபோல்மர் அரசு பற்றிய மார்க்சியத் தத்துவத்தைத் திருத்திக் கொண்டார். இதன் இயல்பான தொடர்ச்சியாக புரட்சியை மறுத்து, புதிய சமூகமானது ''சிறுகச் சிறுக அமைதியான முறையில் வளர்ந்து உருப்பெறும்'' என்று அடித்துக்கூறினுர் ஃபோல்மர்.

ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தில் ஃபோல்மர் இந்த நேரத்தில் தனியாய் நிற்கவில்லை. ஆதிக்க வர்க்கங்களின் உத்தியில் ஏற்பட்ட புதிய மாற்றம் கட்சியில் இருந்த குட்டி முதலாளித்துவச் சக்திகளிடம் லஸ்ஸாலியத்தையும், சீர்திருத்த மாயையையும் தோற்றுவித்தது. ''இளைஞர்களுக்கு'' எதிராக கட்சித் தலைமை உறுதியுடனும் தீர்மானமாயும் போராடியதைப் போல, வலதுசாரி சீர்திருத்தவாதிகளுக்கு எதிராக அது தாக்குதல் தொடுக்கவில்லை.

லீப்க்னெஹ்டும் மற்ற சமூக ஜனநாயகத் தலைவர்களும் கட்சிக்குள் இருக்கும் சீர்திருத்தவாதிகள் தொடுக்கின்ற பலமான தாக்குதல்களுக்கு தீர்மானமாக முடிவு கட்ட முடியாது என்று கருதினுர் எங்கெல்ஸ். சமூக ஜனநாயக இயக்கத்தில் உள்ள தலைவர்கள் அனைவரிலும் உயர்ந்தவர் என்று எங்கெல்சால் மதிக்கப்பட்ட பேபெலும் கூட, தம்மிடம் எல்லா உயர் பண்புகளும் இருந்தும் கட்சியில் இருந்த சந்தர்ப்பவாதிகளுடன் உறுதியுடனும் ஒரே சீராகவும் விட்டுக் கொடுக்காமல் போராடவில்லை.

இந்தச் சூழ்நிலைமைகளில்தான், கோத் வேலைத்திட்டத்திற்கு மாற்ருக 1891ல் நடந்த எர்புர்டு காங்கிரஸ் மேற்கொள்ள இருந்த வேறெரு வேலைத் திட்டத்தில், சந்தர்ப்பவாதிகளின் சக்தி மிக்க செல்வாக்கு பிரதிபலிக்கக் கூடிய அபாயம் இருந்தது. இந்த ஆபத்தை மனத்தில் கொண்ட எங்கெல்ஸ், 1875ஆம் ஆண்டு கட்சியின் தலைவர்களிடையே மட்டும் வினியோகிக்கப் பட்டதும், பகிரங்கப்படுத்தப்படா

ததுமான மார்க்சின் கோத் வேலைத்திட்டம் பற்றிய விமர் சனத்தை ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தின் தத்துவப் பத்திரிகையான புதிய காலத்தில் (*Neue Zeit*) பிரசுரிக் கும் படி ஆலோசனை கூறினர்.

இந்த ஆவணத்தில் சீர்திருத்தம் பற்றிய லஸ்ஸாலியர் களின் மாயைகளைத் தாக்கித் தகர்த்து, கம்யூனிசத்திற்கு மாறிச் செல்லும் காலம் பற்றியும், பாட்டாளி வர்க்க சர்வா திகாரம் பற்றியும் தமது கருத்தினை மிக விரிவாகத் தந்திருந் தார் மார்க்ஸ்; இந்த ஆவணம் பிரசுரமானது சந்தர்ப்பவாதி களுக்கு எத்தகைய மரண அடியைக் கொடுக்கும் என்று எங்கெல்சுக்குத் தெரியும். 1891 ஜனவரி 17ல் ஸோர்கேவுக்கு எங்கெல்ஸ் எழுதுகையில் ''புதிய காலத்தின் (*Neue Zeit*) 17ஆவது இதழில், 1875ஆம் வருடத்திய வேலைத்திட்டத்தின் நகல் பற்றிய மார்க்சின் விமர்சனம் ஒரு வெடிகுண்டைப் போல வெடிக்க இருக்கிறது. இது உன்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும், ஆனுல் இது ஜெர்மனியில் ஒரு சிலரின் கோபத்தை யும் ஆத்திரத்தையும் கிளப்பி விடப் போகிறது'' என் ருர். எங்கெல்ஸ் சொன்னது சரியாகப் போயிற்று. இந்த ''வெடிகுண்டு'' சந்தர்ப்பவாதிகளின் முகாமில் குழப்பத்தை ஏற்படுத்தி ஆத்திரத்தைக் கிளப்பி விட்டது.

உதாரணமாக, கட்சியின் மத்தியப் பத்திரிகையான முன்னேற்றத்திலும் (*Vorwärts*) புதிய காலத்திலும் (*Neue Zeit*) வெளியான கட்டுரையில் பின்வரும் முத்துக்கள் உதிர்க்கப் பட்டிருந்தன: ''ஜெர்மன் சமூக ஜனநாயகவாதிகள் மார்க் சிஸ்டுகளுமல்ல, லஸ்ஸாலியர்களுமல்ல, அவர்கள் வெறும் சமூக ஜனநாயகவாதிகள்'' என்று கண்டிருந்தது. கோத் கூட்டணியாளர்களின் சந்தர்ப்பவாதக் கோட்பாடுகள் கோத் வேலைத்திட்டம் பற்றிய விமர்சனத்திற்கு எதிராக நிறுத்தப் பட்டிருந்தன. ''இரண்டு பிரிவினரையும் ஒன்று சேர்க்க வேண்டியதுதான் காங்கிரசின் பணியே தவிர, விஞ்ஞானக் கோட்பாடுகளை வகுத்தளிப்பதல்ல''* என்றது கட்டுரை. இந்தக் கட்டுரையில்தான், தத்துவத்திற்கும் நடைமுறைக் கும் இடையில் இருந்த இடைவெளி உண்மையாகவும் சிறப் பாகவும் எடுத்துக் காட்டப்படுகிறது. பின்னர் இந்த இடை

* *Neue Zeit*, 1891, S. 684.

வெளி இரண்டாம் அகிலத்துக் கட்சிகளில் மிகவும் எடுப் பாகத் தெரிந்தது. இதே நேரத்தில், ரெய்ச்டாகில் சமூக ஜன நாயக இயக்கத்தின் பிரதிநிதியான கிரில்லென்பெர்கர், பாட் டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சின் கருத்தைக் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என்று பிரகடனம் செய்தார்.

இதையெல்லாம் கண்ட எங்கெல்ஸ், சந்தர்ப்பவாதி கள் முகாமின் மீது இரண்டாவது "வெடிகுண்டை" வீச வேண்டியது அவசியம் என்று கருதி **பிரான்சில் உள்நாட்டுப் போர்** என்னும் மார்க்ஸ் நூலின் புதிய பதிப்புக்கு முன்னுரை ஒன்று எழுதினார். "அரசின் மீது மூடத்தனமான பக்தி" கொண்டு, நிரந்தரமான உண்மையையும், நியாயத்தையும் நிலைநாட்டுகின்ற கருவிதான் அரசு என்று கருதுவதை எதிர்த்து, "ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை நசுக்கு வதற்குப் பயன்படுத்தும் இயந்திரம் தான் அரசே தவிர வேறொன்றுமல்ல என்றும் முடியரசில் எந்த அளவுக்கு இது உண்மையோ அதைவிடச் சற்றும் குறையாத அளவுக்கு ஜன நாயகக் குடியரசிலும் இது உண்மை"* என்றும் எழுதினார் எங்கெல்ஸ்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளை இதற்கு உதாரணம் காட்டி அங்கு "இரு பெரும் அரசியல் சூதாட்டக் கொள்ளைக் கூட் டங்கள் அரசாட்சியை மாறி மாறிக் கைப்பற்றிக் கொண்டு, மிக அசிங்கமான முறைகளில் மிக அசிங்கமான நோக்கங் களுக்கு அந்த அரசாட்சியைப் பயன்படுத்துகின்றன" என்று எழுதினார் எங்கெல்ஸ்.

ஆட்சியைக் கைப்பற்றிய தொழிலாளி வர்க்கம் "அப் பொழுதுதான் வென்று அடைந்த ஆதிக்கத்தை மீண்டும் இழந்து விடாமல் இருப்பதற்காக, தன்னை நசுக்குகின்ற இயந் திரமாக அது வரை பயன்படுத்தப்பட்டு வந்த அந்தப் பழைய இயந்திரத்தை ஒரு புறம் ஒதுக்கித் தள்ளி விட்டு, மறு புறம் தனது சொந்தப் பிரதிநிதிகளுக்கும் அதிகாரிகளுக் கும் எதிராக நடவடிக்கை மேற்கொண்டு எந்த விதிவிலக்கு மின்றி, எந்த நேரத்திலும் விலக்கி மாற்றப்படத் தக்கவர் கள் அவர்கள் என்று அறிவித்து விட வேண்டியது அவசியம்"**

* Engels, *Introduction to Marx's "The Civil War in France"*; K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 483.

** Engels, *Introduction to Marx' "The Civil War in France"*; K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 485.

என்று நடைமுறையில் காட்டிய பாரிஸ் கம்யூன் அனுபவங்களை, முதலாளி வர்க்க அரசு இருக்கும் பொழுதே சோஷலிசம் சிறுகச் சிறுக வேரூன்றி விடும் என்று கூறும் சந்தர்ப்பவாதத் தத்துவத்துக்கு எதிராக முன்வைத்தார் எங்கெல்ஸ்.

பிரான்சில் உள்நாட்டுப் போருக்கு முன்னுரையை, ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தில் இருந்த சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராக நேரடியாகவே எய்யப்பட்ட பின்வரும் வாக்கியங்களுடன் முடிக்கிறார் எங்கெல்ஸ்: ''சமூக ஜனநாயகவாதப் போலிப் பண்பாளர்கள் இப்பொழுதெல்லாம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனேயே அஞ்சி நடுங்கிச் சாகிறார்கள். அன்பு மிக்க பெரியோர்களே, இந்தச் சர்வாதிகாரம் எப்படிப் பட்டது என்று பார்க்க விரும்புகிறீர்களா? அப்படியானால் பாரில் கம்யூனைப் பாருங்கள். இதுதான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது.''*

கட்சியில் இருந்த சீர்திருத்தவாதத்துக்கும், ''நாடாளுமன்ற முழு முட்டாள் தனத்துக்கும்'' புதிய அடிகொடுக்கும் வாய்ப்பு எங்கெல்சுக்கு விரைவிலேயே கிட்டியது. ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தின் புதிய நகல் வேலைத்திட்டம் கைக்குக் கிட்டிய பின், கோத் வேலைத்திட்டத்திலிருந்து இது மிகவும் பயனுள்ள வகையில் வேறுபட்டிருக்கிறது என்று அதைப் பற்றிக் குறிப்பிட்டார். ஆயினும், அதே நேரத்தில் இந்த நகல் வேலைத்திட்டம் ''சோஷலிச சமுதாயத்தில் விழிப்புடன்—அடக்கமாக—மகிழ்ச்சியோடு, சுதந்திரமாக வேரூன்றி விடும்'' பழைய பன்றித் தனம் என்னும் கோட்பாட்டையும், ''சமாதானம் விரும்பும் சந்தர்ப்பவாதத்தையும்'' எதிர்த்துத் தாக்குவதற்குத் தனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்துள்ளது என்று குறிப்பிட்டார் எங்கெல்ஸ்.

கட்சியின் எர்புர்டு காங்கிரசில் *(1891)* விவாதிக்கப்பட இருந்த நகல் வேலைத் திட்டத்தை கண்டனம் செய்கையில், அதன் தத்துவப் பகுதியையும் அரசியல், பொருளாதார கோரிக்கைகளையும் ஆய்வு செய்து விமர்சிக்கிறார் எங்கெல்ஸ். இந்த நகலில் கண்டுள்ள அரசியல் கோரிக்கைகள் குறித்து எங்கெல்சின் கருத்துக்கள் மிகவும் கவனிக்கத் தக்கவை.

---

* Engels, *Introduction to Marx's "The Civil War in France"*; K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 485.

ஜெர்மனியில் அப்போது இருந்து வந்த அரசியல் அமைப்பில், அமைதியான சட்ட பூர்வ வழியில் சமூக ஜனநாயகம் தனது கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்கிற கருத்தை கட்சியின் மீது திணிப்பதற்கு செய்யப்பட்ட முயற்சிகளைத் தீர்மானமாக எதிர்த்துச் சாடினார் எங்கெல்ஸ். எதிர்காலத்தில் வெவ்வேறு நாடுகளில் சோஷலிசத்திற்கான மாற்றம் எந்தெந்த வடிவங்களில் நிகழ்ந்தேற முடியும் என்ற பிரச்னையில் கருத்துச் சொல்லாமல் எச்சரிக்கையாக இருந்தார் எங்கெல்ஸ். ''மக்கள் பிரதிநிதிகள் தமது கைகளில் ஆட்சியதிகாரம் அனைத்தையும் ஒன்று குவித்து வைத்திருக்கக் கூடிய நாடுகளில், தம்மிடம் மக்கள் பெரும்பான்மை இருந்து வேண்டியவற்றை எல்லாம் சட்டபூர்வமாகவே செய்யத்தக்க நாடுகளில் பழைய சமுதாயமே புதிய ஒரு சமுதாயத்திற்குள் வேர் பரப்ப முடியும் என்று நினைப்பது சாத்தியமே...'' என்றார் அவர். சில நாடுகளில் சோஷலிசத்திற்கான மாற்றம் அமைதியான முறையில் நிகழ்ந்தேறும் சாத்தியத்தை மறுக்காத எங்கெல்ஸ், அதே நேரத்தில் முதலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தை அப்படி ஒன்றும் சுய விருப்புடன் விட்டுக் கொடுத்துவிடாது என்றும் எச்சரித்தார். அரசாங்கம் அனேகமாக அனைத்து வல்லமைபெற்றும், லீப்க்னெஹ்ட் கச்சிதமாகச் சொன்னபடி ''வரம்பிலா எதேச்சாதிகாரத்தின் போலித்தனமான ரெய்ச்டாக்'' உண்மையான அதிகாரம் எதுவும் பெறாமல் இருக்கிற ஜெர்மனியில் சமாதான வழியில் சோஷலிசத்தை எட்டுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. இத்தகைய அரசியல் அமைப்பில் ஒரு கிராமியக் கவிதை போல அமைதியான வழியில் குடியரசை, குடியரசை மட்டுமல்ல, கம்யூனிச சமுதாயத்தையே அமைத்து விடலாம் என்று சொல்லுகிற சந்தர்ப்பவாத மாயைகளைக் கிழித்தெறிகிறார் எங்கெல்ஸ்.

எங்கெல்சின் இந்தக் கண்டனக் குறிப்புக்கள் ஜெர்மன் சமூக ஜனநாயகத்தினது நகல் வேலைத்திட்டத்தின் மீது செல்வாக்குச் செலுத்தாமல் இருக்க முடியவில்லை.

நகல் வேலைத்திட்டம் மாற்றப்பட்டது. அத்திட்டத்தின் தத்துவப் பிரிவின் அடிப்படையில் கவுத்ஸ்கியின் நகல் திட்டம் வைக்கப்பட்டது. இதில் சில திருத்தங்கள் செய்து குறிப்புக்கள் சேர்த்தார் எங்கெல்ஸ். இந்த எர்புர்டு வேலைத்

திட்டம் பல்வேறு நாட்டு சோஷலிஸ்டுகளுக்கு பலப்பல வருடங்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தது.

எர்புர்டு காங்கிரசில் ''இடதுசாரி'', வலதுசாரிச் சந்தர்ப்பவாதக் கருத்துக்கள் பேபெல், ஸீங்கர் போன்ருேரின் பலத்த தாக்குதலுக்கு உள்ளாயின. இந்தத் தாக்குதல்களினுல் ''இடதுசாரிகள்'' கட்சி அணிகளிலிருந்து வெளியேறினரென்ருல், ஃபோல்மரும் அவரை ஒத்த கருத்தினரும், எங்கெல்சின் வார்த்தைகளில், சூழ்ச்சி மிக்கவர்களாய், எனவே ஆபத்து நிறைந்தவர்களாய் இருந்தனர். குயுக்திகள் செய்து சில காலம் பின் வாங்குவது என்ற முடிவை அவர்கள் தேர்ந்தெடுத்தனர்.

ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்திற்குள் நடந்த, பிரம்மாண்டமான அனேத்துலக முக்கியத்துவம் வாய்ந்த இருமுனேப் போராட்டத்தில், சீர்திருத்தவாதிகள், ''சமுதாய இணக்கத்தின்'' ஆதரவாளர்கள், அமைதியாக, படிப்படியாக சோஷலிசம் வேர் பரப்பும் என்று போதித்தவர்கள் ஆகியோருக்கு எதிராகத் தமது பிரதானத் தாக்குதலேத் தொடுத்த எங்கெல்ஸ், போலிச் சோஷலிஸ்டுகளான, தொழிலாளி வர்க்கத்தின் கொடிய பகைவர்களது முகமூடியைக் கிழித்தெறிந்தார்.

இதே நேரத்தில், நிகழும் வரலாற்றுக் காலத்தின் சிறப்பியல்புகளே மனத்தில் கொள்ளாமல், சோஷலிசப் பிரசாரத்தினே விரிவாக நடத்தவும் பாட்டாளி வர்க்க நிறுவனங்களே வலுப்படுத்தவும் பாட்டாளி வர்க்கத்தின் உணர்வையும், அவ்வர்க்கத்திற்குள் ஒற்றுமையையும் மேன்மையுறச் செய்வதற்கு ''முதலாளித்துவச் சட்ட வழிகளே''ப் பயன்படுத்தும் அவசியத்தை மறுத்து, அராஜகத்தை விதைத்துக் கொண்டிருந்த ''இடதுசாரிகளே'' எதிர்த்தும் கடுமையாகப் போராடினுர் எங்கெல்ஸ்.

எனினும், ரெய்ச்டாக்குக்கு நடக்கின்ற தேர்தல்களில் சமூக ஜனநாயக இயக்கம் பெறுகின்ற வெற்றிகளும், இவ்வியக்கத்திற்குக் கிட்டுகிற வாக்குகள் இடையருது பெருகி வருவதும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆதிக்க வர்க்கங்களுக்கு மிகப் பெரும் ஆபத்தாக விளங்கி திடீரென்று ஒரு நாள் ஆதிக்கவாதிகள் உருவாக்கிய முதலாளித்துவச் சட்டங்களே அவர்களே மிதித்துத் துவைத்து விட்டு, தொழிலாளி

வர்க்கத்திற்கும் அதன் கட்சிக்கும் எதிராக வன்முறையைப் பிரயோகித்து, உள்நாட்டுப் போரைத் துவக்கி வைப்பார்கள் என்று கட்சியை எச்சரித்தார் எங்கெல்ஸ்.

உண்மையில், தம்மால் உருவாக்கப்பட்ட முதலாளித்துவச் சட்டங்களின் சுமையைத் தம்மாலேயே தாங்க முடியாது ஆதிக்க வர்க்கங்கள் தவிக்கத் தொடங்கின. 1894 டிசம்பரில், சமூக ஜனநாயக இயக்கம் ஒரு அரசு மாற்றத்துக்குத் தயார் செய்து வருகிறது என்று சாக்குச் சொல்லிக் கொண்டு சோஷலிஸ்டுகளுக்கு எதிரான சட்டத்தின் புதிய நகல் ஒன்று ரெய்ச்டாக்கில் கொண்டு வரப்பட்டது.

அரசாங்கப் புரட்சியைத் தடுப்பதற்கென்று ரெய்ச்டாக்கில் கொண்டு வரப்பட்ட சட்டத்தின் நகல் விவாதிக்கப்பட்டு வந்த வேளையில் 1848-49ஆம் ஆண்டுகளில் பிரான்சில் வர்க்கப் போராட்டத்தைப் பற்றி மார்க்ஸ் எழுதிய நூலுக்கு முன்னுரை எழுதினார் எங்கெல்ஸ். **புதிய ரைன் பத்திரிகை அரசியல் பொருளாதார மதிப்புரை** என்னும் பத்திரிகையில் 1850ஆம் ஆண்டு வெளியான மார்க்சின் இந்த நூல் 1895ல் தான் தனிப் புத்தகமாக வர இருந்தது. இந்த நூலைப் பிரசுரத்திற்காக எங்கெல்ஸ் தயார் செய்த பொழுது, அதில் மூன்று அத்தியாயங்களின் தலைப்பை மாற்றி, **மூன்றுவது சர்வதேச மதிப்பீட்டிலிருந்து** ஒரு பகுதியை எடுத்து நான்காவது அத்தியாயமாக இணைத்து, **1848 முதல்—50வரை பிரான்சில் வர்க்கப் போராட்டம்** என்று நூலுக்குப் பெயரிட்டு அதற்கு முன்னுரை எழுதினார்.

அரசு மாற்றத்தைத் தடுத்து நிறுத்துவது பற்றிய சட்ட நகல் மீது ரெய்ச்டாகில் நடந்த விவாதத்துடன் தொடர்புள்ள அரசியல் நிலைமையைக் கருத்தில் கொண்ட எங்கெல்ஸ், அப்பொழுது அரசாங்கப் புரட்சி கொண்டு வருவதில் சமூக ஜனநாயக இயக்கம் அல்ல, ஆதிக்க வர்க்கங்கள்தாம் அக்கறை கொண்டிருந்தன என்று மெய்ப்பித்தார். சமூக ஜனநாயக இயக்கம் நடத்திய நெடிய, தீவிரமான, இடையறாத சட்டபூர்வப் பணிதான் மேலும் மேலும் இயக்கத்தின் செல்வாக்கைப் பொதுமக்களிடையே பரப்பி, ஆதிக்க வர்க்கங்களுக்குப் பெரும் மனச் சோர்வைத் தந்து ''சட்டபூர்வ வழி நம்மைக் கொன்றழிக்கிறது'' என்று இவ்வர்க்கங்களைக் கூச்சலிட வைத்திருப்பதாக முன்னுரையில் கோடிட்டுக்

காட்டினர் எங்கெல்ஸ். எனவேதான், ஆதிக்கவாதிகள் பாட்டாளி வர்க்கத்திற்கு ஆத்திரமூட்டி, அகாலமான ஒரு போராட்டத்தைத் தெருக்களிலே துவக்குமாறு அவர்களைத் தூண்டி, துப்பாக்கிகளுக்கும், வாள்களுக்கும் பாட்டாளி வர்க்கத்தைத் தீனியாக்கப் பார்க்கிருர்கள் என்ருர் எங்கெல்ஸ்.

வீதிகளிலே நடக்கும் ஆயுதந் தாங்கிய போராட்ட நிலைமைகள் 1848, 1871ஆம் ஆண்டுகளுக்குப் பின், எந்த அளவுக்கு மாறிப் போய் இருக்கின்றன என்று முன்னுரையில் எடுத்துக் காட்டினர் எங்கெல்ஸ். வலுப்படுத்தப்பட்டுள்ள ராணுவம் முன்னை விட ஒப்பிட முடியாச் சிறப்புவுடன் ஆயுதந் தாங்கி நிற்கிறது, இருப்புப் பாதைகள் படைகளை ஓரிடத்திலிருந்து மறு இடத்துக்கு விரைந்து கொன்டு செல்வதற்கு வகை செய்கின்றன, பெரிய நகரங்களில் புதிய குடியிருப்புக்களின் நேரான நெடிய வீதிகள் மேன்மைப் படுத்தப்பட்டுள்ள பீரங்கிகளும் துப்பாக்கிகளும் வசதியாக இயங்குவதற்கு வழிசெய்து கொடுத்திருக்கின்றன என்று எடுத்துக் காட்டினர் எங்கெல்ஸ்.

''எதிர்காலத்தில் தெருவில் நடக்கும் போராட்டத்தில் பயன் எதுவும் இருக்காது என்று இதற்குப் பொருளா? அப்படி ஒன்றுமில்லை. இதன் பொருள் யாவும், 1848க்குப் பின்பு, தெருப் போராட்ட நிலைமைகள் குடி மக்களுக்குக் குறைவான அனுகூலம் உள்ளவையாயும் ராணுவத்திற்கு அதிக அனுகூலம் தருபவையாயும் ஆகிவிட்டன என்பதே. எனவே, அனுகூலமற்ற நிலைமைகள் அனுகூலமுள்ள வேறு நிலைமைகளால் சீராக்கப்பட்டால்தான் எதிர்காலத்தில் தெருப் போராட்டம் வெற்றி அடைய முடியும்''* என்ருர் எங்கெல்ஸ். முன்னுரையைப் பிரசுரிக்கும் போது விடப்பட்டுப் போன இந்தப் பத்தியிலிருந்து எதிர்காலச் சோஷலிசப் புரட்சியில் தெருப் போராட்டம் வகிக்கின்ற பாத்திரத்தை எங்கெல்ஸ் ஒரேயடியாய் மறுக்கவில்லை என்பது தெளிவு. ராணுவ நுணுக்கக் கண்ணேட்டத்தில் அனுகூலமற்ற பரஸ்பர பலாபல நிலைமற்ற அம்சங்களால் சரிசெய்யப்பட வேண்டும் என்றுதான் அவர் கோடிட்டுக் காட்டினர். தெருப் போராட்டத்தில், பழைய செயல் வன்மையற்ற தடையரண் போராட்ட

---

* Engels, *Introduction to Marx's "The Civil War in France"*; K. Marx and F. Engels, *Selected Works*, Vol. I, Moscow 1955, p. 133.

உத்திக்கு பதிலாக, பகிரங்கமான தாக்குதல் உத்தியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், இதற்காக பொது மக்கள் தரப்பிலிருந்து கணிசமான அளவு அதிகச் சக்தி பிரயோகிக் கப்பட வேண்டும் என்றும் பதிலிறுத்தார் எங்கெல்ஸ். ராணுவத்தின் மீது தார்மீகச் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம், மக்களின் மீது ராணுவத்தினர் சுட மறுக்குமாறு செய்ய முயல வேண்டும். எதிர்காலத்து இறுதிப் போராட் டங்களுக்கு சக்திகளைத் தயார் செய்யவும், உழைப்பாளி விவசாயிகள் அடங்கிய பரவலான பொதுமக்களை சமூக ஜன நாயக இயக்கத்தின்பால் கவர்ந்து இழுப்பதும்தான் கட்சி யின் தற்போதைய மிக முக்கிய பணி என்று சொன்னார் எங்கெல்ஸ்.

புதிய வரலாற்றுச் சூழ்நிலைகளில் புரட்சியின் ராணுவ-நுணுக்கப் பிரிவையும், அதன் அரசியல், தார்மீகக் காரணங் களையும் ஆய்வு செய்த எங்கெல்ஸ், ஆயுதந் தாங்கிய எழுச் சியை ஒரு கலையாகப் பாவிக்கும் மார்க்சிய போதனையை மேலும் செழுமைப்படுத்தினார்.

ஒரே மாதிரி தவறான இரண்டு எல்லைக் கோடுகளுக்கு எதிராகவும் முன்னுரையில் தாக்குதல் தொடுக்கிறார் எங் கெல்ஸ். ஒரு புறம், அகநிலை முடிவுகளுக்கும், தன்னிச்சைச் செயல்களுக்கும், காலங் கனியாக எழுச்சிகள் செய்யும் முயற் சிகளுக்கும் எதிராக எச்சரிக்கை விடுத்து, பொதுமக்களில் பெரும்பான்மையையும் ராணுவத்தில் பெரும்பான்மையை யும் பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் கவர்ந்திழுக்க வேண்டிய அவசியத்தைத் திட்டவட்டமாக எடுத்துக் காட்டினார். மறு புறத்திலோ, பரவலான மக்களைப் புரட்சிக்குத் தயார்படுத் தும் வகையில் நாடாளுமன்றத்தையும் சட்டபூர்வ வாய்ப் புக்களையும் பயன்படுத்துவற்கு உயர்வான முக்கியத்துவம் கொடுத்த எங்கெல்ஸ், இதனையே போராட்டத்தின் முழுமை யான ஒரே வடிவம் என்று ஒருக்காலும் கூறவில்லை. அமைதி யான, அமைதியற்ற, சட்டபூர்வமான, சட்டவிரோதமான எல்லா வடிவங்களையும் போராட்டத்திற்கு உபயோகிக்க வேண் டிய அவசியத்தை எடுத்துக் கூறி, உரிய நேரத்தில் வர்க்கப் போராட்டத்தை நாடாளுமன்ற அரங்கிலிருந்து பொதுமக் கள் புரட்சிப் போராட்ட அரங்காக மாற்றுகின்ற திறமை படைத்திருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டுகிறார்.

அரசாங்கப் புரட்சியைத் தடுப்பதற்காகக் கொண்டு வரப்படுகிற சட்டம் பற்றிய விவாதம் நாட்டில் தோற்றுவித்திருக்கிற நெருக்கடியான நிலைமைகளின் காரணமாக, முன்னுரையில் பல பகுதிகளை எச்சரிக்கையுடன் எழுத வேண்டும் என்றும், சில பகுதிகளை விட்டு விட வேண்டும் என்றும் ஜெர்மனியின் கட்சித் தலைமை தம்மிடம் வற்புறுத்திக் கோரியதையும் தமது முன்னுரையைப் பிரசுரிக்கும் போது எங்கெல்ஸ் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது பற்றி 1895 மார்ச் 25ல் அவர் கவுத்ஸ்கிக்குப் பின்வருமாறு எழுதினர்: ''அரசாங்கப் புரட்சியைத் தடுப்பதற்கான சட்ட நகல் பற்றி நமது பெர்லின் நண்பர்கள் பயம் கொண்டு தீர்மானமற்ற போக்கினைக் கடைப்பிடித்ததாலும், நிலவுகின்ற சூழ்நிலைமைகளில் நான் இதனைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டி வந்ததாலும் எனது கட்டுரையின் வாசகம் சிறிதே தொல்லைக்குள்ளானது.''

எனினும், இது போதாதென்று கருதிய ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத் தலைவர்கள் சிலர் எங்கெல்சின் முன்னுரையை ஒரேயடியாகத் திரித்துப் புரட்டினர்கள். கட்சியின் மத்தியப் பத்திரிகையான முன்னேற்றத்தில் (*Vorwärts*) முன்னுரையிலிருந்து சில மேற்கோள்கள் தமக்குத் தெரியாமல் பிரசுரிக்கப்பட்டதைப் பார்த்த பொழுது எங்கெல்ஸ் எல்லையற்ற கோபமுற்றதைப் புரிந்து கொள்வது சுலபமே. ''இப்படியாக, எதுநேரினும் அமைதி விரும்பும் சட்டத்தின் பக்தனுக நான் காட்சி அளிக்கிறேன்''* என்றெழுதினர் எங்கெல்ஸ். தமது கருத்துக்களைத் திரித்ததற்கு லீப்க்னெஹ்டுக்குக் கடுமையான ஆட்சேபம் தெரிவித்து, *Neue Zeit*ல் முன்னுரையை முழு வடிவில் மறுபடியும் வெளியிட்டுத் தமது கருத்து பற்றிய ''வெட்ககரமான சித்திரத்தை அழித்தொழிக்க வேண்டும்'' என்று கோரினர்.

முன்னுரை பிரசுரமானதைத் தொடர்ந்து நிகழ்ந்த இந்த எரிச்சலூட்டும் சம்பவம், ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத் தலைவர்கள் பலருக்கு எங்கெல்ஸ் மிகக் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்குமாறு செய்ததோடு மட்டுமின்றி, வேறு பல கட்சிகளின் தலைவர்களுக்கும், குறிப்பாக லஃபார்குக்

* *Engels' Letter to Paul Lafargue on April 3, 1895;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, pp. 568-69.

கும் இது பற்றித் தெரிவிக்கும் படி எங்கெல்சை நிர்பந்தித்தது. 1895 ஏப்ரல் 3ல் லஃபார்குக்கு எங்கெல்ஸ் எழுதினர்: ''இப்போது என்னைச் சரியான படி கேலி செய்திருக்கிருர் லீப்க்னெஹ்ட். சிறிது காலமாக, குறிப்பாக தற்போது பெர்லினில் விசேஷச் சட்டங்கள் தயாராகி வரும் நேரத்தில், தாம் விருப்பமுடன் பிரசாரம் செய்து வருவதான, என்ன நேர்ந்தாலும் வன்முறைக்கு மாருக அமைதியான நடவடிக்கைகளேயே மேற்கொள்வது என்ற தமது கருத்துக்கு ஆதரவாக, 1848-50ல் இருந்த பிரான்ஸ் பற்றி மார்க்ஸ் தீட்டிய கட்டுரைகளுக்கு நான் எழுதிய முன்னுரையிலிருந்து எதையெல்லாம் எடுத்துப் பயன்படுத்த முடியுமோ அதையெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிருர் லீப்க்னெஹ்ட். ஆனுல், இந்த உத்தியை இன்றைய ஜெர்மனிக்கு மட்டுமே அதுவும் கணிசமான அளவு விளக்கக் குறிப்போடுதான் நான் சிபாரிசு செய்கிறேன். பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், ஆஸ்திரியா ஆகிய நாடுகள் இதனை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாது, ஜெர்மனிக்கோ, நாளைக்கே இது அனுசரிக்க இயலாத ஒன்ருகி விடலாம்.''

பின்னர், பெர்ன்ஷ்டைன் போன்ற சந்தர்ப்பவாதிகள், உண்மைகளைத் திரித்துப் புரட்டி, காலமாவதற்கு முன்னுல் எழுதிய இந்த முன்னுரையில் எங்கெல்ஸ் தமது கருத்துக்களை மாற்றிக் கொண்டு சீர்திருத்தப் பாதையில் அடியெடுத்து வைத்தார் என்று திமிர் கொண்டு அடித்துப் பேசினர். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான போராட்டத்துக்காகத் தமது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்து, சீர்திருத்தவாத, சந்தர்ப்பவாத அபாயத்தை ஈவிரக்கமின்றித் தாக்கித் தகர்த்து வந்த ஒரு மனிதரை, ராட்சசத்தனமான அவதூறுகளால் சாடுவதற்கு இந்த மனிதப் பதர்கள் கொஞ்சம் கூடக் கூச்சமடையவில்லை.

ஜெர்மன் சமூக ஜனநாயக இயக்கத்தின் போராட்டச் சூழல்களை மாற்றி, இதன் காரணமாக, அது கடைப்பிடிக்க வேண்டிய உத்திகளையும் மாற்றிவிடக் கூடிய ஒரு அம்சம் என்று எங்கெல்ஸ் கருதியது மேலும் மேலும் நெருங்கி வந்த யுத்தமாகும். யுத்தத்திற்கான தயாரிப்புக்களையும், 1870லேயே அகிலத்தின் பொதுக் குழுவிற்கு விடுத்த அறைகூவலில் மார்க்ஸ் முன்னறிவித்திருந்தபடி பிரான்சும்

ருஷ்யாவும் ஒன்று சேர்ந்து வந்ததையும், ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகியவற்றிடையே முக்கூட்டு உடன்பாடு உருவாகி வந்ததையும் கவலையுடன் கண்காணித்து வந்தார் எங்கெல்ஸ். வரப்போகின்ற போர் அளவிலும், அழிவு வேலையிலும் முன்னெப்போதும் காணுதவாறு பெரிதாய் இருக்கும் என்றும், ''எல்லைக்குள் கட்டுப்படுத்தப்பட்டது'' என்றழைக்கப்படுகிற, தனித்தனி நாடுகளுக்கு இடையிலான போராக இல்லாமல், உலகு தழுவிய போராக இருக்கும் என்றும் குறிப்பிட்டார் எங்கெல்ஸ்.

ஏகாதிபத்திய சகாப்தம் வரை எங்கெல்ஸ் வாழ்ந்திருக்கவில்லையாதலால், எதிர்காலப் போர் ஏகாதிபத்தியத் தன்மை கொண்டிருக்கும் என்று அவர் கணிக்க முடியவில்லை. எனினும் தொலை தூரம் பார்க்கும் எங்கெல்சினது மேதைமையின் வல்லமை, பிறந்து வரும் புதிய சகாப்தத்தின் சில அடிப்படை அம்சங்களைச் சுட்டிக் காட்டியது. உலக முதலாளித்துவத்தின் புதிய நிகழ்ச்சிகளான ஐக்கிய மூலதனக் கம்பெனிகளின் தோற்றம், டிரஸ்டுகள், கார்டெல்கள் ஆகிய வடிவங்களில் ஏகபோகங்கள் உருவானது, தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் பங்கு மார்கெட்டுகள், பாங்குகள் ஆகியவற்றின் வளர்ந்து வரும் பாத்திரம், பங்குகளின் வடிவில் வெளிநாடுகளில் மூலதன முதலீடு, இறுதியாக, ஐரோப்பிய வல்லரசுகள் ஆப்பிரிக்காவைக் கூறு போட்டுக் கொண்டதன் உதாரணத்தில் காலனிகளின் அமைப்பு ஆகியவை பற்றிய ஆய்வினை மூலதனத்தின் மூன்றும் தொகுதிக்குப் பின்னிணைப்பாய் எங்கெல்ஸ் சேர்ப்பதாக இருந்தார் என்பது அவரால் எழுதப்பட்ட பங்கு மார்க்கெட் என்ற சிறு குறிப்பிலிருந்து தெரியவருகிறது.

சர்வதேச நிலைமைகளைப் பரிசீலித்த எங்கெல்ஸ், ருஷ்யாவின் ஜாரிசத்தினது அயல் நாட்டுக் கொள்கை *(1890)*, ஜெர்மனியில் சோஷலிசம் *(1891)* என்ற கட்டுரைகளிலும், பல்வேறு நாடுகளின் சோஷலிஸ்டுகளுக்கு எழுதிய கடிதங்களிலும், ருஷ்யா ஜாரிசம்தான் ஐரோப்பியப் பிற்போக்கின் பிரதான கோட்டை என்றும், இதற்கெதிராக ஐரோப்பிய சோஷலிஸ்டுகள் ஜீவமரணப் போராட்டம் நடத்த வேண்டும் என்றும் கூறினுர். இதே நேரத்தில், ஜெர்மனியில் தான் சோஷலிசப் புரட்சிக்கான அடிப்படைகள் விரைவில்

தோன்றப் போகின்றன என்றும், ருஷ்யா ஜாரிசமும் பிரான்சும் சேர்ந்து ஜெர்மனியை வெற்றி கொண்டால், அது ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தை மிகமிகப் பின்னுக்குத் தள்ளி விடும் என்றும் கருதினர் எங்கெல்ஸ். எனவே, போர் ஒன்று மூண்டால் ஜெர்மன் சோஷலிஸ்டுகள் தமது தாயகத்தைக் காப்பதற்காகச் சமர் புரிய வேண்டும் என்ருர். ஜெர்மனியின் உண்மையான பாதுகாப்பைப் புரட்சிகர வழிகளின் மூலம்தான் உறுதிப்படுத்த முடியும் என்றும், இதற்கேற்ப சமூக ஜனநாயக இயக்கம் ஆட்சிக்கு வர வேண்டும் என்றும், 1793ல் நடந்த யாக்கபின் போரில் நேர்ந்தது போல, இந்த இயக்கம் புரட்சிப் போருக்குத் தலைமை தாங்க வேண்டும் என்றும் எடுத்துக் கூறினர்.*

---

* 1914ல் தொடங்கிய உலகப் போர், 80ஆம் ஆண்டுகளிலும், 90ஆம் ஆண்டுகளிலும் எங்கெல்ஸ் எழுதிய கட்டுரைகளில் குறிப்பிட்ட போரைப் போலன்றி, வேற்றுத் தன்மை கொண்டிருந்தது. ஆனல், முற்றிலும் வேருன, திரும்ப முடியாது மறைந்து போன பழைய யுகத்தில் நடக்க இருந்த போர் பற்றி மார்க்சும் எங்கெல்சும் மேற்கொண்ட நிலையை ஆதாரமாகக் காட்டி, துரோகம் நிறைந்த தங்கள் செயல்தந்திரத்துக்கு, ''தமது'' அரசாங்கத்தின் கொள்ளைக்கார ஏகாதிபத்திய யுத்தத்தை ஆதரிக்கும் செயல் தந்திரத்துக்கு, சப்பைக்கட்டு கட்ட முயல்வதிலிருந்து ஜெர்மானிய சோஷலிஸ்டு தேசியவெறியர்களை இது தடை செய்யவில்லை.

சர்வதேச அரங்கில் பிற்போக்கின் பரஸ்பர பலாபல உறவுகளில் ஏகாதிபத்திய சகாப்தம் கொண்டு வந்திருந்த அடிப்படை மாற்றங்களை, முதல் உலக யுத்தத்தின் போது சோஷலிஸ்டு தேசிய வெறியினருக்கு எதிரான போராட்டத்தில் சுட்டிக்காட்டினர் லெனின்: ''ஜாரிசம் பிற்போக்கின் பிரதான கோட்டையாக இருந்தது, முதலாவதாக, சர்வதேச நிதிமூலதனத்தின் ஆதரவினுலும், குறிப்பாக பிரான்ஸ் தந்த ஆதரவினுலும், இரண்டாவதாக, 1905ஆம் ஆண்டு நிகழ்ச்சிகளின் விளைவுகளால் திட்டவட்டமாகவும் சந்தேகத்திற்கு இடமின்றியும் மறைந்து போய்விட்டது... ஏகாதிபத்தியம் தோன்றுகின்ற வரை மார்க்சும் எங்கெல்சும் உயிர்வாழவில்லை. இப்போது விரல் விட்டு எண்ணக் கூடிய (5-6) ''மாபெரும்'' ஏகாதிபத்திய வல்லரசுகளின் அமைப்பு உருவாகியுள்ளது இவை ஒவ்வொன்றும் அன்னிய நாடுகளை ஒடுக்கிக் கொண்டிருக்கின்றன...'' *V. I. Lenin, The Discussion on Self Determination Summed up,* (V. I. Lenin, *Marx-Engels-Marxism,* Moscow 1953, p. 378).

உலகப் போர் அபாயம் முதிர்ந்து கொண்டிருப்பதைக் கவலையுடன் கவனித்த எங்கெல்ஸ், அமைதி காப்பதற்காக அனைத்து நாடுகளிலுமுள்ள சோஷலிஸ்டுகள் ஆற்றல் மிக்க போராட்டம் நடத்த வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார்.

ஐரோப்பா ஆயுதங்களைக் களைந்தெறிய முடியுமா? *(1893)* என்ற கட்டுரையில், சமாதானப் போராட்டத்திற்காக ஒரு திட்டத்தை முன்வைக்கிறார் எங்கெல்ஸ். ஆயுதங்களை அளவிற்குள் வைப்பதற்கும், நிரந்தர ராணுவங்களைப் படிப் படியாகக் கலைத்து விடுவதற்கும், அனைத்து மக்களும் ஆயுதந் தாங்க வல்லவர்களாகும் அடிப்படையில் அவற்றைக் காவற்படையாக மாற்றவும் போராடுவதற்கான பாட்டாளி வர்க்கப் போராட்டத் திட்டம் இது. சோஷலிஸப் புரட்சி யின் மகத்தான உலக வரலாற்று முக்கியத்துவம், அது தொழிலாளி வர்க்கத்திற்கும், அதோடு கூடவே மனித குலம் அனைத்திற்கும் எல்லா வித ஒடுக்குமுறையிலிருந்தும் விடுதலை அளிக்கும் என்பது மட்டுமல்ல, மனித சமுதாயத்துக்குக் கணக்கிட முடியாத துன்பங்களைக் கொண்டு வரும் எல்லா வகைப் போர்களுக்கும் முடிவு கட்டி விடும் என்பதே என எங்கெல்ஸ் கருதினார்.

* * *

சர்வதேச நிலைமைகள் தீவிரம் அடைந்ததையும், புதிய புரட்சிப் போர்கள் நெருங்கி வருவதையும் கண்ட எங்கெல்ஸ் ருஷ்யாவின் உள்நாட்டு வளர்ச்சியிலும், ருஷ்யாவினது புரட்சியின் சாத்தியப்பாடுகளிலும் குறிப்பாக அக்கறை காட்டினார்.

ஐரோப்பாவில் கிழக்கு முனையிலிருந்து தொலைதூர ஆசியா வரை பரந்து கிடந்து ஐரோப்பிய அரசியலில் பிரம் மாண்டமான செல்வாக்குச் செலுத்தி வந்த இந்த நாட்டில் மார்க்சும் எங்கெல்சும் நீண்டகாலமாக அக்கறை கொண்டி ருந்தனர். பொதுமக்களின் சுயேச்சையான ஜனநாயக இயக் கம் ருஷ்யாவில் இன்னும் பரவாததால், ஜாரிசத்தைத் தூக்கியெறியத் தக்க வல்லமை படைத்த புரட்சிகரச் சக்தி கள் இன்னும் அங்கு முதிர்ச்சி அடையாததால் புதிய ரைன் பத் திரிகையின் மூலமாக, ஐரோப்பியப் பிற்போக்குக் கோட்டை

யான ருஷ்யாவினது ஜாரிசத்தின் மீது புரட்சிகரப் போர் தொடுக்க வேண்டுமென்று பிரசாரம் செய்தனர்.

மார்க்சும் எங்கெல்சும் முன்னேக்கிக் கணித்தபடி, 1848-49 புரட்சியின் போது ஹங்கேரியின் தேசிய விடுதலை இயக்கத்தையும் புரட்சிகர ஜனநாயக எழுச்சியையும் ஒடுக்குவதற்குத் தனது படைப் பிரிவுகளை அனுப்பி, ''ஐரோப்பாவின் அரசியல் போலீசாக'' விளங்கியது ஜாரிசம்.

இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னரும் ஜாரிசத்தின் வெளிநாட்டுக் கொள்கையையும், ருஷ்யாவில் நிகழ்ந்து வந்த உள்நாட்டுப் போக்குகளையும் மார்க்சும் எங்கெல்சும் கூர்ந்து கவனித்து வந்தனர். ருஷ்ய மொழியிலும், ருஷ்ய இலக்கியத்திலும் மார்க்சும் எங்கெல்சும் பெற்றிருந்த ஞானம் ருஷ்யாவையும், அதன் பத்துக் கோடி மக்களையும், அதன் கலாசாரத்தையும் அவர்கள் நெருக்கமாகப் புரிந்து கொள்ள வகை செய்தது. அவர்கள் காலத்தில் வேறெருவரும் அறிந்து கொள்ள முடியாமல் இருந்த ருஷ்யாவினது சமுதாய வளர்ச்சியின் போக்கைத் தமது விஞ்ஞானச் சித்தாந்தத்தினல் அவர்கள் ஆழமாகப் புரிந்து கொண்டனர்.

ஜாரிசத்தை உள்ளிருந்து கலகலக்கச் செய்யத் தொடங்கிய சமுதாய சக்திகள் உருவாவதையும், நாள்தோறும் சீர்கேடடைந்து வந்த விவசாய மக்களின் நிலைமை காரணமாக அவர்களிடையே மேலும் மேலும் பரவி வந்த பயங்கரமான அதிருப்தியையும் மார்க்சும் எங்கெல்சும் உன்னிப்பாகக் கவனித்து வந்தனர்.

விவசாயச் சீர்திருத்தம் ருஷ்யாவில் இருந்து வரும் சமுதாய முரண்பாடுகளை ஒழிக்காதது மட்டுமின்றி, அவற்றை இன்னும் தீவிரமாக்கி, நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களை மேலும் சகிக்க முடியாததாக்கியுள்ளது என்று பல கட்டுரைகளில் எங்கெல்ஸ் மெய்ப்பித்தார். 1861ல் செய்யப்பட்ட விவசாயச் சீர்திருத்தம் பற்றி எழுதுகையில், ''ஐரோப்பிய மிதவாதப் பத்திரிகைகளால் வானளாவப் புகழப்படும் இந்த மாபெரும் விடுதலைச் சட்டம், எதிர்காலப் புரட்சி ஒன்றுக்கு உறுதியான அடித்தளத்தையும், அப்புரட்சிக்கான முழு அவசியத்தையும் உருவாக்கித் தந்திருக்கிறதே தவிர வேறென்றும் அல்ல'' என்று தீர்க்கதரிசனத்துடன் சொன்னர்.

விவசாயிகள் விழிப்படைந்ததையும், புரட்சிகர ஜனநாயக இயக்கம் வளர்ச்சி அடைந்து வந்ததையும் ஒட்டி, ஐரோப்பியப் புரட்சியை பலமாக உந்தி விடக்கூடிய ஒரு நாடாக ருஷ்யாவை மார்க்சும் எங்கெல்சும் பார்க்கத் தொடங்கினர்கள். கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் இரண்டாவது ருஷ்யப் பதிப்புக்கு 1882ல் மார்க்சும் எங்கெல்சும் எழுதிய முன்னுரையில், ''ஐரோப்பியப் புரட்சி இயக்கத்தில் முன்னணிப் படையாக விளங்குகிறது ருஷ்யா'' என்று குறிப்பிட்டனர்.

மார்க்சைப் போலவே எங்கெல்சும் ருஷ்யப் பொருளாதார வளர்ச்சியை ஆய்வு செய்து வந்தார். விஞ்ஞானம், இலக்கியம் ஆகியவை ருஷ்யாவில் பெற்று வந்த வளர்ச்சியை கவனமாகக் கண்காணித்தார். ருஷ்ய விஞ்ஞானத்தையும், ருஷ்ய முற்போக்குச் சமுதாயச் சிந்தனையையும் எங்கெல்ஸ் அறிந்திருந்தது ருஷ்ய மக்களின் அறிவாற்றலையும் ஒழுக்க மேன்மையையும் உயர்வாக மதிக்க அவருக்கு உதவியது. 1893 அக்டோபரில் தனியேல்சனுக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதத்தில், ருஷ்யர்கள் ''மகத்தான, உயர்ந்த திறமை வாய்ந்த மக்கள்'' என்று குறிப்பிட்டார். இந்த மக்களிடத்திலும் இவர்களின் உறுதியிலும், வளைத்தற்கரிய ஆற்றலிலும் பெரும் நம்பிக்கை வைத்திருந்தார் எங்கெல்ஸ். ருஷ்யாவின் பரவலான மக்களுக்கு அதில் முதலாளித்துவமும் பெரும் தொழில்களும் வளர்ச்சி அடைந்ததால் ஏற்பட்ட துன்பங்களைப் பற்றி தனியேல்சன் முறையிட்ட பொழுது, அதற்குப் பதில் எழுதுகையில் ''உங்களது நாட்டையொத்த ஒரு மகத்தான நாடு எந்த நெருக்கடியையும் சமாளிக்கும்'' என்று கூறினர்.

குறிப்பாக, விஞ்ஞான உண்மைகளையும் உண்மையான புரட்சிகரத் தத்துவத்தையும் விடாமுயற்சியுடன் தன்னலமற்றுத் தேடும் ருஷ்யாவின் புரட்சிகர இளைஞர்களை உயர்வாக மதிப்பிட்டார் எங்கெல்ஸ். மெய்யறிவின் வறுமை *(1847)*, அரசியல் பொருளாதார விமர்சனத்துக்குச் செலுத்தும் ஒரு பங்கு *(1859)* என்ற தமது நூல்கள் ருஷ்யாவில் விற்பனையானது போல் வேறெங்கும் விற்பனை ஆகவில்லை என்று ஒரு சமயம் மார்க்ஸ் குறிப்பிட்டிருந்தார். மூலதனத்தின் முதல் மொழிபெயர்ப்பு ருஷ்யனில்தான் வந்தது என்பது மிக முக்கியமான இன்னொரு உண்மையாகும். ருஷ்ய விஞ்ஞானிகளும்,

புரட்சிகர ருஷ்ய இளைஞர்களும் எவ்வளவு ஆர்வமுடன் மூல தனத்தைப் பயில்கிறார்கள் என்பது பற்றி பலப்பல தகவல் கள் கிடைக்கப் பெற்ற மார்க்ஸ், ''வேறெங்கும் விட ருஷ்யா வில் தான் மூலதனத்தை அதிகமாகப் பயில்கிறார்கள், உயர் வாக மதிக்கிறார்கள்'' என்ற முடிவுக்கு வந்தார். எங்கெல்சி னது நூல்களும் ருஷ்யாவில் இதே போன்ற வரவேற்புப் பெற்றன. உதாரணமாக, டூரிங்குக்கு மறுப்பு பற்றி எங்கெல்ஸ் எழுதுகையில், ''...நான் கொஞ்சம் கூட எதிர்பாராத வகையில் இந்த நூல் ருஷ்யாவில் பெரும் கருத்துப்பதிவை ஏற்படுத்தி இருக்கிறது'' என்றார்.

ருஷ்யா புரட்சி வீரர்களும் சோஷலிஸ்டுகளுமான லவ்ரோவ், லபாதின், தனியேல்சன், வேரா ஸசூலிச் ஆகி யோருடன் மார்க்சும் எங்கெல்சும் நடத்திய மிகப் பெரும் கடிதப் போக்குவரத்துகளில், இவர்களுக்கு முன்னால் வர லாறு படைத்துள்ள பணிகளைச் சுட்டிக் காட்டி, இவர்களது துணிவுக்குத் துணையாக வரலாற்று வளர்ச்சியின் எதார்த்த விதிகளையும் ருஷ்யாவில் நிலவுகின்ற திட்டவட்டமான போராட்டச் சூழ்நிலைகளையும், இதற்கேற்பக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை உத்திகளையும் இவர்கள் புரிந்து கொள்ளச் செய்வதற்காக, விஞ்ஞானக் கம்யூனிச மூலவர் கள் உதவி புரிந்தனர்.

எனவே, நரோத்னிக்குகளின் கற்பனைக் கோட்பாடுகளை உறுதியாக எதிர்த்த மார்க்சும் எங்கெல்சும், ருஷ்யா முதலா ளித்துவ முறையில் அன்றி ஒரு தனி வகையாக வளர்ச்சி பெறுகிறது என்றும், இங்கு விவசாயிகள் குழு அமைப்பு சோஷலிசத் தன்மை கொண்டதாக இருக்கிறது என்றும் கூறி நரோத்னிக்குகளிடம் வேரோடியிருந்த கருத்துக்களை எதிர்த்துத் தாக்கினார்கள். ருஷ்யாவில் மார்க்சியம் பரவு வதற்குப் பெரும் முட்டுக் கட்டையாக இருந்தது நரோத் னியம்தான்.

திகச்சொவுக்கு எதிராக எங்கெல்ஸ் எழுதிய **ருஷ்யாவில் சமுதாய உறவுகள்** *(1875)* என்ற கட்டுரையிலும் இன்னும் பல கட்டுரைகளிலும், நரோத்னியக் கண்ணோட்டம் வர லாற்று உண்மைகளுடனும் ருஷ்ய எதார்த்தத்துடனும் வெகு குறைவான சம்பந்தமே கொண்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டினார். நிலம் சமுதாயக் குழுக்களின் உடைமை

யாக இருப்பது ருஷ்யாவில் மட்டும் இருக்கின்ற தனிச் சிறப்பு அல்ல, மற்ற மக்களது வளர்ச்சியின் கீழ் மட்டத்தின் போது அவர்களிடையேயும் இது காணப்பட்டது. சொத்து ஏதுமற்ற மேற்கு ஐரோப்பியப் பாட்டாளிகளை விட ருஷ்ய விவசாயிகள் உடைமையாளர்களாக இருந்த போதிலும் சோஷலிசத்திற்கு அருகே அவர்கள் நிற்கிறார்கள் என்று அடித்துக் கூறும் நரோத்னிக்குகள் எவ்வாறு தவறு இழைக்கிறார்கள் என்று மெய்ப்பிக்கிறார் எங்கெல்ஸ்.

ருஷ்யாவில் நிகழும் இடையறாத பொருளாதார வளர்ச்சி, தொழிற் புரட்சி, உள்நாட்டு மார்கெட்டும் பொருளுற்பத்தி உறவுகளும் விரிவடைவது ஆகியவை எப்படி விவசாயக் குழு அமைப்பை அரிக்கின்றன, சீர்குலைக்கின்றன என்றும், அதில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் எவ்வாறு பெருகி வருகின்றன என்றும், கிராமங்களில் நிலப்பிரபுக்களோடு கூடவே ஈட்டிக்காரனும் குலாக்கும் ஒட்டுண்ணியும் (அடிக்கடி ருஷ்ய மொழியிலேயே இவ்வார்த்தைகளை எழுதுகிறார் எங்கெல்ஸ்) எவ்வாறு தோன்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், விவசாய வர்க்கம் எப்படிப் பாட்டாளி மயமாய் வருகிறது என்றும் எடுத்துக் காட்டுகிறார் எங்கெல்ஸ். விவசாயக் குழு அமைப்பு இருக்கின்ற சூழ்நிலைமைகளால் விவசாய வர்க்கம் பாட்டாளி மயமாய் வருவது மிக மெதுவாகவும் வேதனை மிக்கதாயும் நடந்து வருகிறது என்று எங்கெல்ஸ் கோடிட்டுக் காட்டுகிறார்.

எனவே, மேற்கு நாடுகளைப் போல, நீண்ட காலத்துக்கு முதலாளித்துவம் வளர்ச்சி பெற்று விவசாயக் குழு அமைப்பைச் சீர்கெடுக்க வேண்டும் என்று இதற்குப் பொருளா, அல்லது இந்த விவசாயக் குழு அமைப்பு உடைமையானது உயர்ந்த கட்டமான சோஷலிச உடைமைக்கு நேரடியாக மாறிச் செல்லுவது சாத்தியமா? ருஷ்யப் புரட்சியாளர்கள் இந்தக் கேள்வியை அடிக்கடி மார்க்சிடமும் எங்கெல்சிடமும் கேட்டார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் இரண்டாவது ருஷ்யப் பதிப்பிற்கு 1882ல் மார்க்சும் எங்கெல்சும் எழுதிய முன்னுரையில் பின்கண்டவாறு இக்கேள்விக்குப் பதிலிறுத்தனர்:

''மேற்கு நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சி தோன்றுவதற்கு ருஷ்யப் புரட்சி பச்சை விளக்குக் காட்டி, இவ்

விரண்டும் ஒன்றை ஒன்று நிறைவு செய்து கொள்ளுமே யானல் ருஷ்யாவின் இப்போதைய விவசாயக் குழு அமைப்பு நில உடைமை கம்யூனிச வளர்ச்சிக்கு ஆரம்பப் புள்ளியாக இருக்க முடியும்.''

முன்னேறிய நாடுகளில் நிகழும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உதவி இல்லாமல், விவசாயக் குழு அமைப்பு உடைமை யானது தாளுகவே சோஷலிசத்தைத் தோற்றுவிக்க முடியாது என்றும், ஏனெனில், தனக்கே உரித்தான உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியையும், தீவிரம் அடைந்துள்ள வர்க்க முரண்பாடுகளையும் முதலாளித்துவ சமுதாயம் ஏற்கெனவே ஏற்படுத்தி வைத்திருக்க வேண்டியது சோஷலிசம் வெற்றி யடைவதற்கு அவசியமான ஒரு வரலாற்று முன்தேவை என்றும் நரோத்னிக்குகளுக்கு நேர்மாறுக மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினுர்கள். எனினும், முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்று, அப்பொழுதுதான் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்கிற நாடுகளுக்கு அவை தீவிர உதவி புரியுமாளுல், சோஷலிச அமைப்புக்கு மாறுகின்ற நிகழ்ச்சியின் காலத்தை வெகுவாகக் குறைத்து விடுவதற்கு விவசாயக் குழு அமைப்பு உடைமையின் மிச்ச சொச்சங்களைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று மார்க்சும் எங்கெல்சும் கருதினுர்கள்.

விவசாயக் குழு அமைப்புகளின் எதிர்காலம் பற்றிய பிரச்னை குறித்து மார்க்சின் மறைவுக்குப் பின்னும் அடிக்கடி எழுதுகிருர் எங்கெல்ஸ். தமது பல்வேறு கட்டுரைகளிலும், ருஷ்யப் புரட்சியாளர்களுக்கு எழுதிய கடிதங்களிலும், **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** ருஷ்யப் பதிப்பிற்குத்தாமும் மார்க்சும் எழுதிய முன்னுரைக்குப் பிறகு, விவசாயக் குழு அமைப்பு உடைமை ருஷ்யாவில் பெருமளவிற்குச் சிதைந்து போயிருக்கிறது என்றும், முதலாளித்துவ வளர்ச்சியோ பெரிய வெற்றிகளை ஈட்டி இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். ருஷ்யாவில் நிகழ்ந்துள்ள இந்த மாற்றங்கள் விவசாயக் குழு அமைப்பின் எதிர்காலம் பற்றித் தாமும் மார்க்சும் 1882ல் தந்த பதிலை எங்கெல்ஸ் மீண்டும் தருவதற்கு அனுமதிக்கவில்லை.

பத்து ஆண்டுகள் கழித்து தனியேல்சனுக்கு எழுதினுர் எங்கெல்ஸ்: ''உங்களது ருஷ்ய விவசாயக் குழு அமைப்பைத் திரும்பி வராது கழிந்து போன பழங்கனவாய்க் கருதி, எதிர் காலத்தில் முதலாளித்துவ ருஷ்யாவைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எனக்குத் தோன்று கிறது.''

மார்க்சியத்தின் முதல் ருஷ்ய ஆதரவாளர்களாக ''உழைப் பின் விடுதலை'' என்னும் குழு தோன்றியதை எங்கெல்ஸ் குதூ கலத்துடன் வரவேற்ருர்:

''...மார்க்சினுடைய மாபெரும் பொருளாதார, வர லாற்றுக் கோட்பாடுகளை விசுவாசத்துடன் நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்டு, அராஜகத் தனத்தையும் தமக்கு முந்திய வர்களின் சில ஸ்லாவிய மரபுகளையும் தீர்மானமாக விட் டொழித்து விட்ட ஒரு கட்சி ருஷ்யாவின் இளைஞர்களிடை யில் இருக்கிறது என்பதில் நான் பெருமை அடைகிறேன். மார்க்ஸ் இன்று இருந்தால் அவரும் இதில் பெருமைப் பட்டிருப்பார்...''

ருஷ்யாவின் புரட்சி வீரர்களும், பாட்டாளி வர்க்கப் பிரதிநிதிகளும் மார்க்சியத் தத்துவத்தைக் கிரகித்துக் கொள்ளுவதுதான், ருஷ்யாவில் புரட்சி வெற்றிக் கொடி நாட்டுவதற்கு முதற் பெரும் முன்தேவையாகும் என்று எங்கெல்ஸ் கருதினுர். ''என்னைப் பொறுத்த வரை மார்க் சினது வரலாற்றுத் தத்துவம்தான் அவசரமற்ற, முரணற்ற புரட்சிகர நடைமுறை உத்திக்குப் பிரதான முன்தேவையா கும். இந்த உத்தியைக் கண்டுகொள்ள வேண்டுமென்ருல், குறிப்பிட்ட நாட்டின் பொருளாதார, அரசியல் சூழ்நிலை களில் இந்தத் தத்துவத்தைப் பொருத்திப் பார்க்க வேண் டும்,''* என்று வேரா ஸசூலிச்சுக்கு எழுதினுர் எங்கெல்ஸ்.

ஸசூலிச்சுக்கும் பிளெஹானவுக்கும் எழுதிய கடிதங்களில் ''உழைப்பின் விடுதலைக்'' குழுவினருக்கு ருஷ்யச் சூழ்நிலைமை களுக்கு ஏற்ப ''நடைமுறை உத்திகளைக் கண்டு கொள் வதற்கு'' உதவி செய்ய முயன்ருர் எங்கெல்ஸ்.

மார்க்சிய போதனைக்கு அடிப்படையிலேயே அன்னிய மான வறட்டுத்தனத்துக்கும், நுனிப்புல் மேய்வதற்கும்

---

* *Engels' Letter to V. I. Zasulich on April 23, 1885;* K. Marx and F. Engels, *Selected Correspondence*, Moscow, p. 459.

எதிராக ருஷ்ய மார்க்சிஸ்டுகளை எச்சரிக்கை செய்கிருர் எங்கெல்ஸ். ருஷ்யாவின் இலக்கியவாதியும், சமூக ஜனநாயக வாதக் குழுக்களில் பங்கு கொண்டவருமான அ. வோதென் 1893ல் லண்டனில் தாம் எங்கெல்சைச் சந்தித்தது பற்றி நினைவு கூர்ந்தார். எங்கெல்ஸ் அவருடன் உரையாடும் பொழுது, ''ருஷ்யர்கள்—ருஷ்யர்கள் மட்டுமல்ல—மார்க்சும் தாமும் சொன்னவற்றிலிருந்து மேற்கோள் காட்டிக் கொண்டிருக்காமல், மார்க்ஸ் அவர்களது இடத்தில் இருந்திருந்தால் எப்படிச் சிந்தித்திருப்பாரோ, அது போலச் சிந்திக்க வேண்டும் என்றும், இது தான் 'மார்க்சியவாதி' என்ற வார்த்தைக்குப் பொருளாகும் என்றும்'' தெரிவித்ததாகக் கூறுகிருர்.

மார்க்சியத்தைப் பிரசாரம் செய்வதில் ''உழைப்பின் விடுதலைக்'' குழு ஆற்றிவரும் பணிகளைப் பெரிதாக மதித்த எங்கெல்ஸ், அதே நேரத்தில், பல்வேறு பிரச்னைகளில், முதலாவதாக ருஷ்ய விவசாயப் பிரச்னையில் தனியாக விஞ்ஞான ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டினுர். இது மார்க்சினது பொருளாதாரத் தத்துவத்தை, குறிப்பாக நிலவாடகை பற்றிய போதனையை மேலும் செழுமைப்படுத்துவதற்கும், அதே போல ருஷ்யாவின் புரட்சிகரமான நடைமுறைப் பணிகளுக்கும் அத்தியாவசியமாகும் என்று கோடிட்டுக் காட்டினுர். ருஷ்யாவில் பிரதானமாக இருந்த இந்தப் பிரச்னையை மிகத் திறமை சாலி என்று அவர் மதித்த பிளெஹானவ் ஆய்வு செய்ய வேண்டுமென்று எங்கெல்ஸ் விருப்பம் தெரிவித்தார். இந்தப் பணி பின்னர் லெனினுல் நிறைவேற்றப்பட்டது என்பது யாவரும் அறிந்ததே.

ஐரோப்பாவின் கிழக்கு, தென் கிழக்குப் பகுதிகளை நோக்கி சோஷலிசம் முன்னேறி வருவதையும், ஆசிய எல்லைகளிலும், கருங்கடல், ஏஜியன் கடற்கரைகளிலும் முன்னணி சோஷலிச நிலையங்கள் தோன்றி இருப்பதையும் தமது வாழ்வின் இறுதி ஆண்டுகளில் மனநிறைவுடன் குறிப்பிடுகிருர் எங்கெல்ஸ். ஜாரினுடைய பிரகடனங்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும் எதிராக, ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்து முன்னணி வீரர்களின் சோஷலிசப் படைப்புக்களை அவர் பெருமையுடன் முன் நிறுத்துகிருர்.

உண்மையான பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்று ருஷ்யாவில் நிறுவப்படுகிற வரையிலுமோ, தொலைநோக்குப் பார்வையுடன் பலமுறை அவர் சொன்னபடி வரலாற்றின் திரும்பு முனையாக அமைந்த ருஷ்யப் புரட்சி வரையிலுமோ எங்கெல்ஸ் உயிரோடிருக்கவில்லை. ''இருபதாம் நூற்றாண்டுக்குள் எட்டிப் பார்க்க வேண்டும்'' என்றும், ஐரோப்பா மீண்டும் புரட்சிப் பாதையில் அடியெடுத்து வைப்பது வரை உயிர் வாழ வேண்டும் என்றும் எங்கெல்ஸ் விரும்பியது நிறைவேறாமலேயே போய்விட்டது.

தொழிலாளி வர்க்கம் வெற்றி வாகை சூடி, மனித இன வரலாற்றில் புதிய யுகமான கம்யூனிச யுகம் வரப் போவது பற்றி வாழ்வின் இறுதி நாட்கள் வரை அசையா உறுதி கொண்டிருந்தார் எங்கெல்ஸ். ''ஒரு சாரார் ஆட்சி செலுத்த மறு சாரார் துன்பப்படுகிறார்கள்'' என்று டான்டே வரையறுத்த பழைய காலத்துக்கு மாறுபட்ட விதத்தில், வரப் போகின்ற **புதிய யுகத்தின்** சாரத்தை சில சொற்களில் விளக்கிக் காட்டும்படி, இத்தாலியப் பத்திரிகையான **புதிய யுகத்தின்** (*L'Era Nuova*) ஆசிரியர் எங்கெல்சிடம் கேட்ட போது, **கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கையில்** கண்டுள்ள தீர்க்க தரிசனமிக்க வார்த்தைகளால் எங்கெல்ஸ் விடையளித்தார்: ''வர்க்கங்களும் வர்க்க எதிர் நிலைகளும் நிலவும் முதலாளித்துவ சமுதாயம் இருக்கின்ற இடத்தில் அதற்கு பதிலாக, தனி ஒருவனின் தங்குதடையற்ற வளர்ச்சியே சுதந்திரமான அனைவரது வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்கப் போகிற ஒரு மக்கள் சங்கம் வரப்போகிறது.''

தனி நபரின் உண்மையான சுதந்திரத்திற்கும், சமுதாயத்தின் ஒரு உறுப்பாக அந்த நபர் சமுதாயத்துடன் தொடர்பு கொள்ளுவதற்கும், மனிதனின் எல்லா ஆற்றல்களும் திறமைகளும் மலர்ந்து விரிவதற்கும் தீர்மானமான முன்தேவை, முதலாளித்துவ சமுதாயம் ஒழிவதும், எல்லாச் சுரண்டல்களிலிருந்தும் அவன் விடுதலை பெறுவதும்தான் என்று மார்க்சும் எங்கெல்சும் கருதினர். கம்யூனிச சமுதாயத்தின் மிகவுயர்ந்த இந்த மனித நேயம்தான், மனித வரலாற்றில் தோன்றப் போகிற புதிய யுகத்தின் சாரம் என்றார் எங்கெல்ஸ்.

* * *

திருப்பிப் பெற முடியாதபடி காலம் விரைந்து பறந்து கொண்டிருந்த போதிலும், தமது வாழ்நாளில் எண்பதாம் ஆண்டுகளில் எங்கெல்ஸ் அடியெடுத்து வைத்து விட்ட போதிலும், இளைஞரைப் போலச் சுருசுருப்பும் மகிழ்ச்சியும் கொண்டிருந்தார். அவருடைய இயக்கம் மிகுந்த, உறுதியான, நிமிர்ந்த உருவத்தையும், ஒரு வெள்ளி முடி கூடக் காணப்படாத அவரது தாடியையும் தலையையும் பார்த்தால் அவருக்கு 50 வயதுக்கு மேல் இருக்காது என்றே தோன்றும். ''தலை முடியைக் கொண்டு அவரை மதிப்பிட்டால் எங்களில் பலரையும் விட இளையவராக அவர் இருந்தார்'' என்று எழுபது வயது எங்கெல்ஸ் பற்றி மார்க்சின் மகள் எலியனேரா சொன்னார். மனநிலையிலோ அவர் இன்னும் வாலிபராக இருந்தார். விரைந்து இயங்கும் அறிவும், மகிழ்ச்சி துள்ளும் மனமும், நகைச்சுவை விரும்பும் இயல்பும் வாய்ந்த மனிதராக இருந்தார் அவர். இந்த விஷயத்தில், எனக்குத் தெரிந்த அனைவரிலும் மிக இளையவராக விளங்கியவர் எங்கெல்ஸ்தான் என்றார் எலியனேரா. 1888ல், எலியனேரா, அவரது கணவர், தமது நண்பரான ரசாயன விஞ்ஞானி கார்ல் ஷார்லிம்மர் ஆகியோருடன் அமெரிக்காவிற்குப் பயணம் மேற்கொண்டிருந்த எங்கெல்ஸ், எல்லோரையும் விடக் களிப்பு மிக்க மனிதராயும், உயிர்ப்பு நிறைந்த துணைவராயும், பேச்சுக்கேற்ற நண்பராயும் விளங்கினார் என்றும், அக்கப்பல் பயணத்தின் போது, கால நிலை எப்படி இருந்தாலும் கப்பல் தளத்தில் உலாவி வருவார் என்றும், அவ்வாறு உலாவுகையில் வழியில் தடைகள் ஏதும் தட்டுப்பட்டால் அவற்றைச் சுற்றி நடந்து போகாமல், தாண்டிக் குதித்தோ ஏறிக் கடந்தோ தான் செல்லுவார் என்றும் கூறினார் எலியனேரா. அமெரிக்கப் பயணத்தைத் தவிர, 1890ல் ஷார்லிம்மருடன் நார்வேக்கும் விஜயம் செய்தார் எங்கெல்ஸ்.

தமது வாழ்வின் கடைசி நாட்கள் வரை அளவு கடந்த வேலை செய்யும் வல்லமையும் ஆற்றலும் பெற்றிருந்தார். பத்துப் பேர் கூடச் சேர்ந்து செய்ய முடியாத வேலையைச் செய்து வந்தார் அவர். எங்கெல்சுக்கு வந்த தபால்கள் மட்டுமே நம்மை வியப்பிலாழ்த்தப் போதுமானவை. ரீஜன்ட் பார்க் ரோடிலிருந்த அவரது வீட்டிற்கு, எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் எழுதப்பட்டிருந்த பெருங் குவியலான

பத்திரிகைகளும் கடிதங்களும் தினமும் வரும். இவை அனைத்தையும் படித்துக் கிரகித்துக் கொண்டு, எல்லா நிகழ்ச்சிகளையும் பற்றிக் கருத்துச் சொல்லி, கடிதங்களுக்கு பதிலும் எழுதுவதற்குக் கூட எங்கெல்ஸ் நேரம் கண்டு பிடிப்பார்.

தமது இயல்பின்படி தீவிரமாகவும், தெளிவாகவும், முறையாகவும் வேலை செய்வார் எங்கெல்ஸ். முற்ற முழுக்க ஒழுங்கும் தூய்மையும் அவர் வீட்டில் கோலோச்சிக் கொண்டிருக்கும். ''வெளிச்சம் மிகுந்த அவருடைய இரண்டு பெரிய அலுவலக அறைகளின் சுவர்களில் புத்தக அலமாரிகள் பொருத்தப்பட்டிருக்கும். தரையில் ஒரு துண்டுக் காகிதத்தைக் கூடக் காண முடியாது. அவர் எழுதிக் கொண்டிருக்கும் மேசையின் மீது கிடக்கும் பத்துப் பன்னிரெண்டு புத்தகங்களைத் தவிர மற்றவை எல்லாம் அதனதன் இருப்பிடத்தில் இருக்கும்... தமது வெளித் தோற்றத்திலும் அவர் அதே போல அக்கறை கொண்டிருந்தார். உற்சாகம் மிக்கவராய், தமது தோற்றத்தைச் சரிசெய்து கொண்டவராய், எந்த நேரத்திலும் காட்சிக்குத் தயாராயிருப்பவர் போலக் காணப்படுவார் அவர்... இவரைப் போல ஒரே உடையை இவ்வளவு நீண்ட காலம் அணிந்து, அதையே மடிப்புக் கலையாமலும் புதியதாயும் வைத்திருந்த வேறொருவரை நான் பார்த்ததில்லை. தம்மைப் பொறுத்தவரை மிகவும் சிக்கனமாய் இருந்து, தமக்கு மிகமிக அத்தியாவசியத் தேவையாய் இருந்த செலவுகளை மட்டுமே அவர் செய்து வந்தார். ஆனால், கட்சியைப் பொறுத்த வரையோ, உதவி கோரி அவரை அணுகுகின்ற கட்சித் தோழர்களைப் பொறுத்த வரையோ, அளவு கடந்த தாராளம் காட்டினார் அவர்''* என்று சொல்லுகிறார் போல் லஃபார்க்.

உலகத்து நாடுகளிலிருந்து வருகின்ற மனிதர்களுக்கு எல்லாம் ஒரு விவாத மேடையாக இருந்தது எங்கெல்சின் வீடு. ஞாயிற்றுக் கிழமைகளிலும், எங்கெல்சின் வழக்கமான பார்வையாளர் தினங்களிலும், சர்வதேச மொழிகள் பலவற்றிலும் அங்கு குரல் ஒலிக்கும். தமது புத்திகூர்மையாலும், கவர்ச்சி மிக்க உற்சாகத்தாலும், மகிழ்ச்சி துள்ளும் மனநிலை

---

* மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய நினைவுக் குறிப்புகள், பக்கம் 86.

யாலும் எங்கெல்ஸ் உயிரூட்டிய அந்த மறக்க முடியாத ஞாயிற்றுக் கிழமைகளை இங்கு வந்த அனைவரும் தம் ஆயுள் முழுதும் நினைவில் கொண்டிருப்பார்கள்.

''எப்பொழுதும் மகிழ்ச்சியுற்றவராய், நல்ல மனநிலை கொண்டவராய் இருந்த எங்கெல்ஸ், கொந்தளிப்பு மிகுந்த தமது வாழ்க்கையில் நிகழ்ந்த சிறுசிறு சம்பவங்களையும், நகைச்சுவை நிகழ்ச்சியையும் மனதில் கொண்டிருக்கக் கூடிய வியப்புக்குரிய நினைவாற்றல் பெற்றிருந்தார். உடனிருப்போர் உற்சாகமாயிருக்கையில், இடையிடையே இவற்றைச் சொல்லி உரையாடலுக்கு உயிர்ப்பூட்டுவார்.... பிரமிக்கத் தக்க அளவில் ஒயின்கள் வைத்திருந்தார் எங்கெல்ஸ், விருந்தாளிகள் அவற்றைப் பருகிக் களிக்கையில் மனத்திருப்தி கொள்ளுவார் அவர்,''* என்று பேபெல் நினைவு கூர்ந்தார்.

எங்கெல்சின் வீட்டிற்கு எவ்வளவு அதிகமாகப் பார்வையாளர்கள் வந்த போதும், அவர் வீட்டுக் கதவு விருந்தோம்பலுடன் எல்லோருக்கும் திறந்தே கிடக்கவில்லை. தமக்குத் தெரியாதவர்களிடமும், சந்தேகத்துக்கு உரியவர்களிடமும் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பிரம்மாண்டமான அரசியல் அனுபவம் எங்கெல்சுக்குக் கற்றுக் கொடுத்திருந்தது. தமது நடத்தையால் பாட்டாளி வர்க்கத்துக்குத் துரோகம் புரிந்த எவரையும் எந்த விதமான சடங்குமின்றி வீட்டை விட்டு வெளியே அனுப்பி வைப்பார் எங்கெல்ஸ். ''கபடத் தனத்தை மட்டும் எங்கெல்ஸ் மன்னிக்கவே மாட்டார். தனக்குத் தானே உண்மையாக இல்லாது, கட்சியிடமும் நேர்மையாக நடந்து கொள்ளாத ஒருவனுக்கு எந்த விதமான இரக்கத்தையும் எங்கெல்ஸ் ஒரு போதும் காட்டமாட்டார்''** என்று எலியனோரா மார்க்ஸ் எழுதினார்.

சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்திற்கு மதிப்பிட முடியாத சேவை செய்த எங்கெல்ஸ், முன்னைப் போலவே மகத்தான எளிமையும் அடக்கமும் கொண்டவராகவே இருந்தார். உதாரணமாக, லண்டன் கம்யூனிஸ்டு தொழிலாளர் கல்விக் கழகத்தினுடைய சங்கீதக் குழு அவரது பிறந்த நாளையொட்டி

---

* மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய நினைவுக் குறிப்புகள், பக்கங்கள் *219-220*.

** மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய நினைவுக் குறிப்புகள், பக்கம் *188*.

இன்னிசைக் கச்சேரி ஒன்று ஏற்பாடு செய்ய எண்ணங் கொண் டிருந்ததை அறிந்த எங்கெல்ஸ், இந்த எண்ணத்தை உடனடி யாகக் கைவிட்டு விடுமாறு மிகவும் வற்புறுத்தி வேண்டிக் கொண்டார். ''தனிப்பட்ட மனிதர்களுக்காக பகிரங்க விழா எடுப்பதை மார்க்சும் நானும் எப்போதும் எதிர்த்து வந் திருக்கிறோம். இதன் மூலம் ஏதாவது ஒரு பெரும் குறிக்கோள் நிறைவேறுகிறது என்பது உறுதியானால், இது போன்ற விழா அனுமதிக்கப்படலாம். ஆனால், எங்களைப் பற்றிய கொண்டாட் டங்கள் எங்கள் வாழ்நாளில் நடப்பதை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம்'' என்றெழுதினார் எங்கெல்ஸ். சோஷலிஸ்டுக் கட்சிகளின் சிறப்பு மிக்க தலைவர் என்று தாம் பாராட்டப் படுகின்ற போதெல்லாம், இந்தப் பாராட்டுக்கள் எல்லாம் பிரதானமாக மார்க்சையே சேரும் என்று விளக்கினார் அவர். எங்கெல்சின் எழுபதாவது பிறந்த தினத்தை ஒட்டி தந்திகளும் பரிசுகளும், கடிதங்களும் கட்சிப் பத்திரிகைகளில் கட்டுரை களும் பெரும் மழையென அவர் மீது பொழிந்த போது, அவர் எழுதினார்: ''என்னை விட மகத்தான மனிதரான மார்க்ஸ் விதைத்த விதைகளில் விளையும் புகழையும் கீர்த்தி யையும் நான் அறுவடை செய்ய நேர்ந்திருந்திருக்கிறது. எனக்கு அளிக்கப்பட்ட கௌரவங்களுக்கு எதிர்காலத்திலா யினும் முடிந்த அளவுக்கு நான் அருகதை உள்ளவனாய் விளங்குவதற்காக, எனது வாழ்வின் எஞ்சிய காலத்தைப் பாட்டாளி வர்க்கத்துக்கே பணிசெய்து கழிப்பேன் என்று ஆரவாரத்துடன் அறிவிக்கத்தான் என்னால் முடியும்.'' தமக்கு அளிக்கப்பட்ட பெருமைகளை ஒரு மரியாதை மிக்க மலர் வளையமாக மார்க்சினது கல்லறையில் சூட்டி விடுவதற்கு அனுமதி கேட்டார் எங்கெல்ஸ்.

''உயிருடன் இருந்த மார்க்சின் மீது அவர் சொரிந்த அன்பும், மறைந்து விட்ட மார்க்ஸ் நினைவுக்கு அவர் அஞ்சலி செய்து வணங்குவதும் சொல்லற்கரிய ஒரு பண்பாகும். ஆவேசமான போர்வீரரும், உணர்ச்சி வயப்படாத சிந்தனை யாளருமான இவரிடம் ஆழமாக நேசிக்கும் கனிவு மிக்க இதயம் இருந்தது'' என்று எழுதினார் லெனின்.

மார்க்சின் நினைவுக்குத் தலைவணங்கி, அவர்கள் இருவரு மாக எதற்காக போராடினரோ அது கொண்டு வந்திருக்கும் வெற்றிகளில் பெருமிதம் கொண்டிருக்கும் போதே மார்க்சை

அவதூறு செய்வதற்கும் அதன் மூலம் சர்வதேசத் தொழி லாளி இயக்கத்துக்கே தீங்கிழைப்பதற்கும் முயற்சி செய்த வர்களைக் கடுமையாக எதிர்த்துச் சாடினார் எங்கெல்ஸ். உதாரணமாக, க்ளாட்ஸ்டனின் பேச்சை மார்க்ஸ் திரித்து மேற்கோள் காட்டியிருப்பதாக பிரென்தானோ என்பவர் தமது பிரசுரத்தில் சொன்ன போது, ஆவணங்களின் அடிப்படை யில் இந்தக் கூற்றின் பொய்மையைக் கிழித்தெறிந்தார் எங் கெல்ஸ். மார்க்சின் நினைவைப் புனிதமாகப் போற்றியது போலவே அவருடைய துணைவியார் ஜென்னியின் நினைவை யும் போற்றினார் எங்கெல்ஸ். இவரது கல்லறை அருகே உரை நிகழ்த்தும் போது ''தமது கணவரின் தலைவிதியையும் பணிகளையும் போராட்டங்களையும் தாமும் பகிர்ந்து கொண்டதோடன்றி, மாபெரும் உணர்வுடனும், கொழுந்து விட்டெரியும் ஆர்வத்துடனும் இவற்றில் அவரும் பங்கு கொண்டார்'' என்றார். மார்க்சின் மீது கொண்டிருந்த அன்பை அவரது மகள்மாரின் மீதும் வைத்திருந்தார் எங் கெல்ஸ். மார்க்சின் புதல்வியர் எங்கெல்சை தமது இரண்டா வது தந்தை என்று அழைத்தனர்.

மார்க்ஸ் வீட்டில் பணியாளராயும், அனேகமாகக் குடும் பத்திலேயே ஒருவராயும் இருந்த லென்ஹெனிடம் (எலேனா தேமுத்) மிகப் பெரும் மரியாதை கொண்டு நன்றி பாராட் டினார் எங்கெல்ஸ். ''பெண்களிலெல்லாம் கருணை மிக்கவர்'' என்று இவரைப் பற்றி மார்க்சின் மகள் எலியனோராவும் சொன்னார். மனைவி லீசி மறைந்து (1878) விட்டதால் தனித்து இருந்த எங்கெல்சின் வீட்டில் மார்க்சின் மறைவுக்குப் பின் லென்ஹென் குடியேறி வீட்டைக் கவனித்துவந்தார். 1890 நவம்பர் 5ல் லென்ஹென் காலமான அடுத்த நாள் ஸோர் கேக்கு எழுதிய கடிதத்தில் மார்க்சின் வாழ்வையும் தமது வாழ்வையும் வளமைப்படுத்துவதில் இந்தப் பெண்மணி எத் தகைய பணியாற்றி இருந்தார் என்பது பற்றிச் சொன்னார் எங்கெல்ஸ்: ''1848க்கு முந்திய பழைய வீரர்களில் நாங்கள் இருவர்தான் எஞ்சி இருந்தோம். இப்போது நான் மீண்டும் தனியனாய் இருக்கிறேன். நீண்ட பல ஆண்டுகளாக மார்க் சும், இந்த ஏழு ஆண்டுகளாக நானும் அமைதியாக வேலை செய்ய முடிந்தது என்றால், அதற்குப் பெருமளவில் இந்தப் பெண்மணிக்குத்தான் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.''

பழைய நண்பர்களின், துணைவர்களின் அணிகள் எப்படிச் சிறுத்து வருகின்றன என்பதையும் பாட்டாளி வர்க்கப் போர்வீரர்களின் பழைய படை வாழ்க்கையிலிருந்து எப்படி மறைந்து வருகிறது என்பதையும் வேதனையுடன் கவனித்து வந்தார் எங்கெல்ஸ். ''பாட்டாளி வர்க்கம் பெருவெற்றி கொண்டு, வர்க்கப் பகைமைகளையும் மக்களிடைப் போர்களையும் ஒழித்து சமாதானத்தையும் சந்தோஷத்தையும் நாகரீக உலகெங்கும் நிலைநாட்டும் நாட்கள் வரை'' தாமாவது உயிர் வாழ்ந்திருப்போம் என்று தமது இறுதி நாட்கள் வரை நம்பிக்கை கொண்டிருந்தார் அவர்.

இறுதிப் போராட்டத்தில் இன்னும் தீவிரமாகக் கலந்து கொள்ளப் போவதாக நம்பிய எங்கெல்ஸ், இப்போது அவ்வாறு செய்ய முடியவில்லையே என்று மட்டும் வருந்தினர். எங்கெல்சைப் பொறுத்தவரை வாழ்வது என்பது வேலை செய்வது, வேலை செய்வது என்பதோ போராடுவது. பாட்டாளி வர்க்கத்தை விடுதலை செய்வதற்கான போராட்டத்தில், ஒளிமிக்க எதிர்காலத்துக்கு மனித இனத்தை இட்டுச் செல்லுவதற்கான போராட்டத்தில்தான் வாழ்வின் அர்த்தத்தையும், இன்பம், ஊக்கம் ஆகியவற்றின் ஊற்றுக்கண்ணையும் கண்டார் அவர். தமது ஆற்றலின் கடைசிச் சொட்டையும் பாட்டாளி வர்க்கப் பணிக்காகவே செலவிட விரும்பினர் அவர். எழுபதாவது பிறந்த தினத்தன்று அவருக்கு வந்த வாழ்த்துக்களுக்கு பதிலளிக்கும் பொழுது ''என்னல் போராட்டத்தில் ஈடுபட முடியாத அந்த வினடி, என்னை மரணம் தழுவிக் கொள்ளட்டும்'' என்று எழுதினர் எங்கெல்ஸ்.

ஆனல் காலம் தனது வேலையைச் செய்தது. 1894 டிசம்பர் 4ல் எங்கெல்ஸ் ஸோர்கேக்கு எழுதுகையில், ஆற்றல் மிக்கவராயும் வேலையில் விருப்பம் இழக்காதவராயும், ஒப்பிட்டுப் பார்க்கையில் பணியாற்றவல்லவராயும் தாம் இருந்தபோதிலும், 75ஆவது வயது முன்னைப் போல் சுருசுருப்பாக இருக்கத் தம்மை விடவில்லை என்று தெரிவித்தார்.

இந்த வரிகளை எங்கெல்ஸ் எழுதும்போதே அவரது உடலை பயங்கர நோய் தாக்கிச் சீரழித்து வந்தது. அன்னக் குழலில் அவருக்கு ஏற்பட்டிருந்த புற்றுநோய் பற்றி டாக்டர்கள் அவரிடம் ஏதும் சொல்லவில்லை. சிறிது காலத்தில் அவரது உடல் நிலை திடீரென்று மோசமடைந்து, அதனுடன் கூடவே

வதை செய்து வாட்டும் உடல்வலியும் தோன்றியது. ''கலக்கம் சிறிதுமின்றி ஒரு நகைச்சுவையுடன்'' இந்த வலியினைத் தாங்கிக் கொண்டார் அவர் என்று லண்டனுக்கு அப்போது வந்திருந்த விக்டர் ஆட்லெர் சொன்னார். தமக்கு முடிவு நெருங்குகிறது என்று உணர்ந்த எங்கெல்ஸ், ஆண்மை மிக்க அமைதியுடன் அந்தச் சாவை எதிர் கொண்டார்.

1895 ஆகஸ்டு 5ஆம் நாள் இரவு *11* மணி அளவில் இயற்கை எய்தினார் பிரெடரிக் எங்கெல்ஸ்.

எங்கெல்சின் விருப்பப்படி அவரது சவ அடக்கம் மிக எளிமையாக நடந்தது. மரணச் சடங்குகளில் அவரது நெருங்கிய நண்பர்களும், மாணவர்களும், துணைவர்களுமாக பல்வேறு நாட்டைச் சேர்ந்த சுமார் *80* பேர்களே கலந்து கொண்டனர். இச்சடங்குகளில், ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியின் சார்பில் லீப்க்னெஹ்டும் ஸீங்கரும்; ஆஸ்திரிய சமூக ஜனநாயக இயக்கத்தின் சார்பில் அதன் வேண்டுகோளின் படி பேபலும்; பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியின் சார்பில் லஃபார்கும்; பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் சார்பாக எலியனோரா மார்க்ஸ், ஏவெலிங், கிவேல்ச் ஆகியோரும்; பெல்ஜியர்களின் சார்பாக அன்செலும்; ருஷ்யர்களுக்காக வேரா ஸசூலிச்சும் ஸ்தெப்னியாகும் (சி. க்ராவ்சீன்ஸ்கி); இத்தாலியர்களுக்காகும் வலெராவும்; அதே போல, பெல்ஜிய, ஹாலந்து, போலந்து, பல்கேரியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். லீப்க்னெஹ்ட், பேபெல், லஃபார்க், எங்கெல்சின் நண்பரான சாம்யுவேல் மூர் ஆகியோர் சவ அடக்கத்தின் போது சிற்றுரை நிகழ்த்தினர்.

மறைந்தவரின் விருப்பத்திற்கேற்ப, அவருடைய உடல் தகனம் செய்யப்பட்டு, அவருக்கு மிகவும் ஈடுபாடுள்ள ஓய்விடமான ஈஸ்ட்போர்ன் கடற்கரைக்கு அஸ்தி கொண்டு செல்லப்பட்டு இலையுதிர் காலத்துப் பேரலைகளில் கரைக்கப்பட்டது.

10

காலத்தால் அழியாத புரட்சிப் போதனை

ஏகாதிபத்தியக் காலத்தின், பாட்டாளி வர்க்கப் புரட்சிகளினது சகாப்தத்தின் நுழைவாயிலில் எங்கெல்ஸ் காலமானார். மார்க்ஸ், எங்கெல்சின் நூல்களில் முழுமையாக பதில் அளிக்கப்படாமல் இருந்த பல புதிய பிரச்னைகளைத் தொழிலாளி வர்க்கத்தின் முன் வரலாறு சுமத்தியது. புதிய வரலாற்றுச் சூழ்நிலைகளில் பாட்டாளி வர்க்கப் போராட்டத்திற்கு ஏற்புடைத்ததாக, மார்க்சிய மூலவர்களின் புரட்சித் தத்துவத்தை, அவர்களது உதாரணத்தைப் பின்பற்றி, செழுமைப் படுத்த வேண்டி இருந்தது.

ஆனால், இந்த நேரத்தில் தான், மார்க்சியம் மிகக் கடும் சோதனைக்கு உள்ளாயிற்று. எங்கெல்சின் மறைவிற்குப் பின்பு, மார்க்சியத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்றும், அதன் பிரதான அடிப்படைகளையே திரும்பப் பரிசீலிக்க வேண்டும் என்றும் கோரிக் கொண்டு பெர்ன்ஷ்டைனை ஒத்த சந்தர்ப்பவாதிகள் பகிரங்கமாகத் தலை தூக்கினர். இந்தப் பகிரங்க ''விமர்சகர்களைத்'' தவிர கவுத்ஸ்கியை ஒத்த ''மார்க்சிஸ்டுகள்'' வேறு தோன்றினார்கள். இவர்கள் உயிரூட்டமும் படைப்பாற்றலும் நிறைந்த மார்க்சிய போதனையை, வாழ்க்கையுடன் சம்பந்தமில்லாத வறட்டுச் சூத்திரங்களாகவும், வாய்ப்பாடுகளாகவும் மேற்கோள்களாகவும் திருத்தி வைத்துக் கொண்டிருந்தனர்.

மார்க்சியத்தின் எதிர்காலம் பற்றிய பிரச்னை முடிவு செய்யப்பட்ட இந்தக் காலத்தில், மகத்தான புரட்சிகரப் போதனை திரித்துப் புரட்டப்படுவதிலிருந்தும் கொச்சைப் படுத்தப்படுவதிலிருந்தும் கட்டிக் காக்கப்பட்டதென்றால், அதற்கு சர்வதேசப் பாட்டாளி வர்க்கமும் முற்போக்கு மனித இனம் முழுவதும், தொழிலாளி வர்க்கத்தின் மேதைமை மிக்க சித்தாந்தவாதியும், தலைவருமான லெனினுக்கும்,

அவரால் உருவாக்கப்பட்ட உண்மையான மார்க்சியக் கட்சிக்கும்தான் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பிரெடெரிக் எங்கெல்ஸ், அவரது மகத்தான நண்பரும் துணைவருமான கார்ல் மார்க்ஸ்—இவ்விருவரின் பெயர்களை யும், இவர்களின் வீரஞ் செறிந்த வாழ்க்கையையும் மனித இனம் முழுவதும் என்றென்றும் நன்றியுடன் நினைவில் போற்றும்.

பாட்டாளி வர்க்கச் சித்தாந்தமும், புரட்சிகரமாய் உலகத்தை உருமாற்றும் விஞ்ஞானமுமான புரட்சிகரப் போதனையை உலகத்துக்குப் படைத்தளித்தவர்கள் கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும்.

தொழிலாளி வர்க்கம் பூமியில் தோன்றியிராவிடில், முதலாளி வர்க்கத்திற்கு எதிராகத் தொழிலாளி வர்க்கம் போராட்டத்தைத் துவக்கியிராவிடில்,இந்த போதனை தோன்றியே இருக்காது. ஐரோப்பாவின் மிக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர் இயக்கம் பெற்ற அனுபவங்கள் தத்துவ ரீதியில் பொதுமைப்படுத்தப்பட்ட தொகுப்பே விஞ்ஞானக் கம்யூனிசமான மார்க்சியம்.

ஜெர்மன் தத்துவஞானம், பிரிட்டிஷ் அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சு சோஷலிசம் ஆகியவை தந்த மகத்தான பிரதிநிதிகளின் நூல்கள்தாம் மார்க்சியத்துக்குத் தத்துவ ஊற்றுக்களாக விளங்கின. தமது முன்னோர்கள் அனைவரும் ஈட்டிய விஞ்ஞான சாதனைகளில் இருந்த மதிப்பு மிக்க அனைத்தையும் விமர்சன ரீதியில் பதப்படுத்திச் சரிசெய்து, தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், சோஷலிசம் ஆகியவை பற்றிய சிந்தனைகளை அடியோடு மாற்றி உண்மையான ஒரு புரட்சி செய்த, முழுமையான சீரான ஒரு போதனையை மார்க்சும் எங்கெல்சும் படைத்தளித்தனர்.

பொது மக்களுடன் தொடர்பு கொள்ளாதிருந்த முந்தைய சிந்தனையாளர்களைப் போலல்லாமல், மார்க்சும் எங்கெல்சும் மேதைமை மிக்க விஞ்ஞானிகளாக இருந்ததுடன், மாபெரும் புரட்சி வீரர்களாயும் பாட்டாளி வர்க்கத் தலைவர்களாயும் திகழ்ந்தனர். அவர்கள் நமக்களித்த போதனை, கறாரான விஞ்ஞானத் தன்மையைப் புரட்சிப் பண்புடன் இணைத்து, நடைமுறையையும் தத்துவத்தையும் ஒன்றிணைத்த உருவகமாக விளங்குகிறது.

சோஷலிசத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் ஒன்று சேர்ப்பதற்கும், பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்று உருவாக்கவும் தேவையான அடித்தளம் மார்க்சியத்தின் தோற்றத்தினுல் முதன்முறையாக நிறுவப்பட்டது. சோஷலிசப் புரட்சியின் வெற்றியை உறுதிப் படுத்தவும் வர்க்கங்களை ஒழிப்பது என்ற அதன் இறுதி இலக்கை அடையவும் இத்தகைய கட்சி தேவை என்று மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினர்.

கம்யூனிஸ்டுகள் சங்கம், அகிலம் ஆகியவற்றில் மார்க்சும் எங்கெல்சும் புரிந்த பணிகள், பாட்டாளி வர்க்கக் கட்சிகளுக்கு வழிகாட்டியது ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தொழிலாளர் இயக்கத்திற்கும், அந்த நாட்டின் சிறப்பியல்புகளுக்கும் ஏற்பப் போர்த்தந்திரங்களையும் நடைமுறை உத்திகளையும் வகுத்துக் கொடுத்தது ஆகியவை பாட்டாளி வர்க்கக் கட்சி அமைப்பதற்காக மார்க்சும் எங்கெல்சும் நடத்திய போராட்டத்தின் மிகமிக முக்கியமான அம்சங்களாகும்.

சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் புதிய அனுபவங்களையும், பல்வேறு விஞ்ஞானத் துறைகளில் புரியப்படுகின்ற புதிய சாதனைகளையும் பொதுமைப்படுத்தி தமது புரட்சிகரப் போதனையை மார்க்சும் எங்கெல்சும் இடையருது செழுமைப் படுத்தி வந்தனர்.

இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தின் தலைமை "...பத்தொன்பதாம் நூற்ருண்டின் பல்வேறு காலங்களில் பிரிட்டிஷ்கார்களிடமும், பின்னர் பிரெஞ்சுக்காரர்களிடமும், அதன் பின்பு ஜெர்மானியர்களிடமும் இருந்தது போல ருஷ்யர்களிடம் வந்து சேர்ந்தது" (லெனின்). உலக ஏகாதிபத்தியத்தினது முரண்பாடுகளின் சந்திப்பு மையமாயிருந்த ருஷ்யா, எல்லாத் தகவல்களிலிருந்தும் தெரிகிறபடி, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான புரட்சியாக, பாட்டாளி வர்க்கப் புரட்சியாக வளர வேண்டி இருந்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி வெடிக்கும் தருணத்தில் இருந்த நாடான ருஷ்யா, இப்போது புரட்சி இயக்கத்தின் மையப் புள்ளியாக விளங்கியது.

மார்க்ஸ், எங்கெல்சின் போதனையை பலப்பல விதங்களில் திருத்தி கொச்சைப்படுத்தி, கீழ்மைப்படுத்துவதற்கு ருஷ்யாவின் சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியிலும்,

இரண்டாம் அகிலத்திலும் வலதுசாரி, ''இடதுசாரிச்'' சந்தர்ப்பவாதிகள் செய்த முயற்சிகளைத் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் எதிர்த்துப் போராடி மார்க்சியத்தின் தூய்மையைக் காத்தார் என்பதில் தான் வி. இ. லெனினின் மகத்தான வரலாற்றுப் பணி அடங்கி இருக்கிறது.

வி. இ. லெனினது மகத்தான வரலாற்றுப் பணி, மார்க்சியம் உயிரோட்டமும் படைப்பாற்றலும் உள்ள போதனை என ஆழ்ந்து புரிந்து கொண்டதும், விஞ்ஞானத்தின் புதிய சாதனைகளது அடிப்படையிலும், புதிய வரலாற்றுக் கட்டமான ஏகாதிபத்தியக் கட்டத்தில் (இதன் சித்தாந்த ரீதியான பகுப்பாய்வை வி. இ. லெனினால் தர முடிந்தது) ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கமும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கமும் பெற்ற போராட்ட அனுபவத்தின் அடிப்படையிலும் இந்த போதனையை இடையறாது வளர்த்துச் செவ்வைப்படுத்தியதும் ஆகும்.

மார்க்சியப் பொக்கிஷத்தில் வி. இ. லெனின் சேர்த்த செல்வம் மிகப் பெரியது என்பதால் இந்தப் போதனை மார்க்ஸ், எங்கெல்ஸ் பெயரை மட்டுமின்றி லெனினது பெயரையும் தாங்கி நிற்கிறது. எனவே, இது நியாய பூர்வமாகவே மார்க்சியம்-லெனினியம் என்று அழைக்கப்படுகிறது.

தமது கடமையும், தம்மால் உருவாக்கப்பட்ட கட்சியின் பணியும் மார்க்சியத்தைக் காப்பதும் வளர்ப்பதும் மட்டுமல்ல, செயல்படுத்துவதுமாகும் என்று கண்டு கொண்டது தான் லெனின் செலுத்திய மிகச் சிறந்த பங்காகும். லெனினால் வழிநடத்தப்பட்ட போல்ஷிவிக் கட்சியின் வரலாறு செயலாற்றும் மார்க்சிய-லெனினியம் ஆகும். தத்துவமும் நடைமுறையும் சேர்ந்ததுதான் முழுமையான மார்க்சியக் கோட்பாடு என்பதற்கு விசுவாசமாக இருந்த லெனினும் போல்ஷிவிக் கட்சியும், தன்னலமற்ற வீரஞ்செறிந்த பாட்டாளி வர்க்க, உழைப்பாளி மக்கள் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி, உண்மையிலேயே மகத்தான வெற்றிகளை ஈட்டினர்.

மனித இன வரலாற்றில் புதிய சகாப்தமான, முதலாளித்துவம் கம்யூனிசமாக உலகு தழுவிய அளவில் மாறுகின்ற சகாப்தத்திற்கு வழி திறந்து விட்ட மாபெரும் அக்டோபர்

சோஷலிஸ்டுப் புரட்சி மார்க்சிய-லெனினியத்தின் அனைத்துலக, வரலாற்றுப் பெரு வெற்றியாகும்.

பாட்டாளி வர்க்கப் புரட்சிப் போதனையின் புதிய பெரு வெற்றியாக அமைந்தது சோவியத் யூனியனில் சோஷலிசம் நிறுவப்பட்டதாகும். கற்பனைவாதமாய் இருந்த சோஷலிசம் மார்க்ஸ், எங்கெல்சால் விஞ்ஞானமாக்கப்பட்டு, சோவியத் யூனியனில் எதார்த்தமாகியது, வாழ்க்கை உண்மையாக மாறியது.

மாபெரும் தேசபக்த யுத்தம் கொண்டு வந்த மிகப் பெரும் கொடுமைகளைத் தோள் மேல் ஏற்று, ஜெர்மன் பாசிசத்தின், ஜப்பானிய ராணுவ வெறியின் ஆக்கிரமிப்புச் சக்திகளை முறியடித்து அன்னிய நாட்டு ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடித்தது மட்டுமல்லாமல் பாசிச அடிமைத்தனத்திலிருந்து ஐரோப்பிய மக்களை விடுவிக்க உதவுகிற புனித யாத்திரையையும் மேற்கொள்வது ஒரு சோஷலிச நாட்டினால் மட்டுமே முடியும்.

உலகத்தினது புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் பலமிக்க அடித்தளமாக விளங்குகிற சோஷலிச நாடுகளினுடைய கூட்டமைப்பு நிறுவப்பட்ட வரலாற்று நிகழ்ச்சி மார்க்சிய-லெனினியத்தின் சர்வதேச முக்கியத்துவத்தைக் கண் முன்னே மெய்ப்பித்துக் காட்டியது. எந்தவொரு புரட்சி இயக்கத்துக்கும் உறுதியான ஆதரவு நல்கி, காலனி நுகத்தடியிலிருந்து விடுதலை பெற்ற நாடுகள் அனைத்திற்கும், காலனியாதிக்கம், நிறவெறி ஆகியவற்றின் மிச்ச சொச்சங்களை எதிர்த்து இன்னும் போராடிக் கொண்டிருக்கிற மக்களுக்கும் தன்னலங் கருதா உதவிகள் புரிந்து சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் தமது சர்வதேசக் கடமையை நிறைவேற்றி வருகின்றன.

சோஷலிச நாடுகள் இருந்து வருவது மனித இனம் முற்போக்கு வளர்ச்சி அடைவதற்கும், அது தீவிரமாகக் கம்யூனிசத்தை நோக்கி நடைபோடுவதற்கும் உதவி செய்கிறது.

இன்னும் பயங்கரமான அழிவுகளையும், பின்விளைவுகளையும் கொண்டு வரத்தக்க புதிய போர் ஒன்றின் அபாயத்திற்கு எதிராக, சமாதானத்திற்கான போராட்டத்தை சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் தலைமை தாங்கி நடத்தி வருவது மனித இனத்தின் தலைவிதியை நிர்ணயிப்ப

தில் மதிப்பரிய முக்கியத்துவம் வாய்ந்ததாய் விளங்குகிறது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24ஆவது காங்கிரசில் மேற்கொள்ளப்பட்ட சமாதான வேலைத்திட்டம் சோஷலிசமும் சமாதானமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. சோஷலிச அரசுகளும் மற்ற நாடுகளிலுள்ள அமைதி நாடும் சக்திகளும் தொடுத்துள்ள போராட்டத்தின் விளைவாக, இரு வேறு சமூக அமைப்புக்களைக் கொண்ட நாடுகளிடையே சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை நிலை நாட்டுவதில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது; சர்வதேச உறவுகளில் பதற்றத் தணிவு எனும் கொள்கையும் பிரதானமான போக்காக விளங்குகிறது.

25ஆவது கட்சிக் காங்கிரசில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் பிரெஷ்னேவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலும் காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமாதானம், சர்வதேசக் கூட்டுறவு, மக்களின் விடுதலை, சுதந்திரம் ஆகியவற்றுக்கான போராட்டத்திற்குரிய வேலைத்திட்டத்திலும் சமாதான வேலைத்திட்டம் மேலும் வளர்க்கப்பட்டு உருவம் பெற்றதானது சமாதானத்திற்கான போராட்டத்தில் ஒரு புதிய கட்டமாக விளங்குகிறது.

பாட்டாளி வர்க்கத்தின், உழைப்பாளி மக்களின் நலன்களுக்காக மட்டுமின்றி, மனித நாகரிகம் முழுவதையும் அழித்தொழித்து விடத்தக்க அணு ஆயுதப் போரிலிருந்து மனித குலத்தைக் காப்பதற்காகவும், ஏகாதிபத்தியத்துக்கும் ராணுவ வெறிக்கும் எதிராக, உயர்வான மனிதநேயம் உள்ளடங்கிய சமாதானத்திற்கான போராட்டம் நடத்தப்படுகிறது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25ஆவது கங்கிரசில் முன்வைக்கப்பட்ட கம்யூனிச சமுதாயத்தைத் தொடர்ந்து நிறுவுவதற்கான மாபெரும் வேலைத்திட்டம் மனித நலனுக்காக முன்வைக்கப்பட்ட திட்டமாகும். மக்கள் இடையறாது மேன்மையுற வேண்டும் என்பதும், சமூகத்தின் ஒவ்வொரு மனிதனுடைய அறிவுபூர்வமான பொருள்வளத் தேவையையும் அவன் நிறைவு செய்கொள்வதற்கு இன்னும் பெரிய வாய்ப்புக்களை நல்க வேண்டும் என்பதும், அந்த மனிதன்

எல்லா வகையிலும் முழுமையான ஆன்ம வளர்ச்சியுற வேண்டும் என்பதுமே கம்யூனிஸ்டுக் கட்சியினுடைய உயர்ந்த நோக்கமாய் விளங்குகிறது. எல்லாச் சுரண்டல்களிலிருந்தும், சமுதாய, தேசிய ஒடுக்குமுறையிலிருந்தும், நிற வேறுபாடுகளிலிருந்தும் சோஷலிச அமைப்பு மனிதனுக்கு விடுதலை அளிப்பதும், உழைப்பு, கல்வி, சமுதாய வளங்களின் நுகர்வு, இலவச மருத்துவ உதவி, ஓய்வு கொள்ளும் உரிமை ஆகிய மனிதனின் அடிப்படை உரிமைகளை சோஷலிச அரசு உத்திரவாதம் செய்வதும் இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு அடிப்படை முன்தேவைகளாகும். விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றத்தை இன்னும் விரைவுபடுத்துவது முக்கியமான பணிகளில் ஒன்று என கட்சி கருதுகிறது. முதலாளித்துவச் சூழ்நிலைகளில் விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சி, ஒரு நாட்டு,பல நாட்டு ஏகபோகங்களுக்குக் கொள்ளை லாபத்தைக் கொட்டிக் கொடுத்து, பாட்டாளி வர்க்கச் சுரண்டலை இன்னும் தீவிரப்படுத்தி, சிறு தொழில்களையும் விவசாயிகளின் சிறு பண்ணைகளையும் திவாலாக்கும் போது, சோஷலிசத்தின் கீழ் இந்த விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சி சமுதாயம் முழுவதின் நலன்களுக்கும் ஒவ்வொரு தனி மனிதனின் நலன்களுக்கும் சேவை செய்கிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியை, குறிப்பாக முதலாளித்துவ சமூகத்தின் சித்தாந்த-அரசியல் நெருக்கடியை ஆழப்படுத்துவதான பொருளாதார நெருக்கடி வெடிக்கின்ற போது, சோஷலிசத்தின் மேன்மை மிகவும் தெளிவாக வெளிப்படுகிறது. ''சர்வ நல சமுதாயம்'', ''குவிந்து சேர்வது'' போன்ற முதலாளித்துவத்துக்குச் சப்பைக் கட்டு கட்டுகிற போலி விஞ்ஞானச் சித்தாந்தங்கள் படுதோல்வியுற்று விட்டன. நெருக்கடியின் சுமைகளைப் பொதுமக்கள் தோள்களிலே ஏற்றி விட முதலாளிகள் செய்கின்ற முயற்சிகள், வேலையற்றோர் எண்ணிக்கை பெருகி வருவது, பணவீக்கம் ஆகியவை வர்க்கப் போராட்டத்தைத் தீவிரமடையச் செய்து, முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செல்வாக்கை உயர்த்துகின்றன.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் மற்ற நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகள், தொழிலாளர் கட்சிகள் அனைத்தும் தமது நடவடிக்கைகளில் எல்லாம் மார்க்சிய-லெனினிய, பாட்

டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளைப் பின்பற்றுகின் றன. புரட்சியின் முன்னேற்றம், சோஷலிச-கம்யூனிச நிர் மாணம் ஆகியவற்றின் பொதுவான விதிகளை கணக்கில் எடுத்துக் கொண்டு தமது நாட்டின், தமது தொழிலாளர் இயக்கத்தின் திட்டவட்டமான சிறப்பு அம்சங்களையும் மனத் தில் கொள்கின்றன இக்கட்சிகள். வி. இ. லெனின் முன்னறி வித்தபடி "ஜனநாயகத்தின் குறிப்பிட்ட ஒரு வடிவத்தில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் குறிப்பிட்ட ஒரு விதத் தில், சமுதாய வாழ்வின் பல்வேறு பிரிவுகளது சோஷலிச உரு மாற்றத்தின் குறிப்பிட்ட வேகத்தில் தனித் தன்மையை"* ஒவ்வொரு நாடும் கொண்டு வரும். இந்தத் தனித் தன்மை மார்க்சிய-லெனினிய, பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட் பாடுகளுக்கு மாறுக அல்லாமல், இக்கோட்பாடுகளுக்கு ஏற்றதாகவே இருக்கிறது.

மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடு களில் ஒன்ருய், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் மதிப்பிற் கரிய சாதனையாய், அதனுடைய ஆற்றலின் ஊற்றுக் கண்ணுய், அதன் வெற்றியின் அடித்தளமாய் விளங்குகிறது பாட்டாளி வர்க்க சர்வதேசியம். எனவே தான், கம்யூனிச விரோதிகளான வலதுசாரி, "இடது சாரி" திரிபுவாதிகளும், தேசிய வெறிகளின் எல்லா வகையினரும் இந்தப் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை எதிர்த்தே பிரதானமாகத் தாக்கு தல் தொடுக்கின்றனர். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25ஆவது காங்கிரசில் பிரெஷ்னேவ் சமர்ப்பித்த அறிக்கை யில் இதற்குச் சரியான பதிலடி கொடுத்தார்: "பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் கைவிட்டு விடுவது என்பது, கம் யூனிஸ்டுக் கட்சிகளின் கையிலிருந்து, பொதுவாக தொழிலா ளர் இயக்கத்தின் கையில் இருந்தே, ஆற்றல் மிக்க, சோதனை செய்யப்பட்ட ஆயுதத்தைப் பிடுங்கிக் கொள்வதற்கு ஒப்பா கும். இது வர்க்க எதிரிக்கு நாம் புரியும் சேவையாய் இருக் கும்... சோவியத் கம்யூனிஸ்டுகளாகிய நாம், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் காப்பது மார்க்சிய-லெனினிய வாதி ஒவ்வொருவரின் கடமையுமாகும் எனக் கருதுகிருேம்" என்ருர் பிரெஷ்னேவ்.

---

* V. I. Lenin, *Works*, 4th Russ. ed., Vol. 23, p. 58.

மார்க்சிய-லெனினியத்திலிருந்து பின்வாங்குவது, அதே போல வரட்டுச் சூத்திரவாதம் நுனிப்புல் மேய்வது ஆகியவற்றை எதிர்த்து, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் மற்ற நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகளும் உறுதிமிக்க போராட்டம் நடத்துகின்றன, சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் பெற்றுள்ள பெருமளவு அனுபவங்களையும், அதே போல சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் அனுபவங்களையும் தேசிய விடுதலை இயக்கங்களின் அனுபவங்களையும் பொதுமைப்படுத்தி கம்யூனிஸ்டுக் கட்சிகள் மார்க்சிய-லெனினிய போதனையை ஆக்க பூர்வமாக மேலும் வளப்படுத்துகின்றன. மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கைக்கொண்டுதான் அதனை வளமைப்படுத்த முடியும். வரலாற்று அனுபவம் எடுத்துக் காட்டுவது போல இந்தக் கோட்பாடுகள் என்றென்றும் உயிருள்ள சர்வதேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

இப்பூவுலகின் எல்லாக் கண்டங்களிலும் உள்ள பொது மக்களின் பதாகையாக மேலும் மேலும் சிறந்து விளங்குகிறது மார்க்சியம்-லெனினியம். கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் உருவாக்கித் தந்த படைப்பாற்றல் மிக்க மகத்தான போதனையைப் போல உலக சரித்திரப் போக்கின் மீது செல்வாக்குச் செலுத்திய தத்துவம் இவ்வுலகில் வேறொன்றும் இல்லை, இருந்ததும் இப்போதும் இல்லை.